139


மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

(ஆற்றல்சால் பல்கலைக்கழகம்)

தொலைநிலைக் கல்வி

www.mkudde.org




# எம்.ஏ.

# வரலாறு

## இரண்டாமாண்டு

தாள் – 5

# தமிழக வரலாறு (1956 வரை)

முதல் பாகம்

413

139

# தொலைநிலைக் கல்வி இயக்ககம்

முதுகலை – வரலாறு
இரண்டாமாண்டு

வ
ர
லா
று

பகுதி – I (a)

# தமிழக வரலாறு
# (1956 வரை)

முதல் பாகம்
பாடங்கள் : 1 - 15

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை – 625 021.

பதிப்புரிமை : தொலைநிலைக் கல்வி இயக்ககம்

printed at VIJAAY OFFSET PRINTER, MDU.-16. © 4353474 Yr. 2008-2009 Copies 2000

# முன்னுரை

அன்பார்ந்த மாணவர்களே,

அஞ்சல்வழி, தொடர்கல்வித் துறையின் பட்ட மேற்படிப்பின் இரண்டாமாண்டு வரலாற்றுப் பாடத்தைத் தமிழில் கற்கும் மாணவர்களாய், உங்களை வரவேற்பதில் யாம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

பட்ட மேற்படிப்பின் இரண்டாமாண்டில் நீங்கள் நான்கு பாடங்களைக் கற்றாக வேண்டும். அவற்றில் ஒன்று 'தமிழ் நாட்டு வரலாறு தொடக்ககாலம் முதல் 1956 வரை'யாகும். வரலாறு கற்கும் மாணவர்கள் தத்தம் நாட்டு வரலாற்றைக் கற்பதற்கு முன், தத்தம் வட்டாரத்தின் வரலாற்றை கற்றல் நலம். இன்று பிற பகுதிகளிலும் வட்டார வரலாறு கட்டாயப் பாடமாகப் பல்கலைக்கழகங்களில் வைக்கப்பட்டுள்ளது. அம்முறையைப் பின்பற்றித் தான் நாமும் தமிழ் நாட்டு வரலாற்றைக் கற்கிறோம்.

ஏறக்குறைய கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் தமிழ் மன்னர்களின் ஆட்சி முடிவடைந்துவிட்டது. கி.பி. 1323-ஆம் ஆண்டில் மதுரையில் சுல்தான்களாட்சி ஏற்பட்டது. கி.பி. 1371-ஆம் ஆண்டளவில் தமிழ் நாட்டில் விஜயநகர மன்னர்களின் ஆட்சி தொடங்கப்பட்டது. ஏறத்தாழ இரண்டு நூற்றாண்டுகள் விஜயநகரப் பேரரசர்களே தென்னகத்தின் விதியை நிருணயித்தனர். ஆனால் கி.பி. 1565-ஆம் ஆண்டு தலைக்கோட்டையில் நடைபெற்ற போரில் விஜயநகரப் பேரரசு பாமினி அரசர்களின் இணைந்த படைகளுக்குத் தலைசாய்ந்தது. இத்தோல்வி விஜய நகரப் பேரரசின் அடித்தளத்தை அசைத்துவிட்டது. ஆனால் அழிவுப் பாதையில் சென்று கொண்டிருந்த அப்பேரரசு மேலும் ஒரு நூற்றாண்டுக் காலம் ஊர்ந்து சென்றது. மத்திய விஜயநகர ஆட்சி ஆட்டம் கண்டது. மத்தியில் குழப்பங்கள் ஏற்படத் தொடங்கின. சிற்றரசர்களின் செல்வாக்கு நாளுக்கு நாள் அதிகரித்தது. அவையில் கட்சிகள் தோன்றலாயின. தங்கள் விடுதலையை நோக்கியிருந்த நாயக்கர்கள் கிடைத்த சூழலை நழுவ விடவில்லை. சிற்றாண்டுகளிலெல்லாம் நாயக்கர்கள் உரிமை பெற்ற சுதந்திர அரசர்களாயினர்.

தங்களுடைய சமய விரோதிகளாகிய முகமதியரை எதிர்த்துப் போரிட்டு மாண்டனர் விஜயநகரத்தார். ஆனால் நாயக்கர்களோ தமக்குள்ளே சண்டையிட்டுக்கொண்டு அழிவை வரவழைத்தனர். தமிழகத்தில் அமைதியில்லை. வந்தவர்களை வாழவைக்கும் தமிழகம் முகலாயர்களையும், மராத்தியர்களையும், கன்னடியர்களையும், பின் மேலை நாட்டாரையும் வாழவைக்கக் கவறிடவில்லை. தமிழகம் அந்நியரின் சந்தையாகவும்,

ஆதிக்க வளர்ச்சியின் இடமாகவும், போர்க்களமாகவும் காட்சியளித்தது. அப்போட்டியில் வெற்றி பெற்ற ஆங்கிலேயர் தமிழகத்தில் ஏறக்குறைய மூன்று நூற்றாண்டுகள் ஆட்சி நடத்தினர். கி.பி. 1639-ஆம் ஆண்டில் சென்னையைக் கைப்பற்றிய அவர்கள் கி.பி. 1947-ஆம் ஆண்டிற்றான் தமிழகம் விட்டு வெளியேறினர். இவர்களாட்சியால் தமிழகத்துக்கு விளைந்த நன்மைகளும் பல, தீமைகளும் பல. இன்று தமிழகம் சுதந்திர இந்தியாவின் தென் மாநிலங்களுள் ஒன்றாக இயங்கி வருகின்றது. ஆங்கில ஆட்சி முறையில் பயிற்சியும் அனுபவமும் பெற்ற தமிழ்த்தலைவர்கள் தமிழகத்தை கி.பி. 1947-ஆம் ஆண்டு முதல் ஆட்சி புரிந்து வருவது கண்கூடு.

இப்பாடம் 30 தனிப்பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அது பற்றிய விவரம் இப்பாடத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. பாடங்களை நன்கு கற்கவும், மேற்கொண்டு நூற்களையும் கற்கவும், கற்பவற்றை ஐயந்திரிபறக் கற்கவும்.

கடின உழைப்புக்கு இணை உலகில் ஏதுமில்லை!

உழைப்பீர் உயர்வீர்!

எம் நல்வாழ்த்துக்கள்!

## Paper V - History of Tamilnadu upto 1956

**Introduction :** Influence of Geography and Topography on the History of Tamilnadu - Sources of Tamilnadu History - Races and Tribes - Pre history of Tamilnadu - Aryan Expansion.

**Sangam Period in Tamilnadu :** Chronology of the Sangam - Early Cheras - Early Cholas - Early Pandyas - Sangam Administration, Economy, Trade and Commerce, Society, Religion, Philosophy, Art and Architecture.

**The Kalabhras.**

**The Early Pallavas** - Origin - Sivaskandavarman.

First Pandyan Empire and Post Sangam Cheras.

**Later Pallavas,** Mahendravarman, Narasimhavarman, Pallava Administration, Social Life, Religion and Literature, Art and Architecture.

The Imperial Cholas I - The Imperial Cholas II - The Chalukya Cholas.

**Second Pandyan Empire.**

**Chola Administration,** Central and Local governments, Judiciary and Military Organisation, Social Life, Customs and Conventions, Religion and Philosophy, Education and Literature, Art and Architecture - Economy, Revenue and Taxes, Overseas Trade and Commerce, Cultural Expansion of the Far East.

**Muslim Incursions in Tamilnadu** - Madurai Sultanate - Hoysalas in Tamilnadu.

**Tamilnadu under Vijayanagar Rulers** - Administration and Society, Economy, Trade and Commerce, Literature, Religion, Art and Architecture - Kumarakampana's conquest of Kanchi, Tanjore and Madurai, Battle of Talikota 1565.

**Nayaks of Madurai :** Viswanatha Nayak, Muttu Virappa Nayak, Tirumala Nayak, Mangammal, Minakshi.

**Nayaks of Tanjore :** Sevappa Nayak, Raghunatha Nayak, Vijaya Raghava Nayak.

**Nayaks of Jingi :** Vaiyappa, Tubaki Krishnappa, Krishnappa I, Krishnappa II. Nayak Administration, Central and Local Law and Justice, Revenue and Commerce, Society and Economy, Culture under the Nayaks, Language and Literature - Art and Architecture.

**The Mughals in Tamilnadu.**

**The Setupatis of Ramanathapuram.**

**The Europeans in Tamilnadu.**

**The Marathas in Tamilnadu** - Marathas of Tanjore - Ekoji, Serfoji, Tukoji, Serfoji II, Sivaji III.

**Tamilnadu under the Nawabs of Arcot** - The Carnatic Wars, Administration under the Nawabs - The Mysoreans in Tamilnadu - The Poligari System.

**The South Indian Rebellion** - The Vellore Mutiny - The Land Revenue Administration - Famine Policy and Relief measures of the Company - Education under the Company - Growth of Language and literature in 19th and 20th centuries - organisation of Judiciary under the Company and the crown, Local self Administration under the Company and the Crown, Society, Commerce, Trade, Communication and Transportation.

**Tamilnadu in Freedom Struggle.**

**Political events in Tamilnadu from 1947 to 1956,** Social and Economic Developments in Tamilnadu since Independence.

## Books for Reference


Baliga, B.S. — Studies in Madras Administration, 2 Vols., Madras, 1949.

Balasundaram, N. — "The Dravidian Movement in Madras" in State Politics in India, 1967.

Dikshitar, V.R.R. — Studies in Tamil Literature and History.

Dubois, Abbe — Hindu Manners, Customs and Ceremonies.

Edward Thomson — Rise and Fulfilment of British Rule in India.

Hardgrave L. Robert — The Dravidian Movement.

Kanakasabai, V. — The Tamils 1800 years ago.

Krishnaswami, A. — Tamil Country under Vijayanagar.

Krishnaswami Aiyangar, S. — Beginnings of South Indian History.

Krishnaswami Aiyangar, S. — Ancient India and south Indian History and Culture

| | | |
|---|---|---|
| Mahalingam, T.V. | — | Kanchipuram in the early South Indian History and Culture. |
| Mahalingam, T.V. | — | South Indian Polity |
| Majumdar, R.C. | — | History and Culture of the Indian people. |
| Meenakshi, C. | — | Administration and Social Life under the Pallavas. |
| Mukerjee Nilamani | — | Ryotwari System in Madras. |
| Pillai, K.K. | — | Social History of the Tamils |
| Rajayyan, K. | — | History of Madurai |
| Rajayyan, K. | — | South Indian Rebellion : The First War of Indian Independence. |
| Rajayyan, K. | — | Administration and Society in the Carnatic. |
| Rajayyan, K. | — | A History of British Diplomacy in Tanjore. |
| Rajayyan, K | — | Rise and Fall of the Poligars in Tamilnadu. |
| Rajayyan, K. | — | History of Tamilnadu upto 1565. |
| Rajayyan, K. | — | History of Tamilnadu from 1565 to the present day. |
| Raman, K.V. | — | The Early History of the Madras Region. |
| Ratnaswamy, M. | — | Some influences that made the British Administrative System. |
| Rajamanikkam Pillai, M. | — | பல்லவர் வரலாறு |
| Rajamanikkam Pillai, M. | — | சோழர் வரலாறு |
| Sastri, K.A.N. | — | A History of South India |
| Sastri, K.A.N. | — | The Cholas |
| Sastri, K.A.N. | — | The Sangam Age |
| Sastri, K.A.N. | — | The Pandyan Kingdom |
| Srinivasa Aiyangar, P.T. | — | History of the Tamils |
| Subrahmanian, N. | — | History of Tamilnadu upto 1565. |
| Vridegirisan | — | Nayaks of Tanjore. |

# தமிழக வரலாறு - கி.பி. 1956 வரை

1. தமிழக வரலாற்றுச் சான்றுகள்.

2. தமிழக வரலாற்றில் நிலவியல், இடவியல் ஆகியவற்றின் செல்வாக்கு — தமிழகத்தின் இன மரபுகளும் பழங்குடிகளும் — ஆரியர் பெருக்கம்.

3. சங்ககாலம் — சேரர் — சோழர்கள் — பாண்டியர்கள்.

4. சங்ககால ஆட்சிமுறை.

5. களப்பிரர்கள்.

6. பண்டைய பல்லவர்கள் — முதல் பாண்டியப் பேரரசு — சங்க காலத்திற்குப் பிந்திய சேரர்.

7. பிற்காலப் பல்லவர்கள் — பல்லவர் ஆட்சிமுறை — சமூக வாழ்க்கை — சமயம் — இலக்கியம் — கலையும் கட்டடக்கலையும்.

8. சோழப் பேரரசர்கள் — சாளுக்கியச் சோழர்கள்.

9. இரண்டாம் பாண்டியப் பேரரசு.

10. சோழர் ஆட்சிமுறை — சமுதாய வாழ்க்கை — கலை, கட்டடக் கலை — பொருளாதாரம்.

11. தமிழகத்தின் மீது இசுலாமியர் படையெடுப்பு — மதுரை சுல்தானியம் — தமிழகத்தில் ஹொய்சாளர்கள்.

12. விஜயநகர ஆட்சியின்கீழ் தமிழகம்.

13. மதுரை நாயக்கர்கள்.

14. தஞ்சை நாயக்கர்கள் — செஞ்சி நாயக்கர்கள்.

15. நாயக்கர் ஆட்சிமுறை.

16. நாயக்கர் காலப் பண்பாடு.

17. தமிழகத்தில் பிஜப்பூர், கோல்கொண்டா சுல்தான்கள் — மொகலாயர்கள்.

18. இராமநாதபுரம் சேதுபதிகள்.

19. தமிழகத்தில் ஐரோப்பியர்.

20. தமிழகத்தில் மராத்தியர்கள்.

21. தமிழகத்தில் ஆற்காடு நவாபுகள் — கர்நாடகப் போர்கள் — ஆட்சிமுறை.

22. தமிழகத்தில் மைசூரியர்கள் — ஹைதர்அலி, திப்புசுல்தான்.

23. தமிழகத்தில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் அரசுத்தந்திரம்.

24. பாளையக்கார முறை — நிர்வாகம்.

25. தென்னிந்தியப்புரட்சி — வேலூர் கலகம்.

26. நிலவரி ஆட்சிமுறை — நிரந்தர வருவாய் ஆட்சியமைப்பு — ரயத்வாரி முறை — பஞ்சங்கள் — பஞ்ச நிவாரணங்கள்.

27. கிழக்கிந்தியக் கம்பெனி அரசு ஆட்சியின் போது கல்வி நிலை — கல்விக்குக் கிறித்தவர்களின் தொண்டு — 19, 20ஆம் நூற்றாண்டுகளில் தமிழ் மொழி இலக்கிய வளர்ச்சி.

28. கம்பெனி ஆட்சியின்போது நீதி பரிபாலனம் — தல சுயநிர்வாகம் — சமுதாயம் — வர்த்தகம் — செய்தித்தொடர்பு — போக்குவரத்து.

29. இந்திய சுதந்திரப்போரில் தமிழகத்தின் பங்கு.

30. விடுதலைக்குப்பின் தமிழக அரசியல்.

# பாடம் – 1 தமிழக வரலாற்றுச் சான்றுகள்

"மனிதனின் பரிணாம வளர்ச்சிப் பயணத்தில் அவன் விட்டுச் செல்லும் சான்றுகளைக் கொண்டு, வரலாற்றாளர் கடந்த காலத்தை திருத்தியமைக்கின்றனர்." எனவே ஒரு நாடு பெற்றுள்ள வரலாற்றுச் சான்றுகளின் அடிப்படையிலேயே, அந்நாட்டின் வரலாறு அமைகிறது. பண்டைய இந்திய வரலாற்றைப் பொறுத்த மட்டில் வரலாற்றாளரின் பணி மிகவும் சிரமமான ஒன்றாகிறது. காரணம் வரலாற்று மூலச்சான்றுகள் போதுமான அளவு கிட்டாமையே. சில வேளைகளில் அவர் "ஒரு பெரும் வைக்கோற்போரினைக் கிளர்ந்து, ஒரு சிறு குண்டூசியினைத் தேடவேண்டிய நிலைக்கு ஆட்படுத்தப்படுகிறார்" என்றார் பேராசிரியர் ஆர். சத்தியநாதய்யர். இருப்பினும் முஸ்லீம்களின் வருகைக்குப்பின் நிலைமை சற்று மாறியது. அவர்கள் காலத்தில் திரளான வரலாற்றிலக்கியச் சான்றுகள் படைக்கப்பட்டுள்ளன.

ஆனால் தமிழக வரலாற்றைப் பொறுத்தவரை நிலைமை முற்றிலும் வேறுபட்டதாக உள்ளது. "தமிழகம் இந்தியாவின் ஓர் அங்கமாக இருந்தாலும், தனக்கெனத் தனி ஒரு வரலாற்றைக் கொண்டுள்ள தன்மையில் அது சற்று வேறுபட்டே நிற்கிறது. எனவே தமிழக வரலாற்றை எழுதுவதற்குத் துணை நிற்கும் சான்றுகளும், தமது தன்மையில் பிறவற்றிலிருந்து தனித்து நிற்பனவாகவே உள்ளன" என்கிறார் பேராசிரியர் என். சுப்பிரமணியன். தமிழக வரலாற்றைப் புதுப்பித்து எழுதுவதற்கான சான்றுகள் எண்ணற்றவை; இயல்பால் வேறுபட்டவை. அவை முறையே 1. உள்நாட்டுச் சான்றுகள் 2. வெளிநாட்டுச் சான்றுகள் என பகுக்கப்படலாம். உள்நாட்டுச் சான்றுகளை இரு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தலாம். அவை முறையே 1. தொல்பொருட்கள் 2. இலக்கியங்கள் என்பன. தொல்பொருள் சான்றுகளை மேலும் நாம் (அ) கல்வெட்டுக்கள் (ஆ) நிலத்தின் மேற்பரப்பில் கிடைப்பனவும், அகழ்வாய்ந்து பெற்றனவுமான சான்றுகள் (இ) நாணயங்கள் என மூவகைப்படுத்தலாம். வெளிநாட்டுச் சான்றுகள் பெரும்பாலும் இலக்கியச் சான்றுகளேயாகும்.

## கல்வெட்டுச் சான்றுகள்

கற்களிலும் செப்பேடுகளிலும் செதுக்கப்பட்ட எழுத்துக்களைப் பற்றிப் படிப்பதே சாசனவியலாகும். இவை பாறைகளிலும், கற்றூண்களிலும், கோவிற் சுவர்களிலும் பொறிக்கப்பட்டுள்ளன. "கல்வெட்டுக்களே இந்திய வரலாற்றிற்கு, குறிப்பாகத் தென்னிந்திய வரலாற்றிற்கான, வளமிக்க நம்பகமான சான்றுகளாகும்" என்கிறார் பேராசிரியர் கே.ஏ. நீலகண்டசாஸ்திரி. அனைத்துக் கல்வெட்டுக்களையும் தமிழக வரலாற்றிற்கான முக்கியத்துவம் வாய்ந்தவை என்று நம்மால் குறிப்பிடவியலாவிடினும், வரலாற்றுச் சான்றுகளாகக் கருதத்தக்கவை பல இன்னும் விடுபட்டுள்ளன என்பது உண்மை.

தமிழக முடியரசுகளைப் பற்றிக் குறிப்பிடும் தமிழிலல்லாத முதல் கல்வெட்டுக்கள் அசோகருடையவையாகும். அவற்றில் சோழர்கள், பாண்டியர்கள், சத்தியபுத்திரர்கள், கேரளபுத்திரர்கள் ஆகியோரைச் சுதந்திர மன்னர்களாகக் காட்டும் குறிப்புகள் காணப்படுகின்றன. புத்த மதத்தைப் பரப்பும் நோக்கில் அசோகர் தனது நல்லெண்ணத் தூதுவர்களை சேரர், சோழர், பாண்டியர், சிங்களவர் அரசவைகளுக்கு அனுப்பி வைத்ததாகத் தெரிய வருகிறது. தமிழக எல்லைக்குள் கிட்டிய தொன்மையான கல்வெட்டு "தமிழக மாவட்டங்களின் இயற்கையான குகைகளில் காணப்படும் சுருக்கமான கல்வெட்டுக்களே" ஆகும். இவை போதுமான விவரங்களைத் தருவனவாக இல்லை. கலிங்க மன்னர் கார்வேலரால் ஆக்கப்பட்ட ஹதிகும்பா கல்வெட்டுக்களிலிருந்து (கி.மு. 2ஆம் நூற்றாண்டின் (முதற்பாதி) தமிழக முடிவேந்தரின் குழு (League) ஒன்றிருந்ததை அறிகிறோம். இக்குழு தனது வலிமையைப் பெருக்கிக் கொண்டு 13 ஆண்டுகள் வரை நீடித்ததாக (ஹதிகும்பா கல்வெட்டு பிறப்பிக்கப்படும் வரை)வும், கலிங்கத்தை அச்சுறுத்தியதாகவும் அறியக் கிடைக்கிறது. ஹதிகும்பா கல்வெட்டு பிறப்பிக்கப்படுவதற்கு முந்திய 113 ஆண்டு காலகட்டம் பிந்துசாரரின் ஆட்சிக்கால முற்பகுதியுடன் பொருந்துவதாக இருப்பது தெளிவு என தமிழக வரலாற்றாளர்கள் கருதுகின்றனர்.

வரலாற்றுச் சான்றுகளாகப் பயன்படும் கல்வெட்டுக்களின் நிரலில் அடுத்து முன்னிற்பது பராந்தக நெடுஞ்சடையனால் பிறப்பிக்கப்பட்ட வேள்விக்குடி சாசனம் ஆகும். சங்ககால அரசனான பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியால் அந்தணர் குடும்பத்திற்கு இறையிலியாக வழங்கப்பட்ட வேள்விக்குடி என்னும் கிராமத்தை திரும்பவும் அவ்வந்தணர் வழித்தோன்றல்களுக்கே உரிமையாக்கிப் பிறப்பிக்கப்பட்டதாக இக்கல்வெட்டு அமைந்துள்ளது. புதுக்கோட்டைக்கருகிலுள்ள குடுமியான்மலை 'இசைக்கல்வெட்டுக்கள்' கி.பி. 7 அல்லது 8ஆம் நூற்றாண்டினைச் சார்ந்தவை. இவை முதலாம் மகேந்திரவர்ம பல்லவன் காலத்தில் பொறிக்கப்பட்டவை. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை. அடுத்து குறிப்பிடத்தக்கது திருக்கோவலூர் கல்வெட்டாகும். இது சங்ககாலப் புலவரான கபிலர் தன்னைத் தீயிட்டு அழித்துக் கொண்ட செய்தியைக் குறிப்பிடுகிறது. தான் அவ்வாறு இறந்துபடுவதற்கு முன்னர் அவர் பாரி மகளிர் இருவரையும் திருக்கோவலூர் மன்னனான மலையமானுக்கு மணமுடித்து வைத்ததாகத் தெரிகிறது.

விஜயாலய அரச வமிசத்தினர், வரலாற்றாய்விற்குப் பெரிதும் பயன்தரத் தக்க பல்வேறு கல்வெட்டுக்களையும், செப்பேடுகளையும் விட்டுச் சென்றுள்ளனர். கோவிலின் கற்சுவர்களில் வரலாற்றுண்மைகளைப் பொறித்தல் என்ற வழக்காற்றினை முதன்முதல் புகுத்தியவர் முதலாம் இராசராசரே. அன்றியும் வரலாற்றுண்மைகள் பொதிந்த பல செப்பேடுகளையும் அவர் பிறப்பித்துள்ளார். முதலாம் இராசேந்தரரின் மால்பாடி கல்வெட்டுகளும், தஞ்சை ராசராசேசுவரர் கோவிற் சுவர்களில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்களும் குறிப்பிடத்தக்கவை. தெளிவான அரசியல் தகவல்கள் பலவற்றை நமக்களிப்பதாக அவரது திருவாலங்காடு செப்பேடுகள் அமைகின்றன. மக்கள் நல்வாழ்விற்குதவும் கல்லூரி, மருத்துவமனை, போன்றவற்றிற்கு மானியமளித்தமையைப் புலப்படுத்தும் வீரராசேந்திரரின் திருமுக்கூடல் கல்வெட்டுக்கள் மிக நீளமானவை. மூன்றாம் இராசேந்திரர்க்குற்ற இன்னல்களைத் தெளிவுபடுத்துவதாக திருவேதிபுரம்

கல்வெட்டு அமைகிறது. இத்தருணத்தில் தனது சமகால ஹொய்சால மன்னரிடமிருந்து அவருக்குக் கிடைத்த உதவி பற்றியும் இது கூறுகிறது. எனவே இக்கல்வெட்டு முழுவதும் ஒரு வரலாற்றுச் சான்றாகவே கருதப்படுகிறது. திருவிடைவாயில் (தஞ்சாவூர்) கல்வெட்டு சோழர் காலத்துத் தல ஆட்சி முறையின் சிறப்புத் தன்மைகளை வெளிக்கொணர்கிறது.

சோழர் காலக் கல்வெட்டுக்கள் எண்ணற்றவை; தனித்தன்மை பெற்றவை. சமகாலத்தவரான அண்டை நாட்டு வமிசத்தினர் வெளியிட்டுள்ள கல்வெட்டுக் களிலிருந்தும் சோழர் வரலாற்றிற்கான சான்றுகள் பெறப்படுகின்றன. மூன்றாம் கிருஷ்ணர் காலத்தவையான இராட்டிரகூடர் கல்வெட்டுக்கள், கீழை மேலைச் சாளுக்கியர்களின் கல்வெட்டுக்கள், கீழைக் கங்கர்களின் கல்வெட்டுக்கள் ஆகியவை, சோழர்களின் சான்றுகளால் பெறப்படும் வரலாற்று உண்மைகளை நிறுவுவன அல்லது சற்றுத்திருத்தி யுரைப்பனவாக அமைகின்றன. ஹொய்சாளர்களின் சான்றுகள் (பதிவேடுகள்) ஓரளவு அதன் வீழ்ச்சிக்கால அரசியல் நிலை பற்றி விளக்குவன. பிற அரச வம்சத்தவர் வெளியிட்டுள்ள கல்வெட்டுகளில் சோழர் வரலாறு பற்றிய குறிப்புகள் காணப்படுவது போலவே, சோழர் தம்குடைக்கீழ் கொணர்ந்த நிலப்பகுதிகளிலும் சோழர் கல்வெட்டுக்கள் பல காணப்படுகின்றன. கன்னட நாட்டின் கோலார் நகரில் அமைந்துள்ள கோலாரம்மா கோவிற் சுவர்களில் சோழர் கல்வெட்டுக்கள் பல காணப்படுகின்றன.

பிறநாடுகளில் கிடைக்கும் குறிப்புக்களிலிருந்து தமிழ்நாடு கீழ்த்திசை நாடுகளில் ஏற்படுத்திய குடியேற்றங்கள், அந்நாடுகளுடன் கொண்ட வாணிப உறவு இவை பற்றி அறிய முடிகிறது. இவற்றுள் போர்னியோவிலுள்ள மூலவரம் என்ற இடத்தில் கிடைத்துள்ள யுபா கல்வெட்டுக்களைச் சிறந்தவையாகக் குறிப்பிடலாம். இவற்றில் மூலவர்மன் என்னும் பெயர் கொண்ட அரசன் ஒருவன் வேதாகமச் சடங்குகள் நிறைவேற்றியமை பற்றியும், அவன் அந்தணர்க்களித்த கோதானம் (பசுக்களை வழங்குதல்), தட்சிணை (காணிக்கை) பற்றியும் கூறப்படுகிறது. இந்தோ—சீனாவிலுள்ள சம்பா என்னுமிடத்தில் கிட்டியுள்ள வோகான் சான்றுகள் அடுத்துக் குறிப்பிடத்தக்கவை. இவை யுபா கல்வெட்டுக்களை விடக் காலத்தால் அரை நூற்றாண்டு மூத்தவை. தா—குவ—பா என்னுமிடத்தில் கிடைத்துள்ள தமிழ்க்கல்வெட்டுக்கள், ஆங்கு ஒரு வைணவக் கோவில் இருந்த உண்மையைப் புலப்படுத்துகின்றன. கோவிலை அடுத்துக் குளம் ஒன்று அமைக்கப்பட்டதாகவும், அதனைப் பராமரிக்க சில ஊழியர்கள் நியமிக்கப்பட்டதாகவும், இச்சான்றுகளால் பெறப்படுகிறது. அன்றியும் இக்கல்வெட்டுக்கள் பல்லவர் வரலாற்றில் காட்டப்படும் மூன்றாம் நந்திவர்மனுக்குரிய வேறு பெயரான 'அவந்தி நாராயணா' என்பதையும் குறப்பிடுகின்றன.

செப்புப் பட்டயங்களின் பிறப்பினைக் குறித்துச் சித்திரிக்கின்றவேளையில், அவை ஒரே சமயத்தில் எண்ணிக்கையில் இரட்டிப்பாகப் (Duplicity) பிறப்பிக்கப்பட்டுள்ள உண்மை கருதத்தக்கது. சங்க காலத்துச் செங்கணான் பற்றிக் குறிப்பிடும் அன்பில் செப்புப் பட்டயங்கள் முக்கியமானவை. பிராகிருத, வடமொழிகளில் செப்புப் பட்டயங்களைப் படைத்தவர்களுள் பல்லவர்களே முன் நிற்கின்றனர். சோழர்காலச் செப்புப்பட்டயச் சாசனங்கள் மிக நீளமானவை. இராசராசரின் லேடன் சாசனமும், முதலாம் இராசேந்திரனின் திருவாலங்காடு, கரந்தைச் செப்பேடுகளும், வீரராசேந்திரனின் சரலா செப்பேடுகளும் இவற்றிற்கான சான்றுகளாகும்.

## தொல்பொருள் சான்றுகள்

தமிழக வரலாற்றைச் சீர்திருத்தி எழுதும் பணியில் தொல்பொருள் சான்றுகளின் சிறப்பான பங்குபற்றி என். சுப்பிரமணியன் "தமிழகத்தின் தொன்மைக்கால வரலாறு இருண்ட (தெளிவற்ற) தொல்பொருட் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டே புனையப்படுகிறது. இவை தொன்மைக்காலத் தமிழர் வரலாற்றினை நன்கு புலப்படுத்துவதாக இல்லை. சிந்துவெளி, நைல்வெளி, மெசபொடாமிய வெளி நாகரிகச் சான்றுகள் பல அவ்வப்பகுதிகளின் நிலத்தின் மேற்பரப்பிலும், அகழ்வாய்ந்ததன் வழியும் கிடைத்துள்ளமையால், மறைந்துவிட்ட இவற்றின் வரலாறுகள், நன்கு புனையப் பட்டுள்ளன. தமிழகத்தைப் பொருத்தமட்டில் இத்தகைய அகழ்வாய்வுகள் நடத்தப் படவுமில்லை; நடந்ததற்கான வாய்ப்புக்களும் இல்லை. பண்டை தமிழகம் குறித்த வரலாற்றாளர்களுக்கு உண்மையாக பண்டைக்காலச் சான்றுகள் ஏதும் கிடைக்கவில்லை" என்று கூறுகிறார். ஆனால் இன்று ஆதிச்சநல்லூர், அழகாரை, உறையூர், திருக்கம் புலியூர், அரிக்காமேடு, அழகன்குளம் மற்றும் மதுரையில் சில இடங்களில் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

தென்னிந்தியத் தொல்பொருளாய்வுத்துறையின் முன்னோடியாகக் கூறப்படும் புரூஸ்ஃபூட் அவர்களே திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆதிச்சநல்லூர்க் கண்டு பிடிப்புக்களுக்குக் காரணமானவர். பாண்டிச்சேரியை அடுத்த அரிக்காமேடு என்னு மிடத்தில் கிடைத்துள்ள தொல்பொருள் சான்றுகள் அடுத்து அமைவன. அரிக்காமேடு சான்றுகள் தமிழகத்திற்கும், யவனர்க்கும் (இந்தோபாக்டீரியர்கள்) இடையே சங்க காலத்தில் நடைபெற்ற கடல் வாணிபத் தொடர்பை எடுத்துரைப்பன. "அரிக்கமேடு அகழ்வாய்வுகளை நடத்திய மார்டிமர் வீலர் அவர்களே, இந்தியாவின் தொல்பொருள் ஆய்வு நிரலில் தமிழகத்தையும் சேர்த்தார். இதன்வழிப் பண்டைத்தமிழக வரலாற்றிற்கு ஒரு புதிய விரிவாக்கமும் அளித்தார்".

## நாணயவியல்

நாணயங்களை விஞ்ஞான அடிப்படையில் ஆய்வதே நாணயவியலாகும். ஆனால் பண்டைக்காலம் பற்றிய ஆய்விற்குப் போதுமான தகவல்களை இந்த நாணயங்கள் அளிப்பதில்லை. எனவே தொல்பொருட்சான்றுகளில் இரண்டாம் நிலையை பெற்றனவாகவே இந்த நாணயவியல் கருதப்படுகிறது. கோவை, மதுரை மாவட்டங்களில் அண்மையில் கிட்டியுள்ள உரோமாபுரி நாணயங்கள், தமிழகத்தில் தமது வாணிப வளர்ச்சி நோக்கில் உரோமானியர்கள் தமிழகத்திலேயே தங்கள் நாணயச்சாலை நிறுவியிருந்தனர் என்பதைத் தெளிவாக்குகின்றன. அரிக்காமேட்டுப் பகுதிகளில் கிடைத்துள்ள உரோமப் பேரரசன் அகஸ்டஸ் காலத்தில் வெளியிடப்பட்டுள்ள நாணயங்கள் இவ்வுண்மையை நிறுவுகின்றன.

தமிழக அரச வமிசத்தினர் வெளியிட்டுள்ள சில நாணயங்களும் பண்டைத் தமிழக வரலாறு குறித்த குறிப்புகள் சிலவற்றைக் கொடுக்கின்றன. தமிழக நாணயங்களுள் பாண்டியர், சோழர், பல்லவர் ஆகியோரின் நாணயங்கள் முக்கியமானவை. இந் நாணயங்களை உருவாக்கப்பயன்படுத்தப்பட்டுள்ள உலோகம், அதன் அமைப்பு, அளவு,

அவற்றில் பொறிக்கப்பட்டுள்ள உருவங்கள், எழுத்துக்கள் ஆகியவை அக்காலத்தைய நாட்டின் வளத்தையும், மக்களின் சமுதாய மேம்பாட்டையும் விளக்குவனவாக அமைகின்றன. பொதுவாகச், செம்பையும், சிலவேளைகளில் ஈயத்தையுமே நாணயங்கள் அச்சிடப் பயன்படுத்தினர். இருப்பினும் தங்கமும், வெள்ளியும் கூட நாணயம் வடிக்கப் பயன்படுத்தப்பட்டன.

சோழர் நாணயங்கள் புலியின் உருவத்தைத் தாங்கி நிற்கும். பாண்டியர் நாணயங்களின் ஒரு புறத்தில் மீன் இலச்சினையும், சேரர் நாணயங்களில் வில்லும் பொறிக்கப்பட்டிருக்கும். ஹொய்சாளர்களின் நாணயங்களும் (பணம்), விஜய நகர ஆட்சியாளர்களின் வராகனும், அவ்வரசர்கள் தமிழகத்தில் செலுத்திய மேலாதிக்கத்தை விளக்குவனவாக அமைகின்றன. மதுரை சுல்தான்களால் வெளியிடப்பட்ட நாணயங்கள் திருத்தமானவை; சற்று மேம்பாடுடையவை. ஆனால் இவை டெல்லி சுல்தானியர்களின் நாணயத்தை ஒத்திருந்தன.

## இலக்கியச் சான்றுகள்

வரலாற்றை அறிய உதவும் அடுத்த முக்கியமான சான்றுகள் இலக்கியங்களே, பிற நாடுகளில் இலக்கியங்கள் வரலாற்றின் அடிப்படையாக அமைகின்றன. ஆனால் இந்தியாவில் அவை சோதனைகளாக (Snares) உள்ளன. இருப்பினும் தமிழக வரலாற்றைச் சரிவர எழுதுவதற்கான இலக்கியங்கள் பல உள்ளன. இலக்கியச் சான்றுகளை விரிவான அளவில் இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை (1) பிற நாட்டவை (2) இந்திய நாட்டவை. இந்திய வரலாற்றுச் சான்றுகளை மேலும், தமிழில்லாத பிறமொழி இலக்கியங்கள், உள்நாட்டுத் தமிழ் இலக்கியங்கள் எனவும் நாம் வகைப்படுத்தலாம்.

## பிறநாட்டு இலக்கியச் சான்றுகள்

தமிழகம் பற்றிக் குறிப்பிடுகின்ற முதல் அந்நிய நாட்டார் மெகஸ்தனீஸே ஆவார். ஆனால் தமிழக மக்களின் மொழி தெரியாததால், மொழி பெயர்ப்பாளர் ஒருவரின் துணைகொண்டே, தான் கண்டவற்றையும், கேட்டவற்றையும் குறித்திருக்க வேண்டும். பகுத்தாய்ந்து விளக்கம் பெறுவதில் சற்றுச் சிரமமுற்றிருக்க வேண்டும். ஆனால் இவரது படைப்பான ‘இண்டிகா’ என்னும் நூல் வரலாற்றாளர் பலராலும் போற்றப்படுகிறது. ஹெராக்கிள்ஸ் என்பவரின் மகளான பாண்டையாவுக்குக் கொடுக்கப்பட்ட தென்புலமாக விரிந்து, கடல் வரை நீண்டிருந்த இந்தியாவின் ஒரு பகுதியான பாண்டிய நாட்டில் நடைபெற்று வந்த ஆட்சிமுறைபற்றி மிகத் தெளிவான குறிப்புகளைத் தருகிறார். துரதிர்ஷ்டவசமாக ‘இண்டிகா’ முழு நூலும் நமக்குக் கிடைக்கவில்லை. அதன் சில பகுதிகளே காலத்தின் கோர அழிவுகளிலிருந்து தப்பிக்கிட்டியுள்ளன. தமிழக வரலாற்றுக்கான பிறநாட்டுச் சான்றுகளுள் காலத்தால் முந்தியதாகக் குறிப்பிடத்தக்கது பெயர் தெரியாத ஆசிரியர் ஒருவரால் யாக்கப்பட்ட ‘எரிதிரியக் கடலின் பெரிப்ளூஸ்’ என்னும் நூலும், டாலமியால் எழுதப்பட்ட நிலவியல் என்னும் நூலுமாகும். இவை பண்டைத் தமிழகத்தின் கடல் வாணிபச் சிறப்புக்களைச் செப்புவன. இந்நூல்களில் காவிரிப்பூம்பட்டினம் போன்ற நகரங்களைப் பற்றிய செய்திகளும் காணக் கிடைக்கின்றன.

தூதரகம் வாயிலான சீனச்சான்று ஒன்று தமிழகக் காஞ்சிபுரத்தை 'ஹௌவாஞ்சி' Houangche) எனக் குறிப்பிடுகிறது. இதன் சமகாலத்தில் கன்னட நாட்டு சந்திரவாலியில் கண்டெடுக்கப்பட்ட சீன நாணயம் ஒன்று இவ்வுண்மையை நிறுவுகிறது. சீனப் பயணிகளான பாஹியான், யுவான்சுவாங் ஆகியோரின் பயணக் குறிப்புகள் முக்கிய மானவை. குப்தப் பேரரசர் இரண்டாம் சந்திரகுப்தர் காலத்தில் இந்தியாவிற்கு வருகை தந்த பாஹியானால் குறிப்பிடப்பட்டுள்ள செய்திகளைவிட, கி.பி. ஏழாம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்த யுவான்சுவாங்கின் பயணக் குறிப்புகளில் தென்னிந்தியாவைப் பற்றிய, குறிப்பாகத் தமிழகம் பற்றிய விவரங்கள் ஏராளமாகக் கொடுக்கப்பட்டுள்ளன. தமிழகம் பற்றிக் குறிப்பிடும் கீழ்த்திசைகளின் தொடர் வரலாறுகளுள், பாலி மொழியில் எழுதப்பட்ட மஹாவம்சம், தீபவம்சம் என்னும் இலங்கை தொடர் வரலாறுகள் குறிப்பிடத்தக்கவை.

விஜய நகர ஆட்சிக்காலத்தில் வெளிநாட்டுப் பயணியர் பலர் தென்னிந்தியாவிற்கு வருகை தந்தனர். "வேறெங்குமுள்ள இந்துக்களின் அல்லது இந்து அரசர்களின் வரலாறு களைவிட, விஜய நகர, மராத்தியர் வரலாறுக்ள் நன்கு அறிந்து கொள்ளத்தக்கவையாக உள்ளன". இத்தாலியப் பயணி நிக்கோலோ கோண்டி, பாரசீகத்தூதுவர் அப்துர் ரசாக், உருசிய வணிகர் அதானிசியஸ் நிகிடின், பாரசீகப் பயணி ஃபெரிஷ்டா, இத்தாலியக் கனவான் லுடோவிகோ, டி. வர்தேமா, போர்த்துக்கீசிய மொழிபெயர்ப்பாளர் துவார்தே பார்போசா, போர்த்துக்கீசிய வரலாற்றுப் பதிவாளர்களான டாமின்கோ பேயஸ், ஃபெர்னாவோ நூனிஸ் ஆகியோரால் யாக்கப்பட்டுள்ள தொடர் வரலாறுகள், பயணக் குறிப்புக்கள், விவர நூல்கள், தென்னிந்திய மக்களின் வாழ்க்கை நிலையையும் அரசுகளின் அமைப்பையும் படம்பிடித்துக் காட்டவல்லன.

பிற்காலத் தமிழக வரலாற்றுக்குரிய அந்நியரின் குறிப்புகளும், பயணக்குறிப்புகளும் அதிகம். மனுசியின் குறிப்புகள் ஜுல்பிகர்க்காவின் இந்திய படையெடுப்புகளை விளக்குகின்றன. 1667-ஆம் ஆண்டு ஜுல்பிகர்க்கான் மதுரையைத் தாக்கினான். மதுரையின் அரசி இராணி மங்கம்மாள் பணமுடிப்புக் கொடுத்து, அவனை விரட்டிய செய்தியை மனுசியின் குறிப்புகள் தருகின்றன. இலங்கையின் சில கடைசி அரசிகள் நாயக்கரின் மதுரையைச் சேர்ந்தவர் என்று தோடபில்லரின் (Dodaphillar) ஸ்ரீ விக்ரமராஜசிங்ஹா (Sri Vikramarajasinha) என்ற இலங்கைக் குறிப்பு கூறுகின்றது. பால்பேரிஸ் (paul peiris) இயற்றிய 'Sinhala and patriots' என்ற நூல், "விஜயாவுக்குத் தம் துணைவியரைக் கொடுத்த அரச குடும்பம் முஸ்லீம்களின் படையெடுப்பால் அழிக்கப்பட்டது. ஆனால் கி.பி. 1420-இல் நாயக்கரின் ஓர் இந்து வமிசம் மீண்டும் நிறுவப்பட்டது. விஜயநகரத்தின் பேராண்மையைத் தழுவிய திருமலையின் (1623-1663) ஆட்சியின்போது அந்நாடு அதன் உச்ச நிலையை எட்டியது. இத்திருமலையின் சட்டச் சின்னங்கள் இன்றும் அழியா அழகுடன் மிளிருகின்றன" என்று கூறிற்று. ஆலந்து மன்னருக்கு மலபாரிலிருந்த விசச்சர்ஸ் (Viseschers) எழுதிய கடிதங்கள், மலபார் முதல் குமரிவரை பரவியுள்ள நிலப்பரப்பின் இயற்கையமைப்புகளைப் படம்பிடிக்கின்றன. மேலும் அதன் மக்கள், அவர்களின் குணாதிசயங்கள், அவர்களைத்தாக்கிய நோய்கள் அவர்கள் வாழ்வில் இடம்பிடித்த மூடநம்பிக்கைகள் அனைத்தும் சித்தரிக்கப்பட்டுள்ளன. கே.பி. பத்மனாபமேனன் எழுதி, டி.கே. கிருஷ்ணமேனன் தொகுத்த 'The History of Kerala' என்ற நூலில் இக்குறிப்புகளைப் பரக்கக் காணலாம்.

ஆர்.சி. காம்பிரிட்ஜ் இயற்றியது 'The Coast of Coromandel' என்ற ஆங்கில நூலாகும். இந்நூல் கிழக்கு கடற்கரையின் இயற்கை அமைப்புத்தன்மைகள் அங்குவாழ் மக்கள், அந்நிலத்தில் அந்நியரின் ஊடுருவல் பற்றிய செய்திகளைத் தருகின்றன. பாண்டிச்சேரி ஏசுசங்கத்தினரான அபே தூபாய் (Abbe Dubois - 1765-1848) தென்னிந்திய மக்களைப் பற்றி சிறந்ததோர் இலக்கியப் படைப்பை விட்டுச் சென்றார். Description of the character, Manners and customs of the people of India (1817) என்ற அவர் இயற்றிய நூலில் அவர் பார்த்து ரசித்த, கடிந்த சமுதாய, சமயக்கோட்பாடுகள், குறைகள், நம்பிக்கைகள் சித்தரிக்கப்பட்டுள்ளன. அவர் பார்த்து இயற்றியவை அனைத்தும் உண்மையென்பதில்லை. ஆனால் அந்நூல் மக்களின் நாளது வாழ்க்கை முறையையும், நம்பிக்கையையும் நடைமுறைகளையும் விளக்குகின்றது.

ராபர்ட் சீவல் சேகரித்து, தொகுத்து, Forgotten Empire என்ற தம் நூல் மூலம் வெளியிட்ட பேயிஸ் (Paes) நூனிஸ் (Nunis) என்போரின் குறிப்புகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை. இக்குறிப்புகள் தமிழகத்தில் விஜயநகரத்தின் வளர்ச்சியை விளக்கவல்லவை. வெளிநாட்டு பயணிகளாகிய பராதாஸ் (Barrados), நூனிஸ், பார்போஸா (Barbosa) ஆகியோரின் பயணக் குறிப்புகள், நியூகாஃபின் (John Nieuhoff) காட்சிக் குறிப்புகள், தீவ்நாட் (Thevenot), மனூஸி (Manucci)யின் அவைக் குறிப்புகள், பர்ச்சேஸ் பில்கிரிம்ஸ் (purcha's pilgrims) என்ற நூலில் குறிக்கப்பட்டுள்ள செய்திகள் யாவும் தமிழகத்தில் நிகழ்ந்த பல நிகழ்ச்சிகளைப் படம் பிடிக்கின்றன. சில முகமதியப் பயணிகள் வரலாற்றாளர் வரைந்த தம் நூற்களிலும் 17-ஆம், 18-ஆம் நூற்றாண்டுத் தமிழகம் (மதுரை) இடம் பெறுவதைக் காணலாம்.

சமயப்போதகரின் கடிதங்களும், குறிப்புகளும் காட்சிச்செய்திகளும் பிறவும் வெளிநாட்டு இலக்கியங்கள் பால்பட்டவை. இவை வெளிநாட்டு சமய இலக்கியங்கள் என அறியப்படுகின்றன. இவை மொத்த வரலாற்றுக் குறிப்புகளன்று. சமயத்துடன் விரவி வந்த வடிவங்களே. இவை பெரும்பாலும் கடிதத் தொடர்பானவையே. இக்கடிதங்கள் ஏசு சங்கத்தார் மேனாட்டு மேலதிகாரிகளுக்கும், நண்பர்களுக்கும் வரைந்தவை. ஏசுவின் பன்னிரு சீடர்களில் ஒருவராகிய புனித தோமையர் மலபாருக்கு வந்து, கோயிலொன்று எழுப்பினார்; பின் மயிலைக்குச் சென்று அங்கு அவர் கொல்லப்பட்டார்; பறங்கி மலையிலுள்ள சின்னங்கள் அதனை விளக்குகின்றன என்று கிறிஸ்தவர் நம்புவர். 16-ஆம் நூற்றாண்டில் லொயாலாவின் சீடராகிய புனித பிரான்ஸிஸ் சேவியர் இந்தியாவுக்கு வருகை தந்தார். அவர் பல இந்துக்களையும் மற்றவரையும் தம் மதத்துக்கு மாற்றினார். 1548-இல் கிறிமேல் (Fr. Crimale) பாதிரியார் இங்கு கொல்லப்பட்டார். முதன் முதல் சமயத்திற்காக 'வீர மரணம்' அடைந்தவரும் இவரே. 1596-இல் மதுரையில் முதன் முதலில் ஏசு சபையாரின் ஒரு சபை நிறுவப்பட்டது. ராபர்ட் நொபிலியைத் தொடர்ந்து பல போர்த்துக்கீசிய, ரோமானிய பாதிரியார்கள் தமிழகம் புகுந்தனர். அவர்கள் இந்நாட்டில் அவர்களுடைய பிரச்சினைகள் பற்றியும், மன்னர் — மக்கள் நிலை பற்றியும் எவ்வித இன்னல்களையெல்லாம் அவர்கள் தாண்டினர் என்றும், ஆங்காங்கே நிகழ்ந்த சமயக் கொலைகளை — நிகழ்ச்சிகளைப் பற்றியும் தம் மேலாளருக்கு கடிதம் வரைந்தனர். ரோம், போர்த்துக்கல் நாட்டு மேலாளருக்கு அவர்கள் வரைந்த கடிதங்கள் பல இன்று கிடைத்துள்ளன. அவற்றில் சில ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. ராஸ்

(Ros), லார்ஸியோ (Laerzio), நொபிலி (Nobili), பிரிட்டோ (Britto), அந்தோனியா ரூபினோ (Antonio Rubino), வீகோ (Vico), லீஷியோ Leitio), மிகேல் வாஸ் (Michael vaz), மார்டின்ஸ் (Martinz), மாயா (Maya), டிகாஸ்டா (Decosta), புரோயன்ஸா (Proenza), பெர்னான்டஸ் (Fernandez), ரீஸ் (Reiz), பிமென்டா (Pimenta), அல்வாரஸ் (Alvarez), கூடின்கோ (Coutinho), ஹென்ரி ஹென்ரிகஸ் (Henri Henrigus), பெஸீ (Besse), காஸ்டஸ் (Castets), சான்ட்லர் (Chandler). மேலும் பல பாதிரியார்கள் வரைந்தவையே இக்கடிதங்கள். ஏறத்தாழ 950 கடிதங்கள் பற்றிய புகைப்படங்கள் சென்பகனூரிலுள்ள (கொடைக்கானல்) இச்சங்க நூலகத்திலுள்ளன. இவை லத்தீன், இத்தாலிய, போர்த்துகீசிய மொழிகளில் எழுதப்பட்டவை. இக்கடிதங்களில் சிலவற்றை சேசு சபையின் பெட்ரன்ட் (Bertrand) பாதிரியார் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, நான்கு தொகுதிகளைக் கொண்ட, La Mission Du Madure என்ற நூலாக 1847-1854-ஆம் ஆண்டுகளில் வெளியிட்டார். அவற்றில் மிக முக்கியமான ஒரு கடிதம் போப்பாண்டவரின் ஆணை (The Bull-Romance Sedies) என்பதாம். இக்கடிதம் நொபிலி பின்பற்றிய சமயப்பிரச்சார முறைகளுக்கு ரோம் அளித்த அனுமதியைக் குறிப்பதாகும். The Mission to Madurai என்ற மேற்கூறிய நூல் தமிழகத்தின் சமய, சமூக, பொருளாதார, அரசியல் நிலைகளைச் சித்தரிக்க வல்லது.

1914-ஆம் ஆண்டு லியோன் பெஸீ பாதிரியார் வெளியிட்ட La Mission Du Madura, Father Beschi : His Times and His writings, Chanda Sahib and Beschi போன்ற நூற்களில் வரலாற்றுத் தொடர்புடைய நிகழ்ச்சிகள் பல படம் பிடிக்கப்பட்டுள்ளன. 1762-இல் இரு தொகுதிகளாக வெளிவந்த ஜான்லாக்மானின் (John Lockman) Travels of the Jesuits, ராபர்ட்கால்ட் வெல்லின் (Robert Caldwell) Records of the Early History of Tirunelveli Mission, நியூகாஃபின் (J Nieuhoff) Voyages and Travels into Brazil and East Indies, பெர்னாவோ பெரீராவின் (Fernao Fereira) Life of John De Britto, சான்ட்லரின் Proto martyre of Madurai Mission, சத்தியநாதையர் மொழி பெயர்த்து History of the Nayaks of Maduraவில் வெளியிட்ட சில கடிதங்கள், கீர்னாண்டரின் (J.Z. Kiernander) Religious and Missionary Intelligence (1847) போன்ற சமயப் பிரச்சார நூற்களும், கடிதங்களும் தமிழ்நாட்டில் ஏசு சபையார் அடைந்த வெற்றி தோல்விகளையும், தாண்டிய இடர்ப்பாடுகளையும் குறிப்பிடுகின்றன. கீர்னாண்டரின் நூல் புரோட்டஸ்தானிய சமய வளர்ச்சியை சுட்டும் ஒரே நூல்.

சமய நோக்குடன் இந்நூற்கள் வரையப்பட்ட போதும், அந்நூற்களில் சமகால வரலாற்று நிகழ்ச்சிகள் படம்பிடிக்கப்படுவது இவற்றின் சிறப்பம்சமாகும். ஏசு சங்கத்தாரின் ஆழ்ந்த படிப்புக்கும், வட்டாரமொழிகளைக் கற்பதில் அவர்கள் காட்டிய அக்கறைக்கும், மக்களின் நம்பிக்கைகள் பற்றிய அவர்களின் அறிவுக்கும் ஈடிணை வேறில்லை. ஆகவே இவை தமிழக வரலாற்று வரைவியலுக்கு முதல்நிலைச் சான்றுகளாயுள்ளன. பேராசிரியர் இராசய்யன் கருத்துப்படி "எக்கோணத்தில் நிகழ்ச்சிகளை அவர்கள் பார்த்தார்களோ அதனை விடுத்துப்பார்ப்பின், அவர்களுடைய குறிப்புகள் வரலாற்று ஆய்வின் சோதனையைத் தாண்டி நிற்பதைக் காணலாம்".

## இந்திய இலக்கியச் சான்றுகள்

### தமிழல்லாத பிறமொழி இலக்கியங்கள்

இந்தியாவில் கிடைத்துள்ள தமிழல்லாத பிறமொழி இலக்கியச் சான்றுகள், பண்டைத் தமிழக வரலாற்றிற்குப் போதுமான தகவல்களை அளிப்பனவாக இல்லை. வேத நூல்களிற் காணப்படும் குற்றங்கள் மிகப்பரவலானவை. அன்றியும் அவை ஒதுக்குப்புறமான தென்னகத்தலங்கள் பற்றி அதிகமாகக் குறிப்பிடவில்லை. தமிழர் வாழ்வுமுறை பற்றிய மேலெழுந்த வாரியான தகவல்களைப் பண்டைய இதிகாசங்களான இராமாயணமும், மகாபாரதமும் நமக்களிக்கின்றன. "முத்துக்கும், விலையுயர்ந்த கற்களுக்கும் புகழ்மிக்க பாண்டி நாட்டுக் கவாதம்" என்னும் இடம் பற்றிய குறிப்பு ஒன்றினை நாம் வால்மீகி இராமாயணத்தில் காண்கிறோம் (இராமாயணம் — கிட்கிந்தாகாண்டம்). இதில் கபாடபுரம் பாண்டியர்களின் இரண்டாவது தலைநகரமாகக் சுட்டப்படுகின்றது. வியாசரின் மகாபாரதத்தில் 'பாண்டியர்' பற்றிய குறிப்பு ஒன்று காணப்படுகிறது. சந்திரகுப்தமௌரியரின் அமைச்சரான கௌடில்யர் தனது அர்த்த சாஸ்திரத்தில் "பாண்டிய கவாதம்"பற்றியும், மதுரை பற்றியும் குறிப்பிடுகின்றார்.

### தமிழிலக்கியங்கள்

பண்டைய தமிழிலக்கியங்களை சங்க இலக்கியங்கள் என அழைக்கின்றோம். இவையே சங்க காலம் பற்றிய நம்பகமான, தெளிவான, மதிப்புமிக்க சான்றுகளாக அமைவன. பொதுவாகச் சங்க இலக்கியங்களை கீழ்க்கண்ட வகையில் வகைப் படுத்துகிறோம்.

**அவை :**

1. **தொல்காப்பியம்** — தொன்மை மிகு தமிழ் இலக்கண நூல்.

2. **எட்டுத்தொகை** — நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு.

(நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்துங் கலியோடு அகம்புறமென்று
இத்திறத்த எட்டுத்தொகை.)

3. **பத்துப்பாட்டு** — திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப் பாட்டு, மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப்பாலை, மலைபடு கடாம் என்பன.

(முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி மருவினிய
கோல நெடு நல்வாடை கோல் குறிஞ்சிப் பட்டினப்
பாலை கடாத்தோடும் பத்து)

4. **பதிணெண்கீழ்க் கணக்கு** — நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னாநாற்பது, இனியவைநாற்பது, கார்நாற்பது, களவழி நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, கைந்நிலை, குறள், திரிகடுகம், ஆசாரக் கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி.

(நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணைமுப்
பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைய காஞ்சியோடு ஏலாதி என்பவே
கைந்நிலைய வாம்கீழ்க் கணக்கு.)

## 5. இரட்டைக் காப்பியங்கள் – சிலப்பதிகாரம், மணிமேகலை

ஒவ்வொரு செய்யுளின் இறுதியிலும், செய்யுளியற்றிய ஆசிரியரின் பெயர், இயற்றிய இடம், பொழுது ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன. (இவ்விதிக்குச் சில விலக்குகளும் இருக்கின்றன). எனவே பண்டைத்தமிழகம் மக்களின் சமுதாய, பொருளாதார, அரசியல், சமய வாழ்க்கைமுறைபற்றிய பல்வேறு தகவல்கள் இவற்றினால் பெறப்படுகின்றன. ஆனால் “சங்க காலத்தில் அரசியல், ஆட்சிமுறை, வாணிகம் ஆகியவை வளர்ச்சி பெற்றிருந்த அளவிற்குச் சமயமும், தத்துவமும் வளரவில்லை. சுருங்கக்கூறின் அது ஒரு சமயச் சார்பற்ற காலமாகும்” என சுப்பிரமணியன் கருதுகிறார். சங்க காலத்தைக் கடந்துவரும் வரலாற்று மாணவர் அடுத்து ஒரு இருண்ட காலத்தைச் சந்திக்கின்றனர். இக்காலம் பற்றிய நம்பகமான வரலாற்றுச் சான்றுகள் இன்னும் சரிவரக் கிடைக்கவில்லை. இக்காலத்தைக் (களப்பிரர் இடையாட்சிக் காலம்) கடந்து வருபவர். வரலாற்றுச் சான்றுகள் விரவிக் கிடைக்கும் தமிழகச் சமயகாலத்தை அடைவார். இக்காலத்துப் படைக்கப்பட்ட இலக்கியங்கள் பெரிதும் சமயத்தை மையமாகக் கொண்டவை. எனவே இவை வரலாற்றாய்விற்கு அவ்வளவாகத் துணை நிற்பனவல்ல. “பக்திக்காலம் தொடங்கிய பின்னர் இலக்கியங்கள் பக்தியையும், மரபினையும் கருப்பொருளாகக் கொண்டே யாக்கப்பட்டுள்ளன. எனவே இவை வரலாற்றுச் சான்றுகளாகப் பயன்படுபவை அல்ல”. இருப்பினும் நந்திக்கலம்பகம், பாண்டிக்கோவை போன்ற நூல்கள் வரலாற்றாய்விற்குத் துணை நிற்கும் நூல்களுள் குறிப்பிடத்தக்கவை.

“விஜயாலயன் மற்றும் அவரது வழித்தோன்றல்களால் ஆளப்பட்ட சோழப் பேரரசின் ஆட்சிக்காலம், தென்னிந்தியாவின் சிறப்பு மிக்க இலக்கிய சமய மறுமலர்ச்சிக் காலங்களில் ஒன்றாகக் கருதத்தக்கது.” தென்னிந்தியச் சைவசித்தாந்தப் படைப்புகள் நம்பி ஆண்டார்நம்பி அவர்களால் உருவாக்கப்பெற்றன. இவரது நூல்களின் அடிப்படையில், சேக்கிழாரால் திருத்தொண்டர்புராணம் என அழைக்கப்படும் பெரியபுராணம் இயற்றப்பட்டது. சேக்கிழார் 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இரண்டாம் குலோத்துங்கச் சோழரின் சமகாலத்தவர். பெரிய புராணத்திற்கு ஒப்பாகக் கருதத்தக்க வைணவ நூல்கள் திவ்ய சூரிசரிதை, குருபரம்பரை என்பன. இவை வைணவத் தொண்டர்களான ஆழ்வார்களின் நம்புதற்குரிய காலவமைதியைக் காட்டுகின்றன. இதை அடுத்து வருவது பௌத்த ஆசிரியர் புத்தமித்திரரால் எழுதப்பட்ட வீரசோழியம் என்னும்

தமிழ் இலக்கண நூல் ஆகும். இது வீரராசேந்திரர் காலத்தில் எழுதப்பட்டது. ஜெயங்கொண்டாரின் காவியமாகிய கலிங்கத்துப்பரணி ஓர் அழியாப் படைப்பாகும். முதலாம் குலோத்துங்கனின் தளபதியாகிய கருணாகரத் தொண்டைமான் கலிங்க நாட்டின் மீது படையெடுத்து வென்ற நிகழ்ச்சியைக் கருப்பொருளாகக் கொண்டு இந்நூல் புனையப்பட்டுள்ளது. சோழர் வமிசாவழி பற்றிய விளக்கமான தகவல்கள் பலவற்றையும், குலோத்துங்கரின் கலிங்கப் படையெடுப்பு நிகழ்ச்சிகள் குறித்த பல தகவல்களையும் இது நமக்குத் தருகிறது. மேற்கூறிய பரணியைப் போல் உலா என்பனவும் மிகமுக்கியமான நூல்களாகும். அமைதிக்காலத்து மக்கள் வாழ்க்கை நிலைகளை இவை விளக்குகின்றன. "பரணி என்பது மக்களின் போர்க்கால வாழ்க்கை முறையை விளக்குவது போல, கவலைகள், மன பரபரப்புகளற்ற அமைதிக்கால வாழ்க்கை முறையை உலா விளக்குகிறது". விக்கிரம சோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன் ஆகியோரைத் தலைவராகக் கொண்ட மூவருலா தவிர, ஒட்டக்கூத்தர் குலோதுங்கச் சோழன் பிள்ளைத் தமிழையும் இயற்றியுள்ளார். இவற்றுடன் சில தொடர் வரலாறுகள், வட மொழியில் இயற்றப்பட்ட சோழ வம்ச சரிதை மற்றும் கொங்குதேசராசாக்கள் சவிஸ்தார சரிதை போன்ற தலபுராணங்களும் சிறிய அளவில் பயன்தர்த்தக்கவை.

## அவைக்குறிப்புகளும் பிற்கால இலக்கியங்களும்

பெரும்பான்மை சமகால இலக்கியங்களும் அவைக் குறிப்புகளே : அரசுத் தொடர்புப் பத்திரங்களே. அவற்றை நாம் முழு வரலாற்று நூற்கள் என்று கொள்வதற்கில்லை. அந்நூற்கள் சில குறிப்பிட்ட மன்னர்களை, அவர்களைச் சார்ந்தோர்களைப் படம் பிடிப்பன. அவர்களது வீரதீரச் செயல்களை வெளிக்கொணரும் பொருட்டு வரையப் பட்டவை. அல்லது அரசாங்கத்தின் செயல்களைப் படம் பிடிப்பதற்காக எழுதப்பட்டவை. ஒரு மாவீரனின், ஒரு முடி மன்னனின் பெரும் வெற்றிக்காகப்பாடுபட்ட குடிமகனைப் பற்றிய செய்திகளேதும் அவற்றில் இருப்பதில்லை. இவ்வித அவைக் குறிப்புகள் மன்னனால் அல்லது அரசால் நியமிக்கப்பட்ட எழுத்தரால், மன்னரின் அல்லது அரசின் ஆதரவு பெற்று, அதிகாரப்பூர்வமான அரசு மேற்பார்வையில் எழுதப்பட்டவை. எனவே அவ்வித வரலாற்று நூற்களில் அக நோக்கு (Subjective) அம்சங்களே அதிகமிருக்கும். ஏனெனில் அவ்வரலாறு வரைபவர் முன்னரே தீட்டிய திட்டத்துடன் வரலாறு வரைவார். மூலச்சான்றுகள் வழி நின்று தம் முடிவுகளைத் தருவதில்லை. தம் வரலாற்றின் தலை மகனை மனத்திற் கொண்டு அவனுக்காக வரையப்பட்ட வரலாற்றில் எப்படி நாம் உண்மையை, மெய்ம்மைத் தன்மையை, தாங்கு சக்தியை எதிர்பார்க்க முடியும்? ஆகவே அவ்வகை நூற்கள் வரலாற்றுப்புறநோக்கு இழந்த நிலையில், நிறைவையும் முழுமையும் இழந்து காணப்படுகின்றன. அவற்றை உண்மையான மூலச்சான்றுகள் என்று கொள்வதற்கில்லை.

இவ்வித அவைக் குறிப்புகளில் தலையாயது, குமாரகம்பண உடையாரின் இரண்டாவது மனைவியான கங்காதேவி இயற்றிய மதுரை விஜயம் (Mathura Vijayam) ஆகும். இந்நூல் வீரகம்பராய சரித்திரம் (Vira Kambaraya Charitra) என்றும் கூறப்படும். இந்நூல் குமாரகம்பணரின் தென்னகப்படையெடுப்பையும், அவர் அடைந்த வெற்றிகளையும் அவர் திறந்த கோயில்களையும், அவர் தீட்டிய கோயில் ஆட்சியையும்

சித்தரிக்கிறது. இது நிகழ்ச்சிகள் நடந்த காலத்து வரையப்பட்ட ஒரு நூல். நிகழ்ச்சிகளின் போது கங்காதேவி, கம்பணருடன் இருந்த காரணத்தால் பெருமளவு கற்பனை விளக்கங்களைத் தவிர்க்க முடிந்தது. தூசிடைடிஸ் போல் கங்காதேவியும் சமகால நிகழ்ச்சி வரலாறு வரைந்தார். ஆனால் இந்நூலில் தூசிடைடிஸ் கூறும் வரலாற்றம்சமாகிய அறிவியல் திறனாய்வோ, ஆராய்ச்சி மதிப்பீடோ இல்லை. இதனை நாம் ஒரு வீரக்காவியம் (இதிகாசம்) என்று கொள்ளலாம்.

வீலர் (Wheeler) இயற்றிய The History of the Carnatic Governors என்ற நூல் அந்நாட்டு வரலாறு தொடர்பான சில மெய்மையான கருத்துக்களைத் தருகின்றது. ஆனால் அந்நூலின் காலக்கணிப்புக் குறைகள் அதிகம். காலக்கணிப்பைப் பொறுத்த அளவில் Pandyan chronicle என்ற நூலும், Mrtyunjiya Manuscript என்ற நூலும் சிறப்பானவை. நிகழ்ச்சிகள் அப்பட்டமாகப் படம் பிடிக்கப்பட்டுள்ளன. நிகழ்ச்சிகளுக்கும் காலக்கணிப்புகளுக்குமிடையே பெருமளவு வேறுபாடுகள் இல்லை. தஞ்சை நாயக்க மன்னராகிய விஜயராகவன் தம் தந்தையின் வீரச் செயல்களைப் படம்பிடிக்க வரைந்ததே Raghunatha bhyudayam. இந்நூல் ஒரு தெலுங்கு நூல். இந்நூலும் ஒரு சிறந்த அவைக்குறிப்பு ஏடே. Thanjavuri Andhra Rajulu charitra வரலாற்றுச் சிறப்புடைய ஒரு தெலுங்கு மொழி நூல். இந்நூல் தஞ்சை மதுரை நாயக்கர் முடிநாடுகளின் தோற்றத்தையும், இருநாடுகளுக்குமிடையே நிலவி வந்த முறண்பட்ட உறவு முறைகளையும் சித்தரிக்கிறது. நாம் இந்நில மன்னர்களின் குணாதிசயங்களையும், குறைபாடுகளையும் அறிந்து கொள்ளவும் இந்நூல் பயன்படுகிறது. Sahitya Ratinakara என்ற சமஸ்கிருத மொழி நூலை யக்ஞநாராயணர் இயற்றினார். இந்நூல் அதுவரையப்பட்ட சமகால நாயக்கர் மன்னர்களின் வீரதீரச் செயல்களையும் அவர்களுடைய கால நிலைகளையும் படம்பிடிக்கவல்லது. Rukmini Parinayam என்ற சமஸ்கிருத மொழி நூல் மதுரை நாயக்கர் காலத்து வரலாறு பற்றிய சில சிதறிய செய்திகளை மறைமுகமாகக் குறிப்பிடுகின்றது. மதுரைத் தல வரலாறும், கோயில் ஒழுகும் இருபதாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டவை. மதுரைத் தலவரலாறு மதுரையைப் பற்றிய சிறப்புச் செய்திகளையும், ஒழுகு திருவரங்கம் பற்றிய சிறப்புச் செய்திகளையும் முறையே தருகின்றன.

ஸ்ரீதர வெங்கடேசரின் Sahadra Vilasa Kavyam தென்னகத்தில் ஷாஜி அடைந்த வெற்றிகளை வரையறுக்கிறது. காந்திரவ நரசராஜ விஜயம், சிக்கதேவராஜ விஜயம், சிக்கதேவராஜ வமிசாவழி என்பவை கன்னடமொழியில் இயற்றப்பட்டவை. இந்நூற்கள் மதுரைக்கும் மைசூருக்குமிடையே நிலவிய உறவு முறைகளையும், நிகழ்ந்த படையெடுப்புகளையும், அடைந்த வெற்றி — தோல்விகளையும் விளக்குகின்றன. மைசூர்நாட்டுத் தமிழகப் படையெடுப்பின் வெற்றிகளைப் பற்றிய செய்திகள் தான் அதிகம் இந்நூற்களில் காணக்கிடைக்கின்றன. அரசியல் தந்திரம், போர்த்தந்திரம், படை வீடுகள், அரண்கள், இன்னபிற செய்திகளைப் பொறுத்தளவில் இந்நூற்கள் சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்தவை என்று பேராசிரியர் இராசய்யன் கருதுகிறார். பார்க்கவேண்டிய வரலாற்றுக் கண்ணோட்டத்தில் அவற்றை நோக்கின் இந்த வரலாற்று அவைக் குறிப்புகளின் பயன்பாடு விளங்கும். இவை பெரும்பாலும் நிகழ்ச்சிக்குச் சமகாலத்தவை. மேலும் அந்நூற்களின் தலைமக்கள் பெரும்பாலும் மன்னர்களே.

இந்நூற்கள் முற்றிலும் உண்மையை உரைப்பன என்று கொள்வதற்கில்லை. காரணம் இவற்றிலும் ஒரு பக்க நோக்கும், புற நோக்கை மறுத்த அக நோக்குத் தன்மையும் இடம் பெறுவதுண்டு.

இக்கால வரலாற்றைப்பற்றிய இதர படைப்புகள் அனைத்தும் பிற்காலத்தவை. சமகாலத் தன்மையின்மையின் காரணத்தால் அவற்றை நாம் இரண்டாம் நிலைச் சான்றுகள் என்று கொள்ளலாம். மேலும் இவை நிகழ்ச்சிகளுக்கு சமகால நூற்களை ஆதாரமாகக் கொண்டு பிற்காலத்து வரையப்பட்டவையே. பயன்பாட்டைப் பொறுத்த மட்டில் இரண்டாம் தரத்தன்மை வாய்ந்தவையாயினும், தமிழக வரலாற்றுக்குப் பெரும் முதுகெலும்பாய் அவை உள்ளன. பயன்படுத்துமிடத்துச் சற்று கண்ணுங்கருத்துமாயிருந்தால், முந்திய நாயக்கர், சமகால சிற்றரசர்கள் ஆகியோர் பற்றிய செய்திகளை அவை அள்ளித் தருவதைக் காணலாம். அவற்றில் சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்தவை The Oriental Historical Manuscripts. இவை இரண்டு பகுதிகளைக் கொண்டவை. இவற்றை வில்லியம் டைலர் (William Taylor) சேகரித்து, மொழி பெயர்த்து, பதிப்பித்து, 1835-ஆம் ஆண்டு வெளியிட்டார். இவை குறுநில வல்லரசுகள், தலஆட்சிமுறைபற்றிய குறிப்புகளின் தொகுப்பே. The Catalogue Raisonne of Oriental Manuscripts மூன்று தொகுதிகளையுடையது. இவற்றைத்தேடிச் சேர்த்து, மொழி பெயர்த்து, பதிப்பித்தவரும் டைலரே. இவற்றை 1857-1862-ஆம் ஆண்டுகளில் அவர் தொகுத்து வெளியிட்டார். இவையும் தலப்பத்திரங்களின் தொகுப்புகளாகவேயுள்ளன.

மேற்கூறிய ஆசிரியர் கடின உழைப்பின் பயனாக இவற்றைச்சேகரித்து, மொழிபெயர்த்து, பதிப்பித்து, வெளியிட்டாரெனினும், ஆசிரியர் தம் நூற்களின் மேனாட்டு சூழல்களுக்குச் சிறப்பிடம் தந்துள்ளார் என்பது திறனாய்வாளரின் கருத்து. இக்குறை இந்தியாவில் பயிற்சியளிக்கப்பட்ட மேனாட்டறிஞர் பெரும்பாலோரிடத்துக் குடிகொண்டது. மேனாட்டுக் கண்ணோட்டத்தில் இந்தியாவை நோக்குவதால் ஏற்படும் தவிர்க்க முடியாத குறை இது. நாம் இக்குறைகளை நீக்கி கொள்பனவற்றைப் பாரபட்சமின்றிக் கொள்தலே சிறப்பு. குறைகளைச் சுட்டுவோம்; நிறைகளைப் போற்றுவோம்.

பிறிதொரு வரலாற்றுத் தொகுப்பு Mackenzie Manuscripts என்ற பெயர் பெறும். தொகுப்பாசிரியரின் பெயரை இது தாங்கி நிற்கின்றது. இது நிகழ்ச்சித் தொடர் வரலாறு, நினைவுக் குறிப்புகளின் புகலிடம். சான்றுகளைத் திறனாய்வு செய்யாது கண்டவற்றையும், கேட்டவற்றையும் மெய்யான சான்றுகள் என்று கொண்டார். ஆசிரியன்மை, பயனீட்டுக் குறைகள் இருந்த போதிலும், இத்தொகுப்பு வரலாற்றாய்வுக்குப் பயனுள்ளது.

அடுத்து முதல் நிலைமூலச் சான்றுகளாய்த் தோன்றுவன சிற்றரசுப்பத்திரங்களும், தல ஏடுகளும் ஆம். அவற்றைக் கொண்டு சிற்றரசுகளின் வரலாற்றை வரைந்து விடலாம். சிற்றரசுகளின் பொருளாதாரக் கோட்பாடுகளைப் பொறுத்தளவில் நில வருவாய்ப் பத்திரங்கள் எனும் ஒழுகு ஓலைகள் முதன்மையானவை. இவை பெரும்பாலும் இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டைச் சீமைகளின் அரண்மனைகளில் காப்புடன் வைக்கப்பட்டவை. மேலும் இச்சிற்றரசுகளுக்கும் அந்நிய ஆட்சி முறைக்குமிடையே நிலவி

வந்த தொடர்புகளை அதிகாரத் தொடர்பாவணங்கள் விளக்கி நிற்கின்றன. பாளையங்களுக்கும் தனி வரலாறுகள் உண்டு. அவ்வரலாற்றுக்குறிப்புகள் பனையோலையில் எழுதப்பட்டவை. இவை பாளைய அரண்மனைகளில் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டவை. பாளையங்களின் தோற்றம் முதல், அவற்றின் வீழ்ச்சி வரை, அவற்றின் வரலாற்றைத் தருகின்றன. பாளையங்களுக்கும் இதர உள்நாட்டு சிற்றரசுகளுக்கும் வெளிநாட்டு அரசுகளுக்குமிடையே நிலவிவந்த தொடர்பினை தொடர்பாவணங்கள் விளக்குகின்றன. இவற்றைச் சற்று கவனத்துடன் பயன்படுத்துதல் வேண்டும். "அவற்றில் உயர்வுக் கூற்றுகளுண்டு என்பதற்கு ஐயமில்லை. எனவே அவற்றை வேறுபடுத்தி கண்ணுங்கருத்துமாய்ப் பயன்படுத்துதல் வேண்டும். அவற்றின் பயன் குறைக்கப்படுதற்கில்லை; ஏனெனில் அவை மக்களின் பண்பாட்டு நிலையையும் தென்னிந்திய சமுதாய வரலாற்றையும் நன்கு விளக்குகின்றன".

இவ்வித அவைக் குறிப்புகள் பெரும்பாலும் நினைவுக் குறிப்புகளாயும், நாட்குறிப்புகளாயும் செல்வாக்குள்ள குடும்பங்களின் குடும்ப வரலாற்றுக் குறிப்புகளாயும், தனிநபர்களின் தொகுப்புகளாயுமுள்ளன. இவற்றின் பயன்பாட்டை பிறிதோரிடத்தில் பார்ப்போம்.

பெரும்பாலான பாரசீகக் குறிப்புகளும் அவையில் இயற்றப்பட்ட வரலாற்று நூற்களே. இவை பதினெட்டாம் நூற்றாண்டில் கருநாடகத்தை ஆட்சி செய்த வாலாஜாக் குடும்பத்தை (Wallajah family)ப் பற்றியவை. அவையில் இவை இயற்றப்பட்ட போதும், இவற்றில் வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த நிகழ்ச்சிகள் இடம் பெற்றிருத்தலைக் காணலாம். முகம்மது அலி வாலாஜாவின் அவைப் புலவராகிய மிர்இஸ்மாயில் கான் அப்ஜாதி (Mir Ismail Khan Abjadi) இயற்றிய அன்வார்நாமா (Anwar Nama), அன்வாருதீனின் குடும்பத்தைப் பற்றிய செய்யுள் வடிவிலமைந்த வரலாறு ஆகும். முகமது அலி வாலாஜாவால் நியமிக்கப்பட்ட திருச்சி பர்கன் இபின்ஹாசன் (Burhan Ibin Hassan) (Trichi) இயற்றியதே துஜகிவாலாஜாகி (Tujak-i-Wallajahi). இலக்கிய நடையில் அமைந்த இப்பெருநூல் அரேபியாவிலிருந்து இந்தியாவுக்கு வாலாஜாக்கள் வந்து குடியேறிய வகையினையும், கருநாடகத்தைப் பற்றியும், வாலாஜாக்களுக்கும் நவயத்களுக்குமிடையே ஏற்பட்ட பேராண்மைப் போட்டிகளையும் சித்தரிக்கவல்லது. ஆங்கிலேயர் படிப்படியாக வாலாஜாக்களை அடிமைப்படுத்திய செய்திகளை மொகம்மது காரம் கையுடின் ஹாசன் குலாம் தாமின் வரைந்த சவனி கட்டி மும்தாஸ் (Sawani Kati Mumtaz) என்ற நூல் தருகின்றது. குலாம் அப்துல் காதிர் நாஸர் வரைந்த பாகரிய ஸம்ஜகி (Bahar-i-s, Zamjahi) நான்காம் நவாப் வாலாஜாவின் சென்னை, திருச்சிராப்பள்ளி, ஆர்க்காட்டுப் பயணங்களை விவரிக்கின்றது. அன்வர் நாமாவைத் தவிரவுள்ள மற்ற நூற்களை முகம்மது ஹீசேன் நைனார் ஆங்கிலத்தில் பெயர்த்து, ஐந்து பகுதிகளாக வெளியிட்டார். 1934-1950 ஆண்டுகளின் இஸ்லாமிய நூல் வரிசையில் இவற்றைச் சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது. இந்நூற்கள் அனைத்தும் அந்நூற்களின் தலைமகனை, ஆதரவாளரைப் புகழும் நூற்களே. அவற்றின் காலக்கணிப்பு ஒழுங்கற்றது; உயர்வுக் கூற்றுகள் கொண்டவை; பொருளற்ற சொற்களின் குவியல்; பயனற்ற சித்தரிப்புகள் அதிகம் உள்ளவை.

**அரசு ஆவணங்கள் :** சென்னை ஆவணக்காப்பகத்தில் பத்திரப்படுத்திவைக்கப் பட்டுள்ள அரசு ஆவணங்களும், அரசுத் தொடர்புப் பத்திரங்களும், வரலாற்றுச் சிறப்பு மிக்கவை. மாவட்ட ஆவணங்கள், நிலவரிக் குழுவின் செயல்முறைப் பத்திரங்கள், சென்னை ஆளுநர் ஆலோசனை சபையின் சிறப்பாவணங்களும், இதர ஆலோசனைப் பத்திரங்களும் பிறவும் முதல் நிலைச் சான்றுகள்ாம். சென்னை ஆலோசனை சபையின் செயல்முறைப் பத்திரங்களில் படை, நிலவரி, அரசியல் அல்லது பொது, இரகசிய ஆலோசனைப் பத்திரங்கள் ஆகியன அவற்றில் மிகமுக்கியமான வரலாற்றுச் சான்றுகள். இவற்றில் பெரும்பான்மை Country correspondence, பொது ஆலோசனை, Proceedings of the president in Council of Fort St. George and St. David Consultations, Sundries and Despatches from England என்பனவாம். நாட்டுபுறத் தொடர்பாவணங்கள் (Country Correspondence) சென்னைக்கும் இதர நாட்டுப்புற அரசுகளுக்குமிடையே நிலவிவந்த தொடர்புகள் பற்றியனவும், வழிமறித்து கைப்பற்றப்பட்ட கடிதங்கள் பற்றியனவுமாகும். மேலும் ஆர்க்காட்டின் நீதி செயல்முறை அரசு ஆவணங்கள் (Judicial Proceedings Official Records), தொழிற்சாலை ஆவணங்கள் (Factory Records), இதர ஆவணங்கள், வெளியீடுகள் என்பனவும் பயன்பாடுடையவை. 1830-இல் Smith, Elder and Company, London வெளியிட்ட Military Reminiscences என்ற ஜேம்ஸ் வெல்ஷின் நூலும், போர், படை, களங்கள் பற்றிய குறிப்புகளைத் தருகின்றன. பொதுவாக ஆங்கிலேயர் தம் தோல்வி பற்றிய நிகழ்ச்சிகளை மறைத்ததுண்டு; வெற்றிகள் விளம்பரப்படுத்தப்பட்டன. சமகாலச் சிறப்புடைய:வையாக இவை இருப்பதால் வரலாற்று ஆய்வுக்குப் பெரிதும் பயன் படுகின்றன. ஆங்கிலக் கம்பெனி பயன்படுத்திய அரசியல் வெல் திறங்களையும், மேற்கொண்ட முரட்டு முறைகளையும் இரகசியச் செயல்களையும் நாம் சுதேசி ஆவணங்கள்; இரகசியப் பத்திரங்கள் மூலமே அறிய முடிகிறது. தமிழகம் திடீரென்று அவர்கள் கைக்கு வரவில்லை; பல்லாண்டு கால அரசியல் தந்திரத்தின் வழி பிடிக்கப்பட்டதே என்ற உண்மையை நாம் இவற்றின் மூலம் பெறுகிறோம்.

**நாட்குறிப்புகள், அறிக்கைகள், தனியார்க் கடிதங்கள் :** அரசு அதிகாரிகள் தங்களுடைய அன்றாட செயல்களை நாட்குறிப்புகளாக எழுதி வந்தனர். அவற்றில் பெயர் பெற்றது ஆனந்தரங்கம்பிள்ளையின் நாட்குறிப்புகள். இவர் பாண்டிச்சேரியிலிருந்த டூப்ளேயின் ஆலோசகராயிருந்தார். இக்குறிப்புகளின் மூலம் தமிழ் ஆகும். இவற்றை பிரைஸ் (F. Price), டாட்வெல் (H.H. Dodwell) ஆங்கிலத்தில் பெயர்த்து, பன்னிரு பகுதிகளாக வெளியிட்டனர். 1904-1924-ஆம் ஆண்டுகளில் வெளிவந்த இந்நூற்கள் அரசியல், சமூகம், சமயம் சம்பந்தமான விவரங்களைத் தருகின்றன. மூல ஆசிரியர் மூட நம்பிக்கைகட்கும், சகுணம் பார்ப்பதற்கும், சமயச் செயல்களுக்கும் சிறப்பிடம் தந்தார். இவை தவிர்த்த இதர பகுதிகள், அரசியல் போட்டிகள் எவ்வாறு நாட்டைக் கூறுபோட்டுக்கெடுத்தன என்றும், ஆங்கில — பிரெஞ்சு அரசுகளில் போட்டியிலகப்பட்ட நாட்டு மக்கள் எவ்வாறு தவித்தனர் என்றும் விளக்குகின்றன. இதனை முதல்நிலைச் சான்றாக்க் கொண்டு தமிழகத்தின் சமுதாய நிலையைப் படம்பிடித்து விடலாம். சென்னை அரசால் நியமிக்கப்பட்ட ஆளுநரின் அதிகாரியாகிய புக்கானன் 1800-இல் சமர்ப்பித்த அறிக்கைகளே மூன்று பகுதிகளைக் கொண்ட A Journey from Madras through the Countries of Mylapore, Cananor and Malabar. இந்நூல் தமிழகத்து வேறுபட்ட மக்களின் நிலை, உழவர், தொழிலாளர் இதர தொழில் செய்வோர் ஆகியோரின் பொருளாதார நிலைகளைச் சுட்டுகிறது. லூஷிங்டன் 1796-இல் வெளியிட்ட நாட்குறிப்புகள் 1802-

இல் வெளியிட்ட "Report on the Tirunevally Country", 1807-இல் ஜான் ஹாட்கிசன் வெளிக்கொணர்ந்த Journal of Tirunevelly, 1808-இல் தாமஸ் மன்ரோ சமர்ப்பித்த நிலவருவாய் அறிக்கைகள், 18-ஆம் நூற்றாண்டைய மதுரையின் நில அமைப்பு, ஆர்க்காட் நவாபுவின் கறைபட்ட ஆட்சி, கள்ளர்கள், பாளையக்காரர்களை எதிர்த்து கம்பெனி மேற்கொண்ட நடவடிக்கைகள் ஆகியவைபற்றி சென்னை ஆலோசனை சபைக்கு 1784-இல் புல்லார்டன் சமர்ப்பித்த அறிக்கைகள் யாவும் வரலாற்றுச் சிறப்பு மிக்கவை. மெகார்ட்னி பிரபுவின் (1781-'85) the Private Correspondence இராஜதந்திர நுணுக்கங்களையுடையது. அன்னி பெசன்ட் அம்மையாரின் கடிதங்கள், சொற்பொழிவுகள், நூற்கள், வெளியிட்ட செய்திகள் யாவும் வரலாற்றாய்வுக்குப் பயன்படுவன. காஞ்சி துவாரக தாசின் கடிதங்கள் இந்திய சுதந்திர போரைப் பற்றிய நேர்க்காட்சிக் கூற்றுக்களே. ஆங்கில ஆட்சியில் பல நூற்கள் தடைசெய்யப்பட்டன. பல நூற்கள் வெளிவர இயலாமல் அழிந்தன. பல கடிதங்கள் வழிப்பறி செய்யப்பட்டு தீயிலிடப்பட்டன; எஞ்சியனவும் பாரபட்சமானவை.

**நாட்டுப்புறப்பாடல்கள், நினைவுக் குறிப்புகள் :** நாட்டுப் புறப்பாடல்கள் தமிழகத்தின் சில குறிப்பிட்ட வீரத்திருக்களைப் பற்றி பிற்காலத்து எழுந்தவை. அவற்றில் கதாநாயகனின் செயல்களும், சமுதாயச் சடங்கு சம்பிரதாயங்கலும் நம்பிக்கைகளும் படம் பிடிக்கப் பட்டுள்ளன. பெரும்பாலும் நிகழ்ச்சி நடந்து முடிந்து, ஆண்டுகள் பல கடந்த பின்னரே இவை இயற்றப்படுகின்றன. இந்நாட்டுப்புறப் பாடல்களிலும் வரலாற்றுத் தொடர்பான நிகழ்ச்சிகளும் சித்தரிக்கப்பட்டுள்ளன. இராமப்பையன் அம்மானை, கான்சாகிபு சண்டை தேசிங்குராசன் கதை, பாஞ்சாலங்குறிச்சி அழிவுச் சரித்திரக்கும்மி, கொங்கு தேசராஜாக்கள் சவிஸ்தார சரிதை, கட்டபொம்மன்கூத்து, கட்டபொம்மன் கும்மி, மதுரை தலவரலாறு, கோயில் ஒழுகு, சிவகங்கைச்சீமை சரித்திரக்கும்மி, அம்மானை, சிவராமத்தலைவர்கும்மி, வில்லுப்பாட்டு, தம்பிமார்கதை, புலித்தேவன் வீரவரலாறு, மதுரைவீரன் அம்மானை, தொண்டைமான் விஜயம் என்பன வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நாட்டுப்புறப்பாடல்களில் சில. இந்நாட்டுப்புறப்பாடல்களில் இன்பகரமான முடிவுகொண்ட கதைகள் மிகவும் குறைவாகவே சித்தரிக்கப்பட்டுள்ளன. இன்பத்தில் தொடங்கி துன்பத்தில் துவண்டு, துன்பத்தில் முடியும் கதைகளே பெரும்பாலானவை. கான்சாகிபு சண்டையில் யூசப்கான் என்ற ஒரு சாதாரண படைவீரன் எவ்வாறு மதுரையின் மன்னனாகி, நவாப், ஆங்கிலேயர், கள்ளர்களால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டான் என்ற கதை விளக்கப்பட்டு உள்ளது. அதுபோன்றே தேசிங்குராசன் கதையிலும், புலித்தேவர் வரலாற்றிலும் இவர்களது வீரமரணச் செய்தி கூறப்பட்டுள்ளது.

இவற்றுடன், நாட்டுப்புற மக்களின் நம்பிக்கைகளையும், அவர்களிடையே நிலவிவந்த சில பழக்க வழக்கங்களையும், உழவர் முதல் தொழிலாளி வரையுள்ள மக்களின் சமூக நிலைப்பற்றியும் தமிழகக் கோயில்களின் இழி நிலைபற்றியும் சித்தரிக்க வல்லவையே பள்ளுப் பாடல்களும், தூதுக்களும். நொண்டி நாடகம், குற்றாலக் குறவஞ்சி, விறலி விடுதூதுகள் போன்றவை இந்நிலை இலக்கியங்களாகும். இவற்றில் உழவர் நிலை, தாசிகள் நிலை, வான், நாட்டுச் சிறப்புகள் இடம் பெற்றுள்ளன.

நினைவுக் குறிப்புகள் சமகாலத்தன்மை படைத்தவை. நிகழ்ச்சிகளுடன் நேரடித் தொடர்புடையோர் சற்று காலந்தாழ்த்தி எழுதியவையே இவை. இரண்டு தொகுதி களையுடைய C.F. சுவாட்ஸின் நினைவுக் குறிப்புகளை H. Pearson தொகுத்தார்.

Geographical and Statistical Memoir of Tirnelveli and its Zamindars (1812) என்ற நூலை தாமஸ் டர்ன்புல் (Thomas Turnfull) எழுதினார். பாளையக்காரர்கள் தத்தம் வரலாறு களாகிய நினைவுக் குறிப்புகளையும் விட்டுச் சென்றுள்ளனர். இவற்றில் புகழ்ச்சிக்குக் குறைவில்லை எனினும், வரலாற்றாய்வுக்குச் சில அம்சங்களும் இருப்பதைக் காணலாம்.

**செய்தித்தாட்கள் :** சுதந்திரம், சமத்துவம், சகோரத்துவம் என்ற தீப்பொறிகளை செய்தித்தாள்கள் உமிழ்ந்தன; நாட்டுப்பற்றைத் தூண்டின; அரசியல் விழிப்பை ஏற்படுத்தின; மக்களிடையே அரசியல் ஒற்றுமையை வளர்த்தன. அரசின் கெடுபிடிகளால் பல செய்தித்தாள்கள் நசுக்கப்பட்டன; இழப்பு ஈட்டுத்தொகை விதிக்கப்பட்டன; சில கட்டுப்படுத்தப்பட்டன. எனினும் பல நாளிதழ்கள், வாரஇதழ்கள், மாத இதழ்கள் காலாண்டிதழ்கள், ஆண்டிதழ்கள் தோன்றின; சில அழிந்து போயின. The Hindu, Madras Mail, Swadeshamitran, Justice, Andhra Prakasika, குடியரசு, விடுதலை, New India, தேசபக்தன், தேசாபிமானி போன்ற செய்தித்தாட்கள் தமிழகத்தில் தோன்றி, தேசியப் போராட்டத்தைத் தூண்டின. துண்டுப் பிரசுரங்கள், சிறுபுத்தகங்கள் பல வெளியிடப் பட்டன. அத்துடன் பல சபைகளும் தமிழகத்தில் தோன்றின. அவை நடத்திய சொற்பொழிவுகள், மேடைப் பிரச்சாரங்கள் அனைத்தும் சுதந்திர ஆவேசம் கொண்டவை. இவற்றுடன் இதர வெளியீடுகள் பலகட்டுரைகளையும் வரலாற்றுப் பின்னணியில் எழுதப்பட்ட கதைகளையும் பிரசுரித்து, தமிழக மக்களை விழிப்படையச் செய்தன.

**இரண்டாம் நிலைச் சான்றுகள் :** முதல்நிலை ஆதாரங்களை அடிப்படையாக கொண்டு பிற்காலத்து எழுதப்பட்ட வரலாற்று வடிவங்கள், சிறுகதைகள், புதினங்கள், குறிப்புகள், துணுக்குகள் யாவும் இரண்டாம் நிலைச் சான்றுகளாம். இந்நிலைச் சான்றுகளுக்குத் தமிழகத்தில் பஞ்சமேயில்லை. அவற்றில் பல புது பதிப்புகளின்றிக் கிடைப்பதில்லை; சிலபயன்படுவதில்லை. சில அழிந்துபோயின. தென்னிந்தியாவில் சுதந்திரத்திற்குப் பின் ஏற்பட்ட வரலாற்று விழிப்பின் பயனாக பல நூற்கள் எழுந்துள்ளன. அவற்றில் ஆங்கிலோ ஐரோப்பியராலும், பல இந்திய தமிழராலும் ஆய்ந்து எழுதப்பட்டவை. எட்கர் தார்ஸ்டன் (Edgar Thurston) தமிழக தென்னிந்திய மக்களினம், குணங்கள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், சமயம், தொழில் என்ற அடிப்படையில் சேகரித்த கருத்துக்களை "Castes and Tribes of Southern India" என்ற நூலாக வரைந்தார். இந்நூல் பல பகுதிகளைக் கொண்டது மேலும் இந்நூல் ஆங்கில அகர வரிசையிலானது. படிப்போருள்ளத்தை பூரிப்படையச் செய்யும் தன்மைத்து இந்நூல். திருநெல்வேலிப் பகுதியில் சமயப்பணியாற்றி வந்த ராபர்ட் கால்ட்வெல் (Robert Caldwell) என்ற ஐரோப்பியர் இயற்றிய வரலாற்று நூல் ஒன்று, மொழி வரலாற்று நூல் ஒன்று. அவருடைய History of Tirunelveli என்ற வரலாற்று நூல் பல புதிரான பகுதிகளுக்குப் போதுமான விளக்கங்களைத் தர வல்லது. அவருடைய மொழி நூல் தமிழகத்தில் பெரும் புரட்சியை ஏற்படுத்திற்று. A Comparative Grammar of Dravidian Languages என்ற அந்நூல் வரலாற்றுக் குறிப்புகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

மதுரையில் பணியாற்றிவந்த நெல்சன் இயற்றியதே The Madura Country. இந்நூல் மதுரையின் நில அமைப்பு, கால நிலைகள், நாயக்கராட்சி, ஆங்கிலேயராட்சியாகிய வற்றைக் கொண்டதே. அவர் மேலும் The Chronology of Modern India என்ற காலக் கணிப்பு நூலும் வரைந்தார். இந்நூலில் அவர் வெளியிட்டுள்ள காலக்கணிப்பு ஒரு

சிறந்த முன்னோடியாக உள்ளது. நெல்சனின் வரலாற்றில் காணப்பட்ட குறைகளையும், விட்டுப்போன இடங்களையும் மனத்திற்கொண்டு ரங்காச்சாரியா இயற்றியதே History of the Nayaks of Madurai. இந்நூல் Indian Antiquary 44-46 பகுதிகளில் வெளிவந்துள்ளது. இவற்றையெல்லாம் அடிப்படையாகக் கொண்டு பேராசிரியர் சத்தியநாதய்யர் ஆராய்ந்து வெளியிட்ட நூலே History of the Nayaks of Madurai. மேலும் அவர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவுகளின் தொகுப்பே Tamilaham in the Seventeenth Century என்ற நூல். செஞ்சி நாயக்கர் வரலாறு பற்றி எட்வர்ட்ஸ் வெளியிட்ட கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு பேராசிரியர் ஸ்ரீனிவாசாச்சாரி History of Ginji and its rulers என்ற நூலையும், ஆனந்தரங்கப் பிள்ளையின் நாட் குறிப்புகளை ஆதாரமாகக் கொண்டு Anandaranga Pillai, the Pepys of French India என்ற நூலையும் வடித்தார். தஞ்சை நாயக்கரைப் பற்றி விருத்த கிரீசன் வரைந்த Nayaks of Tanjore என்ற நூலிலும் தஞ்சை மராத்தியரைப் பற்றி K.R. சுப்பிரமணியன் இயற்றிய The Maratha Rajahs of Tanjore என்ற நூலும் தஞ்சையின் வரலாற்றை தெள்ளத்தெளிய விளக்குகின்றன.

ராஜாராம் Arcot Nawabship என்ற நூலையும், இராதாகிருஷ்ண அய்யர் A General History of the Pudukkottai State என்ற நூலையும் முறையே வரைந்தனர். ராபர்ட் ஓரிம்ஸ் இயற்றிய History of Industan, மார்க்ச் வில்க்ஸ் வரைந்த History of Mysore, டாட்வெல் எழுதிய The Nabobs of Madras போன்ற நூற்கள் இப்பகுதியைச் சேர்ந்த வரலாற்று வரைவியலுக்குப் பெரிதும் பயன்படுவன. மதுரை நாயக்கரைப்பற்றி சத்தியநாதைய்யர் முடித்த இடத்திலிருந்து பேராசிரியர் இராசய்யன் தொடர்ந்து History of Madurai என்ற நூலை வரைந்தார். பேராசிரியர் சத்தியநாதைய்யரின் சில கருத்துக்களை மறுத்து அவர் சென்னை பல்கலைக் கழகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவுகளின் தொகுப்பே Rise and Fall of the Poligars of Tamilnadu. அவருடைய South Indian Rebellion - The first war of Independence என்ற நூல் இந்திய சுதந்திரப் போரின் தொடக்க வரலாற்றினை 1800-ஆம் ஆண்டுக்குத் தள்ளிவிட்டது. ஸ்ரீனிவாசன் (C.K.) வரைந்த The Maratha Rule in the Carnatic, மார்க்வில்க்ஸின் Historical Sketches of South India, A.K. பிள்ளை இயற்றிய History of the Local - self Government in Madras, H.O. லௌஸ் விட்டுச்சென்ற Vestiges of Old Madras, நீலாமணி முகர்ஜியின் The Ryotwari system in Madras, B.S. பாலிகாவின் Studies in Madras Administration, சென்னையின் பொருளாதார, வர்த்தக ஆட்சி பற்றி ரத்னசுவாமி இயற்றிய நூல் அனைத்தும் வரலாற்றாய்வுக்குப் பயன்படுவன. தமிழகத்தின் தொடர்ந்த, ஆண்டு அடிப்படையிலான வரலாறு முழுமையாக இன்னும் எழுதப்படவில்லை.

**பயிற்சி வினாக்கள்**

1) தமிழ்நாட்டு வரலாற்று வரைவியலில் வெளிநாட்டு சமயக்குறிப்புகளின் பங்கு யாது?

2) 'இலக்கியச் சான்றுகளுக்கு கல்வெட்டுகள் இரண்டாம் நிலைச் சான்றுகளே; (பேராசிரியர் சத்தியநாதைய்யர்). இக்கூற்று இவ்வரலாற்றுப் பகுதிக்கு எவ்வாறு பொருந்தும்?

3) நாட்டுப்புறப் பாடல்கள், நினைவுக்குறிப்புகள், நாட்குறிப்புகளின் வரலாற்றுப் பயன்பாட்டுத் தன்மையை தமிழ்நாட்டு வரலாறு மூலம் விளக்குக.

# பாடம் – 2 தமிழக வரலாற்றில் நிலவியல், இடவியல் ஆகியவற்றின் செல்வாக்கு – தமிழகத்தின் இன மரபுகளும் பழங்குடிகளும் – ஆரியர்பெருக்கம்

## நிலவியல் : பொதுத்தன்மை

மனித வரலாற்றுப் போக்கில் நிலவியலும், இயற்கை அமைப்புகளும் அதிக அளவில் செல்வாக்குச் செலுத்துவன என்பது பொதுவான கருத்து, வரலாற்றின் சமுதாய, பொருளாதாரத் தன்மைகளை நிலயியலே இயக்குகிறது எனலாம். ஒரு நாட்டின் மலைகள், நதிகள், தட்ப வெப்ப நிலை போன்ற நிலவியலடிப்படையிலான கூறுகள், அந்நாட்டு மக்களின் பொருளாதார, சமுதாய வாழ்க்கையைப் பெருமளவில் வரையறுக்கின்றன. தனி மனிதன் தனக்கெனத் தேர்ந்தெடுக்கும் தொழில் அவனது உடல், உள்ளத்திறன்கள், அவனது வாழ்க்கைத்தரம், அவனது சமுதாய அமைப்புக்கள், பழக்க வழக்கங்கள் ஆகிய பல்வேறு உண்மைகள் அவன் வாழும் நாட்டின் நிலவியல் தன்மைகளின் அடிப்படையிலேயே அமைகின்றன. தொன்றுதொட்டு வரும் நிலவியல் அமைப்புச் செல்வாக்கின் கூட்டுச் சேர்க்கையாகவே மனிதர்களின் தனித்த பண்பு நலன்களும் அமைகின்றன. புறவமைப்பில் மாறுதல்களை விளைவிக்கக் கூடிய சமயங்கள், அவ்வப்போது தோன்றும் தலை சிறந்த மனிதர்களின் சீரிய சாதனைகள், சமுதாயத்தைப் பாதிக்கும் போர், பஞ்சம் போன்ற விளைவுகள் போன்றவை மக்களின் முன்னேற்றப் பாதையில் தமது அடிச்சுவட்டைப் பதித்துச் செல்வன. மனித வாழ்வினை உருவாக்கும் பணியில் மேற்கூறிய புறமாறுதல்களுக்கான காரணிகள் ஒவ்வொன்றின் பங்கும் நாட்டிற்கு நாடு மாறுபடுகிறது. ஆனால் ஒரு நாட்டின், அங்கு வாழும் மனிதர்களின் வரலாறுகள் உறுதியாக நிலவியலமைப்பினாலேயே பெரிதும் நடத்திச் செல்லப்படுகின்றன. எனவே எல்லா வகைகளிலும் மனிதன் நிலவியமைப்பிற்குப் பெரிதும் கட்டுப்பட்டவனாகவே உள்ளான். சான்றாக தமிழர்களின் கடல் வாணிபம், தமிழ்க நிலவியலமைப்பின் பிரதிபலிப்பாகவே காணப்படுகிறது.

## தமிழக நிலவியல்

தமிழர் வாழும் தமிழகம் இந்தியத் துணைக்கண்டத்தின் தென்கோடியில் அமைந்துள்ளது. தமிழகம் $15^0$ வட அட்சரேகைக்குத் தெற்கில் அமைந்துள்ளது. நக்கீரர் தன் இறையனார் அகப்பொருள் என்னும் நூலில், முதற்சங்க காலத்தில் தமிழகம் இப்போதிருப்பதைவிடத் தெற்கிலும், கிழக்கிலும் விரிந்திருந்ததாகவும், 49 முக்கிய பிரிவுகளைக் கொண்டிருந்ததாகவும் கூறுகிறார். மண்ணியல் விற்பன்னர்களும் (Geologists) மானிட வளர்ச்சிச் சரித்திர வல்லுநர்களும் (Anthropologists) தென்கோடியிலிருந்த இந்திய நிலப்பரப்பு குமரிக் கண்டம் அல்லது லெமூரியா என்றழைக்கப்பட்டதாகவும், அந்நிலப்பரப்பு நெடுங்காலத்திற்கு முன்பே இந்துப் பெருங்கடலால் கடல் கோட்பட்டதாகவும் கூறுவர்.

மூன்றாம் தமிழ்ச் சங்க காலத்துத் தமிழக வட, தென் எல்லைகள் "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகு" என்னும் கூற்றால் விளங்கும். தமிழகம் தெற்கில் இந்துப் பெருங்கடலாலும், மேற்கில் அரபிக்கடலாலும், கிழக்கே வங்காளவிரிகுடாவாலும் சூழப்பட்டுள்ளது. வட கிழக்கில் வேங்கடமலையும், வடக்கிலும் வடமேற்கிலும் மைசூர் பீடபூமியும் அமைந்துள்ளன. தமிழர்கள் தமிழகத்தைக் குடபுலம், குணபுலம், தென்புலம் என பிரித்திருந்தனர். வேங்கடப் பிரதேசம் கடக்க முடியாத காடுகளால் அமைந்திருந்தது. இக்காடுகள் புல்லியின் பிரதேசங்களுக்கு அப்பால் அமைந்திருந்தன. மூந்நீரின் இணைப்பைப் புலப்படுத்துவதாகக் கன்னியாகுமரியில் மூன்று கடல்களும் சந்திக்கின்றன. இது ஒரு புனித யாத்திரைத் தலமாகும். தென்னிந்திய, வடஇந்திய இணைப்பைப் புலப்படுத்துவது போல் யாத்ரீகர்கள் இங்கு காணப்படுகின்றனர்.

வேங்கடமலைக்கு வடபுறம் வாழ்ந்த மக்கள் வடுகர் என அழைக்கப்பட்டனர். மலைத் தொடரை அடுத்துத் தமிழகத்தையொட்டிய வடபுலத்தில் எருமைநாடு இருந்தது. எருமை நாட்டிற்கு மேற்கில் துளு நாடு, குடகுநாடு, கொங்கணம் ஆகியவை இருந்தன. தீபகற்ப இந்தியாவின் தென்கிழக்கில் ஸ்ரீலங்கா (இலங்கை) அமைந்துள்ளது. அரசிய லடிப்படையில் இது ஒரு தனிநாடாக விளங்கினும், நிலவியல் கலாசார அடிப்படையில் இது தீபகற்ப இந்தியாவின் தொடர்ச்சியாகவே தோன்றுகிறது. இந்தியாவிற்கும், இலங்கைக்கும் இடையில் காணப்பட்ட மணிபல்லவத் தீவு காவிரிக் கரையிலமைந்திருந்த தொன்மைமிகு புகார் துறைமுகத்திலிருந்து 30 யோசனைத் தொலைவில் இருந்ததாகக் கூறப்படுகிறது. கொற்கையிலிருந்து ஜாவாவிற்குச் சென்ற கப்பல்கள் மணிபல்லவத்தீவின் வழியே சென்றதாகத் தெரிகிறது. நிர்வாண (காட்டு மிராண்டி) நாகர்கள் வாழ்ந்து வந்த தீவுகள் இலங்கைக்குக் கிழக்கே அமைந்திருந்தன.

தென்னிந்திய வரலாற்றின் ஆரம்பகாலத்தில், கொங்கணத்திற்குத் தெற்கில் நீண்டு கிடப்பதும், இக்காலத்தில் கேரளா என்று அழைக்கப்படுவதுமாகிய நிலப்பரப்பு, பண்டைத் தமிழகத்தின் ஒரு அங்கமாகவே இருந்தது. கி.பி. 9-ஆம் நூற்றாண்டிற்குப் பின் பண்டைத் தமிழகம் தமிழ்நாடு, கேரளா என இரண்டாகப் பிரிக்கப்பட்டது. கேரளா மக்களால் பேசப்படும் மலையாளம் கொடுந்தமிழிலிருந்து (சொல் வழக்குத் தமிழ்) தோன்றியது எனலாம்.

தமிழகம் 12 நாடுகள் அல்லது மாநிலங்களாகப் பகுக்கப்பட்டிருந்தது. அவை முறையே பாண்டிநாடு, குட்டநாடு, குடநாடு, கற்காநாடு, வேணாடு, பூளிநாடு, பன்றிநாடு, அருவாநாடு, வடஅருவாநாடு, சீதநாடு, மல்நாடு, புனல்நாடு என்பவையாகும். இவை பன்னிரண்டும் பாண்டிய நாடு, சேரநாடு, சோழநாடு, தொண்டைநாடு, கொங்குநாடு, வேளிர்நாடு என்ற பெரும் பிரிவுகளுள் அடங்கும்.

காவிரிக்குத் தெற்கிலுள்ள இக்காலத்து மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்கள் அடங்கிய நிலப்பரப்பே அக்காலத்துப் பாண்டிய நாடு என அழைக்கப் பட்டது. இது வெள்ளார் நதிக்குத் தெற்கிலும் கன்னியாகுமரிக்கு வடக்கிலும், பெருவேலிக்கு கிழக்கிலும், வங்காளவிரிகுடாவிற்கு மேற்கிலும் அமைந்துள்ளது. இது

பல கூற்றங்கள் எனப்படும் உட்பிரிவுகளைக் கொண்டிருந்தது. இங்கு செந்தமிழ் பேசப்பட்டு வந்தது. இதன் தலைநகராகவும், சிறந்த உள்நாட்டுப் பட்டிணமாகவும் மதுரை விளங்கிற்று. இது வைகை நதிக்கரையில் அமைந்துள்ளது. இது கோபுரம் சார்ந்த கோட்டைகளால் சூழப்பட்ட ஒரு நகரம். எனவே இது 'நான் மாடக்கூடல்' என்றும் அழைக்கப்பட்டது. வடஇந்தியாவின் மதுரா என்னும் நகரிலிருந்து இவ்வூரை வேறுபடுத்திக்காட்டத் தமிழ்ப் புலவர்கள் இவ்வூரைத் 'தென் மதுரை' அல்லது 'தெக்கண மதுரை' என்றும் அழைத்தனர். தாமிரபரணி முகத்துவாரத்தில் அமைந்திருந்த கொற்கை இந்நாட்டின் துறைமுகமாகும். கொற்கை மக்களின் முக்கிய தொழில் முத்துக்குளித்தல் ஆகும். இதர துறைமுகங்களான விளினம், சாலியூர் என்பன விறுவிறுப்பான ஏற்றுமதி, இறக்குமதி வாணிகத்தில் ஈடுபட்டிருந்தன.

இக்காலக் கேரளமும் தமிழகத்தின் கோயம்புத்தூர் மாவட்டம் முழுவதும் சேலம் மாவட்டத்தின் ஒருபகுதியும் கொண்ட நிலப்பரப்பே அக்காலச் சேர நாடாகும். இது பன்னிரண்டு உட்பிரிவுகளைக் கொண்டிருந்தது. இது வடக்கில் பழனிமலைகளாலும், கிழக்கில் திருச்செங்கோடாலும், மேற்கிலும் தெற்கிலும் கடலாலும் சூழப்பட்டிருந்தது. இந்நாட்டின் தலைநகர் பேரியாற்றின் கரையில் அமைந்திருந்த திருவஞ்சைக்களம் என அழைக்கப்படும் வஞ்சி ஆகும் என கருதப்படுகிறது. இந்நகரம் வலுவான கோட்டைகளால் பாதுகாக்கப்பட்டது. தலைநகரில் அமைந்திருந்த முக்கிய கட்டிடங்கள் ஒரு விஷ்ணு கோவில், ஒரு புத்த விகாரம், ஒரு (நிகரந்த) சமணமடாலயம் ஆகியவையாகும். பேரியாற்றின் முகத்துவாரத்திற்கருகில் முசிரி எனப்படும் துறைமுகம் ஒன்று இருந்தது. மேற்குக் கரையில் அமைந்திருந்த மற்றொரு வளமான துறைமுகம் தொண்டி ஆகும்.

பன்றி நாட்டிற்கு அப்பால் புனல்நாடு என அழைக்கப்படும் சோழநாடு அமைந்திருந்தது. புனல் என்னும் சொல் நீரினைக் குறிக்கும். எனவே நீர்வளம் மிக்க சோழநாடு புனல்நாடு என அழைக்கப்பட்டது. இதுகோடிக்கரைக்குக் கிழக்கிலும், கடலுக்கு மேற்கிலும், வெள்ளாற்றிற்கு வடக்கிலும் அமைந்திருந்தது. சோழர் தலைநகர் உறையூராகும். இது காவிரியின் தென்கரையில் அமைந்திருந்தது. காவிரியின் முகத்துவாரத்தில் அமைந்திருந்த புகார், (காவிரிப்பூம்பட்டினம்) சிறந்த ஏற்றுமதி வாணிகத் தலமாகும். புகார், மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. தலைநகரில் பல பெரிய கட்டிடங்கள் காணப்பட்டன.

பவளமலைக்குக் கிழக்கிலும், வேங்கடமலைக்குத் தெற்கிலும், உவரிக்கு மேற்கிலுமாக அமைந்திருந்த நிலப்பரப்பு தொண்டை நாடாகும். இதன் தலைநகரம் காஞ்சிபுரம் ஆகும். இது திரையர்களால் ஆளப்பட்டது. பின்னர் பல்லவர் இப்பகுதியைக் கைப்பற்றினர். படிப்படியாகச் சோழநாடு முழுவதும் தம் ஆதிக்கத்தை விரிவுபடுத்தினர்.

வடக்கில் தலைமலையாலும், தெற்கில் வைகாவூர் அல்லது பழனிமலையாலும், மேற்கில் வெள்ளியங்கிரியாலும் சூழப்பட்டுள்ள நிலப்பரப்பே கொங்குநாடு எனப்படுவது. பூர்வீகத்தில் இந்நாடு, இக்காலக் கோயம்புத்தூர் மாவட்டம் முழுவதும், சேலம் மாவட்டத்தின் தென்பகுதியும் கொண்டதாக இருந்தது.

வேளிர் எனப்படும் சிற்றரசர்கள் எழுவரும் தமக்கெனத் தனித்தனி இராச்சியங் களையும், தலைநகர்களையும் கொண்டு விளங்கினர். புறம்புநாடு, தகடூர், கோவிலூர், ஆய்க்குடி, நாஞ்சில் நாடு, மோகூர், குதிரை மலை, செங்கண்மா, மிழலை என்பன குறிப்பிடத்தக்க வேளிர் தவிர்த்த வேறு சில சிற்றரசுகள் ஆகும்.

சங்ககாலத் தமிழர்களின் வாழ்வும், வளமும் இத்தமிழகத்தின் நிலவியல் அமைப்போடு பின்னிப் பிணைந்து கிடந்தன. காலத்தால் மூத்த தமிழ் நூலாம் தொல்காப்பியத்தில் தமிழர் வாழ்ந்த நிலப்பகுதிகளை நிலவியல் அடிப்படையில் நால்வகை நிலங்களாகப் பிரித்திருக்கின்றனர். இதனையொட்டியே பூமியை 'நானிலம்' எனவும் கூறுவர். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன. மலையும் மலைசார்ந்த பகுதிகளும் குறிஞ்சி எனவும், காடும் காடு சார்ந்த பகுதிகளும் முல்லை எனவும், நிலமும் நிலம் சார்ந்த பகுதிகளும் மருதம் எனவும், கடலும் கடல் சார்ந்த பகுதிகளும் நெய்தல் எனவும் அழைக்கப்பட்டன. பிற்காலத்தில் நீர் வறண்ட முட்புதர்கள் நிறைந்த மணற்பகுதியைப் 'பாலை' என்ற பெயரிட்டு அழைத்தனர். முன்னர் குறிப்பிட்ட நானிலங்களுடன் இதனையும் சேர்த்து ஐவகை நிலமாகக் கொண்டனர். ஐவகை நிலங்களும் நிலவியலடிப்படையில் தத்தமக்கேயுரிய தொழில், வாணிபம், கலை, கலாசாரம், வழிபாடு, சமூக அமைப்பு, தாவரங்கள், விலங்குகளைக் கொண்டவையாக விளங்கின.

## இடவிவரம் (Topography)

அரபிக்கடலுக்கும், வங்காளவிரிகுடாவிற்கும் இடைப்பட்டிருக்கும் இத்தீபகற்ப நாடு தென்புறம் குறுகி, கன்னியாகுமரி முனையில் முடிகின்றது. குமரி முனையிலிருந்து மேற்றிசையில் வடக்கு நோக்கிச் செல்கின்ற மலையாளக் கடற்கரை மற்றும் கொங்கணக் கடற்கரையும் "கீழ்த்திசையில் வடக்கு நோக்கிச் செல்கின்ற சோழமண்டலக் கடற்கரையும் தமிழகத்தின் விளிம்புகளாக அணி செய்கின்றன. கடல் வாணிகத்தை ஊக்குவிக்கும் வகையில் இருகரைகளிலும் இயற்கைத் துறைமுகங்கள் அமைந்துள்ளன; துறைமுகங்கள் ஆழமானவை; இயற்கையானவை. சீனாவையும் மத்திய தரைக்கடல் நாடுகளையும் சேர்க்கும் கடல்வழியில் ஏறத்தாழ நடுநாயகமாக அமைந்துள்ள தமிழகத்தின் அமைவிடம், அது கிழக்கு, மேற்குநாடுகளுடன் விறுவிறுப்பான கடல் வாணிபத்தில் ஈடுபடப் பெரிதும் துணையாக இருந்தது."

எண்ணிக்கையில் குறைவான இயற்கைத் துறைமுகங்களைப் பெற்றிருந்தாலும் தமிழகம் கடல் வாணிபத்தில் வளம் பெற்று விளங்கியது. கிழக்குக்கரையில் அமைந்திருந்த காவிரிப்பூம்பட்டினம், கொற்கை என்பனவும் மேற்குக்கரையில் காணப்பட்ட தொண்டி, முசிறி என்பனவும், அளவில் அவ்வளவு பெரியவை அல்ல. அக்காலத்து நாட்டுக் கப்பல்கள் மட்டுமே வந்து தங்குவதற்கு ஏற்றவையாக அவை இருந்தன. மேற்கு, கிழக்குக் கடற்கரைகள் ஒரே சீராகவும், பிளவுபடாமலும் உள்ளன. இருப்பினும் மேற்குக் கரையில் பிளவுபட்ட சில பகுதிகள் காணப்படுகின்றன. இங்கு உப்பங்கழிகள் அமைந்துள்ளன. இவ்வுப்பங்கழிகள் உள்நாட்டு, அயல் நாட்டு வாணிகத்தைப் பெருக்க வசதியாக உள்ளன.

## மேற்கு கிழக்கு மலைத்தொடர்கள்

மலைகள், மலைத்தொடர்கள், ஆறுகள், வளங்கள், விளைநிலங்கள், வளமற்ற தரிசு நிலங்கள் ஆகியவை ஒன்றோடொன்று கலந்து, நிலவியலின் பலவகைப் பெருக்கங்களுக்கு வழிவகுத்து, பொருளாதாரத் தன்னிறைவை ஏற்படுத்துகின்றன. கிழக்கு, மேற்கு மலைத் தொடர்கள் தீபகற்பத் தமிழகத்தில் முறையே கிழக்கு, மேற்குக் கடற்கரைகளுக்கு இணையாகச் செல்லுகின்றன. காசர்கோட்டில் தொடங்கி, ஆரம்பொழியில் முடிவுறும் மேற்கு மலைத் தொடர்கள், தமிழகத்தின் இயற்கை அரணாக — பிரம்மாண்டமான கடல் தடுப்புச் சுவராக — அமைந்துள்ளன. நெடிதுயர்ந்த, கரடுமுரடான மலைத் தொகுப்பான இவை, வடக்கில் கடல் மட்டத்திலிருந்து 2000 அடி வரை உயர்ந்துள்ளன. கொங்கு நாட்டு நீலகிரியில் இருமலைத்தொடர்களும் சந்திக்கின்றன. நீலகிரி மலைகளின் ஆண்டு மழைப்பொழிவு மிக அதிகம். இது பல்வகைத் தாவரங்களுக்கும் வனப்புமிகு இயற்கைக்காட்சிகளுக்கும் பெயர் பெற்ற தலமாகும். இவ்விரு மலைத் தொடர்களுக்கும் இடையில், தொன்மைமிகு நாகரீகத் தொட்டில்களான பரந்த தாழ் நிலங்கள் அமைந்து உள்ளன.

மேற்கு மலைத் தொடரில் பல கணவாய்கள் அமைந்துள்ளன. 24 மைல் அகலமுள்ள பாலக்காட்டுக் கணவாய் மிக அகன்ற ஒன்று. கடக்கவியலாக் காடுகளைக் கொண்டு, கொடிய விலங்குகளின் உறைவிடமாக விளங்கும் இக்கணவாய், கன்னடத்திற்கும், மலபாருக்குமான நெருங்கிய தொடர்பிற்கு வழி வகுத்தது. கொச்சி, கள்ளிக்கோட்டை போன்ற மேற்குக்கரை நகரங்களிலிருந்து கன்னடத்திற்கும் இதர உள்நாட்டு நகரங்களுக்கு மான எளிதான பாதையாகி வரலாற்றில் சிறப்பிடம் பெறுகிறது. பாலக்காட்டுக் கணவாய் இவ்வாறு சற்று ஆபத்து நிறைந்த பாதையாக இருந்ததால், கேரளத்திற்கும், கிழக்கிலுள்ள அண்மை நாடுகளுக்குமான சிறந்த தொடர்புவழியாகச் செங்கோட்டை ஆரம்பொழி கணவாய்கள் பயன்பட்டன. ஆரம்பொழி, செங்கோட்டை கணவாய்களின் மூலம் ஏற்பட்ட படையெடுப்புகளும் நுழைவுகளும் கணக்கிலடங்கா. ஆரம்பொழி கேரளத்தின் 'போர்க்களமாகச்' செயல்பட்டது என்றே கூறலாம்.

இம்மலைத் தொடரின் தென்புலத்தில் காணப்படும் மலைகளில் பழனி, கொடைக்கானல், சேர்வராயன், பொதியை, ஆனைமலைகள் குறிப்பிடத்தக்கவை. ஆனைமலையிலுள்ள சில சிகரங்கள் சுமார் 8000 அடிவரை உயர்ந்துள்ளன.

அடர்ந்த காடுகளில் காணப்படும் தாவரங்களில் விலைமதிப்புள்ள தேக்கு, சந்தனம், மூங்கில் முதலியவை குறிப்பிடத்தக்கவை. அன்றியும் காப்பி, தேயிலை, ஏலம், மிளகு போன்ற மலைத் தோட்டப் பயிர்களும் இங்கு விளைகின்றன. காடர், இருளர், புலையர் போன்ற பழங்குடி மக்களின் உறைவிடங்களாக இம்மலைப்பகுதிகள் அமைந்துள்ளன.

கிழக்குத் தொடர்ச்சிமலை, மேற்குத்தொடர்ச்சிமலைகளைப் போல நேரானதும், தொடர்ச்சியானதும், சீரானதும் அல்ல. அவை இடையிடையே பிளவுபட்டு, சிதறுண்டு காணப்படுகின்றன. அன்றியும் மேற்கு மலைத்தொடரைவிடச் சற்றுத் தாழ்வானவை. மண்ணியலடிப்படையில் மேற்கு மலைத்தொடரைவிட கிழக்கு மலைத்தொடர்

காலத்தால் முந்தியது. ஆனால் விளைபொருட்களிலும் வனப்பிலும் இவ்விரண்டு மலைதொடர்களும் மாறுபட்டவை. கிழக்கு மலைத் தொடர் பிளவுண்ட, சிதறிக் கிடக்கின்ற ஒரு மலைத்தொடர் எனலாம். ஒரிஸ்ஸாவில் தொடங்கி, கிழக்குக் கரைக்கு இணையாகச் செல்லும் இம்மலைத்தொடர், சென்னையை அடுத்துத் தென்மேற்காகத் திரும்பித் தக்காணப் பீடபூமியின் தெற்கு விளிம்பாக அமைகிறது. பழனிமலை, சேலம் மாவட்டத்திற்கருகிலுள்ள சேர்வராயன் மலைகள் போன்றவை தனித்து நிற்கும் மலைகள். இவை பிரதான மலைத்தொடரிலிருந்து பிரிந்து செல்கின்றன. தமிழகத்தில் பாயும் ஆறுகளில் பல, மேற்கு மலைத்தொடரில் தோன்றி, கிழக்கு மலைத்தொடரை ஊடறுத்துக் கொண்டு வங்கவிரிகுடாவில் கலக்கின்றன. எனவே இப்பிளவுகள் கிழக்குக்கரைச் சமவெளிக்கும், தக்காணப் பீடபூமிப் பகுதிக்குமான போக்குவரத்தினை எளிதாக்குகின்றன.

பண்டைத் தமிழகம் முக்கோண வடிவில் அமைந்து, அதன் முனை தெற்கு நோக்கி நீண்டிருந்தது. இரு மலைத் தொடர்களும் நீலகிரி மலைவரை தமிழகத்தின் இரு விளிம்புகளையும் இணைப்பதாக அமைந்துள்ளன. நீலகிரிமலைக்குத் தெற்கில் பொது இணைப்பு பெரிதும் பாதிக்கப்படுகிறது. தமிழகத்தின் உட்புறம் காணப்படும் சிறு குன்றுகளும், மேடுகளும் நாட்டைப் பல்வேறு சிறு சிறு பிரிவுகளாகப் பிரிக்க உதவுகின்றன. பண்டைத் தமிழகத்தில் அரசியல் ஒற்றுமையின்மைக்கு இதுவே தலையாய காரணமாகும். இதுவே, சேர, சோழ, பாண்டிய மன்னர்களும், திரையர், வேளிர், போன்ற குறுநில மன்னர்களும் தமக்கெனத் தனிநாடுகளை அமைத்துக்கொள்ள வழி வகுத்தது. வலிமையும், திறமையும் மிக்க கரிகாலன், செங்குட்டுவன், நெடுஞ்செழியன், முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன் போன்ற மன்னர்களின் காலத்தில் மட்டுமே தமிழகத்தில் அரசியல் ஒற்றுமையைக் காண முடிகிறது. தமிழக மக்களிடையே காணப்படும் மாறுபட்ட பழக்க வழக்கங்களும் கூட சமுதாய ரீதியில் தனிமைப் படுத்துவதற்கான ஒரு காரணமாகும். மலைப்பகுதி, காடுகள், விளை நிலங்கள், கடற்கரைப் பகுதி, பாலை நிலம் என்ற ஐவகை நிலமக்களும் தமதுநடை, உடை, பாவனை, பண்பாட்டின் சூழ்நிலைக் கேற்ப ஒழுகினர். அகன்ற சாலைகளும், இருப்புப் பாதைகளும் அமைக்கப்பட்ட பின்னரே தனித்திருக்கும் இத்தன்மை படிப்படியாகத் தகர்க்கப்பட்டது எனலாம்.

## ஆறுகள்

தமிழகம், காவிரி, பாலாறு, வைகை, பெண்ணாறு, வெள்ளாறு, தாமிரபரணி, பரளியாறு, பரதப்புழா, பெரியாறு போன்ற ஆறுகள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டது. இவ்வாறுகள் எண்ணிக்கையில் குறைவாகவும், அதிக நீளம் இல்லாதனவாகவும் இருந்த போதும், இவை ஆண்டு முழுவதும் விவசாயத்திற்கு வேண்டிய நீர் வசதியை அளிக்கின்றன. பெரியாறு, பரதப்புழா ஆகிய இரண்டு ஆறுகள் தவிர்த்த ஏனைய இவ்வாறுகள் மேற்கு மலைத் தொடரில் உற்பத்தியாகி, தமிழக நிலப்பரப்பில் பாய்ந்து வங்க விரிகுடாவில் கலப்பவை. பெரியாறும், பரதப்புழாவும் மேற்குமலைத் தொடரில் உற்பத்தியாகி, கேரள மாநிலத்தில் பாய்ந்து அரபிக் கடலில் கலப்பவை.

'தென் கங்கை' என அழைக்கப்படும் காவிரி "வான் பொய்ப்பினும் தான் பொய்க்காது" வளம் சுரக்கின்ற காரணத்தால் "காவிரி போற்றுதும், காவிரி போற்றுதும்" என வாழ்த்தாகவும்;

"பூவார் சோலை மயிலாலப் புரிந்து குயில்கள் இசைபாடக்
காமர் மாலை அருகசைய நடந்தாய் வாழி காவேரி"

என்வும் சிலம்பிசைத்த செல்வர் இலங்கோவடிகளாலும், இன்னபிற புலவர்களாலும் போற்றப்படுகிறது. 760கி.மீ. நீளமுள்ள இவ்வாறு குடகு நாட்டில் உற்பத்தியாகிறது. புதுமணப் பெண்ணாய் ஆரவாரமின்றி கன்னட மாநிலத்தில் பாய்ந்து, பொங்கும் நுரை தங்கும் புலன்ருவியாய்த் தமிழகத்தில் அடியெடுத்து வைக்கின்றது. இடையில் கன்னட மாநிலத்துப் புனிதத்தலங்களான ஸ்ரீரங்கப்பட்டினம், சிவசமுத்திரம் ஆகியவற்றைத் தொடுகிறது. தமிழகத்திலும் திருச்சிராப்பள்ளிக்கு மேற்கில் 15கி.மீ. தொலைவில் காவிரி, கொள்ளிடம் என இரு பிரிவுகளாகப் பிரிந்து, ஒரு அரங்கத்தைத் தோற்றுவித்து (ஸ்ரீரங்கம்) அங்கு அரங்கநாதனைக் கிடந்த நிலையில்காட்சியளிக்கச் செய்கிறது. தன் காதலனாம் கடலரசனோடு கலக்கும்முன் பல்வேறு கிளைகளாகப் பிரிந்து, தஞ்சை, திருச்சி மாவட்டங்களைத் தன் குன்றாப் புனலால் குளிர்வித்து, பசுமை வயல்களின் நெற்பயிருக்குப் பாட்டிசைக்கிறது. பத்தொன்பது நூற்றாண்டுகளுக்கு முன்னர் கரிகாற்சோழன் காவிரிக்கு கரை எழுப்பி அதன் வெள்ளச் சேதம் மிகுதியும் குறைக்கப்பட்டது. அன்றியும் அவன் காவிரிக்குக் குறுக்கே எழுப்பிய கல்லணை, காவிரியின் வெள்ளப் பெருக்கினைக் கட்டுப்படுத்திப் பாசன வசதிக்கு வகை செய்தது. இவ்வாற்றுப் பெருக்கால் வளம்பெறும் சோழ நாட்டைப் புலவர்கள் 'சோணாடு சோறுடைத்து' எனவும் தஞ்சை மாவட்டத்தைத் தமிழகத்தின் நெற்களஞ்சியம் எனவும் அழைப்பர். இவ்வளவு வளம் தரும் இக்காவிரி இன்று காய்ந்து கிடப்பதைக் காணும்போது நம்பும்படி இல்லை.

மைசூர் மாநிலத்திலுள்ள நந்திதுர்க்கத்தில் பாலாறு உற்புத்தியாகிறது. இது வடஆற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களின் வழியே பாய்ந்து, வங்க விரிகுடாவில் கலக்கிறது. இவ்வாற்றின் கரையில் அமைந்துள்ள முக்கிய நகரங்கள் வாணியம்பாடி, வேலூர், ஆற்காடு, செங்கல்பட்டு, வாலாஜாபாத் ஆகியவை. இந்த ஆறு மிகக் குறுகிய பரப்பிற்கே பாசன வசதி அளிக்கிறது.

பெண்ணாறு கன்னட மாநிலத்திலுள்ள சென்னராயன் பேட்டையில் உற்பத்தியாகிறது. இது பெங்களூர், சேலம் ஆகிய நகரங்களையொட்டிப் பாய்கிறது. கடலூருக்கு வடக்கே கடலோடு கலக்கிறது. இது தன் முகத்துவாரத்திலுள்ள நிலங்களுக்குப் பாசன வசதியளிக்கிறது.

வைகையாறு பழனிமலைகளில் உற்பத்தியாகிறது. மதுரை நகரின் வழியே பாய்ந்து வங்க விரிகுடாவில் கலக்கிறது. இக்காலத்தில் இவ்வாறு ஆண்டில் பல மாதங்கள் வறண்டே காணப்படுகிறது. இவ்வாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள வைகை அணை, மதுரை — இராமநாதபுரம் மாவட்டங்களில் குறிப்பிட்ட அளவு நிலங்களுக்குப் பாசன வசதியளிக்கிறது.

மெகாஸ்தனீஸின் இண்டிகா என்னும் நூலில் சுட்டப்பட்டுள்ள தாமிரபரணி ஆறு மேற்குத் தொடர்ச்சி மலையின் தெற்கில் அமைந்துள்ள அடர்ந்த காடுகள் சார்ந்த பொதிகை மலையில் உற்பத்தியாகிறது. இது திருநெல்வேலி மாவட்டத்தின் வழியே

பாய்கிறது. தென்மேற்கு பருவக்காற்றினால் இவ்வாறு தண்ணீர் பெறுகிறது. தனது கழிமுகத்தில் அகன்ற டெல்டாக்களை ஏற்படுத்திக் கொண்டு, இந்த ஆறு வங்கவிரிகுடாவில் கலக்கிறது. இங்குதான் முத்துக் குளித்தலுக்குப் புகழ்பெற்ற கொற்கைத் துறைமுகம் அமைந்திருந்தது.

கேரள மாநிலத்தில் மிக நீளமான ஆறு பரதப்புழா (250 கி.மீ.) ஆகும். இவ்வாற்றின் கரைகளில்தான் சித்தூர், பாலக்காடு, திருநாவாய், பொன்னானி போன்ற சிறந்த நகரங்கள் எழுந்துள்ளன. பெரியாறு (234 கி.மீ.), வழிபாட்டிற்குரிய பெண் தெய்வமான கொற்றவை கோயில் கொண்டுள்ளதாக கருதப்படும் அயிரைமலையில் தோன்றுகிறது. இது காலடி, ஆல்வாய் வழியே பாய்கிறது. இதன் கிளைநதிகளில் ஒன்று சேர மன்னர்களின் தலைநகராகக் கருதப்படும் கொடுங்கோளூர் வழியே பாய்கிறது. தென்திருவாங்கூரில் பாயும் பல ஆறுகளுள் பறளியாறு என்றழைக்கப்படும் பஃறுளியாறு குறிப்பிடத்தக்க ஒன்று. இது மகேந்திரகிரியில் தோன்றி நாஞ்சில் நாட்டின் வழியே பாய்ந்து, மணக்குடி முகத்துவாரத்தில் கடலோடு கலக்கின்றது. இவ்வாற்றின் குறுக்கே எழுப்பப்பட்டுள்ள பாண்டியன் அணை, இப்பகுதியை ஆண்ட பாண்டிய மன்னர்களை நம் நினைவிற்குக் கொண்டு வருகிறது.

ஆறுகளின் நதிகளின் கழிமுகம் பெரும்பாலும் தாழ்நிலப் பரப்பினதாக, சிவப்புச் சரளையாலும், களிமண்ணாலும் அமைந்துள்ளது. எனவே இப்பகுதிகள் விளைபயிர் உற்பத்திக்கு அவ்வளவு உகந்தவை அல்ல. ஆனால் டெல்டாப் பகுதிகள் உணவுக் களஞ்சியங்களாக, நெல் போன்ற உணவுப் பயிர்களும், புகையிலை, பருத்தி, கரும்பு போன்ற பணப்பயிர்களும் விளையுமிடங்களாக விளங்குகின்றன. தகடூரை ஆண்ட அதியமான் நெடுமானஞ்சியின் முன்னோர்களுள் ஒருவரே தமிழகத்தில் முதன் முதலில் கரும்பு விளைவித்தார் என்ற கருத்து ஔவையாரின் புறநானூற்றுப் பாடல் ஒன்றினால் அறியக் கிடைக்கிறது.

பொதுவாக ஆற்றுச் சமவெளிகளே நாகரிகத்தின் பிறப்பிடங்களாகக் காணப்படுகின்றன. ஆற்றங்கரைப் பகுதிகளில் மக்கள் வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை எளிதில் பெற முடிகிறது. இப்பகுதி மக்கள் மீன்பிடிப்பதிலும், பயிரிடுவதிலும் ஈடுபட்டுள்ளனர். காவிரி, வைகை, பாலாறு, பெரியாறு, போன்ற ஆற்றங்கரைகளில் தான் தமிழகத்தில் தோன்றிய பேரரசுகளிற்பல தம் தலைநகர்களைக் கொண்டு விளங்கின. இப்பகுதிகளே எண்ணற்ற திருக்கோயில்களைப் பெற்றவையாகவும், உள்நாட்டுக் கலைகளின் உறைவிடமாகவும், வரலாற்றுக்கு முக்கிய காலத் தொழில்களைப் பெரும்பாலும் பேணிக் காப்பனவாகவும் விளங்குகின்றன.

**மண்வளமும் கனிச்செல்வமும்**

தமிழகத்து மண்வளம் தன் இயல்பிலும், வளத்திலும் இடத்திற்கு இடம் வேறுபாடுடையன. இங்கு வளமிக்க வண்டல் மண்ணை ஆறுகளின் கழிமுகப் பகுதிகளிலும், பருத்திப் பயிருக்கேற்ற கரிசல் மண்ணை சமநிலங்களிலும், இறுக்கமான செம்மண்ணை மத்தியப் பகுதிகளிலும் காண முடிகிறது. கரிசல்மண் வளம் குன்றியது. எனவே, பருத்தி, இதர புன்செய் தானிய பயறு வகை விவசாயங்கள் இம்மண் பிரதேசத்தில்

மேற்கொள்ளப்படுகின்றன. செம்மண் வேளாண்மைக்கு அவ்வளவு உகந்ததல்ல; மரங்களற்ற இடையிடையே தனித்து நிற்கும் குன்றுகளும் பாறைகளும் விரவிக் கிடக்கின்ற சமநிலமே செம்மண் பகுதியாக அமைகிறது. இப்பகுதிகள் வறட்சியானவை. வெப்பமான காலநிலை கொண்டவை; வளமான வண்டல் பகுதிகளிலேயே வேளாண்மை அதிக அளவில் மேற்கொள்ளப்படுகிறது.

வடஇந்திய மாநிலங்களோடு ஒப்புநோக்கும்போது, கனிவளமும், கனிப்பொருட்கள் தொடர்பான தொழில்களும் தமிழகத்தில் மிகக் குறைவு என்றே கூறலாம். கேரள மாநிலத்திலும், சேலம் மாவட்டத்திலும் மின்சக்தியும், நீர்வசதியும் சற்று மலிவாகக் கிடைப்பதாகக் கொள்ளலாம். சேலம் மாவட்டத்தில் இரும்புக் கனியும் அத்துடன் இயைபுடைய பொருட்களான மோனசைட், குரோமைட், குவார்ட்ஸ், பாக்சைட், சுண்ணாம்புக்கல், டாலேமைட் போன்ற கனிப்பொருளும் கிடைக்கின்றன. திருச்சிராப்பள்ளியிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பொறுக்குப் பாறைகளில் ஜிப்சமும், மிகக் குறைந்த அளவில் இரும்புக் கனிகளும் கிடைக்கின்றன. பாண்டிச்சேரி, விருத்தாச்சலம் பகுதிகளின் நீர் வறண்ட பொறுக்குப் பாறைப் பிரதேசங்களில் லிக்னைட் என்னும் பழுப்பு நிலக்கரி ஏராளமாகக் கிடைக்கிறது. சோடியம், நைட்ரேட் போன்ற இரசாயனப் பொருட்கள் பெறுவதற்குத் தேவையான கனிவளம் திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டக்கடற்கரை மணற்பரப்பில் மிகுதியாகக் காணப்படுகிறது.

பல்லாவரம், தென்னாற்காடு, திருநெல்வேலி, நாஞ்சில்நாடு போன்ற பகுதிகளில் காணப்படும் பாறைகளில் கோவில்களும் விண்ணளாவிய கட்டிடங்களும் கட்டுவதற்கு உகந்த கற்கள் கொண்டு செதுக்கப்படும் சிற்பத் தொழில் செழித்திருந்தது. சத்தியவீடு, நாகலாபுரம், காஞ்சிபுரம் இவற்றிற்கருகில் கிடைக்கும் மணற்கற்கள் (Sand Stones) கட்டிடங்கள் கட்டவும், கவினுறு வேலைப்பாடுகளுக்கும் பயன்படுகின்றன. சங்கரி துர்க்கமலைப் பகுதிகளிலும், திருநெல்வேலிக்கருகில் தாழையூத்திலும் கிடைக்கும் வெள்ளைச் சுண்ணாம்புக் கற்கள் சிமெண்ட் உற்பத்திக்கும், சலவைத்தூள் (Bleaching Powder) தயாரிக்கவும் உதவுகின்றன.

## மழைபொழிவு, நீர்ப்பாசனம், வேளாண்மை

“தென்னிந்தியாவில் தமிழகம் மிகவும் ‘தாகமுற்ற’ பகுதிகளில் ஒன்றாகும். இது பெரும்பாலும் தனது உயிர் வாழ்க்கைக்காக (மழையைப் பெற விண்ணையே நோக்கி நிற்க வேண்டியுள்ளது.” பொதுவாகப் பருவமழை உரிய காலங்களில் துவங்குகின்றது. சில சமயங்களில் தொடர்ந்து சில ஆண்டுகள் பருவமழை பொய்த்து விடுவதால் பஞ்சமும், வறட்சியும் பெருகும். கன்னியாகுமரி மாவட்டத்தின் ஒரு சிறு நிலப்பரப்பும், கேரளா முழுவதும் தென்மேற்குப் பருவக் காற்றினால் நல்ல மழையைப் பெறுகின்றன (ஜுன் முதல் அக்டோபர் வரை) ஆனால் தமிழகம் முழுவதற்கும் நல்ல மழை தருவது வடகிழக்குப் பருவக் காற்றேயாகும் (அக்டோபர் முதல் டிசம்பர் வரை).

மழைப் பொழிவே நீர் பெறுவதற்கான அடிப்படை ஏதுவாகும். நீரைப் பெறுவதற்கான இக்கால ஏற்பாடுகள் எல்லாம் பருவமழையை அடிப்படையாகக் கொண்டே செய்யப்படுகின்றன. மழைப் பொழிவால் ஏற்படும் நீர்பாசனப் பற்றாக் குறையை ஈடு செய்யவே செயற்கைமுறைப் பாசன ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கிணறுகள், ஏற்றங்கள், கால்வாய்கள், ஆர்டீசியன் நீரூற்றுக்கள் ஆகியவை தமிழகத்தில் வெற்றிகரமாகப் பின்பற்றப்பட்டு வரும் சில பாசன ஏற்பாடுகள் ஆகும். இத்தகைய பாசன வசதிக்கு அதிகப் பணச்செலவு ஏற்படுகிறது. இருப்பினும் விவசாயிகள் நவீன இயந்திரங்களைப் பெற்று வேளாண்மையைப் பெருக்குவதற்கான வாய்ப்புக்கள் பலவற்றை அரசு வழங்கியுள்ளது.

தொல்காப்பியக் காலத்தில் மழைப் பொழிவு அடிப்படையில் தமிழகம் நான்கு பெரும் நிலப் பிரிவுகளாகப் பகுக்கப்பட்டிருந்தது. அவை முறையே மலை சார்ந்த இடம், காடு சார்ந்த மேய்ச்சல் நிலம், வளமிக்க விளைநிலம் கடற்கரை நிலம் என்பன. ஆனால் இளங்கோவடிகள் காலத்தில் இந்நால்வகை நிலங்களுடன் 'பாலை' எனப்படும் ஐந்தாவது வகை நிலத்தையும் தமிழர் சேர்த்தனர். இந்த ஐவகை நிலங்களும் தத்தமக்கான மாந்தரையும் தொழிலையும், கடவுளையும் பெற்றுள்ளன.

தமிழக மக்களின் பெரும்பாலோர்க்கு வேளாண்மையே முக்கியத் தொழில். திருவள்ளுவர் தனது திருக்குறளில் உழவு என்னும் அதிகாரத்தில் வேளாண்மையின் சிறப்பைத் திறம்பட எடுத்து மொழிகிறார். நெல், சோளம், கம்பு, கேழ்வரகு ஆகிய தானியங்கள் மிகுதியும் பயிரிடப்பட்டன. பணப் பயிர்களான நிலக்கடலை, பருத்தி, கரும்பு ஆகியவையும் பயிரிடப்பட்டன. உணவுப் பயிர்கள் தவிர எண்ணெய் வித்துக்கள், எள்ளு, நிலக்கடலை, இஞ்சி ஆமணக்கு போன்றவை தமிழகத்திலும், கேரளத்திலும் விளைகின்றன. துவரை, உளுந்து, தட்டப்பயிறு போன்ற பருப்பு, பயறுவகைகளும் பல பகுதிகளில் பயிரிடப்படுகின்றன. இவை தவிர தென்னை, பாக்கு, மா, வாழை, வெற்றிலை, மிளகாய், புகையிலை மற்றும் இதர காய்கறிகளும் இங்கு பயிராகின்றன. தமிழகத்துப் பொருட்களான முத்து, யானைத்தந்தம், மிளகு, கிராம்பு, சந்தனம், தேக்கு, தோதகத்தி, ஏலம் ஆகியவற்றிற்கு அந்நிய நாடுகலில் பெரும் தேவை உண்டு. தமிழகத்திலிருந்து மொசப்படோமியாவிற்கு அரிசியும், ரோமாபுரிக்கு முத்துக்களும், இதர ஐரோப்பிய நாடுகளுக்கு மரமும் தென்னை நார்க்கயிறும் அனுப்பப்பட்டன என்பதற்கான வரலாற்றுச் சான்றுகள் உள்ளன.

## காலநிலையும் காற்றுகளும்

பூமி உருண்டையில் நிலநடுக்கோட்டிற்குச் சற்று வடக்காக அமைந்துள்ளமையால், தமிழகம் முழுவதும் வெப்ப மண்டலத்திலேயே அடங்குகிறது. கன்னியாகுமரி 80 வட அட்சரேகையில் அமைந்துள்ளது. எனவே நாம் ஆண்டில் பல மாதங்கள் அதிக வெப்பத்தைப் பெறுகிறோம். ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் மிகவும் உயர்ந்தபட்ச வெப்பத்தைத் தமிழகம் பெறுகிறது. ($85^0$Fம் அதற்கு மேலும்) நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களில் வெப்ப அளவு $80^0$Fம் அதற்குக் குறைவாகவும் காணப்படுகிறது.

காற்றில் கலந்துள்ள வெப்ப, தட்பம், நீர்ப்பசை அல்லது வறட்சி ஆகியவற்றைப் பொறுத்தே, அக்காற்று வீசும் பல்வேறு பகுதிகளின் காலநிலை வரையறுக்கப்படுகிறது. மலைப்பகுதிகளை அடுத்து வீசும் மேல்மட்டக் காற்றுக்கள் அதிக வேகம் உடையன. பாலக்காடு, செங்கோட்டை, ஆரம்பொழி கணவாய்ப் பகுதிகளில் இக்காற்றுக்கள் பயங்கரமாகவும், சில சமயங்களில் புயலாகவும் கூட வீசுவதுண்டு. பொதுவாகத்

தமிழகத்தின் மேற்குப் பகுதியில் ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் காற்று சற்று வேகமுடைய தாகவுள்ளது. வடகிழக்குப் பருவக்காற்று முடிவடையும் தருவாயில் காற்று வீசும் போக்கில் பின்னோக்கித் திரும்பும்போது செப்டம்பர் மாதத்தில் அதன் வேகம் மிகவும் குறைந்து அக்டோபர் முழுவதும் வறண்டு விடுகிறது.

வெளிநாடுகளில் புகழ்பெற்ற வேலைப்பாடுமிக்க துணி உற்பத்தியில் தமிழகம் சிறந்து விளங்கியது. தென்புலத்தில் அகழ்ந்து பெறப்பட்ட மட்பாண்டங்களும், தாழிகளும் பண்டைத் தமிழகக் கலைவல்லார்களின் கைவண்ணத்திற்குச் சான்று பகர்வன. பாண்டிச் சேரிக்கு அருகிலுள்ள அரிக்கமேடு என்னுமிடத்தில் அகழ்ந்து பெற்ற நாணயங்கள், தமிழகம் மேலை நாடுகளுடன் கொண்டிருந்த விரிவான கடல் வாணிகத்தைப் புலப்படுத்துகின்றன. தமிழகத்தில் கிட்டியுள்ள உரோமாபுரி நாணயங்களும், உரோமா புரியில் கிடைத்துள்ள தமிழக நாணயங்களும் இவ்விரு நாடுகளிடையே அக்காலத்தில் சிறப்புடன் நடைபெற்று வந்த கடல் வாணிகத்தை மெய்ப்பிக்கின்றன.

மேற்கூறிய பல்வேறு விவரங்கள் தமிழர்க்கெனத் தனித்த வாழ்க்கையையும், தமக்கெனத் தனி ஒரு கலாசாரத்தையும் அவர்கள் வளர்த்துக் கொள்ளவும் துணை நின்றன என்ற உண்மை புலனாகிறது. இந்தியத் துணை கண்டத்தின் தென்கோடியில் ஒதுங்கி நின்ற இத்தமிழகச் சூழல்கள் வடஇந்தியக் கலாசாரத்தினைப் போல அரசியல் அல்லது இதர கலாச்சாரச்செல்வாக்குகளோடு கலந்து விடாமல், தனது தனித் தன்மையை நிலைநாட்டி வந்துள்ளன; உள்நாட்டைச் சார்ந்தனவும் அயல் நாட்டில் தோன்றி யவையுமான பண்டைய இலக்கியங்கள் தமிழகக் கலாசாரத்தின் சிறப்பிற்கு ஏராளமான சான்றுகளை வழங்குகின்றன. வட இந்தியாவிலிருந்து முற்றிலும் மாறுபட்ட அரசியல் ஆட்சி அமைப்புகளைத் தோற்றுவிக்க இதன் அமைவிடம் உதவுகிறது. கிரேக்க, உரோமானிய, எகிப்திய ஆசிரியர்களால் காவிரிப்பூம்பட்டினம், கொற்கை, தொண்டி ஆகிய இடங்களில் நடைபெற்றுவந்த கடல் வாணிகத்தின் சிறப்பு பாராட்டி எழுதப்பட்டுள்ளது.

அனைத்து கலாசார வரலாறுகளும், அவை விலங்கு நிலையிலிருந்து, காட்டு மிராண்டி நிலையினைத் தாண்டி, படிப்படியே இயற்கைச் சக்திகளை எதிர்த்துப் போராடி வென்று நாகரீக முதிர்ச்சிக்கு அடியெடுத்து வைத்துள்ள வளர்ச்சிப் படிகளை நமக்கு உணர்த்துகின்றன. இயற்கை அமைப்பின் விளைவுகளை விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் ஓரளவிற்கு மாற்றி அமைத்துள்ள போதிலும், மனித வாழ்வில் நிலவியலின் செல்வாக்கு தொடர்ந்து நீடித்தே நிற்கிறது. இயற்கை அன்னையின் சீற்றத்தின் விளைவுகளை அடியொட்டியே விஞ்ஞான முன்னேற்றமும் கூட அமைகிறது என்லாம். இவ்வாறு மலைகள், ஆறுகள், கடல்கள் இயற்கையாகக் கிடைக்கும் இதர சக்திச் செல்வங்கள் போன்ற நிலவியல் சூழ்நிலைகளைப் பொறுத்தே எந்த நாகரிகமும் அமைகிறது என்பது தெளிவு.

"வரலாற்றின் அனைத்து வளர்ச்சிகளும் நிலவியலமைப்பாலேயே உருவாக்கப் படுகிறது; நிலவியலுண்மைகளை உள்ளத்திற் கொண்ட வரலாற்று ஆய்வுகள் துவக்கப்பட வேண்டும் என்று கருதுமளவிற்கு வரலாறும் நிலவியலும் பின்னிப் பிணைந்து கிடக்கின்றன".

## தமிழகத்தின் இனமரபுகளும் பழங்குடிகளும்

பல்வேறு இனங்களும் பண்பாடுகளும் நிறைந்த ஓர் அரும்பொருள் காட்சியகமே இந்தியா என்றால் அது மிகையாகாது. இக்கருத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் தமிழ் நாட்டின் இனமரபு வரலாறு திகழ்கிறது எனலாம். 'இனம்' என்னும் சொல்லிற்குத் தமிழில் வருக்கம், குலம், சுற்றம், நிரை, ஒப்பு ஆகிய பொருள்கள் வழங்கி வருகின்றன. இனம் என்னும் சொல் ஆங்கிலத்தில் (Race) எதனைக் குறிக்கிறதென்றால் மனித இனத்தில் உடலுறுப்புகளினுடைய அமைப்பின் அடிப்படையில் கொள்ளப்பட்ட பாகுபாட்டையேயாகும். சற்று விளக்கமாகக் கூறினால் உயிரின் மரபுரிமை மூலம் வழிவழியாகக் கொண்டு செல்லக்கூடிய பொதுவான எளிதில் கண்டறியத்தக்க உடற்கூற்றுப் பண்புகளையுடைய மனிதர்களின் சேர்க்கையே தொகுதியே இனம் என்லாம்.

## மொழிவழி இனப் பாகுபாடு முறையானதா?

உலகில் பேசப்படுகின்ற மொழிகளை மொழியியல் அறிஞர்கள் அவற்றைப் பல குடும்பங்களாகப் பாகுபாடு செய்துள்ளனர். இப்பகுப்பு முறை மொழிகளை வகைப் படுத்தப் பொருந்துமே அன்றி மனித இனத்தை உடற்கூற்று அமைப்பிலோ, வாழுகின்ற நாட்டின் அடிப்படையிலோ பகுப்பதற்குப் பொருந்தாது. மொழி ஆராய்ச்சிக்கென வகுத்துக் கொள்ளப்பெற்ற விதிமுறைகளை இன ஆராய்ச்சியில் கொண்டு வந்து பொருத்திக்காட்டுவது முறையல்ல. ஆனால் இத்தவற்றை அண்மைக்காலமாக இந்திய, குறிப்பாக தென்னிந்திய ஆராய்ச்சியாளர்கள் செய்துவந்துள்ளனர். இந்தியாவில் பேசப்படும் மொழிகளை மொழியியலார் 'ஆரிய' மொழிகள் 'திராவிட' மொழிகள் என்ற இருபெரும் பிரிவுகளாகப் பிரித்தனர். இம்மொழிகளைப் பேசும் மக்களை மொழிக் குடும்பப் பெயர்களின் அடிப்படையில் ஆரியர், திராவிடர் என இனப்பாகு செய்வது ஏற்புடையதல்ல. உலகில் பல்வேறு பகுதிகளில் நிகழ்ந்ததைப் போன்றே இந்தியாவிலும் கடந்த பல நூற்றாண்டுகளாக பல்வேறு இனங்கள் பெருமளவில் கலந்துள்ளன. எனவே, மொழியையும் இனத்தையும் ஒன்றுபடுத்திக்காட்ட முடியாது.

## இனப்பாகுபாட்டின் மொழிப்படை

மனிதரின் உடற்கூற்று அமைப்பில் காணப்பெறும் முனைப்பான சில இயல்புகளை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு இனங்களாக மானிடவியல் நூலார் மக்களினத்தைப் பாகுபாடு செய்துள்ளனர். தோலின் நிறம், மண்டை ஓடு, உடற்கட்டு, கண்மணி, உதடுகளின் அமைப்பு, தலைமுடி ஆகிய பல்வேறு உடற்கூற்றுப் பண்புகளின் வேற்றுமைகளைக் கருத்தில் கொண்டு இனப்பாகுபாடு செய்யப்பெறுகிறது. இந்தியாவில் வாழும் மக்களிடையே காணப்பெறும் உடற்கூற்று இயல்புகளை ஆராய்ந்து அதன் வழி இந்திய மக்களைப் பல இனங்களைச் சேர்ந்தவர்களாக மானிடவியலார் வகைப்படுத்தியுள்ளனர். அந்த இனங்களாவன : திராவிட இனம், இந்திய – ஆரிய இனம், மங்கோலிய இனம்.

தமிழகத்தின் இனமரபு வரலாற்றினைப் பற்றித் தனியே விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. இருப்பினும் தமிழகம் உட்பட்ட இந்தியாவைப் பற்றி மேல்நாட்டு அறிஞர்கள் விரிவாக ஆய்ந்துள்ளனர். அவர்தம் ஆய்வுரைகளில் தமிழகத்தில்

வாழும் மக்கள் இனம் பற்றிய செய்திகள் பல இடம் பெற்றுள்ளன. இனமரபு ஆய்வில் நிலையான தொழில் நுட்ப அளவு கோல் ஒன்றும் திட்டவட்டமாகப் பயன்படுத்தப் படவில்லை. மற்றும் மனிதனுடைய பல்வேறு உடற்கூற்று இயல்புகளின் இனச் சிறப்புப் பண்புகளை வரையறுக்கும் முறையும் போதிய அளவிற்கு வளர்ச்சியடையவில்லை. இவ்விரு காரணங்களால் இனமரபியல் ஆய்வாளர்கள் பல திறப்பட்ட கொள்கைகளைக் கொண்டுள்ளனர்; வேறுபட்ட கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

தமிழகம் பற்றி நாம் படிக்கும்போது மற்றொரு கருத்தையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். மண்ணியல் அறிஞர்களின் கூற்றுப்படி இன்றுள்ள தமிழகத்திற்குத் தென்பால் லெமூரியா என்றதொரு பெரு நிலப்பரப்பு பல நூறாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தது. பின்னர் ஏற்பட்ட ஊழிகளால் இன்றுள்ள அளவிற்கு தமிழக நிலப்பரப்பு சுருங்கிற்று. இம்மாற்றங்கள் பல நூறாயிரம் ஆண்டுகளினூடே ஏற்பட்டபோது மனித இனமே தோன்றவில்லை. மானிடவியலாரின் கருத்துப்படி இனமரபு பாகுபாடுகளை மூவாயிரம் அல்லது நாலாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்த மக்களிடையேதான் காணமுடிகிறது. அத்தொன்மைக் காலந்தொட்டே தமிழகத்தில் மனிதன் தனித்து வாழ்ந்து வந்திருக்க முடியாது. வடஇந்தியப் பகுதிகளோடு தொடர்பு கொண்டிருக்க வேண்டும். மக்களிடையே குடிப்பெயர்ச்சி ஏற்பட்டிருக்கும்; எனவே தமிழ்நாட்டு மக்களின் இனமரபு வரலாற்றினைத் தனியே பகுத்தறிவதைவிட இந்தியாவின் ஒரு கூறாகக் காண்பதே முறையாகும்.

ஜே.எச். ஹட்டன் மிக விரிவான திட்டத்தின் அடிப்படையில் மானிடவியலிலும், இனமரபியலிலும் ஏற்பட்டுள்ள வளர்ச்சிகளையும் புதுமைப் போக்குகளையும் கருத்தில் கொண்டு 1933இல் இந்தியக் குடிமக்களின் கணிப்பைத் தொடங்கினார். இனத்திற்கும் மொழிக்கும் பண்பாட்டிற்கும் இடையேயுள்ள தொடர்புகளையும், கிளையுறவுகளையும் அவர் நுட்பமாக ஆராய்ந்துள்ளார். அதன் விளைவாக 'இந்தியாவில் வாழும் மக்கள் எல்லோருமே வெளிநாடுகளிலிருந்து வந்தவர்' என்னும் முடிவிற்கு அவர் வந்தார். ஹட்டன் இந்திய மக்களின் இனமரபுகளை எட்டுவகையாகப் பாகுபடுத்தியுள்ளார். அடுத்து இந்திய மானிடவியல் மதிப்பீட்டுத் துறையின் நெறியாளராகப் பணியாற்றிய பி.எஸ். குகா இந்திய மக்களின் இனப் பண்பாட்டைப்பற்றி ஆராய்ந்து சில சிறந்த முடிவுகளை வெளியிட்டுள்ளார். இந்தியமக்களை ஆறு முதன்மையான இனங்களாகவும், அவற்றோடு தொடர்புடைய பதினொரு துணை வகைகளாகவும் அவர் வகைப் படுத்தியுள்ளார். அவை பின்வருமாறு :

1. **நீக்ரிட்டோக்கள் (Negritos) :** ஆப்பிரிக்காவிலிருந்து வந்தவர்களாகக் கருதப்படு கின்றனர். குறுகிய தலையையுடையவர்கள். இவர்கள் இந்தியாவிற்கு வந்த மிகப் பழைய மக்களாவர். இப்பொழுது அந்தமான் தீவுகளிலும், மலேயாவிலும் வாழுகின்றனர். அஸ்ஸாமிலுள்ள நாகர்களிடத்திலும், தென்னிந்தியாவில் குறிப்பிட்ட சில பழங்குடி (காடர், புலையர், இருளர்) மக்களிடத்திலும் இவ்வினக் கூறுகளைக் காணலாம்.

2. **ஆஸ்திரிய மக்களின் மூதாதையர் : (Proto-Australoids) :** இவர் கீழை நடுநிலக்கடல் பகுதியிலிருந்து (பாலஸ்தீனம்) இந்தியாவிற்கு வந்தவர்கள். நீக்ரிட்டோக்களை அடக்கி

ஒடுக்கிவிட்டு குடியேறினர். இம்மரபினர் கரிய நிறத்தினர்; நீண்ட தலையோட்டினர்; அகன்ற மூக்கினர். இவர்கள் தமிழகத்திற்கு வந்தனர். மலைப்பகுதிகளில் வாழும் சில பழங்குடியினரில் இவர்களின் சாயலைக் காணலாம்.

**3. மங்கோலியப் பழங்குடியினர் (Mongoloids) :** இவர்களுள் பண்டைய மங்கோலியர், திபெத்திய மங்கோலியர் என்ற இருவகையினர் உள்ளனர். இந்தியாவின் வட எல்லைக் கோடியிலும் கிழக்கு எல்லை ஓரத்திலும் வாழும் இனத்தவர். தமிழ்நாட்டில் இவ்வினத்தவர் இல்லை.

**4. நடுநிலக்கடல் இனத்தவர் (Mediterranean type) :** இவர்களுள் பண்டைய நடுநிலக் கடல் இனத்தவர், நடுநிலக்கடல் இனத்தவர், கீழை நாடுகளில் உள்ள நடுநிலக்கடல் இனத்தவர் என்னும் மூவகையினர் உள்ளனர். இவர்கள் கரிய நிறத்தினர்; இடைப்பட்ட உயரம் உடையவர்; குறுகிய மூக்கினர். தென்னிந்தியாவில் இவர்கள் பெருமளவில் காணப்படுகின்றனர். 'திராவிடர்' என்னும் பெயர் உடைய இவ்வினத்தைச் சேர்ந்தவர்களே தமிழக மக்கள்.

**5. குறுகிய தலையையுடைய இனத்தவர் (Brachycephalic) :** இவர்களுள் அல்பைனர், தினாரிக்குகள், அர்மினாய்டுகள் என்னும் மூன்று பிரிவுகளுண்டு. இவர்கள் கன்னட நாட்டிலும், தமிழ்நாட்டிலும் காணப்படுவதோடு வங்காளத்திலும், ஒரிஸ்ஸாவிலும் காணப்படுகின்றனர்.

**6. நார்டிக்குகள் (Nordics) :** இவர்கள் வேதகால ஆரிய இனத்தவர். குறுகிய மூக்கும் அகன்று நீண்ட தலையோடும் உடையவர்; வேதகால ஆரிய மொழியை இந்தியாவிற்கும் கொண்டு வந்தவர்.

டாக்டர் குகா அவர்களின் மேற்குறிப்பிட்ட பாகுபாடேஇன்று இனமரபியல் ஆய்வாளர்களால் சிறப்பு மிக்கதாகப் போற்றப்படுகிறது. மேலும் செம்மையான ஆய்வுமுடிவுகள் வெளிவருமானால் இனமரபியல் பற்றிய நம்முடைய கருத்துக்களை நாம் மாற்றிக்கொள்ள நேரலாம். குகா ஈறாக இந்திய மக்களை இனவழிப் பாகுபாடு செய்த இனமரபியல் அறிஞர்கள் அனைவருமே இந்திய மக்களினத்தை வெளிநாடு களிலிருந்து வந்தவர்களாகக் கொள்வதிலேயே நாட்டம் உடையவர்கள்.

## தமிழகத்தின் இனமரபினர்

தமிழகத்தின் தென்மேற்குப் பகுதியில் வாழ்ந்துவரும் காடர், புலையர், இருளர் என்போர் தமிழகத்து மிகப்பழைய இனமான நீக்ரிட்டோவைச் சேர்ந்தவர்கள் எனலாம். தென்னகத்தின் மக்களிடையே பழங்கற்கால நடுநிலக்கடல் இனத்தவரின் சில கூறுகளையும் காணலாம். தமிழகத்தின் கடலோரப்பகுதிகளின் அல்பைன் இனத்தவரின் (Alpines) சாயல்களையும் காணலாம். ஆனால் இன்றைக்கு தமிழ்நாட்டில் வாழும் மக்களை இனவாரியாகப் பிரித்துக்காட்டல் இயலாது. ஏனென்றால் பல்லாயிர ஆண்டுகளாக பல்வேறு இனமரபினர் தமிழகத்திற்கு வந்து கலந்திருக்கின்றனர். இத்தகைய கலப்பினாலும், குடிப்பெயர்ச்சியாலும் இனமரபு வரலாற்றையோ, மக்களின்

தோற்றத்தையோ திட்டவட்டமாகக் கூறமுடியாத நிலை உள்ளது. தமிழகத்தின் இனமரபுகளில் தனிச்சிறப்பான ஓர் உண்மை உண்டு. அது என்னவெனில் நீலகிரியில் வாழும் தோடர்கள் மேற்கூறப்பட்ட எந்த இனமரபுப் பாகுபாட்டினுள்ளும் அடங்காது தனிப்பட்ட பழங்குடியினராக இருந்து வருகின்றனர்.

மிகப்பண்டைக் காலத்துத் தமிழர் எல்லோரும் ஒரே இனமரபினர் என்று சொல்வதற்கில்லை. ஆனால் அவர்களில் பெரும்பாலோர் நீக்ரிட்டோக்களே என்று கூறலாம். இவர்கள் தமிழகத்திற்கு வந்த காலத்தில் கற்காலத்துக்கு முற்பட்ட பண்பாட்டை உருவாக்கியிருந்த மக்களைச் சந்தித்திருப்பர். கால அடிப்படையிலும் இக்கருத்து ஏற்புடையதாய் உள்ளது. நீக்ரிட்டோக்களை அடுத்துத் தமிழகத்தில் இரண்டறக் கலந்துள்ள இனமரபினர் ஆஸ்திரலாயிடுகள் ஆவர். இவர்கள் தென்னிந்தியாவிலிருந்து ஆஸ்திரேலியா வரை ஆதிகாலத்தில் பரந்து கிடந்த ஒரு மக்கள் இனம். இவர்கள் சராசரி உயரமும் குறுகிய மூக்கும் உடைய இடைத்தலையர் (mesocephalic)கள். இவர்கள் தமிழ்நாட்டிலேயே தோன்றி வளர்ந்தவர்களா அன்றி வெளிப்பகுதியிலிருந்து தமிழகத்தின் மிகப்பண்டைக்காலத்தே புகுந்தவர்களா என்பதைத் திட்டவட்டமாகக் கூறமுடியவில்லை. குறும்பர்கள் மற்றும் சில காடு வாழ் பழங்குடி மக்களை ஆஸ்திரலாயிடுகள் எனக் கருதலாம். ஆதி ஆஸ்திரலாயிடுகள் இந்தியாவில் பரந்து காணப்பட்ட இனத்தவர். அவர்கள் மொகஞ்சோதாரோவிலும் இருந்ததாகத் தெரிகிறது. இதனடிப்படையில் சிலர் ஆதிகால தமிழ்மக்களுக்கும் ஆதிசிந்து வெளியினருக்கும் இனமரபு வகையில் தொடர்பு உண்டு என்று கருதுகின்றனர்.

இன்று தமிழகத்தில் காணப்பெறும் பெரும்பான்மை மக்கள் ஆதிநடுநிலக்கடல் பிரிவினர் என்பதில் அறிஞர்களிடையே கருத்து ஒற்றுமை உள்ளது. இவ்வினமரபினர் இடைப்பட்ட உயரம், நீண்ட குறுகிய தலை, நீண்ட அல்லது சற்று வளைந்த கூரான நாசியோடு இலங்குபவர். கீழை நடுநிலக்கடல் பகுதியிலிருந்து தமிழகத்திற்குச் சில ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு வந்தெய்திய மக்களே திராவிடர் எனலாம். தமிழ்நாட்டில் இடைக்கற்காலத்தை அடுத்து வந்தது புதிய கற்காலம். திராவிடர் இக்காலத்தே தென்னகம் போந்து பல்கிச் செழித்தனர். தொல்பொருள் துறையினர் நடத்திய அகழ்வாய்வுகளின் கண்டுபிடிப்புகள் நடுநிலக்கடல் நாகரிகத்தோடு பொருந்துகின்றன. திராவிடரோடு அர்மினாய்டு, ஆல்பைன் என்னும் சிறு இனவகைகளும் ஆங்காங்குக் காணப்படுகின்றன. அர்மினாய்டு வகையினர் தென்மேற்கு ஆசியப்பகுதியில் தோன்றி காஸ்பியன் கடற்பகுதியிலிருந்து இந்தியாவரை பரவியவர்கள். இவ்வினமரபினர் தமிழ்நாட்டில் ஓரளவு காணப்படினும், பண்டைய நீக்ரிட்டோவினர் ஆதி ஆஸ்திரலாயிடுகள் ஆகியோரைத் தவிர பிறரைத் தமிழ்நாட்டின் ஆதி இனத்தவராகக் கொள்ள முடியாது. மங்கோலிய இனம் மட்டுமே இங்கு சிறிதும் காணமுடியாத ஒன்றாகும்.

நார்டிக்குகள் எனப்படும் ஆரியர்கள் இந்தியாவிற்கு வரும்முன் நாகரிகத் தொடக்க காலத்தைச் சேர்ந்த திராவிடர்கள் நல்லதொரு நாகரிகத்தை உருவாக்கியிருந்ததாக அறிஞர் கருதுகின்றனர். தென்னிந்தியாவிலும் ஆரியர் வருகைக்கு முன்பே திராவிட நாகரிகம் தழைத்திருந்தது என்றும் கருதப்படுகிறது. பாண்டிய நாட்டில் வாழ்ந்த தமிழர் தம் நாகரிகமே பண்டைய திராவிடர்களின் நாகரிகமென இராபர்ட் கால்டுவெல் கருதுகிறார்.

இந்நாகரிகம் இங்கேயே உருவாகியிருக்கவேண்டும்; ஆனால் ஆரியர்களின் குறிப்பாகப் பிராமணர்களின் வருகைக்குப் பின்பே விரைவான வளர்ச்சியைப் பெற்றிருக்கவேண்டும் என்றும் கால்டுவெல் கூறுகிறார். தென்னகம் போந்து குடியேறிய பிராமணர்களின் தலைவராக அல்லது அவர்களுள் செல்வாக்கு மிக்கவராகத் திகழ்ந்தவர் அகத்தியர் என்றும், இவர்களின் வருகை இராமாயணத்திற்கும், மகாபாரதத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் நிகழ்ந்திருக்கும் என்றும் கால்டுவெல் கருதுகிறார்.

பண்டைய தமிழகத்தின் இனமரபுபற்றி வி. கனகசபைபிள்ளையவர்கள் கருத்தொன்றை வெளியிட்டுள்ளார். தமிழகத்தின் ஆதி இன மரபினர் வில்லவரும் மீனவருமே என்பது அவர்தம் கூற்று. வில்லையுடைய வில்லவர் மலையிலும், மலையைச் சார்ந்த இடங்களிலும் வேட்டையாடுதலைத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்தனர். பள்ளத்தாக்குகளிலும், சமவெளிகளிலும், கடற்கரையோரங்களிலும் மீன்பிடித்தலைத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்தவர்கள் மீனவர். அரைகுறை நாகரிகம் கொண்ட இப்பழங் குடியினரை நாகர்கள் வந்து அடக்கி ஒடுக்கியதாகவும், இந்நாகர்கள் எண்ணிக்கையில் பெரும்அளவினராக நாகரிகமடைந்தவராக இருந்தனர் என்றும், ஒரு காலத்தில் பர்மா, இலங்கை, இந்தியாவின் பெரும்பகுதியில் இருந்தனர் என்றும் கனகசபை கருதுகிறார். நாகர்களைப் பற்றி இராமாயணத்தில் குறிப்புள்ளதென்றும், தக்கணத்தில் இவர்களது தலைநகரம் பற்றி சிறப்பான வருணனை உள்ளதென்றும் அவர் கூறுகிறார். இக்கருத்துக் களை எல்டி. பார்னட், வி.ஏ. ஸ்மித் போன்ற அறிஞர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

திராவிடர் நடுநிலக்கடல் இனமரபின் ஒரு பிரிவினர் அல்லது அவர்களோடு நெருங்கிய தொடர்புடைய இனமரபினர் என கில்பர்ட் ஸ்லேட்டர் கூறுகிறார். தலையோட்டின் அமைப்பிலும், முடியின் வண்ணத்திலும் இமை நயத்திலும், கண்களின் வண்ணத்திலும், உடற்கட்டு அமைப்பிலும் குறிப்பிடத்தக்க ஒற்றுமைகளைக் காணலாமென்கிறார். திராவிடரில் பெரும்பாலோருக்கு உடலின் நிறம் சற்று கருப்பாகவே இருக்கும்; முடியானது சுருட்டையாகவும் இமை நயமுடையதாகவும் இருக்கும்; நடுநிலக்கடல் இனமரபினரைக் காட்டிலும் தடித்த உதடுகளும் அகன்ற நாசிகளும் இருக்கும்; இம்மாற்றங்கள் திராவிடர்கள் இந்தியாவிற்குள் வந்த பின் இங்கிருந்தோரோடு ஏற்பட்ட இனக்கலப்பின் விளைவாக ஏற்பட்டிருக்கும் என்றும் கில்பர்ட் ஸ்லேட்டர் கருதுகிறார். நடுநிலக்கடல் பகுதியிலிருந்து திராவிடர்கள் மெசொபொடாமியா, பலுச்சிஸ்தானம் வழியாக சுமேரிய நாகரிகம் தோன்றுவதற்கு முன்பாக இந்தியாவிற்குள் நுழைந்திருக்க வேண்டும் என்றும், இங்கு புதிய சுற்றுப்புறச் சூழ்நிலையில் வெளிப்புற செல்வாக்குகளோடு திராவிட நாகரிகத்தை உருவாக்கியிருக்க வேண்டும் என்றும் ஸ்லேட்டர் The Dravidian Elements in Indian Culture என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தின் ஆதி இனமரபினராகக் கருதப்படும் திராவிடர்கள் இங்கேயே தோன்றியவர்கள் அல்ல; வெளியிலிருந்தே வந்தவர்கள் என்பதில் பெரும்பாலான அறிஞர்களிடையே கருத்தொற்றுமை உள்ளது. ஆனால் எப்பொழுது இந்தியாவிற்குள் வந்தனர் என்பதில் கருத்துவேற்றுமை இருந்து வருகிறது. கனகசபை பிள்ளையும், ஸ்லேட்டரும் திராவிடர்கள் இந்தியாவிற்கு கி.மு. 1300க்கு முன் வந்திருக்க வேண்டுமென கருதுகின்றனர். ஆனால் இலண்டன் பல்கலைக் கழகப் பேராசிரியர் ஹைமார்ண்டர்ஃப்

கூற்றின்படி திராவிடர்களும் ஆரியர்களும் ஏறத்தாழ ஒரே காலத்தில் கி.மு. 2000-1000ல் இந்தியாவிற்குள் வந்திருக்கவேண்டும். அதிலும் திராவிடர்கள் கடல்வழியோ மேலை கடலோரப்பகுதிகள் வழியோ வந்திருக்கக்கூடும். சங்க இலக்கியங்கள் திராவிடர்கள் கி.மு. 500-ஆம் ஆண்டளவில் தமிழகத்திற்குள் வந்திருக்ககூடும் எனவும் இப்பேராசிரியர் கருதுகிறார். இக்கூற்றை ஏற்பதிலுள்ள சில இடர்ப்பாடுகளை கே.எ. நீலகண்டசாஸ்திரி எடுத்துக் கூறியுள்ளார். கர்நாடக நாட்டில் கண்டெடுக்கப்பட்ட அசோகரது கல்வெட்டுக் களில், சீரான முறையில் நிறுவப்பட்டு இயங்கிக் கொண்டிருந்த தமிழக அரசுகள் குறிக்கப்பட்டுள்ளதைக் காணும்போது இவற்றை உருவாக்கிய திராவிடர்கள் தமிழகம் போந்த காலத்தை முன்னுக்குக் கூட்டி கணக்கிடவேண்டுமென சாஸ்திரி கருதுகிறார். மேலும் அவர் தம் கருத்துப்படி தென்னிந்தியாவிற்கு திராவிடரும், ஆரியரும் சற்றேறக்குறைய ஒரே நேரத்தில் வந்திருக்க வேண்டும்.

தென்னிந்திய மொழிகளின் அடிப்படையில் வேறுபட்ட கருத்துக்களை அறிஞர்கள் வெளியிட்டுள்ளனர். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகியவை திராவிட மொழியினத்தை சேர்ந்தவை; மராத்தி இந்தோ—ஆசிய மொழியினத்தைச் சார்ந்தவை. திராவிட மொழியினத்தைவிட ஆஸ்திரேர் — ஆசிய மொழியினம் பழமையானது; இந்தோ — ஆரிய மொழிக் குடும்பம் பிந்தியது என நீலகண்ட சாஸ்திரி கூறுகிறார்.

தென்னகம் வந்துற்ற திராவிடர்கள் தங்களது தனித் தன்மையை வரலாற்றுக்கு முந்திய காலம் வரை காத்தனர் என்றும், ஆனால் வடஇந்தியாவில் திராவிடர்களை பின் வந்துற்ற இனமரபினர் தத்தம் மரபுடன் ஒன்றச்செய்துவிட்டனர் என்றும் கேரள சமூக வரலாறு என்ற நூலின் ஆசிரியர் எல்.ஏ. கிருஷ்ண ஐயர் சொல்லியுள்ளார். திராவிட இனமரபுக் கூறுகளையும் அவர்கள் ஒடுக்கிவிட்டனர். அதிலுங்குறிப்பாக ஆரியர்கள் சிறிய கூட்டத்தினராக வந்த காலையில் தங்களது மேலாதிக்கத்தை நிறுவு தத்தம் நாகரிகக்கூறுகளையே நிலை நாட்டுவதில் நாட்டங்கொண்டனர். எனவே ஆரியர் வருகைக்கு முற்பட்டிருந்த நாகரிகம் அவர்களின் நாகரிகத்திற்கு உட்படுத்தப்பட்டது எனலாம். ஆரியர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருந்தனர். எண்ணிக்கையில் மிகுந்திருந்த திராவிடர்களால் தங்களது நாகரிகம் சிதைந்துவிடுமோ என அஞ்சினர். அதற்காக தங்களுக்கு முற்பட்டிருந்த நாகரிகத்தை தங்கள் வயப்படுத்தியபோது தங்களது சிறப்பு நிலை குன்றாவண்ணம் பார்த்துக் கொண்டனர். வாழ்க்கைக் கோட்பாடுகளையும் நடத்தைகளையும் இறுகக் கட்டிக்காத்தனர். போர் முறைகளிலும், அரசாட்சி முறைகளிலும் ஆரிய இனமரபின் அடிப்படைகளை வைத்துக் கொண்டனர். பண்பாட்டின் பிறகூறுகளை திராவிடர்களுடனான நல்லுறவுக்காகவும், மனநிறைவுக்காகவும், தொடர்ச்சியாகவும் அப்படியே தக்க வைத்துக் கொண்டனர். இரண்டு இனமரபினரிடையே கூட்டு ஏற்பட்டாலும், தத்தமக்குரிய சிறப்புகளை விட்டுவிடாமல் வாழமுடியும் என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக தென்னகத்தில் ஆரியரும், திராவிடரும் வாழ்ந்தனர் என கிருஷ்ண ஐயர் விளக்கியுள்ளார். பல்லாயிரம் ஆண்டுகளாக இனமரபுத் தொடர்பு ஏற்பட்டு வந்துள்ள நிலையில் இவர்களைப் பிரித்துக் காட்ட இயலாது என்றும் அவர் கருதுகிறார்.

வி.ஆர். இராமச்சந்திர தீட்சிதர் கூறுவது போல (Origin and Spread of the Tamils) தமிழகத்தில் பல்வேறு இனமரபுகள் தோன்றுதொட்டு ஒன்றறக் கலந்துவிட்டன. அத்தோடு புதிய புதிய வாழ்க்கைத் தொழில்களும், பழக்க வழக்கங்களும் மக்களிடையே

வளர்ந்துவிட்டன. பண்பாட்டில் நாகரிகத்தில் — வளர்ச்சியும் முன்னேற்றமும் ஏற்பட்டு வந்துள்ளது. இருப்பினும் பல பண்டைய பழக்கவழக்கங்கள் சமூகத்தில் தொக்கி நிற்பதையும் காணலாம்.

## வரலாற்றுக்கு முந்தியகாலத் தமிழகம்

மனிதன் தன்னுடைய வாழ்க்கை பற்றியும், தான் புரிந்த சாதனைகளைப் பற்றியும் எழுத முற்பட்ட நாளிலிருந்து வரலாறு துவங்கிற்று. அப்படிப்பட்ட வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தின் மனிதனைப் பற்றியறிய பயனுள்ள சான்றுகள் மிகுதியாக இல்லையென்றே கூறலாம். மக்களினமரபுகள் கூட்டம் கூட்டமாக வாழ்ந்த முறை, மொழிவாரியாக வாழ்ந்த முறை, மக்கட் தொகுதிகளுக்குள் நிலவிய உறவு முறை, அகழ்வாய்வுகளில் கண்டெடுக்கப்பட்ட பானை ஓடுகள் மனித எலும்புகள் ஆகியவற்றைக் கொண்டு தமிழக மக்களின் வரலாற்றுக்கு முந்திய காலச் செய்திகளை ஓரளவு அறியலாம். இச்செய்திகள் இதே கால நிலைக்குரிய வேறு சில நிலப்பகுதிகளின் செய்திகளோடு ஒத்திருப்பதையும் காணலாம்.

தமிழ் நாட்டின் வரலாற்றுக்கு முந்திய காலத்தை அறிஞர்கள் நான்கு காலங்களாகப் பிரித்துள்ளனர். அவை : (1) பழங்கற்காலம், (2) புதிய கற்காலம், (3) தாமிர — கற்காலம், (4) ஆதி உலோகக்காலம் என்பனவாம். இவற்றுள் உட்பிரிவுகளும் உண்டு. இதுபற்றி தமிழக நாகரிகத்தில் ஒரு சிறப்பை நாம் காணமுடியும். அது என்னவெனில் இவ்வேறு பட்ட காலங்களுக்கிடையே தொடர்ந்து நாகரிகம் வளர்ச்சிபெற்று வந்திருப்பதேயாம். இக்கருத்தினை இராமச்சந்திர தீட்சிதர் ஏற்றுக் கொண்டதோடு, தென்னிந்திய கற்கால நாகரிகத்தை உருவாக்கியவர்களும் தமிழ் மக்களே என்கிறார். தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் பண்டைய தென்னிந்திய மனிதன் பயன்படுத்திய கற்கருவிகளின் அளவு, அமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் அவனது காலத்தைக் கணித்துள்ளனர். மூன்று இலட்சம் ஆண்டுகட்கு முன்பே இங்கு மனிதன் தோன்றி வாழ்ந்துள்ளான் என்பது அவர்கள் கருத்து.

தமிழ்நாட்டில் பழங்கற்கால மனிதர் வாழ்ந்த நிலையை அறிந்து கொள்ள அவர்கள் பயன்படுத்திய கற்கருவிகளே சான்றுகளாக உள்ளன. சென்னை மாநகரைச் சுற்றியுள்ள பகுதியில் பண்டைய மனிதர் கையாண்ட கைக்கோடாரிகளும், கத்தி போன்ற பிளப்பான் களும் கண்டெடுக்கப்பட்டன. இக்கருவிகளைச் செய்த திறனை “சென்னைத் தொழில் முறை” (Madras Industry) என்பர். ஐயப்பாட்டினைத் தரக்கூடிய தலையோடுகளையும், எலும்புகளைக் காட்டிலும் கற்கருவிகளே மானிடவியல் அறிஞர்கட்கும் (Anthropologists), உயிர்நூல் அறிஞர்கட்கும் (Biologists) ஆய்வு முடிவுகட்கு உறுதுணையாகவுள்ளன. தக்காண பீடபூமியின் தென்கோடியில் தான் மனிதன் முதன் முதல் அவதரித்தான் என பி.டி. சீனிவாச ஐயங்காரும் பிற சில அறிஞர்களும் கருதுகின்றனர்.

சென்னைத் தொழில் முறையில் கண்டெடுக்கப்பட்ட கற்கருவிகள் பல வட இந்தியாவில் கண்டெடுக்கப்பட்ட கைக்கோடரி தொழில்முறைக் (Chopper Industry) கருவிகளை ஒத்துள்ளன. வடமேற்குப் பகுதியில் இதனையே “சோஹன் தொழில் முறை”

(Sohan Industry) என்பர். செங்கற்பட்டு, வட ஆற்காடு பகுதிகளில் காணப்பட்ட பல கற்கருவிகள் படிகக்கல்லால் (quartx) ஆனவை. இதனால் தமிழகத்தின் பழங்கற்காலத்தில் வாழ்ந்த மனிதனை படிகக்கல் மனிதன் என்றும் அழைப்பர். பழங்கற்காலத்தை அடுத்து மனிதன் சிறுசிறு கற்களால் கருவிகளைச் செய்து கொண்ட காலம் ஒன்றுண்டு. அதனைச் சிறு கற்காலம் (Microlithic Age) என்பர். இதனைப் பிந்திய—கற்காலம் (Late Stone Age) என்றும் அழைப்பர்.

பிந்திய கற்காலத்தில் செய்யப்பட்ட கருவிகள் சிறு கற்களாலானவை. செப்பமுற்ற பழங்கற்காலக் கருவிகளைக் காட்டிலும் செப்பமுடையனவையாகக் காணப்பட்டன. இவை தூத்துக்குடி, திருநெல்வேலி பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டன. சிறு கற்காலத்தை கி.மு. 8000க்கும் கி.மு. 6000க்கும் இடைப்பட்டதாக நீலகண்ட சாஸ்திரி கருதுகிறார். இக்காலத்தையடுத்தே பானைகள் பயன்படுத்தப்பட்ட காலமும் வந்துற்றது. இப்படி ஒவ்வொரு காலத்திற்குமிடையே நாகரிகத் தொடர்ச்சியும், வளர்ச்சியும் இருப்பதைக் காணலாம்.

பண்டைத் தமிழரின் படிப்படியான வளர்ச்சியில் அடுத்த நிலையாகக் கணக்கிடப்படுவது பெருங்கற்காலமாகும். இக்காலத்தில் பெருங்கற்களால் நினைவுச் சின்னங்கள் எழுப்பப்பட்டன. இறந்தோரைப் புதைத்த இடத்தைச் சுற்றிலும், மேலேயும் பெருங்கற்களை வைத்துக் கல்லறை எழுப்பினர். சிலநேரம் தாழிகளில் அடக்கம் செய்தனர். இத்தாழிகளை திருநெல்வேலி செங்கற்பட்டு மாவட்டங்களில் காணலாம். இவை பெரும்பாலும் கருங்கல், கொண்ட மேட்டுப்பகுதிகளில், நீர்ப்பாசன ஏரிகளை யடுத்தும் விவசாயிகளின் குடியிருப்புக்களையடுத்தும் காணப்படுகின்றன. இக்காலத்தில் தான் நீர்ப்பாசன நெற்சாகுபடி முறை தென்னகத்தில் தொடங்கப்பட்டிருக்கவேண்டும் என்பது அறிஞர் கருத்து.

திருநெல்வேலிக்கருகில் உள்ள ஆதிச்சநல்லூர் என்னுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட முதுமக்கள் தாழிகள் சிறப்பானவை. இப்பகுதியில் மட்பாண்டங்கள் மிகுதியாகப்புழங்கப் பட்டதையும் அறிகிறோம். சில தாழிகள் மனித உடலை முழுமையாகக் கொள்ளக்கூடிய அளவில் மிகப்பெரியனவாக உள்ளன. சடலங்களை எரியூட்டியதாகத் தெரியவில்லை. இவ்வகைத் தாழிகளைப் பெருங்கற்காலத்தவையாகக் கொள்வதிற்கில்லை. ஏனெனில் தாழிகளைச் சுற்றி பெருங்கல் நினைவுச் சின்னங்கள் ஏதுமில்லை. பெருங்கற்கால மட்பாண்டங்களைவிட ஆதிச்சநல்லூர் மட்பாண்டங்கள் காலத்தால் முந்தியவையாக உள்ளன. ஆதிச்சநல்லூர் கண்டுபிடிப்புகளில் மற்றுமொரு சிறப்பு உள்ளது. தென்னிந்தியாவில் வேறெங்கும் காணாத வெண்கலப் பாத்திரங்களும், தங்கத்தாலான மணி மகுடங்களும் கிடைத்துள்ளன. திரிசூலம் அல்லது வேல் போன்ற இறைவனது ஆயுதமும், சேவல் பொறித்த கொடியும் கண்டெடுக்கப்பட்டுள்ளதை நோக்குகையில் ஆதிச்சநல்லூர்ப் பண்பாட்டில் வேலன் அல்லது முருகன் வழிபாடு வளர்ந்திருப்பதை உணர முடிகிறது. புதிய கற்கால நாகரிகத்திலிருந்து இரும்புக்கால பண்பாடு எவ்வாறு உருவெடுத்தது என்பது விளங்கவில்லை. இத்தொடர்புக்கான சான்றுகளும் இல்லை. மட்பாண்டங்களிலும், வெண்கலப்பாத்திரங்களிலும் அரிசியும், உமியும் காணப்பட்டதால் அன்றைய ஆதிச்சநல்லூர் மக்களுக்கு நெற்சாகுபடி முறை தெரிந்திருக்க வேண்டுமெனலாம்.

புதிய கற்கால மனிதன் படிப்படியாக வளர்ச்சியுற்று உன்னத கட்டத்தை அடைந்தான். வரலாற்றுக்கு முந்திய கால மனிதன் உலோகக் காலத்தில்தான், தன்னுள் பொதிந்து கிடந்த ஆற்றல்களை வெளிக்கொணர்ந்தான். இரும்பு, வெண்கலம், செம்பு ஆகியவற்றாலான புதிய கருவிகளைப் படைத்ததன் மூலம் தனது பேசும் திறனை வளர்த்து, நன்முறையில் அமைந்த வாழ்க்கையை மேற்கொண்டான்.

அடுத்து பண்டைய இலக்கியங்களின் வாயிலாக வரலாற்றுக்கு முந்திய காலத் தமிழகம் பற்றிய செய்திகளைக் காண்போம். விந்தியமலைத்தொடருக்கு தென்பாலுள்ள நிலப்பகுதிகளைப் பற்றிய குறிப்புகள் எதும் பழைய சமஸ்கிருத நூல்களிலோ அல்லது பாலிமொழி நூல்களிலோ இல்லை. சமஸ்கிருத இலக்கண ஆசிரியரான பாணினிக்கு தென்னகம் பற்றியே தெரியாது. கி.மு. நான்காம் நூற்றாண்டளவில் வாழ்ந்த சமஸ்கிருத இலக்கண வல்லுநரான காத்தியாயனர் தென்னிந்தியாவில் இருந்த சேர, சோழ, பாண்டிய அரசுகளைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். அர்த்தசாஸ்திரம் இயற்றிய கவுடில்யர் சந்திரகுப்த மௌரியர் காலத்தவராயின் தமிழகம்பற்றி அவர் தரும் குறிப்புகளே மிகப்பழமையானவை. எனினும் கவுடில்யர் காலம்பற்றி கருத்துவேறுபாடுள்ளது. ஆனால் மெகாஸ்தனீஸ் என்னும் கிரேக்க தூதுவர் சந்திரகுப்த மௌரியர் அவையில் இருந்தவர் என்பதில் கருத்து வேறுபாடில்லை. அவர் பாண்டிய நாட்டைப்பற்றியும் அவர்தம் ஆட்சிமுறை பற்றியும் குறிப்பிட்டுள்ளார். பாலிமொழி நூலிலும் பெரிப்ளுஸ் என்ற நூலிலும், தமிழகத்தின் கடல் கடந்த வாணிகம் பற்றியும் காவிரிப்பூம்பட்டினம் போன்ற கடற்கரைப் பட்டினங்கள் பற்றியும் செய்திகள் கூறப்பட்டுள்ளன.

தமிழகத்தின் மூவேந்தர்களைப் பற்றிய முதற் கல்வெட்டுக் குறிப்பு அசோக மன்னரது கல்வெட்டுக்களில் உள்ளன. அதில், சோழர்கள், பாண்டியர்கள், கேரளபுத்திரர்கள், சத்தியபுத்திரர்கள் தனித்தனியே ஆண்டதாகக் கூறப்பட்டுள்ளது. அசோகர் கலிங்க நாடு வரையே படையெடுத்து வந்தார். பின்னர் போரினைக் கைவிட்டார். தென்னகத்தின் மீது படையெடுத்து வராவிட்டாலும், தூதாண்மை உறவுகள் கொண்டிருப்பார். காரவேலர் அரசரது ஹதிகும்பா கல்வெட்டு தமிழக வேந்தர்களின் கூட்டணிப்படையை வென்று வாகைசூடியதாகக்கூறுகிறது. விலையுயர் நகைகளையும், முத்துக்களையும், யானைகளையும், குதிரைகளையும் காரவேலர் கவர்ந்து சென்றதாகவும் கூறுகின்றது.

சமஸ்கிருத காப்பியங்களான இராமாயணமும், மகாபாரதமும் தென்னக ஊர்கள் பற்றியும், மக்களது பண்பாடு, அரசியல் பற்றியும் பல செய்திகளைக் கூறுகின்றன. தென்னிந்தியாவின் புவியியல் அமைப்போடு இலங்கை பற்றியும் செய்திகள் உள்ளன. இராமாயணத்திற் கூறப்படும் பல செய்திகளைக் கதைகளென கொள்ளலாமே தவிர வரலாறாகக் கொள்ள முடியாது என நீலகண்ட சாஸ்திரி போன்றோர் கருதுகின்றனர். பாலிமொழியில் உள்ள இலங்கைத் தொன்மை வரலாறுகளான மஹாவம்சமும், தீபவம்சமும் தமிழகம் பற்றிய சில செய்திகளைத் தருகின்றன.

தமிழரின் ஆதிக்குடியிருப்பு யாது என்னும் வினாவிற்கு அறிஞர்கள் பல்வேறு விடைகளைத் தந்துள்ளனர். தமிழ்மொழிக்குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மொழி வேறொரு நாட்டில் பேசப்படுவதன் அடிப்படையில் தமிழர்கள் இங்கிருந்து அங்கு சென்றார்களா

அல்லது அங்கிருந்து இங்கு வந்தார்களா என்ற வாதம் எழலாம். பலுச்சிஸ்தானத்தில் திராவிட மொழியின் ஒரு திசை மொழியான பிராஹீ எனும் மொழி பேசப்படுகிறது. இதன் அடிப்படையில் இரண்டு கருத்துக்கள் எழுந்துள்ளன. ஒன்று இந்தியாவின் தென் பகுதியிலிருந்து திராவிட மொழி பேசும் மக்கள் வடபகுதிக்குச் சென்று, நிலவழியாக பலுசிஸ்தானம் சென்று தங்கிவிட்ட நிலையில் பிராஹீ மொழியைப் பேசிவரலாயினர். மற்றொன்று திராவிடமொழி பேசுவோர் புறத்தேயிருந்து இந்தியாவிற்குள் நுழைந்தபோது பலுசிஸ்தானத்தில் ஒரு பிரிவினர் தங்கிவிட்டனர் என்பதாம். இனமரபு ஆய்வின் அடிப்படையில் முன் எடுத்துக்கூறியபடி தமிழ்நாட்டின் ஆதிக்குடியினர் கிழக்கு நடுநிலக்கடல் பகுதியிலிருந்தே வந்தவர்கள் எனக் கொள்ளலாம்.

## ஆரியர் வருகை

வரலாற்றுக்கு முற்பட்ட பழங்காலத்தில் தமிழ்நாடு வடஇந்தியாவின் தொடர் பில்லாது தனித்து விளங்கியதாகவே தெரிகிறது. தமிழர் நாகரிகம் அல்லது திராவிடர் நாகரிகம் வெளிநாட்டவரின் செல்வாக்கு ஏதுமின்றி தற்சார்புடையதாகவே வளர்ச்சி யுற்றது. இருப்பினும் கடல் வழியாக மத்திய கிழக்கு நாடுகளுடன் தொன்று தொட்டு வணிகத் தொடர்புகள் இருந்து வந்துள்ளன. பண்டைய திராவிட சமுதாயம் ஆரிய சேர்க்கையற்றதாக ஆரம்பகால குலமரபு நாகரிகப்படியில் இருந்தது. இனமரபு அடிப்படையில் தமிழர் தனித்தனி சிறு குழுக்களாக வாழ்ந்தனர். இனமரபுச் சின்னங்களே வழிபாட்டுப் பொருள்களாகவும் வளர்ந்தன. அப்படிப்பட்ட தமிழ்ச் சமுதாயத்தின் மீது ஆரிய நாகரிகமும் பண்பாட்டுக் கூறுகளும் மேலடுக்கப்பட்டன.

ஆரியப் பண்பாடு என்பது யாது? ஆரியர் என்போர் யார்? எதற்காக அவர்கள் இந்தியாவிற்கும், பின்னர் தென்னகத்திற்கும் வந்தனர்? போன்ற வினாக்களுக்கு திட்டவட்டமான விடை கூற இயலாவிட்டாலும் பெரும்பாலான அறிஞர்களிடையே நிலவும் கருத்துக்களைப் பார்ப்போம். ஆரியர் என்போர் சமஸ்கிருதம், பாரசீகம், ஜெர்மானிய மொழி போன்ற ஏதேனும் ஓர் ஆரியமொழிக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மொழியைத் தாய் மொழியாகக் கொண்டு பேசுவோர். அவ்வாறே திராவிடர் என்போர் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற திராவிடமொழிக் குடும்பத்தைச் சார்ந்த ஒரு மொழியைத் தாய்மொழியாகக் கொண்டு பேசுவோர். மொழியின் அடிப்படையில் இனப்பாகுபாடு செய்வது தவறு என்பது முன்னர் விளக்கப்பட்டது. இருப்பினும் ஆரியர், திராவிடர் என்னும் சொற்கள் அம்மொழிகளைப் பேசுவோர் வளர்த்த நாகரிகத்தையும், பண்பாட்டையும் குறிக்கலாயின. ஒரே மொழியைப் பேசுவோர் பெரும்பாலும் ஒரே இடத்தில் வாழ்தல் இயல்பே. இதனால் அவர்தம் வாழ்க்கை முறைகளும் ஒன்றே போல் அமைகிறது. எனவே ஒரே மொழி பேசும் மக்களின் பண்பாடு ஒன்றாகிறது.

ஆரியர் பெரும்பாலும் மேய்ச்சல்நாடி இடத்துக்கு இடம் அலைந்து திரியும் வாழ்க்கை மரபுடைய இனத்தவராக இருந்தனர். இவர்கள் வெற்றி வீரர்களாக இந்தியாவிற்குள் நுழையவில்லை. அமைதியாக அடங்கிப்போகும் மக்களாக தங்களது வழிபாட்டு முறைகளோடும், உடைமைகளோடும், கால்நடைச் செல்வங்களோடும்

இந்தியாவிற்குள் வந்தனர். சிவந்தமேனியைப் பெற்றிருந்த அவர்கள் கருத்தமேனி கொண்டிருந்த பூர்வீகக் குடிகளை இகழ்ச்சியுடன் நோக்கினர். எனினும் அவர்களோடு கட்டுப்பாடின்றி கலந்து வாழ முற்பட்டனர். ஆரியர் மொழி பூர்வீகக்குடிகளது மொழியை புழக்கத்தினின்று நீக்கிற்று. பூர்வீகக்குடிகளது நாகரிகத்தின் ஒவ்வொரு கூற்றையும் ஆரிய நாகரிகம் தன்வழிக்கு மாற்றியமைத்தது. இத்தகைய தன்னியற்படுத்துதலை "ஆரியமயமாக்கல்" என்பர். இந்தியாவிற்குள் ஆரியர் நுழைந்த நாளிலிருந்து ஆரியமயமாக்கல் செயலுக்கு வந்தது. விந்திய மலைக்குத் தெற்கே கி.மு. 1000 ஆண்டளவில் இவ்விரிவாக்கம் துவங்கியது என்பர். ஆனால் தமிழகத்திற்குள் அவர்கள் கி.மு. 6-ஆம் நூற்றாண்டு வாக்கிலேயே நுழைந்திருக்கிறார்கள் எனலாம்.

மானிடவியல் வல்லுநர் அண்மையில் "ஆரியமயமாக்கல்" என்ற சொல்லுக்குப் பதிலாக, 'சமஸ்கிருதமயமாக்கல்' என்ற சொல்லை உருவாக்கியுள்ளனர். வரலாற் றாசிரியர்கள் இச்சொல்லைக் குறை கூறியுள்ளனர். ஏனென்றால் இச்சொல் சற்று வேறு பட்ட ஒரு செயலைக் குறிப்பதாகஉள்ளது. இந்துக்களில் தாழ்ந்த சாதியினராகக் கருதப் படுவோர் சமூகத்தில் தங்களை உயர்த்திக் கொள்ள உயர் சாதியினராகக் கருதப்பட்ட பிராமணர்களின் பழக்க வழக்கங்களையும், சமயக் கோட்பாடுகளையும், சடங்குகளையும் வாழ்க்கை முறைகளையும் கடைப்பிடித்து வரும் செயலை "சமஸ்கிருதமயமாக்கல்" என்பர். சமஸ்கிருத மொழியின் அடிப்படையில் ஏற்பட்ட பிராமண பழக்க வழக்கங்களை பிறசாதியினர் மேற்கொள்வதும், ஆரியர்கள் தென்னிந்தியப் பகுதிகளில் குடியேறியதும் வேறுபட்ட செய்கைகளாகும்.

ஆரியர்கள் இந்தியாவிற்குள் கி.மு. 2000 ஆண்டளவில் நுழைந்திருக்கக்கூடும். வடமேற்குப் பகுதியிலிருந்து தென்னிந்தியப் பகுதிகளுக்கு விந்திய மலைத்தொடரைக் கடந்து வந்திருக்க வேண்டும். வட இந்தியாவிற்குள் ஆரியர் வருகை பற்றியும், விரிவாக்கம் பற்றியும், அறிந்துகொள்ள போதிய சான்றுகள் உள்ளன. ஆனால் தமிழகத்திற்கும் அவர்தம் குடியேற்றம் பற்றி அறிய சான்றுகள் இல்லையெனலாம். இந்தியாவின் வடபகுதியிலிருந்து பலமுறை அலை அலையாக ஆரியர் தக்காணத்தையும் தமிழ்நாட்டையும் நோக்கி வந்து விந்தியத்தின் தென்பால் பல இடங்களில் குடியேறினர் என்றும், இக்குடியேற்ற முயற்சி விரிவடையவே வடஇந்திய தென்னிந்திய திராவிடருக்கும் பல வகையான உறவுகள் பல்கிப் பண்பாட்டு ஒற்றுமை பல நிலைகளில் தோன்றலாயிற்று என்றும் பேராசிரியர் ந. சுப்பிரமணியன் கருதுகிறார்.

ஆரிய இனத்திலிருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் தட்சிணபாதம் சென்று குடியேறினர் என இருக்குவேதத்தில் உள்ள ஒரு பதிகம் கூறுகிறது. விசுவாமித்திரருக்கு ஏற்பட்ட ஒரு சாபக்கேட்டால் அவரது ஐம்பது புதல்வர்கள் தக்காணத்தின் எல்லைப் பகுதிக்கு விரட்டப்பட்டனர் என்று அயித்திரேயே பிராமணம் கூறுகிறது. சமஸ்கிருத இலக்கண ஆசிரியர் பாணினிக்கு கலிங்க நாட்டைப் பற்றியும், கோதாவரி நதிக்கரையை யொட்டிய இடங்களைப் பற்றியும் தெரிந்திருந்தது. தமிழகத்தின் வடஎல்லைப் பகுதியில் ஆரிய குடியேற்றங்கள் ஏற்பட்டமைக்குச் சான்றுகள் உள்ளன. தமிழகத்திற்குள் குடியேறிய நாள் திட்டவட்டமாகத் தெரியவில்லை. கி.மு. நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த காத்யாயனருக்கு தமிழகத்தில் இருந்த சேர, சோழ, பாண்டிய அரசுகள் பற்றித்

தெரிந்திருந்தது. கங்கைச் சமவெளி மக்களுக்கு வாணிப நோக்கில் தென்னாட்டுத் தடங்கள் (trade routes) இமாலய நாடுகட்குச் செல்லும் தடங்களைக் காட்டிலும் முக்கியமானவை என கௌடில்யர் கூறியுள்ளார். தென்னகத்து வாணிபப் பொருட்களில் சங்கு, வைரம், முத்து, பொன் ஆகியவற்றால் செய்யப்பட்ட நகைகளும், மதுரையைச் சார்ந்த பகுதிகளில் நெய்யப்பட்ட பஞ்சுத்துணிகளும் பெயர் பெற்றவை என்றும் கௌடில்யர் குறிப்பிட்டுள்ளார்.

ஆரிய பழக்கவழக்கங்களைத் தென்னாட்டுக்குக் கொண்டு வந்தவர்களில் அகத்தியர் முதலானவராகக் கருதப்படுகிறார். ஆனால் அகத்தியரோ ஒரு வரலாற்றுப் புதிராக உள்ளார். அகத்தியரைத் தமிழ்மொழியின் தந்தையென்றும், அவர் பொதிகைமலைக்கு வந்து வாழ்ந்தாரென்றும், முதல் சங்கத்தில் வீற்றிருந்த ஒரு புலவர் என்றும் தமிழர் நம்புவர். தமிழ் மொழியையும், இலக்கணத்தையும் நெறிப்படுத்தியவர் இவரே என்பாரும் உளர். தொல்காப்பியர் அகத்தியரின் மாணவராகவும் கருதப்படுகிறார். இவ்விருவரும் ஒருவரையொருவர் கடிந்துகொண்டு பகைவர்களாக வாழ்ந்தனர் என்றும் சொல்வர். தொல்காப்பியர் தனது இலக்கண நூலான தொல்காப்பியத்தை அகத்தியரின் உதவியின்றி இயற்றியதாகவும் கூறுவர்.

அகத்தியர் தென்னகம் போந்தமை குறித்து ஒரு புராணக்கதையேயுள்ளது. அகத்தியர் இமயத்தில் வாழ்ந்து வந்ததாகவும், சிவ்பெருமான் மலைமகளை மணந்த காலையில் தேவர்கள் அனைவரின் வருகையால் இமயம் அமிழ்ந்து தென்னகம் உயர்ந்தது என்றும், புவிநிலையைச் சரிக்கட்டவே அகத்தியர் தென்னாடு சென்றார் என்றும் புராணங்கள் சொல்லுகின்றன. ஆரிய மரபினர் தென்னகத்தில் குடியேற அகத்தியர் ஆற்றிய தொண்டு பற்றியும் புராணக் கதையொன்றுள்ளது. வடஇந்தியாவிலிருந்து தென்னிந்தியாவுக்கு வரும் பாதையில் கடத்தற்கரிய மலைத்தொடராக விந்தியமலை நெடிது உயர்ந்திருந்ததாகவும், அது மேலும் உயர்ந்து தடையாக இல்லாதிருக்க அகத்தியர் தனது கவிதையாற்றலைப் பயன்படுத்தினார் என்றும், தமிழகம் சென்றடைந்து துறவிக் குடிலொன்றை அமைத்து வாழ்ந்தார் என்றும் சொல்வர். தமிழகம் வந்த அகத்தியர் காவிரியாற்றை உண்டாக்கியதாக ஒரு கதை கூறும். அகத்தியரைப் பற்றிய குறிப்புக்களும், அவரை வழிபாட்டிற்குரிய ஒரு கடவுளாகக் கொண்ட செய்திகளும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் உள்ளன. இவற்றையெல்லாம் நோக்கும்போது ஓர் இனமரபின் பண்பாடு நாகரிகம் நாடுவிட்டு நாடு பரவும் முயற்சியும், கடல்கடந்து செல்வதையும் அறிஞர் பெருமக்கள் அகத்தியராக உருவகித்தனரோ என எண்ணத்தோன்றுகிறது. ஆக அகத்தியர் வரலாறு பிரச்சனையாகவே உள்ளது.

விந்தியமலைக்கு வடபால் ஆரியவர்த்தம் என்றழைக்கப்படும் நிலப்பகுதியில் ஆரியர் எளிதில் குடியேறி தங்களுடைய நாகரிகத்தை மேம்படச் செய்ததுபோல தென்னிந்தியாவில் இவ்வினமரபினரால் செய்ய முடியவில்லை, கீழைக்கடலோரப் பகுதிகளிலும், தென்னகத்தின் தென்கோடிப் பகுதிகளிலும் குடியேறிய ஆரிய இனமரபினர் தங்களுடைய நாகரிகக் கூறுகளை ஏற்கனவே அங்கு உறைந்தோரிடையே புழக்கத்தில் கொண்டுவந்தனர். ஏற்கனவே தென்னாட்டில் வாழ்ந்தோர் தாங்கள் உருவாக்கியிருந்த நாகரிகத்தைத் தொடர்ந்து பின்பற்றியதோடு ஆரிய நாகரிகத்தின் சில கூறுகளை ஏற்றுக்

கொண்டனரே ஒழிய முற்றிலும் மாற்றிக் கொள்ளவில்லை. இதற்கு மாறாக தென்னகம் வந்து குடியேறியோர் இந்நிலப்பகுதியில் பேசப்பட்ட மொழியினைக் கற்றுக்கொண்ட தோடு தங்களது வாழ்க்கை முறைகளையும் மாற்றிக்கொண்டதாகவே தெரிகிறது.

ஆர்.ஜி. பந்தார்கர் அவர்களின் கருத்து ஒன்று ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும். தென்னகத்தில் பேசப்படும் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழி சமஸ்கிருத மொழியிலிருந்து பிறந்தவையல்ல என்றும், அவை வேறு குடும்பத்தைச் சார்ந்தவையென்றும், இதன் அடிப்படையில்தான் வடஇந்தியக் கலைகளும் தென்னிந்தியக் கலைகளும் மாறுபட்டுக் காணக்கிடக்கின்றன என்றும் அவர் கூறியுள்ளார். வடஇந்தியாவில் ஆரியர் குடிபுகுந்து வாழத்துவங்கிய முறையினின்று தென்னகம் குடியேறி வாழமுற்பட்ட முறை மாறுபட்டிருப்பதற்குக் காரணம் தென்னகத்தில் ஏற்கனவே சீரிய அரசாட்சிமுறைகளும், நாகரிக முதிர்ச்சியடைந்த மக்களும் இருந்ததே எனவும் பந்தார்கர் கருதுகிறார். ஆரியக் கூட்டத்தினரை அன்போடு வரவேற்ற மக்கள், அவர் தம் வாழ்க்கைக்கான வசதிகளையும் செய்து தந்தனர். இவ்வாறு தென்னகம் வந்தடைந்த ஆரிய இனமரபினரில் சமணர், பௌத்தர், பிராமணர் மற்றும் பலரும் அடங்குவர். இவர்களது குடியேற்றங்களுக்கு வரி விலக்களிக்கப்பட்ட நிலங்கள் நன்கொடையாகவும் வழங்கப்பட்டன. பிராமணர்களது குடியேற்றங்கள் அக்கரகாரம், சதுர்வேதிமங்கலம் என்று அழைக்கப்பட்டன.

ஆரிய இனமரபினர் எவ்வழியே தென்னாடு வந்துற்றனர் என்பது குறித்து அறிஞர்களிடையே பல்வேறு கருத்துக்கள் உள்ளன. கீழைக்கடலோரப் பகுதி வழியாக இவர்களுடைய குடிப்பெயர்ச்சி ஏற்பட்டிருக்கவேண்டுமென்பர் ஒரு சாரார். ஆரியர் விரிவாக்கம் வடமேற்குப் பகுதியிலிருந்து கிழக்கேயும் தெற்கேயும் இருபிரிவாக ஏற்பட்டிருக்குமென நீலகண்ட சாஸ்திரி கருதுகிறார். விந்திய மலையைத் தாண்டியதும் விதர்பா நாட்டில் குடியிருப்பு ஒன்று முதலாவதாகத் தோன்றியிருக்கவேண்டும். மேலை திசை வழியாக இராமன் நாடோடியாய்த் திரிந்தபோது இன்றைய நாஸிக் நகர் அருகாமையிலுள்ள பஞ்சவடி எனும் ஊருக்குச் சென்றதாக இராமாயணம் கூறுகிறது. மேலைக் கடலோரம் வழியே மைசூர், கோயமுத்தூர், தமிழ்நாட்டின் உட்பகுதிகட்கு ஆரியர் வந்திருப்பர் என சில அறிஞர்கள் கருதுகின்றனர்.

தென்னாட்டில் ஆரியர்தம் விரிவாக்கம் எப்பொழுது ஏற்பட்டிருக்கும் என்பது குறித்தும் வரலாற்றாசிரியர்களிடையே கருத்து வேற்றுமை உள்ளது. இவ்விரிவாக்கம் மிக மெதுவாக படிப்படியாகவே பல நூற்றாண்டுகளினூடே ஏற்பட்டிருக்க வேண்டும். கி.மு. 1000 ஆண்டளவில் ஆரிய நாகரிகம் தென்னாட்டில் பரவியிருக்கக்கூடும் என நீலகண்ட சாஸ்திரி கருதுகிறார். P. பர்ரோ போன்றவர்கள் பல்வேறு பகுதிகளில் அகழ் ஆய்வு செய்த பயனால் நமக்கு கிடைக்கும் நூற்றாண்டு கி.மு. 6ஆம் நூற்றாண்டே என்கின்றனர். ஆனால் திட்டவட்டமான ஆண்டு இதுதான் என சொல்வதற்கில்லை. அயித்திரேய பிராமணத்தில் கூறியிருப்பதன் அடிப்படையில் ஆரிய குடியேற்றங்கள் விசுவாமித்திரர், அவர்தம் வழித் தோன்றல்கள் காலத்தில் ஏற்பட்டிருக்க வேண்டுமென பந்தார்கர் கருதுகிறார். ஆனால் பாணினியின் புவியியல் குறிப்புகளை நோக்குமிடத்து அவர்காலத்தில் விந்தியமலைக்கு வடபால் உள்ள பகுதி மட்டுமே தெரிந்திருந்ததாகக் கருத வேண்டியுள்ளது. எனவே அவர் காலத்தில் ஆரியர் வடபகுதியில் மட்டுமே இருந்திருப்பர் எனலாம்.

பாணினிக்குப்பின் வந்துற்ற சமஸ்கிருத இலக்கண ஆசிரியரான காத்யாயனருக்கு தமிழக மூவேந்தர்களைப் பற்றித் தெரிந்திருந்தது. எனவே காத்யாயனர் காலத்தில் தமிழகத்திற்குள் ஆரியர்கள் வந்திருப்பர். பதஞ்சலி காலத்தில் தமிழகம் பற்றிய பல நுணுக்கமான செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. இதனடிப்படையில் ஆரியவிரிவாக்கம் சீராகத் தொடர்ந்திருக்கும் எனக் கொள்ளலாம். பாணினியின் காலம் கி.மு. ஏழாம் நூற்றாண்டென்றும், காத்யாயனரின் காலம் கி.மு. நான்காம் நூற்றாண்டென்றும் ஆர்.ஜி. பந்தார்கர் கணக்கிட்டுள்ளார். கி.மு. ஏழாம் நூற்றாண்டளவில் ஆரியவிரிவாக்கம் ஏற்பட்டிருக்காது. கி.மு. நான்காம் நூற்றாண்டையொட்டியே நிகழ்ந்திருக்க வேண்டும் என்றும் அவர் கூறுகிறார். கிழக்கு வழியில் ஆரியமரபினர் கலிங்க நாட்டின் வழியாகவும், மேற்கு வழியில் மகாராஷ்டிரம் வழியாகவும் வந்திருப்பர் என்றும், கி.மு. 350-ஆம் ஆண்டளவில் மதுரை வரை சென்று குடியேறினர் என்றும் பந்தார்கர் குறிப்பிட்டுள்ளார்.

ஆரிய இனமரபினரது விரிவாக்கம் கி.மு. 1000 ஆண்டளவில் துவங்கியிருக்கும் என்றும், அது தென்னாடு நோக்கி அமைதியான முறையில் ஒழுங்காக நிகழ்ந்திருக்கும் என்றும், மௌரியப் பேரரசு நிறுவப்படுவதற்கு முன் அவ்விரிவாக்கம் முற்றுப் பெற்றிருக்கக்கூடும் என்றும் நீலகண்ட சாஸ்திரி கருதுகிறார். கி.மு. 1000 ஆண்டில் துவங்கிய குடியேற்ற முயற்சிகள் முதலாவதாக தக்காணப் பகுதியில் மேற்கொள்ளப் பட்டிருக்கவேண்டும் என்றும், தமிழகத்துக்கு கி.மு. ஏழாம் நூற்றாண்டளவில் வந்து குடியேறியிருக்ககூடும் என்றும் சாஸ்திரி எண்ணுகிறார்.

தென்னகம் நோக்கி ஆரியர் குடியேறக் காரணங்கள் யாவை என்ற வினாவுக்கு வரலாற்றாசிரியர்கள் பல விடைகளைத் தந்துள்ளனர். ஒருசில அடிப்படைக் காரணங்களாலேயே வந்தனர் என்கிறார் பேராசிரியர் சுப்பிரமணியன். அவை பின் வருமாறு : 1) வடஇந்தியாவின் அரசியல் நிலை டேரியஸ் முதல் அலெக்ஸாண்டர் ஈறாகமேற்கொண்ட படையெடுப்புக்களால் சீர்குலைந்தது. மகதப்பேரரசும் சந்திரகுப்தமௌரியர் காலத்தில் சீர்கேடான நிலையை எய்திற்று. இம்மாற்றங்களால் விந்திய மலைக்குத் தென்பாலுள்ள பிரதேசங்கள் நாடுகட்கு இடம்பெயர்ந்து குடியேற ஆரியர் முடிவு செய்திருக்கலாம். 2) சமணர்களும், பௌத்தர்களும், பிராமணர்களும் தத்தம் சமயங்களையும், தத்துவங்களையும் பிற நாடுகளில் பரப்பும் நோக்குடன் குடிபெயர்ந்திருக்கலாம். 3) சந்திரகுப்த மௌரியர் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட வற்கடம் (பஞ்சம்) போன்று பல நேரங்களில் வறட்சி ஏற்பட்டமையாலும், கங்கை நதிப் பள்ளத்தாக்கில் மக்கட்தொகைப் பெருக்கம் ஏற்பட்டமையாலும் அங்குறைந்தோர் நல்வாழ்வு காண வேறிடங்களுக்குக் குடிபெயர்ந்திருக்கலாம். 4) புதிய நாடுகளைக் காண வேண்டும் என்ற துணிகரச்செயல், அவா ஆகியவற்றாலும் ஆரியப் பெருக்கம் ஏற்பட்டிருக்கலாம்.

தமிழகம் வந்து குடியேறிய ஆரிய இனமரபினரது நாகரிக — பண்பாட்டுக்கூறுகள் நாளடைவில் ஏற்கனவே அங்கிருந்த திராவிட நாகரிகப்பண்பாட்டுக் கூறுகளோடு இணைந்து ஒன்றாயின. இவ்வொன்றிப்பு என்று துவங்கிற்கு என்று முற்றுப்பெற்றது என திட்டவட்டமாகச் சொல்ல முடியாது. ஆரியர்களை அன்போடு வரவேற்றமையும், அவர்தம் அறக்கோட்பாடுகளை ஏற்றுக்கொண்டமையும் சங்க இலக்கியங்கள் வாயிலாகத்

தெளிவாக அறியமுடிகின்றதென நீலகண்ட சாஸ்திரி கூறுகிறார். இரு மக்கட் கூட்டத்தினரிடையேயும் ஓரளவு நெருக்கமான தொடர்புகள் ஏற்பட்ட பின்னரே சங்க இலக்கியங்கள் இயற்றப்பட்டிருக்க வேண்டுமென்றும் அவர் கருதுகிறார். மொழியினடிப்படையில் ஆரிய மொழியில் கூறுகள் தமிழ் உட்பட திராவிட மொழியியல் கூறுகள் மீது அதிகப்படியான பிணைப்புக்களை அல்லது தாக்க விளைவுகளை ஏற்படுத்தவில்லை என்றே சொல்லலாம். அதேபோன்று தமிழ்ச் சமய, வழிபாட்டு, தத்துவமுறைகளிலும் மிகுதியான மாற்றங்கள் ஏற்படவில்லை என்றே கருதலாம்.

பேராசிரியர் சுப்பிரமணியன் கூறுவதுபோல் தமிழகத்தில் குடியேறிய ஆரிய இனமரபினர் யாவருமே ஆரியமொழி பேசுவதைக் கைவிட்டு வந்த இடத்தில் கண்ட வட்டார மொழியான தமிழைத் தாய்மொழியாகக் கொண்டனர். யாகம் செய்து உயிர்ப்பலியிட்டு வழிபாட்டு முறையைத் தழுவினர். ஆரியருடைய வருணாசிரம சமூகப் பாகுபாட்டு முறை அவர்தம் வருகைக்கு முன்பே தமிழகத்தில் நிலவிய ஐந்நில குடிப்பாகுபாட்டோடு இணைந்து பிற்கால சாதி வழி சமுதாயத்திற்கு அடிகோலிற்று. இதனால் ஒரு குடிமணம், தீட்டு, தீண்டாமை முதலியவையும் ஒன்றன்பின் ஒன்றாக வளர்ந்தன என்றும் சுப்பிரமணியன் கருதுகிறார்.

ஆரியர் பெருக்கம் கால அடிப்படையில் தனித்தனி அலையாக ஏற்பட்டதென்றால் இரண்டாவது மூன்றாவது அலைகள் குப்த பேரரசுக் காலத்தில் ஏற்பட்டிருக்கவேண்டும். கி.பி. நான்காம் நூற்றாண்டளவில் இனப்பெருக்கம் உச்சநிலையை எட்டிற்று எனக் கருத வேண்டியுள்ளது. இவர்களது குடியேற்ற செயல் விளைவாலேயே ஆரம்பகால பல்லவர்களின் பட்டயங்கள் பிராகிருத, சமஸ்கிருத மொழிகளில் வெளியிடப்பட்டமை தெளிவாகும். தமிழக அரசர்களும், ஆரிய பழக்க வழக்கங்களை மேற்கொள்ளலாயினர். ஊர்களின் பெயர்களும், மக்கட் பெயர்களும் சமஸ்கிருத மொழிப் பெயர்களைப் பெறலாயின. இருப்பினும் ஆரிய — திராவிடச் சேர்க்கை என்றுமே முழுமையடையவில்லை. அதே நேரத்தில் முரண்படவுமில்லை. இதேபோல்தான் பிற்காலத்தே முஸ்லீம்களும், ஐரோப்பியர்களும் தமிழகம் வந்து குடியேறிய நிலையில் தமிழ்ச் சமுதாயம் தனக்கேயுரிய நாகரிக பண்பாட்டுக் கூறுகளைச் சற்றும் கைவிடாது தற்காத்து நிற்பது கண்கூடாகும்.

### பயிற்சி வினாக்கள்

1) தமிழக வரலாற்றில் நிலவியல், இடவியல் ஆகியவற்றின் செல்வாக்கைச் சுருக்கமாக எழுதுக.

2) வரலாற்றுக்கு முந்திய தமிழக வரலாற்றைச் சுருக்கி வரைக.

3) தமிழகத்திற்கு ஆரியர் வருகை பற்றி கட்டுரை எழுதுக.

# பாடம் – 3 சங்ககாலம் – சேரர் – சோழர்கள் – பாண்டியர்கள்

சங்ககாலம் தமிழ் நாட்டு வரலாற்றில் மிக முதன்மை வாய்ந்ததொரு காலமாகும். சங்ககாலத்தில்தான் தமிழருடைய வரலாறு சீராகத் தொடங்குகிறது எனலாம். அந்தக் காலத்தை வரையறுப்பதில் வரலாற்றாசிரியர்களிடையேயும் அறிஞர்களிடையேயும் மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன. அச்சங்க கால இலக்கியங்களே அக்கால வரலாற்றுக்குத் துணையாகஅமைகின்றனவேயன்றி வேறு ஏற்புடைய சான்றுக்ள் இல்லை. இரண்டொரு மேலை நாட்டு வணிகர் விட்டுச் சென்ற சொற்களும், குறிப்புக்களும், சில பிராமி எழுத்துக் கல்வெட்டுகளும் ஓரளவு உதவுகின்றன.

சங்க இலக்கியங்கள் ஏராளமான வரலாற்றுச் செய்திகளை நமக்குத் தந்தவண்ணமிருக்கின்றன. அன்று நிலவிய சமுதாய, அரசியல் நிலைகளைப் பற்றித் தெளிவான கருத்துக்களை உள்ளடக்கியுள்ளன. இவற்றை ஆய்வாளர்கள் வெளியிட்டவண்ணமுள்ளனர். இருப்பினும் சங்கத்தின் அல்லது சங்கங்களின் தோற்றம் பற்றியும் காலம் பற்றியும், இருப்பிடம் பற்றியும் பல்வேறு கருத்துக்கள் நிலவி வருகின்றன. துறவியர் அமைப்பே சமஸ்கிருதத்தில் சங்கம் எனப்பட்டது. சமண, பௌத்த சமயங்களும், அவற்றின் தத்துவங்களும், அவற்றைப் பரப்ப வந்த துறவியர்களுமே சங்கம் என்ற அமைப்பையும், சொல்லாட்சியையும் தமிழகத்திற்குக் கொண்டுவந்திருப்பர்.

மதுரையில் கி.பி. 470-ல், சமண முனிவரான வச்சிரநந்தி என்பாரால் நிறுவப்பட்ட சமண சமயக் கழகமான 'திராவிட சங்கமே' தமிழ்ச்சங்கங்கட்கு முன்னோடியாக அமைந்தது என பி.டி. சீனிவாச ஐயங்கார் வெளியிட்டுள்ள கருத்தை ஏற்பதற்கில்லை. காலக்கணக்கீட்டில் பாண்டிய மன்னர்களால் ஆதரிக்கப்பட்ட தமிழ்ச்சங்கம் வேறு; காலத்தால் முந்தியது. சமண முனிவர் ஏற்படுத்திய திராவிடசங்கம் வேறு; காலத்தால் பிந்தியது என்று கொள்ளுதலே முறையாகும். தமிழ்ச்சங்கம் என்ற அமைப்பை தொன்றுதொட்டு பாண்டிய மன்னர்கள் உருவாக்கி, பேணி வளர்த்தனர் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்படுகிறது. மூன்று சங்கங்கள் இருந்தமை குறித்தும் அவை இருந்த ஆண்டுகள் குறித்தும் கருத்து வேற்றுமைகள் உள்ளன.

## சங்கம் பற்றிய இலக்கியச் சான்றுகள்

இறையனார் அகப்பொருள் உரையில் சங்கங்களின் தோற்றம், வளர்ச்சி, வீழ்ச்சி முதலியன சுருக்கமாகவும், தெளிவாகவும் கூறப்பட்டுள்ளது. ஆனால் இவற்றில் வரலாற்றாளர்கள் நம்ப முடியாத பல செய்திகளும் கலந்திருப்பதால் இவ்வுரையை ஒரு வரலாற்றுச் சான்றாக ஏற்க அறிஞர் தயங்குகின்றனர். எடுத்துக்காட்டாக முச்சங்கங்கள் 9950 ஆண்டுகள் சிறந்து விளங்கின என்றும், 8598 புலவர்கள் இவற்றில் இருந்தனர் என்றும்; இவை 197 அரசர்களால் ஆதரிக்கப்பட்டன என்றும் கூறப்பட்டுள்ளது.

சங்க இலக்கியங்களுக்கு முற்பட்டதாகக் கருதப்படும் இலக்கணநூலான் தொல்காப்பியத்துக்கு பாயிரம் யாத்த பனம்பரனர் அவையம் ஒன்றைக் குறிப்பிட்டுள்ளார். தொல்காப்பியர் தொல்காப்பியத்தை இயற்றியதும் நிலந்தருதிருவிற் பாண்டியனின்

அவைக்களத்தில், அதங்கோட்டாசான் தலைமையில் அரங்கேற்றம் செய்ததாகப் பாயிரம கூறுகிறது. இதில் சங்கம் என்ற சொல் குறிப்பிடபடவில்லை, அதற்கு ஈடாக அவையம் என்ற சொல் வந்துள்ளது.

மாங்குடி மருதனார் தான் இயற்றிய மதுரைக் காஞ்சியில் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனின் பண்புகளைச் கூறுமிடத்து பெயர்பெற்ற புலவர்கள் கொண்ட புணர்க்கூட்டு அவையைக் கூட்டிய பெருமையுடையவனான நிலந்தருதிருவிற் பாண்டியனின் வழித்தோன்றல் என்கிறார். புலவர் சபையைக் குறிக்க சங்கம், அவையம் என்ற சொற்களுக்குப் பதிலாகப் புணர்கூட்டு என்ற சொல் கையாளப்பட்டிருப்பது போற்றுதற்குரியதாகும். கலித்தொகை 35-ம் செய்யுளில்

'நிலனாவில் திரிதருஉம் நீண்மாடக் கூடலார்
புலனாவில் பிறந்தசொற் புதிதுண்ணும் பொழுதன்றோ'

என்ற வரிகளிலிருந்து மதுரையில் கூடியிருந்த சான்றோரையும், அவர்தம் அறிவுடைய நாவன்மையும் அவர் புதிதுபுதிதாகப் பாடும் செய்யுட்திறத்தையும் அறிகிறோம். மற்றொரு கலித்தொகைச் செய்யுளில் (68) மதுரையை ஆண்ட பாண்டிய மன்னனுக்கு அமைச்சனைப் போல நூல் வல்ல ஆசிரியர் பலர் மதுரைக்கண் இருந்தனர் என்றும், அவரது செவிசெய்யாகவும், சான்றோர் செய்யுட்கள் நீராகவும், அவர் தம் நா ஏராகவும் கொண்டு புலமுழுதுண்ணும் புலவரென்றும், அவர் புதிய புதிய கவிகளை மிகுதியாக உண்டாக்குபவரென்றும் கூறப்பட்டுள்ளது.

"தமிழ் நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரை"

எனவரும் சிறுபாணாற்றுப்படை அடிகள் மதுரையில் தமிழ்ப் புலவர்கள் வீற்றிருந்த செய்தியைக் குறித்தல் காணலாம்.

புறநானூற்றுப்பாடல் ஒன்றில் பாண்டியமன்னன் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனைச் சார்ந்து புலவர் பலர் இருந்தனர் என்பதும், அவர்கட்கு மாங்குடி மருதன் என்பவர் தலைவராய் விளங்கினார் என்பதும் கூறப்பட்டுள்ளது. இதனின்று பாண்டியன் அவையில் புலவர் பலர் ஒரு புலவர் பெருமான் தலைமையில் ஒத்து வாழ்ந்தனர் என்பதை உணரலாம். பொதியில் தென்றலைவிட மதுரைத் தென்றலுக்குள்ள சிறப்பு, புலவர் செந்நாப் பொருந்திய ஏற்றம் என்பது சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகள் கருத்தாகும். இவ்வாறு மதுரையில் தமிழ் வளர்த்த சிறப்பை நோக்கியே, மணிமேகலை ஆசிரியரும் 'தென்தமிழ் மதுரை' என்றனர். மதுரைக்கும் தமிழுக்கும் தொடர்பான குறிப்பு ஏதும் இல்லாமை நோக்கத்தக்கதாகும். எனவே, மதுரையில் பாண்டியரால் சங்கம் நிறுவப் பெற்றிருந்தது. அதனில் புலவர் தமிழ் வளர்த்தனர் என்பது நன்கு துணியப்படும்.

### சங்கம் இருந்தமைக்குப் பிற்காலச் சான்றுகள்

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருநாவுக்கரசர் மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் தருமி பொற்கிழி பெற்ற செய்தியைத் தேவாரப் பதிகமொன்றில் குறித்துள்ளார். கி.பி. எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆண்டாள் "சங்கத்தமிழ்" என்று திருப்பாவையில் (பாசுரம் 30) கூறுகிறார். அதே நூற்றாண்டில் வாழ்ந்த திருமங்கையாழ்வார் "சங்க முத்தமிழ்" என்று பெரிய திருமொழியிற் பாடியுள்ளார். கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மாணிக்கவாசகர் மதுரையில் புலவர் தமிழாய்ந்த திறத்தைத் திருக்கோவையாரிற் குறித்துள்ளார். பாண்டியநாட்டில் வாழ்ந்த பரஞ்சோதி முனிவர் பாடிய திருவிளையாடற் புராணத்திலும் மதுரைத் தமிழ்ச்சங்கத்தைப் பற்றிய பல செய்திகள் காணப்படுகின்றன. இங்ஙனம் கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் ஒவ்வொரு நூற்றாண்டிலும் வாழ்ந்து மறைந்த புலவர்கள் மதுரையில் தமிழ்ச்சங்கம் ஒன்று இருந்தது என்பதைத் தம் பாக்களில் குறித்துள்ளமை சிந்திக்கத்தகும்.

### சங்கம் மூன்றா?

இறையனார் களவியல் உரையில் முச்சங்கங்களைப் பற்றிச் சில செய்திகள் தரப்பட்டுள்ளன. இன்றுள்ள கன்னியாகுமரிக்குத் தெற்கே ஒரு காலத்தில் பாண்டியநாடு விரிவடைந்திருந்தது. அங்கு பாண்டியனின் தலைநகரான தென்மதுரையில் மன்னவன் ஆதரவில் தமிழ் வளர்க்கச் சங்கம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டு, அதனில் சிவன், முருகன், அகத்தியர் உள்ளிட்ட புலவர் பலர் தமிழாய்ந்தனர். அத்தலைநகரமும் அந்நிலப்பகுதியும் கடல் கொந்தளிப்புக்கு இரையாயின. பின்பு கபாடபுரத்தில் இரண்டாம் தமிழ்ச்சங்கம் அமைக்கப்பட்டது. இச்சங்கம் அகத்தியர், தொல்காப்பியர், மோசியார், கீரந்தையார், வெள்ளூர்காப்பியன் முதலானோரைக் கொண்டிருந்தது. வெண்டேர்ச்செழியனில் தொடங்கி முடத்திருமாறன் வரை பல பாண்டியமன்னர்கள் இரண்டாம் சங்கத்தின் புலவலர்களாக விளங்கினர். பின்பு கபாடபுரமும் கடலுள் ஆழ்ந்தது. அதன் பின்பு இன்றுள்ள மதுரையில் ஒரு சங்கம் ஏற்பட்டது. கடைச்சங்கம் எனப்படும் மூன்றாம் சங்கத்தின் தலைவராக விளங்கியவர் நக்கீரர். இதில், சீத்தலைச்சாத்தனார், கல்லாடனார், கபிலர், பரணர், மாங்குடி மருதனார் ஆசிய பல புலவர்கள்இருந்தனர். முடத்திருமாறன் முதல் உக்கிரபாண்டியன் வரை பல பாண்டியமன்னர்கள் சங்கத்தை ஆதரித்தனர். இங்ஙனம் மூன்று சங்கங்கள் இருந்தன என்பதற்கு இறையனார் களவியல் உரைக்கூற்றைத் தவிர வேறு சான்றில்லை. ஆயின், மதுரையில் தமிழ்ச்சங்கம் இருந்தது என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. இவற்றை முன்பு பார்த்தோம்.

இறையனார் களவியல் உரைச் செய்திகள் யாவும் கற்பனை என்று தள்ளிவிட முடியாது. ஏனெனில் கடற்கோள்களால் தென்னக நிலப்பரப்புகள் மூழ்கியிருக்கும் என்பதைப் பிறநாட்டு நிலநூல் அறிஞரும், ஈழத்து பௌத்த சமய வரலாற்றாளரும் ஒப்புக்கொண்டுள்ளனர். எனவே அடிப்படையாகச் சில உண்மைகள் இருந்திருக்க வேண்டும். தமிழக மன்னர்களுள் குறிப்பாக பாண்டியர்கள் தமிழை வளர்ப்பதிலே தனியார்வம் காட்டினர். தமது அரசவையிலே பழைய நூல்களைக் காக்கவும், புதிய நூல்களை இயற்றவும் ஊக்கமளித்தனர். முச்சங்கங்கள் வெவ்வேறு பாண்டியர்

தலைநகரங்களில் வெவ்வேறு காலங்களில் விளங்கின. இன்று சங்க நூல்களாகக் கருதப்படும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, தொல்காப்பியம் ஆகியவற்றை சங்கப் புலவர்களே படைத்திருப்பர் என்பதில் ஐயமில்லை.

## சங்க இலக்கியங்களின் காலம்

நமக்குக் கிடைத்துள்ள சங்க இலக்கிய நூல்களின் கால ஆய்வு கடந்த ஒரு நூற்றாண்டுக்கு மேலாக நடைபெற்று வருகின்றது. சில அறிஞர்கள் சங்க காலத்திற்கு மிகப்பெரும் பழமையைக் கூறுவதும், வேறு சிலர் நகைகிடனாகும் வகையில் பிற்காலம் கற்பிப்பதும் மரபாயுள்ளது. மிகப் பழமை கற்பிப்பார் ஒரு நாகரிகத்தின் பழமையே அதன் பெருமை என்று எண்ணுபவர்கள். இக் கோட்பாடு தவறுடைத்து என்பது சொல்லாமலே விளங்கும். இவர்கள் இறையனார் அகப்பொருள் உரையில் காணப்படும் கால வரையறைகளை ஆராயாது மேற்கொள்வதோடு லெமூரியா அல்லது கோண்டுவானா கண்டம் பற்றிய செய்திகளைப் பிணைத்து பழமை பாராட்டுவது வரலாற்றுக்கொவ்வாதது. மிகப் பிற்காலம் கற்பிப்பார், பண்டையோர் கூற்று யாவற்றையும் ஒதுக்கி விடுதல் தற்கால திறனாய்வின் சிறப்பான தன்மை எனக் கருதுவர். இவையெல்லாம் உண்மையை அறியப்படாத ஆய்வுகளாகும். எனவே நடுவுநிலைமையோடு சங்க இலக்கியத்திற்குக் காலவரையறை காண முற்படுவோம்.

## கி.பி. ஏழாம், எட்டாம் நூற்றாண்டு

சிலப்பதிகாரத்தில் கட்டுரைக் காதையில் வானாராய்ச்சி சார்ந்த குறிப்பொன்றுள்ளது. அதனடிப்படையில் வான நூல் அறிஞரான எல்.டி. சுவாமிக்கண்ணுப் பிள்ளை கி.பி. எட்டாம் நூற்றாண்டினைக் கடைச்சங்க கால எல்லையாகக் கொண்டார். கண்ணகி மதுரையை எரியூட்டியது கி. பி. 756 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 23 ஆம் நாள் என்றும், அதனால் கடைச் சங்க காலமும் அதுவேதான் என்று அவர் கூறுகிறார். இம் முடிவினைக் கூறும் அவரே சிலம்பின் உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் கூறும் வானியற் குறிப்புகள் தவறானவை என்கிறார். அப்படியிருக்கும் போது அந்தத் தவறான குறிப்புகளைக் கொண்டு கூறும் முடிவினை எப்படி ஏற்பது. கே. ஜி. சேஷய்யர், திருவாரூர் எஸ். சோமசுந்தர தேசிகர், பி.டி. சீனிவாச அய்யங்கார் முதலானவர்களும் சுவாமிக்கண்ணுவின் கருத்தை மறுத்துள்ளனர்.

சங்க நூல்கள் கி.பி. ஏழாம், எட்டாம் நூற்றாண்டுகட்கு முற்பட்டவையாக இருத்தல் வேண்டுமென்ற கருத்துக்கு இந்நூல்களின் கருத்து, நடை, கற்பனை, சொல்லாட்சி முதலானவையும் துணை நிற்கின்றன. காஞ்சியில் பல்லவர் ஆட்சி தொடங்கிய காலம் கி.பி. நான்காம் நூற்றாண்டாகும். தென்னாட்டு வரலாற்றில் தமிழக அரசியல் சீர்குலைவிற்குக் காரணமாக இருந்த களப்பிரர்கள் கி.பி. நான்கு, ஐந்தாம் நூற்றாண்டுகளில் தமிழகத்தில் இருந்தாரெனத் தெரிகிறது. இக்களப்பிரர்களைப் பற்றியோ, பல்லவர்களைப் பற்றியோ சங்க நூல்களில் ஒன்றுமே சொல்லப்படவில்லை. எனவே இவையனைத்தும் கி.பி. நான்காம் நூற்றாண்டுக்கு முற்பட்டன எனத் துணிவாகக் கொள்ளலாம.

தமிழ் இலக்கியங்களில் சமய கால இலக்கியம் கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்குப் பின்னர் என்பது ஆழ்வார்கள், நாயன்மார்களின் கால ஆராய்ச்சிகளால் உறுதி செய்யப்பட்டுள்ளது. இப்பக்தி இலக்கியங்களில் சமயப்போராட்டங்களும், பூசல்களும், வசைகளும் மிகுதியாகக் காணப்படுகின்றன. ஆனால் சங்கப் பாடல்களில் இத்தகைய பூசல்களின்றி எல்லாச் சமயங்களும் சமமாக்க் காணப்படுவதை நோக்கும்போது காலத்தால் இவை பக்தி இலக்கிய காலத்திற்கு முன்பாகவே இயற்றப்பட்டிருக்க வேண்டும்.

### மௌரியர் பற்றிய குறிப்பு

சங்க இலக்கியத்தில் 'மோரியர்' என்று ஒரு கூட்டத்தார் குறிப்பிடப்படுகின்றனர். சிலர் இவர்களை மேலை இந்தியாவில் இருந்தனர் என்கின்றனர் மோரியர் என்னும் ஓரினத்தாராகக் கருதுவாரயினும், பாடலிபுத்திரத்தைத் தலைநகராகக் கொண்டு மகதத்தை ஆண்ட மௌரியர்களே இவர்கள் என்று கொள்ளுதலே சரியாகும். பிந்துசாரர் காலத்தில் மௌரியர் தெற்கு நோக்கிப் படையெடுத்து வந்து கருநாடகத்தின் தென் எல்லை வரை வென்று தமது பேரரசில் இணைத்துக் கொண்டது வரலாற்று உண்மையாகும். எனவே சங்க இலக்கியம் இயற்றப்பட்ட காலத்தில் மௌரியர்களைப் பற்றித் தமிழகம் நன்றாக் அறிந்திருக்க வேண்டும். மௌரியர்களை 'வம்ப மோரியர்' என்று குறிக்கும் சொல்லாட்சி முறையே அக்காலத்தே அவர் வாழ்ந்தவர் என்பதை மெய்ப்பிக்கிறது. 'வம்ப' என்றால் 'புதிய' என்ற பொருள். முன்னறியாது புதிதாகப் படையெடுத்து வந்தோரை வம்ப என்ற அடைமொழி கொடுத்து அழைத்திருக்கக்கூடும். எனவே மாமூலனார் காலம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டாக, அதுவே சங்க காலமாகக் கொள்ளலாம்.

### சங்ககாலத்தில் மேலை நாட்டுத் தொடர்பு

கிரேக்க, ரோமானிய யவனர்களைப் பற்றி சங்க இலக்கியங்களில் காணப்படும் செய்திகளும், அந்நாட்டுப் பயணிகளின் குறிப்புகளும் தமிழகத்தில் கண்டெடுக்கப் பட்டுள்ள தொன்மையான காசுகளும் ஒன்றோடொன்று தொடர்புடையனவாக உள்ளன. யவனர்கள் சேரநாட்டுத் துறைமுகத்திற்கு வந்து, பொன்னைக் கொடுத்து, மிளகுப் பொதிகளை ஏற்றிச் சென்ற செய்தி பெரிபுளூஸ் என்னும் நூல் ஆசிரியரால் கூறப்படுகிறது. இந்நூல் கி.பி. 60 இல் இயற்றப்பட்டதாகும். கி.பி. 77 ஆம் ஆண்டைச் சேர்ந்த பிளினியின் இயற்கை வரலாறு கி.பி. 150 ஆம் ஆண்டளவிலான தாலமியின் புவியியல் நூல் ஆகியவற்றில் அவ்வெளிநாட்டு அறிஞர்கள் தமிழகத்தைப் பற்றியும், அதன் வெளிநாட்டு வாணிபத் தொடர்புகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளனர். யவன நாட்டு நாணயங்கள் பல தமிழகத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. யவன வணிகர்கள் தமிழகம் வந்து மக்களுடன் கலந்து வாழ்ந்தமையைச் சங்க இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. எனவே சங்க இலக்கியகாலம் இவ்வெளிநாட்டு வாணிபம் சிறப்புற நடைபெற்ற கால்மாகிய கி.பி. இரண்டு, மூன்றாம் நூற்றாண்டுகளாகும் எனக் கொள்ளலாம்.

### சிலம்பு தரும் செய்தி

சங்க இலக்கியம் என்று எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினென்கீழ்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றையெல்லாம் பொதுவாகக் குறிப்பிட்டாலும்,

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய இரண்டு மட்டுமே சங்ககால இலக்கியங்கள் என்றும் கூறப்படுகிறது. இருப்பினும் வரலாற்று அறிஞர்கள் பலர் சிலப்பதிகாரம், மணிமேகலையின் அடிப்படையில் சங்க காலத்தை நிறுவ சில முடிவுகளை மேற்கொள்வதாலேயே, சங்கம் மருவின இவ்விலக்கியங்கள் தரும் செய்திகளைக் காலக்கணிப்பிற்கு நாம் எடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது. சேரமன்னன் கண்ணகிக்குச் சிலையெடுத்தபோது கடல்சூழ் இலங்கைக்கு கயவாகு மன்னன் சேரநாடு போந்திருந்த செய்தியை சிலம்பு தருகிறது. இலங்கையின் வரலாற்றைக் கூறும் 'மகாவமிசம்' முதலாம் கயவாகு மன்னன் ஆண்ட காலம் கி.பி. 171 முதல் கி.பி. 193 வரை என்றும் ஏற்புடையதாகும். ஏனெனில் இரண்டாம் கயவாகுவின் காலம் கி.பி. 12 ஆம் நூற்றாண்டாகும். இதனால் சங்க நூல்கள் கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்டவை என்ற கருத்து வலியுறுத்தும். கயவாகு, செங்குட்டுவன் கால ஒற்றுமையே சங்ககால வரலாற்றின் கால நிருணயத்திற்கு அடித்தளமாக விளங்குகிறது.

சங்க காலத் தொகை நூல்களாகக் கருதப்படும் எட்டுத் தொகையும் பத்துப்பாட்டும் கிறித்துவ சகாப்தத்தின் முதல் மூன்று நூற்றாண்டுகளைச் சேர்ந்தவை என்று ஏற்றுக் கொள்ளச் செய்யும் கருத்துக்களை பேராசிரியர் சி.ஈ. இராமசந்திரன் பின்வருமாறு தொகுத்துள்ளார்.

(1) ரோமானிய, கிரேக்க நிலவியலாரின் குறிப்புக்கள், வரலாற்றறிஞர்களின் குறிப்புக்கள் சங்க இலக்கியக் குறிப்புகளுடன் பொருந்துகின்றன.

(2) சங்க இலக்கியங்கள் எனப் பொதுவாகப் பகுக்கப்படுகின்ற இப்படைப்புக்களின் எழுத்து, சொல், நடை ஆகியவற்றில் நெருக்கமான ஒற்றுமை காணப்படுகிறது.

(3) சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றின் எழுத்துநடை, சொல்நடை, விளக்க உரைகள் இக்காவியங்கள் பிற்பட்ட காலத்தவை எனக்கருதச் செய்கின்றன.

(4) தொகை நூல்களில் காணப்படும் சமயப் பொறை உணர்வு தேவாரம், திருவாய்மொழி ஆகியவற்றில் காணப்படவில்லை.

(5) சங்க இலக்கியங்களில் பல்லவர்களைப் பற்றிய குறிப்பில்லாமை, தொகை நூல்கள் பல்லவர்கள் காலத்திற்கு முற்பட்டவை என்று கூறத்தக்க சான்று ஆகும்.

(6) சிம்ம விஷ்ணுவிற்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் தமிழ் அரசுகளின் மரபினைக் களப்பிரர்கள் அழித்துவிட்டனர் என்றே கருதப்படுகிறது. எனவே, கி.பி. நான்காம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலமே சங்க காலம் என்பதனை ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.

அவற்றினடிப்படையில் சங்ககால இலக்கியங்கள் இயற்றப்பட்ட காலம் கி. மு. 500 இல் தொடங்கி, கி.பி.300 வரையாகும் என்று கொள்ளலாம்.

**பண்டைச் சேரர்**

தென்னிந்திய வரலாற்றில் சேரர், சோழர், பாண்டியர் பெறுமிடம் தலையானதாகும். இம்முப்பெரும் மன்னர்களைப் பற்றி அசோகரது கல்வெட்டுக்களும் குறிப்பிடுகின்றன.

இம்மூவேந்தருள் சேரர்களே பழங்குடியினர் என்று சிலர் வாதிடுவர். தம்கூற்றுக்கு ஆதாரமாகச் சேர, சோழ, பாண்டியர் என குறிப்பிடப்படும் மரபைச்சுட்டிக் காட்டுகின்றனர். சேரநாடு மலைவளம் வாய்ந்தது. எனவே சமவெளிகளில் வாழ்ந்த சோழ, பாண்டியர்களைக் காட்டிலும் ஒரு நிரந்தரமான அரசிலமைப்பை உருவாக்குவதற்கு சேரர்களின் புவியியல் அமைப்பு எளிதாக இருந்தமையால் சேரர்களே பழமையானவர்கள் என்பர் சிலர்.

## சேரர் வரலாற்றை அறிய உதவும் மூலச் சான்றுகள்

அக்காலத் தமிழக அரசுகள், அரசர்கள், அரசியல், பண்பாடு போன்றவைகளைப் பற்றி நாம் அறிய உதவுவன சங்ககால இலக்கியகளான பத்துப் பாட்டும், எட்டுத் தொகையும் ஆகும். இந்நூல்களில் சேர அரசர்களைப் பற்றிய பாடல்கள் உள்ளன. சேர அரசர்களால் பாடப்பட்ட பாடல்கள் உள்ளன. சேர நாட்டைப் பற்றியும், அங்கு நடைபெற்ற நிகழ்ச்சிகளைப்பற்றியும் குறிப்புக்கள் உள்ளன.

எட்டுத்தொகை நூல்களுள் ஒனறான பதிற்றுப்பத்து மூன்று தலைமுறைகளைச் சேர்ந்த சேர மன்னர்களைப் பற்றி பத்துப் பத்துப் பாக்களாகச் சேரவேந்தர் பதின்மரைப் பற்றிய நூறுபாடல்களைக் கொண்டமையால் இந்நூல் பதிற்றுப்பத்து என்னும் பெயர் பெற்றது. இந்நூலின் முதற்பத்தும் இறுதிப்பத்தும் கிடைக்கவில்லை. ஒவ்வொரு பத்தின் ஈற்றிலும் உள்ள பதிகம் அதற்குரிய மன்னவன் யார், அவன் செய்த போர்ச் செயல்கள் யாவை, அவனது கொடைத்திறம் எப்படிப்பட்டது, பாடிய புலவரின் பெயர், அவர் பெற்ற பரிசில் என்ன என்பவற்றை விளக்குகின்றது. இப்பதிகத்தையும் இதன்கீழ்வரும் உரை நடையையும் பிற்காலத்தார் எழுதிச் சேர்த்ததாகக் கூறுவர்.

பதிற்றுப்பத்தைத் தவிர புறநானூறு, அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை போன்றவற்றிலும் சேரர் பற்றிய குறிப்புகள் உள்ளன. சேர நாட்டின் இயற்கையழகு பற்றி ஐங்குறுநூறு கூறும் பாடலைப்பாடிய கடுங்கோன் பாடியதாக முப்பத்தைந்து செய்யுட்கள் கலித்தொகையில் உள்ளன. தொல்காப்பியநூலும், பிளினி, தாலமி குறிப்புக்களும் எரித்ரேயக்கடலின் பெரிப்ளூஸ் நூலாசிரியர் கூற்றும் சேரர் பற்றி நாமறிய உதவுகின்றன.

## சேர நாட்டின் எல்லையும் தலை நகரமும்

வடவேங்கடம் முதல் தென்குமரி வரை தமிழர்களால் ஆளப்பட்ட சங்க காலத்தில் சேரநாடு தமிழகத்தின் ஒரு பகுதியாக இருந்தது. அக்கால சேரநாடு : கொங்குநாடு (கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளியின் சில பகுதி) திருவனந்தபுரத்தின் வடக்கு, கொச்சி, கொல்லி மலைப்பகுதி (சேலம்), மலபாரின் தெற்குப் பகுதிகளைத் தன் எல்லைக்குட்பட்ட பகுதிகளாகக் கொண்டிருந்தது. சேரர்களின் தலைநகரான வஞ்சி பற்றி பல கருத்துக்கள் நிலவுகின்றன.

கால்டுவெல், ராகவ ஐயங்கார், வி. ஆர்.ராமசந்திர தீட்சிதர், கே.ஏ. நீலகண்டசாஸ்திரி, என். சுப்பிரமணியன் போன்றோர் தற்போதைய திருச்சி மாவட்டத்தில் உள்ள கரூர் அக்கால வஞ்சி மாநகரமாகும் என்கின்றனர். அக்கால வஞ்சிக்குக் கருவூர் என்பது ஒரு

பெயராகும். கருவூர், கரூர் என்பன ஒரே மாதிரி ஒலிப்பது இவர்களது கூற்றை ஆதரிக்கும். கரூரின் பக்கத்தில் சேரரது கல்வெட்டுக்கள் அதிகமாகக் காணப்படுவதும் இக்கருத்தை வலுவூட்டும். டாலமி சேரர் தரைநகரைக் 'கொரூரா' என்றதும் கரூர்தான் வஞ்சி என்பதை உறுதிப்படுத்தும்.

வி. கனகசபை, எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார், எம்.இ. மாணிக்கவாசகம் பிள்ளை போன்றோர் மேற்குக் கடற்கரைப் பகுதிகளில் கொடுங்கோளூரின் அருகில் உள்ள கிராங்கனூரரை (திருவஞ்சைக்களம்) வஞ்சி என்பர். இதற்குச் சான்றாக அவர்கள் என்ன கூறுகின்றனர் எனில் பிற்காலத்தில் கேரளாவை ஆண்டவர்கள் வஞ்சியைத்தான் தலைநகராகக் கொண்டனர் என்பதேயாகும். அஞ்சைக்களமென்றும் மகோதைப்புரம் என்றும் அப்போது வஞ்சிமாநகரம் வழங்கப்பட்டது என்பர்.

திருச்சிக்கருகிலுள்ள கரூர் பற்றி மாணிக்கவாசகம்பிள்ளை கூறும் கருத்து சிந்திப்பதற் குரியது. சேரர்களின் கை ஓங்கி இருந்த காலத்து, அவர்களின் ஆட்சியின் உச்சக்கட்டத்தில் திருச்சி வரை அவர்களது நாட்டெல்லை விரிவடைந்தது. அப்போது புதிதாகச் சேர்க்கப்பட்ட பகுதிக்கு வஞ்சி கருவூர் என்று பெயரிட்டிருக்கலாம் என்கிறார். இன்னும் ஒரே பெயர் கொண்ட பல நகரங்களையும், கிராமங்களையும் நாம் காண்கிறோம்.

சேரர்களின் துறைமுகமாக முசிறி இருந்தது. வெளிநாடுகளுடன் மிளகு வியாபாரம் செய்வதில் அது தலைசிறந்த இடத்தைப் பெற்றிருந்தது. இலக்கியச் சான்றுகளிலிருந்தும் அயல்நாட்டவர் குறிப்புகளிலிருந்தும் இவ்வுண்மை புலனாகும். முசிறி துறைமுகப் பட்டினம் பெரியாறு கடலுடன் கலக்குமிடத்தில் அமைந்திருந்தது. தென் கேரளாவில், காலடி அருகில் இருந்த தொண்டியும் சேரர் காலத்தில் சிறந்த துறைமுகப்பட்டினமாக விளங்கிற்று.

## உதியன் சேரல்

> "மன்னிய பெரும்புகழ் மறுவில் வாய்மொழி
> இன்னிசை முரசின் உதியஞ் சேரல்"

என்று குமட்டூர்க் கண்ணனாரால் பதிற்றுப் பத்தில் புகழப்படுகிறான் இவ்வரசன். பாரதப் போரில் இருதரத்து படைவீரர்களும் இவன் உணவளித்த காரணத்தால் 'பெருஞ்சோற்று உதியஞ் சேரல்' என்று சிறப்பிக்கப்பட்டான். இவனுடைய முன்னோர்களின் அறச்செயலை இவன் மீது ஏற்றிச் சொல்வதாக இதைக் கொள்ளலாம் என்பர் நீலகண்ட சாஸ்திரியார்.

இவரது மனைவியின் பெயர் நல்லினி என்பதும, இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், பல்யானைச் செல்கெழு குட்டுவன் இருவரும் இவன் மக்கள் என்பதும் பதிற்றுப்பத்தின் இரண்டு, மூன்றாவது பதிகங்களாய் அறியலாம்.

இவன் தன் நாட்டு எல்லையை விரிவாக்கினான். தன்னை நாடி வநதவர்களுக்கு வாாி வழங்கினான் என்பதை

“நாடுகண் அகற்றிய உதியஞ் சேரற்
பாடிச் சென்ற பரிசிலர்
உலவினி வாழி”

என்ற அகநாநூற்றுப் பாடலால் அறியலாம். தமிழகம் முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆண்டவன் இவன். கிழக்கு மேற்கு ஆகிய இருபெரும் கடல்களை எல்லையாகக் கொண்ட நாடு முழுவதும் இவனே ஆண்டதை,

“நின்கடல் பிறந்த ஞாயிறு பெயர்த்தும் நின்
வெண்தலைப் புணரிக் குடகடல் குளிக்கும்“

என்ற புறநாநூற்றில் முரஞ்சியூர் முடிநாகனார் குறிப்பிடுகின்றார்.

கரிகாற் பெருவளத்தானுடன் போரிட்டுப் பெற்ற புறப்புண்ணிற்காக நாணி உயிர் விட்ட சேரலாதனைப் பற்றி புறநாநூறும் அகநானூறும் குறிப்பிடுகின்றன. அகநானூரில் உதியனைச் சிறப்பித்த மாமூலனார் வெண்ணியில் தோற்ற சேரலாதனைப் பற்றிக் குறிப்பிடுவதாலும், உதியஞ்சேரலாதனும் கரிகாற் பெருவளத்தானும் சமகாலத்தவரே என்பது ஆராய்ச்சியாளர் கருத்தாலும் கரிகாற் பெருவளத்தானுடன் போரிட்டுத் தோற்றவன் இவனே எனலாம்.

## இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்

இவன் வடநாடு சென்று, ஆரிய அரசர்களை வென்று, இமயத்தில் வில்லைப் பொறித்து மீண்டதால் ‘இமய வரம்பன்‘ என்று சிறப்பிக்கப்பட்டான் என்பதை

“இமயத்து முன்னோர் மருள வணங்குவில் பொறித்து”

என்ற அகப்பாடலால் அறிகிறோம். இவனிடம் சிறந்த கடற்படை இருந்ததென்பதையும், கப்பற்படையின் துணைக்கொண்டு பகைவரை வென்று காவல் மரமான கடம்பை வெட்டி அதைக் கொண்டு முரசும் செய்து கொண்டான் என்றும் அகநாநூறு கூறுகிறது.

வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி என்ற சோழனுடன் ஏற்பட்ட போரில் இருமன்னர்களுமே உயிர் துறந்தனர் என்று கூறப்படுகிறது. திருப்போர்ப்புறம் என்னுமி டத்தில் நடந்த இப்போரில் இவ்விரு மன்னர்களும் இறந்து வீழ்ந்தமை கண்டு பரணர் வருந்தி பாடியுள்ளமை இக்கருத்துக்குச் சான்றாக அமைகின்றது. தன்னைப் பாடிய குமட்டூர் கண்ணனார்க்கு உம்பற் காட்டுப் பகுதியைச் சேர்ந்த 500 ஊர்களைப் பிரம்மதேயமாகக் கொடுத்தது இவனது வள்ளன்மையைக் காட்டும். இவனுக்கு இருமனைவியர். சோழன் மணக்கிள்ளியின் மகளாகிய நற்சோணைக்குப் பிறந்தவன் செங்குட்டுவன்; வேளாவிக்கோமான் பதுமன் மகன் வழிப்பிறந்தவர்கள் களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் ஆவர். இவன் 58 ஆண்டுகள் ஆண்டான்.

## பல்யானை செல்கெழுகுட்டுவன்

வலிமை மிக்க யானைப் படையை உடையவனாக இருந்ததால் பல்யானை செல்கெழுகுட்டுவன் என்றழைக்கப்பட்டான். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் தம்பியாகிய இவன் சிறந்த வீரனாக விளங்கினான். சோழ, பாண்டியருடன் ஏற்பட்ட போரில் இவன் அவர்களது கடலரணையும், காட்டரணையும் அழித்தான். விற்போரில் வல்ல மறவர்களைத் துணையாகக் கொண்டு இவனை எதிர்த்த சோழ, பாண்டியர்களை வென்றான். கொங்கு. நாட்டையும் கைப்பற்றி தன் நாட்டெல்லைக்குட்படுத்தினான். இருபத்தைந்தாண்டுகள் அரசாண்ட இம்மன்னன் தன்னைப்பாடிய பாலைக் கௌதமனார் பொருட்டு பத்து வேத வேள்விகளை நடத்தினான் என்பர்.

இவன் தனது அரசைத் தன் குலத்தில் பிறந்தவரிடையே பகிர்ந்து கொண்டான் எனவும், கீழைக் கடலிலிருந்தும் மேலைக் கடலிலிருந்தும் களிறுகள் கொணர்ந்த நீரில் ஒரே நாளில் குளித்தான் எனவும் கூறப்படுகிறது. அயிரை என்ற மலைக்குரிய இறைவியை ஆர்வமுடன் வழி பட்டான். அவனது புரோகிதர் நெடும்பாரதாயினார் என்பவரை பின் பற்றி தவம் செய்வதற்காகக் கானகம் சென்றான்.

இமயவரம்பனை அடுத்து அவன் மகன் செங்குட்டுவனுக்குப்பதில் செல்கெழுகுட்டுவன் அரசு கட்டில் ஏறியது எங்ஙனம் என்று புரியவில்லை. சிற்றப்பனான செல்கெழுகுட்டவன், ஆண்டு இறந்தபின் செங்குட்டுவன் பட்டத்திற்கு வந்திருக்கலாம் அல்லது இருவருமே ஒரே சமயத்தில் வெவ்வேறு பகுதிகளை ஆண்டிருக்கலாம் என்பர்.

## களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல்

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் இளைய மனைவி வேளாவிக்கோமான் பதுமன் மகள் தேவிக்குப் பிறந்தவர்கள் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலும், ஆடுகோட்பாட்டுச் சேரலாதனும் ஆவர். களங்காய்க் கண்ணியும், நாரால் முடியும் செய்து அணிந்திருந்ததால் இவன் இப்பெயர் பெற்றான். 'சேரநாட்டிற்குரிய அனைத்துப் பகுதியையும் ஆளும் வரை சேரர்க்குரிய கண்ணியும் முடியும் புனையேன்' என்று சூளுரைத்து அவற்றுக்குப் பதிலாக களங்காய்ககண்ணியும் நார்முடியும் புனைந்து நின்றமையால் இப்பெயர் பெற்றான் என்பர்.

நன்னனுக்குரிய பூழி நாட்டின் மீது படையெடுத்துச் சென்று கடம்பெருவாயில், வாகைப் பெருந்துறை என்ற இடங்களில் போரிட்டான். நன்னனை வென்று அவனுடைய காவல் மரத்தை வெட்டி வீழ்த்தினான். அதியமானுடைய குலத்தோன்றலான நெடுமிடல் என்பானை வென்றான். இவனைப் பாடிய் காப்பியாற்றுக் காப்பியனார் நாற்பது நூறாயிரம் பொற்காசுகளையும் அரசின் ஒரு பகுதியையும் பெற்றார் என்பதைப் பதிற்றுப்பத்தால் அறியலாம்.

## கடல்பிற கோட்டிய செங்குட்டுவன்

சேர மன்னர்களுள் சிறந்தவனாகிய செங்குட்டுவன், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கும் நற்சோணைக்கும் பிறந்தவன். மனைவி இளங்கோவேண்மாள். இவன்

தந்தையையும் விஞ்சிய வெற்றிகளை அடைந்தான். சேரநாட்டின் பகுதியாகிய கொடுகூரை ஆண்ட கொங்கர்கள் தொல்லை தந்ததால் படையெடுத்துச் சென்று வென்றான். இடும்பில் என்னுமிடத்தில் சில வேட்டுவரை வென்றான். பழையனை வென்று காவல்மரமான வேம்பினை வெட்டி, பழையனது மனைவியரின் கூந்தலைக் கயிறாகத் திரித்து, வேம்பினை வண்டியில் வைத்து இழுத்து வந்து யானைகளைப் பிணிக்கப் பயன்படுத்தினான். நெரிவாயிலில் சோழர் குலத்தைச் சார்ந்த ஒன்பது இளவரசர்களை ஒருங்கே வென்றான். இவனுடைய கடற்போர் வெற்றி குறிப்பிடத்தக்கது. கடலில் ஆதிக்கம் செலுத்திய கடம்பரைவென்றதால் கடல் பிறகோட்டிய செங்குட்டுவன் எனப்பட்டான். வடநாட்டின் மீது படையெடுத்துச் சென்று கனகவிசயர்களை வென்று, கண்ணகிக்குரிய பத்தினி உருவத்தைச் செய்ய அவர்கள் தலைமீது கல்லை ஏற்றிக் கொணர்ந்ததைச் சிலப்பதிகாரம் கூறுகிறது. இக்கல்லால் பத்தினித் தெய்வ வழிபாட்டை கொடுங்கோளூரில் நடத்தினான். இவனுடன் இலங்கை மன்னன் கயவாகுவும் பங்கேற்றான். நம் நாட்டிலும் பத்தினிக்குச் சிலை எடுத்து, கோயில் அமைத்தான்.

இவன் தந்தையாகிய இமயவரம்பன் அவைக்கு வந்த ஒரு நிமித்திகன் இவனது இளவலாகிய இளங்கோவே முடிசூட்டுவான் என்று கூற, குட்டுவன் கனன்று நோக்கினான். ஆகவே, இளங்கோ தன் இளவரசுப் பதவியைத் துறந்து குணவாயிற் கோட்டத்தில் இளங்கோவடிகளாக வாழ்ந்து சிலப்பதிகாரத்தை இயற்றினார் என்பர். சுமார் 55 ஆண்டுகள் அரசாண்ட இவன் தன் மகன் குட்டுவன் சேரலைப் பரணர்க்கு மாணவனாக அனுப்பினான். குட்டுவன் சேரலைப்பற்றிப் பதிற்றுப்பத்து யாதொன்றும் குறிக்கவில்லை,

## ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்

வானவரம்பன் என்னும் பட்டப் பெயருடன் அரசாண்ட இவன் சில மலை ஆடுகளைத் தண்ட காருண்யத்துக் கள்வரிடமிருந்து கைப்பற்றியதால் ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் எனப்பட்டான் என்பர். பதிற்றுப்பத்து ஆறாம் பத்துப் பாடல்களிலிருந்து அவன் நடனக் கலையில் பெரிதும் ஈடுபாடுடையவனாதலால் 'ஆடு' என்ற சொல் ஆட்டத்தைக் குறிப்பதாகக் கொள்ளலாம் என்பர்.

இவன் நறவு என்ற கடற்கரை நகரைத் தலைநகராகக் கொண்டு சேரநாட்டின் வடமேற்குப் பகுதியை ஆண்டான். 38 ஆண்டுகள் அரசு புரிந்தான். மழவர்களுடன் போரிட்டு வென்றான். குடநாட்டிலுள்ள ஒரூரை அந்தணர்களுக்குப் பகிர்ந்தளித்தான். இவன் தன்னைப் பாடிய புலவர் நற்செள்ளையாருக்கு நூறு ஆயிரம் காணப் பொருளும், ஒன்பது துலாம் நிறையுள்ள பொன்னும் அளித்தான்.

சேர நாட்டையாண்ட உதியஞ்சேரலாதனின் மரபில் கடைசி மன்னனாக இவனைக் கொள்ளலாம். இவனுக்குப் பின்னர் வெவ்வேறு குடும்பத்தைச் சார்ந்த மூன்று அரசர்கள் சேர நாட்டை ஆண்டதைப் பதிற்றுப்பத்து மூலம் அறியலாம். பதிற்றுப்பத்து குறிப்பிடும் மூவர் செல்வக்கடுங்கோ வாழியாதன், பெருஞ்சேரல் இரும்பொறை, இளஞ்சேரல் இரும்பொறை ஆவர்.

## செல்வக்கடுங்கோ வாழியாதன்

அந்துவஞ்சேரல் இரும்பொறையின் மகனாகிய செல்வக்கடுங்கோ வாழியாதன் இருபத்தைந்து ஆண்டுகள் மிகச் சிறப்பாக அரசாண்டான். இவன் பல ஊர்களை ஏற்படுத்தினான். வேத வேள்விகளைப் புரிந்த இவன் திருமாலிடம் பேரன்புடையவன். ஓகந்தூர் என்ற கிராமத்தைப் திருமாலுக்காக மானியமாக அளித்தான். தன்னை எதிர்த்த பாண்டியர்—சோழர்களை வென்றான்.

வேள்ஆவிக்காமான் பதுமனின் மகளான தேவி என்பாளை மணந்தான். பண்பும், கொடையும், வீரமும் உடைய இவன் கபிலரால் பாடப்பட்டவன். இப்புலவர்க்குத் தக்க முறையில் பரிசளிக்க விரும்பிய அரசன் புலவருடன் நன்றா என்ற குன்றின் மீது ஏறி நின்று கண்ணுக்குப் புலப்படும் எல்லைவரை உள்ள நாடுகளைனைத்தையும் புலவர்க்கு அளித்தான் என்று பதிற்றுப்பத்து கூறுகின்றது. (ஒன்பதாம் பத்து 85 ஆவது பாடல்) "பொய்யில் செல்வக் கடுங்கோ", எனப்படுவதால் இவன் வாக்கு மாறாதவன் என்பது பெறப்படும். இவனுடைய புகழூர்ச் சேர கல்வெட்டொன்று இவன் சமணத் துறவிகளுக்கு (சமணர்களுக்கு) அளித்த நன்கொடைகளைக் கூறும்.

## பெருஞ்சேரல் இரும்பொறை

செல்வக் கடுங்கோவின் மகனான இம்மன்னன் சேரரில் இரும்பொறைக் குடியைச் சார்ந்தவன். தகடுரை ஆண்ட அதியமான், சோழ —பாண்டியர் துணையுடன் இவனை எதிர்த்த போது, அவர்களை வென்றதால் "தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை" எனப்பட்டான். இப்போரில் அதியன் இறந்தான். இவ்விவரங்கள் அரிசில்கிழார், பொன்முடியார் போன்றோர் எழுதிய தகடூர் யாத்திரையால் அறியலாம். இவன் கொல்லிமலையில் சோழ, பாண்டியரை வென்று போர் முரசையும், குடையையும் கைப்பற்றினான். கழுவுள் என்ற இடையர் தலைவனுடைய கோட்டையைத் தகர்த்து வென்றான். பதினேழு ஆண்டுகள் அரசாண்டபின் உலகு துறந்தான்.

தமிழிடத்தும் தமிழ்ப் புலவரிடத்தும் மிகுந்த பற்றுடையவன். தன்னைப் பாடிய அரிசில்கிழாருக்கு ஒன்பது நூறாயிரம் காணம் நல்கியதோடு, அரசனும், அரசியும் அரண்மனையை விட்டு வெளியே வந்து அரசுப் பொறுப்பையே புலவருக்கு அளித்தமை இதை உணர்த்தும். அதுமட்டுமன்று, மோசிகீரனார் இம்மன்னனைக் காணவந்தபோது அவனில்லாததால் முரசு கட்டில் என்பது தெரியாமல் உறங்கினார். அக்காலத்தில் இது மிகப் பெருங்குற்றமாகக் கருதப்பட்டது. புலவர் உறங்குவதைக் கண்ட மன்னன் அவர் எழும்வரை வெண்சாமரையினை எடுத்துத் தானே வீசினான். தமிழ் மீது அரசன் கொண்ட பற்று இதனால் புலனாகும்.

## குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை

பதிற்றுப்பத்தில் இறுதியாகப் பாடப்படுபவன் இவனேயாவான். பெருஞ்சேரலின் மகனாகிய இம்மன்னன் சோழ, பாண்டியர்களை வென்றான். விச்சி மலைத் தலைவனை வென்று ஐந்து கோட்டைகளைக் கைப்பற்றினான். கோப்பெருஞ்சோழனை வஞ்சியில்

வென்றான். இளம் பழையன் மாறனையும் வென்றான். வஞ்சி மாநகரில் பெருஞ்சதுக்கப் பூதத்துக்கு வழிபாடு நிறுவினான். முதன் முதலாக மந்திர மரபில் கடவுளுக்கு வழிபாடு நடத்தும் முறையை ஏற்படுத்தினான். பதினாறு ஆண்டுகள் ஆண்ட இவனைப் பெருங்குன்றூர்கிழார் பதிற்றுப்பத்தின் ஒன்பதாவது பத்தில் பாடியுள்ளார். அதற்காக மகிழ்ந்த மன்னன் முப்பத்திராயிரம் காணம் பொன்னும் புலவர் அறியாமல் வீடும் செல்வமும், அணிகலனும் அளித்தான்.

## யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை

'வேழநோக்கின் விறல்வெஞ்சேஎய்' மாந்தரஞ் சேரல் இரும்பொறை எனும் இயற்பெயருடைய இம்மன்னன் யானையின் கண்களைப் போன்ற கண்களை உடையவனாயிருந்தமையின் காரணப்பெயர் பெற்றான். தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுடன் இவன் தலையாலங்கானம் என்ற இடத்தில் போரிட்டபோது, தோற்று சிறைவைக்கப்பட்டான். ஆயினும் சிறையிலிருந்து தப்பி வந்து அரசுக்கட்டில் ஏறிய செய்தியைப் புறப்பாட்டால் அறிகிறோம். இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் மலையமான் திருமுடிக்காரியும் இவன் மீது போர் தொடுத்தபோது இப்போரிலும் இவன் தோற்றான். ஆனால் குறுங்கோழியூர் கிழார், கூடலூர்கிழார், பொருந்தில் இளங்கீரனார் போன்ற புலவர்கள் பாடும் சிறப்புடையவனாய் இவன் விளங்கினான். இவனை குப்த மாமன்னன் சமுத்திரகுப்தன் வெற்றி கொண்டு, கொரளா (கேரளா) வைக் கைப்பற்றியதாக அலகாபாத் கற்றூண் அறிக்கையின்படி சிலர் கூறுவர். ஆனால் இது காலவரன் முறையில் முரண்பாடு. மந்த ராஜாவை மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்பது தவறு. கொரளாவைக் கேரளாவென்று கொள்வதும் தவறு.

## சேரமான் கணைக்கால் இரும்பொறை

சோழன் செங்கணான் காலத்தில் வாழ்ந்தவன் இம்மன்னன். மூவன் என்ற வீரனை வென்று அவன் பற்களைப் பிடுங்கி, தொண்டி நகரின் கோட்டை வாசற்கதவில் அழுத்தினான் என்பதைப் பொய்கையார் நற்றிணையில் குறித்துள்ளார். இம்மன்னனுக்கும், சோழன் கோச்செங்கணானுக்கும் கழுமலம் என்ற ஊரை அடுத்துள்ள திருப்போர்புறம் என்னுமிடத்தில் போர் நிகழ்ந்தபோது சேரன் தோற்றான்; சிறைவைக்கப்பட்டான். சிறைக்காவலரிடம் நீர் வேண்டியபோது காலந்தாழ்த்திக் கொணர்ந்தமையால், நீருண்ணாது சிறையிலேயே வடக்கிருந்து உயிர் நீத்தான். இவனுடைய அவைக்களப் புலவரான பொய்கையார், சோழன் வெற்றியைச் சிறப்பித்து'களவழி நாற்பது' என்ற நூலைப்பாட, சோழன் மகிழ்ந்து சேரனை விடுவிக்க ஆணை பிறப்பித்தான். அதற்குள் சிறையில் " குழவி இறப்பினும்" என்ற புறநானூற்றுப் பாடலை எழுதி வைத்துவிட்டு சேரன் உயிர் துறந்துவிட்டான். 'மானம் இழந்தபின் வாழாமை முன்இனிதே" என்பதற்கேற்ப மானத்திற்காக உயிர் துறந்தான் இம்மன்னன். இப் பொய்கையாரைச் சிலர் பொய்கை ஆழ்வாராகக் கொள்வதுண்டு. பொய்கையாரும், பொய்கை ஆழ்வாரும் வேறுபட்டவர்.

### சேரர் பரம்பரை

உதியஞ்சேரலை முதல்வனாகக் கொண்ட மூன்று தலைமுறையைச் சார்ந்த ஐந்து மன்னர்கள் பற்றிப் பதிற்றுப்பத்தால் அறிகிறோம். அவர்களனைவருமாகச் சேர்ந்து 201 ஆண்டுகள் அரசாண்டனர். பின்னர் வந்த மூன்று அரசர்களும் சேர்ந்து 58 ஆண்டுகள் அரசாண்டனர். இவர்கள் அரசாண்ட வரிசை முறைபற்றி உறுதியாகச் சொல்வதற்கில்லை. என். சுப்பிரமணியன் அவர்கள் கூறும் சேரமன்னர்களின் வரிசையும் அரசாண்ட காலமும் கீழ் வருமாறு:—

| | அரசர் | ஆட்சி புரிந்த ஆண்டுகள் | அரசாண்ட காலம் |
|---|---|---|---|
| 1. | உதியன் சேரல் | | — கி.பி. 27 |
| 2. | இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் | 58 | — கி.பி. 27-85 |
| 3. | பல்யானைச் செல்குழுகுட்டுவன் | 25 | — கி.பி. 85-110 |
| 4. | களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் | 25 | — கி.பி. 110-135 |
| 5. | கடல்பிறகோட்டிய செங்குட்டுவன் | 55 | — கி.பி. 135-190 |
| 6. | ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் | 38 | |
| 7. | செல்வக் கடுங்கோவாழியாதன் | 25 | — கி.பி. 175-200 |
| 8. | பெருஞ்சேரல் இரும்பொறை | 17 | — கி.பி. 200-217 |
| 9. | குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை | 16 | — கி.பி. 217-233 |

இக்கால வரையறை செங்குட்டுவன் கயவாகு காலக்கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படுவதாக சுப்பிரமணியம் குறிக்கின்றார்.

எனவே அக்காலச் சேரர்கள் முதல் மூன்று நூற்றாண்டுகள் மிகச் சிறப்பாக ஆண்டனர் என்றறியலாம். இவர்களைத் தவிர சங்க இலக்கியங்கள் இன்னும் பல சேரமன்னர்களைப் பற்றிக் குறிக்கப்படுகின்றன. அவர்களைப்பற்றி உறுதியான சான்றுகள் கிடைக்கவில்லை.

### பண்டைச் சோழர்கள்

அசோகரது கல்வெட்டுகளில்தான் முதன் முதலாகச் சோழர்களைப் பற்றி நாம் கேள்விப்படுகிறோம். சங்ககாலச் சோழர்களைப் பற்றிச் சங்கப் பாடல்களும், பிற்காலச் சோழர்பற்றி கலிங்கத்துப்பரணி, மூவருலா போன்ற நூல்களும் அறிவிக்கின்றன. இலங்கை வரலாற்று நூலான மகாவமிசமும் சோழர் பற்றி நாமறிய உதவுகின்றது.

சேர, சோழ, பாண்டியர் மூவருமே ஒரு தாய் வயிற்றில் பிறந்தவர் எனவும், அவர்கள் தென்னாட்டில் தாமிரபரணிக் கரையில் கொற்கையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டதாகவும், பின்னரே பிரிந்து மேற்கிலும் வடக்கிலும் தத்தம் பெயரால்

தனியரசு அமைத்துக் கொண்டனர் என்றும் கூறுவர். சோழர் தம்மைச் சூரிய குலத்தவர் என்று கூறிக்கொண்டனர். தூங்கெயிலெறிந்த தொடிதோட்செம்பியன், காகந்தன், கவேரன், மனுநீதி கொண்ட சோழன், காற்றை ஆடல் கொண்டவன், சமுத்ரஜித் போன்றோர் தொடக்ககாலச் சோழ மன்னர்களாவர்.

பெரிபுளூஸ் என்ற நூலின் ஆசிரியர், தாலமி ஆகியோர் சோணாட்டைப் பற்றி குறித்துள்ளனர். காவிரிப்பூம்பட்டினமே 'நிகாமா' எனவும் உறையூரே 'ஒர்துரா ரெகியா சோர்நாடி' எனவும் வழங்கியதாகவும் கூறுவர். 'மிலிந்தான் அரசனுடைய கேள்விகள்' என்ற நூல் கி.பி. முதல் நூற்றாண்டின் முற்பகுதியில் எழுதப்பட்டது. இந்நூல் அக்காலக் கடற்கரைப் பட்டினங்களில் சிறந்ததாகக் 'கேரள பட்டினம்' என்ற ஊரைக் குறிப்பிடுகின்றது. இக்கேரள பட்டினம் காவிர்ப்பூம்பட்டினமே என்பர் ஆராய்ச்சியாளர். (கேரளப் பட்டினம் இன்றும் குமரிமாவட்டத்திலுள்ள ஒரு கடற்கரைப் பட்டினப் பெயராய் வழங்கி வருவது அறியத்தக்கது). காகந்தன் பெயரால் இக்காவிரிப்பூம்பட்டினம் காகந்தி நகரம் எனப்பட்டது. கவேரன் என்பவன் சோழ நாட்டிற்குக் காவிரியைக் கொணர்ந்தான் என்று ஒரு கதை வழங்குகிறது. சோணாட்டின் வளத்திற்குக் காரணம் காவிரியாறே. சோழ நாடு, காவிரிநாடு, காவிரிசூழ்நாடு, காவிரி புரக்கும் நாடு என்று புகழப்படுகிறது. 'சோழ வளநாடு சோறுடைத்து' என்பதால் இந்நாட்டின் நீர்வளமும் நிலவளமும் உணரலாம். நீர்வளம் நிரம்பிய காரணத்தால் 'நீர் நாடு', 'புனல் நாடு' எனவும் சோணாடு வழங்கப்பட்டது.

சோழர்களின் தலைநகரங்களாக, புகாரும், உறந்தையும் கூறப்படுகின்றன. சிலப்பதி காரத்திலும் புகாரும், உறந்தையும் தலைநகரங்களாகக் கூறப்படுகின்றன. பட்டினப்பாலை வாயிலாகக் கரிகாலன் உறந்தையைப் புதுப்பித்தான் என்றறிகிறோம். உறந்தைக்குக் கோழியூர் என்பது மற்றொரு பெயராகும். அதாவது, மிகப்பழங்கால சோழமன்னர் ஒருவர் வேட்டைக்குச் சென்ற இடத்தில் காட்டுகோழிக்கும் காட்டுயானைக்கும் சண்டை நடந்ததாகவும் அதில் காட்டுக்கோழி வெற்றி பெற்றதாகவும் கூறப்படுகிறது. இதனைச் கண்ட அச்சோழ மன்னன் அப்பகுதியே தன் உறைவிடமாக் இருக்கத்தக்கது என எண்ணி அங்கு தலைநகர் அமைத்தான். எனவே அக்கோழியூர் உறையூர் அல்லது உறந்தை ஆகியது. காவிரிப்பூம்பட்டினம் கடலோடு கலக்குமிடத்தில் அமைந்திருந்ததால் புகார் எனவும் வழங்கப்பட்டது.

சோழர்களைப் பற்றி இலங்கை நூலான மகாவமிசத்தில் குறிப்புகள் உள்ளன. கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இலங்கை சோழ மன்னனால் ஆளப்பட்டது எனவும், அம்மன்னன் நாற்பத்து நான்கு ஆண்டுகள் ஆண்டதாகவும் குறிப்புக்கள் உள்ளன. இலங்கையை ஆண்ட சோழ மன்னனாகிய ஏலாரா என்ற தமிழ் மன்னன் தன் ஒரே மகன் ஒரு கன்றினைத் தேரேற்றிக் கொன்றுவிட்டதற்காகத் தன் மகனையே அவ்வாறு கொல்லத்துணிந்தான் என்றும் மகாவமிசம் குறித்துள்ளது. பெரியபுராணம் குறிப்பிடும் மனுநீதிச்சோழனும் கன்றுக்காகத் தன் மகனைத் தேர்க்காலிலிட்டவன் என்றறிகிறோம். திருவாரூரிலிருந்து ஆண்ட இவ்வாரூர (ஆலூர) னே ஏலாராவாதல் கூடுமா என்பது ஆராயத்தக்கது என்பர் ந. சுப்பிரமணியன். ஏலாரா என்ற சொல்லிலிருந்து பிறந்ததே ஈழம் என்ற சொல்.

சங்க இலக்கியங்களும், இரட்டைக் காப்பியங்களான சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சோழ அரசர்களைப்பற்றிப் பல செய்திகளைக் குறித்துள்ளபோதிலும், அவற்றை வைத்துக் கொண்டு அவ்வரசர்கள் ஆண்ட காலவரிசையைக் கணக்கிடுதல் கடினமாக உள்ளது. சூரிய குலத்தோன்றல்களாகக் கருதப்பட்ட சோழர்களைப் பற்றிப் புலவர்கள் பலபடப் பாராட்டியுள்ளனர்.

## உருவப்பஃறோர் இளஞ்சேட் சென்னி

சோழ அரசர்களுள் காலத்தால் முந்தி சோணாட்டை ஆண்ட முதல் மன்னன் இவனே. 'இளையோன் என்றும் இவனை வழங்குவர். உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டான். இவன் மனைவி வேளிர் குடியைச் சார்ந்தவள். இவன் காலத்தில் சோழ அரசு உறையூருக்குச் சற்று மேற்கேயிருந்த கீழைக்கடல் வரையில் பரவியிருந்ததே யன்றி காவிரிக்கு வடபாலுள்ள தொண்டை மண்டலம் முதலிய பிரதேசங்களை உள்ளடக்கவில்லை என்பர். இவன் அழகான பல தேர்களை உடையவனாக இருந்தமையால் இப்பெயர் பெற்றான். பரணரால் பாடப்பட்டவன். 'உருவப்பஃறேர் இளையோன் சிறுவன்' என முடத்தாமக் கண்ணியார் பொருநராற்றுப் படையில் கரிகாலனை அழைப்பதால் கரிகாலன் இளஞ்சேட்சென்னியின் மகன் என்று உணரலாம்.

## கரிகாற் பெருவளத்தான்

சங்ககாலச் சோழமன்னர்களுள் தலைசிறந்தவன் இவனே. இவனுடைய முன்னோன் ஒருவன் காற்றைத் தன் விருப்பப்படி வேண்டிய திசையில் வீசச் செய்யக்கூடிய ஆற்றலைப் பெற்று "காற்றை ஆடல் கொண்டான்" என்றழைக்கப்பட்டான்.

இவனுடைய தந்தை இளஞ்சேற்சென்னி உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டான். சிறுவயதில் இவன் தனக்குரிய அரசினை இழந்து தன் மாமனான இரும்பிடர்த்தலையார் பாதுகாப்பில் மறைந்து வாழ்ந்தான் என்றறிகிறோம். இளமைக் காலத்தில் இவன் தாயத்தார் கரிகாலனைச் சிறையிலிட்டு நெருப்பு வைத்தனர். இந்நெருப்பிலிருந்து தப்பிக் குதித்து ஓடியபோது கால் கரிந்துவிடவே கரிகாலன் என்றழைக்கப்பட்டான்.

"முச்சக்கரமும் அளப்பதற்கு நீட்டிய கால்
இச்சக் கரமே அளந்தால்;— செய்ச் செய்
அரிகால்மேல் தேன்தொடுக்கும் ஆய்புனல் நீர்நாடன்
கரிகாலன் கால்நெருப் புற்று"

என்ற செய்யுள் இவன் பெயர்க் காரணத்தை உணர்த்தும். சிலர் கரிகாலன் என்ற பெயரைக் கரி—காலன் என்று பிரித்து யானைகளுக்குக் காலன் எனவும் பொருள் கூறுவர். கரிகாலனைக் கலிகாலன் என்றாக்கி கலிப்பகைக்குக் காலன் என்றும் கூறுவர். ஆயின் இவையெல்லாம் ஏற்புடைத்தன்று. கரிந்த காலினை உடையவன் என்பதே பொருந்திய பொருளாகும். "காய்ச்சின மெய்ம்பிற பெரும் பெயர்க் கரிகால்", "கலிகொள் சுற்றமொடு கரிகால் காண" எனவரும் அகநானூற்றுப் பாடல் வரிகளில் அவன் பெயர் 'அன்' விகுதி பெறாமல் "கரிகால்" என்றே வழங்கப்படுவது இதனை வலியுறுத்தும்.

கரிகாலன் தாய் வயிற்றிலிருக்கும்போதே தந்தை இறந்து விட்டான். பிறக்குமுன்பே அரசுரிமையைப் பெற்றவன் இவன் என்பதைத் 'தாய் வயிற்றிலிருந்து தாயம் எய்தி' என்று பொருநராற்றுப்படை கூறும். இவனுக்குப் பல குழந்தைகள் இருந்தனர் என்பதை 'பொன்தொடிப் புதல்வர் ஓடி ஆடவும்' என்ற பட்டினப்பாலை வரிகளால் அறியலாம். அம்மக்கள் யாரென்பது தெரியவில்லை. உறையூர் மணக்கிள்ளி, வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி இருவரும் இவனது புதல்வர் என்ற இராகவையங்கார் கூற்று பலரால் ஏற்கப்படவில்லை.

பட்டினப்பாலையின் பாட்டுடைத்தலைவன் இவனே. இந்நூலை இயற்றிய உருத்திரங்கண்ணனார் கரிகாலனிடமிருந்து பதினாறு இலட்சம் பொற்காசு பெற்றதாகக் கூறுவர். சேரமன்னனான ஆட்டன் அத்தியின் மனைவி ஆதிமந்தி கரிகாலன் மகள் என்பர் இளங்கோவடிகள்.

இவன் ஒப்பற்ற வீரன். இவனுடைய போர்களில் வெண்ணிப்போரும், வாகைப் பறந்தலைப் போரும் குறிப்பிடத்தக்கன. சேரனும் பாண்டியனும் வேளிர் ஒன்பதின்மரும் கூடி தஞ்சாவூரின் அருகில் உள்ள கோயில் வெண்ணி என வழங்கப்படும் வெண்ணி வாயில் என்னுமிடத்தில் கரிகாலனை எதிர்த்தனர். கரிகாலன் ஒருவனாகவே நின்று போரிட்டு வென்றான். இப்போரில் தான் புறப்புண் நாணிய பெருஞ்சேரலாதன் வடக்கிருந்து உயிர்விடத் துணிந்தான். கரிகாலனின் வெற்றிச் சிறப்பினைப் பரணர், முடத்தாமக்கண்ணியார், மாமூலனார், கழாத் தலையார், வெண்ணிக்குயத்தியார் போன்றோர் பலபடப் பாராட்டியுள்ளனர். இவனுடைய தாய் பிறந்த அழுந்தூரில் வெற்றி விழாவைக் கொண்டாடினான். இவ்வெண்ணிப்போர் வெற்றியால் தமிழகம் முழுவதும் இவனுடைய ஆட்சியின் கீழ் வந்தது.

கரிகாலனுடன் போரிட்டுத் தோற்ற ஒன்பது வேளிரும் வாகைப் பறந்தலை என்னும் இடத்தில் கரிகாலனுடன் மீண்டும் போரிட்டனர். இப்போரிலும் கரிகாலனே வென்றான். வேளிர் தமது முரசு, குடை போன்றவற்றைப் போர்க்களத்திலேயே போட்டு விட்டு ஓடினர். வடக்கேயிருந்த அருவாளரும் தெற்கேயிருந்த ஒளியரும் இவன் ஆட்சிக்குட்பட்டனர். இவன் வடவர்களை வென்று இமயம் வரை படையெடுத்துச் சென்று இமயமலையில் புலிக்கொடியைப் பொறித்து வந்தான் என்று சிலப்பதிகாரம் கூறும். வரும் வழியில் வக்கிர நாட்டரசன் கொடுத்த பட்டிமண்டபம், அவந்திவேந்தன் கொடுத்த தோரணவாயில் முதலியவற்றைப் பெற்றான் எனவும் இளங்கோ அடிகள் குறிக்கின்றார்.

நீதியும் நேர்மையும் நிறைந்த ஆட்சி நடத்தினான். தொண்டை மண்டலம்வரை அக்காலத்தில் அடர்ந்திருந்த காடுகளை அழித்து நாடாக்கினான். காவிரியின் குறுக்கே கல்லணை கட்டிச் சோழ நாட்டை வளப்படுத்தினான். சிங்களத் தீவை இவன் வென்றபோது பிடித்து வந்த கைதிகளை இவ்வணை கட்டும் பணியில் ஈடுபடுத்தினான். இவனுஊ ய ஆட்சிக் காலம் பொற்காலமாக அமைந்தது எனலாம்.

## நலங்கிள்ளி

கரிகாலனுக்குப் பின் சோழர் வரலாறு குழப்பமடைகிறது. ஆயினும் சிலப்பதிகாரம் புறநானூறு முதலிய சங்க நூல்களிலிருந்தது சோழர் ஆட்சி வரன்முறையை ஒருவாறு அறியலாம்.

கரிகாலனுக்கு மணக்கிள்ளி, வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி என்ற இரு புதல்வர் இருந்தனர். மணக்கிள்ளி உறையூரைத் தலைநகராக்க் கொண்டு ஆண்டான். அவனுக்கு நெடுங்கிள்ளி என்ற மகனும் நற்சோணை என்ற ஒரு மகளும் இருந்தனர். இந்நற்சோணை தான் இமயவரம்பனை மணந்தவள். செங்குட்டுவனும் இளங்கோ அடிகளும் இவள் பிள்ளைகளே. கரிகாலனது இரண்டாம் மகன் வேற்பஃறடக்கை புகாரிலிருந்து ஆண்டான். அவனுக்கு மூன்று பிள்ளைகள் இருந்தனர். அவர்கள் கிள்ளிவளவன், நலங்கிள்ளி சேட்சென்னி, மாவளத்தான் என்பவர்களாவர். கரிகாலனுடைய காலத்திற்குப் பின் நாட்டில் குழப்பமேற்பட்டது. நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் பெரியப்பன் மகனும் சிற்றப்பன் மகனுமாயிருப்பினும் ஒருவரையொருவர் பகைத்துப் போரிட்டனர். நலங்கிள்ளி வீரமிக்கவன். நெடுங்கிள்ளி கோட்டையைவிட்டு வெளியே வரவேயில்லை. ஒன்று அவன் கோட்டையை விட்டு வெளியே வந்து போரிடவேண்டும் அல்லது தோல்வியை ஒப்புக்கொள்ள வேண்டுமேயல்லாது கோட்டைக்குள்ளே பதுங்கியிருப்பது கோழைத்தனமென்று கோவூர்க்கிழார் என்னும் புலவர் இடித்துரைத்தார். இவ்விரு மன்னர்களையும் ஒற்றுமைப்படுத்துவதற்காகக் கோவூர்க்கிழார் பலமுறை முயன்றார். ஒருமுறை இளந்தத்தன் என்ற புலவன் புகாரிலிருந்து உறையூர்வர, அவனை ஒற்றன் என்று தவறாக எண்ணிய நெடுங்கிள்ளி யானையால் இடறிக் கொல்ல முற்பட்டபோது அவனுடைய சினத்தைத் தணிவித்துப் புல்வரைக் காப்பாற்றியவர் கோவூர்க்கிழாரே. காரியாறு என்னுமிடத்தில் நெடுங்கிள்ளிக்கும் நலங்கிள்ளிக்கும் ஏற்பட்ட போரில் நெடுங்கிள்ளி கொல்லப்பட்டான். அதனால் காரியாற்றுத்துஞ்சிய நெடுங்கிள்ளி எனப்பட்டான். இப்போரில் தன் மூத்தவன் கிள்ளிவளவனுக்காக நலங்கிள்ளி போரிட்டான்.

## கிள்ளிவளவன்

புகாரில் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளியை அடுத்து மன்னவன் ஆனான். இவன் சிறந்த வீரனாகவும், கவிபாடும் ஆற்றலுடையோனாகவும் விளங்கினான். வெள்ளைக்குடி நாகனார் இவன் காலத்தவர். இவன் ஈழத்து நாக வணிகனான வளைவணனுடைய மகளாம், பீலிவளையை மணந்ததாக்வும், பீலிவளைக்குப் பிறந்த இளந்திரையன் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு தொண்டைமண்டலத்தை யாண்டான் என்றும் மணிமேகலையால் அறியலாம்.

## கோப்பெருஞ்சோழன்

உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டான். அரசனாகவும் அறிவுடைய புலவனாகவும் வாழ்ந்த இவன் நட்புக்கு இலக்கணமாய் விளங்கினான். பிசிராந்தையாரும் பொத்தியாரும் இவனுடைய உயிரனைய நண்பர்களாக விளங்கினர். இவன் இளஞ்சேரல் இரும்பொறையுடன் ஏற்பட்ட போரில் தோல்வி க்ண்டான். இரு புதல்வர்களுடன்

ஏற்பட்ட போரால் மனம் நொந்தான். இப்பழி சேர, பாண்டியர் செவியுட் சென்று புகு முன்னரே உயிர்விட விரும்பி வடக்கிருந்தான். இவனைக் காணாமலே அன்பு கொண்ட பிசிராந்தையார் சோழன் வடக்கிருத்தலைக் கேள்விப்பட்டு அங்கு வந்து சோழனுடன் தாமும் வடக்கிருந்து உயிர் நீத்தார்.

## சோழன் செங்கணான்

'சேரமான் கணைக்காலிரும்பொறை சோழன் செங்கணானோடு திருப்போரிப் புறத்துப் பொருது, பற்றுக்கோட்பாட்டு குடவாயிற் கோட்டத்துச் சிறையில் கிடந்து தண்ணீர் தாவென்று பெறாது பெயர்த்துப் பெற்றுக்கொண்டிருந்து உண்ணான் சொல்லித் துஞ்சிய பாட்டு" என்ற புறநாநூற்றுக் குறிப்பால் அவன் சேரமான் கணைக்கால் இரும்பொறையை வென்றதை அறிகிறோம். பொய்கையார் இவனைப் புகழ்ந்து 'களவழி நாற்பது' பாடினார். அம்பர், வைகம், நன்னிலம் ஊர்களில் உள்ள சிவன் கோவில்கள் இவனால் கட்டப்பட்டவை என்பர். முற்பிறவியில் சிலந்தியாய்ப் பிறந்தான் என்றும் அடுத்த பிறவியில் சிவனுறையும் தலந்தோறும் கோவில் அமைத்து வழிபட்டான் என்றும் பெரிய புராணத்தில் சேக்கிழார் குறிப்பிடுகின்றார். சோச்செங்கட்சோழன் என்று அறியப்படும் இம்மன்னன் அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவராக வைக்கப்பட்டுள்ளமை இவனது ஆழ்ந்த சைவசமயப் பற்றை உணர்த்தும்.

சோழர்கள் வரலாற்றைப்பற்றி நாமறிய உதவுவன தமிழ் இலக்கியங்களும், இலங்கை நூலான மகாவமிசமுமேயாகும். இலங்கை மீது கரிகாலன் படையெடுத்ததைக் குறிக்கும் மகாவமிச நூலின் குறிப்பிலிருந்து அவன்காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு எனலாம். இவனது மகள் நற்சோணையின் வயிற்றுப் பிள்ளையான சேரன் செங்குட்டுவனின் காலத்துடன் ஒப்பிட்டால் கரிகாலன் இரு நூற்றாண்டுகளிலும் வாழ்ந்திருக்கலாம். கோச்செங்கட் சோழனது காலம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதி என்பர் ந. சுப்பிரமணியன். ஆனால் செங்கணான் பல்லவ மன்னன் சிம்மவிஷ்ணுவின் காலத்தவன் என்பதைக் கொண்டு அவன் கி.பி. ஆறாம் நூற்றாண்டைச் சார்ந்தவன் என்று டி.வி. மகாலிங்கம் போன்றோர் கருதுகின்றனர்.

# பண்டைய பாண்டியர்

## வரலாற்று மூலங்கள்

தமிழகத்தை ஆண்ட சேர, சோழ, பாண்டியருள் பழங்குடியினர் இவர்களேயாவர். பண்டையர் என்ற சொல்லே பாண்டியர் என்றாயிற்று என்பர். பழம் பெரும் இதிகாசங்களான மகாபாரதம், இராமாயணம் போன்றவற்றில் பாண்டியர் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. தென்னாடு போந்த அர்ச்சுனன் பாண்டியன் மகளை மணந்தான் என்று வடமொழி பாரதம் கூறுகின்றது. வால்மீகி இராமாயணத்தில் சுக்ரீவன் சீதையைத் தேடிச் செல்லும் வானரங்களை நோக்கி, "தெற்கே கபாடபுரம் என்றொரு நகருண்டு அதன் வாயிற்கதவுகள் பொன்னும் முத்தும் வைத்திழைக்கப்பெற்றவை" என்று கூறியதாக உள்ள குறிப்புகள் பாண்டிய நாட்டின் பழைமையை' உணர்த்தும். மெகஸ்தனீஸ், கௌடில்யர், ஆகியோரின் படைப்புக்களிலும் பாண்டியர் பற்றிய செய்திகள் உள்ளன

சங்க இலக்கியங்களிலும், பெரும்பற்றப்புலியூர்நம்பி, பரஞ்சோதி முனிவர் இருவரின் திருவிளையாடல் புராணத்திலும் சமஸ்கிருத தல புராணங்களிலும் பாண்டியரைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி, பெரியபுராணம் போன்றவற்றில் பாண்டியரோடு தொடர்புடைய நிகழ்ச்சிகளைப் பற்றிய நேரடியான குறிப்புகள் உள்ளன.

சங்ககாலப் பாண்டியர்களின் வரலாற்றை முறையாக அறிவதில் பெருமளவில் உதவுபவை கிரேக்க ரோமானிய அறிஞர்களான மெகஸ்தனீஸ், பிளினி, தாலமி போன்றோரின் குறிப்புகளாகும். பாண்டிய நாட்டில் நடைபெற்ற பல நிகழ்ச்சிகளைப் பற்றி இலங்கையின் வரலாற்று நூலான மகாவமிசம் குறிப்பிடுகின்றது. மதுரைக்கு அருகே நடந்த புதை பொருளாராய்ச்சியில் கிடைத்துள்ள ரோமானிய நாட்டு நாணயங்கள் அக்காலத்திலே பாண்டியருடன் கொண்ட வாணிபத் தொடர்பை உறுதிப்படுத்துகின்றன. சில நாட்களுக்குமுன் இராமநாதபுரத்தில் அழகன்குளம், பெரியபட்டினம் ஆகிய இடங்களிலிருந்து கிடைத்த சங்குவளையல்கள், மட்பாண்டங்கள், நகைகள், நாணயங்கள் இதனை உறுதிப்படுத்தும்.

## பாண்டியர்களும் தமிழ்ச்சங்கமும்

"பாண்டிய! நின்னாட்டுடைத்து நல்ல தமிழ்" என்று தமிழ் மூதாட்டி கூறியது போல, பாண்டிய அரசர்கள் புலவர்களைப் போற்றிய புரவலர்களாக மட்டுமன்று, தாமே பாடலியற்றும் வல்லமை உடையவராயும் விளங்கினர்.

பாண்டியர்கள் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்ததைப் பல இலக்கியங்கள் கூறுகின்றன.

"தமிழ் நிலை பெற்ற தாங்கரு மரபின் மதுரை"

---- சிறுபாணாற்றுப்படை

"தென்தமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரை"

----- சிலப்பதிகாரம்

"பழுதில் கொள்கை, வழுதியர் அவைக்கண்
அறிவு வீற்றிருந்த செறிவுடை மனத்து
வான்றோய் நல்லிசைச் சான்றோர் குழீஇ
அந்தமிழ் மூன்றும் தெரிந்த காலை"

---- அகநானூறு (உரைப்பாயிரம்)

போன்ற சங்கச் செய்யுட்களால் பாண்டியர்கள் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தமை பெறப்படும்.

கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சின்னமனூர்ச் செப்பேடு, "மகாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்" என்று கூறுவது இக்கருத்தை வலியுறுத்தும்.

முதற்சங்கம் தென்மதுரையில் நிறுவப்பட்டது. அதுவும் கடற்கோளால் அழிந்தபின் இரண்டாம் சங்கம் கபாடபுரத்தில் நிறுவப்பட்டது. அதுவும் கடற்கோளால் அழிய மூன்றாம் சங்கம் மதுரையில் ஏற்படுத்தப்பட்டது என்பர். கபாடபுரத்திலிருந்தும் பாண்டியர் புறப்பட்டு மணலூரைத் தலைநகராகக் கொண்டபின் மதுரை வந்ததாகவும் கூறுவர். பாண்டியருக்கு மணலூர் தலைநகராகவிளங்கிற்று என்பதை மகாபாரதம் கூறுகின்றது.

"பஃறுளியாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள"

என்ற (சிலம்பு—நாடுகாண்காதை) வரிகளால் கடல்கோளால் பாண்டியர் தமது நிலப்பகுதிகளை இழந்தமை தெளிவு. ஆனால் இங்ஙனம் இழந்த பகுதிகளுக்கு ஈடாக வடக்கே சென்று நிலப்பகுதிகளை வென்று ஆண்டனர்.

## நிலந்தரு திருவின் நெடியோன்

வடிவலம்ப நின்ற பாண்டியன் எனவும் நெடியோன் எனவும் வழங்கப்படும் இவனுக்குப் பாண்டியன், பன்னாடு தந்தான், மகாகீர்த்தி போன்ற வேறு பெயர்களும் இருந்தன என்பது தொல்காப்பியம், மதுரைக்காஞ்சி போன்ற நூல்களால் அறியலாம். இவன் காலத்தில் ஏற்பட்ட கடற்கோளால் பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக் குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ளவே, வடபகுதியை வென்று ஆண்டான். தொல்காப்பியம் இவனுடைய அவையில்தான் அரங்கேற்றப்பட்டது.

"தொல்லாணை நல்லாசிரியர்
புணர் கூட்டுண்ட புகழ்சால் சிறப்பின்
நிலந்தரு திருவில் நெடியோன்"

என மதுரைக் காஞ்சி கூறுவதிலிருந்து சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தமை பெறப்படும்.

## பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி

வேள்விக்குடி பட்டயங்களின் மூலமாகவும், புறநானூறு, மதுரைக் காஞ்சி போன்ற சங்க இலக்கியங்கள் மூலமும் இவனைப் பற்றியறியலாம். இவனது இயற்பெயர் குடுமி. வேள்விகள் பலவற்றைச் செய்த காரணத்தால் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி எனப்பட்டான். குடுமிக்கோமான், பல்சாலை முதுகுடுமி, பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி எனவும் அறியப்படுகிறான். இவனைப் பற்றி வேள்விக்குடி பட்டயம் கூறும் போது இவன் பெருவீரன், புலவர்களின் புரவலன், வேள்விகள் பலவற்றைச் செய்தவன், வேள்விக்குடி என்னும் கிராமத்தை அந்தணர்க்குத் தானமாக அளித்தவன் என்றெல்லாம் பாராட்டுகின்றது. வடக்கே இமயம், தெற்கே குமரியாறு, கிழக்கிலும் மேற்கிலும் கடல்கள் என்ற நான்கு எல்லைகளுக்குட்பட்ட நாட்டை சிறப்புடன் ஆண்டான்.

## இரண்டாம் சங்கத்தைச் சார்ந்த பாண்டியர்

இக்காலத்தில் ஐம்பத்தொன்பது பாண்டிய அரசர்கள் கபாடபுரத்தை தலைநகராகக் கொண்டு பாண்டிய நாட்டையாண்டதாகக் கூறப்படுகிறது. இவர்களுள் பாண்டியன் முடத்திருமாறன் முக்கிய இடத்தைப் பெற்றான். இவன் காலத்தில் கபாடபுரமும் கடற்கோளால் அழியவே, அவன் அங்கிருந்து நீங்கி வைகைக்கரையில் உள்ள தற்போதைய மதுரையில் மூன்றாம் சங்கத்தை நிறுவினான்.

நாடக நூலை எழுதிய மதிவாணன், பொற்கைப் பாண்டியன் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்பவர்களும் சங்ககாலப் பாண்டியரில் சிறந்தோராவர். கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி சிறந்த அறிஞன், இவன் எழுதிய பாடல்கள் பரிபாடல், புறநானூரில் உள்ளன. இவன் கடலுள் மூழ்கி இறந்தவன் என்பதை இவன் பெயரால் அறியலாம்.

மூன்றாம் சங்கத்தைச் சார்ந்த பாண்டியன் அறிவுடை நம்பியும் வீரத்துடன் புலமையும் நிரம்பியவன். 'மயக்குறு' மக்களை இல்லோர்க்குப் பயக்குறை இல்லைத் தாம் வாழ்நாளே' என்று புறநானூற்று பாடலில் மக்கட் செல்வத்தின் மாண்பினை உயர்த்தியவன்.

ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியனும், அவன் மனைவி பெருங்கோப்பெண்டும் சிறந்த புலமை வாய்ந்தவர்கள். இருவரது பாடல்களும் புறநானூற்றில் உள்ளன. மாவன், எயிலெனும் ஊருக்குத் தலைவனான ஆந்தை, அந்துவன், சாத்தன், ஆதன்அழிசி, இயக்கன் போன்ற நண்பர்களை உயிரினும் மேலாய் மதித்தவன் என்பது இவனது வஞ்சினப்பாட்டால் அறியலாம். இவன் இறந்தபின் மனைவி தீப்பாய்ந்தாள்.

## ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்

ஆரியப் படைகளை வென்றதால் இப்பெயர் பெற்றவன் என்பர். இவன் காலத்தில் கோவலன் கண்ணகி மதுரை வந்ததாகவும், ஆராயாது கோவலனைக் கொன்று, கண்ணகியால் உண்மையறிந்து நீதிதவறியதை உணர்ந்த அரசன்

"பொன் செய் கொல்லன் தன் சொற்கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்
என்பதை காக்கும் தென்புலங்காவல்
என்முதற் பிழைத்தது கெடுக என் ஆயுள்"

என்று கூறி அரியணையிலிருந்து வீழ்ந்து உயிர் துறந்ததாகச் சிலப்பதிகாரம் கூறும். சேரன் செங்குட்டுவனின் காலத்தவனான இவனுடைய புறநானூற்றுப் பாடல் 'பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே' என்று கல்வியின் சிறப்பைக் கூறும்.

## சித்திர மாடத்துத் துஞ்சிய நன்மாறன்

ஓவியக் கூடத்துள் இறந்ததால் இம்மன்னன் இப்பெயர் பெற்றான் என்பர். ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் இறந்தபின் அவனுடைய தம்பியாகிய வெற்றிவேற் செழியன் பட்டத்திற்கு வந்தான். வெற்றிவேற்செழியனும், சித்திரமாடத்துத்துஞ்சிய நன்மாறனும் ஒருவரே என்பர். ஆயின் இதற்குப் போதிய சான்றுகள் இல்லை. இவன் சீத்தலைச் சாத்தனாரின் காலத்தவன். ஆட்சிக்கு வந்ததும் கண்ணகிக்காகப் பெரிய விழாவொன்றை நடத்தினான் என்று புறநானூறு கூறும்.

## தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்

இளம் வயதில் அரியணை ஏறியவன். யானைக்கண் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை, சோழன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் ஆகிய ஐவரும் ஒன்று கூடி தலையாலங்கானம் என்ற இடத்தில் எதிர்த்தனர். தான் ஒருவனாகவே நின்று அவர்களை வென்றான். சேரனைச் சிறைப்படுத்தினான். புறமுதுகிட்டோடிய படைகளை விடாது துரத்திச் சென்று அழித்து அவர்களது குடை, முரசு பொருள்வளம் அனைத்தையும் கைப்பற்றினான். இவ்வெற்றியை நக்கீரர், மாங்குடி மருதனார், கல்லாடனார், இடைக்குன்றூர்க்கிழார் போன்ற பல புலவர்கள் பாராட்டி யுள்ளனர். இப்பெரும் வெற்றிக்குப் பின்னரே இவன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் எனப்பட்டான். சின்னமனூர்ச் செப்பேடும், வேள்விக்குடி பட்டயமும் இவ்வெற்றியைச் சிறப்பிக்கின்றன.

வாகைப் பறந்தலை என்னுமிடத்தில் கொங்கரை வென்று, அவர்க்குரிய நாடுகளைக் கைப்பற்றினான். இவனை எதிர்த்த சேர, சோழர்களுக்கு உதவி செய்த தமிழ் நாட்டுச் சிற்றரசர்களை வென்றான், பரதர்களையும் வென்றான்.

'குடிப்பழிதூற்றும் கோலேனாகுக' எனும் வஞ்சினத்தால் பழிச்சொல் கண்டு பெறாதப் பண்பையும் "புலவர் பாடாது வரைக என நிலவரை" என்பதால் புலவர் பாடும் புகழை மதித்தவன் என்பதையும், "இரப்போர்க்கு ஈயா இன்மையானுறவே" என்பதால் ஈகைக் குணத்தையும் உணரலாம்.

சங்ககாலப் பாண்டியரில் இளம்பெருவழுதி, நம்பி நெடுஞ்செழியன், நல்வழுதி, இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன், வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி, கூடாரத்துத் துஞ்சிய மாறன்வழுதி, பன்னாடு தந்த பாண்டியன் மாறன்வழுதி போன்ற மன்னர்களைப் பற்றி போதிய வரலாற்றுக் குறிப்புக்கள் கிடைக்கவில்லை.

## கானப் பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி

சங்ககாலத்து மன்னர்களுள் சிறப்பாக ஆண்ட இறுதி மன்னன் இவன். கானப்பேர் என்பது இன்றைய காளையார்கோவிலாகும். (இராமநாதபுரத்து மாவட்டத்தில் உள்ளது). இவன்காலத்தில் கானப்பேரெயில் வேங்கை மார்பன் என்பான் பெரிய கோட்டை ஒன்றைக் கட்டினான். தன் ஆட்சிக்கு அஃது நல்லதல்ல என்றறிந்த உக்கிரப் பெருவழுதி

வேங்கை மார்பனுடன் போரிட்டு கோட்டையைக் கைப்பற்றினான் என்பதை மூலங்கிழார் என்னும் புலவர் குறித்துள்ளார். கடைச்சங்கத்தின் இறுதியில் வாழ்ந்த இவன் அகத்திணையைச் சார்ந்த பாடல்களை அகநானூறு அல்லது நெடுந்தொகை என்னும் பெயரில் தொகுப்பித்தான். உப்பூரிக்கிழார் மகனார் உருத்திரசன்மனாரே தொகுத்தவர். இவன் சேரனான மாரி வெண்கோ, சோழனான இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி இருவருடன் நட்பு கொண்டமை மிகவும் பாராட்டற்குரியது. இம்மூவரையும் ஒன்றாகக் கண்ட ஔவையார் மகிழ்ந்து பாடிப் பாராட்டியுள்ளார்.

உக்கிரப் பெருவழுதிக்குப் பின் சங்கத் தமிழர்களின் அரசாட்சி ஒரு முடிவுக்கு வந்து விட்டதெனலாம்: கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் இடைப் பகுதியிலிருந்து கி.பி. ஆறாம் நூற்றாண்டு இறுதிவரை தமிழகத்தை ஆண்ட சேர, சோழ, பாண்டியர் பற்றி குறிப்புகள் இல்லை. சுமார் முந்நூறு ஆண்டுகள் கொண்ட இவ்விடைக்காலப் பகுதியை களப்பிரர் ஆண்டதால் இருண்டகாலம் என்றறிகிறோம்.

## சங்க காலச் சிற்றரசர்கள்

சேர, சோழ, பாண்டியர்கள் தமிழகத்தை ஆண்ட போது அவர்களுக்குத் திறை செலுத்தும் சிற்றரசர்கள் பலர் சிறப்புடன் ஆண்டனர். முடியரசர்களுக்கும் குறுநில மன்னர்களுக்கும் இடையே கட்டுக்கோப்பான நட்புமுறை நிலவியது. முடியரசர்களைக் காட்டிலும் சில குறுநிலமன்னர்கள் புலவர்களையும், கலைஞர்களையும் ஆதரிப்பதில் சிறந்து விளங்கினர். சில குறுநிலமன்னர்கள் திறை செலுத்த மறுத்து அவரவர் முடியரசரோடு போரிட்டதும் உண்டு.

முடியுடை மன்னர்க்குக் கப்பம் கட்டிய போதும் இவர்கள் தனித்து செயல்பட்டனர். டாக்டர் வின்சென்ட் ஸ்மித் சங்க காலத்தில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ஆண்டு வந்த குறுநில மன்னர்களின் எண்ணிக்கை 20 என்கிறார்.

## வேளிர்

சேர சோழ பாண்டியர்களுக்குத் திறை செலுத்தி அரசாண்டவர்களுள் வேளிர் என்பார் சிறப்பான இடத்தைப் பெறுகின்றனர். வேளிர் குலத்தின் தோற்றம் பற்றி வேறுபட்டக் கருத்துக்கள் நிலவுகின்றன. புறநானூரில் கபிலர் வேளிர்கள் வேள்வித் தீயிலிருந்து தோன்றியவர்கள் என்கிறார். நச்சினார்க்கினியர் வேளிர் என்பவர்கள் அகத்தியரோடு தமிழ் நாட்டிற்கு வந்தவர்கள் என்கிறார். தமிழகத்தின் எல்லைப் பகுதியிலும் கருநாடகத்திலும் அரசாண்ட வேளிர்களே ஹொய்சாலரின் முன்னோர்களென்று ந. சுப்பிரமணின் கூறுகிறார்.

இவ்வேளிர் வீரத்திலும், கொடையிலும், மூவேந்தர்களையும் மிஞ்சும் புகழ் கொண்டிருந்தனர். இரு முடியரசர்களுக்கு பொறாமையை விளைவித்ததால், முடியரசர் களுக்கும் வேளிருக்குமிடையே அடிக்கடி போர்கள் நடந்தன.

சேரநாட்டை ஆண்ட வேளிரில் ஆய் என்பவன் குற்றால மலைக்கு அருகில் உள்ள பொதியில் மலைப்பகுதியை ஆண்டவன். கிரேக்க நிலநூல் வல்லுநரான தாலமி ஆய் குமரி பகுதியை ஆண்டவன் என்பர். ஆய் என்ற சொல் ஆவி என்பதன் திரிபாக இருக்கலாமென்பர். வேள்விக்கோமான் பதுமன் ஆவியர் குலத்தைச் சார்ந்த வேள், பழனிக்கு ஆவிநன்குடி என்ற பெயரும் உண்டு, ஆய் .(ஆவி) ஆண்டதால் இப்பெயர் பெற்றிருக்கலாம். இடையர் சாதியைக் குறிக்கும் ஆயரும் ஆவியரும் தொடர்புடையராக இருக்கலாம் என்று ந. சுப்பிரமணியம் கூறுகின்றார்.

ஆய் என்பான் அண்டிரன் என்றும் வழங்கப்பட்டான். ஏணிச்சேரி முடமோசி யோரை நல்ல முறையில் ஆதரித்து வந்தான். நாகர் தலைவன் நீலப்பட்டாடை ஒன்றை இவனுக்கு வழங்கியதாகவும், சிவபெருமானுக்கு அதை இவன் காணிக்கையாக்கியதாகவும் கூறப்படுகிறது. கொங்கர்களையும் இவன் வென்றான்.

கடையேழு வள்ளல்களாகக் கருதப்படுபவர்கள் ஆய், பேகன், பாரி, காரி, அதியன், நல்லி, ஓரி என்பவராவர். இவர்களுள் பேகன் என்பான் ஆவியர் குடியைச் சார்ந்தவன். வையாவிக் 'கோப்பெரும் பேகம்' என்ற இவன் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு களித்தாடிய மயிலைக் கண்டு குளிரால் நடுங்குவதாக எண்ணி தனது போர்வையை எடுத்துப் போர்த்தியதால் இப்பெயர் பெற்றான். இவன் தன் மனைவி கண்ணகியைத் துறந்து வாழ்ந்தான். அவள் நிலைகண்டு வருந்திய கபிலர் போன்ற புலவர் எடுத்துச் சொல்லியும் அவன் அவளுடன் இணையவில்லை. மதியின் மாசுபோல் இவனுடைய வாழ்வில் இது ஒரு குறையாக அமைந்துவிட்டது.

பாரி, பாண்டி நாட்டைச்சார்ந்த பறம்பு மலையை ஆண்டவன். இராமநாரபுரத்தில் உள்ள பிரான்மலையே பறம்பு மலையாகும். இவன் வந்தவர்க்கு வாரி வழங்கும் வள்ளன்மையுடையவன். "இவ்வுலக உயிர்களைப் பாதுகாக்கப் பாரி மட்டுமில்லை மாரியும் உண்டு" என்று கூறுமுகத்தான் பாரியின் கொடைத்தன்மையைக் கீழ்க்கண்ட புறநானூற்றுப்பாடலில் விளக்குகிறார்.

"பாரி பாரியென்று பல வேந்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி யொருவனும் மல்லன்
மாரியு முண்டீருண்டுலகு புரப்பதுவே" (புறம் 107)

என்பதே அப்பாடல்.

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் மனம் வருந்திய வள்ளலாரைப் போல உயிருள்ள எல்லாவற்றிடமும் அன்பு செலுத்தினான். ஒரு முறை தேரில் சென்று கொண்டிருக்கையில் படரக்கொழு கொம்பின்றித் தவித்த முல்லைக்குத் தன்னுடைய தேரை ஈந்து கொடைமனம் பட்டவன். இவனுடைய புகழ் மூவேந்தர்களுக்கும்

பொறாமையை விளைவிக்கவே பறம்பு மலையை முற்றுகையிட்டனர். முற்றுகை பல நாள் நீடித்தது. வீரத்தால் அவனை வெல்லமுடியாத மூவேந்தர்கள் வஞ்சகத்தால் அவனை வீழ்த்தினர். பாரியின் உயிரனைய நண்பராக விளங்கிய கபிலர் பாரி இறந்தபின் அவனது இருபெண் மக்களையும் மணமுடித்து வைக்கும் முயற்சியில் ஈடுபட்டார். இறுதிக் காலத்தில் கபிலர் செல்வக் கடுங்கோ வாழியாதனின் அவையில் இருந்ததாகப் பதிற்றுப் பத்து கூறும்.

கோவலூரையாண்ட மலையமான்கள் சோழர்களுக்குத் திறை செலுத்தி வந்தனர். இவர்கள் சோழர்களிடம் படைத்ததலைவர்களாக பணியாற்றியதால் சோழிய ஏநாதி என்பபட்டனர். இவர்களுள் ஒருவனே திருமுடிக்காரி எனப்படும் வள்ளல். இவன் கொல்லி மலைத்தலைவனான ஓரியிடம் போரிட்டு அவனை வென்றான். காரி சோழமன்னன் பெருநற்கிள்ளிக்கு உதவி செய்வதற்காக இப்போரில் ஈடுபட்டான். சோழனுக்கும், சேரமன்னன் மாந்தரஞ்சேரல் இரும்பொறைக்கும் ஏற்பட்டது இப்போர். இப்போரில் திருமுடிக்காரி வென்றாலும் தகடூரையாண்ட அதியமானிடம் தோற்றான். இப்போரில் திருமுடிக்காரி இறந்தான்.

கரிகாலனுக்குப் பிறகு சோணாடு இருபிரிவாகப் பிரிக்கப்பட்டது. கிழக்குப் பகுதிக்குப் புகாரும், மேற்குப் பகுதிக்கு உறையூரும் தலைநகரங்கள்ாக விளங்கின. மலையமான் திருமுடிக்காரி உறையூர் சோழர்களை ஆதரித்தான். எனவே அவன் இறந்தபின் புகாரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட கிள்ளிவளவன் திருமுடிக்காரியின் பின்ளைகளிருவரைப் பிடித்து யானைக் காலிலிட்டுக் கொல்லும்படி ஆணையிட்டான். கோவூர்க்கிழார் மன்னனுக்கு அறிவுரை கூறி மக்களைக் காத்தார். காரிக்குப் பின் கோவலூரை அவன் மகன் திருக்கண்ணன் ஆண்டான்.

தகடூரையும் குதிரை மலையையும் ஆண்ட அதியமான் நெடுமான் அஞ்சி ஔவையாரால் பாடப்பட்டவன். நீண்ட ஆயுளைத் தரவல்ல ஒரு நெல்லிக் கனியைத் தான் உண்ணாது ஔவைக்கு அளித்தான். “நீலமணிமிடற்று ஒருவன் போல மன்னுக பெரும நீயே” என்று ஔவையால் வாழ்த்தப்பட்டான். (புறம் 91). இவனுடைய மகன் பொருட்டெழினி, இவனைப் புகழ்ந்து ஔவை பாடிய பல பாடல்கள் புறநானூற்றில் உள்ளன. அதியமானின் முன்னோர்கள் தேவருலகிலிருந்து கரும்பைப் பூவுலகிற்குக் கொணர்ந்தவர்களாகக் கூறப்படுகின்றனர். தற்போதைய தர்மபுரி மாவட்டமே தகடூர் எனப்பட்டது. அதியமான் பேராற்றல் மிக்கவன். மலையமான் திருமுடிக்காரியை வென்றான். காஞ்சியிலிருந்து ஆண்ட தொண்டைமான் அதியமானிடம் போரிட முற்பட்டபோது ஔவையார் தூதுசென்று அதியமான் படைக்கலங்களைப் புகழ்வது போலப் பழித்தும் “இவ்வே பீலியணித்து மாலை சூட்டி” (புறம் 95) என்ற பாடலைப் பாடியதாக அறிகிறோம். நண்பராய், நல்லாசிரியராய் ஔவையார் அதியமானுக்கு விளங்கினார். பெருஞ்சேரல் இரும்பொறை தகடூர் மீது படையெடுத்தான். அதியமானுக்கு பாண்டியரும், சோழரும் உதவினர். ஆயினும் இறுதியில் இப்போரில் பெருஞ்சேரல் இரும்பொறை வென்றான். அதியமானைக் கொன்று தகடூரையழித்தான் என்ற செய்தி தகடூர் யாத்திரையில் கூறப்படுகின்றது.

தொட்டி மலையை ஆண்டவன் நள்ளி. இவனுடைய முழுப்பெயர் கண்டீரக் கோப்பெயர் நள்ளி என்பதாகும். இவனால் ஆதரிக்கப்பட்ட புலவர் பரணர். இப்புலவர் 'வறியவரின் நண்பன்' என இவனைப் பாராட்டுகின்றார். சேர மன்னனிடம் திறை செலுத்திய குறு நில மன்னன் இவன்.

கொள்ளைமலையை ஆண்ட ஓரி என்பவன் சேரராட்சிக்குக்கப்பம் கட்டி ஆண்டவ னாவான். இவனது குதிரைக்கும் ஓரி என்பது பெயர். இவன் வில்லாற்றல் மிக்கவன். ஒரே அம்பில் ஒரு யானை, ஒரு புலி, ஒரு மான், ஒரு கரடி அனைத்தையும் வீழ்த்தக் கூடியவன். ஆதலால் 'வல்வில் ஓரி' எனப்பட்டான். கோவிலூர்ச் சிற்றரசரான காரியுடன் ஏற்பட்ட போரில் இறந்தான்.

சங்க காலத்தில் நன்னன் என்ற பெயரில் பல சிற்றரசர்கள் அரசாண்டனர். சேர நாட்டின் வடமேற்குப் பகுதியை ஆண்டு கொண்டிருக்கும்போது களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரனால் தோற்கடிக்கப்பட்டான் ஒரு நன்னன். கொங்கணத்தை ஆண்ட நன்னன் புன்னாட்டின் மீது படையெடுத்தான். அப்போரில் புன்னாட்டினர்க்கு உதவியவன் ஆய் எயினன். நன்னனுக்கு உதவியவன் ஞமிலி. பாழி என்னுமிடத்தில் நடந்த இப்போரில் ஆய் எயினன் இறந்தான். தனது அரண்மனைத் தோட்டத்தில் பழுத்து விழுந்து கிடந்த ஒரு மாங்கனியை எடுத்து அறியாமல் உண்டதற்காக ஒரு பெண்ணைக் கொன்ற கொடியோனாகிய ஒரு நன்னனை புலவர்கள் இகழ்ந்து பாடியுள்ளனர். தொண்டை மண்டலத்தில் உள்ள பல்குறைக் கோட்டத்தை ஆண்ட நன்னனே மலைபடுகடாம் என்ற நூலின் பாட்டுடைத் தலைவனாவான். இவனுடைய ஈகைத் திறமையை நல்லூர் நத்தத்தனார் பாடியுள்ளார்.

கோசர்கள் துளுநாட்டைச் சார்ந்தவர்கள். சத்திய புத்திரர் என்று அசோகர் கல்வெட்டுக்களில் குறிக்கப்படுகின்றவர் இவர்களே என்று கருதப்பட்டு வந்தது. ஆனால் சத்தியபுத்திரர்கள் அதியமான்களே என்று ஒரு கல்வெட்டு நிரூபித்து விட்டது. சேர நாட்டின் வடபகுதியில் போரிட்டுச் சில பகுதிகளை வென்று ஆண்டவர்கள். கொங்கு நாட்டை ஆண்டவர்கள் கொக்கிளங் கோசர்கள் எனப்பட்டனர். சேரநாட்டின் ஒரு பகுதியைச் செங்குட்டுவன் காலத்தில் ஆண்டனர். இன்று சத்தியபுத்திரர் என்பது அதியமான் குடும்பத்தை, அதாவது மழவரைக் குறிப்பதாய் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடம்பர்கள் தமிழகத்தில் வாழ்ந்த நான்கு இராணுவக் குடிகளுள் ஒருவராவார். மைசூரின் தெற்கேயுள்ள பகுதிகளில் வசித்தனர். இவர்கள் மேலைக் கடற்கொள்ளைக் காரர்கள் எனவும் செங்குட்டுவன் கடற்போரில் இவர்களை வென்றதாகவும் கூறப்படுகின்றது. இவர்களுக்கு முருகன் குலதெய்வம். முருகனுக்கே கடம்பன் எனும் பெயருண்டு. கல்வெட்டுக்களில் நாமறியும் மயூரசர்மனின் குடியாகிய கதம்பர்கள் இக்கடம்பர்களின் வழி வந்தவர்களே என்பர் ந. சுப்பிரமணியன். ஆனால் கடம்பர்கள் தமிழ்நாட்டுக்கு வடக்கே, வனவாசியைத் தலைநகராகக் கொண்டுவாழ்ந்து வந்த இனத்தவரென்பது, அவர்கள் சேரநாட்டைத் தாக்கியதிலிருந்தும், யவனர்களுடன் சேர்ந்து

கடற்கொள்ளையிட்டனர் என்பதிலிருந்தும் அவர்களை இமயவரம்பன், சேரன், செங்குட்டுவன் போன்றோர் போரிட்டு வென்றதிலிருந்தும், பல்லவர்காலத்துத் தனியாட்சி செய்து வந்த இனத்தவர் என்பதிலிருந்தும் பெறலாம். முற்காலத் தமிழகம் மைசூர்ப் பகுதியையும், மேற்குக் கடற்கரைப் பிரதேசத்தில் எழில் மலை வரையுள்ள பகுதியை உள்ளடக்கியிருந்த போதிலும், கடம்பர் நாடு மொத்தமாகத் தமிழ் நாட்டுடன் இணைந்த ஒரு பகுதியாக என்றும் இருக்கவில்லை.

### பயிற்சி வினாக்கள்

1) சங்க இலக்கியங்களின் காலத்தை வரையறுக்க.

2) சங்ககாலச் சேரர்கள் பற்றிப் பதிற்றுப்பத்து மூலம் அறியப்பெறும் வரலாற்றை வரைக.

3) கரிகாற்சோழனின் சாதனைகளை மதிப்பிடுக.

4) பண்டைய பாண்டிய மன்னர்களின் சிறப்பியல்புகளைச் சங்க இலக்கியங்கள் மூலமாக விவரித்து எழுதுக.

5) சங்ககாலச் சிற்றரசர்களைப் பற்றிய கட்டுரை வரைக.

# பாடம் – 4 சங்ககால ஆட்சி முறை

சங்ககாலத்தில் தமிழகத்தைச் சேர, சோழ, பாண்டியர்கள் ஆண்டனர். இம்மூவேந்தர்கள் மிகப் பழமையானவர்கள் என்பதை இராமாயணம், மாகாபாரதம், அர்த்தசாத்திரம், காத்தியாயனம், அசோகரின் கல்வெட்டுக்கள் போன்றவை உணர்த்துகின்றன. ஸ்டிராபோ, பிளினி போன்ற ஆசிரியர்களின் குறிப்புக்களும் மூவேந்தர்களின் தொன்மையை உணர்த்தும்.

தமிழகத்தின் வடகிழக்குப் பகுதியில் சோழர்களும், தென்மேற்குப் பகுதியில் சேரர்களும், தெற்கு, தென்கிழக்குப் பகுதிகளில் பாண்டியர்களும் ஆண்டனர். இன்றைய சித்தூர், வடஆர்க்காடு, சென்னை, செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்கள் அக்காலத்தில் சோழ நாட்டிற்கு உரிய பகுதிகளாக இருந்தன. அவற்றுள் சித்தூர், வடஆர்க்காடு, சென்னை, செங்கற்பட்டு போன்றவை தொண்டை மண்டலத்தைச் சார்ந்த பகுதிகளாகும். காவிரிக்குத் தெற்கே ஆனைமலைக்குக் கிழக்கே கீழைக்கடல் வரையிலும் தென்குமரிமுனைவரை பரவிக் கிடந்த நிலப்பகுதி பாண்டிய நாட்டிற்கு உரியதாக இருந்தது. இன்றைய கேரளம், கோயம்புத்தூர், சேலம், தர்மபுரி மாவட்டங்கள் உள்ளிட்ட கொங்குநாடு சேரர்க்கு உரியதாக இருந்தது. சேரன் செங்குட்டுவன், நெடுஞ்சேரலாதன் காலத்தில் நீலகிரி, தெற்குக்காண்டம் போன்றவைகளும் சேரர் ஆட்சிக்குட்பட்டிருந்தன.

## அரசப்பதவியின் தோற்றம்

அரச பதவி என்பது காட்டைச் சாந்த முல்லை நிலத்திலிருந்தே தோன்றியிருக்க வேண்டும் என்று பி.டி. சீனிவாச அய்யங்கார் குறிக்கின்றார். தமிழில் அரசன் 'கோன்' எனப்படுகின்றான். கோன் என்றால் இடையன் என்பது பொருள் என்பதைக் கூறி தம் கொள்கையை நிலை நாட்டுகின்றார். அரசனே ஆட்சித்துறை மையமாக விளங்கினான். அரசனை கோ, மன்னன், வேந்தன், கொற்றவன், இறைவன் என்றழைத்தனர். மரபு வழிப்பட்ட முடியாட்சி வழக்கில் இருந்தது. மூத்தமகனே அரசுரிமைக்கு உரியவன். தந்தை அரியணையில் இருக்கும் போதே மகனும் ஆட்சித் துறையில் பயிற்சி பெற்றான் என்பதை இளஞ்செழியன், இளஞ்சேரல், இளங்கோசர், இளவெளிமான், இளவிச்சிக்கோன், போன்ற பட்டங்களால் அறியலாம்.

## புலவரும் புரவலரும்

அரசர்கள் புலவர்களை நன்முறையில் ஓம்பினர். புலவர்கள் அரசன் தவறு கண்ட இடத்துத் தயங்காது கண்டித்தனர். வெள்ளைக்குடி நாகனார் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனிடம் குடிமக்களை வருத்திப் பொருள் பெறக்கூடாது என்று அறிவுறுத்தினார். சோழன் நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் பகைத்த போது 'ஒருவீர் தோற்பினும் தோற்பது உம் குடியே' (புறம் 45) என்று அறிவுறுத்தி ஒரே குடியினராகிய இருவரும் பகைத்தல் நன்றன்று என்று கூறி இருவரையும் நல்வழிப்படுத்தினார். கிள்ளிவளவன் மலையமான் திருமுடிக்காரியின் மக்களை யானைக் காற்கீழிட்டுக் கொல்ல முயன்றபோது கோவூர்க்கிழார் அவனை நல்வழிப்படுத்தினார் (புறம் 46).

## அரசவை

மூவேந்தர்களும் சிற்றரசர்களும் தம்க்கென அரசவைகளைக் கொண்டிருந்தனர். ஓலக்கம், இருக்கை எனவும் அரசவை வழங்கப்பட்டது. அரசவை பெரும்பாலும் காலையில் கூடிற்று. இது நாளிருக்கை, நாளவை, நாள் மகிழிருக்கை எனவும் அழைக்கப்பட்டது.

அரசருக்கு உடனிருந்து உற்றன சொல்ல ஐம்பெருங்குழுவும், எண்பேராயமும் இருந்தன. அக்குழுவின் ஒரு பகுதி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டது. எனவே சங்ககாலம் முடியாட்சியாய் இயங்கிற்று எனலாம். அரசவையில் பணியாற்றுவோர் (1) நற்குடிப்பிறப்பு (2) நற்கல்வி (3) நல்லொழுக்கம் (4) வாய்மை (5) தூய்மை (6) நடுவு நிலைமை (7) அழுக்காறாமை (8) தன்னலமின்மை போன்ற எண் வகைக் குணங்களையும் உடையவர்களாயிருத்தல் வேண்டும் என்கிறார் தொல்காப்பியர்.

அக்கால அரசர்கள் நீதி தவறாத இயல்பினர்; செங்கோலினர்
“அறநிலை திரியா அன்பின் அவையறுத்துத்
திறனில் ஒருவனை நாட்டிமுறை திரிந்து
மெலிகோல் செய்தேனாகுக” (புறம் 71)

என்ற ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியனின் வஞ்சின உரையாலும், ‘குடிபழி தூற்றும் கோலேனாகுக’ என்ற தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனின் வஞ்சினத் தாலும் செங்கோன்மை தவறாது அரசாள்வதை உயிரினும் மேலாகப் போற்றினர் என்பது பெறப்படும்.

அரசர்கள் ‘மானம் கெடவரின் வாழாமை முன் இனிதே’ என்பதற்கேற்ப மான உணர்வினராய் வாழ்ந்தனர். வெண்ணிப்போரில் கரிகாலனுடன் போரிட்ட சேரன் பெருஞ்சேரல் இரும்பொறை முதுகில் புண்ஏற்பட்டதால் அவமானம் தாங்காமல் உயிர் நீத்தான். காவலர் காலம் தாழ்த்தி நீர் கொணர்ந்ததால் சிறையிலிருந்த கணைக்காலிரும் பொறை அந்நீரைப் பருகாது உயிர்நீத்தான். தன் மக்கள் தன்னுடன் போருக்கெழுந்த மையால் மானம் பொறாது வடக்கிருந்து உயிர்துறந்தான் கோப்பெருஞ்சோழன். எனவே மயிர் நீர்ப்பின் வாழாக் கவரிமானைப் போல வாழ்ந்தனர் அக்கால மன்னர் என்றறியலாம்.

ஒவ்வொரு அரசனும் தனித்தனியே கொடி, குடை, முரசு, குதிரை, யானை, தேர், மாலை, முடி முதலியவைகளை இன்றியமையாத சின்னங்களாய் வைத்திருந்தனர். சேரர்க்கு வில்லும், சோழர்க்குப் புலியும், பாண்டியர்க்கு மீனும் அடையாளச் சின்னங்கள். மூவரும் முறையே பனம் பூ, அத்திப் பூ, வேப்பம் பூவை உரிமைப் பூவாய்க் கொண்டிருந்தனர். போர்க்காலங்களில் அவரவர்கசுரிய மாலைகளை கழுத்தில் மட்டு மின்றி தோள்களிலும் தலையிலும் அணிந்தனர். கழுத்திலணிவது நார் எனவும், தலையில் அணியும் மாலை கண்ணி எனவும் வழங்கப்பட்டது. அவரவர்க்குரிய மாலையுடன் போர்க்காலத்தில் வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, மாலைகளையும் அணிந்தனர்.

எல்லா அரசர்களும் காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படை போன்ற நால்வகைப் படைகளை உடையவர்களாயிருந்தனர். கப்பற்படையும் இருந்த தாகவும் செய்திகளுள்ளன.

## பொருளாதாரம்

சங்ககாலத்தில் மிகவறியர், மிகச்செல்வர் என்ற இருவகை நிலையில் மக்கள் இருந்தனர். அக்காலப் பணக்காரனுக்கும், ஏழைக்கும் இருந்த இடைவெளி இக்காலப் பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்குமிடையே இருக்கும் இடைவெளியை விடக் குறைவாக இருந்ததாக ந. சுப்பிரமணியன் குறிக்கின்றார். செல்வத்துப் பயன் ஈதல் என்ற உணர்வுடன் செல்வரும் அரசர்களும் வாழ்ந்ததால் ஏழைகளுக்குப் பொருளை வாரி வழங்கினர். புலவர்களும் அரசர்களால் நல்ல முறையில் ஆதரிக்கப்பட்டனர்.

## உழவுத் தொழில்

சங்ககாலத் தமிழகத்தின் பொருளாதாரம் உழவுத் தொழிலை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்தது எனலாம். ‘ உழுவார் உலகத்தார்க்கு ஆணி’ எனவும் ‘உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்’ எனவும் வள்ளுவர் புகழ்கிறார். ‘அகல உழுவதினும் ஆழ உழுதல் நன்று’ என்ற கொள்கையுடன் ஏர்கொண்டு உழுதனர். ஓரேர் உழவன் என்பது சங்க காலத்தில் வாழ்ந்த ஒரு புலவர் பெயராகும். அக்காலத்தில் ஒருவனிடம் எத்தனை மாடுகள் இருந்தனவோ அதைக் கொண்டு அவனுடைய செல்வம் மதிப்பிடப் பட்டது. மாடு என்ற சொல்லுக்கே செல்வம் என்பது பொருளாகும்.

தமிழகத்தில் அடிக்கடி நடைபெற்ற போர்களால் உழவுத் தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டது. வெற்றி பெற்ற அரசனின் வீரர்கள் பகைவர் நாட்டுக்குத் தீயிட்டுப் பயிர்களைப் பாழக்கினர் என்பதைப் புறநானூறு, பதிற்றுப்பத்து போன்றவை மூலம் அறிகிறோம். மேலும் மழையின்மையால் ஏற்பட்ட வறட்சியால் உழவுத் தொழில் பாதிக்கப்பட்டது. தமிழ் நாட்டு உழவர் வானோக்கி வாழும் குடிகள். எனவே மழையின்மையால் பஞ்சங்கள் ஏற்பட்டன. பாண்டிய நாட்டில் பன்னிரண்டு ஆண்டுகள் தொடர்ந்து பஞ்சம் நிலவியதுண்டு.

கரிகாலன் காவிரிக்கு அணை கட்டினான். வேளாண்மையின் வளர்ச்சிக்காக நீர்ப்பாசன வசதிகள் பல செய்யப்பட்டன. இதற்காகத் தனிப்பட்ட முறையில் வரி வாங்கப்பட்டது.

## கைத்தொழில்கள்

உழவுக்கு அடுத்தபடியாக ஆடை நெய்வது முக்கியமான தொழிலாக இருந்தது. உழவுத் தொழிலில் ஈடுபட்டவர்கள் கூட வேலையற்ற சமயத்தில் நெசவுத் தொழிலையே மேற்கொண்டனர். உறையூர், மதுரை போன்ற ஊர்கள் நெசவுத் தொழிலில் சிறப்புற்றிருந்தன.

கொல்லர்கள் சம்மட்டி கொண்டு இரும்பை வளைத்து நெளித்துக் கருவிகள் செய்த சிறப்பைப் பெரும்பாணாற்றுட்பபடை, குறுந்தொகை மூலம் அறியலாம். பொன்னை உரைத்து மாற்றக் கா்ணும் கல் உரைகல், கட்டளைக்கல் எனப்பட்டது. மதுரைக் காஞ்சி, குறுந்தொகை மூலம் பொற்கொல்லர் திறம் உணரப்படுகிறது.

அக்காலத்தில் தச்சர்கள் சிற்ப நூல் வல்லுனராய் விளங்கினர். அரசனுக்குரிய மாளிகையைக் கட்டும்போது நேரம், பொழுது பார்த்துச் சிறந்த முறையில் மாளிகைகள் கட்டப்பட்டன என்பதை நெடுநல்வாடை கூறுகின்றது. கதவுகளில் மிக அழகான வேலைப்பாடுகள் செய்யப்பட்டன. அரசர்க்குரிய கட்டில்களின் அமைப்பும், கட்டிற் கால்களில் வேலைப்பாட்டழகும் இந்நூலில் மிக அழகாக விளக்கபட்டுள்ளன.

குயவர்கள் மக்களுக்குத் தேவையான மட்பாண்டங்களைச் செய்தனர். சூளையில் குயவர் மட்பாண்டங்களைச் சுடும் போது ஏற்படும் புகை மலையையும் மறைத்ததாக அகநானூறு கூறும்.

'கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள்
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்'

என்ற முறையில் கைத்தொழிலில் வல்லவராய் விளங்கினர் சங்க காலத் தமிழர்.

## வெளிநாட்டு வாணிபம்

சங்கத்தமிழர் திரைகடலோடி வாணிபம் செய்தனர். பிறநாட்டினரும் இங்கு வந்து தங்கி வாணிபம் செய்ய அரசர்கள் வசதி செய்து தந்தனர். புகாரிலும், மதுரையிலும் யவனர்கள் வந்து தங்கி வாணிபம் செய்தனர். அவர்கள் வசித்த இடம் 'யவனர் இருக்கை' எனப்பட்டது.

'யவனர் தந்த வினை மாண் நன்கலம்' (அகம் 149) 'யவனர் நன்கலம் தந்த தண்கமழ் தேறல்' (புறம்) போன்றவை யவனருடன் தமிழர் செய்த வணிகத்திற்குச் சான்று பகர்வன. புதை பொருளாராய்ச்சியில் கிடைத்த ரோமாபுரி நாணயங்களும், பிளினி, தாலமி குறிப்புக்களும் யவனர் தொடர்பை உறுதிப்படுத்துகின்றன. தமிழகத்திலிருந்து ஏற்றுமதியானவற்றுள் மிளகு, சந்தனம், ஏலம், தேக்கு, தந்தம், மயில்தோகை, முத்து போன்றவை முக்கிய இடத்தைப் பெற்றனவாகும்.

கலிங்க நாட்டுடன் தமிழர் வாணிகம் செய்தனர். தமிழ் வணிகரால் தன்னுடைய ஆட்சிக்கு ஆபத்து வரும் என்றெண்ணி காரவேலன் என்ற அரசன் தமிழ் வணிகரை ஒடுக்கினான் என்று ஹதிகும்பாப் பட்டயம் தெரிவிக்கின்றது.

இலங்கை நாட்டுடன் இருந்த வணிகத் தொடர்பை அனுராதபுரத்தில் உள்ள பிராமிக் கல்வெட்டு உறுதிப்படுத்தும்.

## உள்நாட்டு வாணிபம்

உள்நாட்டு வாணிபமும் சிறப்பாக நடைபெற்றது. பொருள்கள் வண்டிகள் மூலமாக நகரத்தின் பல பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லப்பட்டன. வணிகர் கூட்டாய்ச் செல்வது வழக்கம். இக்கூட்டத்திற்கு வணிகச் சாத்து என்பது பெயர். ஐந்நூறு உறுப்பினர் கொண்ட ஐந்நூற்றுவர், பல நாட்டு உறுப்பினர்களைக் கொண்ட நானா தேசிகள், மணிக்கிராமம் (வாணிகக்கிராமம்) ,வலஞ்சியர், நகரத்தார், அஞ்சுவண்ணம் போன்றவை அக்காலத்தில் இருந்த வணிகக் குழுக்களாகும். சிறந்த முறையில் வாணிபம் செய்தவர்களுக்கு எட்டி, காவிதி போன்ற பட்டங்களும், பரிசுகளும் மன்னரால் வழங்கப்பட்டன.

## வருவாய்த்துறை

பழந்தமிழர் பாராளும் மன்னர்க்கு வரி செலுத்தினர். வரிகளை விதித்தல், திரட்டல், நீக்குதல் போன்றவைகளை அக்கால மன்னர்கள் அறிந்திருந்தனர். இவ்வரியைக் காசாகவும், பொருளாகவும் மக்கள் செலுத்தினர். அக்காலத்தின் அரசனது வருவாய் துறை அல்லது இறை எனப்பட்டது. சிற்றரசர்கள் கட்டிய கப்பம் திறை எனப்பட்டது. ஏற்றுமதி இறக்குமதி பொருள்களுக்கான வரிகளும், நெடுஞ்சாலைகளையும், ஆறுகளையும் கடக்கும்போதும், ஊருக்குள் நுழையும்போதும் செலுத்துவது சுங்கம் எனப்பட்டது. காவிரிப்பூம்பட்டினத்தில் வந்திறங்கிய பொருள்களின் மீது சுங்கம் விதிக்கப்பட்டது. சுங்கம் வாங்கிய பொருள்களின் மீது கரிகாலனின் புலிச்சின்னம் பதிக்கப்பட்டது என்பதைப் பட்டினப்பாலையால் அறியலாம். பகையரசர் தரும் கப்பமும் அரசனைச் சாரும் சொத்துக்குரியவர் இல்லாதபோது அச்சொத்து அரசனையோ, அந்தணர்களையோ, கோவில்களையோ சாரும். பஞ்ச காலங்களில் வரி நீக்கம் அரசனால் செய்யப்படும். இவ்வரிகளை மக்களிடமிருந்து வாங்கி அரசனுக்கு அனுப்புவது கிராம சபையாரின் பொறுப்பாகும்.

# சமுதாயம்

## சாதிப்பிரிவுகள்

தமிழர் சமுதாயம் தொடக்க காலத்தில் குடிகள், குலங்கள் என்பவை மலிந்த சமுதாயமாக இருந்ததாக ந. சுப்பிரமணியன் கூறுகிறார். ஆனால் சங்க காலத்தில் பிற்காலத்திலிருந்தது போன்ற சாதிப் பிரிவுகள் இருந்ததற்குச் சான்றுகள் இல்லை என சி.ஈ. இராமச்சந்திரன் கூறுகிறார்.

ஐவகை நிலங்களின் அடிப்படையில் சங்க கால மக்களின் வாழ்க்கை அமைந்திருந்தது. குறிஞ்சி (மலை) நிலத்திலே வாழ்ந்தவர் குறவர் எனவும், முல்லை (காடு) நில மக்கள் ஆயர் எனவும், மருத (வயல்) நிலத்தவர் உழவர் எனவும், நெய்தல் (கடல் சார்ந்த இடம்) நில மக்கள் பரதவர் எனவும் அழைக்கப்பட்டனர்.

புறநானூரில் துடியர், பாணர், கடம்பர், பறையர் என்ற நால்வகைக் குடிகளைப் பற்றிக் கூறப்படுகிறது. கடம்பர் என்பவர் கற்போர் வீரர்கள் ஆவர். வீரர்களின் புகழைப் புகழ்ந்து பாடுபவர்கள் பாணர்கள். இக்குடிப்பிறப்புகள் பிற்காலச் சாதிப்பிரிவினைகளைப்

போலவே ஒனறோடொன்று சேராமல் தனித்து இயங்கின என்கிறார் ந.சுப்பிரமணியன். மேலும் தீண்டாமை உணர்வு சங்க காலத்திலேயே இருந்தது என்றும் கூறி, சிலப்பதி காரத்தில் உயர்சாதியைச் சார்ந்த கோவலனைப் பொற்கொல்லன் நெருங்காமல் விலகிச் சென்றமையையும் சான்றாகச் சுட்டிக் காட்டுகிறார்.

அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்ற நான்கு பிரிவுகளைத் தொல்காப்பியர் சுட்டிக் காட்டுகிறார். எனவே ஒரு குடியை விட மற்றொரு குடி உயர்ந்தது என்ற எண்ணம் இருந்தமை தெளிவு. மேலும் உயர்ந்தோர், பின்னோர், இழிந்தோர் போன்ற சொற்களைத் தொல்காப்பியர் எடுத்தாள்வதால் உயர்வு, தாழ்வு மனப்பான்மை நெடுங்காலமாகவே தமிழகத்தில் இருந்தது பெறப்படும். சமுதாயத்தின் கீழ்மட்டத்து மக்கள் அடிய்வர், வினையாளர் எனப்பட்டனர். அந்தணர் என்போர் அறவோர். அறிவு, ஈகை, பொறுமை குணங்களைக் கொண்டவர் எவரும் அந்தணரே.

தொல்காப்பியர் காலச் சமுதாயத்தில் நால்வகையாகப் பிரிக்கப்பட்ட போதும் உறுதியான சாதி முறை ஏதும் இல்லை என்றும், இப் பிரிவுகளுக்குள் உணவுக் கலப்போ திருமணக் கலப்போ தடை செய்யப்படவில்லை எனவும், வேளாளர் குறவரின் மகளை மணந்ததாகவும், சாதிக்கொடுமை தொடக்க காலத்தில் தமிழ்ச் சமுதாயத்தில் வேரூன்றவில்லையெனவும் சி.ஈ. இராமச்சந்திரன் கூறுவர். ஆனால் இச்சாதிகளுள் கலப்பு மணமும், ஒருங்கிருந்து உண்ணலும் பெரும்பாலும் தவிர்க்கப்பட்டதாக ந. சுப்பிரமணியன் கூறுகிறார்.

சங்க இலக்கியங்களில் 'இழிச்சினன்' 'இழி பிறப்பாளன்' போன்ற சொல்லாட்சிகளைக் காண்கிறோம். இழிச்சினன் என்ற சொல் அவன் பிறந்த குலத்தைக் காட்டுவதில்லை. ஆனால் தன் செய்கையின் விளைவால் இழிந்தோன் ஆயினான்.

"வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளம்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனும் அவன்கட்படுமே"

என்ற பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனின் பாடலால் மேல்சாதி, கீழ்சாதி என்ற உணர்வு அக்காலத்திலேயே இருந்தது என்பதையறியலாம். இச்சமுதாயப் பாகுபாடு வட இந்தியரின் ஊடுருவலால் தமிழகத்தில் தழைத் தோங்கலாயிற்று.

சுருங்கக் கூறுமிடத்துத் தமிழ் நாட்டில் தொழில் அடிப்படையில் ஏற்பட்ட சாதிப்பிரிவு பின்னர் பிறப்பை அடிப்படையாகக் கொண்டதாக மாறிற்று. தமிழ்ச் சமுதாயப் பிரிவு ஆரியரது சாதிப் பிரிவினின்று மாறுபட்டதாகும். வருண அடிப்டையி லான ஆரிய அமைப்பும், தொழில் அடிப்படையிலான திராவிட அமைப்பும், நாளடை வில் இணைந்து சாதி முறையாக மாறிவிட்டது என்பர் கே.கே. பிள்ளை.

### அடிமை நிலை

தமிழ்நாட்டில் மனிதனை மனிதன் அடிமையாக்கும் அவல நிலை என்றுமே இருந்ததில்லை என்பார் வே. கனகசபை. இந்தியாவில் அடிமைநிலை இருந்ததில்லை. என்கிறார். மெகஸ்தனீஸின் குறிப்புகள் இக்கருத்தை மறுப்பதாக உள்ளன. ந. சுப்பிரமணியன் அடிமைகளை வாங்கவும் விற்கவும் சந்தைகள் இல்லை; கிரேக்க ரோமானிய அடிமைகளைப் போல் இந்திய அடிமைகள் நடத்தப்படவில்லை. எனினும் அடிமை நிலை என்ற ஒன்று இருந்தது என்கிறார். அடிமைகள் பற்றிய சில குறிப்புக்கள் தொல்காப்பியத்தில் இருப்பதாகக் கருதப்படுகிறது. யாரும் பிறவியில் அடிமையாகாது, தம்செயல் மூலம் சிறியோர் ஆனார் என்று நாம் கொள்ளலாம். கீழ்ப்பட்ட நிலையில் வேளாண் தொழில் செய்தவர்களும், இழிச்சினன் எனப்பட்டவர்களும் அடிமை நிலையில் இருந்தவர்கள்தான். அரிச்சந்திரன் தன் மனைவி, மகனை ஓர் அந்தணனுக்கு விற்ற கதையும் இதற்குச் சான்றாகும். அடிமைகளை அடையாளம் கண்டு கொள்வதற்காக மார்பில் சூடுபோடும் வழக்கம் இருந்தது என்பதைக் கலித்தொகை குறிப்பிடுகின்றது.

### மகளிர் நிலை

சங்ககால மகளிர் கல்வி கேள்விகளில் சிறந்திருந்தனர். காக்கைப்பாடினியம், சிறுகாக்கைப்பாடினியம் போன்றவை காக்கைப் பாடினியார் என்ற பெண்பாற்புலவரால் பாடப்பட்டவையே நன்முல்லையார், நச்சசெள்ளையார், முடத்தாமக்கண்ணியார், நப்பசலையார், பொன்முடியார், ஔவையார் போன்ற முப்பதுக்கும் மேற்பட்ட பெண்பாற்புலவர்கள் இருந்தனர்.

விருந்தோம்பலை அக்கால மகளிரின் சிறந்த பண்பாகக் கூறலாம். அறவோர்க்களித்தல், அந்தணர் ஓம்பல், துறவோர்க்கெதிர்தல், தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர்கோடல் நான்கும் சங்ககால மகளிரின் சிறந்த பண்புகளாகும்.

> "அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்
> முல்லை சான்ற கற்பின்
> மெல்லியல் குறுமகள்"

என்ற நற்றிணைப் பாடல் அக்கால மகளிரின் செல்விருந்தோம்பிவருவிருந்து பார்த்திருக்கும் பண்பை விளக்குவனவாகும்.

அவர்கள் வீரத்திலும் சிறந்திருந்தனர். வீரக்குடியில் பிறந்தவர்கள் மூதின் மகளிர் எனப்பட்டனர். ஈன்று புறந்தருதல் தாயின் கடனாகவும் சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனாகவும் கருதப்பட்டது. அக்கால மகளிர் வீரர்களையே திருமணஞ்செய்து கொள்ள விரும்பினர் என்பதை

> "கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்
> புல்லாளே ஆயமகள்"

என்ற கலித்தொகை பாடல் வரிகளால் அறியலாம்.

வினையே ஆடவர்க்கு உயிர்; மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர் என்று கருதப்பட்டாலும் வெளிவேலைகளையும் பெண்கள் செய்தனர். "கொடிச்சியர் காக்கும் அடுக்கற்பைந்தினை" எனும் நற்றிணை வரிகளால் குறவர் குலப்பெண்கள் கவண்கல் கொண்டு பறவைகளை ஓட்டுவதற்காகப் பரணில் ஏறுவர் என்று அறியலாம். பாலை நிலத்து எயிற்றியர் உறுதியான பிடியினையும் இரும்பு அலகினையுமுடைய மண்வெட்டிகளால் நிலத்தைத் தோண்டி நெல் விதைத்தனர். நெல் குற்றும் போது வள்ளைப் பாட்டு பாடினர்; பாசறையிலும் பெண்கள் பணியாற்றியதை நெடுநல்வாடை கூறும். பணிப்பெண்டிராயும், விளக்கேற்றுபவராகவும் பாசறையில் பணியாற்றினர். கற்பு என்பது இருபாலார்க்கும் உரியதாகக் கூறப்படினும் ஆடவர் பொதுப் பெண்டிருடன் உறவு கொண்டிருந்ததைப் பல இலக்கியங்கள் மூலம் அறிகிறோம். பரத்தையர்கள் ஒன்றாக வாழ்ந்த இடம் பரத்தையர் சேரி எனப்பட்டது.

## இல்லற வாழ்க்கை

கொடுப்பாரும் கொள்வாருமின்றித் தலைவனும், தலைவியும் தாமே எதிர்ப்பட்டு அன்பு கொண்டு ஒழுகுவது களவு வாழ்க்கை எனப்படும். ஊரறிய மணம் செய்து வாழ்வது கற்பு வாழ்க்கை எனப்பட்டது. " பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரணம் என்ப" என்று தொல்காப்பியர் கூறுவதால் திருமணம் என்பது பிற்காலத்து ஏற்பட்ட வழக்கமென்பது புலனாகும். இங்கு ஐயர் என்பது பிராமணரைக் குறிப்பதாகக் கொள்ளல் ஏற்புடைத்தல்ல. அச்சொல் குடும்பத்தின் தலைவன் அல்லது தலைவியையே குறிப்பதாகக் கொள்ள வேண்டும். தமிழர் திருமணத்தில் தாலி கட்டும் வழக்கம் இருந்ததாகக் கூறலாம். ஆனால் வேதகால வைதீக முறைப்படி தமிழகத்தில் மணம்புரியும் முறையைச் சிலப்பதிகாரம் கூறுகிறது. தமிழர் திருமணத்தில், 'முலைவிலை' பெண்ணுக்கு ஆண் தந்ததாக அறிகிறோம். ஆனால் 'சீர்வரிசை' பெண் ஆணுக்குத் தந்ததாக அறியப்படவில்லை.

மக்கட்பேறின் மாண்பினை அறிந்து போற்றினர். "மயக்குறு மக்களையில்லோர்க்குப் பயக்குறை இல்லைத் தாம் வாழ்நாளே" (புறம் 188) என்று பாண்டியன் அறிவுடை நம்பி கூறுகிறான். "களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடன்" என்று பொன்முடியார் கூறுவதிலிருந்து (புறம் 312) போர்க்களத்தில் வீரத்துடன் போரிடும் மகனை அக்காலத்தில் போற்றினர் என்றறிகிறோம்.

## சதி

சதி என்பது உடன்கட்டையேறுதலைக் குறிக்கும். தமிழர்களிடையே உடன்கட்டை யேறும் பழக்கம் பொதுவாகக் காணப்பட்டது என்று கூறுவதற்கில்லை என்பார் சி.ஈ. இராமசந்திரன். ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் இறந்தபோது அவன் மனைவி பெருங்கோப்பெண்டு உடன்கட்டை ஏறினாள். அப்போது அவள் கூறியதாக புறநானூற்றுப் பாடல் கைப்பெண்களின் அவல நிலையை உணர்த்துவன. நீர் விட்ட சோற்றைப் பிழிந்து அதனுடன் அரைத்த எள், புளி இவற்றைச் சேர்த்துண்டனர். பாய்மேல் படுக்காது தரையில் படுத்துறங்கினர். தலையை மழித்துக் கொண்டனர் என்று புறநானூறு (பாடல் 25) கூறுகின்றது. தலையை மழித்தல் பற்றித் தொல்காப்பியம்

குறிப்பிடவில்லை. சமண, பௌத்தர்களின் வருகையால் இப்பழக்கம் ஏற்பட்டிருக்கலாம் என்பது கே.கே. பிள்ளையின் கருத்து. கணவனுடன் உடன்கட்டை ஏறிய பெண்டிர் சான்றோரால் பாடப்பட்டனர். சாதுவன் மனைவி ஆதிரை எரிபாய முயன்றாள். சீத்தலைச்சாத்தனார் அவளைப் புகழ்கின்றார். தலைக்கற்பு, இடைக்ககற்பு, கடைக்கற்பு என்ற மூன்று நிலை இருந்தது. கோவலனைக் கொன்ற பிழையுணர்ந்து மன்னன் இறக்க உடனே உயிர் நீத்தாள் ஆரியப் படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியனின் மனைவி. இது தலைக்கற்பு. பெருங்கோப்பெண்டு இயற்கையாக உயிர் இழக்காவிடினும் எரிபாய்ந்து உயிர் நீத்தாள். இது இடைக்கற்பு, கைம்மை நோற்பது கடைக்கற்பாகக் கருதப்பட்டது. கைம்பெண்டிர் பல இன்னல்களை அனுபவிக்க வேண்டியிருந்ததால் கைம்மை நோன்பைவிட எரிபாய்தலே அறிவுடைய செயலாகக் கருதப்பட்டது.

## உண்ணும் உணவும் பருகும் நீரும்

ஐவகை நிலங்களில் அங்கங்கு கிடைக்கும் பொருள்களை உணவாகக் கொண்டனர். அரிச் சோற்றை நீர்விட்டு வைத்து, மீன் குழம்புடன் மயக்கம் வரும்படி உழவர்கள் உண்டதை நற்றிணை குறிக்கும். மாதுளங்காயின் பிஞ்சுகளை வெண்ணெயில் பொரித்து, மிளகுப்பொடி சேர்த்து உண்டனர். செம்மறியாடு, மான், முயல், காடை, கோழி, உடும்பு முதலியவற்றை உண்டனர். மிளகு, புளி, உப்பு போன்றவை சமையலில் சேர்க்கப்பட்டன. பொதுவாக அசைவ உணவை அதிகம் உண்டாலும் மரக்கறி உணவை உண்பதும் மரபாக இருந்தது. துறவியரும், கைப்பெண்டிரும் மிக எளிய உணவை உண்டனர். வெற்றிலைப் பாக்கு போடும் பழக்கம் இருந்தது. கண்ணகி கோவலனுக்கு வெற்றிலைப்பாக்கு அளித்ததைச் சிலம்பு கூறும்.

கள்ளுண்டு களிக்கும் வழக்கம் தமிழகத்தில் மிகச் சாதாரணமாக நடைமுறையில் இருந்தது. பலவகைப்பட்ட மது தயாரிக்கப்பட்டது. "யவனர் நன்கலம் தந்த தண் கமழ் தேறல்" என்ற புறப்பாடலால் யவன நாட்டு மதுவை அரசர்கள் விரும்பி அருந்தினர் என்றறியலாம். அரசர்கள் தம்மை நாடி வந்த புலவர்களுக்கு மதுவும் மாமிசமும் வாரி வழங்கியதை ஆற்றுப்படை நூல்கள் அறிவிக்கின்றன. மதுவின் போதையை பாம்பின் விடத்திற்கு உவமையாகக் கூறினர். "இன் கடுங்கள்ளின் ஆமூர்" என்ற புறப்பாடல் வரி நாட்டின் வளத்தை மதுவின் வளம் கொண்டு விளக்குகிறது.

## ஆடை அணிகலன்கள்

'உண்பது நாழி உடுப்பவை இரண்டே' எனும் புறப்பாடல் வரியால் மேலாடை, இடையில் கட்டும் ஆடை என இரண்டு ஆடைகளை மட்டுமே ஆடவர் அணிந்ததை அறியலாம். உயர்குடி மக்கள் மிகக் குறைந்த ஆடையே உடுத்தினர். தமிழகத்தின் வெப்ப நிலை இதற்குக் காரணமாக அமைந்திருக்கலாம். மேலாடை அணிகின்ற பழக்கம் இரு பாலரிடத்தும் இல்லையென்பது வி. கனகசபைப் பிள்ளையின் கருத்தாகும். இடுப்பில் ஒரு ஆடையையும், தோளில் தொங்கும் துண்டையும் உடைய கல்லா மாக்கள் மதுரை வீதிகளில் நடந்து கொண்டிருந்ததை "இரு கோடாறுவையர் வேண்டுவயின் திரிதர" என்று நெடுநல்வாடை குறிக்கின்றது. அக்காலத்தில் பணியாளர்கள் மட்டுமே வேட்டியும், சட்டையும் அணிந்திருந்தனர் என்பர் கே.கே. பிள்ளை. மெய்ப்பை , கஞ்சுகம் என்பது

தைத்த சட்டையைக் குறித்தது. யவனர்கள் மெய்ப்பை அணிந்திருந்தனர். பவளநாடு சென்று வந்த ஒற்றர்களும் தைத்த ஆடைகளை அணிந்தனர். சட்டை அணிந்தவர்கள் கஞ்சுகர்கள் எனப்பட்டனர்.

இருபாலாரும் ஆடைகளைக் காட்டிலும் பொன்னாலும், மணியாலும் செய்த அணிகலனையே தம் உடம்பை மறைப்பதற்கு அணிந்திருந்தனர். வீரக்கழலை போர் வீரர்களும், சிலம்பை மகளிரும் காலில் அணிந்தனர். சிலப்பதிகாரத்தில் மெட்டி, பரியகம், நூபுரம், பாடகம், சதங்கை, முத்துவடம், முடுத்து, மேகலை, வளை, ஆடகம் போன்ற பல அணிகலன்களைப் பற்றிய குறிப்புள்ளது. பெண்கள் இடையில் அணியும் பட்டிகையை மேகலை, காஞ்சி, கலாபம், பருமம், விரிசிகை என ஐவகையாகப் பிரித்திருந்தனர். குதம்பை என்பது காதில் அணிவது. குழந்தைகளுக்கு ஐம்படைத்தாலி அணிந்தனர். குழந்தைகளைத் தீயவற்றினின்றும் ஐம்படைத் தாலி காப்பதாக நம்பினர். பாண்டியன் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனைப் போர்க்களத்தில் கண்ட இடைக்குன்றூர்க் கிழார் " தாலிகளைத்தன்னும் இலன்" என வியக்கின்றார். ஐம்படைத் தாலியைக் கூட கழற்றாத இளமையை உடையவன் என்பது இதன்பொருள். மூக்குத்தி தமிழர்க்குரியதல்ல என்கிறார் ந. சுப்பிரமணியம். 13, 14- ஆம் நூற்றாண்டுக்குப் பின் வந்த முகமதியர்களால் மூக்குத்தி அணியும் பழக்கம் ஏற்பட்டிருக்கலாம் என்கிறார்.

தமிழர்கள் வாழ்வில் மலர்கள் பெற்ற இடம் முக்கியமானதாகும். ஐந்திணைகளின் பெயரும், புறத்திணைகளின் திணை, துறைப் பெயர்களும் மலர்களின் பெயர்களே. குழல், அவகம், கொண்டை, பனிச்சை, துஞ்சை என்று மகளிர் ஐந்து விதமாகத் தங்கள் கூந்தலை அலங்கரித்தனர். 'ஐம்பால்' என்பது அதற்குப் பெயர். கூந்தலை அகிற் புகை கொண்டு உலர்த்தினர்; மை தீட்டினர்; கண்ணாடி கொண்டு தம் அழகைக் கண்டு உவந்தனர். ஆடவர் தலையில் சூடும் பூ 'கண்ணி' என்பப்பட்டது. தோளில் அணிந்த மாலை 'தார்' எனப்பட்டது.

## பொழுதுபோக்கு

அக்காலத்தில் மக்கள் பல விதமான பொழுதுபோக்கு விளையாட்டுகளில் ஈடுபட்டிருந்தனர். ஆடவர்களுக்கு மற்போர் செய்தல், ஆடு சேவல் இவற்றை மோத விட்டு வேடிக்கைப் பார்த்தல், வேட்டையாடல் போன்றவை உரியனவாகும். ஊசல் ஆடுதல், கழங்காடல், பூப்பந்தாடல் போன்றவை மகளிர்க்குரியன. வயதானவர் ஓரிடத்தில் அமைதியாக அமர்ந்து வல்லாட்டம் ஆடுவர். கடற்கரைக்குச் செல்லுதல், வண்டல் விளையாடல், ஒருவரோடொருவர் கைகோர்த்தாடல், நீராடல், கிளிவளர்த்தல், திருவிழா காணச் செல்லல் போன்றவை அனைவருக்கும் உகந்தவைகளாகும்.

## பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்

மணமான பெண்டிர் மங்கலத்தாலி அணிந்திருந்தனர். திருமணமாகாத பெண்டிர் மட்டுமே சிலம்பு காலில் அணிவர். திருமணத்திற்கு முன் அச்சிலம்பைக் களைந்து புதுச் சிலம்பை அணிவிப்பர். 'இது சிலம்பு கழி நோன்பு' எனப்பட்டது. பல்லி எழுப்பும் ஓசையாலும் கண் துடிப்பதாலும் நன்மை தீமையைக் கணித்தனர். காகத்திற்குச்

சோறிடுவர். காகம் கரைவது விருந்தினர் வருவதைக் குறிப்பதாக நம்பினர். இறந்தோர் உடலை எரியூட்டுவர் அல்லது புதைப்பர். இறந்தோர்க்கு பிண்டம் வைத்துத் தென்புலத்தாரை வழிபட்டனர். போரில் இறந்த வீரர்களுக்கு நடுகல் நடப்பட்டது. நடுகல்லும் வழிபாட்டுக்குரியதாயிற்று. மன்னர், வீரர் இறந்து எரித்த அல்லது புதைத்த இடங்களில் பள்ளிப் படைக்கோயில்களை எழுப்பினர்.

## நுண்கலை

இயல், இசை, நாடகம் மூன்றிலும் தமிழர் வல்லவர்களாயிருந்தனர். நாடக அரங்குகளில் வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்ட திரைச் சீலைகள் (எழினி) தொங்க விடப்பட்டன. தமிழிசையே யாண்டும் முழங்கிற்று. குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பவை ஏழிசைகளைக் குறித்தன. பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டுயாழ், ஆதியாழ் போன்றவை வழக்கிலிருந்தன. சங்க இலக்கியங்களில் உள்ள ஆற்றுப்படைகள் இசைக்குத் தமிழர் அளித்த சிறப்பை விளக்கும் "இன்குரல் சீரியாழ் இடவையின் தழீஇ" வாசிக்கும் சிறுபாணர்களை ஆற்றுப்படுத்தியது சிறுபாணாற்றுப்படை; பெரியாழ் வாசிப்பவர் பெரும்பாணர். அவர்களை ஆற்றுப் படுத்தியது பெரும்பாணாற்றுப்படை, பொருநர்களை ஆற்றுப்படுத்தியது பொருநராற்றுப் படை. இந்நூல் யாழின் அமைப்பை மிக அழகாக விளக்கியுள்ளது. ஆடும் விறலியரின் நடந்து சிவந்த பாதம் ஓடி அழைத்த நாயின் நாக்கிற்கு உவமையாக்கப்பட்டுள்ளது. நயமிக்க கூத்தர்களை ஆற்றுப்படுத்தியது கூத்தராற்றுப்படை, மதுரை நகர மகளிர் கூதிர்கால குளிரின் காரணமாக நாதம் எழுப்பும் வீணையை மார்புறத் தழுவி வெம்மையேற்கு வாசித்தனர் என்று நெடுநல்வாடை கூறும். எனவே இசையின் மீது மக்களுக்கிருந்த பற்று புலனாகும்.

## கல்வி

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகுமென்றாள் ஔவை மூதாட்டி. "உற்றுழி உதவியும் உறு பொருள் கொடுத்தும் பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே" என்றான் பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன். மேற்குடியில் பிறந்தாலும் கல்லாதவன், கீழ்க்குடியைச் சார்ந்தவன் கற்றவனாயிருப்பின் அவனை வழிபட்டொழுக வேண்டும் என்பதை

"வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்
கீழ்ப்பாலொருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கண்படுமே"

என்கிறது இப்பாடல்.

ஆசிரியரிடம் மாணவர்கள் தங்கி குருகுல முறையில் கல்வி பயின்றனர். ஆசிரியர் வாய்மொழியாகக் கூறுவதை மாணவன் கேட்டு, மனப்பாடமாக்கி, நினைவில் நிறுத்தி தன்வழி வரும் மாணாக்கர்களுக்குக் கற்பித்தான். அறிஞர் கணிதத்தில் தேர்ச்சிபெற்றவர் களாய் விளங்கினர். மிக நுண்ணிய அளவைக்குத் 'தேர்த்து' என்று பெயர்; மிகப்பெரிய

எண் 'வெள்ளம்' என்பதாகும். கோள்களைப் பற்றியும் ஞாயிறு திங்களின் இயக்கம் பற்றியும் தமிழர் நன்கு அறிந்திருந்தனர். தமிழரின் ஆண்டானது கதிரவனின் செலவை வைத்துக் கணக்கிடப்பட்டதாகும்.

ஆண், பெண் இருபாலரும் கல்வியிற் சிறந்திருந்தனர். சாதி, இனம், தொழில், வேறுபாடின்றி அனைவரும் கல்வி கற்றுச் செய்யுள் இயற்றுவதில் வல்லவர்களாய் விளங்கினர். மதுரையில் இருந்த நக்கீரர் கணக்காயனார் மகனார். குறிஞ்சிப் பாட்டைப் பாடிய கபிலர் அந்தணர். மணிமேகலை பாடிய சீத்தலைச் சாத்தனார் கூலவாணிபம் செய்பவர். இளங்கோ அடிகள் அரச குலத்தினர். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற உண்மையை உலகுக்குணர்த்திய கணியன் பூங்குன்றன் கணிதத்தில் வல்லவர். சோதிடநூல் வல்லுநர், பக்குடுக்கை நன்கனியார். மேலும் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன், சோழன் நலங்கிள்ளி, சேரன் கணைக்கால் இரும்பொறை போன்ற அரசர்களும் கவிபாடும் திறமையுடையவர் களாயிருந்தனர்.

இங்ஙனமெல்லாம் சிறப்படைந்திருந்த தமிழா வாழ்க்கை கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சீர்குலைந்தது. களப்பிரர் வரும்போது சீர்குலைந்திருந்த தமிழர் நிலையை மேம்படுத்த களப்பிரர் காலத்தில் அறம் பற்றிய நூல்கள் இயற்றப்பட்டன. சிற்றினம் சேர்தல், கள்ளுண்ணல், களவு புரிதல், கொலை செய்தல் ஆகியவற்றை இவ்விலக்கியங்கள் பாடின.

**சங்க காலச் சமயம்**

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"

என்ற தொல்காப்பிய நூற்பாவால் முல்லைக்குத் திருமாலும், குறிஞ்சிக்கு முருகனும், நெய்தலுக்கு வருணனும், மருதத்திற்கு இந்திரனும் வழிபடு கடவுளாக விளங்கினர் என்றறியலாம். கொற்றவை பாலைக்குரிய தெய்வமாவாள்.

"வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதனூலாகும்"

என்ற தொல்காப்பிய நூற்பாவின் அறிவின் முனைவன் என்பது சிவபெருமானைக் குறிப்பதாகும்.

சிவபெருமானைக் 'கறைமிடற்று அண்ணல் (புறம் 55) ,'முக்கட் செல்வன்' (புறம் 6 அகம் 181) , 'பிறவா யாக்கைப்பெரியோன்' (சிலம்பு), போன்ற சிறப்புச் சொற்களால் இலக்கியங்கள் குறிக்கின்றன. இலிங்கம் என்ற பெயர் சங்க இலக்கியங்களில் இல்லை.

திருமுருகாற்றுப்படை ஆறுபடை வீடுகளில் முருகனது திருக்கோலச் சிறப்பை விளக்குகின்றது. முருகன் செவ்வேளாகி பின்னர் சுப்பிரமணியனாகவும், கார்த்திகேய னாகவும் வடமொழியாளர் வழி மாற்றப்பட்டான் என்பதைத் திரு.வி.க.வின் 'முருகன் அல்லது அழகு' விளக்கும்.

கொற்றவை வழிபாடு வெறியாட்டுடன் நடைபெற்றது. தலைவனது வெற்றிக்காகத் தோழியர் கொற்றவையை வேண்டிய முறையில் நெடுநல்வாடை அமைந்துள்ளது. வெற்றித் தெய்வமான கொற்றவைக்குப் பலி கொடுத்து வாழ்த்துதலைக் 'கொற்றவை நிலை' என்று தொல்காப்பியம் கூறும்.

மாயோனே பின்னர் திருமாலாகவும், விஷ்ணுவாகவும், கண்ணனாகவும் வழங்கப்பட்டமையைப் பரிபாடல் உணர்த்தும். மால் என்பதற்குப் பெரியோர் எனவும், மாயோன் எனவும் பொருள் கூறுவர்.

திருமகள் வழிபாடும் சங்க காலத்தில் இருந்தது. திருமகளை நகரத்தின் காவல் தெய்வமாய்ப் பட்டினப்பாலை குறிப்பிடுகின்றது. அரண்மனை முற்றத்தில் திருமகள் நிலை பெற்றிருந்ததாக நெடுநல்வாடை கூறுகிறது. அந்தணர்கள் முத்தீ வளர்த்து வழிபாடு செய்தனர். பகலவனைக் கைகூப்பி வழிபட்டனர்.

## வழிபாட்டு முறை

சங்ககாலத்தில் அந்தணர் அறுவகைத் தொழில்களைச் செய்த காரணத்தால் (ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல்) அறுதொழிலந்தணர் என்று புறநானூறு குறிப்பிடுகின்றது. 'அறம்புரி கொள்கை நான்முறை முதல்வர் (புறம்) எனப்படும். அந்தணர்கள் குறித்து, ஈரம் புலராத ஆடையுடுத்தி, உச்சி கூப்பிய கையினராய் மந்திரங்களை ஓதி மலர் தூவி திருவோகத்தில் இறைவனை வழிபடும் முறையைத் திருமுருகாற்றுப்படை கூறும். குறவர்கள் ஆட்டைப் பலியிட்டு குன்றக் குரவையாடுவர். முருகனும் அவர்களுடன் கலந்தாடுவான் என்பதையும் திருமுருகாற்றுப்படை கூறுகின்றது. எனவே அந்தந்த நிலத்தில் வாழ்ந்தோர் தத்தம் வாழ்க்கை முறைகளுக்குத் தக்கபடி இறைவழிபாடு நடத்தியமை தெளிவு. அரசர்கள் பலவிதமான வேள்விகளை நடத்தினர். வேள்வி பல நிகழ்த்தியதாலேயே பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்றழைக்கப்பட்டான் பாண்டிய மன்னன். இராசசூயம் வெட்ட பெருவிறற்கிள்ளி என்ற சோழ மன்னனின் பெயரும் இதனைக் காட்டவல்லது.

தமிழர்களுடைய வழிபாட்டில் இயற்கை வழிபாடு முதன்மையானது. அவர்கள் சில குறிப்பிட்ட மரங்களை வழிபட்டனர். எடுத்துக்காட்டாக சிவன் 'ஆலமர்ச்செல்வன்' என்றும், 'நாவல்' மரத்தில் உறைவோன் என்றும் கருதப்பட்டான். ஆகவே முற்காலத்த மிழர் அவ்விதத் தெய்வீகத் தன்மையுடைய மரங்களை நட்டு, அவற்றைச் சுற்றிவந்து வழிபாடு நடத்தினர். பாம்பு போன்ற கொடிய ஊர்வனவற்றையும் வழிபட்டுள்ளனர்.

நாகத்திற்குப் பால் ஊற்றி, அது இருக்கும் புற்றுகளைக் கோயில்களாகக் கருதி வழிபாடு செய்தனர். நாகவழிபாடு தமிழகத்தில் காலத்தில் முந்தியது எனலாம். எனவேதான் சிவபெருமானுக்குப் பாம்பைக் கழுத்திலும், கையிலும் சுற்றி வழிபாடு செய்தனர். இன்றும் சில வீடுகளில் மரங்களின் கீழே பாம்பின் உருவங்களைக் கல்லில் செதுக்கி வைத்து வழிபடும் முறை உள்ளது. நாகர்கோவில் (நாகர் அம்மன் கோயிலில்) இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

கொற்றவை, துர்க்கை அல்லது காளியை வழிபட்ட மறவர் தாங்கள் வழிப்பறி செய்த பொருட்களில் பங்கினை அவளுக்கு அளித்தனர். முருகனை வழிபட்டோர் வள்ளித்திருமணத்தை நடத்தி மகிழ்ந்தனர். 'அருந்ததி', 'தெய்வயானை' போன்ற கோட்பாட்டளவிலான தெய்வீகப் பெண்டிரையும் வழிபட்டனர். கற்புக்கு இலக்கணமான அருந்ததியும், காதலுக்கு இலக்கணமான ரதியையும், காதலால் உடலைப் பாழ்படுத்திய இந்திரனையும், மழை மேகங்களை இயக்கிய வருணனையும் மக்கள் வழிபட்டனர். இந்திரனுக்கு இந்திர விழா எடுத்துச் சிறப்பித்த செய்தி சிலப்பதிகாரத்தில் உள்ளது. பலராமன், பலதேவன், வாசுதேவ—கண்ணன் வழிபாடும் தமிழ் நாட்டில் நடைபெற்று வந்துள்ளது.

ஆரிய வைதீகக் கடவுள்கள் தமிழகத்தில் புகுந்து, இருந்த முறையை மாற்றி, சிலவற்றைக் கொண்டு, சிலவற்றைப் புகுத்தி திராவிட —ஆரிய—கலப்பான சமயத்தைச் சங்ககாலத்தில் ஏற்படுத்தினர். அன்றைய தமிழகத்தில் சிறப்புடன் திகழ்ந்த கடவுளர்கள் வெறும் தேவர்களாகவும், தேவதைகளாகவும், பேய்களாகவும் வற்றிப் போயினர். வடக்கேயிருந்து வந்த கடவுளர்கள் காலப்போக்கில் செல்வாக்குப் பெற்றனர். சிவன் (சிந்து வெளியில்) வடக்கேயிருந்து ஆரியர்களால் ருத்ரனாக்கப்பட்டு, பின் தமிழகத்திற்கு வந்தார் என்று வெங்கடரமணய்யா கூறுவார். ஆனால் 'மாயோன்' கறுப்பு நிறத்தானாயிருந்ததால் திராவிடர் கடவுள் என்றும் கூறுவார்கள். இந்த திராவிட—ஆரிய சமயக் கலப்பு பலநிலைகளில்—முதலில் திராவிட வெற்றி, இரண்டாவது திராவிடப்பணிவு, மூன்றாவது திராவிட—ஆரிய சரிசமமான நிலை, நான்காவதாக ஆரியக் கடவுளரின் வெற்றி, இறுதியில் இரண்டும் இணக்கம் என்ற நிலையில் ஏற்பட்டதாக வெங்கடரமணய்யா கூறுகிறார். அந்நிலையின் இறுதியை நாம் மதுரையில் நடக்கும் திருக்கல்யாணத்தில் காண்கிறோம் என்றும் அவர் கூறுவார்.

தமிழகத்தில் நிலைத்திருந்த வழிபாட்டுமுறை 'பூசித்தல்' என்பதாகும். பூக்களால் வழிபாடு செய்தலை அது குறிக்கும். இதனால் பூப்பலி என்றும் அதனைக் கூறுவர். நீலகண்ட சாஸ்திரி இதனை 'பூசுதல்' என்று கொண்டு, உருவத்தின் மீது மஞ்சற் குழம்பைப் பூசி வழிபட்டனர் என்பார். ஆனால் தமிழர் நாகரிகத்தில் பூக்களுக்கு இருந்த சிறப்பினை பார்க்குங்கால் பூவிட்டு வழிபட்டமுறை விளங்கும். பின்னர் உயிரினங்களைப் பலியிட்டு வழிபட்டனர். உணவு படைத்துத் தாம் வழிபட்ட இறைவனுக்குத் தந்தனர். மதுபானங்களையும் கடவுளுக்குத் தந்தனர். இறைவழிபாட்டின் போது ஆடிப்பாடினர். கோயில்களுக்குப் புனிதப் பயணம் மேற்கொண்டனர். நீரில் ஆடிப் பாவத்தைத் தொலைத்தனர். வடநாட்டுப் பெண் சாலி என்பாள் தாம் பாவத்தைக் கழுவுதற் பொருட்டு குமரியாடிப் போந்தாள் என்ற செய்தியை மணிமேகலை தருகிறது. முந்நீர் விழவுகளை எடுத்து, இறைவனுக்கு வழிபாடு நடத்தினர். குறிப்பிட்ட கடவுளுக்குரிய

ஆடல் பாடல்களைச் செவ்வனே பாடியும், ஆடியும், நடித்தும் வழிபாடு செய்தனர். திருவிழாக்களைக் குதூகலமாக நடத்திக் காட்டினர். திருவிழாக்களின் போது இறையுருவம் நகரைச் சுற்றி வலம் வந்தது. தேர்களில் முருகன் உருவம் கொண்டு வரப்பட்டதாயும், ஆடலும், பாடலும், வாண வேடிக்கைகளும் நடந்ததாகவும் பட்டினப்பாலை கூறும். 'கண்டு' என்ற இலிங்க உருவம் 'பொதியல்' என்ற கோயிலில் வழிபாட்டிற்காக நடப்பட்டிருந்த செய்தியையும் அது தருகிறது.

அந்தணர்கள் புலால் உண்டனர், மது அருந்தினர். புரோகிதர் திருமணத்தின் போது மந்திரம் ஓதினார் என்று சிலம்பு செப்பும். அகத்தியர், இராமன் போன்ற மதக் கடவுளர்களுக்கும் வழிபாடு நடந்துள்ளது. தேவலோகப் பெண்டிர் பற்றிய செய்திகளும், அவர்ளுக்கும் தேவர்களுக்கும் உள்ள தொடர்புகளும் தமிழ் இலக்கியத்தில் பரக்கக் காணலாம்.

## சமணமும் பௌத்தமும்

கிறிஸ்து பிறப்பதற்குச் சில நூற்றாண்டுகட்கு முன்பே சமணமும் பௌத்தமும் தமிழகத்திற்கு வந்து விட்டன. சங்க இலக்கியங்களைப் பார்க்கும்போது, சங்க காலத்தில் சமணமும் பௌத்தமும் அதிகமான செல்வாக்கைப் பெற்றிருக்கவில்லை எனத் தெரிகிறது. பல்லவர்கள் காலத்தில் இவ்விரு சமயங்களும் நன்கு வளரக் காணலாம். சங்ககால அரசர்கள் சமயப் பொறை உடையவர்கள். எனவே எல்லாச் சமயங்களும் அரசனது ஆதரவைப் பெற்றன. மதுரை, காஞ்சிபுரம் முதலான தலைநகரங்களில் சமண, பௌத்தத் துறவிகள் தங்கி தங்களுடைய சமயக் கொள்கைகளைப் பரப்புவதற்கு பள்ளிகள் அமைக்கப்ட்டிருந்ததாகப் பெரும்பாணாற்றுப்படை கூறுகிறது. சமண, பௌத்த துறவிகளுக்கு மலைக் குகைகளில் பள்ளிகளும் பாறைப் படுக்கைகளும் அமைத்துத் தர அரசர்கள் உதவினர் என்று தமிழ்பிராமி குக்கைக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. மதுரையில் இருந்த பௌத்த பள்ளிக்கு பெண்கள் தம் குடும்பத்தோடு சென்று வழிபட்டதை தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் அவைப் புலவரான மாங்குடி மருதனார் மதுரைக்காஞ்சியில் குறிப்பிடுகின்றார். எட்டுத் தொகையில் சில பாடல்களைப் பாடியுள்ள இளம்போதியார், சீத்தலைச் சாத்தனார் இருவரும் பௌத்த சமயத்தைச் சார்ந்தவர்கள். சங்ககாலத்தில் பௌத்தம் மிகுந்த செல்வாக்கைப் பெறவில்லை என்பது தெளிவு. ஆனால் அச்சமயத்தினரின் கொள்கைகள் மக்களிடையே பரவியிருந்தன. பௌத்தர்களின் வேத நூலான தம்மபதத்தில் காணப்படும் ஒரு பாடலின் மொழிப்பெயர்ப்பே 'நாடாகொள்றோ' (புறம் 187) என்று சி.ஈ. ராமச்சந்திரன் விளக்கியுள்ளார். தம்மபதம் புறநானூற்று காலத்தை விடப் பழமையானது. எனவே தம்மபதத்திலிருந்துதான் ஔவையார் இப்பாடற் கருத்தைப் பெற்றதாகக் கூறுகிறார்.

## பயிற்சி வினாக்கள்

1) சங்க காலத் தமிழரின் பொருளாதார, வாணிப முறைகளை விவரிக்க.

2) சங்க காலத் தமிழரின் அரசியல் கோட்பாடுகளையும், ஆட்சி முறையினையும் வரைக.

3) சங்க காலத் தமிழக மக்களின் பண்பாட்டு வளர்ச்சியினை மதிப்பிடுக.

# பாடம் – 5 களப்பிரர்கள்

கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து கி.பி. ஆறாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை 'தமிழகத்தின் இருண்ட காலம்' என்று வரலாற்றாசிரியர் கூறுவர். தமிழ்கத்தையாண்ட சேர, சோழ, பாண்டியர்கள் வலிமை குன்றி, சிறப்பிழந்து போக வடபுலத்திலிருந்து வந்த மன்னர்களாலும், பல்லவர்களாலும் தமிழர்கள் ஆளப்பட்ட காலம் இது. 'களப்பிரர் இடையீட்டுக் காலம்' என்றே வரலாற்றில் இக்காலம் குறிப்பிடப்படுகிறது.

இக்களப்பிரர் யாவர்? அவர்கள் எப்படித் தமிழகத்துக்கு வந்தார்கள்? அவர்கள் தமிழகத்தை எம்முறையில் ஆண்டனர் போன்றவை இன்னும் தெளிவாகாத புதிராகவே உள்ளன. இவ்வினாக்களுக்கான விடையைக் காண்பதே இப்பாடத்தின் நோக்கம்.

## களப்பிரர் பற்றியறிய உதவுவன

### இலக்கியச் சான்றுகள்

இடைக்கால இலக்கியங்கள் சிலவற்றில் களப்பிரர் பற்றிய குறிப்புக்களைக் காணலாம். சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் பாடியதாக நான்கு செய்யுட்கள் தமிழ் நாவலர் சரிதையில் உள்ளன. இப்பாடல்கள் மூவேந்தர்களைப் போரில் வென்று சிறைப்படுத்திய களப்பிரர்களைப் புகழ்ந்து மூவேந்தர்களும் பாடிய முறையில் அமைந்துள்ளன. இதைப் பற்றிய சுவையான செய்தியொன்றும் வழங்கப்படுகின்றது. சேர சோழர்கள் களப்பிரர்களைப் புகழ்ந்து பாட, பாண்டியன் மறுத்து களப்பிரரை இகழ்ந்து பாடியதாகவும், களப்பிர அரசன் சினந்து பாண்டியன் காலில் மற்றொரு தளையிட, பாண்டியன் அவனைப் புகழ்ந்து பாடியதாகவும் கூறப்படுகிறது.

யாப்பருங்கலம் என்ற நூல் அச்சுதக் களப்பாளன் என்ற களப்பிர அரசனைப் பற்றிக் கூறும். இவன் நந்தி மலையை ஆண்டவன். கல்வியிற் சிறந்த அந்தணர்களைக் கருத்துடன் பாதுகாத்தான் என்று இந்நூல் கூறும்.

பெரியபுராணத்தில் சேக்கிழார் கூற்றுவ நாயனார் என்ற களப்பிர மன்னனைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். இவன் சிறந்த சிவ பக்தன். இவன் சோழ நாட்டை வென்றான். தில்லைவாழ் அந்தணர்கள் தனக்கு முடிசூட்டவேண்டுமென்று விரும்பினான். ஆனால் அவர்கள் மறுக்கவே சிவபெருமானே தில்லைவாழ் அந்தணர்களை இவனுக்கு முடிசூட்டுவதற்குச் சம்மதிக்க வைத்ததாகப் பெரியபுராணம் கூறும்.

### கல்வெட்டுச் சான்றுகள்

களப்பிரர்களைப் பற்றிக் கூறும் சான்றுகளுள் பாண்டியர்களால் வெளியிடப்பட்ட வேள்விக்குடி செப்பேடுகள் முக்கியமானதாகும். பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி யின் காலத்திற்குப் பின்னர் பாண்டிய நாட்டைக் களப்பிரர் கைப்பற்றியதை இச்செப்பேட் டால் அறியலாம். பாண்டியன் நெடுஞ்சடையனால் வெளியிடப்பட்ட இவ் வேள்விக் குடிச் செப்பேடுகள் கி.பி. 600 ஆம் ஆண்டில் பாண்டிய நாட்டையாண்ட கடுங்கோன் களப்பிரரை வென்ற செய்தியைக் கூறுகின்றன. தளவாய்புரச் செப்பேடுகள் இச்செய்தியை உறுதிப்படுத்துகின்றன. கொற்றமங்கலம் செப்பேடுகள் பல்லவ மன்னன் தந்திவர்மன்

களப்பிரர்களைப் பகைவர்களாகக் கருதினான் என்கிறது. முதலாம் நரசிம்மவர்மனின் கூரம் செப்பேடு அவன் சோழர், கேரளர், களப்பிரர், பாண்டியர் அனைவரையும் வென்றதைக் குறிக்கின்றது. இரண்டாம் சாளுக்கிய விக்கிரமாதித்தனின் நேரூர் நன்கொர்டைப் பட்டயம் இச்செய்தியை உறுதிப்படுத்தும். விநயாதித்தனின் ஹரிஹர் நன்கொடைப் பட்டயம் அவன் பல்லவர், சேரர், களப்பிரரைத் தோற்கடித்தான் என்று கூறுகிறது.

திருப்புகலூர்க் கல்வெட்டு நெற்குன்றம் சிழார் என்ற களப்பிர அரசனைக் குறிப்பிடுகின்றது. வைகுந்தப் பெருமாள் கோவில் கல்வெட்டு இரண்டாம் நந்திவர்மப் பல்லவ மல்லனை அவனது முடிசூட்டு விழாவின் போது முத்தரையர் எதிர்கொண்டு அழைத்தனர் என்று கூறுகின்றது. இம்முத்தரையரே களப்பிரர் என்று சில அறிஞர்கள் கருதுகின்றனர். செந்தலைத் தூண் கல்வெட்டு 'கள்வர் கள்வன்' என்று தன்னைக் கூறிக் கொண்ட பெரும்பிடுகு முத்தரையனைப் பற்றிக் குறிப்பிடுகின்றது.

## களப்பிரர் காலம்

மூன்றாம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்து ஆறாம் நூற்றாண்டின் இறுதிவரை தமிழக வரலாற்றைப் பற்றித் தெளிவாக அறிய இயலவில்லை. இம்மூன்று நூற்றாண்டு காலமும் இருண்ட காலமாகக் கருதப்படுகிறது. வேள்விக்குடிப் பட்டயம் சில செய்திகளைத் தருகின்றது. முதுகுடுமிப் பெருவழுதி என்ற சங்க காலப் பாண்டிய மன்னன் ஒரு சிற்றூரைச் சில அந்தணர்களுக்குத் தானமாக வழங்கினான். ஆனால் களப்பிரர்கள் மதுரையைக் கைப்பற்றியபோது பாண்டியரால் தானமாக வழங்கப்பட்ட கிராமத்தை மீண்டும் கைக்கொண்டார். கி.பி. 767இல் பராந்தக நெடுஞ்சடையன் என்ற பாண்டியன் ஆட்சிக்கு வந்தபோது இக்கிராமத்தை மீண்டும் அவ்வந்தணர்களின் பரம்பரையினருக்கு உரிமையாக்கினான். இச்செய்திகளை விளக்க எழுந்ததுதான் வேள்விக்குடி பட்டயமாகும். இப்பராந்தக நெடுஞ்சடையன், களப்பிரர்களை வென்று பாண்டியர் ஆட்சியை நிறுவிய பாண்டியன் கடுங்கோனைப் புகழ்ந்துள்ளான். இப்பாண்டியர்களின் காலத்தை வைத்துக் கணக்கிட்டால் களப்பிரர் தமிழகத்தை ஆண்ட காலம் கி.பி. 250க்கும் கி.பி. 600க்கும் இடைப்பட்ட காலம் எனலாம்.

## களப்பிரர் பற்றிய கருத்துக்கள்

(1). து.அ. கோபிநாத்ராவ் களப்பிரர்களே முத்தரையர் என்று கருதுவர். காஞ்சி புரத்தில் உள்ள வைகுந்தப் பெருமாள் கோயில் கல்வெட்டுச் செய்தியை இதற்கு அடிப்படையாகக் கொள்கிறார். இக் கல்வெட்டு சுவரன் மாறன் அல்லது இரண்டாம் பெரும்பிடுகு முத்தரையன் என்னும் முத்தரையச் சிற்றரசன், நந்திவர்மப் பல்லவ மல்லனை வரவேற்ற செய்தியைக் கூறும். சுவரன் மாறன் கள்வர் கள்வன் என்று வழங்கப்படுகிறான். தமிழில் கள்வர் என்று வழங்கும் சொல்லே வட மொழியில் களப்பிரர் என்றாயிற்று என்பர், ந. சுப்பிரமணியன். இம் முத்தரையர்களை வென்றுதான் பாண்டியன் கடுங்கோன் ஏறத்தாழ கி.பி. 600 இல் பாண்டியர் ஆட்சியை நிறுவினான் என்பர். களப்பிரர்களே முத்தரையர் என்ற கோபிநாதராவின் கூற்றுக்கு இதுவும் சான்றாக அமையும்.

(2) களப்பிரரும் முத்தரையரும் ஒருவரே என்பது மு. இராகவ அய்யங்காருக்கு உடன்பாடான கருத்தல்ல. "வேளாள களப்பாளர் என்பவர்களே பின்னர் களப்பிரர் என்றழைக்கப்பட்டனர்; அவர்கள் முத்தரையர் அல்லர்" என்கிறார் இராகவ அய்யங்கார்

சைவ சித்தாந்தத்தில் வல்லவரான மெய்கண்டாரின் தந்தையாரான அச்சுதக் களப்பாளரும் வேளாளரே என்கிறார் இவர். களப்பிரர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களே புறத்தார் அல்ல என்றும் இவர் கருதுவார். இதற்குச் சான்றாக யாப்பருங்கலத்தைக் காட்டுகின்றார். இந்நூல் அச்சுதவிக்கந்தன் என்ற களப்பிரமன்னன் அந்தணர்களை ஆதரித்தமையைக் கூறும்.

யாப்பருங்காலம் களப்பிரர் நந்தி மலையைச் சார்ந்தவர்கள் என்று கூறுவதாலும், இந்த நந்திமலை தமிழகத்திற்கு வடபால் உள்ள கருநாடகத்தில் உள்ள மலையென்பதாலும் களப்பிரர் தமிழர் அல்லர் என்பார் எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார்.

(3) களப்பிரரை வேங்கடமலையருகில் வாழ்ந்த கள்வரோடு இணைத்துக் கூறுகிறார் எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார். வேங்கடத்தின் தலைவனான புல்லி என்ற கள்வன் பற்றிச் சங்க இலக்கியங்கள் கூறுவதைச் சான்றாகக் காட்டுகிறார். ஆயின் இவர்கள் 'கள்வன்' என்று குறிப்பிடப்படாமல் 'களவர்' என்று குறிப்பிட்டுள்ளனர். தக்காணத்தின் கீழைப் பகுதியையாண்ட பல்லவர்கள் தெற்கு நோக்கி காஞ்சிபுரம் வரை வந்துவிடவே, காஞ்சியில் இருந்த கள்வர் அங்கிருந்து தெற்கு நோக்கிச் சென்று மூவேந்தர்களுடன் போரிட்டு வென்று தமிழகத்தில் தம் ஆட்சியை நிறுவினர். தஞ்சையை அடைந்த களப்பிரர் தங்கள் குழுக்களைப் பல்வேறு இடங்களில் தங்க வைத்தனர். முத்தரையர் என்பார் அப்பிரிவுகளுள் ஒரு சாரார் எனவும், அச்சுத விக்கந்தன் அவர்களுள் ஒருவன் எனவும் எஸ். கே. அய்யங்கார் கருதுகிறார். ந. சுப்பிரமணியனும் அய்யங்காருடன் உடன்படுகின்றார்.

(4) தமிழ் நாவலர் சரிதை அச்சுதக் களப்பாளன் மூவேந்தர்களையும் வென்று சிறையிட்டதைக் கூறும். இந்த அச்சுதக் களப்பாளன் ஒரு களப்பிர மன்னனே என்பர் மா. இராசமாணிக்கனார். அச்சுதக் களப்பாளன் சிறந்த சைவன் எனவும், நந்தினியின் பெயரைப் புனிதப் பெயராகக் கொண்டான் எனவும் வேள்விகள் செய்த அந்தணர்களை ஆதரித்தான் எனவும் தமிழ் நாவலர் சரிதை கூறும். ஆனால் களப்பிரர்கள் பொதுவாக சமணர்களாகவோ, பௌத்தர்களாகவோ இருப்பதுதான் வழக்கம். எனவே 'களப்பாளர் களைக் களப்பிரர்களாக எண்ணுதல் பொருந்தாது' என்பர் கிருஷ்ணசாமி அய்யங்கார்.

(5) கே. ஆர். வெங்கட்ராம ஐயர் கருத்துப்படி களப்பிரர் தமிழகத்தின் மீது படையெடுத்தது ஏறத்தாழ கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் தொடக்கம் என்பார். இவர் கருத்துப்படி களப்பிரர் பெங்களூர், சித்தூர் பகுதிகளில் கடம்பர்களால் துரத்தப்பட்டு கிழக்கே தமிழகத்தை நோக்கிப் படையெடுத்து வந்தனர். கலியரசர் பற்றிச் சாசனங்கள் கூறுவதால் கலியுகம், கலிகுளம் என்பன களப்பிரரோடு தொடர்புடையன எனகிறார். ஐயர் அவர்கள் களப்பிரர் ஆட்சிக்காலத்தைக் கி.பி. 5 —ஆம் நூற்றாண்டென்கிறார். ந. சுப்பிரமணியன் களப்பிரர் கி.பி. மூன்றாம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர் என்பார்.

(6) சதாசிவ பண்டாரத்தார் கருத்துப்படி களப்பிரர் கருநாடக மாநிலத்தைச் சார்ந்த நாடோடிக் கூட்டத்தவர். களப்பாளர்களே களப்பிரர் என்ற கருத்தை இவர் மறுக்கிறார். பண்டாரத்தார் கருத்துப்படி களப்பாளர்கள் தமிழர்; கும்பகோணம் அருகிலுள்ள தஞ்சையைச் சார்ந்த களப்பாழ் என்ற இடத்திலிருந்து வந்தவர்களே களப்பாளர் என்கிறார். தமிழகத்தைச் சார்ந்த வேளிர் அல்லது வேளாளர்களின் ஒரு பிரிவினரே இக்களப்பாளர் என்கிறார். பெரியபுராணத்தில் குறிக்கப்படும்

கூற்றுவநாயனார் களப்பாளனே தவிர களப்பிரரல்ல என்பது இவர் கருத்து. தில்லை வாழந்தணர்கள் தம் பொறுப்பிலிருந்த சோழ நாட்டு மணிமுடியை கூற்றுவ நாயனாருக்குச் சூட்ட மறுத்தனர். சிற்றரசர்களான வேளிர் குடியைச் சார்ந்தவராகக் கூற்றுவ நாயனார் இருந்ததே இதற்குக் காரணம் என்கிறார் பண்டாரத்தார்.

(7) தொண்டை மண்டலத்தைச் சார்ந்த ஒழியரைக் களப்பிரர் என்கிறார் டி.வி. மகாலிங்கம். இக்கருத்தை ந. சுப்பிரமணியன் மறுக்கிறார். தமிழகத்தின் தென்கிழக்குப் பகுதியைச் சார்ந்த ஒலிநாடே ஒழியர்க்குரியது என்று தொல்காப்பியம் கூறுகிறது. வேங்கடப் பகுதியிலிருந்து வந்த களப்பிரர்க்கும் ஒழியர்க்கும் எத்தொடர்பும் கிடையாது என்கிறார் ந. சுப்பிரமணியன்.

(8) தி. ந. சுப்பிரமணியன் தமிழகத்தை வென்று பாண்டி நாட்டிலும் சோழ நாட்டிலும் தங்கிய களப்பிரரைச் சமணர் என்கிறார். தமிழில் அறநூல்கள் பலவற்றை இயற்றிய சமணர்கள் களப்பிரர் குலத்தவரே என்றும் கருதுகிறார்.

அவர் ஏறத்தாழ கி.பி. 470 ல் மதுரையில் திராவிட சங்கம் நிறுவிய வஜ்ர நந்திக்கும் களப்பிரர்க்கும் இடையில் தொடர்பேற்படுத்திக் கூறுவர்.

(9) எம்.எஸ். கோவிந்தசாமி, மயிலை சினி வேங்கடசாமி போன்றோர் முத்தரையர் களப்பிரர்களின் ஒரு பிரிவினரே என்பர். காலப் போக்கில் அவர்கள் தமிழராக மாறிவிட்டதாகவும் பல தமிழறிஞர்களை ஆதரித்ததாகவும் கருதுகின்றனர். இவர்கள் சமணர்களை ஆதரித்ததை இவர்கள் கட்டியுள்ள சமணப் பள்ளிகள் உணர்த்துகின்றன. பாண்டியர்களுக்கடங்கிய சிற்றரசர்களாக இருந்த காரணத்தால் மாறன் என்ற பட்டப்பெயரைத் தங்கள் இயற்பெயருடன் இணைத்திருந்தனர். பிற்காலச் சோழப் பேரரசை விசயாலயன் நிறுவுவதற்கு முன், பாண்டியர்களாட்சிக்குட்பட்ட சோணாட்டுப்பகுதியில் இவர்கள் வாழ்ந்தனர் என்று கோவிந்தசாமியும் வெங்கிடசாமி யும் கருதுவர்.

## தமிழகத்தில் களப்பிரராட்சியின் விளைவு

முன்னூறு ஆண்டுகாலம் தமிழகத்தையாண்ட களப்பிரர்கள் தமிழரின் வாழ்விலும் பண்பாட்டிலும் மிகப் பெரும் மாறுதல் ஏற்பட வழிசெய்து விட்டனர். இவர்கள் வரவால் தமிழர் வாழ்வின் அடிப்படை நோக்கங்கள்கூட ஆட்டம் கொண்டன; சங்ககாலப் பண்பாட்டிற்கும் களப்பிரர்காலப் பண்பாட்டிற்கும் இடையில் மிகுந்த வேறுபாடுள்ளது. "உலகியல் கண் படைத்த, சமயப் பொறை மிகுந்த, வாணிபத் திறமை சான்ற சங்க காலத்தவர்க்கும் வறுமையைப் பற்றிய கவலை மிகுந்த சமயப் பூசல் மிகுந்த கோயில்கள் நிர்மாணிப்பதிலும் அங்குக் கடவுளரை நிறுவி அவரை வழிபடுவதிலும் ஈடுபாடு மிகுந்த பிற்காலத்தவர்களுக்கும் இடையே நின்ற வேறுபாடு சாதாரணமானதன்று" என்று கூறுகின்றார் ந. சுப்பிரமணியன்.

## பயிற்சி வினா

களப்பிரர் யாவர்? அவர்தம் வருகையால் தமிழக வரலாற்றில் ஏற்பட்ட விளைவுகள் யாவை?

# பாடம் – 6 பண்டைய பல்லவர்கள் – முதல் பாண்டியப் பேரரசு – சங்க காலத்திற்குப் பிந்திய சேரர்

பொருள் வகைகள் இல்லாமல் மனை கட்ட முடியாது. அதுபோல் வரலாற்று மூலங்கள் இல்லாமல் வரலாறு வரைய முடியாது. பொதுவாக உள்ளூர் இலக்கியம், அந்நியர் நூல்கள், குறிப்புக்கள், தொல்பொருள் ஆராய்ச்சிமூலம் அறிமுகமாகும் கல்வெட்டுக்கள், செப்புப்பட்டயங்கள், உலோகங்களில் குறிப்பிட்டுள்ள செய்திகள், ஆலயங்கள், அரசர் பட்டியல்கள், அரண்மனைகள், சிற்பங்கள், உருவச்சிலைகள், நாணயங்கள் ஆகிய வரலாற்று மூலப்பொருள் வகைகள் வரலாற்றை ஆராய்வதற்கு பயன்படுகின்றன.

### பல்லவர் வரலாற்று மூலங்கள்

வரலாற்றின் உயிர்நாடி, காலக்கணிப்பேயாகும். பண்டைய தமிழக வரலாறு எக்காலத்தில் தோன்றியது, தொடர்ந்தது என்பது அறிய நமக்கு சங்ககால நூல்கள்தான் உறுதுணையாக உதவுகின்றன. சேர, சோழ, பாண்டிய அரசுகளைப்பற்றி ஓரளவு விரிவாகக்கூறும் சங்க நூல்கள், பல்லவர்களைப்பற்றி ஒன்றுமே கூறவில்லை. பல்லவர் என்ற பெயரைக்கூட சங்கநூல்கள் குறிப்பிடவில்லை. கி.பி. ஆறாவது நூற்றாண்டின் இடைக்காலத்தின் தொடக்கத்திலிருந்து தோன்றிய இலக்கியங்களும், தொல்பொருள் ஆராய்ச்சிமூலம் கிடைத்த கல்வெட்டுக்களும், செப்புப்பட்டயங்களும் அயல்நாட்டினர் குறிப்புகளும் நாம் பல்லவர்களின் வரலாற்றை வரைவதற்குப் பயன்படுகின்றன.

### அ) இலக்கியங்கள்

பல்லவ வரலாற்று இலக்கிய மூலங்களை இரு கூறாகப் பிரிக்கலாம். அ) இந்திய இலக்கியங்கள், (ஆ) வெளிநாட்டுக் குறிப்புகள்.

### இந்திய இலக்கியங்கள்

பல்லவர்களைப் பற்றி குறிப்பிடும் இந்திய இலக்கியங்கள், இருவகையாகும். (அ) தமிழ் இலக்கியங்கள், (ஆ) சமஸ்கிருத மொழி நூல்கள் :

### தமிழ் இலக்கியங்கள்

சமயப்பிரிவுக் கண்ணோடு நோக்கினால், பல்லவர்களைப் பற்றிக் குறிப்பிடும் தமிழ் இலக்கியங்களை (அ) சைவ நூல்கள், (ஆ) வைணவ நூல்கள், (இ) சமண நூல்கள் என்று மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

பல்லவர்களைப் பற்றி அறியச் சிறப்பாகப் பயன்படும் சைவ நூல்கள் (அ) **தேவாரம்,** (ஆ) **சேக்கிழாரின் பெரியபுராணம்.**

அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவரும் சேர்ந்து பாடிய பக்திப்பாடல்களின் தொகுப்பான தேவாரத்திலும் பல்லவ அரசு செய்திகளைப் பற்றி நாம் காணலாம். பல்லவ நாட்டில் சமண சமயமும் இருந்தது என தேவாரத்தின் குறிப்புகளிலிருந்து தெரிகின்றது. தொடக்கத்தில் சமணராக விளங்கிய முதலாம் மகேந்திரவர்மன், அப்பர் அடிகளின் தொடர்பின் மூலம் சைவராக மாறினார். சம்பந்தரும், அப்பரும் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்து வந்தவர்கள். ஆனால், ஒன்பதாம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த மூன்றாம் நந்திவர்மன் காலத்தில் வாழ்ந்து வந்தவர் சுந்தரர். "கடல் சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான் காடவர்கோன் சுழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்" என மூன்றாம் நந்திவர்மனைப்பற்றி திருத்தொண்டத் தொகையில் கூறியிருக்கிறார்.

பெரியபுராணத்தில் பல்லவ அரசு முறைகளைப்பற்றி நாம் மிகுதியாகக் காணலாம். பொதுவாக பெரியபுராணம் ஒரு சமய இலக்கியமாகத்தான் கருதப்படுகிறது. ஆனால் அதன் பொருளடக்கத்தை ஆராய்ந்தால் அந்நூலில் சமயக் குறிப்புகளைவிட அரசியல் குறிப்புகளே மிகுதியாக இருக்கின்றன. அந்நூலில் சேக்கிழார் குறிப்பிடும் நாயன்மார்களில் சிலர் பல்லவ அரசர்கள். உதாரணமாக மூன்றாம் சிம்மவர்மன் என்ற ஐயடிகள் — காடவர்கோனும், மூன்றாம் நந்திவர்மன் என்ற கழற்சிங்கனும் பல்லவ அரச — நாயன்மார்கள் ஆவர். குணபரன் என்னும் மஹேந்திரவர்மன், பரஞ்சோதியார் பணியாற்றிய நரசிம்மவர்மன் ஆகிய இருவரும் பல்லவ அரசு பீடத்தில் அமர்ந்து ஆட்சி புரிந்தார்கள். சிறுத்தொண்டர் என்று போற்றப்பட்ட பரஞ்சோதியார் பல்லவ படைத் தலைவராகப் பணிபுரிந்தவர். நரசிங்க முனையரையர், மெய்ப்பொருள் நாயனார் ஆகிய இருவரும் பல்லவ அரசின் கீழ் ஆட்சி செய்த சிற்றரசர்கள், பல்லவ அரசர் இரண்டாம் இராஜசிம்மரின் காலத்தில் வாழ்ந்து வந்த பூசலார் பெரிய புராணத்தில் போற்றப்படும் ஒரு நாயன்மார். பாறைகளைக் குடைந்து பல்லவர்கள் கட்டிய கோவில்களைப் பற்றியும் செய்திகள் கிடைக்கின்றன.

**வைணவ நாலாயிர திவ்வியப்பிரபந்தம்** எழுதிய ஆழ்வார்களில் ஒருவராகிய திருமங்கை ஆழ்வார் பல்லவ அரசின் இரண்டாம் நம்திவர்மன் (கி.பி. 731-796) காலத்தில் வாழ்ந்ததாகக் கூறலாம். பல்லவ மன்னர் நந்திவர்மனைப் பற்றியும் இராஷ்டிரகூட மன்னர் வைரமேகனைப் பற்றியும், நந்திவர்மன் நேரடியாக பங்கு கொண்ட தஞ்சாவூரில் உள்ள நென்மேலிப் போரைப் பற்றியும் நாதன் கோயில் அல்லது நந்திபுர விண்மகரம் என்ற பல்லவபடை அரணைப் பற்றியும், சாளுக்கியர்களோடு போர் புரியும் சமயத்தில் பல்லவர்கள் பயன்படுத்திய போர்க்கருவிகள், இசைக்கருவிகள் முதலியவை பற்றிய செய்திகள், திருமங்கை ஆழ்வாரின் நாலாயிரதிவ்வியபிரபந்தத்தில் கிடைக்கின்றன.

சமண நூலான லோகவிபாகா (Lokhavibhaga), பல்லவ அரசரான சிம்மவர்மனின் ஆட்சித் தொடக்கத்தின் காலக்கணிப்பை வரைவதற்கு பயன்படுகிறது. சிம்மவர்மன் ஆட்சிபீடம் ஏறிய இருபத்திரண்டாம் ஆண்டிற்குப் பிறகு, கி.பி. 458-ஆம் ஆண்டில், கடலூரில் அன்றிருந்த பாடலியில் வாழ்ந்து வந்த சமணர் சர்வநந்தி (Sarvanandi) இந்நூலை இயற்றினார். இதன்மூலம் சிம்மவர்மன் கி.பி. 436-ஆம் ஆண்டு அரசப் பதவியேற்றார் என நாம் ஊகிக்கலாம். பேராசிரியர் அ. கிருட்டிணசாமி இம்மன்னன் கி.பி. 300-இல் பதவியேற்றிருக்கலாம் என்று கருதுகிறார்.

பாரத வெண்பா எனும் மற்றொரு தமிழ்நூல், மூன்றாம் நந்திவர்மன் தெள்ளாற்றுப் போரில் (Tellaru battle) வெற்றியுடைந்ததைக் கூறுகின்றது. இந்நூலின் சில பகுதிகளே நமக்குக் கிடைத்திருக்கின்றன.

**நந்திக் கலம்பகம்** எனும் நூலும், பல்லவர்களைப் பற்றி குறிப்பிடுகிறது. நூறு பாடல்களுக்கு மேல் உள்ள இந்நூலில் பெரும்பான்மையான பாடல்களில் மூன்றாம் நந்திவர்மனின் வீரச் செயல்களைப்பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இவனே தெள்ளாறெறிந்த நந்திப் போத்தரையன் என்று புகழப்படுகிறான். மேலும் இம்மன்னர் ஆட்சிபுரிந்த நாட்டின் பரப்பு, எல்லைகளைப் பற்றியும், தலைநகரைப்பற்றியும், அவர் ஆதரவு அளித்த புலவர்களைப் பற்றியும் இந்நூல் கூறுகிறது. இந்நூலை இயற்றியவரை மூன்றாம் நந்திவர்மனின் வாழ்க்கை வரலாற்று ஆசிரியர் என நாம் அழைக்கலாம். ஆனால் இவ்வாசிரியரின் பெயர் நமக்குக் கிடைக்கவில்லை.

சங்ககால நூல்கள் பல்லவர்களைப் பற்றிக் கூறாவிட்டாலும், தொண்டையர் எனும் இனத்தினரைப் பற்றிக் குறிப்பிடுகிறது. சில வரலாற்றுப் பேராசிரியர்கள் தொண்டையர் களும், பல்லவர்களும் ஓர் இனத்தினரே அல்லது, பல்லவர்கள் தொண்டையர் இனத்தினரின் நெருங்கிய உறவினர் எனக் கூறுகிறார்கள்.

### சமஸ்கிருத நூல்கள்

அவந்திசுந்திரிகதாசார (Avanti Sundari Kathasara) எனும் நூலில் காஞ்சி மன்னர் சிம்ம விஷ்ணு, பண்டைக்கால சாளுக்கிய அரசர் விஷ்ணுவர்த்தனன், கங்க மன்னர் துர்வினிதா (Durvinita) முதலியவர்கள் புலவர் பாரவி (Bharavi)க்கு நன்கொடை அளித்ததாகக் கூறுகிறது. இந்நூலில் குறிப்பிட்டுள்ள மற்ற இரு அரசர்கள் கால அட்டவணைகளைப் பயன்படுத்தி பல்லவ மன்னர் சிம்ம விஷ்ணுவின் காலத்தைக் கணிக்கலாம். விஷ்ணு வர்த்தனர் கி.பி. 491-ஆம் ஆண்டிலும், துர்வினிதா கி.பி. 504-ஆம் ஆண்டிலும் ஆட்சிபுரிந்து கொண்டிருந்தார்கள்.

அப்பர் காலத்தில் ஆட்சிபுரிந்து வந்த மன்னர் முதலாம் மகேந்திரவர்மன் இயற்றிய மத்தவிலாச பிரஹசனா (Mattavilasa Prahasana) எனும் சமஸ்கிருத மொழி நாடக நூலில் காஞ்சியில் வாழ்ந்து வந்த சமணர்கள், கபாலிகர்கள், பௌத்தர்கள், பாசுபதர் (Pasupata) ஆகியோரின் வாழ்க்கை பற்றிய குறிப்புக்களை நாம் காணலாம். பகவத் அஜிகியாம் (Bhagavat Ajukiyam) எனும் நூலையும் இம்மன்னர் இயற்றியிருக்கிறார்.

### கல்வெட்டுகள்

R. கோபாலன் பல்லவர் கால கல்வெட்டுகளை முப்பிரிவுகளாகப் பிரிக்கின்றார் : (அ) கி.பி. 250-350 ஆண்டுகளிடையே முழுவதும் பிராகிருத (Prakrit) மொழியிலேயே எழுதிய கல்வெட்டுகள், (ஆ) கி.பி. 350-600-ஆம் ஆண்டுகளிடையே சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்ட கல்வெட்டுகள், (இ) கி.பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்து, சமஸ்கிருதம், தமிழ்மொழிகளில் எழுதப்பட்ட கல்வெட்டுகள்.

பெரும்பான்மையான கல்வெட்டுகள் பல்லவ மன்னர்கள் அளித்த அன்பளிப்பு, பரிசுக்கொடை, சமய அறத்துறை நேருரிமை மானியம் ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றன. கோவில்களுக்கு மன்னர்கள் அளித்த நில நன்கொடைகளைப் பற்றியும், சார்பாளர்களுக்கு அளித்த நில அன்பளிப்பைப் பற்றியும், இக்கல்வெட்டுகளில் எழுதப்பட்டிருக்கிறது. வரலாறு பற்றிய செய்திகள் பிராகிருத மொழிக் கல்வெட்டுகளில் மிகுதியாகக் கிடையாது. ஆனால் சமஸ்கிருத மொழியில் செதுக்கிய கல்வெட்டுகளில் முன்னாள் பல்லவ அரசர்களின் பெயர்களையும், அவர்கள் புரிந்த வீரச் செயல்களைப் பற்றியும் நாம் காணலாம்.

தவிர, சாளுக்கியர்கள், ராஷ்டிரகூடர்கள், கதம்பர்கள், மேலை கங்கர்கள், பாண்டியர்கள், முத்தரையர்கள், மற்றும் பல அரசர்களின் கல்வெட்டுகள் மூலமும் பல்லவ அரசுச் செய்திகளை நாம் அறிகிறோம்.

### பல்லவ அரசின் சிறப்பு

பல்லவ அரசின் தொடக்கத்தைப் பற்றி முடிவாக அறுதியிட்டு எவ்வாசிரியராலும் கூறமுடியவில்லை. ஊகக் கருத்துக்கள் பல ஆகையால் பல்வேறு புனைவுச் சாலைகள் மூலம், கருத்தியல் வேட்டை ஊர்திகளில் பல்லவ அரசின் பிறப்பிடத்திற்கு நாம் செல்லவேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. பல்லவ அரசர்களின் மூல முதலிடம் அயல்நாடு என்றும், வடஇந்தியா என்றும், தீபகற்பம் என்றும், தமிழ்நாடு என்றும் பல்வேறு கருத்துக்களை பல தனிமுறைக் கொள்கைக் குழாங்களைச் சேர்ந்த வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.

### (அ) அயல்நாட்டவர்

பேராசிரியர் வின்ஸெண்ட் சுமித், ஏ. லெவிஸ் ரைஸ் (A.L. Rice), வெங்கய்யா முதலியோர் பல்லவர்கள் அயல்நாட்டினில் தோன்றியவர்கள் எனக் கூறுகிறார்கள். புராணங்களில் கூறியிருக்கும் பஹ்லவர்களும் (Pahlavas), பஹ்நவாக்களும் (Pahnavas) பல்லவர்களும் ஒன்றே என வெங்கய்யா கூறுகிறார். பாரசீகப் பார்த்தியரின் பஹ்லவர் என்ற சொல்லே மருவி பல்லவர் என வந்துள்ளது. கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் பல்லவர்கள் மேலை இந்தியாவில் வசித்தபோது பல்லவர்களுக்கும், இந்தியர்களுக்கும் மிகுதியான வேறுபாடுகள் இருந்தன. மேலை இந்தியப் பகுதியிலிருந்து கீழைக் கடற்கறைப் பகுதிகளுக்கு சென்றார்கள் எனும் கருத்துக்களையும் இவ்வாசிரியர் கூறுகின்றார்கள். மேலும் இவர்கள் டெமிட்ரியஸ் அணிந்திருந்த மகுடத்திற்கும் நந்திவர்மப் பல்லவமல்லன் அணிந்திருந்த மகுடத்திற்கும் தொடர்பு இருந்ததாகக் கூறுவர். அவற்றில் யானையின் தலை அமைப்பு இருந்ததைச் சுட்டிக்காட்டுவர்.

லெவிஸ் ரைஸ் என்பார் பல்லவர்களின் பிறப்பிடம் பாரசீகம் என நினைக்கிறார். நடுவாசியப் பகுதிகளில் வாழ்ந்து வந்த இப்பாரசீக இனத்தினர்கள் குடிபெயர்ந்து, வடமேற்கு இந்தியப் பகுதிகளில் நுழைந்து குடியிருந்தார்கள். சாதவாகனர்களின் வீழ்ச்சிக் காலத்தில் இவ்வினத்தார்கள் தொண்டை மண்டலத்திற்கு வந்து குடியேறினார்கள். ஆனால் பல்லவ கல்வெட்டுகளும், செப்புப்பட்டயங்களும் இக்குடிப் பெயர்ச்சியைப் பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

## (ஆ) வடஇந்தியா – வாகாடக மரபினர்

பல்லவர்கள் வாகாடக மரபினர்கள் என கே.பி. ஜெயஸ்வால் கூறுகிறார். அவர் எடுத்துரைக்கும் விளக்கங்கள் : (அ) பல்லவர்களும் வாகாடர்களும் பாரத்வாஜ கோத்திரப் பிரிவைச் சேர்ந்தவர்கள் : (ஆ) இவ்விரு மரபினர்களும் வடஇந்திய நிருவாக அமைப்பு முறையை மரபுரிமையாகப் பெற்றவர்கள் : (இ) சாதவாகனப் பேரரசு அழிந்தவுடன் அப்பேரரசின் வெவ்வேறு பகுதிகளில் இருவரும் தொடர்ந்து வந்தவர்கள்.

(ஈ) பாரசீக நாகர்களின் கீழ் சிற்றரசு அமைத்து, ஆட்சி செய்து வந்த வீரகுரிச்சா (Virakuriccha) நாகர் இனத்தாரின் இளவரசியை மணம் புரிந்து கொண்டார். அவர்களுடைய மகன்கள் (பல்லவர்கள்) ஓர் அரசு அமைத்தார்கள்.

பல்லவர்கள் இந்திய குல மரபில் வளர்ந்த வட இந்திய மரபினர் வழியில் தோன்றியவர்கள்; பிறகு தென் இந்தியாவிற்கு வந்து குடியேறி, தென் இந்தியப் பண்பாடுகளைப் பின்பற்றினர் என நீலகண்ட சாஸ்திரி கூறியுள்ளார்.

## (இ) தீபகற்பத்தினர் – தொண்டை மண்டல புலிந்தர் அல்லது குறும்பர்

சத்தியநாதய்யர் பல்லவர்கள் தொண்டைமண்டலத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறியிருக்கிறார். (ஆ) அசோகர் கல்வெட்டுகளில் கூறியுள்ள புலிந்தர்களின் கிளை இனமான பாலாடர்களும் (Paladas) பல்லவர்களும் ஒருவரே என ஏற்றுக்கொள்ளலாம்; (இ) 'பல்லவர்கள்' எனும் சொல்லின் தமிழ் வடிவம் "தொண்டையர்" எனும் சொல்; (ஈ) தொண்டை மண்டலத்தில் உள்ள புலிநாடு, புலியூர்கோட்டம் ஆகியவை பல்லவ அடைமொழிப் பெயர்கள். (1) தொடக்கத்திலேயே பல்லவர்கள் சாதவாகனப் பேரரசின் தென்கிழக்குப் பகுதிகளில் ஆளுநர்களாகவும், பணி முதல்வர்களாகவும் பணிபுரிந்து வந்தார்கள். (2) தக்காணத்தில் ஆட்சி செய்து வந்த சாதவாகனர்களுக்கும் பல்லவர்களுக்கும் அரசியல் தொடர்பு இருந்தது என்பதில் ஐயமில்லை. சாதவாகனர்களின் சரிவுக் காலத்தில் அவர்கள் நாட்டுரிமை பெற்றார்கள்; தெற்கிலே மேலும் பரவி தங்கள் எல்லையை விரிவாக்கினார்கள்; (3) ஆந்திரர்களின் கீழ் உரிமை பெற்று, ஆட்சிசெய்து வந்த பல்லவர்கள், கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் முதன்மை நிலையை அடைந்தார்கள்; காஞ்சிமாநகரத்தைக் கைப்பற்றினார்கள்.

R. கோபாலன், சி. மீனாட்சி, தி.வி. மஹாலிங்கம் ஆகிய ஆசிரியர்கள், சத்தியநாதய்யர் கூறுவது போல், பல்லவர்கள் ஆந்திர சாதவாகனர்களின் கீழ் உரிமைபெற்று ஆட்சி செய்தவர்கள்; சாதவாகனர்களின் சரிவுக்காலத்தில் (தன்னாட்சி) நாட்டுரிமை பெற்றார்கள் என நம்புகிறார்கள். ஆனால் மீனாட்சி, பல்லவர்கள் பாரத்வாஜ கோத்திரம் என்ற பிராமணிய இனத்தைச் சார்ந்தவர்கள் என்று வலியுறுத்திக் கூறுவார். ஆனால் பேராசிரியர் கே.கே. பிள்ளை இதனை மறுத்து, சர்மா என்ற சொல் பிராமணரையும் வர்மா என்ற சொல் க்ஷத்திரியரையும் குறிக்கும் என்பார். பல்லவர்கள் 'வர்மர்கள்' என்று தங்களை அழைப்பதிலிருந்து அவர்கள் க்ஷத்திரியர் என்பது புலனாகும்.

மா. இராசமாணிக்கம் பின்வருமாறு கூறியிருக்கிறார் : (1) சாதவாகனர்களின் வழி மரபில் பல்லவர்கள் வந்ததால் பல்லவர்களின் பண்டைய கல்வெட்டுகள், சாதவாகனர் களின் கல்வெட்டுக்களைப் போல பிராகிருத (Prakrit) மொழியில் எழுதப்பட்டிருக்கின்றன. (2) சாதவாகனப் பேரரசின் தென்பகுதியில் பல்லவர்கள் ஆளுநர்களாகப் பணியாற்றி னார்கள் (3) கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே, சோட்டாநகர், திரையர் களிடமிருந்து தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றினார்கள். (4) பிறகு தொண்டை மண்டலத்தின் சிறப்புப் பகுதியான காஞ்சியைக் கைப்பற்றினார்கள். (5) ஆகையால் பல்லவர்கள் தமிழ் நாட்டின் வட பகுதியில் தங்கள் அரசை நிறுவினார்கள்.

### ஈ) பல்லவர் தமிழர்களே!

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ராஜநாயகம், கிள்ளிவளவனுக்கும் நாக இளவரசிக்கும் பிறந்த இளம்திரையன் தான் முதலாம் பல்லவ அரசர் என்று கூறுகிறார். மேலும், பல்லவர் மணிபல்லவத்தீவைச் சேர்ந்தவர்கள். பல்லவத்தீவிலிருந்து வந்ததால் பல்லவர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

பெரும்பாணாற்றுப்படையின் பாட்டுடைத்தலைவன் இளந்திரையன். இவன் தொண்டை மண்டலத்தை ஆண்டு வந்தான் என்றும், சோழவமிசத்தின் ஒரு பிரிவினன் என்றும், சோழர்கள், நாகர்கள் திருமணத் தொடர்பு மூலம் பிறந்த வமிசத்தினர் என்றும் ஆர். இராகவையங்கார் கருதுகின்றார். சோழமன்னன் கிள்ளிவளவனுக்கும் நாக இளவரசி பீலிவளைக்கும் பிறந்த குழந்தையை, தொண்டைக் கொடிகளால் சுற்றி கடலில் மிதக்க விட்டனர் என்றும், அக்குழந்தையே பிற்காலத்தில் தொண்டை மண்டலத்து மன்னனாக — முதல் பல்லவ மன்னனாக — காஞ்சியில் முடிசூட்டிக் கொண்டான் என்றும், திரைகளால் அடித்து வரப்பட்டவனாதலால் இளந்திரையன் என்றும் அழைக்கப்பட்டான் என்று கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன.

பல்லவர்கள் தொண்டை மண்டலத்தைச் சேர்ந்த திணைப் பிறப்புரிமையாளர்கள் (natives). பல்லவர் எனும் சொல்லும், தொண்டையர் என்னும் சொல்லும் ஒன்றே; தொண்டைமான் என்றால் மக்கள், தொண்டைமண்டலத்தின் அரசர்கள் எனப்பொருள் படும் — என எஸ். கிருஷ்ணசாமி கருத்துத் தெரிவிக்கின்றார்.

பல்லவர்கள் தமிழர்கள் தான் என்ற கருத்தே சரியானது என என். சுப்ரமணியம் தெரிவிக்கின்றார். “தொண்டை மண்டலத்தைச் சேர்ந்த திரையர் — தொண்டையர், மணிமேகலையில் கூறியுள்ள நாகர் மரபினர்களுடன் உறவு கொண்ட சோழ வம்சத்தினரின் உறவினர்கள். அவர்கள் இளம் திரையர்கள் என அழைக்கப்பட்டார்கள். சோழர்களின் இசைவுடன் ஒரு சிற்றரசை அமைத்து அவர்கள் ஆட்சிபுரிந்து வந்தார்கள். புகார் நகரத்தைக் கடல் அழித்தவுடன், திரையர்களை தொண்டை மண்டலத்திலிருந்து துரத்திவிட்டு, சோழர்கள் காஞ்சி மாநகரத்திலிருந்து ஆட்சிபுரிந்து வந்தார்கள். ஆகையால், வடபகுதியில் உள்ள திருப்பதியைக் கடந்து சாதவாகனர்களின் கீழ் சிற்றரசர்களாக திரையர்கள் ஆட்சி புரிந்து வந்தனர். தொண்டையர் எனும் பெயர் சமஸ்கிருத மொழியில் “பல்லவர்கள்” என்னும் சொல்வடிவம் பெற்றது; சமஸ்கிருத — பிராகிருத மொழிகளைத் தங்கள் கல்வெட்டுக்களில் பயன்படுத்தத் தொடங்கினார்கள். கி.பி. மூன்றாம் நூற்றாண்

டின் தொடக்கத்திலே பல்லவர்கள் தங்கள் பிறப்பிடமான தொண்டை மண்டலத்திற்கு வந்து குடியேறி, ஆட்சி புரியத் தொடங்கினர். பல்லவர்கள் தெற்கு நோக்கி படை எடுத்ததன் விளைவால் களப்பிரர்கள் தமிழ்நாட்டின் மேல் படையெடுத்தார்கள்.

சுப்பிரமணியம் கூறும் கருத்தினை, வேறு பல வரலாற்று மூலங்கள் மூலம் நிரூபிக்க முடியாது. பல்லவர்காலத்து இலக்கியங்களிலோ அல்லது கல்வெட்டுகளிலோ இக்கருத்தை ஆதரிக்கும் சான்றுகள், ஆதாரங்கள் இல்லை. சங்ககாலத்திற்குப் பின் வந்த சோழர்கள் காஞ்சியில் இருந்த தொண்டையர்களை துரத்தி விட்டார்கள் எனும் கருத்துக்கும் சான்றுகள் இல்லை. அதனால் பல்லவர்கள் இந்தியர்கள் தாம் என்றும் சத்தியநாத ஐயர் கூறுவதைப்போல் சாதவாகனர்களின் சிற்றரசர்களாக ஆட்சி புரிந்து வந்த புலிந்த (Pulindas) வம்சத்தினர் எனும் கருத்தினைப் பலர் ஒப்புக்கொள்கிறார்கள். பல்லவர்கள் சாதவாகனரின் சிற்றரசர்கள் — ஆந்திர நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதற்குறிய சான்றுகள் வருமாறு : (1) பல்லவர்கள் பிராகிருத — சமஸ்கிருத மொழிகளை ஆதரித்தனர்; (2) பல்லவர்கள் சாதவாகன ஆட்சி முறையைப் பின்பற்றினர்; (3) பல்லவர்கள் முதலில் தமிழகத்திற்கும் வட—கிழக்காகவுள்ள நெல்லூர்ப் பகுதிகளிலிருந்து ஆட்சி புரிந்தனர்; (4) சாதவாகனர் சரிந்த பின்னர் சுயாட்சி நிறுவி, தமிழகத்தை அடைந்து, காஞ்சியைக் கைப்பற்றி, தென்தமிழகம் நோக்கி விரிவடைந்தனர்; (5) பாரவி, தர்மபாலா, தாண்டின் போன்ற வடமொழிப் புலவரைப் போற்றினர்; (6) சமண — பௌத்த சமய ஆதரவாளர்களாயிருந்துள்ளனர்; (7) உதயேந்திரம் அறிக்கையில் உதயச்சந்திரன் தாம் தோற்கடித்த பாண்டியரைத் தமிழர் என்று குறித்துள்ளமை பல்லவர் தமிழர் அல்லர் என்பதை வலியுறுத்தும்; (8) மேலும் ஆந்திராவிலிருந்து இந்தோசீனா சென்று குடியேறியிருந்த பல்லவக் குடியினரிலிருந்து இரண்டாம் நந்திவர்மப் பல்லவ மன்னன் வந்தான் என்பதும் கருதத்தக்கது. தி.நா. சுப்ரமணியன் வரைந்த "Pallavas in Indo-China" என்ற புத்தகத்தில் இக்கருத்து கூறப்பட்டுள்ளது. (9) இறுதியாக, மகேந்திரவர்மனே உண்மையில் தமிழனாக்கப்பட்ட முதல் பல்லவ மன்னன் ஆவான். இவன் காலத்திலிருந்து இருமொழி (bi-lingual)ப் பட்டயங்கள் (வடமொழி + தமிழ்மொழி) வெளியாகத் தொடங்கின. தமிழ் மொழிக்கு இவன் காலத்திலிருந்துதான் சிறப்பு தரப்பட்டுள்ளது.

முடிவாக ஒரு கருத்தும் ஒப்புக் கொள்ளும் தன்மையை அடையாததால் வருங் காலத்தில் இக்கருத்துக்கள் எல்லாம் புறக்கணிக்கப்பட்டாலும் வியப்பில்லை. அதேபோல் இக்கருத்துக்களில் ஒரு தெளிவான கருத்தை மட்டும் வருங்காலத்தில் ஏற்றுக்கொள்ளப் பட்டாலும் வியப்பிலும் வியப்பில்லை.

## தொடக்ககாலப் பல்லவர்கள் (Early Pallavas)

தொடக்ககால பல்லவர்களின் மூதாதையர் மரபு வரலாறு, குடிவழிப்பட்டியலை (Genealogy)ப் பற்றி தெளிவான இறுதிச் சான்றுகள் கிடையா. குறிப்பாக மகேந்திரவர்மனின் தந்தையான சிம்மவிஷ்ணுவிற்கு முன் ஆட்சி செய்து வந்த வரிசையைப்பற்றி நமக்குத் தெளிவான சான்றுகள் கிடையா.

முற்காலப் பல்லவர்களைப்பற்றிய பட்டயங்களை இரு வகையாகப் பிரிக்கலாம். (அ) பிராகிருத மொழிப் பட்டயங்கள், (ஆ) சமஸ்கிருத மொழிப் பட்டயங்கள். அவை:

(அ) மஞ்சிகல்லு (கல்வெட்டுகள்) (Manchikallu Stone Inscriptions)

(ஆ) மொய்தவோலு நன்கொடைப்பட்டயங்கள் (Mayidavolu Grants)

(இ) ஹிராஹதகல்லி செப்புத்தகடு (Hirahadagalli Plates)

(ஈ) பிரிட்டிஷ் பொருட்காட்சி சாலையில் உள்ள இராணியார் சாருதேவியின் செப்புத் தகடுகள் (British Museum Plates of Queen Charudevi)

மஞ்சிகல்லு கல்வெட்டுக்களை அளித்தவர் சிம்மவர்மன். இது மொழி, தொல் லெழுத்துக்களை (Paleography)யில் இக்ஷ்வாகு (Iksvaku) பதிவுக் குறிப்புக்களை ஒத்திருக்கிறது. இக்கல்வெட்டு கி.பி. 4-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படுகிறது.

மொய்தவோலு நன்கொடைப் பட்டயங்கள், இளவரசர் சிவஸ்கந்தவர்மனால், அவருடைய தந்தையின் பத்தாவது ஆட்சி ஆண்டில் அளிக்கப்பட்டது.

ஹிராஹதகல்லி செப்புத்தகடு சிவஸ்கந்தவர்மன் அரசனாகப் பதவியேற்றவுடன், அவர் ஆட்சியேற்ற எட்டாம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

பிரிட்டிஷ் பொருட்காட்சியில் உள்ள சாருதேவியின் செப்புத்தகடுகள் பிராகிருத மொழியில் உள்ளன. சாருதேவி மன்னர் புத்தவர்மனின் மனைவி; புத்தாங்குராவின் தாய். இத்தகடுகளில் மூன்று அரசர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன — விஜயஸ் கந்தவர்மன், விஜயபுத்தவர்மன், புத்தான்குரன், விஜயஸ்கந்தவர்மனும், ஸ்கந்தவர்மனும் ஒரே அரசரின் பெயர் என தி.வி. மஹாலிங்கம் கூறுகிறார்.

பிராகிருத மொழிப் பட்டயங்களைத்தவிர சமுத்திரகுப்தர் வெளியிட்ட அலஹாபாத் கல்வெட்டும், பல்லவர்களைப் பற்றி அறிவதற்குப் பயன்படுகிறது. இக்கல்வெட்டில் விஷ்ணுகோபனின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பல்லவர்களின் பெயர் பட்டியலில் விஷ்ணுகோபன் எனும் பெயரை நாம் காணலாம். ஆகையால் இக்கல்வெட்டில் கூறியிருக்கும் விஷ்ணுகோபனின் பெயர் ஒரு பல்லவ அரசரைப் பற்றிக் குறிப்பிடுகிறது என எடுத்துக் கொள்ளலாம். சமஸ்கிருத மொழிப் பட்டயங்களில் காணப்படும் குமார விஷ்ணுவும், அலகாபாத் கல்வெட்டில் காணப்படும் விஷ்ணுகோபனும் ஒருவரே என ஆர். கோபாலன் கூறியிருக்கிறார். அதே சமயத்தில் இக்கல்வெட்டுகளிலும், பட்டயங்களிலும் மூன்று விஷ்ணுகோபன்களைப் பற்றியும், மூன்று குமார விஷ்ணுக்களைப் பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்.

பிராகிருத மொழிப் பட்டயங்கள், அலஹாபாத் கல்வெட்டு ஆகியவைகளில் கூறியிருக்கும் செய்திகளிலிருந்து நாம் பின்வரும் முடிவுக்கு வரலாம். சிவஸ்கந்தவர்மன் பட்டத்துக்குரிய இளவரசர் என மொய்தவோலு நன்கொடைப் பட்டயங்களில்

கூறப்பட்டிருப்பதால், அவருடைய தந்தை ஒரு பேரரசராக இருந்திருக்கவேண்டும் எனும் முடிவுக்கு வரலாம். தம் தந்தை இறந்தவுடன் “மகா ராஜாதிராஜா” எனும் பெயரை சூட்டிக்கொண்டு சிவஸ்கந்தவர்மன் அரசு பதவியேற்றார். முதல் இரண்டு பட்டயங்களை மன்னர்கள் காஞ்சியிலிருந்து வெளியிட்டதால், காஞ்சிமாநகரந்தான் பல்லவ மன்னர்களின் தலைநகரமாக இருந்திருக்கவேண்டும். சிவஸ்கந்தவர்மன் பல்லவ அரச குலத்தைச் சேர்ந்தவர். அக்னிஸ்தோமா (Agnistoma), வாஜபேயா (Vajapeya), ராஜசூயா (Rajasuya) முதலிய வேள்விகளைச் செய்து முடித்தார். இவர் ஆட்சிக் காலம் கி.பி. 300-325 என நம்பப்படுகிறது.

சமஸ்கிருத மொழியில் பட்டயங்களை வெளியிட்ட பல்லவ மன்னர்கள், கி.பி. 350ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 550-ஆம் ஆண்டு வரை ஆட்சி புரிந்து வந்தார்கள் என வரலாற்றாசிரியர்கள் கருதுகிறார்கள். சமஸ்கிருத மொழிப் பட்டயங்களில் 16 பல்லவ மன்னர்களின் பெயர்களை நாம் காணலாம். களப்பிரர்களின் தமிழ்நாட்டுப் படையெடுப்பின்போது பல்லவர்கள் காஞ்சியை இழந்தார்கள் என்றும், பின்வாங்கி நெல்லூருக்குச் சென்றார்கள் என்றும் சிலர் கருதுகிறார்கள்.

கல்வெட்டுக்களில் பின்வரும் பல்லவ மன்னர்களின் பெயர்களைக் காணலாம். (1) சிம்ஹவர்மன், (2) ஸ்கந்தவர்மன், (3) வீரகுருச்சா, (4) குமாரவிஷ்ணு மேலும் பலர். ஆனால் இம்மன்னர்கள் ஆட்சிபுரிந்து வந்த காலத்தைப் பற்றியும், அவர்களுக்கு உள்ள உறவு முறையைப்பற்றியும் இக்கல்வெட்டுகள் தெளிவாக விளக்கவில்லை. சகஸ்கிருத மொழிப்பட்டயங்களை வெளியிட்ட பல்லவமன்னர்கள் சைவ, வைணவ, புத்த, சமயங்களைப் பின்பற்றியிருப்பார்கள் என, அவர்கள் சூட்டிக்கொண்ட பெயர்களிலிருந்து முடிவுக்கு வரலாம்.

என். சுப்பிரமணியனின் கருத்துப்படி முற்கால பல்லவர்களின் குடி வழிப்பட்டியல் பின்வருமாறு:

சிம்ஹவர்மன்
(கி.பி. 300)
↓
சிவஸ்கந்தவர்மன்

விஷ்ணுகோபன்
(சமுத்திரகுப்தரால்
தோற்கடிக்கப்பட்டவர்

(கி.பி. 350)

(பப்பதேவா (Bappadeva)
↓
புத்தவர்மன்
↓
புத்தான்குரா

# முதல் பாண்டியப் பேரரசு

சங்ககாலத்திற்குப் பின் களப்பிரர்கள் தமிழ்நாட்டின் மீது படையெடுத்த காலத்தைக் 'களப்பிரர்கள் இடையாட்சிக் காலம்' (கி.பி. 300-600) என்று குறிப்பிடலாம். ஒழுங்கான அரசனில்லாத காலமாக இருந்ததால் இக்காலத்தை 'இடை ஓய்வு' அதாவது ஒரு பேரரசும் இல்லாத இருண்ட காலம் எனக் குறிப்பிடலாம். பாண்டியர்கள் எவ்வாறு களப்பிரர்களைத் தோற்கடித்தார்கள் என சரியான தகவல்கள் கிடைக்கவில்லை. செப்புப் பட்டயங்களில் சிலவற்றில் இதுசம்பந்தமாக சிலசெய்திகள்தான் கிடைக்கின்றன. கி.பி. ஆறாவது நூற்றாண்டின் கடைசிப் பகுதியே கி.பி. 570ஆம் ஆண்டிற்குப் பின் பாண்டிய மன்னர் கடுங்கோன் (Kadungon) களப்பிரர்களை பாண்டிய நாட்டை விட்டுத் துரத்தினான் என்றும், அந்தக் காலத்தில் பல்லவ அரசர் சிம்மவிஷ்ணு அவர்களை சோழ மண்டலத்திலிருந்து விரட்டினான் என்றும் வரலாற்றாசிரியர்கள் நம்புகின்றார்கள்.

## முதலாவது பாண்டியப் பேரரசு (கி.பி. 575–966)

முதலாவது பாண்டியப் பேரரசின் வரலாறு சிறப்பாக கேள்விக்குடி, சிவரமங்கலம், சின்னமனூர் முதலிய செப்புப்பட்டயங்கள் மூலம் நமக்குக் கிடைக்கின்றது.

## கடுங்கோன் (கி.பி. 590–620) அல்லது (கி.பி. 575–600)

'களப்பிரர்கள் இடையாட்சிக் காலத்தின்போது ஆட்சி செய்த பாண்டிய அரசர்களைப் பற்றிச் செய்திகள் கிடைக்கவில்லை. ஆகையால் புகழ்வோங்கிய பாண்டிய அரசன் இக்காலத்தில் ஆட்சிப் பீடத்தில் அமரவில்லை என நாம் கருதலாம். பாண்டிய அரசு ஒரு சிற்றரசுபோல தொடர்ந்து ஆட்சி செய்து வந்தது என நம்பலாம். ஆகையால் களப்பிரர்களைப் பாண்டிய நாட்டிலிருந்து விரட்டிய பாண்டியமன்னன் கடுங்கோனின் முன்னோர்களைப் பற்றி நமக்கு தகவல் கிடைக்கவில்லை.' வேள்விக்குடி செப்புப் பட்டயம் களப்பிரர்களைக் கடுங்கோன் துரத்தியடித்த செய்தியைத் தவிர, மற்ற அவருடைய முன் வரலாற்றைப் பற்றி குறிப்பிடவில்லை. மற்றொரு கடுங்கோனைப்பற்றி இறையனார் அகப்பொருள் விளக்கவுரையில் செய்திகள் கிடைக்கின்றன. ஆனால், முதல் சங்ககாலத்தின் இறுதிக் காலத்திலே ஆட்சி செய்த கடுங்கோனும் முதலாவது பாண்டிய அரசை அமைத்த கி.பி. ஆறாம் நூற்றாண்டு கடுங்கோனும் வேறுபட்ட அரசர்கள். வேறுபட்ட இவ்விரு அரசர்களுக்கும் பெயரில் தான் ஒற்றுமை. கடுங்கோனைப்பற்றி முடிவான செய்திகள் கிடைக்கவில்லை. சில சிற்றரசர்களைத் தோற்கடித்தார் என்றும், அவர்களுடைய செல்வாக்குள்ள பகுதிகளை அழித்தார் என்றும் வேள்விக்குடி செப்புப் பட்டயம் கூறுகின்றது.

## மாறவர்மன் அவனி சூளாமணி (கி.பி. 620–645)

கடுங்கோனுக்குப்பின் அவருடைய மகன் மாறவர்மன் அவனி சூளாமணி 20ஆண்டுகளுக்கு மேல் பாண்டிய நாட்டை ஆட்சி செய்தார். இவருடைய ஆட்சியைப் பற்றி தெளிவான குறிப்புகள் கிடையாது. மாறவர்மன் எனும் சிறப்புப் பெயரை இவருக்குப்பின் ஆட்சிக்கு வந்த பெரும்பான்மையான பாண்டியப் பேரரசர்களும் சூட்டிக்

கொண்டார்கள். முதலாவது பாண்டியப் பேரரசர்கள் சமஸ்கிருத மொழிப் பட்டப் பெயர்களை சூட்டிக் கொண்டார்கள். ஆனால் சங்ககாலப் பாண்டியர்கள் தமிழ் மொழி பெயர்களைத்தான் சூட்டிக்கொண்டார்கள்.

## சேந்தன் அல்லது ஜெயந்தன் (கி.பி. 645–670)

சேந்தன் எனும் பெயரின் சமஸ்கிருத வடிவம் ஜெயந்தன். 25 ஆண்டுகள் ஆட்சி செய்த இவ்வரசரின் மற்றொரு பெயர் 'வானவன்'. பொதுவாக சேரர்கள் தான் 'வானவன்' எனும் பெயரை சூட்டிக் கொள்வார்கள். ஆகையால் சேந்தன் சேரர்களைத் தோற்கடித் திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. திருநெல்வேலியில் உள்ள மலையடிக் குறிச்சிப் பகுதியில் ஒரு குடைவரைக் கோவில் இவர் ஆட்சிக் காலத்தில் தோண்டியெடுக்கப் பட்டது. இவனை 'செங்கோற் சேந்த' என்றும் 'வேந்தர் வேந்தன்' என்றும் வேள்விக்குடிச் சாசனம் புகழ்கிறது.

சேந்தனின் இறுதி ஆட்சிக் காலத்திலே சீன யாத்திரிகர் யுவான்சுவாங்கு காஞ்சிமாநகரத்திற்கு வந்ததாக நம்பப்படுகிறது. யுவான்சுவாங்கு பாண்டிய நாட்டைப் பற்றிய செய்திகளைத் தம் வரலாற்றுக் குறிப்பிலே பதிவு செய்திருக்கிறார். காஞ்சியில் இருந்தபோது பாண்டிய நாட்டு மன்னர் இறந்ததாகத் தாம் கேள்விப்பட்டதாக யுவான்சுவாங்கு கூறுகிறார். ஆனால் இக்கருத்தை நீலகண்ட சாஸ்திரி ஏற்றுக்கொள்ள மறுக்கிறார். இவர் காஞ்சிக்கு வந்ததே நம்பக்கூடிய செய்தியாக எடுத்துக்கொள்ள முடியாது என ந. சுப்பிரமணியம் கூறுகிறார்.

## அரிகேசரி மாறவர்மன் அல்லது அரிகேசரி பாராங்குசன் (கி.பி. 670–700)

அரிகேசரி மாறவர்மன் சேந்தனுக்குப்பின் ஆட்சியில் அமர்ந்தான். ஆனால் இவன் சேந்தனுடைய மகன் எனக் கூறுவதற்குச் சான்றுகள் இல்லை. வேள்விக்குடி, சிறிய சின்னமனூர் செப்புப் பட்டயங்களில் இவனுடைய பெயர் அரிகேசரி மாறவர்மன் என்றும், பெரும் சின்னமனூர் செப்புப் பட்டயத்தில் அரிகேசரி பாரங்குசன் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பொதுமக்கள் இவனுக்கு வழங்கிய பெயர் 'கூன் பாண்டியன்' என்பதாகும்.

பல்லவர்களையும், சோழர்களையும் அரிகேசரி மாறவர்மன் தோற்கடித்ததாக செய்திகள் கிடைக்கின்றன. இவன் பல்லவர்களைத் தோற்கடித்ததாகவும், நெய்வேலி, சங்கரமங்கைப் பகுதிகளைக் கைப்பற்றியதாகவும் பெரும் சின்னமனூர் பட்டயங் களிலிருந்து அறிகிறோம். வேள்விக்குடிச் செப்புப்பட்டயங்களிலிருந்து பாழி, நெல்வேலி, உறையூர், செந்நிலம் ஆகிய பகுதிகளில் வெற்றி வாகை சூடினான் எனும் குறிப்புகள் கிடைக்கின்றன. சோழர்களின் பண்டைய தலைநகரான உரையூரை மட்டும் இவன் கைப்பற்றவில்லை. சோழ இளவரசி மங்கையர்க்கரசியையும் மணம் புரிந்து கொண்டான். இவன் காலத்தில் தொடங்கிய சோழர்களின் சரிவுக்காலம், முதலாம் ஆதித்திய சோழர் ஆட்சிக்காலம் (கி.பி. 871-907) வரை ஏறத்தாழ இருநூறு ஆண்டுகள் நீடித்தது. இவன் ஆட்சியில் தான் பாண்டியரின் ஆதிக்கம் பாண்டிய நாட்டின் எல்லையையும் கடந்து

பல திக்குகளிலும் பரவியது. சேரரும், சோழரும், பரவர் போன்ற குறுநிலத் தலைவர்களும், இவனுடைய ஆட்சிக்குட்பட்டிருந்தனர். இதன் காரணமாக இக்காலத்தை பாண்டியரின் "முதல் பேரரசு காலம்" என நீலகண்ட சாஸ்திரி குறித்தார்.

அரிகேசரி மாறவர்மன் முதலாம் நரசிம்மவர்மபல்லவன் காலத்தில் ஆட்சி செய்து வந்தான் என நம்பப்படுகிறது. திருஞான சம்பந்தரும் முதலாம் நரசிம்மவர்மனின் படைத் தலைவராக பணிபுரிந்த சிறுதொண்டரும் இவருடைய காலத்தில் இருந்ததாக நம்பப்படுகிறது. தொடக்கத்தில் சமணராக இருந்த போதிலும், பிறகு சம்பந்தர் தொடர்பு மூலம் இவன் சைவ சமயத்தைத் தழுவினான். 'ஹிரண்யகர்பம்', 'துலாபாரம்' போன்ற சடங்குகளைச் செய்து முடித்தார். சைவ இலக்கியமான திருவிளையாடல் புராணத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் சிவனடியார்களில் அரிகேசரி மாறவர்மனும் ஒருவர். திருவிளையாடல் புராணம் இவனை 'நின்றசீர் நெடுமாறன்' எனக் குறிப்பிடுகிறது. நாயன் மார்களில் இவனும் ஒருவன் என சுந்தரமூர்த்தி நாயனார் வழங்கிய திருத்தொண்டர் தொகைக் குறிப்பிடுகிறது. இவனது ஆட்சிக் காலத்தை பாண்டிய நாட்டின் சைவ சமய மறுமலர்ச்சிக்காலம் எனக் கூறலாம். பாண்டிய நாட்டில் பௌத்தமதம் தொலைந்து விட்டது பௌத்த மடங்கள் அழிவு நிலையை அடைந்துவிட்டன. நூற்றுக்கணக்கில் இந்துக்கடவுள்களின் கோவில்கள் நிறைந்திருக்கின்றன என யுவான்சுவாங் குறிப்பிடுவதையும் நாம் மறக்கக்கூடாது.

## கோச்சடையன் ரணதீரன் (கி.பி. 709 – 730)

எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அரியணையேறிய கோச்சடையன் ரணதீரன் அரிகேசரி மாறவர்மனின் மகனாவான். இவன் ஓர் பெரிய போர்வீரன்; பாண்டிய நாட்டின் அண்டைப்பகுதிகளைக் கைப்பற்றினான். மேலைத் தக்காணத்தில் உள்ள மராத்திய இனக்குழுவினரை மங்களபுரத்தில் தோற்கடித்தான் என வேள்விக்குடிச் சாசனம் கூறுகிறது. மங்களபுரம் என்பது பாண்டிய நாட்டுப் பகுதியா, அல்லது திருச்சி மாவட்டத்தில் கொள்ளிடத்தின் வடகரையில் இருக்கும் பகுதியா அல்லது கருநாடகத்திலுள்ள மங்களபுரமா என்று வரலாற்று ஆசிரியர்களால் உறுதியாகக் கூறமுடியவில்லை. ஏனென்றால் இதற்கு வேறு துணைச் சான்றுகள் இல்லை.

'கருநாடகன்', 'ரணதீரண்' எனும் விருதுகள் இவன் சாளுக்கியரைத் தோற்கடித்ததை ஐயமின்றி உணர்த்துகின்றன. 'கொங்கர் கோமான்' என்றும் இவனை அழைப்பதால், இவன் கொங்கு நாட்டையும் கைப்பற்றியிருக்கலாம். 'கருநாடகன்' என்பதால் கொங்கு நாட்டையும் கடந்து கருநாடகப் பகுதியின் மேல் படையெடுத்திருப்பான் எனக் கூறலாம். 'வானவன்', 'செம்பியன்', 'சோழன்' என இவனை அழைப்பதால் இவன்சேர, சோழ அரசின்மீது மேலாதிக்க உரிமை பெற்றிருந்தான் எனவும் கூறலாம்.

செங்கோடு, புதாங்கோடு (இரண்டும் சேரநாட்டுப் பகுதிகளாக் இருக்கலாம்) போர்களிலும், பாண்டி நாட்டின் தென்கோடியில் உள்ள மருதூர்ப் போரிலும் இம்மன்னன் வெற்றி வாகை சூடினான்.

இம்மன்னன் காலத்தில் தான் சுந்தரமூர்த்தி நாயனாரும் சேரமான் பெருமாளும் மதுரைக்கு வந்தனர். இவன் சேரமான் பெருமானின் மகளைத் திருமணம் செய்து கொண்டான். தனது புதல்வியைச் சோழ இளவரசனுக்கு மணம் செய்வித்தான். இம்மன்னன் சைவசமயத்தைப் பேணி வளர்த்தான்.

## அரிகேசரி பராங்குச மாறவர்மன் அல்லது முதலாம் இராசசிம்மன் (கி.பி. 730–768)

கோச்சடையன் ரணதீரனின் மகனான அரிகேசரி பராங்குச மாறவர்மன் தந்தையைப் போல ஒரு பெருவீரனாவான்; பல வெற்றிகளைப் பெற்றான். இவன் ஆட்சிக்காலத்தில் தான் நந்திவர்ம பல்லவமன்னன், சாளுக்கிய அரசர்களான இரண்டாம் கீர்த்திவர்மன், விக்ரமாதித்யன், சுங்க அரசனான ஸ்ரீ புருஷன் முதலியவர்கள் ஆட்சி புரிந்தார்கள்.

இம்மன்னன் அடைந்த வெற்றிகளில் சிறப்பானது பல்லவர்களைத் தோற்கடித்ததே யாகும். ஸ்ரீவரமங்கல செப்பேடு இவனை 'பல்லவ பஞ்சணன்' அல்லது பல்லவர்களை அழித்தவன் என்ற சிறப்புப் பெயரால் அழைக்கின்றது. வேள்விக்குடிச் செப்பேடும் இதை உறுதிப்படுத்துகிறது. நெடுவயல், குறுமடை, மண்ணிக்குறிச்சி, திருமங்கை, பூவாளூர், கொடும்பாளூர், குழம்பூர் முதலிய இடங்களில் பல்லவர்களைத் தோற்கடித்தான். இறுதியாக கும்பகோணத்திற்கு அருகேயுள்ள நந்திபுரத்தில் பல்லவ மன்னரை எதிர்த்தான். அச்சமயத்தில் பல்லவ படைத் தலைவன் உதயச்சந்திரன் படைகளுடன் நந்திபுரத்திற்கு வந்து பல்லவ மன்னனை விடுவித்தான் என்ற செய்தியை உதயேந்திரம் செப்பேடு கூறுகின்றது.

மேலும் இம்மன்னன் கொங்கு நாட்டைக் கைப்பற்றினான். மேலைக் கங்க அரசர் ஸ்ரீ புருஷனைத் தோற்கடித்து, அவனுடைய மகளை மணம் புரிந்து கொண்டான். வெண்பை என்னுமிடத்தில் இவன் மேலைச் சாளுக்கியர்களையும் தோற்கடித்தான். கூடல் அல்லது மதுரை, வஞ்சி, உறையூர்ப் பகுதிகளின் மேல் ஆதிக்கம் செலுத்திய இவ்வரசனை ஒரு பேரரசன் என்றே அழைக்கலாம்.

பெரியாழ்வார், அவரது மகள் ஆண்டாள், நம்மாழ்வார், அவரது சீடர் மதுரகவி இந்நால்வரும் இம்மன்னன் காலத்திலும், நெடுஞ்சடையன் பராந்தகன் காலத்திலும் (8-ஆம் நூற்றாண்டு) வாழ்ந்தவர்கள் என நம்பப்படுகிறது.

## நெடுஞ்சடையன் பராந்தகன் அல்லது முதலாம் வரகுணன் (கி.பி. 768–815)

முதலாம் இராஜசிம்மனுக்குப் பிறகு அவருடைய மகன் நெடுஞ்சடையன் பராந்தகன் ஆட்சிக்கு வந்தான். இவ்வேந்தனைப் பற்றியும் இவனது முன்னோர்களைப் பற்றியும், பல அரிய செய்திகள் அளித்த வேள்விக்குடிச் சாசனம், இம்மன்னனின் மூன்றாவது ஆட்சி ஆண்டின் போது இம்மன்னரால் வழங்கப்பட்டது. தனது 17ஆம் ஆட்சியாண்டில் ஸ்ரீ வரமங்கலச் சாசனத்தை அளித்தான். இம்மன்னனது கல்வெட்டுகளை திருச்சியிலும், ஆனைமலையிலும், கழுகுமலையிலும், அம்பாசமுத்திரத்திலும் காணலாம். இக்கல் வெட்டுக்களும், சென்னை பொருட்காட்சி சாலையிலுள்ள சாசனங்களும் இம்மன்னரைப் பற்றியும், பாண்டிய நாட்டைப் பற்றியும் பல செய்திகளைக் கொடுக்கின்றன.

இவன் தனது ஆட்சித் தொடக்கத்தில் காவிரிக் கரையிலுள்ள தஞ்சைக்கருகில் உள்ள பெண்ணாடகத்தில் பல்லவர்களைத் தோற்கடித்த செய்தியே சிறப்பானது. ஸ்ரீவரமங்கல செப்பேடு மேலும் பாண்டியன் பெற்ற சில வெற்றிகளைப் பற்றிக் கூறுகின்றது. பாண்டியனை எதிர்த்து கொங்கு நாட்டானாகிய அதியன் போர் செய்தான் என்றும் அவனுக்கு உதவியாக சேரனும் பல்லவனும் வந்தபோது அம்மூவரையும் பாண்டியன் வென்றான் என்றும் சாசனம் கூறுகிறது. ஆயிரவேலி, அயிரூர், புகழியூர் ஆகிய இடங்களில் அதியமான் தோற்கடிக்கப்பட்டு, மதுரையில் சிறை வைக்கப்பட்டான் என்றும் கூறப்படுகிறது.

தமது எதிரிகளை வேலூர், விண்ணம் ஆகிய பகுதிகளில் தோற்கடித்தான். தென் திருவாங்கூரில் உள்ள வேணாட்டையும் கைப்பற்றினான். அரணால் சிறந்து விளங்கிய விழிஞத்தை அழித்தான். வேணாட்டை ஆய்வேள் என்னும் ஆய்குடியினர் ஆண்டு வந்தனர்.

ஆய்வேளிர்களைக் கண்காணிக்கும் நோக்கத்துடன் திருநெல்வேலிப் பகுதியில், இப்பொழுது உக்கிரன்கோட்டை என வழங்கப்படும் பழைய கரவந்தபுரம் அல்லது களக்குடி என்ற ஊரில், பெரும் கோட்டை கட்டி அங்கே ஒரு பெரும் காவற்படையும் வைத்தான். இக்கோட்டையை அழிந்த நிலையில் இன்றும் காணலாம்.

'வரகுணன்' என்று கூறப்படும் இம்மன்னன், தனது முன்னாள் அரசர்களைப் போல் சைவ சமயத்தைப் பின்பற்றவில்லை. ஆனால் வைணவ சமயத்தைத் தழுவி 'பரம வைஷ்ணவன்' எனும் பெயரைச் சூட்டிக் கொண்டான். பெரியாழ்வார் இவன் காலத்தில் தான் வாழ்ந்தார். கொங்கு நாட்டிலே காஞ்சிவை பேரூர் என்னும் இடத்தில் திருமாலுக்கு ஒரு பெரிய கோயிலைக் கட்டினான்.

## இரண்டாம் வரகுணன் (கி.பி. 815–835)

நெடுஞ்சடையனுக்குப்பின் இரண்டாண்டுகள் இரண்டாம் ராஜசிம்மன் ஆட்சி புரிந்தான் என தி.வி. சதாசிவ பண்டாரத்தார் கூறுகிறார். இரண்டாம் இராஜசிம்மன் இறந்தபிறகு அவனுடைய மகன் வரகுணன் ஆட்சி செய்தான். அவனால் வெளியிடப் பட்ட பல கல்வெட்டுகள் சோழ மண்டலத்தில் கிடைத்திருக்கின்றன. இவன் ஆட்சிக் காலத்தின்போது சோழநாடு பாண்டியநாட்டின் ஒரு பகுதியாக இருந்தது எனக் கூறப்படு கின்றது. அம்பாசமுத்திரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டாம் வரகுணனின் கல்வெட்டிலிருந்து தொண்டை மண்டலமும் அவன் ஆட்சிப்பகுதியாக இருந்திருக்க வேண்டும் என சிலர் கருதுகிறார்கள். இவன் சைவ சமயத்தைப் பின்பற்றினான். சிவனடியார் மாணிக்கவாசகர் வரகுணனின் அமைச்சராகப் பணிபுரிந்தார் என சிலர் கருதுகிறார்கள். பட்டினத்தாரும் இவன் காலத்தில் தான் வாழ்ந்து வந்தார்.

## ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் (கி.பி. 835–862)

ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் கி.பி. 815-862 ஆண்டுகளின் இடையே ஆட்சி புரிந்தான் என கே.வி. ராமன் கூறுகிறார். ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன், நெடுஞ்சடையப் பராந்தகனின்

மகன் என்றும், அவனை நெடுஞ்சடையனுக்குப்பின் கி.பி. 815-ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்தான் என்றும், மேற்சொன்ன இரண்டாம் இராசசிம்மன், இரண்டாம் வரகுணன் எனும் புதிய அரசர்களைத் தேவையில்லாமல், சாசனத்தில் கூறாததை, சதாசிவ பண்டாரத்தார் புகுத்தியிருக்கிறார் என்றும், அக்கருத்து தவறு என்றும் இவர் மேலும் எடுத்துரைக்கிறார்.

ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் காலத்திலும் பாண்டிய — பல்லவப் போர்கள் தொடர்ந்து நடைபெற்றன. வெற்றி தோல்விகள் மாறி, மாறி வந்தன. கடலூனர் அல்லது ஆனூர் என்னும் இடத்திலே நடந்த போரிலும், கி.பி. 850ஆம் ஆண்டு குடமூக்கு என்னும் கும்பகோணத்தில் நடந்த போரிலும் ஸ்ரீமாறன் வெற்றி பெற்றான் என தளவாய்புரச்செப்பேடும், சின்னமனூர் செப்பேடும், பாகூர்ச் செப்பேடும் கூறுகின்றன. பல்லவர், சோழர் கங்கர் சேர்ந்த கூட்டுப்படையை குடமூக்கு போரில் ஸ்ரீமாறன் முறியடித்தான்.

ஆனால், வடஆற்காடு மாவட்டத்தில் வந்தவாசி தாலுக்காவிலுள்ள தெள்ளாறு போரிலும் (கி.பி. 855), கும்பகோணத்திற்குத் தென்புறமாக ஓடும் அரிசிலாற்றங்கரைப் போரிலும், பல்லவர்கள் பாண்டியர்களைத் தோற்கடித்தார்கள். தெள்ளாற்றுப் போரில் பல்லவ மூன்றாம் நந்திவர்மன் வெற்றியடைந்ததால் தொண்டை மண்டலத்திலிருந்து பாண்டியர்கள் வெளியேற்றப்பட்டார்கள். அரிசிலாற்றங்கரைப் போரில் நந்திவர்மனுடைய மகனான நிருபதுங்கவர்மன் வெற்றியடைந்ததால் பாண்டியர்கள் ஆட்சிக்குட்பட்டிருந்த பல சோழநாட்டுப் பகுதிகளைப் பல்லவர்கள் கைப்பற்றினார்கள். விழிஞப் போரிலே ஸ்ரீமாறன் சேரர்களைத் தோற்கடித்தான்.

ஈழத்தில் முதல்சேனன் (கி.பி. 831-851) ஆட்சி செய்து கொண்டிருந்த காலத்தில் ஈழத்தின் மீது பாண்டியர் படையெடுத்தனர் என்று இலங்கை வரலாற்று நூலான மாகவமிசம் குறிக்கின்றது. மகாதலிதா என்னுமிடத்தில் பாண்டியர் பெரும் வெற்றி கண்டனர். சிங்கள நாட்டு இளவரசன் மகிந்தன் தற்கொலை செய்து கொண்டான். பாண்டிய படை ஈழத்துத் தலைநகரைக் கைப்பற்றி அங்கிருந்த பௌத்த விகாரங்களிலிருந்து விலையுயர்ந்த பொருட்களை மிகுதியாக எடுத்துச் சென்றது என்றும், அதனால் இலங்கை தனது பெரும் செல்வங்களை இழந்தது என்றும், மகாவமிசம் கூறுகிறது. இறுதியில் ஓர் ஒப்பந்தப்படி ஓடி மறைந்த ஈழ நாட்டரசன் சேனனுக்கு மீண்டும் ஆட்சிப் பொறுப்பு வழங்கப்பட்டது.

ஆனால், ஈழநாட்டரசன் இரண்டாம் சேனன் காலத்தில் (கி.பி. 842-847) இலங்கை அரசன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்தான். தோல்வியுற்ற பாண்டிய அரசனும், அவனுடைய மனைவியும் உயிரிழந்தனர். (சுமார் கி.பி. 862-ஆம் ஆண்டில்), இலங்கை அரசனுடன் ஒன்று சேர்ந்து போர் புரிந்த மாயா பாண்டியன் முடி ஆட்சி பெற்றான் என மகாவமிசம் கூறுகிறது. மாயா பாண்டியனும், ஸ்ரீமாறனின் முதல் மகனாக வரகுணனும் ஒருவரே என சிலர் கருதுகிறார்கள்.

ஸ்ரீமாறன் பெற்ற வெற்றிகளைத் தெரிவிக்கும் சின்னமனூர் செப்பேடு "குன்னூரிலும், சிங்களத்தும், விழிஞத்தும் வாடாத வாகைசூடி" என்று முதலில் குறிக்கின்றது. 'பரச்சக்ர கோலாகலன்', 'அவனீபசேகரன்' என்ற பட்டங்கள் ஸ்ரீமாறனின் வீரச் செயல்களையும் வெற்றிகளையும் குறிப்பிடுகின்றன.

## இரண்டாம் வரகுணவர்மன் (கி.பி. 862–885)

தமது ஆட்சியின் முற்பகுதியில் வரகுணன் போர்கள் ஏதும் மேற்கொள்ளவில்லை. ஆனால் பிற்பகுதியில் தன் தந்தையிடமிருந்து பல்லவர்கள் பறித்துக்கொண்ட பகுதிகளை மீட்கும் நோக்கத்துடன் பல்லவர்களுடன் போர் புரிந்து தோல்வியுற்றான். பல்லவ அரசன் அபராஜிதன், கங்க அரசன் முதலாம் பிருதிவிபதி, சோழ அரசன் ஆதித்தன் ஆகிய மூவரும் கூட்டு சேர்ந்த பாண்டிய அரசன் வரகுணவர்மனை எதிர்த்தனர். இடவையிலும், அதன் அருகிலுள்ள ஊர்களிலும் போர்கள் நடந்தன. இறுதியில் கி.பி. 885-ஆம் ஆண்டில் (சிலர் கி.பி. 880-ஆம் ஆண்டு எனக் கூறுகின்றனர்) கும்பகோணத்திற்கு வடமேற்கே, ஐந்து மைல் தொலைவிலுள்ள திருப்புறம்பியம் என்னுமிடத்தில் பாண்டியன் முறியடிக்கப்பட்டான். பல்லவ அரசனுக்கு துணை நின்று போராடிய கங்க அரசன், இப்போரில் உயிர் நீத்தான். வரகுணபாண்டியன் சோழநாட்டில் தான் கைப்பற்றிய பகுதிகளை இழக்கும்படி நேர்ந்தது. இதனால் பாண்டியர் வலிமைகுன்றியது; பாண்டியப் பேரரசின் சரிவுக்காலம் தொடங்கியது. அபராஜிதன் வெற்றி வாகை சூடிய போதிலும், பல்லவ ஆதிக்கம் சோழ நாட்டில் குன்றத் தொடங்கியது. ஆகையால் திருப்புறம்பியம் போரே ஆதித்திய சோழனின் எழுச்சிக்கு அடிகோலியது எனக் கூறலாம்.

## பராந்தக வீரநாராயணன் (கி.பி. 860–905)

இவன் வரகுணனின் மற்றொரு தாய்வழிப் பிறந்த உடன்பிறந்தானாவான். சோழகுலத்து இளவரசி, வாணவன்மாதேவி இவனது பட்டத்தரசி ஆவாள். தனது ஏழாம் ஆண்டு ஆட்சிக்காலத்தில் தளவாய்ப்புரச்சாசனத்தை வழங்கினான்.

இவனது வெற்றிகளை சாசனம் விரிவாகக் கூறுகின்றது. செந்நிலத்தில் தன் அண்ணனையும் (வரகுணன் அல்ல), கரகிரியில் (அக்காலத்தில் களக்குடி அல்லது களவந்தபுரம் என்றும், இன்று உக்கிரன்கோட்டை என்றும் அழைக்கப்படுகிறது) கரகிரித் தலைவனையும், மேற்கு கொங்கு, பொக்கரணி, தென்மயல், வெண்கை, பராந்தகம் முதலிய இடங்களில் ஆட்சி செய்து வந்த மன்னர்களையும், வீரதுங்கன் எனும் முத்தரையக்குடியில் பூத்த சிற்றரசர்களையும், பராந்தக வீரநாராயணன் தோற்கடித்தான். மேலே கூறிய கரகிரி அல்லது களக்குடி பாண்டியர்களின் சிறப்புப்படைத்தளமாக விளங்கியது. பெண்ணாடக நகரை அழித்தான் என்று கூறப்படுவதால் வரகுணன் காலத்தில் இழந்த சோழநாட்டை மீண்டும் கைப்பற்ற, இவ்வரசன் முயன்றான் எனத் தெரிகிறது.

தம் தந்தையாகிய ஸ்ரீவல்லபனைப் போன்று இவனும் வைணவனாவான். பல பிரமதேயங்கள், தேவதானங்கள் செய்தான்.

## இரண்டாம் இராசசிம்மன் (கி.பி. 900–920)

இவன் பராந்தக வீரநாராயணனுக்கும், சேரநாட்டு வானவன் மகாதேவிக்கும் பிறந்தவன். இவன் ஆட்சியின்போது முதலாவது பாண்டிய ஆட்சி குன்றத் துவங்கியது எனக் கூறலாம். தன் பதினாறாம் ஆட்சியாண்டில் சின்னமனூர்ப் பெரிய செப்பேடுகளை வழங்கினான்.

உப்பிலி மங்கலத்தில், இவனுடன் யார் போர் புரிந்தார் எனத் தெரியவில்லை. வஞ்சி மீது இவன் படையெடுத்தது மட்டுமல்லாமல், கோனை வைப்பூரிலும் தோற்கடித்தான். சோழருக்குப் பக்க உறுதுணை நின்ற கொடும்பாளூர் முத்தரயருடன் போரிட்டான்.

சுமார் கி.பி. 915-ஆம் ஆண்டில் வெல்லூர்ப் போரிலே இலங்கை மன்னனின் படை உதவியுடன் போர் புரிந்த இராசசிம்மனை, முதலாம் பராந்தக சோழன் தோற்கடித்தான். இலங்கை மன்னர்களுக்குள் குழப்பம் ஏற்பட்டதால் இலங்கையின் உதவி மீண்டும் பாண்டியனுக்குக் கிடைக்கவில்லை. ஆகையால் தன் தாய் வானவன் மகாதேவியின் பிறந்த நாடாகிய சேர நாட்டிற்குச் சென்று தங்கியிருந்தான் என மகாவமிசம் கூறுகின்றது. பின் இவனைப்பற்றிய செய்திகள் ஏதும் தெரியவில்லை. பாண்டிய அரசை அழித்த பராந்தக சோழன், வெல்லூர்ப் போருக்கு முன்பே “மதுரை கொண்ட கோப்பரகேசரி” எனும் விருதுப் பெயரை கி.பி. 910-ஆம் ஆண்டில் சூட்டிக்கொண்டான். இதன்மூலம், சோழராதிக்கம் பாண்டிய நாட்டில் பரவத் தொடங்கியது என முடிவாகக் கூறலாம்.

## வீரபாண்டியன் (கி.பி. 946–966)

முதலாவது பாண்டியப் பேரரசின் கடைசி அரசன் இவன்; இராசசிம்மனின் மகன்; சோழர்கள் ராஷ்டிரகூடர்களிடம் தோல்வியடைந்து கொண்டிருக்கும்போது, சோழர்களைத் தோற்கடித்து, சோழர்கள் கைப்பற்றிய பாண்டியநாட்டுப் பகுதிகளை மீண்டும் கைப்பற்றினான். இவனால் தோற்கடிக்கப்பட்ட சோழ அரசனின் பெயர் தெரியவில்லை. “சோழன் தலை கொண்ட வீரபாண்டியன்” என தன்னை அழைத்துக் கொண்டான். சுமார் 20 ஆண்டு காலம் தன் ஆட்சியை நிலைபெறச் செய்தான். இறுதியாக, சோழ இளவரசன் இரண்டாம் ஆதித்தியனால் முறியடிக்கப்பட்டு பாண்டிய அரசை இழந்தான்.

சோழர்கள் ஆட்சி, பாண்டிய நாட்டில் பரவிய பிறகும் சில பாண்டிய சிற்றரசர்கள், சோழர்களுடன் போர் புரிந்ததாகத் தெரிகிறது. ஆனால் பாண்டியர்கள் வெற்றியடைய வில்லை. அமரபுஜங்கன் எனும் பாண்டிய அரசன் இராஜராஜ சோழனுடன் போர் புரிந்து தோல்வியுற்றதாக திருவாலங்காட்டுச் செப்பேடு கூறுகின்றது.

இராசராச சோழன் காலத்தில்தான் பாண்டியநாடு முழுமையும் சோழர் ஆதிக்கத்தின்கீழ் வந்தது. இராசராசன் ‘பாண்டிய குலாசனி’ என்ற விருதை ஏற்றான். அவனது மகன் இராசேந்திரன் காலத்தில் கி.பி. 1018ஆம் ஆண்டில் பாண்டிய நாட்டை

ஆள்வதற்குச் சோழபாண்டியன் என்ற பிரதிநிதி முதன்முறையாக நியமிக்கப்பட்டதைத் திருவாலங்காட்டுச் செப்பேடு தெரிவிக்கின்றது.

## சங்க காலத்திற்குப் பின்வந்த சேரர்கள்

பாண்டியர்களைப் போலவும், சோழர்களைப் போலவும், சங்ககாலம் முடிந்தபின் சேரர்களால் மீண்டும் சேரப்பேரரசை அமைக்க முடியவில்லை.

சங்ககாலத்தில் இறுதியாக ஆண்ட சேரப்பேரரசர் கணைக்கால் இரும்பொறை. இவரை சோழன் செங்கணா்ன் தோற்கடித்து கழுமலம் பகுதியில் சிறைப்பிடித்தான். களப்பிரர்கள் சேரர்களையும் தோற்கடித்தார்கள். அச்சமயம் அழிந்த சேரப்பேரரசு மீண்டும் தலைதூக்கவில்லை.

சேரப்பேரரசின் கிழக்கு, வடக்குப் பகுதிகள் பாண்டிய, சோழ மேலாதிக்கத்தின் கீழ் வந்தன, தென்மேற்கில் தொலைவிலுள்ள சில பகுதிகள் மட்டும் உரிமையுடன் இயங்கி வந்தன.

முதல் பாண்டியப் பேரரசின் போது மீண்டும் சேரர்களைப்பற்றி குறிப்புகள் கிடைக்கின்றன. சோழப் பேரரசு சேரநாட்டைக் கைப்பற்றியது. முதலாவது பாண்டியப் பேரரசு அழிந்தவுடன் 9-ஆம் நூற்றாண்டில் சேர அரசன் இரவிவர்மன் குலசேகரன் தமிழ்நாட்டின்மேல் படையெடுத்து நெல்லூர் வரை சென்றான்; ஆனால் இவன் படை காகாதியர்களால் தோற்கடிக்கப்பட்டதால் இவன் பின்வாங்கி மீண்டும் கேரளத்திற்குள் நுழைந்து மறைந்தான்.

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டிற்கு முன் தமிழ்நாட்டின் ஒரு பகுதியாகத்தான் கேரள நாட்டைக் கருதவேண்டும். கேரள நாட்டினரின் பண்பாடு, மொழி தமிழ்நாட்டின் கலாசாரத்தையே தழுவியதாயிருந்தது. கொடுந்தமிழின் (Koduntamil) ஒரு கிளையே மலையாள மொழி, பதினான்காம் நூற்றாண்டில்தான் முதன்முதலாக மலையாள இலக்கியங்கள் தோன்றலாயின.

சுந்தரமூர்த்தி நாயனார், குலசேகர ஆழ்வார் ஆகியோரின் காலத்தில் வாழ்ந்து வந்த சிவனடியார் சேரமான் பெருமாள் சேரநாட்டைச் சேர்ந்தவர்.

கி.பி. 52ஆம் ஆண்டில் கிறிஸ்துவ சமய குரு தாமஸ் மலபாருக்கு வந்து சில மாதா கோவில்களைக் கட்டினார் என கிறிஸ்தவர்கள் நம்புகிறார்கள். மேலும் கி.பி. ஆறாம் நூற்றாண்டிலே கிறிஸ்தவர்கள் மலபார் பகுதிகளில் வாழ்ந்து வந்ததாகவும் நம்பப்படுகிறது. ஏறத்தாழ கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டிலே பாஸ்கர இரவிவர்மன் யூதர் ஜோஸப்ராப்பனுக்கு சில நிலங்களை அன்பளிப்பாகக் கொடுத்தான்.

சேரமான் பெருமாள் இஸ்லாம் சமயத்தைத் தழுவியதாகவும், மெக்காவிற்குச் சென்று வந்ததாகவும் கூறப்படுகிறது.

அத்வைத வேதத்தை அளித்த சங்கரர் எட்டாம் நூற்றாண்டில் கேரளாவில் வாழ்ந்து வந்தார்.

மலையாள ஆண்டின் தொடக்கத்தை, கி.பி. 824-25 கொல்லம் ஆண்டு தொடங்கியதிலிருந்து கணிக்கலாம். இது கொல்லம் பகுதி அமைந்ததைப் பற்றியும், பெருமாள்கள் அரசுமுடிவதைப்பற்றியும் குறிப்பதாகக் கூறுகிறார்கள்.

14-ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்திலே இரவிவர்மன் குலசேகரனின் ஆட்சிக்காலம் முடிந்த பிறகு சேரநாடு விஜய நகரப் பேரரசின் ஆட்சியின்கீழ் வந்தது. ஆனால் இச்சமயத்தில் கேரளப் பண்பாடு, மொழி, தமிழ்ப் பண்பாடு, மொழியிலிருந்து பிரிந்து, தொடர்பில்லாமல் தனித்திருந்தது. இனி கேரள நாட்டின் வரலாறு தமிழ்நாட்டின் வரலாற்றுடன் ஒருசேரக் கலக்கவில்லை. நீலகிரி, ஆனைமலை ஆகியவற்றைத்தாண்டியுள்ள தென்கோடி மலைத்தொடர்கள் கேரள நாட்டைத் தமிழ்நாட்டிலிருந்து பிரிக்கின்றன.

## பயிற்சி வினாக்கள்

1) பல்லவர் வரலாற்றுக்கான மூலச்சான்றுகள் யாவை?

2) பல்லவர் தோற்றம் பற்றிய பல்வேறு கருத்துக்களை ஆய்க.

3) பல்லவர்கள் தோற்றம் பற்றி ஒரு கட்டுரை வரைக.

4) முதலாவது பாண்டியப் பேரரசின் வரலாற்றைச் சுருக்கமாக விளக்கி ஒரு கட்டுரை வரைக.

5) சங்ககாலத்திற்குப் பிந்திய சேரர் பற்றி எழுதுக.

# பாடம் – 7 பிற்காலப் பல்லவர்கள் – பல்லவர் ஆட்சிமுறை – சமூக வாழ்க்கை – சமயம் – இலக்கியம் – கலையும் கட்டடக்கலையும்

சமஸ்கிருத மொழியில் பட்டயங்களை வெளியிட்ட பல்லவ மன்னர்கள் கி.பி. 350-ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 550-ஆம் ஆண்டுவரை ஆட்சி செய்தார்கள். சிம்மவர்மன், ஸ்கந்தவர்மன், வீரகுருச்சா, குமாரவிஷ்ணு முதலிய பல்லவ மன்னர்களின் பெயர்களும், மேலும் எட்டு பல்லவ மன்னவர்களின் பெயர்களும், சமஸ்கிருத மொழி பட்டயங்களில் காணப்படுகின்றன. களப்பிரர்களின் படையெடுப்பின் போது, பல்லவர்களிடமிருந்து காஞ்சி மாநகரம் கைப்பற்றப்பட்டது என்றும், பின்வாங்கிய பல்லவர்கள் வடக்கு தொண்டை மண்டலப் பகுதியில் குடியேறினார்கள் எனவும் சில வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.

## சிம்மவிஷ்ணு வழியில் வந்த பல்லவ மன்னர்கள்

கடுங்கோன் தலைமையில் பாண்டியப் பேரரசு வளரும் காலத்தில், தமிழ்நாட்டின் வடபகுதியில் சிம்மவர்மன், அவனுடைய மகன் சிம்மவிஷ்ணு முதலியவர்கள் தலைமையில் பல்லவ அரசும் வளர்பிறை போல மலரத்தொடங்கியது. பல்லவன்கோயில், வேலூர்ப்பாளையம் செப்பேடுகள் சிம்மவிஷ்ணுவின் தந்தை தான் சிம்மவர்மன் என எடுத்துக் கூறுகின்றன. ஆனால் இவ்விரு செப்பேடுகளிலும் சிம்ம விஷ்ணுவின் செயல்களைப்பற்றித்தான் மிகுதியான குறிப்புகள் கிடைக்கின்றன. சிம்மவர்மன் சைவசமயத்தை ஆதரித்தான். இவன் தனது அரசப் பதவியைத் துறந்துவிட்டு, நாட்டின் பொறுப்பை தமது மகனான சிம்மவிஷ்ணுவிடம் விட்டுவிட்டான் எனச் சிலர் கருதுகின்றார்கள்.

## சிம்மவிஷ்ணு (575–600)

பிற்காலக் காஞ்சிப் பல்லவர்களின் ஆட்சி சிம்மவிஷ்ணுவின் காலத்திலிருந்து தொடங்கியது எனக் கூறலாம். சிம்மவிஷ்ணுவின் ஆட்சிக் காலத்திலிருந்து பல்லவ மன்னர்களின் குடிவழிப்பட்டியல் தெளிவாகக் கிடைத்திருப்பதால் இம்மன்னர்களின் ஆட்சிக்காலகணிப்பைச் சுலபமாக அறிந்து கொள்ள முடிகின்றது. கங்க அரசன் துர்வினிதன் (கி.பி. 605) கீழைச்சாளுக்கிய அரசன் விஷ்ணுவர்த்தனன் (கி.பி. 614), பல்லவ சிம்மவிஷ்ணு ஆகிய மூவரும் ஒரே காலத்தில் வாழ்ந்து வந்தார்கள் என அவந்தி சுந்தரி கதாசாரம் (Avanti Sundari Kathasara) கூறுகின்றது. ஆகையால் சிம்மவிஷ்ணு கி.பி. 615ஆம் ஆண்டுவரை ஆட்சிபுரிந்திருக்கலாம் எனவும் நம்பப்படுகின்றது. ஆனால், பொதுவாக பெரும்பான்மையான வரலாற்று ஆசிரியர்கள், இவர் கி.பி. 575-ஆம் ஆண்டிலிருந்து 600-ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்தார் எனக் கூறுகின்றார்கள்.

சிம்மவிஷ்ணுவின் மற்றொரு பெயர் அவனிசிம்மன், இம்மறுபெயரிலிருந்து இவர் ஓர் வைணவர் என புரிந்து கொள்ளலாம். இவர் சோழ மண்டலத்தைக் கைப்பற்றினார்; களப்பிரர்களைத் தோற்கடித்தார். மேலும் காவிரி ஆறு வரை உள்ள எல்லாப்பகுதி

களையும் பல்லவ அரசுடன் இணைத்தனர். மற்ற அரசுகள் உதவியில்லாமல் தனித்துநின்று போராடிய பல்லவன் (சிம்மவிஷ்ணு), சோழர்களையும், பாண்டியர்களையும், மாளவர் (Malavas)களையும் தோற்கடித்தான் என்றும், மேலும் இவனுடைய நாட்டெல்லை காஞ்சியிலிருந்கு கும்பகோணம் வரை பரவியிருந்தது எனவும் நம்பப்படுகின்றது. இவருக்குப்பின் இவருடைய மகன் முதலாம் மகேந்திரவர்மன் அரசு பதவி எய்தினார்.

## முதலாம் மகேந்திரவர்மன் (கி.பி. 600 – 630)

மகேந்திரவர்மன் ஆட்சிகாலக் கணிப்பைப் பற்றி வரலாற்று ஆசிரியர்களுக்குள் விவாதங்கள் நடக்கின்றன. இவர் கி.பி. 610-ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 630ஆம் ஆண்டுவரை ஆட்சிபுரிந்து வந்தார் என தி.வி. மஹாலிங்கம் நம்புகின்றார். ஆனால் கி.பி. 600-லிருந்து 630-ஆம் ஆண்டுவரை இவர் ஆட்சி செய்தார் என ஆர். கோபாலனும், கி.பி. 606-லிருந்து 639-ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்தார் என ந. சுப்பிரமணியனும் கூறுகின்றார்கள்.

மகேந்திரவர்மனின் மற்ற பெயர்கள் மகேந்திர விக்கிரமன், மகேந்திர பட்டரய்யன், சத்துருமல்லன், நரேந்திரன், மகாபிடுகு, கலகப்பிரியா, அவனிபஜனன், லலிதாங்குரன், குணபரன், புருஷோத்தமன், சத்தியசந்தன், உதாரசித்தன், மத்தவிலாசன், சித்திரக்காரப்புலி முதலியன ஆகும். இப்பெயர்களின் பொருளை ஆய்ந்தால் இவர் உண்மை விரும்பி, தாராளகுணவான், சமயப் பற்றுள்ளவர், ஓவியம், இசைக்கலை முதலியவைகளில் பற்றுள்ளவர் எனத் தெரிகின்றது. இவர் ஆட்சி தொடங்கிய காலத்தில் வடக்கே கிருஷ்ணா ஆறிலிருந்து தெற்கே காவிரி ஆறுவரையும் பல்லவ அரசு பரவியிருந்தது. ஆன்ால் இவர் நாட்டின் வடஎல்லை திருப்பதிவரைதான் பரவியிருந்தது.

பல்லவர்களுக்கும் சாளுக்கியர்களுக்கும், பலகாலம் நீடித்த பேரரசுப் போட்டி மகேந்திரவர்மன் ஆட்சியில் தான் முதன்முதலாக தொடங்கியது. சாளுக்கியர்கள் கதம்பர் களோடு போரிட்டுக் கொண்டிருக்கும் சமயம் பல்லவர்கள் கதம்பர்களுக்கு உதவ முன் வந்ததால் சாளுக்கியர்கள் கதம்பர்களை அழித்ததோடு மட்டுமில்லாமல், காஞ்சியையும் கைப்பற்றினார்கள் என்றும், சாளுக்கிய மன்னன் புலிகேசியின் படை காஞ்சிக்குள் நுழைந்தபின் மகேந்திரவர்மன் ஓர் கோட்டைக்குள் ஓடி ஒளிந்து கொண்டார் என்றும், இரண்டாம் புலிகேசியின் அய்ஹோல் (Aihole) கல்வெட்டை ஆராய்ந்ததால் தெரிகின்றது. ஆனால் மகேந்திரவர்மனும் புலிகேசியை காஞ்சிக்குப் பத்துமைல்கள் தொலைவிலுள்ள புள்ளலூரில் தோற்கடித்தார் என பல்லவமல்ல இரண்டாம் நந்திவர்மனின் காசகுடிபட்டயத்திலிருந்து (Kasakkudi Plates) அறிந்து கொள்ளலாம். ஆகையால் புலிகேசி காஞ்சிக்குள் நுழையும் முன்பே மகேந்திரவர்மன் அவனைச் சந்தித்துப் புள்ளலூரில் தோற்கடித்து அவனை துரத்தியிருக்கலாம் என ந. சுப்பிரமணியன் கூறுகின்றார்.

### சமயம்

சமணசமயத்தை மகேந்திரவர்மன் தழுவியபின், மற்ற சமயத்தினரை குறிப்பாக புத்த, சைவ சமயத்தினரை, துன்புறுத்தினார். ஆனால் அப்பர் பெருமானின்

தொடர்புமூலம் இவர் ஒரு சைவராக மாறினார் என்று சேக்கிழாரின் பெரியபுராணம் கூறுகின்றது. சைவ சமயத்தைத் தழுவிய பிறகு மற்ற சமயத்தினர்களை, குறிப்பாக சமணர்களை துன்புறுத்தினார். சமணர்களின் பள்ளிகளை இடித்து, அப்பொருட்களைப் பயன்படுத்தி குணதரிச்சுரம் (Gunadharicchuram) எனும் பகுதியில் சிவபெருமானுக்குக் கோவில்கள் கட்டினார். ஆனால் உண்மையில் இவர் சமயப் பொறை உள்ளவர்தான் என்பது சில வரலாற்று ஆசிரியர்களின் கூற்று.

## கட்டடக்கலை

மகேந்திரவர்மன் சைவசமயத்தைத் தழுவியதால் தென்னாட்டுகோயில் கட்டடக்கலைக்கே ஒரு புதுதிருப்பம் ஏற்பட்டது எனக் கூறலாம். இவர் பல குடைவரைக் கோயில்களை (பாறையில் குடைந்தெடுத்த கோயில்கள்) கட்டினார் என தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள மண்டகப்பட்டு கல்வெட்டு குறிப்பிடுகின்றது. திருச்சிராப்பள்ளியிலும், அரக்கோணம் அருகிலுள்ள வல்லம் பகுதியிலும், தென்ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள தளவனூர் பகுதியிலும் இவரால் தோற்றுவித்த பல கோயில்களைக் காணலாம். இவருக்கு முன் மரம், செங்கல் சுண்ணாம்பு, சாந்து, உலோகம் முதலிய பொருள்களைப் பயன் படுத்தித்தான் கோயில்களை எழுப்புவது வழக்கம். ஆனால் முதன்முதலாக மகேந்திரவர்மன்தான் பாறைகளைப் பயன்படுத்திப் பாறைகளில் குடைந்தெடுத்த கோயில்களை எடுத்தான். பொதுவாக இவைகள் மண்டப அமைப்பில் கட்டப்பட்டிருந்தன. இம்மண்டப அமைப்பின் இடது, வலது முனைகளில் அறைகள் கட்டப்பட்டிருந்தன. இக்கோயில்களின் சுவர்களில் கடவுளின் சிலைகள் செதுக்கப்பட்டிருந்தன. மாமல்லபுரம் கோயில்கள் முழுவதும் நரசிம்மவர்மனால் கட்டப்பட்டவை என சில வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள். ஆனால் மாமல்லபுரத்திலுள்ள ஆதிவராஹ குகைக்கோயில், தர்மராஜ இரதம், கோடிக்கால் மண்டபம் முதலியன மகேந்திரவர்மனால் எழுப்பப்பட்டவை என ஹீராஸ் பாதிரியார் (Father Heras) கூறுகின்றார்.

## ஓவியமும், இசையும்

ஓவியக் கலையில் ஈடுபட்டுள்ள மகேந்திரவர்மனுக்கு 'சித்திரக்காரப்புலி' எனும் பெயரிருந்தது. நாட்டியக்கலை வளர்ச்சிக்கும் இப்பல்லவன் ஆதரவும், ஊக்கமும் அளித்திருப்பார் எனத் தெரிகிறது. இசையறிவு பெற்றிருந்த மகேந்திரன் இசைக்கலைக்கும் ஆதரவு அளித்தார் என்பதை குடுமியான்மலை இசைக் கல்வெட்டுமூலம் அறியலாம்.

## இலக்கியம்

மகேந்திரவர்மன் புலமையும் பெற்றிருந்தார். மத்த விலாசப் பிரஹசனா, பகவதாஜுக்கியம் (Bhagayadajukyam) முதலிய இலக்கியங்களை இயற்றினார்.

இவர் ஆட்சியில் சமய மறுமலர்ச்சி ஏற்பட்டது சைவநாயன்மார்கள் மூலமும், வைணவ ஆழ்வார்கள் மூலமும் இந்துமதம் விரைவாக புத்துயிருடன் வளரத் தொடங்கியது. மேலும் தென் இந்தியக் கட்டடக் கலையை ஒரு புதுப்பாங்கான

புதுப்பாதையிலே செலுத்திய பெருமை இவரையே சார்ந்ததாகும். தொண்டை மண்டலத்தில் முதன்முறையாக குடைவரைக் கோயில்கள் இவர் ஆட்சியில்தான் கட்டப்பட்டன. மேலும் இவர் ஆட்சிக் காலத்திலிருந்துதான் முதன்முதலாக பாறைகளில் எழுதப்பட்ட கல்வெட்டுகள் தோன்றலாயின. பண்டைய பல்லவர்கள் `செப்புப் பட்டயங்கள் மூலம்தான் செய்திகளை வெளியிட்டார்கள். மேலும் இவர் ஆட்சிக் காலத்தில் இலக்கிய மறுமலர்ச்சியும் மலர்ந்தது. பாரவி, தண்டின் போன்ற புலமை பெற்றவர்கள் இவர் காலத்தில் வாழ்ந்து வந்தார்கள். மேலும் பல்லவப்பேரரசு தோன்றுவதற்கு மகேந்திரவர்மனும் நரசிம்மவர்மனும் துணை நின்றதால் தென் இந்திய வரலாற்றில் ஓர் சிறப்புப் போட்டியாக இருந்த சாளுக்கிய — பல்லவ பேரரசுப் போட்டி தோன்றியது. மேலும் தென்கிழக்காசியாவிற்கும், தென்இந்தியாவிற்கும் இடையே இருந்த பண்பாடு, வாணிபம், தவிர அரசு உறவு வளரத்தொடங்கியது. ஆகையால், மகேந்திரன் ஆட்சியில் பல்லவ அரசு, போர் மூலம் மிகுதியான அளவில் வ்ளரவில்லை என்றாலும், இவருடைய ஆட்சி தென்னிந்திய, பல்லவ வரலாற்றிலே ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறது எனக் கூறினால் மிகையாகாது.

## முதலாம் நரசிம்மவர்மன் (630 – 668)

மகேந்திரவர்மன் இறந்த பிறகு அவருடைய மகன் கி.பி. 630ஆம் ஆண்டில் அரசப் பதவியேற்றான். பல்லவ அரசர்களுக்குள் மிகச் சிறப்பு வாய்ந்த பேரரசன் நரசிம்மவர்மன். தந்தையைப்போலவே இவனும் பல பெயர்களைச் சூட்டிக் கொண்டான். மாமல்லன் ஸ்ரீபரன், ஸ்ரீமேகன், ஸ்ரீநிதி, இரணஜயன், அத்யந்தகாமன், நயனன்குரு ஆகிய சிறப்புப்பட்டங்களைச் சூட்டிக்கொண்டான்.

இவனுடைய ஆட்சியில் நான்கு சிறப்பு நிகழ்ச்சிகள் நடந்தன. (1) கி.பி. 642, 643-ஆம் ஆண்டுகளில் வாதாபியைக் கைப்பற்றியது ; (2) ஈழநாட்டுப் படையெடுப்பு; (3) சீன யாத்திரிகர் யுவான் சுவாங்கின் காஞ்சி விஜயம்; (4) மகேந்திரவர்மனால் தொடங்கப்பட்ட கட்டடக் கலையைத் தொடர்ந்து பேணி வளர்த்த பெருமை.

### 1) வாதாபிகொண்டான்

மகேந்திரவர்மன் காலத்தில் தோன்றிய பல்லவ — சாளுக்கிய பகைமை நரசிம்மவர்மன் காலத்தில் வளர்பிறை போல வளர்ந்தது. புலிகேசி, பல்லவர்களை அடக்கும் நோக்கத்துடன், பல்லவர்களுக்குக் கீழே இருந்த ராயல்சீமாவிலிருந்த சிற்றரசரான பாணர்களைத் தாக்கினான். இப்பகுதியைக் கைப்பற்றியபின் காஞ்சியை நோக்கி தன் படைகளைச் செலுத்தினான். ஆனால் நரசிம்மவர்மனுக்கும் — புலிகேசிக்கும் நடந்த மூன்று போர்களிலும் நரசிம்மவர்மன் வெற்றியடைந்தான். இவற்றுள், காஞ்சிக்கு இருபது மைல்கள் தொலைவிலுள்ள மணிமங்கலத்தில் நடந்த போரே சிறப்பானதாகும். வெற்றியடைந்த நரசிம்மவர்மன் சேனாதிபதி பரஞ்சோதியுடன் சேர்ந்து சாளுக்கிய நாட்டின்மேல் படையெடுத்து, சாளுக்கிய நாட்டை அழித்தான். கி.பி. 642-43ஆம் ஆண்டிலேயே வாதாபிக்கு அருகே நடந்த போரில் இரண்டாம் புலிகேசி கொல்லப்பட்டான். 'வாதாபிகோ்ண்டான்' என்னும் பெயரைச் சூட்டிக்கொண்டான். சேனாதிபதி பரஞ்சோதி

திரும்பி வரும் போது, வாதாபியிலிருந்த விநாயகப் பெருமானின் உருவச்சிலையைக் கொண்டு வந்தான். இதற்குப்பிறகுதான் தமிழ்நாட்டில் விநாயகரை வழிபடும் பண்பாடு உருவாகியது என சிலர் கருதுகின்றார்கள்.

### 2. இலங்கைப் படையெடுப்பு

நரசிம்மவர்மன் சாளுக்கியர்களுடன் போர்புரிந்தபோது, மானவர்மன் எனும் ஈழ இளவரசன் அவனுக்குத் துணையாக நின்றான். மானவர்மனுக்கு ஈழ அரசை பரிசாக அளிக்கும் நோக்குடன் நரசிம்மவர்மன் இலங்கை மீது படையெடுத்தான். முதல் படையெடுப்பு தோல்வியில் முடிந்தது. இரண்டாம் படையெடுப்பு பல்லவ தரை, கடற்படை ஒரு சேர ஒத்துழைத்ததால் வெற்றியடைந்தது.

### 3. யுவான் சுவாங்கு

கி.பி. 640-ஆம் ஆண்டளவில் சீனப்பயணி யுவான்சுவாங்கு காஞ்சிக்கு வருகை புரிந்தார். பல்லவ நாட்டு மக்களைப் பற்றியும் கோவில்களைப் பற்றியும், இயற்கை அமைப்பைப் பற்றியும் பௌத்த சமயத்தின் சரிவு காலத்தைப் பற்றியும், காஞ்சியைச் சுற்றியுள்ள பகுதிக்கு 'திராவிடர்' எனும் பெயரிருந்தது என்பதைப் பற்றியும் யுவான்சுவாங்கின் குறிப்புக்களில் காணலாம்.

## கலையும் கட்டடக்கலையும்

தந்தையின் கலை வழியில் சென்ற நரசிம்மவர்மன், குடைவரைக் கோயில்களின் கட்டடக்கலையை மேம்படுத்தினான். திராவிட கட்டிடக்கலையைத் தழுவியிருந்தது அவன் கட்டிய கட்டடங்களின் கலை அமைப்பு. மகாபலிபுரத்தில் அவன் பாறைகளைக் குடைந்தெடுத்து கட்டிய கோவில்களை இன்றுகூடப் பார்க்கலாம். புகழ்பெற்ற மாமல்லபுர ஒன்பதுகல் ரதங்கள் இவனால் எடுக்கப்பட்டவை. இவைகள் பஞ்சபாண்டவர்களுக்கும், திரௌபதி, விநாயகப் பெருமானுக்கும் கட்டப்பட்ட கோவில்கள். கல்தூண்களின் அடிப்பகுதியில் அமர்ந்திருக்கும் பாணியில் சிங்க உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இதுவே கட்டடக்கலை அமைப்பு முறையில் அவன் செய்த புது மாறுதல் ஆகும். நரசிம்மவர்மனுக்கு முன் கல்தூண் உச்சியில் சிற்ப வேலைப்பாடு அமைந்த புதுக்கம் இருக்கமாட்டா; பின்பு சித்திர வேலைப்பாடுள்ள சுருள் வார்ப்பாடுள்ள உருவங்கள் இணைக்கப்பட்டன.

## முதலாம் பரமேசுவரவர்மன் (670–700)

நரசிம்மவர்மனுக்குப்பின் அவனுடைய மகன் இரண்டாம் மகேந்திரவர்மன் இரண்டு ஆண்டுகள் (668-670) ஆட்சி புரிந்தான். அவனுக்குப் பிறகு மகேந்திரவர்மனுடைய மகன் பரமேசுவரவர்மன் அரச பதவி எய்தினான்.

பரமேசுவரவர்மன் காலத்தில் சாளுக்கிய பல்லவ பகைமை வளர்ந்தது. இவன் சாளுக்கியர்களால் தோற்கடிக்கப்பட்டான் என சிலர் கூறுகின்றார்கள்; சிலர் இவன் சாளுக்கியர்களைத் தோற்கடித்தான் எனக் கூறுகின்றார்கள்.

புலிகேசியின் மகனும் சாளுக்கிய அரசனுமான முதலாம் விக்கிரமாதித்தியன், பாண்டிய அரசன் பாரங்குச மாறவர்மனுடன் (670-700) கூட்டணி சேர்ந்து காஞ்சி புரத்தின் எல்லை வரைச் சென்றான் என்றும், அங்கிருந்து காவிரிக்கரை வரை ஓடிய பரமேசுவரவர்மனை பாண்டியனுடன் சேர்ந்து தோற்கடித்தான் என்றும் சாளுக்கிய செப்புப்பட்டயங்கள் கூறுகின்றன.

ஆனால் கூரம், உதயேந்திரம், வேலூர்ப்பாளையம் பட்டயங்கள் பரமேசுவர வர்மனின் வெற்றிகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. உறையூர் அருகேயுள்ள பெருவள நல்லூரில் சாளுக்கியர்களைத் தோற்கடித்தான் என்றும், தோற்கடிக்கப்பட்ட சாளுக்கிய விக்கிரமாதித்தியன், புறமுதுகிட்டு தமிழ்நாட்டை விட்டே ஓடிச் சென்று விட்டான் எனவும் கூறப்படுகின்றது.

சைவ சமயத்தைப் பின்பற்றிய பரமேசுவரவர்மன் பல சிவன் கோயில்களைக் கட்டினான். மாமல்லபுரத்தில் ஒரு விநாயகரின் கோயிலையும் எடுப்பித்தான். கூரத்தில் வித்யவினிதியா, பரமேசுவரகிரஹம் எனும் சிவன் கோயில்களைக் கட்டினான். பல்லவர்களால் கட்டப்பட்ட கோயில் கட்டமைப்பிற்குரிய (கட்டமைப்புச் சார்ந்த structural) முதற்கோயில் இவைகள் தாம். பரமேசுவர மங்கலம் எனும் நாட்டுப்புரத்தை (கிராமத்தை) இக்கோயிலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்தான்.

## இரண்டாம் நரசிம்மவர்மன் (700–728)

இராசசிம்மன் எனும் இரண்டாம் நரசிம்மவர்மன் காலத்தில் அமைதி நிலவியது. நாட்டில் செல்வம் குவிந்தது. காஞ்சியில் உள்ள கைலாசநாதர் கோயிலையும், மாமல்லபுரத்தில் உள்ள கடற்கரைக் கோயிலையும், பனமலையில் உள்ள சிவன் கோயிலையும் இவன் எடுப்பித்தான். சமஸ்கிருத மொழிப்புலவர் தண்டின் இவன் அவைப்புலவராக வீற்றிருந்தார்.

## இரண்டாம் பரமேசுவரன் (728–731)

இராசசிம்மனின் இரண்டாவது மகனான இரண்டாம் பரமேசுவரவர்மன்; தன் அண்ணன் தன் தந்தைக்கு முன்பே இறந்ததால், இராசசிம்மனுக்குப் பிறகு கி.பி. 728ஆம் ஆண்டு அரியணையேறினான். இவனுடைய ஆட்சியைப்பற்றி நம்பும்படியான போதிய மூல ஆதாரங்கள் இல்லை. சாளுக்கிய இளவரசன் இரண்டாம் விக்கிரமாதித்தன் இவன் ஆட்சியின் போது பல்லவ நாட்டின்மேல் படையெடுத்தான் எனச் சில ஆசிரியர்கள் கருதுகின்றார்கள். ஸ்ரீபுருஷா எனும் கங்கநாட்டுத்தலைவன் காஞ்சியைச் சேர்ந்த காடுவெட்டியைத் (Kaduvetti) தோற்கடித்ததோடல்லாமல் அவனைக் கொன்றுவிட்டு, அவனுடைய அரசுக்குடையையும் பறித்துக்கொண்டு சென்றான் என்றும், இக்காரணத்தால் பெர்மநாடி (Permanadi) என்ற பெயரைச் சூட்டிக்கொண்டான் என்றும், ஒரு கங்க நாட்டுக் கல்வெட்டில் கூறப்பட்டிருக்கிறது. காடுவெட்டி என்றால், காடுகளை வெட்டி மாவட்டங்களை உருவாக்கியவன் என்று பொருள். ஆனால் இக்கல்வெட்டில் கங்கத்தலைவனால் தோற்கடிக்கப்பட்ட பல்லவ மன்னனின் பெயர் குறிப்பிடப்படவில்லை. அப்பல்லவ மன்னன் பரமேசுவரவர்மனாக இருக்கலாம் என சில ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

## இரண்டாம் நந்திவர்மன் (731–796)

பரமேஸ்வரவர்மன் இறந்த பிறகு நாட்டில் வாரிசு உரிமைப்போட்டி துவங்கி, குழப்பமான சூழ்நிலை உருவாகியது. ஒரு சாரார் பரமேசுவரவர்மனின் மகன் சித்திர மாயாவை ஆதரித்தனர். மற்றொரு கட்சியினர் சிம்மவிஷ்ணுவின் தம்பி பீமவர்மனுடைய குடிவழியில் தோன்றிய ஹிரண்யவர்மனை ஆதரித்தனர். ஆனால் ஹிரண்யவர்மன் பதவி ஆசையில்லாமல் அரசர் பதவியைத் துறந்தான். அவனுடைய பன்னிரண்டு வயது மகனான இரண்டாம் நந்திவர்மன் பல்லவமல்லாவை அரசப்பதவியில் அமர்த்தினான்; தன் மகனின் பகர ஆளுநராகப் பணியாற்றினான். காசக்குடிப்பட்டயம், இப்பல்லவ அரசகுடிவழியில் ஏற்பட்ட மாற்றத்தை உறுதிபடுத்தத்துணையாக இருக்கிறது. இரண்டாவது பரமேசுவரவர்மன் காலத்திலேயே ஹிரண்யவர்மன் அதிக செல்வாக்குப் பெற்றிருந்ததால் பரமேசுவரவர்மன் இறந்த பிறகு சூழ்ச்சி செய்து தனது மகனுக்கு அரச பதவி அளித்தான் என ஆர். கோபாலன் கூறுகின்றார். இம்மாற்றத்தையே மற்றொரு கண்ணோட்டு நோக்கினால் கங்கத்தலைவனிடம் பரமேசுவரவர்மன் அடைந்த தோல்வியால் பல்லவ அரசுக்குப் பெருத்த அவமானம் ஏற்பட்டது. அப்போரிலே பரமேசுவரவர்மனின் மகன் சித்தரமாயா திறமையில்லாமல் போரிட்டிருக்கலாம்; போர்க்களத்திலே அவன் பெரும் தவறுகள் செய்திருக்கலாம்; மேலும் தீக்குணம் படைத்தவனாகவும் இருந்திருக்கலாம். ஆகையால் தான் பல்லவ அரச மானத்தைச் சித்திரமாயாவால் காப்பாற்றமுடியாது; ஒரு வேளை திறமையில்லா இவன் அரச பதவியேற்றால் பல்லவ அரசுக்கே முடிவு காலம் வந்துவிடும் என அஞ்சிதான் பலர் ஹிரண்யவர்மனுக்கும், அவனுடைய மகன் நந்திவர்மனுக்கும் ஆதரவு அளித்திருக்க வேண்டும் எனவும் நாம் கூறலாம்.

காசக்குடி பட்டயங்கள் (இரண்டாம் நந்திவர்மனின் 22வது ஆட்சிக்காலத்தில் வெளியிடப்பட்டது), உதயேந்திரம் பட்டயங்கள் (21வது ஆட்சி ஆண்டில்), தண்டத் தோட்டம் பட்டயங்கள் (58வது ஆட்சி ஆண்டில்), கொர்ரன் குடிபட்டயம் (61வது ஆட்சி ஆண்டில்) கைலாசநாதர் கோயிலில் காணப்படும் சாளுக்கிய இரண்டாம் விக்கிரமாதித்தனின் கல்வெட்டுகள், மகாபலிபுரத்திலுள்ள கல்வெட்டுகள், பாண்டியர்கள் வெளியிட்ட வேள்விக்குடி, சின்னமனூர் பட்டயங்கள், வக்கலேரி (Vakkaleri) பட்டயங்கள் முதலிய மூலச் சான்றுகள் வாயிலாக இரண்டாம் நந்திவர்மனின் ஆட்சியைப்பற்றி விவரமாகத் தெரிந்து கொள்ள முடிகின்றது.

பல்லவ அரசு ஆட்சிக்காலத்தில் நந்திவர்மனின் 65 ஆண்டுகளின் ஆட்சிக்காலம் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கின்றது. இவனுடைய ஆட்சிக்காலத்தில் நடந்த சிறப்பான செய்திகள் (1) பல்லவ — பாண்டிய பகைமையும், போரும்; (2) பல்லவ சாளுக்கியப்போர்கள்; (3) ராஷ்டிரகூடர்களுடன் உள்ள தொடர்பு.

### பல்லவ – பாண்டிய உறவு

சித்திரமாயனுக்கு உரிமையாகக் கிடைக்கவேண்டிய அரசுப் பதவி கிடைக்காததால் அவன் பாண்டிய மன்னன் பராங்குச மாறவர்மனுடன் (இவனுடைய மற்றொரு பெயர் இராசசிம்மன்) கூட்டுச்சேர்ந்து, நந்திவர்மனை எதிர்த்துப் போர்புரியத் தொடங்கினான்.

காவிரி ஆற்றின் வடபகுதியைச் சுற்றியுள்ள பகுதிகளில் பாண்டியனும் — பல்லவனும் போரிட்டார்கள். நந்திவர்மன் நந்திபுரம் கோட்டையிலே ஒளிந்துகொண்டபோது பாண்டியர்கள் அக்கோட்டையை முற்றுகையிட்டார்கள். இம்மாதிரியான இக்கட்டான சூழ்நிலை உருவாகியிருந்த சமயம் பல்லவ படைத்தலைவன் உதயசந்திரா காஞ்சியில் தன்னிடமிருந்த மற்ற படை வீரர்களுடன் நந்திபுரத்திற்கு விரைந்து வந்து பாண்டியர்களின் முற்றுகைக்கு முற்றுப்புள்ளியிட்டான். காப்பாற்றப்பட்ட நந்திவர்மனும், அவனுடைய படையும் பாண்டியர்களை நிம்பவனம், சுதாவனம், சங்கிரகிராமம், மன்னைக்குறிச்சி, சுரவாலுந்தூர் ஆகிய இடங்களில் தோற்கடித்தார்கள்; சித்திரமாயனையும் கைப்பற்றிச் சிரச்சேதம் செய்தார்கள்.

சில வரலாற்று ஆசிரியர்கள், வேறுவிதமாக இப்பாண்டிய — பல்லவ வரலாற்றை வரைகிறார்கள். உண்மையில் பல்லவ இரண்டாம் நந்திவர்மன் பராங்குச மாறவர் மனுக்குப்பிறகு, அரசு எய்திய பாண்டியமன்னன் பராந்தக நெடுஞ்சடையனுடன்தான் போரிட்டான். வடக்கே சாளுக்கியர்களுக்கும், தெற்கே பாண்டியர்களுக்கும் இடையே பல்லவ அரசு சிக்கித்தவித்ததால்தான் பல்லவன் பாண்டியர்களுடன் போரிட்டான். சேரன், கொங்குநாடு, தகடூர் மன்னர்களுடன் கூட்டணி சேர்ந்து பல்லவமன்னன் போரிட்ட போதிலும், பாண்டியர்களைத் தோற்கடிக்க முடியவில்லை. பெண்ணாகடப் போரிலே பாண்டியர்கள் பல்லவர்களைத் தோற்கடித்துவிட்டு, பல்லவ நாட்டுக்குள்ளே புகுந்து சேதம் விளைவித்தார்கள்.

ஆனால் இரண்டாம் நந்திவர்மன் கங்க அரசன் ஸ்ரீபுருஷாவைத் தோற்கடித்து, அவனிடமிருந்து சில கங்க நாட்டுப் பகுதிகளைப் பறித்துக்கொண்டு அவைகளை பாணத்தலைவன் ஜயநந்திவர்மனுக்கு அளித்தான்.

## பல்லவ சாளுக்கியப் பகைமை

ஒரு சில காலம் நந்திவர்மனின் பல்லவ அரசு சாளுக்கியர்கள் வசம் வந்தது. தன்னுடைய சிற்றரசரான கங்கத்தலைவன் ஸ்ரீபுருஷனோடு கூட்டுச் சேர்ந்து சாளுக்கிய மன்னன் இரண்டாம் விக்கிரமாதித்தன் பல்லவ அரசின்மேல் படையெடுத்து நந்திவர் மனை தோல்வியுறச் செய்து, காஞ்சியைக் கைப்பற்றினான். பல்லவர்கள் முன்பு வாதாபியைக் கைப்பற்றியபோது, அந்நகரத்தைப் பாழாக்கினார்கள். ஆனால் விக்கிரமாதித்தியன் காஞ்சியைக் கைப்பற்றிய பிறகு அவ்வாறு செய்யாமல் நன்கொடைகள் கொடுத்து கைலாசநாதர் கோயிலையும், மற்ற கோயில்களையும் பேணி வளர்த்து பல்லவ மக்களின் நன்மதிப்பைப் பெற்றான். ஒரு சில காலம் காஞ்சியில் தங்கிவிட்டு மீண்டும் தன் நாட்டிற்கே திரும்பினான். பல்லவ படை வலிமையால் இவன் காஞ்சியை விட்டு பின் வாங்கிச் சென்றானா அல்லது தாமாகவே வெளியேறினானா எனச் சரியாக நமக்குத் தெரிய போதிய ஆதாரங்கள் இல்லை.

## நந்திவர்மனும் இராஷ்டிரகூடர்களும்

மேலைச் சாளுக்கிய குடி வழியில் தோன்றிய கடைசி அரசன் இரண்டாம் கீர்த்திவர்மன். சுமார் கி.பி. 750-ஆம் ஆண்டளவிலே இராஷ்டிரகூட மன்னன் தந்தி

துர்கா மேலைச் சாளுக்கிய நாட்டின்மேல் படையெடுத்து எல்லோராவைக் கைப்பற்றினான். கீர்த்திவர்மனையும் தோற்கடித்தான். கீர்த்திவர்மனின் ஆட்சி சுமார் கி.பி. 755-ஆம் ஆண்டில் முடிவடைந்தது. மேலைச் சாளுக்கிய நாட்டைக் கைப்பற்றிய தந்தின்துர்கா பல்லவநாட்டின்மீதும் படையெடுத்தான். ஆனால் இப்படையெடுப்பு இராட்டிரகூட பல்லவ மண உறவில் மலர்ந்தது. தந்திதுர்காவின் மகளான ரேவாவை, மூன்றாம் நந்திவர்மன் மணம் செய்து கொண்டான். ஆகையால் பல ஆண்டுகளாக தொடர்ந்து வந்த பல்லவ சாளுக்கிய பகைமை முடிவில் மண உறவில் நட்பாக மாறியது.

நந்திவர்மன் வைணவ சமயத்தைப் பின்பற்றினான். வைகுந்தப் பெருமாள் கோயிலைக் கட்டிய பெருமை இவனைச் சாரும். திருமங்கை ஆழ்வார் இவன் காலத்தவர். அவர் தம்முடைய நந்திபுர விண்ணகரம், பரமேசுவர விண்ணகரம் ஆகிய நூல்களில் இம்மன்னனுடைய வைணவ சமயப்பற்று பற்றிப் புகழ்ந்து பாடியிருக்கின்றார். காஞ்சியில் உள்ள முக்தேசுவரர் கோயில், பரமேஸ்வர விண்ணகரம், கூரத்தில் (Kurram) உள்ள கேசவப் பெருமாள் கோவில் முதலிய கோவில்களைக் கட்டினான்.

## தந்திவர்மன் (776–847)

இரண்டாம் நந்திவர்மனுக்குப் பின் அவனுடைய மகன் தந்திவர்மன் அரசு பதவியேற்றான். கதம்ப நாட்டு இளவரசியை மணம் புரிந்து கொண்டான். இராட்டிரகூட ரேவாவின் மகனாக இருந்தபோதிலும் இராட்டிரகூட மன்னன் மூன்றாம் கோவிந்தன் அவ்வரசனை எதிர்த்தான். ஏனென்றால், இராட்டிரக்கூட நாட்டில் மூன்றாம் கோவிந்தனுக்கும் அவனுடைய அண்ணன் கம்பாவுக்கும் ஏற்பட்ட வாரிசுரிமைப் போட்டியில் தந்திவர்மன் கம்பாவுக்கு ஆதரவு அளித்தான். பதவிப் போட்டியில் வெற்றியடைந்த மூன்றாம் கோவிந்தன், பல்லவ அரசின் மேல் படையெடுத்து வந்து காஞ்சியைக் கைப்பற்றினான். தோல்வியுற்ற தந்திவர்மன் இராட்டிரகூட அரசனுக்கு கப்பம் செலுத்த ஒப்புக்கொண்டான்.

பாண்டிய அரசர்கள் முதலாம் வரகுணனும், ஸ்ரீமாறனும் வடக்கு நோக்கிப் படையெடுத்தபோது பல்லவ நாட்டின் பல பகுதிகளைத் தந்திவர்மன் இழக்க நேரிட்டது.

## மூன்றாம் நந்திவர்மன் (847–869)

தந்திவர்மனுக்குப்பின் அவன் மகன் மூன்றாம் நந்திவர்மன் ஆட்சிக்கு வந்தான். இவன் தன் தந்தையைவிட திறமைசாலி. தன் தந்தையின் இறுதி ஆட்சிகாலத்தில் இவன் ஒரு கூட்டணி அமைத்து பாண்டிய மன்னன் ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபனைத் தோற்கடித்தான். தெள்ளாற்றுப்போரிலே இவன் பாண்டியர்களைத் தோற்கடித்ததால், 'தெள்ளாறெறிந்த நந்திப்போத்தரையன்' எனும் பெயரைச் சூட்டிக் கொண்டான். ஆனால் இவ்வெற்றி சிலகாலம்தான் நீடித்தது. மூன்றாம் நந்திவர்மன் அரசு பதவியேற்றவுடன் பாண்டிய மன்னன் ஸ்ரீமாறன் தம்படை வலிமையைப் பெருக்கிக் கொண்டு பல்லவ, சோழ, இராட்டிரகூட, கங்க அரசர்களின் கூட்டணியை கி.பி. 860-ஆம் ஆண்டளவில் கும்பகோணத்திற்கு அருகே முறியடித்தான். ஆனாலும் பல்லவ நந்திவர்மன் சளைக்காமல் மீண்டும் போரிட்டு, பல்லவ அரசின் மானத்தைக் காப்பாற்றி, மீண்டும் அதை அதன் பழைய நிலைக்கே கொண்டு வந்தான்.

இம்மன்னனிடம் திறமையான கடற்படை இருந்தது. கிழக்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகளுடன் உள்ள தொடர்பை வலுப்படுத்தினான். சையாமில் உள்ள தகுவா — பாவில் கிடைத்துள்ள ஒரு கல்வெட்டில் இப்பல்லவ மன்னன் கட்டிய ஒரு வைணவக் கோயிலைப் பற்றி குறிப்புகள் கிடைத்துள்ளன.

## நந்திவர்மனின் சந்ததியர்கள்

நந்திவர்மன் இறந்த பிறகு வாரிசு உரிமைப்போட்டி ஏற்பட்டதால், பல்லவ அரசின் வலிமை குறையத் தொடங்கியது. இச்சூழ்நிலை சோழப் பேரரசு வளர்வதற்கு உதவி புரிந்தது.

கி.பி. 870-ஆம் ஆண்டில் நந்திவர்மனுக்குப்பின் அவனுடைய இராட்டிரகூட மனைவியின் மூலம் பிறந்த நிருபதுங்கா அரசுப் பதவி எய்தினான். அரசியல் போரிலே இம்மன்னன் பாண்டியர்களைத் தோற்கடித்தான். இது முடிந்து சில காலத்துக்குள் இம்மன்னனுக்கும் அவனுடைய ஒன்றுவிட்ட தமையன் அபராஜிதனுக்கும் மனத்தாங்கல் ஏற்பட்டது. அபராஜிதன் பல்லவ மன்னனாக முடிசூட விரும்பினான். அவனுக்குக் கங்கநாட்டு மன்னன் முதலாம் பிருதிவிபதியும், சோழ அரசர்கள் விசயாலயனும், அவன் மகன் ஆதித்தியனும் ஆதரவு அளித்தார்கள். இதுகாலம் வரை பல்லவ மன்னன் நிருபதுங்காவை எதிர்த்த பாண்டியன், இப்பல்லவ அரச பதவிப் போட்டிச் சூழ்நிலையில் நிருபதுங்காவிற்கு ஆதரவு அளித்தான். இப்பதவிப்போட்டியின் இறுதியில் அபராஜிதன் வெற்றி பெற்றான். இதைக் கண்ட பாண்டிய அரசன் இரண்டாம் வரகுணன் பல்லவ நாட்டின்மேல் படையெடுத்துச் சென்று காவிரி ஆற்றின் வடகரையிலுள்ள இடவைவரை எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் முன்னேறினான். ஆனால் கும்பகோணம் அருகேயுள்ள திருப்புறம்பியம் என்னுமிடத்தில் கி.பி. 880-ஆம் ஆண்டில் கங்க பல்லவ சோழ கூட்டணிப்படை பாண்டியர்களை முறியடித்தது.

ஆகையால் திருப்புறம்பியப்போரில் பல்லவ அபராஜிதனுக்கு வெற்றி கிடைத்தது. மகிழ்ச்சியுற்ற பல்லவ மன்னன் தனக்கு உதவியளித்த சோழ மன்னனான முதலாம் ஆதித்தனுக்கு, அவன் தந்தை விசயாலயனால் கைப்பற்றப்பட்ட தஞ்சையை அவனை வைத்துக்கொள்ளும்படி அனுமதி அளித்தான். ஆனால் பல்லவ மன்னன் நினைத்ததைப் போல சோழ அரசன் முதலாம் ஆதித்தன் அவனுக்கு அடங்கி நடக்கும் சிற்றரசனாக இருக்க விரும்பவில்லை. தமிழ்நாடு முழுவதையும், குறிப்பாக காவிரி ஆற்றின் வடகரை வரை கைப்பற்ற வேண்டும் என்பதே இச்சோழ மன்னனின் நோக்கம். ஆகையால் சோழ மன்னன் படை வலிமையைப் பெருக்கிக்கொண்டு பல்லவ அரசு மேல் படையெடுத்து, அபராஜிதனைத் தோற்கடித்ததோடு அல்லாமல் அப்பல்லவ மன்னனைப் போர்க்களத்தில் கொலை செய்துவிட்டு, பல்லவ நாட்டைக் கைப்பற்றினான். இவ்வெற்றியின் காரணமாக சோழ அரசன் முதலாம் ஆதித்தன் தொண்டை மண்டலம் சோழமண்டலம் முதலிய இருபகுதிகளுக்கும் அரசனானான். தெற்கில் காவிரி ஆற்றிலிருந்து வடக்கில் இராட்டிர கூட அரசின் தென்பகுதி எல்லை வரை சோழ அரசு பரவியது.

## பல்லவர் ஆட்சி முறை

தெற்கில் தொண்டைமண்டலம் வரையிலும், வடமேற்கில் சிலகாலம் ஆந்திரசாதவாகனர்கள் ஆட்சி செய்த பகுதி வரையிலும், கர்நாடகத்திலுள்ள சோட்டா நாகபுரி பகுதி வரையிலும், வடமேற்கில் தென் மகாராஷ்டிரப் பகுதி வரையிலும் பல்லவ அரசு பரவியிருந்தது.

### மத்திய அரசு

### அரசுப் பதவி

தொடக்கத்தில் அரசுப் பதவி மரபு உரிமைகளோடு வருகிற ஆண் அரசகுமாரனுக்கு அளிக்கப்பட்டது. ஆனால் மயின் முறைக் குலத்துரிமை அல்லது முந்து பிறப்பு நிலை உரிமை (primogeniture), எப்பொழுதும் பின்பற்றப்படவில்லை. மயின்முறை குலத்துரிமை என்றால் மூத்தமகன் தான் அரசுப் பதவி உரிமை உடையவன் என்பது பொருள்.

மத்திய அரசின் தலைவன் அரசன் ஆவான். சில தவிர்க்க முடியாத சூழ்நிலையில் தேர்வுமுறை மூலமும் அரசு குலத்தைச் சேர்ந்த அரசன் தேர்ந்தெடுக்கப்பட்டான். தர்ம மகாராசாதிராசன், மகாராசாதிராசன், தர்மமகாராசன், மகாராசன் போன்ற பேரரசைச் சார்ந்த பட்டங்களையும், பல்லவ அரசர்கள் சூட்டிக் கொண்டார்கள். பல்லவ மன்னர்களில் சிலர் அஸ்வமேதயாகம் செய்தார்கள். செந்தலைத்தூண் பட்டயங்கள் இதை உறுதிப்படுத்துகின்றன. அக்னிஸ்தோ்மா, வாஜபேயா, அஸ்வமேதயாகங்களை மன்னன் சிவஸ்கந்தவர்மன் செய்தான் என ஹிரஹதகல்லி பட்டயங்கள் கூறுகின்றன.

அரசுப் பட்டம் சூட்டிக்கொள்ளும் போது புதுப்பெயர்கள் சூட்டிக்கொண்டு பதவியேற்பது பல்லவ அரசர்களின் வழக்கம். உதாரணமாக, இராசசிம்மன் பட்டம் சூட்டிக்கொள்ளும்போது, இரண்டாம் நரசிம்மவர்மன் எனும் பட்டப்பெயரைச் சூட்டிக்கொண்டான். தீவிர 'விருது' என்று அழைக்கப்படும் சிறப்புப் பெயர்களையும் சூட்டிக்கொண்டார்கள். விருதுப் பெயர்கள் மூலம் மன்னர்களின் பண்பு நலனை அறிந்து கொள்ளலாம்.

பொதுவாகப் பல்லவ மன்னர்கள் தோறறச் சிறப்பு உடையவர்களாக விளங்கினர். படித்தவர்கள், அறிவாளிகள், மேலும் பண்பாடுடையவர்கள் என பல்லவ அரசர்க்ளைப் பற்றிப் புகழந்து கூறலாம். சமயப்பற்றுடையவர்கள்; அதே சமயத்தில் சமயப்பொறையுடன் எல்லா சமயத்தினருக்கும் ஆதரவு அளித்தார்கள்.

பல்லவ அரசின் சின்னம் நந்தி, பொறுமை, விடாமுயற்சி போன்ற குணங்களை நந்தி உடையதால் இச்சின்னம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. சில நாயணங்களில் சிங்க உருவமும் பொறிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் சிலர் பல்லவ அரசின் சின்னம் சிங்கம்தான் எனக் கூறுகின்றார்கள். முன்பகுதி பல்லவர்கள் நந்திச் சின்னத்தையும், பிற்பகுதி பல்லவர்கள் சிங்கச் சின்னத்தையும் பயன்படுத்தினார்கள் எனச் சிலர் கூறுகின்றார்கள்.

## அமைச்சரவை

அமைச்சர்களின் ஆலோசனைகளைக் கேட்டுத்தான் மன்னன் கொள்கைகளை உருவாக்கிச் செயல்படுத்தினான். இருவகை அமைச்சர்கள் பணிபுரிந்தார்கள். 1) அமாத்தியர்கள், 2) மந்திரிகள். அமாத்தியர்கள் ஆலோசனை அளித்தார்கள். பொதுவாக மந்திரிகள் அரசியல் வல்லுநர்களாகப் பணிபுரிந்தார்கள். நிர்வாக அமைப்பு விவகாரங்கள், வெளி உறவு விவகாரங்கள் முதலியவைகள் சம்பந்தமாக மன்னர் அமைச்சர்க்ளின் உதவியை நாடினார். போர்புரியும் திறன் ஒரு சில அமைச்சர்களுக்கே இருந்தது எனக் கூறலாம். வாதாபிப்போர் போன்ற சில சந்தர்ப்பங்களில் ஒரு சில அமைச்சர்கள் படைத்தலைவர்களாயும் பணி புரிந்திருக்கின்றார்கள்.

மன்னர் அவையில் புரோகிதர்களுக்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டது. இறையியல் விவகாரங்களில் இவர்கள் மன்னருக்கு ஆலோசனை அளித்தார்கள். அரசு புரோகித பதவியும், முதல் அமைச்சர் பதவியும் ஒரே நபருக்கு அளிக்கப்பட்டது முடிசூட்டு விழாவின் போதும், மன்னர்களை அரசு பதவிக்குத் தேர்ந்தெடுக்கும் சூழ்நிலையிலும், அமைச்சர்கள் சிறப்பிடம் பெற்றனர்.

அரசருக்கு உதவ செயலாளர்களும், தனிச்செயலாளர்களும் அமைக்கப்பட்டார்கள். வாயில் கேட்பார், கீழ்வாயில் கேட்பார் என்று செயல் தலைவர்கள் அழைக்கப்பட்டனர்.

## கருவூலம்

பல்லவர்கள் இடைவிடாது போர் புரிந்தாலும், கலை, கட்டடக் கலையைப் பேணி வளர்த்துக் கோயில்களைக் கட்டியதாலும் அவர்களிடம் தேவையான அளவு செல்வம் மிகுந்திருந்தது என நம்பலாம். பொருளாதார அமைப்பு சீரும் சிறப்புடனும் இருந்தது. கருவூலத்தின் பொறுப்பு கருவூல நாயகரிடம் விடப்பட்டிருந்தது. அவருக்கு உதவி புரிய சில உயர்ந்த பணியாளர்களும் நியமிக்கப்பட்டார்கள்.

## அறம் கூறும் அவையம்

நீதி அமைப்பு முறையின் தலைவன் அரசன். மாவட்டங்களிலும் நாட்டுப் புறங்களிலும் அறம் கூறும் அவையங்கள் (நீதி மன்றங்கள்) அமைக்கப்பட்டிருந்தன. காஞ்சியிலிருந்த அறம் கூறும் அவையங்களின் பெயர் அதிகரணம் என மத்தவிலாசப் பிரகசனத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம். இவ்வதிகரணங்களின் தலைவர் அதிகரணப் பேரரசர் எனப்பட்டார். அதிகரணம் எனும் அறம் கூறும் அவையம் பற்றி தசகுமார சரிதை கூறுகின்றது. தர்மாதிகாரி எனும் நீதிபதிகளைப் பற்றிப் பஞ்ச தந்திரம் கூறுகின்றது.

'கர்ணதண்டம்', 'அதி—கர்ணதண்டம்' எனும் தண்டனைகள் பற்றி நந்திவர்மப் பல்லவ மன்னனின் காசக்குடிப்பட்டயங்கள் கூறுகின்றன. தண்டம் என்றால் அரசரால் விதிக்கப்பட்ட அபராதம் என்பது பொருள். தண்டம் மூலமும் அரசு வருமானம் வளர்ந்தது. மேலும் பல்லவர் காலத்தில் கீழ் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து மேல் நீதிமன்றங்களுக்கு முறையிட்டனர் என்பதையும் குறிப்புகளிலிருந்து நாம் ஊகிக்கலாம்.

ஆனால் மத்திய அரசின் நீதிமன்றத்தில்கூட கையூட்டும் ஊழலும் நிறைந்திருந்தது. ஆகையால் நடுநிலையின்றி, ஒரு சிலருக்குச் சலுகை அளித்து நிதி வழங்கப்பட்டது. கிராம மன்றங்களும் ஊரின் உறுப்பினர்களும் மன்னரின் நேரடி கண்காணிப்பின் கீழிருந்த நீதிமன்றத்திடம் தண்டம் செலுத்தினார். கிராம நிர்வாக மன்றத்தின் பெயர் தர்மாசனம்; கௌடில்யாவின் அர்த்தசாத்திரத்தில் குறிப்பிட்டிருக்கும் தர்மாஸ்தியாவை ஒத்திருந்தது எனக் கூறலாம்.

## நிலம் அளிக்கப்படல்

நாட்டிலிருந்த எல்லாக் கிராமங்களும், நிலங்களும் அளவாய்வு செய்யப்பட்டது. நிலஉரிமைகளைப் பற்றிய முழுவிவரங்களும் பதிவு செய்யப்பட்டன. மன்னரால் பார்ப்பனர்களுக்கும், கோவில்களுக்கும் அன்பளிப்பாக அளிக்கப்பட்ட நிலங்களின் மேல் வரி விதிக்கப்படவில்லை. அம்மாதிரியாக அன்பளிப்பு நிலங்களை பரிசாக அளித்து ஒப்படைக்கும்போது கிராம அதிகாரிகள் அல்லது மாவட்ட அதிகாரிகளின் முன் அளவாய்வு செய்யப்பட்டது. மன்னரின் நில அன்பளிப்புக் கட்டளைகள் கிராமத் தலைவர்கள் மூலமாகவோ அல்லது நாட்டு மன்றங்கள் மூலமாகவோ செயல் படுத்தப்பட்டன. இம்மாதிரியான கட்டளைகளின் விவரங்கள் அரை ஓலையில் அல்லது கால் ஓலையில் எழுதப்பட்டு அனுப்பப்பட்டன.

ஆடு, மாடு, பசுக்கள் நிலங்களுக்குள் சென்று பயிர்களுக்கு அழிவு ஏற்படுத்தாம லிருப்பதற்காகவும், நிலச் சொந்தக்காரர்களிடையே சண்டைகள் வராமலிருப்பதற்காகவும், நிலங்களைச் சுற்றி வேலிகள் போடப்பட்டன.

## அரண்மனை ஊழியர்கள்

வழிவழி மரபில் வந்த தட்டான்கள் அரண்மனையில் பணிபுரிந்தனர். நகைகள் செய்வதைத்தவிர, அரசர் அன்பளிப்புக் கட்டளைகளையும் செப்புப் பட்டயங்களில் எழுதினார்கள். தவிர அரசு மாளிகையில் ஸ்தபதியும் பணி புரிந்தான். பொதுமக்கள் நன்கொடை விவரங்களைச் செப்புப் பட்டயங்களில் பதிவு செய்யவேண்டியது இவனது முக்கியக் கடமையாகும். மேலும் பல்லவ அரண்மனையில் புலவர்கள் பணிபுரிந்தார்கள் எனக் கல்வெட்டுகளிலிருந்து தெரிகின்றது. மன்னர் அளிக்கும் அன்பளிப்பு விவரங்களுக்கு குறிப்பாக மெய்க்கீர்த்திக்கு கவிதை உருவம் கொடுப்பது இவர்களின் பொறுப்பு.

## படை

நாற்பிரிவு படைகள் பல்லவ அரச காலத்திலும் தொடர்ந்து அமைக்கப்பட்டன. யானைப்படைப்பிரிவு, குதிரைப்படைப்பிரிவு, காலாட்படைப்பிரிவு எனப் பிரிக்கப்பட்டன. சிறப்பாக யானைப் படைகள் வளர்க்கப்பட்டன. படைவீரர்கள் கத்தி, வில், அம்புகள், ஈட்டிகள், கதை, எறிவேல் முதலியவைகளைத் தங்களுடன் தூக்கிக் கொண்டு சென்றார்கள் என வைகுந்தப் பெருமாள் கோவிலில் இருக்கும் சில சிலைகளின் ஆய்வு மூலம் தெரிந்து கொள்ளலாம்.

சேனாதிபதிகள் அல்லது படைத்தலைவர்களைப்பற்றி ஹிரஹதகல்லி பட்டயம் மூலம் தெரிந்து கொள்ளலாம். போர்புரியும்போது தலைநகரை விட்டுப் படைகள் வெளியேறி, வேற்றிடங்களில் பாசறை அல்லது கூடாரங்களை அமைத்து, பிறகு எதிரிகளுடன் போர் புரிந்தனர். போர்மேளமும், போர்ப்பறையும் போரின் போது பயன்படுத்தப்பட்டன. பல்லவர் காலத்தில் ஒரு வலுவான, திறமையுள்ள படை அமைக்கப்பட்டிருந்தது.

## போர்க்கப்பல்கள்

பல்லவர்கள் கடல்கடந்து படையெடுத்ததால், அவர்களிடம் மிகுதியான போர்க் கப்பல்கள் இருந்தன எனப்புலனாகிறது. பல்லவர் காலத்தில் சிறப்புடன் பணியாற்றிய துறைமுகம் மாமல்லபுரம். மகேந்திரவர்மனின் தந்தை சிம்மவிஷ்ணு, சக்தி வாய்ந்த ஈழமன்னனின் படைகளை முறியடித்தான் என காசக்குடிப்பட்டயங்கள் கூறுகின்றன. முதலாம் நரசிம்மவர்மன் ஈழ இளவரசன் மானவர்மனுக்குப் படைஉதவி அளித்தான் என மகாவமிசத்திலும் பல்லவர் கல்வெட்டுக்களிலும் கூறப்பட்டிருக்கிறது. பல்லவர்படை வலிவானதாகவும், சக்திவாய்ந்ததாகவும் இருந்ததால் இலங்கைப்படையெடுப்பின்போது பாண்டியர்கள்கூட பல்லவர்களின் உதவியை நாடினார்கள். இலக்கதீவுகளை இராச சிம்மன் கைப்பற்றினான் என வயலூர் கல்வெட்டின் மறைமுகக் குறிப்புக்களிலிருந்து ஊகிக்கலாம்.

## வருவாயும் வரிமுறையும்

பல்வகை வரிகள் மூலம் அரசுக்கு வருவாய் கிடைத்தது. மேலும் மாநில அரசுகள் அளித்த செல்வம் மூலமும் வருவாய் வளர்ந்தது. மன்னர் அன்பளிப்பு, கல்வெட்டுகளிலும் செப்புப் பட்டயங்களிலும் வரிகளைப்பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன.

உப்பு எடுப்பதற்காக உப்பு காச்சியகை எனும் வரி விதிக்கப்பட்டது. ஆனால் உப்பு எடுக்கும் தொழிலை அரசு மட்டும்தான் செய்தது எனச் சில ஆசிரியர்கள் கூறுகிறார்கள். இளம்பூட்சி எனும் வரி விதிக்கப்பட்டது. இடைப்பூட்சி எனும் கால்நடை வரி இடையர்கள் செலுத்த வேண்டியதாக இருந்தது. பிராமண இராசாக்காணம் எனும் வரி பிராமணர்கள் அரசருக்குச் செலுத்த வேண்டிய அல்லது மற்றவர்கள் பிராமணர்களுக்கும், அரசருக்கும் செலுத்த வேண்டிய வரியும் விதிக்கப்பட்டது. குசக்காணம் எனும் வரியை குயவர்கள் செலுத்தினார்கள். தட்டுக்காணம் எனும் வரியைத் தட்டார்கள் செலுத்தி னார்கள். கிராமத் தலைவன் வியவன் காணம் எனும் வரி செலுத்த வேண்டும். கிராமத் தலைவனின் பதவி தலைமுறை தலைமுறையாக வரும் ஒரே குடும்பத்தின் உரிமை ஆகையால், கிராமத் தலைவன் புரியும் பணிக்கு இவ்வரி மூலம் ஊதியம் அளிக்கப்பட்டது. ஆனால் இவ்வரியில் ஒரு பகுதியை அவன் அரசனுக்குச் செலுத்த வேண்டும்.

புட்டக விலை என்னும் வரி கூடாரமடித்துத் தங்குவோர் அரசனுக்குச் செலுத்தும் வரி. படகோட்டிகள் பட்டிகைக்காணம் எனும் வரி செலுத்த வேண்டும். தரகர்கள் தரகு எனும் வரி செலுத்த வேண்டும். எண்ணெய் எடுப்பதற்காகச் 'செக்கு' எனும் வரி விதிக்கப்பட்டது. தறி வைத்திருப்பவர்கள் தறிக்கூரை எனும் வரியைச் செலுத்த வேண்டும்.

நெய்த பஞ்சாடைகள் மேல் பதம் கழி எனும் வரி விதிக்கப்பட்டது. தானியங்களின் விற்பனையின் மேல் வட்டி நாழி எனும் வரி விதிக்கப்பட்டது. வட்டி என்பது ஆறு குருணி தானியங்கள் பிடிக்கும் ஓர் பெரிய கூடை; ஒரு வட்டி தானியம் விற்றால் ஒரு நாழி வட்டி அளிக்க வேண்டும். ஆகையால் தான் இதை வட்டி நாழி என அழைத்தார்கள். மீனவர்களின் மேல் பட்டினச்சேரி எனும் வரி விதிக்கப்பட்டது. அரச கடிதங்களை அனுப்புவதற்காக திருமுகக்காணம் எனும் வரி செலுத்த வேண்டும். கள் எடுக்கும் பட்டூர் எனும் மரங்களின் மேல் பட்டூர் சவுன் அல்லது சவுன் எனும் வரி விதிக்கப்பட்டது. கிராமங்கள் அரசுக்குச் செலுத்த வேண்டிய வரியின் பெயர் நாட்டு வகை. நெய்யின் மேல் நெய் விலை எனும் வரி செலுத்த வேண்டும். கருமான்கள் கத்திக்காணம் எனும் வரி செலுத்த வேண்டும். பறை வாத்தியம் வாசிப்பவன் நெடும்பறை எனும் வரி செலுத்த வேண்டும். வரிதிரட்டுபவர்களுக்கு நிலவரி திரட்ட வரும்போது உணவு அளிக்க வேண்டும். இவ்வுரிமை சோறு மாட்டு எனப்பட்டது. அபராதம், சொத்துரிமை பறித்தல் போன்ற நீதிமன்ற மூலம் வரும் அரசு வருமானத்தை மன்றுபாடு என அழைத்தார்கள்.

மேலே கூறிய எல்லா வரிமுறைகளும் மன்னரின் உரிமைச் சொத்து ஆகும்.

## எடை முறைகள்

நிலம், அளப்பதற்குப் பலவித எடைகளும், அளவைகளும் பயன்படுத்தப்பட்டன. பொதுவாக நிலங்களை வேலி அல்லது கூலி என்பதின் மூலம் அளந்தார்கள். பலவகைக் கோல்கள் நிலம் அளப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டன. அளவுகோல்களில் பல்வகை உண்டு, நால்வநாழி, மான்யநாழி, நாராய் நாழி, புருத்வி மாணிக்க உரி முதலியவைகள் இவ்வளவு கோடுகளில் சிலவகையாகும். பிருத்வி மாணிக்கம் என்பது நிருபதுங்கனின் மனைவி பெயர். அவைகளில் பல அக்காலத்தில் கோப்பெருந்தேவிகளின் பெயர்களால் வழங்கின என்றறியலாம். அரசால் பொதுவாக அனுமதி அளிக்கப்பட்ட அளவுகோலின் பெயர் விடேல்விடுகு, உழக்கு, நெய், எண்ணெய், பால், தயிர் முதலியவைகளை சீவிடு எனப்படும் சோடு, உரி, நாழி, முதலியவைகள் மூலம் அளப்பது வழக்கம். உழக்கில் ஐந்தில் ஒரு பகுதி சீவிடு, நாழி, மரக்கால், குருணி, பதக்கு, காதி, கலம் முதலியவைகளைப் பயன்படுத்தி அரிசி, நெல் முதலியவைகள் அளக்கப்பட்டன. தங்க ஏடைக்குக் கழஞ்சு, மஞ்சாடி எனும் சொற்கள் பயன்படுத்தப்பட்டன. ஒரு கழஞ்சு பொன் என்றால் ஒரு நாணய எடை என்பொருள்.

## நாணயங்கள்

பொதுவாக நந்தியையும் இரு பாய்மரக் கப்பல்களையும் பல்லவ நாணயங்களில் காணலாம். சில நாணயங்களின் பின்புறத்தில் நந்திக்குப் பதிலாகச் சிங்கத்தின் சின்னத்தைப் பார்க்கலாம். மேலும் சில நாணயங்களில் ஸ்வஸ்திகா, சக்கரம், வில், மீன், குடை, சைத்யங்கள், குதிரை போன்ற சின்னங்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன. பல்லவர் காலத்து வெள்ளி, செம்பு நாணயங்கள் கிடைத்திருக்கின்றன. தங்க நாணயங்கள் கிடைக்கவில்லை. நந்தியும், அதன் பின்புறம் ஸ்ரீபரன் அல்லது ஸ்ரீநிதி எனும் சொற்களும் உள்ள நாணயங்கள் இராசசிம்மனால் வெளியிடப்பட்டன.

கோவில்களுக்கு நாணயமாகவோ அல்லது தங்க எடை மூலமாகவோ நன்கொடை அளிக்கப்பட்டது. காணம், பழங்காசு, துளைப்பொன், செம்பொன், விடேல்விடுகு, பொன் முதலிய சொற்களைக் கல்வெட்டுகளில் காணலாம். கழஞ்சு எடையுள்ள கழஞ்சு என்னும் நாணயமும் பயன்படுத்தப்பட்டது.

## நீர்ப்பாசன வசதிகள்

பல்லவ மன்னர்கள் மக்களுக்கு நீர்ப்பாசன வசதிகள் செய்து வந்தார்கள். கிணறுகள் தோண்டப்பட்டன. குளங்கள் கட்டப்பட்டன; கால்வாய்கள் வெட்டப்பட்டன; மதகுகள் கட்டப்பட்டன; கரையெடுக்கப்பட்டன. இவ்வாறான முயற்சிகளில் அரசு மட்டும் இல்லாமல், மக்களும் பங்கெடுத்துக் கொண்டார்கள்.

இரண்டாம் நந்திவர்மனுக்கு முன் திரலய தடாகம் அவனுடைய முன்னோர்களால் கட்டப்பட்டது. பல்லவர்களின் மூதாதையர்களுள் ஒருவனான கிள்ளிமணி பல்லவத்தீவில் உள்ளதுபோல், ஒரு குளத்தைக் காஞ்சியில் வெட்டியதாகக் கூறப்படுகிறது. மகேந்திரவாடி எனும் ஊரும் மகேந்திர விஷ்ணுகிரகம் எனும் கோவிலும், மகேந்திர தடாகமும் மன்னர் மகேந்திரவர்மனால் கட்டப்பட்டவை எனக் கூறப்படுகின்றது. சித்திரமேக தடாகமும் மாமண்டூர் குளமும் பல்லவர் காலத்தில் இருந்தன. பரமேசுவர மங்கலம் கிராமங்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்துதரும் நோக்கத்துடன் பரமேசுவர தடாகம் அமைக்கப்பட்டது.

பல்லவ அரசு காலத்தில் செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள உத்திரமேரூர் பகுதியில் இருந்த வைரமேக தடாகம் மிகவும் புகழ்வாய்ந்த தடாகம் ஆகும். நந்திவர்மன் ஆட்சி தொடக்கத்திலே இத்தடாகம் அமைக்கப்பட்டது. பல்லவமன்னன் தெள்ளாறு எறிந்த நந்திபோத்தவர்மன் ஒரு பெரிய குளத்தைக் காவிரிப் பக்கத்தில் கட்டினான். சிலர் இக்குளம் மூன்றாம் நந்திவர்மனால் கட்டப்பட்டது என நம்புகிறார்கள். நிருபதுங்கவர்மன் அரியணையேறி பன்னிரெண்டு ஆண்டுகள் ஆட்சி செய்தபிறகு மருதாடு ஏரி மருதாடு கிராமத்தில் அமைக்கப்பட்டது. சிலர் இம்மன்னனின் ஆட்சி தொடங்கும் முன்பே இவ்வேரி கட்டப்பட்டிருக்க வேண்டும் எனக்கூறுகின்றார்கள்.

பார்ப்பனர்களுக்கும், கோயில்களுக்கும் அன்பளிப்பாக அளித்த நிலங்களின் எல்லைகளிலும் குளங்கள் அமைக்கப்பட்டன. இக்குளங்கள் மழையை மட்டும் நம்பி வாழ்ந்தன; சில குளங்களுக்குள் ஆற்று நீர் விழும் வசதி செய்யப்பட்டது. குளங்கள் கிணறுகள் கட்டுவதற்கு மன்னரின் அனுமதி தேவைப்பட்டது. பல்லவர்கள் காலத்தில் கட்டிய 'நாளுமுனைக்கேணி' எனும் கிணற்றை இன்று கூடக் காணலாம்.

மதகுகளும், குளங்களும் நன்கு கண்காணிக்கப்பட்டு வந்தன. அரசு கண்காணிப்பின் கீழ்தான் நீர்ப்பாசன வசதிகள் நிர்வகிக்கப்பட்டன. தனி நபர்கள் நீர்ப்பாசன வசதிகள் செய்யும் முயற்சிகளுக்கும் ஆதரவு அளிக்கப்பட்டது.

பல்லவர் ஆட்சிக்காலத்தில் பொதுவாகச் செல்வச் செழிப்பான சூழ்நிலை நிலவிய போதும் ஒருசில காலத்தில் மக்கள் பஞ்சத்தாலும் பாதிக்கப்பட்டார்கள். தேவையான மழையில்லாததால், இம்மாதிரியான பஞ்சம் தோன்றியது. பெரியபுராணத்தில் இம்மாதிரி

யான ஒரு பஞ்சத்தைப் பற்றிய குறிப்பு கிடைக்கின்றது. இப்பஞ்சம், சீனயாத்திரிகர் குறிப்புகளின்படி கி.பி. 686-689ஆம் ஆண்டுகளுக்கு இடையே ஏற்பட்டிருக்க வேண்டும். மன்னர் இராசசிம்மனின் ஆட்சித் தொடக்கத்திலே இப்பஞ்சம் ஏற்பட்டிருக்க வேண்டும். அப்பர், சம்பந்தர், சிறுத்தொண்டர் இப்பஞ்சத்தின் போது வாழ்ந்து வந்தார்கள். பஞ்சத்தை நீக்கும் நோக்கத்துடன் நீர்ப்பாசன வசதிகள் செய்யும் முயற்சியில் அரசும் மக்களும் இறங்கினார்கள். பணம் திரட்டப்பட்டது. பஞ்சத்திற்காகத் திரட்டப்பட்ட பணத்தையும் தானியத்தையும் கண்காணிப்பதற்காக பஞ்சவரவாரியம் எனும் குழு அமைக்கப்பட்டது.

## மாநில மாவட்ட அரசு

மாநிலத்தலைவர்களாகச் சிலசமயம் இளவரசர் இருந்தனர். கிராமங்களை விடச் சிறியதும் கோட்டத்தைவிடப் பெரியதும் நாடு எனப்பட்டது. நாடு என்ற பகுதியைக் காட்டிலும் சிற்றூர் என்பது சிறியது. ஊரை ஆண்டவர்கள் ஆள்வார்கள் எனப்பட்டனர். நாட்டை ஆண்டவர்கள் நாட்டார் எனப்பட்டனர். இவ்வதிகாரிகள் மத்திய அரசின் நேர்மேற்பார்வையின் கீழ் பணிபுரிந்தார்கள். கிராம அமைப்புகள்தான் நிருவாக கீழ்ப்படியில் அமைக்கப்பட்டன. அரசுகட்டளைக்குத் திருமுகம் எனப்பெயர்.

கிராம மன்றங்களின் பெயர் சபை, மகாசபை ஆகும். இம்மன்றங்களில் 'பெருமக்கள்' என்று அழைக்கப்பட்ட 10 உறுப்பினர்கள் இருந்தார்கள். கோயில்கள், நீர்ப்பாசனங்கள், விவசாய நிலங்கள் முதலியவைகளை இம்மன்றங்கள் மேற்பார்வையிட்டன. மேலும் இவைகள் நீதிமன்றமாகவும் பணிபுரிந்தன. இம்மன்றங்களின் மேற்பார்வையில் 'வாரியம்' போன்ற பல குழுக்கள் அமைக்கப்பட்டன.

கிராம மன்றங்கள் தங்கள் பொறுப்புகளை வாரியங்களோடு பங்கிட்டுக் கொண்டன. இக்காரணத்தால் படிப்படியாக வாரியம் என்றால் கிராம சபை எனப்பொருள் என்ற எண்ணம் மக்களிடையே தோன்றியது. வாரியங்களைப்போல "ஆளும் கணத்தார்" எனும் குழுவும் செயல்பட்டு வந்தது. இம்மாதிரியான கிராமக்குழுக்கள் எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்தன.

## கிராமப் பொருளாதார அமைப்பு

ஒவ்வொரு கிராமமும் அளவாய்வு செய்யப்பட்டது; கிராம எல்லைகள் வரை யறுக்கப்பட்டன. கிராமங்களின் பரப்பெல்லைக்குள் மாறுபாடுகள் இருந்தன. பல சேரிகளும், சிற்றூர்களும் சேர்ந்தது ஒரு பெரிய கிராமம்.

கிராமத்திலிருந்த் குளம், கிணறுகள், கிராமத்தின் வழியாக ஓடும் கால்வாய்கள், பொதுநிலம், பசும்புல் நிலம் போன்றவை எல்லா கிராம மக்களின் பொதுச் சொத்தாகும். எல்லாக் கிராம மக்களும் இப்போது வசதிகளைப் பயன்படுத்த வாய்ப்பளித்துக் கண்காணிக்கும் பொறுப்பு கிராம சபைக்கு ஒப்படைக்கப்பட்டது.

பிரம்மதேய கிராமங்கள், பொதுவாக சிறியவை. ஆனால் அவைகளில் வாழ்வு வளம் நிறைந்திருந்தது. தேவதான கிராமங்களில் வாழ்ந்து வந்த குடும்பங்கள் பொதுவாகக் கோயில்களில் பணியாற்றினார்கள். கோவில்களில் நாள்தோறும் அன்னதானம் செய்வதற்காக வசதிகள் செய்யப்பட்டிருந்தன. ஒவ்வொரு விவசாயியும் ஒரு கோயிலுக்கும் அல்லது சத்திரத்துக்கும் சிறிதளவு தானியம் அளிக்கவேண்டும் என்ற கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

கோவில் ஆண்டு விழாக்களில் மேலும் பலருக்கு உணவு அளிக்கும் நோக்குடன் சிறப்பான நன்கொடைகள் அளிக்கப்பட்டன.

கிராமத்திலிருந்த ஒவ்வொரு வீட்டிலும் ஓர் தோட்டம் இருந்தது. இத்தோட்டத்தில் தோட்ட வேளாண்மை செய்வதைத் தவிர, பசுக்களும், ஆடுகளும் வளர்க்கப்பட்டன. கருமான், தச்சன், தட்டான், குயவன் எண்ணெய் வாணியன், நூற்பவர், நெசவாளர், வணிகர்கள் முதலியோர் கிராமங்களில் வசித்தார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு சிறப்பு அங்காடி அமைக்கப்பட்டிருந்தது.

கிராம நிலங்களில், பெரும்பான்மையான நிலங்களில் நெல் பயிரிடப்பட்டது. தவிர, தென்னை போன்ற பல மரவகைகளும், தோட்டங்களும் இந்நிலங்களில் இருந்தன என பல்லவர் செப்புப் பட்டயங்கள் குறிப்பிடுகின்றன. தென்னையைப் போல பனைமர வகைகள் மிகுதியான அளவில் பயிரிடப்பட்டன. பாக்கு மிகுதியாகத் தேவைப்பட்டது. மாம்பழம், வாழைப்பழம் முதலியவைக்கும் முதன்மையளிக்கப்பட்டன. பருத்திச் செடியும் மிகுதியான அளவில் பயிரிடப்பட்டது. மேலும் மருந்து வகைச் செடிகளும் முதலிடம் பெற்றன. செங்கோடி, கண்ணி, தாமநாகம், குவளை, செங்கழுநீர் முதலிய செடிகளின் பெயர்களைச் செப்பேடுகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

ஓரளவு மௌரிய, சோழ ஆட்சிமுறைகளைப் பல்லவ அரசு ஒத்திருந்தது எனக் கூறலாம். வடநாட்டுப் பண்பாடுகளும் சிறிதளவு பல்லவ ஆட்சிமுறையுடன் கலக்கப் பட்டிருந்தன.

## சமூக வாழ்க்கை

பண்டையர் வழக்குப்படி தமிழக சமூக அமைப்பு பார்ப்பனர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் முதலிய நான்கு சாதிப்பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருந்தது. இச்சாதி அமைப்பின் நெறிமுறை, சட்டத்தை மன்னன் முதலாம் மகேந்திரவர்மன் தீவிரமாக தொடர்ந்து கடைப்பிடித்து வந்தான் என கூரம் பட்டயம் கூறுகின்றது.

சமூக அமைப்பின் மேல்படியை பார்ப்பனர்கள் கைப்பற்றியிருந்தார்கள். பொதுவாக பார்ப்பன வகுப்புப் பிரிவினர்கள் கல்வித் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். பண்டைய வேதசாத்திரங்களையும், இலக்கியங்களையும் நன்கு கற்றறிந்தவர்கள், அறிவுக் கூர்மையும், திறமையும் படைத்தவர்கள்; மன்னர்களின் பெருமதிப்பையும், ஆதரவையும் பெற்றிருந்தவர்கள்; அரசாங்க அலுவலகங்களிலும் பணிபுரிந்து வந்தார்கள்; இவ்வாய்ப்பு

மற்றவர்களுக்கு தரப்படாததால் மற்றவர்கள் வளர இயலவில்லை. அடுத்து சமூகநலத்தில் வணிகர்களும், கைத்தொழில் வினைஞர்களும் மற்றும் பிற தொழில்களையும் மரபு வழக்குப்படி கடைபிடிப்போரும் இருந்தனர்.

பல்லவ அரசகுலப் பெண்டிர் கடவுள் பக்தியுள்ளவர்களாயிருந்தார்கள். தங்கள் கணவன்மார்களோடு போட்டியிட்டுக் கொண்டு சமய முறை நன்கொடைகளை அளிக்கும் தாராள மனப்பான்மையுள்ளவர்களாகயிருந்தார்கள். தங்களுக்கு மிகவும் பிடித்தமான தெய்வங்கட்கு கோயில்களைக் கட்டினார்கள். பொதுவாக இவர்கள் பண்பாடுள்ளவர்களாகவும், மக்களின் நன்மதிப்பையும் பெற்றிருந்தார்கள். கைலாசநாதர் கோயிலைக் கட்டிய பல்லவ மன்னன் இராசசிம்மனின் அன்பை அதிகளவில் பெற்றிருந்தவர் அவருடைய மனைவியார் ரெங்கபாதாகா ஆவார். பல்லவ அரசியரின் சிற்பங்களும் சிலைகளும் கூட நமக்குக் கிடைத்திருக்கின்றன. பொதுவாக அரசகுமாரிகளும், அரசியரும், உயரமாகவும் பெண்மையின் மென்மையுடைய வடிவு மிகுந்தவர்களாகவும் இருந்தார்கள் என இச்சிலைகளிலிருந்தும் சிற்பங்களிலிருந்தும் ஊகிக்கலாம். காதுகளை அலங்கரிக்கும் தோடு போன்ற அணிகலன்களையும், நகைகளையும், கிரீடங்களையும் அணிந்திருந்தார்கள் எனத் தெரிகின்றது.

பிற்காலப் பல்லவக் கல்வெட்டுகளில் 'ஸ்ரீதானம்', 'அங்கமணி' (Angamani) முதலியவைகளைப் பற்றி கூறியிருப்பதால் மகளிற்கென தனிச் சொத்துக்கள் இருந்தன என ஊகிக்கலாம். பண்பாடுள்ள பெண்டிர்கள் மதிக்கப்பட்டார்கள். பொதுவாக ஒழுங்குமுறை நெறிகளைத் தீவிரமாகப்பின்பற்றிய பெண்டிர்களைத்தான் பல்லவ மக்கள் விரும்பினார்கள்.

இறந்தவர்களின் நினைவுச் சின்னங்கள், அவர்களுடைய சிலை எழுப்புவது, அவர்கள் பெயருள்ள கட்டிடங்கள் அமைப்பது, அவர்கள் பிறந்த, இறந்த நினைவு நாட்களில் நன்கொடை அளித்தல், அவர்கள் சமாதிகளின் மேல் கோயில்கள் எழுப்புதல் போன்ற பலவித பண்பாடு பண்டைய காலத்திலிருந்தே இந்தியாவில் தொடர்ந்து வரும் பழக்க வழக்கமாகும்.

பல்லவ அரசர்களின் தியாகங்களைச் சித்தரிக்கும் வீரக்கற்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வீரக்கல் பொதுவாக கல்வெட்டுகளாக இருந்தன. வீரனின் பெயரும், அவன் புரிந்த வீரச்செயல்களைப்பற்றியும் இவ்வீரக்கல்லில் எழுதப்பட்டிருக்கின்றன. மேலும் அவ்வீரன் அல்லது வீரர்களின் உருவங்களும், மற்ற சின்னங்களும் இவ்வீரக்கல்லின் மேல் செதுக்கப்பட்டுள்ளன. பல்லவ மன்னன் நந்திவர்மன் காலத்திற்கு முன்பிருந்த வீரக்கற்களைப்பற்றி நமக்கு ஆதாரங்கள் இல்லை. இறந்தவர்களின் சமாதிகளின்மேலும் (குறிப்பாக எதிரிகளின் பசுக்களைப் பிடிக்கும் முயற்சியில் இருந்த வீரர்களின் சமாதிகளின் மேலும்) வீரக்கற்கள் எழுப்பப்பட்டிருந்தன.

பல்லவர்காலத்தில் இந்து, பௌத்த, சமண சமயப்பள்ளிகள் தழைத்தோங்கின. பெரும்பான்மையான கல்லூரிகள் (பள்ளிகள்) இந்து சமயத்தினருடையதாக இருந்தன. சமஸ்கிருதமொழி சிறப்பிடம் பெற்றிருந்தது. மன்னர் அவை மொழியாகவும் இருந்த

பெருமையையும் தேடிக்கொண்டது. சிறப்பாக சமஸ்கிருத மொழி கல்லூரிகளுக்கு மன்னர்கள் பெரும் ஆதரவு அளித்தார்கள். இந்தியாவின் மற்ற பகுதியிலிருந்தும் இக்கல்லூரிகளில் பயிலுவதற்கு மாணவர்கள் வந்தார்கள். காஞ்சியிலிருந்த கடிகை (Ghatika) எனப்பட்ட கல்லூரியில் பல திறமையுள்ள சான்றோர்கள் பணிபுரிந்தார்கள்.

கல்லூரிகளுக்கு மட்டும் மன்னர்கள் ஆதரவு அளிக்கவில்லை; தனிப்பட்ட கற்றறிந்த அறிஞர்களுக்கும் ஆதரவு அளித்தார்கள். வேதங்களை கற்றறிந்தவர்களுக்கு செழிப்பான நிலங்களை நன்கொடையாகக் கொடுத்தார்கள். இம்மாதிரியாக அளிக்கப்பட்ட நிலச்சொந்தக்காரர்கள் நிலங்களின் மேல் பொதுவாக விதிக்கப்படும் நிலவரியோ, அல்லது வேறுவிதமான அபராதமோ செலுத்த வேண்டியதில்லை. இம்முறையில் கொடுக்கப்படும் நிலங்களுக்கு “பிரமதேய (Brahmadeya) நிலங்கள்” எனப் பெயரிடப்பட்டது. இம்முறையில் பார்ப்பனர்களுக்கு அளிக்கப்படும் நிலங்களுக்கு ‘பட்டவிருத்தி’ (Bhattavirutti) எனும் பெயர் அளிக்கப்பட்டது. ஆனால் பார்ப்பனர்களுக்கு என ஒதுக்கப்பட்டிருக்கும் பகுதிகளில் பார்ப்பனர்கள் மட்டும் வாழ்ந்தால் “அக்கிரஹாரம்” (Agrahara) எனும் பெயர் தரப்பட்டது.

பண்டைய காலத்திலிருந்து தென் இந்தியக்கோயில்கள் கல்லூரிகளாகவும், கலைப்பண்பாடுகளைப் பேணி வளர்க்கும் இருப்பிடங்களாகவும் இருந்தன. சிற்பிகள், கட்டடக்கலை நிபுணர்கள், சித்திரக்கார புலிகள், நடனமாடும் பெண்டிர், பாடகர், தத்துவஞானிகள், புலவர்கள் சாஸ்திரம் படித்த சமயப்பற்றுள்ளவர்கள் முதலியவர்களுக்கு கோயில்களில் தான் சிறப்பாக வேலைகள் கிடைத்தன. பல்லவ அரசு காலத்திலும் கோயில்கள் இத்திருப்பணிகளின் உறைவிடமாக விளங்கின. பாண்டிச்சேரிக்கு அருகேயுள்ள அருவநாடு பகுதியில் பாகூர் எனுமிடத்தில் வித்யஸ்தானா (Vidyasthana) எனும் கல்லூரி எட்டாம் நூற்றாண்டிற்கு முன்பிருந்தே சிறப்பு இடத்தைப் பெற்றிருந்தது. வித்யஸ்தானா என்றால் அறிவின் கருவூலம் அல்லது இருப்பிடம் எனப்பொருள்படும்.

பல்லவர்களின் பிற்கால வரலாற்றிலே தான் துறவியரின் இருப்பிடமான மடங்களை நாம் காணலாம். கற்றறிந்த அறிஞர்களின் உறைவிடமாகவும், அன்னதானம் அளிக்கும் இல்லமாகவும், பயணிகள் தங்கும் விருந்தினர்மனையாகவும், பொதுவாக ஏழை, எளியவர்களின் இருப்பிடமாகவும் மடங்கள் விளங்கின. இம்மடங்கள் கல்லூரிகளாகப் பணி புரிந்தன. கோயில் விவகாரங்களையும் மேற்பார்வையிட்டன.

காஞ்சியில் பல பௌத்த சமய மடங்கள் இருந்தன. யோகப்பள்ளி, ஸ்தாவிரப்பள்ளி, தியானப்பள்ளி முதலிய பள்ளிகள், மகாயான பௌத்த சமயத்தை அறிமுகப்படுத்தின. ஆகையால் காஞ்சியில் சிறப்பு வாய்ந்த புகழ் சூடிய பல பௌத்தமத தத்துவ ஞானிகளும் இருந்தார்கள். திக்நாகாவும், அவருடைய சீடர் தர்மபாலாவும் காஞ்சியில் வாழ்ந்து வந்தார்கள். மற்ற சமய மடங்களுடன் ஒப்பிட்டால் பல்லவ காலத்திலிருந்த பௌத்த சமய மடங்கள் குறைவுதான்.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து தமிழ்நாட்டில் சமண சமயம் வளரத்தொடங்கியது. ஏழாம் நூற்றாண்டில் ஒரு மிகப்பெரிய சமணமடம் இருந்ததாக பெரிய புராணத்தில் கூறப்பட்டிருக்கின்றது. இம்மடத்துடன் பல்லவ மன்னன் முதலாம்

மகேந்திரவர்மனுக்கு நெருங்கிய தொடர்பிருந்திருக்க வேண்டும் என நம்பப்படுகின்றது. இம்மடத்தைச் சேர்ந்த அறிஞர்கள் வரைந்த இலக்கியங்கள், இம்மன்னனை ஈர்த்ததால்தான், மன்னன் சமணசமயத்தைத் தழுவினான். சமணசமய பண்பாட்டின் நிறைவிடமாக பல்லவத் தலைநகரம் நிலவியது; காஞ்சியிலிருந்து இரண்டு மைல்கள் தொலைவில் சமண காஞ்சியிருந்தது. பொதுவாக சித்தன்னவாசல், தேனிமலை, நர்த்தாமலை, திருப்பரங்குன்றம், முத்துப்பட்டி (மதுரை), நாகமலை போன்ற மலை உச்சிகளிலும், கடற்கரை ஓரங்களிலும், ஆற்றங்கரை ஓரங்களிலும் சமணமடங்கள் அமைந்திருந்தன. எளிமையான, ஒழுங்குமுறை நெறியுள்ள வாழ்க்கையை சமணத் துறவியர் பின்பற்றினார்கள். சமண இலக்கியங்களைக் கற்றறிந்து புலமை வாய்ந்தவர்களாகத் திகழ்ந்தார்கள். பொதுவாக சைவர்களோடு விவாதம் செய்வதன் மூலம் காலம் கடத்தினார்கள். சமண இலக்கிய லோகவிபாகாவின் மூலம் பல்லவ காலத்தில் ஒரு பெரிய சமணமடம் இருந்தது என அறியலாம்.

பல்லவர் அரசு ஆட்சி செய்தபோது சைவர்களும், வைணவர்களும் பௌத்த சமயத்தினரும், சமணர்களும் வாழ்ந்து வந்தார்கள். பொதுவாக எல்லா பல்லவமன்னர்களும் சமயப்பொறையைக் கடைப்பிடித்தார்கள். அரசியல் குழப்பங்களோ, அல்லது போர்களோ, பண்பாடு, கலை வளர்வதற்கு வழி மறிப்புகளாக விளங்கவில்லை. ஆகையால் பல சமயங்கள் தோற்றுவித்த ஊக்கத்தால் கலை, கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை முதலியவைகள் சிறப்புடன், போட்டியிட்டுக்கொண்டு, வளர்ந்து புகழோடு தழைத்தோங்கின.

**சமயம், இலக்கியம்**

சமயப்பொறை நிலவிய சங்க காலத்தில் எல்லா சமயத்தினரும் பகைமை, பூசல் இல்லாமல் நட்புறவுடன், அமைதியாக வாழ்ந்து வந்தார்கள். இக்காலத்தில்தான் பௌத்த சமயமும், சமணசமயமும் தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டன. களப்பிரர்கள் காலத்தில் இச்சமயங்கள் தழைத்தோங்கி வளரத்தொடங்கின. கி.பி. ஆறாம் நூற்றாண் டிலிருந்து இந்துசமய மறுமலர்ச்சிக்காலம் தொடங்கியது. பக்தி இயக்கப் பிரிவினரும் வளரத்தொடங்கினார்கள். பல்லவர் காலத்திலும், பாண்டியர்கள், களப்பிரர்களைத் தோற்கடித்தவுடன் தான் பக்தி இயக்கம் மலரத்தொடங்கிற்றெனலாம்.

பல்லவர் ஆட்சிக்காலத்தில் சமயசச்சரவுகள் தோன்றி வளரலாயின. சமணர்களும், பௌத்த சமயத்தினரும் தொடர்ந்து இக்காலத்தில் வாழ்ந்து வந்தார்கள். இந்து சமயப் பிரிவினர்க்கும் இவர்களுக்கும் இடையே பூசல் ஏற்பட்டது. வைணவர்களும், சைவர்களும் ஒருசேரக்கலந்து, இச்சமயப்பிரிவினர்களை எதிர்த்தார்கள். ஆனால் பௌத்தசமயமும், சமணசமயமும், சரிவுச்சாலையில் செல்லத்தொடங்கியவுடன் ஒற்றுமையாக இருந்த வைணவர்களுக்கும் சைவர்களுக்கும் இடையே பிணக்கு, பூசல் வேரூன்றத்தொடங்கின. பொதுவாக இவ்வாறான சூழ்நிலை பல்லவர் காலத்தில் நிலவிற்று.

மன்னன் மகேந்திரவர்மன் சைவர்களைத் துன்புறுத்தினான் என சில வரலாற் றாசிரியர்கள் கூறுகின்றார்கள். மன்னன் சமணசமயத்தைத் தழுவியிருந்தபோது சைவர்களின் தலைவரான அப்பர் பெருமான் மிகுதியாகத் துன்புறுத்தப்பட்டார்.

தனிமுறையில் தாமாகவே சைவர்களை மன்னன் துன்புறுத்தினான் என்ற கூற்றை பல வரலாற்று ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை.

பல்லவர் காலத்தில் சமயவாழ்க்கையில் கோவில்கள் சிறப்பிடம் பெற்றிருந்தன. கோவிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம் என்ற மரபு வழியில்தான் பல்லவ நாட்டு மக்களும் தோன்றியவர்கள். கோவில்களையும், சமயச்சடங்குகளையும், சமய நன்கொடை முறைகளையும் தொடர்ந்து பேணி வளர்த்தார்கள் பல்லவமன்னர்கள். பல புதிய கோவில்களும் எழுப்பப்பட்டன.

எல்லாப்பல்லவ மன்னர்களும் ஒரே சமயத்தைத் தழுவிய மரபினர் எனக் கூற முடியாது. மௌரிய அரசு குடும்பத்தைப்போல் பல்லவ அரச வமிசத்தினரும் ஒவ்வொரு மன்னருக்கும் பிடித்திருந்த சமயத்தைத்தழுவி பேணிவளர்த்தார்கள். தொடக்கத்தில் சமணசமயத்தையும், பௌத்த சமயத்தையும் மகேந்திரவர்மன் பேணிவளர்த்தான். ஆனால் பிறகு மகேந்திரவர்மனின் குடிவழியில் தோன்றிய மற்ற பல்லவ அரசர்கள் இந்துசமயத்திற்கு பேராதரவு அளித்தார்கள். தொடக்கத்தில் சமணராக இருந்த மகேந்திரவர்மன் கூட தனது பிற்காலத்தில் அப்பர் பெருமான் முயற்சியின் மூலம் சைவராக மாறினான். சிம்மவிஷ்னு, நரசிம்மவர்மன், பரமேசுவரவர்மன், நந்திவர்மன் முதலிய பல்லவமன்னர்களின் பெயர்களின் பொருள்களை ஆய்ந்தால் இம்மன்னர்கள் எல்லோரும் இந்து சமயத்தினர் என்றும், ஆனால் இவர்களில் சிலர் வைணவர்களாகவும், சிலர் சைவர்களாகவும் இருந்திருக்க வேண்டும் என அறுதியிட்டுக் கூறலாம். திருமங்கை ஆழ்வாருக்கு ஆதரவு அளித்த இரண்டாம் நந்திவர்மன் வைணவ சமயத்தைப் பின்பற்றினான்; வைகுந்தப்பெருமாள் கோயிலையும் கட்டினான். சிம்மவர்மன் ஒரு தீவிர சைவன் ஆவான்.

பல்லவ அரசு ஆட்சித்தொடக்கத்தில் காபாலிகர்கள், காளாமுகர்கள், பாசுபதர்கள் போன்ற சைவசமயப் பிரிவினரும் இருந்தார்கள். கி.பி. ஆறாம் நூற்றாண்டிலிருந்து இவர்கள் வளர்ச்சியடையத் தொடங்கினார்கள். தீவிர சைவர்களாக இருந்த இவ்வகுப்பினர்களில் சிலர் ருத்ரன் உருவில் அமைந்த சிவபெருமானை வணங்கினார்கள். பைரவருக்கும், காளிக்கும் கள், குருதி முதலிய பொருள்களைப் படைத்து வழிபாடு செய்தார்கள். நரபலியிட்டு தெய்வச் சாந்தி செய்யும் வழக்கத்தையும் பின்பற்றினார்கள். பல்லவ அரசின் பல பகுதிகளில் இப்பழக்கம் நிலவிற்று. மாமல்லபுரம் கோவில்களிலும், காஞ்சியில் உள்ள கோவில்களிலும், துர்கையின் சிலைகளுக்கு சிறப்பிடம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் பல்லவர்கள் காலத்தில் துர்கை வழிபாடு முதன்மையிடம் பெற்றிருந்தது என நம்பலாம்.

ஏழாம் நூற்றாண்டில், பக்தி இயக்கத்தில் ஈடுபாடு கொண்டிருந்த அடியார்கட்கு மக்களின் பேராதரவு கிடைத்தது. சைவசமயத்திற்கு இழுக்கு வராமலும், அச்சமயம் பரவுவதற்கு வேண்டிய முயற்சிகளையும் அப்பர் பெருமானும் சம்பந்தரும் மேற்கொண்டனர். மன்னர் முதலாம் மகேந்திரவர்மன் அளித்த ஆதரவும், இம்முயற்சியின் வெற்றிக்கு அடிகோலாக இருந்தது. இவர்கள் செய்து வந்த சமூக சேவைகளும் இவர்கள் வெற்றிக்குக் காரணமாக விளங்கின. கோயில்களில் தேவாரமும், திருவாசகமும்,

திருவாய்மொழியும், திருப்பாசுரமும் பாடப்பட்டன. இதனைக் கல்வெட்டுக்கள் பாடி விண்ணப்பித்தல் என்கின்றன. மற்ற சமயத்தினரைக் குறைகூறும் முறைகளையும் இத்தெய்வ வழிபாட்டுப் பாடல்களில் காணலாம். தமிழ்நாட்டில் பல இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட உடைந்திருக்கும் பௌத்த, சமண சமயச் சிலைகள் இச்சமயப்பிரிவுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

சாதி, சமயப்பிரிவை எதிர்த்த பக்தி இயக்கத்தினரின் முயற்சியால் எல்லாப் பொது மக்களுக்கும் ஒரே முறையான கடவுள் வழிபாடு செய்ய வாய்ப்புக் கிடைத்தது. மக்கள் புரிந்து கொள்ளும்படியான எளிய பாடல்கள் மூலம் இவ்வகுப்பினர் தெய்வ வழிபாட்டுப் பாடல்களை அமைத்தார்கள். இசை அமைப்பு முறைகளைப் பின்பற்றிப் பாடுவதற்கேற்ப இப்பாடல்களை அமைத்தார்கள். மக்கள் அன்றாட வாழ்க்கையைப் பின்பற்றியே, எல்லோரும் தெளிவான முறையில் அறியும் முறையில் இப்பாடல்கள் எழுதப்பட்டன. ஆகையால் தான் எல்லாப் பொதுமக்களிடையேயும் பக்தி வழிபாட்டு முறை எளிதில் பரவிற்று. நாயன்மார்கள், ஆழ்வார்கள் முதலியவர்களின் சமய வாழ்க்கை முறைகளைப்பற்றியும், சிவபெருமான், விஷ்ணு முதலிய கடவுளரைப் பற்றியும் இப்பாடல்கள் அமைந்தன. அறிஞர்களுக்கும் ஆசிரியர்கள் தத்துவ நூல்களை வழங்கினார்கள். ஆகையால், பொதுமக்களுக்கும் அறிஞர்களுக்கும் ஏற்ப பல முறைகளைப் பயன்படுத்தி பக்தி இயக்கத்தினர் தங்கள் வழிபாட்டு முறையைப் பரப்பினர். காஞ்சியில் பௌத்த துறவிகளும், சமணத் தீர்த்தங்கரர்களும், காபாலிகளும், காளாமுகரும், பாசுபதரும், வைணவரும் இருந்து சமயப் பகை வளர்த்தனர் என்று மகேந்திரவர்மனின் மத்தவிலாசம் கூறுகிறது. இருப்பினும் அவர்களிடையே ஒருவித மனித உறவு இருந்ததையும் நாம் அறிகிறோம்.

## இலக்கியம்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து எழுதப்பட்டு வரும் பெருமை தமிழ் இலக்கியத்திற்குத் தான் உண்டு. சங்ககால நூல்கள் எல்லாம் பொதுவாக சமயத் தொடர்பில்லாமல் சமய நடுவர் முறையைப் பின்பற்றி எழுதப்பட்ட நூல்கள். ஆனால் அதற்குப் பின்தோன்றிய இடைக்கால இலக்கியங்கள் எல்லாம் சமயத்தைத் தழுவியதாகவே இருந்தன.

பல்லவர்கள் காலத்தில் பல சைவ, வைணவ இலக்கியங்கள் வெளியிடப்பட்டன. இதற்கு ஒரு சிறப்பான காரணம் என்னவென்றால் மன்னர்களின் ஆதரவு இச்சமயங்களுக்குக் கிட்டிற்று. தமிழ் இலக்கணங்களும் தொடர்ந்து இயற்றப்பட்டன. புதுப்பாங்கான முறைகளும் எழுதும்போது பின்பற்றப்பட்டன. சிம்மவர்மன், சிம்மவிஷ்ணு, கடுங்கோன் (கி.பி. 575) காலத்திலிருந்து பதினான்காம் நூற்றாண்டு வரை புதுப்பாங்கான முறைகள் கையாளப்பட்டு வந்தன. ஏராளமான பக்திப்பாடல்கள் எழுதப்பட்டன. புலவர்களுக்கு மன்னர்களின் ஆதரவும், அன்பளிப்பும் கிடைத்தன. ஆனால் ஒரு சிலருக்கு அவைப்புலவராக இருக்கும் மதிப்பு அளிக்கப்பட்டது. தவிர சமஸ்கிருத மொழி நூல்களும் இயற்றப்பட்டன. ஒரு சில பௌத்த சமணசமய நூல்களும் வெளியிடப்பட்டன.

முற்காலப் பல்லவ மன்னர்களின் சமஸ்கிருத மொழி வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்றார்கள். அவர்கள் வெளியிட்ட செப்புப் பட்டயங்களில் பிரசஸ்திகள் (Prasasties) எல்லாம் பிராகிருத மொழிக்குப்பின் சமஸ்கிருத மொழியில்தான் எழுதப்பட்டிருந்தன. மன்னர் மகேந்திரவர்மனே சில சமஸ்கிருத மொழி நாடக நூல்களை இய்ற்றினார். மத்தவிலாசப்பிரஹசனம், பாகவதாஜீகம் ஆகிய நூல்களை இயற்றினார். சிம்மவிஷ்ணுவின் அவைப்புலவராகப் பணியாற்றிய புலவர் பாரவி சமஸ்கிருத மொழிப் புலவர்களுள் சிறப்பு வாய்ந்தவர். இவர் எழுதிய நூல்களுள் முதன்மை இடம் பெற்றிருப்பது கிருதார்ஜுனியம் எனும் நூல். மன்னர் இரண்டாம் நரசிம்மன் காலத்தில், பாடல்களின் நுணுக்கங்களைப்பற்றித் தெளிவாக விளக்கும் ஒரு நூலை எழுதிய தண்டின் வாழ்ந்து வந்தார். பொதுவாக காளிதாசர், பாரவி, வராஹமிகிரர் முதலியோர் இயற்றிய நூல்களுக்கு மக்களின் பேராதரவு பல்லவர் காலத்தில் கிடைத்தது. காஞ்சிமா நகரத்தில் பல பஞ்சதந்திரக் கதைகளும், புராண இதிகாசக் கதைகளும் இயற்றப்பட்டன. வடமொழி இலக்கியங்கள் காஞ்சி வழி தமிழகமெங்கும் பரவின. பல்லவர் காலத்தில் தென் இந்தியாவிலேயே புகழ் ஓங்கியிருந்த பல்கலைக் கழகம் காஞ்சிமாநகர் பல்கலைக் கழகமாகும். சமஸ்கிருத மொழிக்கு ஊக்கம் அளித்து அம்மொழி தழைத்தோங்க உறுதுணையாக இருந்த பெருமை இப்பல்கலைக் கழகத்தைச் சார்ந்தது. இதனைக் காஞ்சிக்கடிகா என்பர். நியாயபாஷ்யா எனும் நூலை இயற்றிய தர்க்க வல்லூநர் வாத்சாயனர் நான்காம் நூற்றாண்டில் காஞ்சியில் பயின்ற அறிஞராவார். தென் இந்தியாவில் சமஸ்கிருத மொழி பரவுவதற்கு சிறப்பாகக் காரணமாக இருந்த பெருமை காஞ்சியைச் சாரும். கதம்ப குலத்தைச் சேர்ந்த மூயரவர்மன் மேல்படிப்பிற்காக காஞ்சிக்குத்தான் வந்தான். நாளந்தாப் பல்கலைக் கழகத்தின் உயர்பதவிக்குரிய (துணைவேந்தர்) தர்மபாலர் காஞ்சிக்கடிகாவில் பயின்று பட்டம் பெற்றவர். தண்டின் என்பவர் தண்டியலங்காரம் வரைந்ததும், தசகுமார சரிதம் வரைந்ததும் இங்குதான்.

அப்பர், சம்பந்தர், சுந்தரர் முதலிய நாயன்மார்கள் பல்லவர்கள் காலத்தில் வாழ்ந்து வந்தார்கள். ஆனால் இவர்கள் இயற்றிய பக்திப்பாடல்கள் முதலாம் இராசராசன் காலத்தில் தான் ஏழு திருமுறைகளாக நம்பி ஆண்டார் நம்பியால் தொகுக்கப்பட்டன. இத்திருமுறைகளைத்தான் தேவாரம் என அழைக்கிறோம். முதல் மூன்று திருமுறைகளில் சம்பந்தர் இயற்றிய பாடல்களும், ஏழாவது திருமுறையில் சுந்தரர் இயற்றிய பாடல்களும், மிஞ்சிய திருமுறைகளில் அப்பர் இயற்றிய பாடல்களும் தொகுக்க்ப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்நாயன்மார்கள் இயற்றிய எல்லாப்பாடல்களும் நம்பிஆண்டார் நம்பியால் தொகுக்கப்படவில்லை. அவர்களால் இயற்றப்பட்ட பல பாடல்கள் நமக்குக் கிடைக்கவில்லை. தமிழ் நாட்டில் சைவ சமய வளர்ச்சிக்கு அடித்தளமாக விளங்கிய பெருமை தேவாரத்திற்குத்தான் உண்டு.

பொய்கை ஆழ்வார் சற்று முன் வாழ்ந்ததாகக் கருதப்படுகிறது. பொய்கையார் என்பார் இவரென்றால் இவர் கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்திருக்கவேண்டும். ஆனால் போதிய சான்றுகள்கொண்டு இதனை நிறுவ இயலவில்லை. திருமங்கை ஆழ்வார் போன்ற சிறப்புவாய்ந்த ஆழ்வார்களும் பல்லவர் காலத்தில் வாழ்ந்து வந்தார்கள். நாதமுனி என்பவர் அவர்களால் இயற்றப்பட்ட பாடல்களையும் தொகுத்து நாலாயிர திவ்வியப் பிரபந்தம் எனும் தொகுப்பு நுலை வெளியிட்டார். வேதங்களுக்குச் சமமாக இந்நூல் கருதப்படுகின்றது.

சமயக்கண்ணோடு எழுதப்பட்ட நூல்களைத்தவிர, சமயத்தொடர்பில்லாத சில நூல்களும் பல்லவர் காலத்தில் வெளியிடப்பட்டன. இவைகளில் சிறப்பிடம் பெற்றிருக்கும் நூல்கள் நந்திக்கலம்பகம், கலிங்கத்துப்பரணி ஆகும். நந்திக்கலம்பகம் பல்லவர்கள் காலத்தில் இயற்றப்பட்ட நூல்; கலிங்கத்துப்பரணி சோழர்கள் காலத்தில் வெளியிடப்பட்ட இலக்கியம் ஆகும். நந்திக்கலம்பகம் மூன்றாம் நந்திவர்மனின் சிறப்புகளைக் கூறவல்லது. இந்நூல்மூலம் அவன் 'தெள்ளாறெறிந்த நந்திப்போத்தரையன்' என்று அறியப்பட்ட செய்தி விளங்கும்.

மேலும் இவர்களுடைய காலத்தில் கல்லெழுத்துக்கலை சிறந்து விளங்கிற்று. மகேந்திரவர்மனின் கல்லெழுத்துக்கள் வடமொழி, தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பெரிதும் ஆதரவாய் நின்றன. செப்புப் பட்டயங்கள்மூலம் அவர்கள் அக்கலையையும் ஆதரித்தனர்.

## கலையும், கட்டடக்கலையும்

தென் இந்திய பேரரசுகளுக்குள் பல்லவப் பேரரசுதான் முதன் முதலாகவும் சிறப்பாகவும் கட்டடக்கலை வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்றது; மேலும் திராவிட கட்டடக்கலை முறையின் கருவூலமாகவும் பிறப்பிடமாகவும் விளங்கியது என பெர்சி பிரவுன் என்பவர் கூறுகின்றார். பல்லவ அரசு அமைப்பதற்கு முன்னும் குறிப்பாக கி.பி. 550ஆம் ஆண்டிற்கு முன் மரம், செங்கல், சுண்ணாம்பு, சாந்து, உலோகம் முதலிய பொருள்களைப் பயன்படுத்தித்தான் கட்டிடங்கள் அமைக்கப்பட்டன. வெங்கடரமணய்யா கூற்றுப்படி பல்லவர்கள் காலத்தில் திராவிடக் கலையும், பௌத்தப்பாணியும் இணைந்த விமானப்பாணி எழுந்தது. இது பெரும்பாலும் பௌத்த சமயத்தின் செல்வாக்கைத் திராவிடக்கலை ஏற்றுக்கொண்டதைக் குறிக்கும்.

தென் இந்தியக் கலை, கட்டிடக்கலை வரலாறு பல்லவர் காலத்திலிருந்து தான் தொடங்கியது. திராவிடமுறை எனும் ஓர் புதிய கட்டடக்கலை முறையைப் பல்லவர்கள் அறிமுகப்படுத்தினார்கள். குகைக் கோவில்களையும், கட்டட அமைப்புடைய கற்கோவில்களையும் பல்லவர்கள் எழுப்பினார்கள். பல்லவர்கால கட்டடக்கலையை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம் : (அ) மண்டபங்கள் அல்லது ஒற்றைக் கல்லால் குடையப்பட்ட ரதங்கள் அடங்கிய கி.பி. 610ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 690ஆம் ஆண்டு வரை கட்டப்பட்ட கோவில்கள்; மேலும் (ஆ) கோவில்கள் உட்பட, கட்டட அமைப்புடைய கட்டிடங்கள்; இவைகள் கி.பி. 690ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 900ஆம் ஆண்டு வரை உள்ள இடைக்காலத்தில் எழுப்பப்பட்டன.

பல்லவர்கள் காலத்தின் தொடக்கத்திலிருந்துதான் தமிழ்நாட்டு வரலாற்றில் முதன்முதலாகக் கட்டடக்கலை அறிமுகப்படுத்தப்பட்டது. இதை அறிமுகப்படுத்திய பெருமை முதலாம் மகேந்திரவர்மனைச் சார்ந்தது. இதே சமயத்தில் தமிழ்நாட்டின் தென்பகுதியில் ஆட்சி செய்து வந்த பாண்டியர்களும் பாறைகளைக் குடைந்தெடுத்து, கட்டிடங்களை எழுப்பத் தொடங்கினார்கள். மகேந்திரவர்மன் எழுப்பிய குடைவரைக் கோவில்கள் எளிதாக இருந்தன; மிகுதியான அணிவேலைப்பாடுகளும், அலங்காரமும் கிடையா. மரம், சாந்து, சுண்ணாம்பு, உலோகம், செங்கல் முதலிய பொருள்கள் இக்கோவில்கள் எழுப்புவதற்குப் பயன்படுத்தப்படவில்லை. இதனை அவனுடைய

மண்டகப்பட்டுக் கல்வெட்டு விளக்கும். இக்கோவில்கள் மண்டபங்கள் என அழைக்கப்பட்டன. சதுரத்தூண்களின் உதவியுடன் நிற்கும், இக்கூடார மண்டபங்களின் பின்புறம் குகை தனிமாடம் அடங்கிய ஓர் மன்றம் இருக்கிறது. இம்மண்டபங்களைப் பாறைகளைக் குடைந்தெடுத்து எழுப்பியிருக்கின்றார்கள். முதன்முதலாக இம்மாதிரியான குகை மண்டபங்கள் மண்டகப்பட்டிலும் திருச்சிராப்பள்ளியிலும் கட்டப்பட்டன. பல்லவர்கள் சதுரத் தூண்களைப் பயன்படுத்திய முறை வேறுவிதமாக இருப்பதால் அம்முறையைப் பல்லவமுறை என அழைக்கலாம். சதுரத்தூணின் உப்பீடம் எனும் அடித்தளத்தில் ஓர் சிங்கத்தின் உருவம் செதுக்கப்பட்டிருக்கிறது. தூணின் மேல்பக்கத்திலும் ஓர் சிங்கத்தின் உருவம் செதுக்கப்பட்டிருக்கிறது. சிங்க உருவம், பல்லவர்களின், குறிப்பாகச் சிம்மவிஷ்ணு வழி மரபில் தோன்றிய பல்லவர்களின் அரசுச் சின்னமாகப் பயன்படுத்தப்பட்டது.

ஒற்றைக் கல்லில் செதுக்கப்பட்ட கோவில்களுக்கு இரதம் எனும் பெயரிடப்பட்டது. மிகுதியான அளவில் இவைகள் முதலாம் நரசிம்மவர்மன் காலத்தில் செதுக்கப்பட்டன. பலவிதமான இரதங்களை இம்மன்னன் எழுப்பினான். பாலாற்றின் வாயிலின் அருகேயுள்ள, கடலால் சூழப்பட்ட துறைமுகப்பட்டினமான மாமல்லபுரத்திலே (மகாபலிபுரம்) நரசிம்மவர்மனால் எழுப்பப்பட்ட எல்லாவிதமான இரதங்களையும் நாம் காணலாம். 100 அடி உயரமும், தெற்கிலிருந்து வடக்காக அரைமைல் தூரமும் இரண்டு பர்லாங் அகலமுள்ள பெரிய கருங்கல்லையும், தெற்கு நோக்கிச்செல்லும் சிறுகருங்கல்லையும்தான் கட்டடக்கலை நிபுணர்கள் இக்கோவில்கள் கட்டுவதற்குப் பயன்படுத்தினார்கள். வெறும் துறைமுகமாக விளங்கிய மாமல்லபுரம் பல்லவர்களின் முயற்சியால் கலை கட்டடக்கலைக் கூடமாக மாறியது. இங்குள்ள கடற்கரைக்கோவில் எல்லோராலும் மிகவும் புகழப்படுகின்றது. ஜோவோதுப்ரயில், பெர்சிபுரவுன், பெர்கூசன் போன்ற கட்டடக்கலை ஆராய்ச்சி வல்லுநர்கள் மாமல்லபுரத்தைப் புகழ்ந்து எழுதியிருக்கின்றார்கள்.

இரதங்களிலே பல வகைகள் உண்டு. இதில் மற்றொரு வகை மகாபலிபுரத்திலுள்ள ஏழு விகாரம் (Seven Pagodas) என்று அழைக்கப்படும் இரதங்கள் ஆகும். மரத்தினால் சமயக் கண்ணோட்டு அக்காலக்கோவில்களின் அமைப்பில் இவை கட்டப்பட்டன. இக்கோவில்கள் முழுவதுமாகக் கட்டப்படவில்லை. இக்கோவில்களின் உட்பகுதி நிறைவுறவில்லை. பஞ்சபாண்டவர்களான தர்மன், பீமன், அர்ஜுனன், சகாதேவன், நகுலன், மேலும் திரௌபதி ஆகியவர்களின் பெயர்களால் இந்த இரதங்கள் அழைக்கப்படுகின்றன. ஓர் பெரும் கருங்கல்லைப் பயன்படுத்தி ஒவ்வொரு இரதமும் குடையப்பட்டிருக்கின்றது. பொதுவாக ஒவ்வொரு இரதமும் 42 அடி நீளமும் 35 அடி அகலமும் 40 அடி உயரமும் உள்ளது. திரௌபதி இரதம் ஓர் குகையின் அமைப்பை ஒத்திருக்கின்றது; இதன் அடித்தளத்தில் மிருகங்களின் உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. ஓர் சிங்கமும், பிறகு யானையும் அடுத்தடுத்து செதுக்கப்பட்டிருக்கின்றன. மற்ற இரதங்கள் எல்லாம் விகாரங்கள் அல்லது சைத்யங்களின் உருவை ஒத்திருக்கின்றது. கூம்பு வடிவுடையது. இதன் நடுப்பகுதியில் ஒரு சிறு சதுர மன்றம் அமைந்திருக்கின்றது; அதன் அடிப்பகுதியில் சதுரத்தூண்கள் உதவியுடன் நிற்கும் தாழ்வாரங்கள், அல்லது ஓட்டுத் திண்ணைகள் இருக்கின்றன. இதன் மேற்பகுதி கூம்பு வடிவுடைய சிகரம். இதன்

கட்டிடப் பகுதிகளின் உறுதியான வார்ப்படங்களைக் காணலாம். சிங்க உருவங்கள் பொறிக்கப்பட்ட சதுரத்தூண்கள் தாங்கிய புகு மண்டபங்கள் இத்தர்மன் இரதத்தின் அழகை மேம்படுத்துகின்றன. அருமையான சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த கலைக் களஞ்சியம் என இதைக் கூறலாம்.

பீமன், சகாதேவன், விநாயகர் இரதங்கள் சைத்யங்களின் உருவை ஒத்திருக்கின்றன. நீண்ட சதுரமாக உள்ள இக்கோவில்கள் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட அடுக்குகள் உள்ளதாகவும், கனை முக்கோண் சுவர்கள் அடங்கிய உருள் தொட்டி கூரை உள்ளதாகவும் இருக்கின்றது. சகாதேவன் திருக்கோயில் கவிகைக் கூரையுள்ள, அரை வட்ட வடிவம் உடையது (apsidal). இக்கட்டடக்கலை முறையைப் பிற்காலப் பல்லவர்களும், முற்காலச் சோழர்களும் பின்பற்றினார்கள். சதுரத்தூண்கள் தாங்கும் ஒரு புகுமண்டபம்மூலம் விநாயகர் இரதத்துள் நுழையலாம். பொதுவாக இந்த இரதங்கள் எல்லாம் இந்து சமயத்தைச் சார்ந்தனவாக இருந்தன; இவைகளில் செதுக்கப்பட்டிருந்த உருவங்கள் எல்லாம் உறுதியானதாக இருக்கின்றன. செதுக்கப்பட்டிருக்கும் மனித, கடவுள் உருவங்கள் பொலிவும், மெருகும் உடையனவாய் இருக்கின்றன; மிருகங்களின் உருவங்கள் சிறப்பான அழகுருவங்களாக இருக்கின்றன. இக்கடவுள்களுக்கு நான்கு கைகளும், துவாரபாலர்களுக்கு இரண்டு கைகளும் இருக்கின்றன. ஆனால் இந்த இரதங்கள் எல்லாம் நிறைவு பெறாத கட்டிடங்களாகத்தான் இருக்கின்றன.

அர்ஜுனன் தவம் அல்லது கங்கை கீழே தாவி வருதல் போன்ற சிற்பங்கள் சிறப்பான கலை அழகுடையனவாக இருக்கின்றன. வன்புடைப்பியலுள்ள மிகப்பெரிய இச்சிற்பங்கள் 30 கஜங்கள் நீளமும், 23 அடி உயரமும் உள்ள பாறையில் செதுக்கப்பட்டுள்ளது. இப்பாறையின் நடுப்பகுதி இடைச்சந்து பிளவுகளில் ஓர் அருவி ஓடுகின்றது. இவ்வருவியில் நாகர்களும், நாககன்னிகைகளும் விளையாடுகின்றார்கள். இருபுறங்களிலும் கடவுள், மனித மிருக உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் சில உருவங்கள் பயபக்தியுடன் பார்ப்பது போல அமைந்துள்ளன. இவைகளைக் கல்லில் செதுக்கப்பட்ட சுவர் ஓவியங்கள் எனக் கூறலாம்.

அருவியின் இடது புறத்தில் நின்ற கோலத்தில் சிவபெருமானின் கோவில் உள்ளது. இக்கோவிலின் முன் தலை வணங்கி நிற்கும் பகிரதன் உருவம் இருக்கிறது. கைகளை உயர்த்தி இப்பகீரதன் தவம் செய்கிறான். வலப்புறப் பகுதியில் யானைகளும், ஒரு சாமியார், பூனையும், இரு புள்ளிமான்களும் ஒரு குரங்கு குடும்பமும் உயிருள்ள உருவங்கள்போல செதுக்கப்பட்டிருக்கின்றன.

கட்டிட அமைப்புடைய கோவில்களை (1) இராசசிம்மன் காலத்தவை (கி.பி. 700-800); (2) நந்திவர்மன் காலத்தவை (800-900) என இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். இராசசிம்மன் என்று அழைக்கப்படும் இரண்டாம் நரசிம்மன் கற்களைப் பயன்படுத்தி கோவில்கள் கட்டினான். இராசசிம்மன் காலத்தைச் சேர்ந்த கோயில்கள் ஆறு ஆகும். இவைகளில் கடற்கரைக்கோயில், ஈசுவரன் கோயில், முகுந்தன் கோயில் முதலிய மூன்று கோயில்கள் மகாபலிபுரத்திலும், பனமலைக்கோயில் தென் ஆற்காடு மாவட்டத்திலும், கைலாசநாதர், வைகுந்தப்பெருமாள் கோயில்கள் காஞ்சியிலும் இருக்கின்றன.

கி.பி. 900ஆம் ஆண்டளவில் தோன்றியவை அபராஜிதன் காலத்தவை. இவை தோன்றிய பிறகு லிங்கங்கள் வட்டுருவான அமைப்புப்பெற்றன. சதுரத்தூண்களின் மேற்பகுதியில் உள்ள மணிச்சட்டத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இம்முறையைப் பிற்காலச் சோழர்கள் பின்பற்றினர். பல்லவர்களது பாஹுர் கோவில் இம்முறையில் அமைந்தது.

பொதுவாக கி.பி. ஆறாம் நூற்றாண்டிலிருந்து பத்தாம் நூற்றாண்டு வரை வளர்ந்த தமிழ்நாட்டுக் கலையும், கட்டடக்கலையும் சமய எண்ணங்களோடு ஒருங்கிணைந்ததாக இருந்தன. பொதுவாக அரசு ஆதரவு இவைகளின் வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்றது. மற்ற வெளிநாட்டுக்கலை முறைகளின் மூலம் சில மாற்றங்கள் ஏற்பட்டபோதிலும், திராவிட கலைப் பண்பாடு சிறிதளவுகூட மாற்றப்படவில்லை.

சித்திரக்கலை வேலைப்பாடுகளிலும் தமிழர்களுக்கு பண்டைய காலத்திலிருந்து ஆர்வமும் திறமையும் இருந்தது. ஆனால் பழங்கால முகப்பு மண்டபம், உயர்ந்த மேடை பொருந்திய சிங்கச் சின்னங்கள் உடைய சதுரத்தூண்கள் முதலியவை ஆகும். இதன் அடித்தளம் கருங்கல்லால் கட்டப்பட்டது; ஆனால் இதன் உடற்பாகம் மணற்பாறையால் கட்டப்பட்டது.

பல்லவ கட்டிடங்களில் முழுமுதிர்ச்சி பெற்றது வைகுந்தப் பெருமாள் கோயில். இதன் கர்ப்பக்கிரகம் சதுரவடிவில் உள்ளது. 60 அடி உள்ள இதன் விமானமும் சதுரவடிவில் உள்ளது. மூன்று அடுக்குகள் உள்ளதாகவும் இருக்கின்றது.

நந்திவர்மன் காலத்தைச் சேர்ந்த கோவில்கள் எல்லாம் சிறிய கோவில்கள். ஆனால் இவைகள் வேலைப்பாடுகளில் இராசசிம்மன் பிரிவினைவிட உயர்ந்ததாக இல்லை. உதாரணமாகக் காஞ்சியில் உள்ள முக்தேசுவரர், மாதங்கேசுவரர் கோவில்களும், செங்கல் பட்டுக்கு அருகேயுள்ள ஓரகடத்திலுள்ள வாடாமல்லீசுவரர் கோவிலும், அரக்கோணத் திற்கு அருகாமையிலுள்ள திருத்தணியில் உள்ள வீரத்தானேசுவரர் கோவிலும், ரேனிகுண்டாவிற்கு அருகிலுள்ள கூடிமல்லத்தில் உள்ள பரசுராமேசுவரர் கோவிலும் நந்திவர்மன் காலத்தைச் சேர்ந்த கோவில்கள். சகாதேவர் இரதத்தின் அமைப்பினைப் போல் இதில் நான்கு கோவில்கள் கவிதைக் கூரையுள்ள, அரைவட்டவடிவம் உள்ளதாக இருக்கின்றன. மற்ற இரண்டு கோவில்களில் நுழையும் இடத்தில் இரு சதுரத்தூண்களில் தாங்கப்பட்டப் புகுமுக மண்டபங்கள் இருக்கின்றது.

இந்த ஆறுகோவில்களில் மிகவும் பழமையானது கடற்கரைக்கோவில். பல நூறு ஆண்டுகள் கடல் அலை அரிப்பினாலும், கடற்காற்று புயல் முதலியவைகளின் தாண்டவத்தினாலும், இடப்பெயர்ச்சி செய்யும் மணலாலும் இக்கோவில் வெகுவாகப் பாதிக்கப்படாததால் இக்கோவில் திறமையுடன் கட்டப்பட்டிருக்கிறது எனத்தெரிகின்றது. தர்மராசன் இரதத்தின் அமைப்பைவிட திருத்தம் செய்யப்பட்ட சிறந்த அமைப்புடையது இக்கோவில். தர்மராசன்கோவில் குடைவரைக்கோவில். ஆனால் கடற்கரைக்கோவில் கட்டிட அமைப்புடைய கலைக்கண்ணோடு கட்டப்பட்ட கோவில். கடற்கரைக் கோவிலின் விமானங்கள் எளிய அமைப்புடையனவாக இருக்கின்றன. சதுரத்தூண்களில்

செதுக்கப்பட்டுள்ள சிங்க உருவங்களின், கலைப்பண்பு முதிர்ச்சி அடைந்து மலர்ச்சியுற்றிருக்கின்றது. இக்கட்டிடத்தின் அடிப்பகுதியின் இடைவெளிகளுக்கிடையேயும் இச்சிங்க உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன.

பல்லவ கோவில்களுக்குள் மிகப் பெரிய கோவில் காஞ்சியில் உள்ள கைலாசநாதர் கோவில். இக்கோவிலின் சிறப்பு பாகங்கள் கூம்பு வடிவுடைய தலைப்பாகம், சதுரதூண்கள் தாங்கிய சமதள கூரையுடைய கூடார மண்டபம், கட்டிடங்கள் மறைந்ததால் அக்கட்டிடங்களிலிருந்த சித்திரங்களும் மறைந்துவிட்டன. ஒரு சில பல்லவர், சோழர் சித்திரங்கள்தான் கிடைத்திருக்கின்றன. காஞ்சியிலுள்ள கைலாசநாதர் பிரகாரத்தில் சில பல்லவர்காலச் சித்திரங்களைக் காணலாம். சித்தன்னவாசல் குடைவரைக்கோவிலிலும், குடுமியான்மலைக் குடைவரைக்கோவிலிலும்கூட அக்கோவில்களின் மேல்கூரைப் பகுதியில் சில பல்லவர்க்காலச் சித்திரங்களைக் காணலாம். பல்லவர்களுக்கு இசையின் மேலிருந்த ஈடுபாட்டை, இச்சித்திரங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம். சித்தன்னவாசல் கோவிலில் காணப்படும் அரசனும், அரசியும், மகேந்திரவர்மனும் அவனுடைய இராணியாரும் தான் என சிலர் கருதுகின்றார்கள். இருநடனமாடும் மங்கைகளின் சித்திரங்கள் மகேந்திரவர்மன் பரதநாட்டியக்கலைக்கு அளித்த ஆதரவை எடுத்துக் காட்டுகின்றன என்றும் நம்பப்பட்டது. ஆனால் அண்மைக்கால கண்டுபிடிப்புகள் சித்தன்னவாசல் பாண்டியர்தம் படைப்பென தெரிவிக்கின்றன. குடுமியான் மலையிலுள்ள சங்கீதத்தைப்பற்றி விளக்கும் கல்வெட்டும், மகேந்திரவர்மனுடைய காலத்தைச் சேர்ந்ததாகக் கருதப்படுகின்றது. ஆகையால் தமிழ்நாட்டில் கலையும், கட்டடக்கலையும் வளர்ச்சியடைவதற்குப் பல்லவ அரசு பேராதரவு அளித்தது என்பதில் ஐயமில்லை.

## பயிற்சி வினாக்கள்

1) முதலாம் நரசிம்மவர்மனின் சாதனைகளை விவரிக்க.

2) பல்லவர் ஆட்சிமுறை பற்றி ஒரு கட்டுரை வரைக.

3) பல்லவர்காலத்து சமயம், இலக்கியம் பற்றி விளக்குக.

4) தென்னிந்திய கலை, கட்டடக்கலை வளர்ச்சிக்கு பல்லவர் ஆற்றிய தொண்டினை ஆய்க.

# பாடம் – 8 சோழப் பேரரசர்கள் – சாளுக்கியச் சோழர்கள்

சோழர் வரலாற்றை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம் : (அ) பண்டைய (சங்ககாலம்) சோழர்கள், (ஆ) இடைக்காலச் சோழர்கள் (விசயாலயன் காலம் தொடங்கும் வரை), (இ) பிற்காலச் சோழர்கள் : முற்பகுதி : விசயாலயன் காலத்திலிருந்து, ஆதிராசேந்திர சோழன் ஆட்சிக்காலம் வரை : (ஈ) சாளுக்கிய சோழர்கள். முதல் இருபிரிவு சோழர்களை பண்டைய சோழர்கள் எனவும், இறுதி இரு பிரிவு சோழர்களை பிற்காலச் சோழர்கள் எனவும் நாம் குறிப்பிடுகிறோம். இடைக்காலச் சோழர்கள் வரலாற்றிலே சிறப்பான இடம் பெறவில்லை. மேலும் அவர்களைப் பற்றி மிகுதியான வரலாற்று மூலங்கள் கிடைக்கவில்லை. ஆகையால் அவர்களை வரலாற்றில் ஒதுக்கப்பட்ட சோழர்கள் என அழைத்தாலும் மிகையாகாது.

கி.பி. 880ஆம் ஆண்டிலிருந்து, கி.பி. 1279ஆம் ஆண்டு வரை ஏறக்குறைய நான்கு நூற்றாண்டுகள் தொடர்ந்து பிற்காலச் சோழர்கள் ஆட்சி புரிந்து வந்தார்கள். துங்கபத்திரை — கிருஷ்ணா ஆறுகளுக்குத் தெற்கே தென்னிந்தியா முழுவதிலும் சோழர்களுடைய பேரரசு பரவியிருந்ததெனக் கூறலாம். போர் செய்வதையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டிருந்தனர் சோழர்கள்: ஆகையால் போர்மூலம் உருவாக்கிய பேரரசை, போர் மூலமாகவே இறுதியாக இழக்கவேண்டிய இக்கட்டான நிலை ஏற்பட்டது.

## வரலாற்று மூலங்கள்

பிற்காலச் சோழர்கள் வரலாற்றை வரைவதற்குப் போதுமான ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன. இவற்றுள் முதன்மையான ஆதாரங்கள் சோழர்களின் கல்வெட்டுகளே யாகும். வடக்கில் கோதாவரி ஆறு தொடங்கித் தெற்கில் ஈழ மண்டலம் வரை பரவலாக சோழ கல்வெட்டுகள் கிடைத்துள்ளன.

## கல்வெட்டுகள்

சோழர்காலக் கல்வெட்டுகள் இதுகாறும் ஆயிரக்கணக்கில் கிடைத்துள்ளன. இதுகாறும் கிடைத்துள்ள, சோழ சாசனங்கள் ஏறத்தாழ ஒன்பதாயிரம் எனக் கணக்கிடப் பட்டுள்ளன. நாட்டில் ஆங்காங்கே கிடைக்கின்ற கல்வெட்டுகள் ஒவ்வொன்றும், அவ்வக்கால வரலாற்றுக் குறிப்புகளாக அமைந்துள்ளன. பெரும்பாலான சாசனங்கள் தமிழிலும், ஒரு சில வடமொழியிலும் எழுதப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகள் யாவும் காலத்திற்கேற்பவும் இடத்திற்கேற்பவும் மொழிநடையிலும் எழுத்துவடிவிலும் வேறுபட்டுள்ளன.

அரசர் குடிவழிப்பட்டியல், ஆட்சி செய்த ஆண்டுகள் முதலியவற்றை வரையறை செய்வதற்கு, இக்கல்வெட்டுகள் பெருந்துணையாக உள்ளன. அக்காலத்தில் ஆட்சிமுறை

யும், மேற்கொள்ளப்பட்ட பழக்கவழக்கங்களும் தெளிவுறுகின்றன. பொருளாதாரநிலை, சமூகநிலை, சமயம், கலை, கைத்தொழில் போன்றவற்றையும் அறிந்து கொள்வதற்கு ஏற்ற கருவிகளாக இவை அமைந்துள்ளன.

நிலவரியே அன்றிப் பலவகை வரிகள் பற்றிய அரசாங்க உத்தரவுகள், ஊர்ச்சபை யோரின் பல்வகைத் தீர்மானங்கள், ஊர்ச்சபை அமைப்பு முறைகள், சமூக சச்சரவுகளும் தீர்ப்புகளும் பற்றிய விளக்கங்கள், குற்றங்களுக்கு விதிக்கப்பட்ட தீர்ப்புகள், பெருநிலக்கிழார் (ஜமீன்தார்) போன்றவர்களிடையே ஏற்பட்ட உடன்பாடுகள் போன்ற செய்திகள் கல்வெட்டுகளில் கிடைத்துள்ளன. அவற்றில் கூறப்படும் செய்திகள் முற்றிலும் நம்பக்கூடியனவாகவும் விளக்கமாகவும் உள்ளன எனக் கூறமுடியாது. சாசனங்களை அரசர்களேயன்றி அதிகாரிகளும், தொழில் நிறுவனங்களும், வாணிகக்கழகங்களும், பொதுமக்களும், கிராமச்சபையோரும், தனிப்பட்டோரும் ஏற்படுத்தியுள்ளனர்.

கல்வெட்டுகளுள் ஒரு சிலவே முற்றிலும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தனவாயுள்ளன. தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள், அக்காலத்தில் சைவ சமயம் இருந்த நிலையையும் அது வளர்ந்தோங்கிய வரலாற்றையும் விளக்குகின்றன. முதலாம் பராந்தகனின் உத்தரமேரூர்க் கல்வெட்டுகள் பண்டைய பிரம்மதேய ஊராட்சி முறையை தெளிவுபடுத்துகின்றன. ஊராட்சி முறையின் வளர்ச்சியையும், அதன் நடைமுறை யிலேற்பட்ட சில சிக்கல்களையும் உக்கல் திருச்சேய்ஞ்ஞலூர்க் கல்வெட்டுகள் புலப்படுத்துகின்றன.

முதலாம் இராசராசன் காலம் முதல் இக்கல்வெட்டு அமைப்பு முறையில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. கல்வெட்டின் தொடக்கத்தில் அந்தந்த அரசனுடைய போர், வெற்றி, அவனுடைய முன்னோர்களது சிறப்புகள் முதலியவற்றைக் கூறுகின்ற, 'மெய்க்கீர்த்தி' என்ற பகுதி சேர்க்கப்பட்டது. காலத்தைக் கணக்கிட இக்குறிப்புகள் துணைபுரிகின்றன.

சேர, பாண்டிய மன்னரின் கல்வெட்டுகளில் சில சோழர் வரலாற்றிற்குத் துணை செய்கின்றன. இதுபோலவே தமிழகத்திற்கு வடக்கில் ஆட்சி செய்த சில அரச மரபினரின் கல்வெட்டுக்களும், சோழ வரலாற்றில் சில செய்திகளை உறுதிப்படுத்துகின்றன. அல்லது வேறுபட்ட சிற்சில புதிய செய்திகளைத் தெரிவிக்கின்றன. இதுபோலவே சோழப் பேரரசின் அண்டை நாடுகளில் ஆண்டுவந்த இராட்டிரகூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணனுடைய சாசனங்களும், கீழை கங்கர்கள், கீழை, மேலை சாளுக்கியர்களுடைய சாசனங்களும், சோழப்பேரரசின் தளர்ச்சி காலத்தில் ஆட்சி செய்துவந்த குறுநில மன்னர்களின் கல்வெட்டுகளும், ஹொய்சாளர்கள் சாசனங்களும் துணை புரிகின்றன.

கல்வெட்டுகளன்றியும் செப்பேடுகள், பழங்கால காசுகள், தொல்பொருள் சின்னங்கள், இலக்கியங்கள், அயல் நாட்டார் எழுதி வைத்துள்ள குறிப்புகள், சோழப் பேரரசின் வரலாற்றை அறிய துணை புரிகின்றன. இராசராசப் பேரரசின் லெய்டன் பட்டயம், ஆனை மங்கலச் செப்பேடுகள், முதலாம் இராசேந்திர சோழனின் திருவாலங்காடு பட்டயம், முதலாம் இராசேந்திரனின் கரந்தைச் செப்பேடுகள் ஆகியவை

இச்செப்பேடுகளில் சிறப்பிடம் பெற்றிருக்கின்றன. சமுதாய வரலாறு சமூக நிலை, சோழ மன்னர்களின் பெயர் பட்டியல் மன்னர்கள் அளித்த அறக்கட்டளைகள், இறையிலி நிலங்கள் முதலியவை பற்றி நாம் செப்பேடுகளிலிருந்து அறிந்து கொள்கிறோம்.

கோயில்களும் நினைவு மண்டபங்களும் சோழ வரலாற்றுக் கருவூலங்களாக உள்ளன. இவற்றுள் தஞ்சை பெருவுடையார் கோயில் சிறப்பு வாய்ந்தது. இக்கோயில்கள் சோழப் பேரரசர்களின் கலையுணர்வையும், கற்பனைத்திறனையும் எடுத்துக் காட்டுகின்றன. கோவில்களில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகளும் வரலாற்று ஏடுகளாக உதவுகின்றன. கோயில்களே கல்வி நிலையங்களாகவும், கலைக் கூடங்களாகவும் சமுதாய நிலையங்களாகவும் பணியாற்றி வந்தன என்பதை அங்குள்ள சாசனங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

சோழமன்னர்கள் வெளியிட்ட நாணயங்களும் சோழ வரலாற்றை அறிவதற்கு உதவுகின்றன. விசயாலய சோழனின் வழிவந்த மன்னருள் உத்தம சோழனுடைய ஆட்சிகாலம் தொடங்கி வெளியிடப்பட்டுள்ள பொன், வெள்ளி, செம்பு நாணயங்கள் நமக்குக் கிடைக்கின்றன. இராசராசன் காலத்தில் ஒரு கழஞ்சு எடை உள்ளதும், அரைக் கழஞ்சு எடை உள்ளதுமான இருவகை வெள்ளி நாணயங்கள் வழக்கில் இருந்திருக்கின்றன. அவன் வழங்கிய காசுகள் சிறப்பு வாய்ந்தவை. இவை இருவகைப்பட்டவை. 1) ஈழ மனிதனின் உருவம் பொறிக்கப்பட்டுள்ள ஈழக்காசு; 2) புலி, இணைக்கயல், வில் ஆகிய மூன்று சின்னங்களும் பொறிக்கப்பட்ட மற்றொரு வகை.

இலக்கியமும் சோழ வரலாற்றை அறிய உதவுகின்றது. நம்பியாண்டார் நம்பிகளால் தொகுக்கப்பட்ட சைவத் திருமுறைகள், சேக்கிழாரின் பெரியபுராணம், நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம், புத்தமித்திரரின் வீரசோழியம், ஒட்டக்கூத்தரின் குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ், மூவருலா, சயங்கொண்டாரின் கலிங்கத்துப்பரணி — முதலிய இலக்கியங்கள் இக்காலத்தில் வெளிவந்தன. ஆகையால் சோழர் காலத்தில் இலக்கிய சமய மறுமலர்ச்சி ஏற்பட்டது எனலாம்.

## விசயாலய சோழன் (கி.பி. 846–881)

பல்லவ மன்னர்களுக்கு அடங்கி சிற்றரசனாக ஆட்சி செய்து வந்த குமாராங்குசனின் மகன் விசயாலய சோழன், பிற்கால சோழ அரசுக்கு அடிகோலியவன் ஆவான். தஞ்சையை ஆண்டுவந்த முத்தரைய சிற்றரசர்களைத் தோற்கடித்து முதலில் தஞ்சையைக் கைப்பற்றித் தன் தலைநகராக்கிக்கொண்டான். இம்முத்தரையர் என்பார் இன்றைய தஞ்சை, திருச்சி நகரங்களுக்கு இடைப்பட்ட நாட்டின் பகுதிகளைப் பல்லவர்களுக்கு அடங்கிய குறுநில மன்னராக ஆட்சிபுரிந்து வந்தனர். தஞ்சை வெற்றிக்குப்பின் விசயாலய சோழன் பரகேசரி என்ற பட்டம் புனைந்துகொண்டான். தன்னுடைய வெற்றியின் சின்னமாகத் தஞ்சை நகரில் கொற்றவை என்ற காளிதேவி அல்லது நிஷும்பசூதனிக்கு ஒரு கோவில் எடுத்து வழிபட்டதாக அறிகிறோம்.

விசயாலய சோழனால் தோற்கடிக்கப்பட்ட முத்தரையன் பாண்டிய அரசர் இரண்டாம் வரகுணனின் நண்பன். தன் நண்பன் தோற்கடிக்கப்பட்டதை நோக்கிய பாண்டிய மன்னன் தஞ்சைப் பகுதியை மீட்கும் நோக்குடன் படையெடுத்தான்.

கும்பகோணத்தில் உள்ள இடவைப் பகுதிவரை ஒரு எதிர்ப்பும் இல்லாமல் முன்னேறினான். பாண்டிய மன்னன் போரிடத் தொடங்கியதைக் கண்ட பல்லவ மன்னன் அபராஜிதவர்மன், தன்னுடைய சிற்றரசர்கள் உதவியுடன் கும்பகோணத்திற்கு அருகேயுள்ள திருப்புறம்பியத்தில் கி.பி. 895ஆம் ஆண்டில் பாண்டிய மன்னனை தோற்கடித்தான். விசயாலய சோழனின் மகன் ஆதித்தன் பல்லவ மன்னனுக்கு உறுதுணையாக நின்று இப்போரில் பங்கு கொண்டான். விசயாலய சோழன் உயிருடன் இருந்தபோதிலும், தள்ளாமையின் காரணமாக இப்போரில் பங்கு கொள்ளவில்லை. இப்போரின் வெற்றிக்கு அறிகுறியாக ஆதித்த சோழன் தன் தந்தையின் பெயரால் விசயாலய சோழீச்சுவரம் எனும் கோயிலை எழுப்பித்ததாகத் தெரிகிறது.

இத்திரும்புறம்பியப்போரின் விளைவாக பல்லவ, பாண்டிய அரசர்கள் வலிமை குன்றியவராயினர். சோழர் பேரரசர்களாகி சோழ மண்டலம் முழுவதையும் ஆளும் பேறு பெற்றனர். எனவே இப்போர் சோழப் பேரரசின் வரலாற்றில் திருப்புமுனையாகவும் அமைந்துவிட்டது. இதன் விளைவாக கி.பி. 895ஆம் ஆண்டில் பிற்காலச் சோழப் பேரரசு தோன்றியதென்பதும் நினைவு கூர்தற்குரியதாகும்.

விசயாலயன் ஏறத்தாழ முப்பத்தைந்தாண்டுகள் ஆட்சி செய்திருக்கலாமெனத் தெரிகின்றது. எனினும் இவனுடைய நீண்ட ஆட்சிக் காலத்தில் நடந்தவற்றை அறிந்துகொள்வதற்கான வரலாற்று மூலங்கள் இல்லை.

## முதலாம் ஆதித்த சோழன் கி.பி. (871–907)

திருப்புறம்பியப் போரில் ஆதித்தன் தனக்கு உதவிசெய்து பெரும் வெற்றிபெறச் செய்தமையால், அபராஜித பல்லவன் ஆதித்தனின் போர்த்திறனை மெச்சி, தஞ்சைப் பகுதியையும் இன்னும் சில இடங்களையும் அவனே ஆண்டுவரும்படி செய்திருந்தான்.

ஆனால் சிற்றரசனாக இருக்க விரும்பாத ஆதித்தன் பல்லவ மன்னனாகிய அபராஜிதவர்மனைத் தோற்கடித்து, தொண்டைமண்டலத்தைக் கைப்பற்றினான் என திருவாலங்காட்டுச் செப்பேடுகள் கூறுகின்றன. அபராஜித பல்லவன் யானை மீது அமர்ந்து போர் செய்தபொழுது, ஆதித்த சோழன் அவனைக் கொன்று வெற்றி எய்தினான் என்று கன்னியாகுமரிச் செப்பேடுகள் கூறுகின்றன. அபராஜித பல்லவனுக்குப் பிறகு சோழ மண்டலமும், தொண்டை மண்டலமும் ஆதித்த சோழனுடைய ஆட்சியின் கீழ் வந்தன.

'கொங்கு தேச ராசாக்கள்' என்ற வரலாற்று நூல், இவ்வாதித்தன் கொங்கு நாட்டை வென்றமையைக் குறிக்கின்றது. நம்பியாண்டார் நம்பியின் நூலும், இச்செய்தியை உறுதிப்படுத்துகின்றது. சேர நாட்டு மன்னன் ஸ்தாணுரவியுடன் நட்புகொண்டு, அவனுடைய உதவியுடன் மேலைக்கங்கரின் நாடாகிய கங்கபாடியின் சில பகுதிகளையும் ஆதித்தன் கைப்பற்றினான். மேலும் திருமண உறவுமூலமும் தன் ஆட்சியை ஆதித்தன் வலுப்படுத்தினான். இராட்டிரகூட அரசன் இரண்டாம் கிருஷ்ணனுடைய மகள் இளங்கோப்பிச்சியையும், பல்லவகுல இளவரசி திரிபுவனமாதேவியையும் மணந்து கொண்டான்.

சோழப் பேரரசுக்கு வழிவகுத்த ஆதித்தன் பிற்காலத்தில் சமயத்தொண்டில் ஈடுபட்டான். திரும்புறம்பியத்தில் அமைந்திருக்கும் ஆதித்தேச்சுரம் என்னும் திருக் கோவிலும், திருவெறும்பியூரில் உள்ள கோவிலும் இவன் காலத்தில் கட்டப்பட்டவை. தில்லையில் உள்ள திருக்கோயிலை பொன்வேய்ந்து பொன்னம்பலமாக்கினான். இவன் காலத்திற்கு முன்னிருந்த கோயில்கள் பலவும் செங்கற்கோயில்களாகவே இருந்தமையின் இவன் அவற்றை கற்றளிகளாயமைக்கும் பணியில் ஈடுபட்டான்.

## முதலாம் பராந்தக சோழன் (கி.பி. 907–955)

ஆதித்த சோழனுக்குப்பிறகு அவன் மகன் முதற்பராந்தக சோழன் பரகேசரி என்னும் பட்டத்தை சூட்டிக்கொண்டு ஆட்சி மேற்கொண்டான். இவன் ஆட்சி தொடக்கத்தில் வடக்கேயுள்ள திருக்காளத்தி வரையில் இருந்தது. தொண்டை மண்டலம் சோழ அரசு ஆட்சிக்குட்பட்டிருந்தது. இவனுடைய மூன்றாம் ஆண்டில் தோன்றிய கல்வெட்டுக்கள் இவன் பாண்டிய நாட்டை வென்ற காரணத்தால், “மதுரை கொண்டான்” என இவனைப் புகழ்கின்றன. கி.பி. 919ஆம் ஆண்டில் வெல்லூர் என்னுமிடத்தில் பாண்டிய அரசன் இரண்டாம் இராசசிம்மன் என்பானையும், அவனுக்கு உதவியாக வந்த ஈழநாட்டுப் படைகளையும் தோற்கடித்தான். இதன் காரணமாக ‘மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரிவர்மன்’ என்றழைக்கப்பெற்றான். இவன் இராட்டிரகூட மன்னனை வென்றதனால் ‘வீரசோழன்’ என்னும் பெயர் பெற்றதாக கன்னியாகுமரிக் கல்வெட்டு கூறுகிறது.

ஈழ அரசனிடம் பாண்டியன் ஒப்படைத்திருந்த மணிமுடியும் ஆரமும் கைப்பற்றும் நோக்குடன் பராந்தகசோழன் ஈழ நாட்டின் மீது படையெடுத்து வெற்றிவாகை சூடினான். ஆனால் பாண்டிய அரசனுடைய அரசு சின்னங்களைப் பெறாமல் திரும்ப வேண்டியதாயிற்று. இவ்வெற்றியின் காரணமாக ‘மதுரையும் ஈழமும் கொண்டவன்’ எனப் புகழப்படுகிறான். கலிங்கத்துப்பரணியும், மூவருலாவும் பராந்தக சோழன் மதுரையையும் இலங்கையையும் வென்றதைக் குறிப்பிடுகின்றன.

இவன் இராட்டிரகூடர்களுடன் மூன்று முறை போர்புரிய நேர்ந்தது. மூன்றாம் போரின் விளைவாக சோழ அரசின் வலிமையும் மதிப்பும் குறைந்தது. முதல் போர் கி.பி. 910-11ஆம் ஆண்டில் பராந்தக சோழனுக்கும் இராட்டிரகூடமன்னன் இரண்டாம் கிருஷ்ணனுக்கும் நடந்தது. பராந்தக சோழனுடைய தம்பி கன்னரதேவன் இரண்டாம் கிருஷ்ணனுடைய சகோதரியின் மகனானதால், க்ன்னரதேவனை சோழ அரசனாக நியமிக்க வேண்டும் என்னும் நோக்குடன்தான் இரண்டாம் கிருஷ்ணன் சோழ அரசின்மீது படையெடுத்தான். ஆனால் இவன் எண்ணம் நிறைவேறவில்லை. போரில் பராந்தகசோழன் வெற்றிவாகை சூடினான். மேலும் இராட்டிரக்கூட அரசனுக்குத் துணையாக நின்று போர்புரிந்த பாணர்குலத் தலைவனாகிய இரண்டாம் விக்கிரமாதித்த னையும், வைத்தும்பர் தலைவனையும் தண்டிக்க விரும்பி, அவர்கள் நாட்டின்மீது படையெடுத்து பெரும்பாணப்பாடி நாட்டையும், வைத்தும்பர் ஆட்சி செய்த ஆந்திரப் பிரதேசத்தையும் பராந்தகசோழன் கைப்பற்றினான்.

பராந்தகசோழனின் இராட்டிரகூட இரண்டாம் போர் கி.பி. 940ஆம் ஆண்டில் நடந்தது. இராட்டிரகூட மூன்றாம் அமோகவர்மனால் துரத்தி அடிக்கப்பட்டவனும், இராட்டிரகூட முன்னாள் அரசனுமாயிருந்த தன் மருமகன் நான்காம் கோவிந்தனை மீண்டும் மானியகேடத்தில் அரசனாக அமர்த்த வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் பராந்தக சோழன் இராட்டிரகூட நாட்டின் மீது படையெடுத்தான்.

இதனை மனத்தில் கொண்டிருந்த அமோகவர்சனின் மகனான இராட்டிரகூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணன் தொடர்ந்து தன்படை வலிமையைப் பெருக்கிக்கொண்டு வந்தான். படைவலிமை பெருகியவுடன் கி.பி. 949ஆம் ஆண்டில் அவன் சோழநாட்டின் மேல் படையெடுத்தான். பாணர்களும், வைத்தும்பர்களும், கங்கர்குல அரசன் இரண்டாம் பூதுகனும், மூன்றாம் கிருஷ்ணனுக்கு உதவி புரிந்தனர். வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள அரக்கோணத்திற்கு தென் கிழக்கில் ஆறுமைல் தூரத்திலுள்ள தக்கோலம் என்னுமிடத்தில் இருபடைகளும் கடும் போர்புரிந்தன. போரில் மூன்றாம் கிருஷ்ணதேவன் வெற்றி பெற்றான். இப்போரில் பராந்தகன் தம் மகன் இராஜாதித்தியனை இழந்தான். இப்போர் நிகழ்ச்சி ஆனைமங்கலச் செப்பேடுகளிலும், திருவாலங்காட்டுச் செப்பேடுகளிலும் கூறப்பட்டுள்ளது.

வெற்றியெய்திய மூன்றாம் கிருஷ்ணன் 'கச்சியும் தஞ்சையும் கொண்ட காவலன்' என்று தன்னுடைய கல்வெட்டுகளில் கூறிக்கொண்டான். சோழ ராச்சியத்தின் வடபகுதி யாகிய தொண்டை மண்டலமும் அதைச் சார்ந்த இடங்களும் இராட்டிர கூடர்களுடைய ஆட்சியின் கீழ் வந்தன.

தக்கோலப் போர் சோழ அரசிற்கு எதிர்பாராத ஒரு பேரடியாக அமைந்தது. இதன் பிறகு முப்பது ஆண்டுகள் வரையில் சோழராச்சியம் அரசியல் வளர்ச்சியின்றி தேங்கிய நிலையில் இருந்தது.

பராந்தகன் ஓர் சிறந்த போர்வீரன் மட்டுமல்ல; நிருவாகம் செய்வதிலும் திறமை யானவன். கலைகளுக்கு ஆதரவு தந்தான்; திருக்கோவில்களை அமைக்கும் கலையை வளர்த்தான். சைவ சமயத்தைப்பேணி வளர்த்தான். சிற்றம்பலமாக இருந்த சிதம்பரக் கோயில் இவன் முயற்சியால் பொன்னம்பலமாயிற்று. தவிர சபை, ஊர், நாடு என்ற கிராம அரசியல் அமைப்புகளையும் சீர்திருத்தம் செய்தான்.

### கண்டராதித்த சோழன்' (953–957)

பராந்தக சோழனின் இரண்டாம் மகன் கண்டராதித்தன்; "ராசகேசரி" என்னும் பட்டம் புனைந்து, கி.பி. 953ஆம் ஆண்டிலிருந்து 24 ஆண்டுகள் ஆட்சி நடத்தினான். இவன் ஆட்சி சோழ மண்டலத்தில் மட்டும் நிலைத்திருந்தது எனக் கூறலாம். எவ்வாறெனில் திருமுனைப்பாடி நாடும், தொண்டை நாடும் இவன் தந்தையாகிய முதற் பராந்தகனது ஆட்சியின் இறுதிக் காலத்தில் தக்கோலப் போரில் வெற்றிகொண்ட மூன்றாம் கிருஷ்ணனால் கைப்பற்றப்பட்டன. பாண்டியர்களும் தன்னுரிமை பெற்று தங்களுடைய நாட்டில் ஆட்சி செய்யத் தொடங்கினார்கள்.

"சிவஞான கண்டராதித்தர்" என பெங்களூரில் உள்ள கல்வெட்டு இம்மன்னனை அழைக்கிறது. தில்லைப் பெருமானிடத்தில் அளவற்ற ஈடுபாடுள்ள இம்மன்னன் ஒரு சிறந்த சிவபக்தன். திருவிசைப்பா எனும் பதிகத்தை இயற்றிய இவன் தமிழ்ப் புலமை பெற்றவன்.

இவனுடைய இரண்டாம் மனைவி செம்பியன்மாதேவியும் சிவபக்திமிக்கவள். இவ்வரசி செங்கற்கோவில்களை கற்றளிகளாக எடுப்பித்தும், கோயில்களுக்கு நிவந்தங்கள் செய்தும், அணிகலன்கள் அளித்தும் புரிந்துள்ள அறங்கள் பலவாம். கண்டராதித்தசோழன் சைவ சமயத்தில் ஆழ்ந்த பற்றுள்ளவரெனினும் மற்ற சமயங்களின் வளர்ச்சியில் பங்கு கொண்டான். ஆகையால் சமயப்பொறையுடையன்.

## அரிஞ்சய சோழன் (கி.பி. 956–957)

'ஆற்றூர் துஞ்சிய தேவர்' என அழைக்கப்படும், ஓராண்டுக்காலம் மட்டுமே ஆட்சி செய்த, அரிஞ்சயசோழன் கண்டராதித்தனின் தம்பியாவான். சோழர்களுக்கும் பாணர்களுக்கும் திருமண உறவு மூலம் நட்பை வளர்த்து, பாணர்களை இராட்டிரகூடர் களிடமிருந்து பிரித்தான். இராட்டிரகூடர்களிடமிருந்து தன் தந்தை இழந்த திருமுனைப் பாடி நாட்டையும், தொண்டை நாட்டையும் மீண்டும் கைப்பற்ற முயற்சியெடுத்து தோல்வியுற்றான். சோழர்களுக்கு அடங்கிய சிற்றரசர்களிடமும், கீழைச்சாளுக்கிய அரசர்களிடமும் பெண்கொண்டு அவர்களிடம் அமைதியாக வாழ்வதற்கு வழி வகுத்தான்.

## இரண்டாம் பராந்தக சுந்தரசோழன் (கி.பி. 957–970)

'பரகேசரி' என்றும், 'பாண்டியனைச் சுரம் இறக்கின பெருமாள்' என்றும் போற்றப் படும், இவன் கி.பி. 962ஆம் ஆண்டில் சேவூர் என்னும் இடத்தில் நடந்தபோரில் பாண்டியனைத் தோற்கடித்தான். முழுவதும் அழிக்கப்படாத பாண்டியர்கள் மீண்டும் கலகம் செய்ததால் சோழ இளவரசன் ஆதித்த கரிகாலன் தலைமையில் பாண்டியர்களை அடக்க முயற்சியெடுத்தான்; ஆனால் முழு வெற்றி பெறவில்லை.

பாண்டியர்களை முழுவதும் அடக்கும் முயற்சியில் தோல்வியடைந்தாலும், இராட்டிரகூடர்களைப் படிப்படியாக தொண்டை மண்டலத்திலிருந்து துரத்தும் முயற்சியில் வெற்றியடைந்தான்.

பழையாறை வடதளியைத் தலைநகராக அமைத்து ஆண்டுவந்த இம்மன்னன் பல பிரமதேய கிராமங்களையும், சுந்தரசோழப் பேரேரி என்ற நீர் நிலையும் அமைத்தான்.

இவனுடைய மூத்தமகன், ஆதித்த கரிகாலன் ஊழ்வினைவயத்தால் சில விரோதிகளால் நயவஞ்சகமாகக் கொலை செய்யப்பட்டான். கண்டராதித்த சோழனுக்கும், செம்பியன் மாதேவிக்கும் பிறந்த உத்தமசோழன் இக்கொலையை செய்திருப்பான் என நீலகண்ட சாஸ்திரி கருதுகிறார். சதாசிவபண்டாரத்தார் இக்கருத்தை ஏற்றுக்கொள்ள வில்லை. சில அரசாங்க அதிகாரிகள்தான் இக்கொலைக்கு பொறுப்பாளிகள் என இவர் கருதுகிறார்.

**பரகேசரி உத்தமசோழன் (973–985)**

இவன் ஆட்சிக்காலத்தில் வெளிநாட்டுப் படையெடுப்போ அல்லது உள்நாட்டு கலகங்களோ இல்லை; அமைதி நிலவியது.

இவ்வரசனின் கல்வெட்டுகள் தொண்டை நாட்டில் காஞ்சிபுரம், திருவடந்தை, திருமுல்லைவாயில், திருவொற்றியூர், மீஞ்சூர், பழங்கோயில், திருவதிகை, திருமால்பரம் ஆகிய எட்டு இடங்களில் காணப்பெறுகின்றன. ஆகையால் இப்பகுதிகளில் இச்சமயம் சுந்தரச்சோழனிடம் தோல்வியடைந்த இராட்டிரகூடர்கள் ஆட்சி செய்யவில்லை என நாம் கருதலாம்.

திருச்சி மாவட்டத்திலுள்ள கோவந்தபூரில் உள்ள சிவன் கோவிலுக்கு பல நிவந்தங்களை ஏற்படுத்தியுள்ளான். நடுவில் புலியுருவத்தோடு வடமொழியில் உத்தம சோழன் என்ற பெயர் பொறிக்கப்பெற்ற ஒரு பொற்காசு கிடைத்துள்ளது. இது சோழ அரசர்கள் வெளியிட்ட பொற்காசுகளில் மிக்க பழமையானதென சர் வால்டர் எலியட் என்பார் கருதுவர்.

**இராசராசன் (கி.பி. 985–1014)**

கி.பி. 985ஆம் ஆண்டில் உத்தமசோழன் உயிர் நீத்தவுடன் சுந்தரசோழனின் இளைய மகனான அருண்மொழி, இராசகேசரி இராசராசன் என்னும் பெயருடன் அரியணையேறி, 29 ஆண்டுகள் சிறப்பாக ஆட்சி செய்தான்.

சோழ மன்னர்களுக்குள் தலை சிறந்த மன்னர்கள் இராசராசனும் அவனுக்குப்பின் ஆட்சிக்கு வந்த அவன் மகன் இராசேந்திர சோழனும் ஆவார்கள். சோழப் பேரரசைத் தென்னிந்தியா முழுவதும் விரிவுபடுத்தி இலங்கையையும் இணைத்துக் கொண்ட பெருமை இராசராசனைச் சேர்ந்ததாகும். சோழப் பேரரசு கடாரங் கொள்ள காரணமாயிருந்த பெருமை இராசேந்திர சோழனைச் சேர்ந்ததாகும்.

இராசராசன் காலத்தில் நாட்டில் செழிப்பும், அமைதியும் நிலவிற்று. தஞ்சைப் பெரிய கோவில்கள் போல பல கலையுணர்வுள்ள பல்கலைகளும், சமயமும், இலக்கியமும் தழைத்தோங்கின. தரைப்படையும், கடற்படையும் வலுப்படுத்தப்பட்டு சிறப்புடன் இயங்கின.

"இராசராசன் பட்டமெய்தியதிலிருந்து ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு காலம், பிற்காலச் சோழர் வரலாற்றின் பொற்காலம் எனலாம். மேலும் விசயாலயச் சோழர் மரபினருள் இவனே தலை சிறந்தவன் என்பதும் கருதற்குரியது. இவனுடைய ஆட்சிக் காலமே பிற்காலச் சோழர் வரலாற்றில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், ஒரு சிறந்த திருப்புமையமாகவும் அமைந்துள்ளதென்பதும் குறிப்பிடற்குரியதாம். இவன் ஆட்சியின் தொடக்கத்தில் இராட்டிரகூடரின் தொல்லைக்குள்ளாகிப் பல்வேறு அல்லலுற்றதிலிருந்து

சோழநாடு இவன் ஆட்சியின் இறுதிக் காலத்தில் நன்முறையிலமைந்த உறுதியான ஆட்சியையும் பயிற்சி பெற்ற வலிமைமிக்க படைகளையும் கொண்ட பேரரசாகத் திகழ்ந்தது”, என கே.கே. பிள்ளை கூறுகிறார்.

## சேரநாட்டுப்படையெடுப்பு

திருவனந்தபுரத்தின் ஒரு பகுதியாக உள்ள காந்தளூர்ச்சாலையில் சேரமன்னன் பாஸ்கர இரவிவர்மனை கி.பி. 988ஆம் ஆண்டில் இவன் முறியடித்திருக்கவேண்டும் எனக் கருதப்படுகின்றது. பிறகு அங்கிருந்து, சேரமன்னனால் சிறையிலடைக்கப்பட்டிருந்த தன் தூதுவனை மீட்கும் நோக்கத்துடன் திருவாங்கூர் நாட்டில் உள்ள உதகையின்மேல் படையெடுத்தான். நகரையே சூரையாடினான்; தூதுவனை விடுவித்தான். பிறகு தென்கடற்கோடியிலுள்ள விழிஞம் என்னுமிடத்தில் சேரனை முற்றிலும் முறியடித்து, சேர நாட்டைக் கைப்பற்றிக்கொண்டான்.

சேரநாட்டுப் படையெடுப்பின்போது நிலவழியாக சேர அரசனின் நண்பனாக யிருந்த பாண்டிய நாட்டின் வழியாகத்தான் சோழ அரசுப்படைகள் செல்லவேண்டியதாக இருந்தது. ஆகையால் முதலில் அமரபுஜங்க பாண்டியனைத் தோற்கடித்துவிட்டு, பிறகுதான் சேரநாட்டை இராசராசன் கைப்பற்றினான்.

இராசராசன் சேரநாட்டைக் கைப்பற்றியபோதிலும், சில எஞ்சிய சேரநாட்டுப் பகுதிகள் சுயேட்சையாக ஆட்சிபுரிந்து வந்தன. ஆகையால் இரண்டாம் சேரநாட்டுப் போரில் திருவாங்கூரில் இருந்த கொல்லம், கொடுங்கோளூர் பகுதிகளையும் இராசராசன் கைப்பற்றினான்.

## குடகுமலை நாட்டைக் கைப்பற்றுதல்

இவ்வெற்றிக்குப்பிறகு இக்காலத்தில் குடகு என வழங்கும் பகுதியான குடமலை நாட்டின்மேல்படையெடுத்தான். பனசோகை என்னும் இடத்தில் அந்நாட்டரசனைத் தோல்வியுறச்செய்தான். இப்பகுதியும் சோழ நாட்டுடன் சேர்க்கப்பட்டு கொங்காள்வர் மரபைச்சார்ந்த ஒருவர் குடமலை நாட்டின் ஆளுநராக நியமிக்கப் பெற்றார்.

## இலங்கைப் படையெழுச்சி : மும்முடிச் சோழ மண்டலம்

வெற்றிச் சாலையிலே முன்னேறிச் சென்று கொண்டிருந்த இராசராசன், கடல்கடந்து இலங்கையின் மேல் படையெடுத்து இலங்கைத் தீவின் வடபகுதியைக் கைப்பற்றினான். அச்சோழ நாட்டுப் பகுதிக்கு மும்முடிச் சோழமண்டலம் என பெயரிடப்பட்டது. சோழப் படையெடுப்புக்கு அஞ்சிய இலங்கை மன்னன் ஐந்தாம் மகிபன் தென் பகுதியிலுள்ள ரோகண நாட்டிற்குச் சென்றுவிட்டான். பொலனருவாவில் இன்றும் காணப்படும் வானவன்மாதேவீச்சுரம் என்னும் சிவன் கோயில் இராசராசன் இலங்கையை ஆட்சி புரிந்ததின் சின்னமாக விளங்குகின்றது.

### சீட்புலிநாடு, வேங்கிநாடு கைப்பற்றுதல்

சீட்புலிநாட்டை தெலுங்கு சோழர்கள் ஆட்சி செய்து வந்தார்கள். சோழப் படையெடுப்பின் போது வேங்கிநாட்டு சக்திவர்மனும் சேர்ந்து கொண்டான். சக்திவர்மன் விமலாதித்தன் இருவரும் தெலுங்குச் சோழனாகிய ஜயசோழ வீமனால் (973-1000) தோற்கடிக்கப்பட்டு நாட்டை இழந்த கீழைச்சாளுக்கிய அரச குமாரர்கள் ஆவர். ஜயசோழவீமன் சோழ அரசனால் தோற்கடிக்கப்பட்டான். சீட்புலிநாடும், வேங்கிநாடும் சோழ அரசிற்கு உட்பட்டன. சக்திவர்மன் வேங்கிநாட்டு அரசனாக நியமிக்கப்பட்டான்.

### கலியாணி சாளுக்கியர்கள் தோல்வி

தக்காணத்தைச் சேர்ந்த கலியாணபுரத்திலிருந்து இராட்டிரகூடர்களை துரத்திவிட, சத்தியாசிரயன் என்னும் சாளுக்கிய அரசன் ஆட்சி புரிந்து வந்தான். இராசராசனின் வெற்றிகளை குறிப்பாகக் கீழைச் சாளுக்கிய நாட்டின் வெற்றியைக் கண்டு பொறாமை கொண்ட சத்தியாசிரயன், தன்னுடைய தளபதியாகிய நம்பியின் தலைமையில் ஒரு படையனுப்பி தரணிக் கோட்டையைக் கைப்பற்றினான். வலுவில் சத்தியாசிரயன், போர்க்கு வந்ததால் தன்னுடைய மகன் இராசேந்திர சோழனின் தலைமையின் கீழ் பெரும் படையொன்றையனுப்பி மேலைச்சாளுக்கிய நாட்டின் மீது சோழ அரசன் படையெடுத்தான். அச்சேனை விஜயபுரி ஜில்லாவில் உள்ள தேனூர் வரையில் சென்று கொடுமையான அழிவை உண்டாக்கியது. இராய்ச்சூர்.பகுதி என்ற இடைத்துறை நாடும், வனவாசியும் கைப்பற்றப்பட்டன.

### முந்நீர்ப்பழந்தீவு பன்னீராயிரம் தீவுகளைக் கைப்பற்றல்

இத்தீவுகள் சேரநாட்டிற்கு தென்மேற்கே அரபிக்கடலிலுள்ள மாலத்தீவுகளை குறிக்கும் பழைய பெயராகும். இத்தீவுகளையும் இராசராசன் கைப்பற்றினான்.

### படையெடுப்பின் முடிவுரை

பாண்டி மண்டலமும், சேரமண்டலமும் அடங்கிய இராசராச தென்னாடும், தொண்டைமண்டலமாகிய சயங்கொண்ட சோழமண்டலமும், கங்க கொங்குமண்டலமும், நுளம்பப்பாடிநாடும், ஈழமாகிய மும்முடிச் சோழமண்டலமும், இராசராசனின் ஆட்சிக்குட்பட்டிருந்தன என உறுதியாகக் கூறலாம்.

### மற்ற செயல்கள்

இராசராசன் ஆட்சிக்கு வருமுன் ஒவ்வொரு மண்டலமும் பல நாடுகளாகப் பிரிக்கப் பட்டிருந்தன. ஆனால் இவைகளையே மண்டலம், வளநாடு, நாடு என இர்ராசராசன் பிரித்தான். இப்புது அமைப்புகள் மூலம் அரசியலைச் செவ்வனே நடத்த முடிந்தது.

இராசராசசோழனது சிவபக்தியின் கலங்கரை விளக்கமாக நிலவுவது தஞ்சாவூரில் அவன் கட்டிய மாபெரும்கோவில். அக்கோவிலுக்கு இராசராசேச்சுரம் எனப்

பெயரிட்டான். இக்கோயிலின் திருப்பணி அவனுடைய ஆட்சியின் 19-ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்று, 23-ஆம் ஆண்டில் நிறைவேறியது. இக்கோவில் 793 அடி நீளமும், 397அடி அகலமும் உடையது.

## முதலாம் இராசேந்திரன் – கங்கைகொண்ட சோழன் (கி.பி. 1012–1044)

கி.பி. 1012ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1014ஆம் ஆண்டுவரை இளவரசுப்பட்டம் பெற்று தந்தைக்கு உதவிபுரிந்துவந்த இவ்வரசன் கி.பி. 1014ஆம் ஆண்டில் அரச பதவியைப் பெற்றான். இவன் ஆட்சிக்கு வந்தபோது சோழப் பேரரசு இன்றைய தமிழ்மாநிலத்தையும், ஆந்திரமாநிலத்தின் தென் பகுதியையும், கர்நாடக மாநிலத்தின் ஒரு பகுதியையும், இலங்கையையும் தன்னகத்தே கொண்டதொரு கீர்த்திவாய்ந்த பேரரசாக இருந்த தெனலாம். இப்பேரரசை மேலும் இராசேந்திரன் விரிவுப்படுத்தியதால் "பூர்வ தேசமும், கங்கையும் கடாரமும் கொண்ட கோப்பரகேசரி வர்மன்" என்று கல்வெட்டுகள் புகழ்ந்து கூறுகின்றன.

சோழர்களுக்கும் மேலைச் சாளுக்கியர்களுக்கும் இடையே இருந்த போராட்டம் தொடர்ந்தது. வேங்கி அரசன் விமலாதித்தனுக்கும் அவனுடைய முதல் மனைவியான குந்தவை பிராட்டிக்கும் (இராஜேந்திர சோழனின் தங்கை) பிறந்த இராசராச நரேந்திரனுக்கும் விமலாதித்தனின் இரண்டாம் மனைவியாகிய மகாதேவியின் மகனான ஏழாம் விசயாதித்தனுக்கும் இடையே வேங்கி அரசில் வாரிசுரிமைப்போர் தொடங்கியது. மேலைச்சாளுக்கிய அரசனாகிய இரண்டாம் ஜெயசிம்மன் ஏழாம் விசயாதித்தனை ஆதரித்தான், ஆகையால் அவ்வரசன் துங்கபத்திரையைக் கடந்து பல்லாரி மாவட்டத் தையும், கங்கபாடியையும் கைப்பற்றினான். இராசேந்திரசோழன் தன்னுடைய உறவின னான இராசராசநரேந்திரனுக்கு உதவி செய்ய முன்வந்தான். ஆகையால் சோழப்படைகள் இராய்ச்சூர் மாகாணத்தின் மேல் படையெடுத்தன. முசாங்கி அல்லது மாங்கி என்னுமிடத்திலும், வேங்கி நாட்டில் மற்றும் பல இடங்களிலும் ஏழாம் விசயாதித்தனை சோழப்படைகள் முறியடித்தன. இராசராசநரேந்திரன் வேங்கி நாட்டு மன்னனாகப் பதவியேற்றான். மேலும் சோழப்படைகள் கலிங்கரோடும், ஒட்டரோடும், தெலுங்கரோடும், போர்புரிந்ததாகத் தமிழ், கன்னட கல்வெட்டுகள் கூறுகின்றன.

இராசேந்திர சோழனது வடநாட்டுப் படையெழுச்சி வேங்கி நாட்டிற்கு வடக்கிலிருந்து தொடங்கியது எனலாம். விசாகப்பட்டினம் மாவட்டத்திற்கு வடமேற்கே உள்ள சக்கரக் கோட்டத்தை இராசேந்திர சோழன் கைப்பற்றினான். சோழப்படையால் கைப்பற்றப்பட்ட மதுரை மண்டலம், நாமனைக்கோணம், பஞ்சப்பள்ளி ஆகியவையும் சக்கரக் கோட்ட மண்டலத்தில் இருந்திருத்தல் வேண்டும் எனத் தெரிகின்றது.

பின்னர் ஆதி நகரில் இருந்த இந்திரநாதன் என்பானைவென்று ஒட்டதேயமும், கோசலநாடும் கைப்பற்றப்பட்டன. அதன்பின்னர் தர்மபாலனுடைய தண்டபுத்தியும் (வங்காளத்தின்பகுதி) இரணசூரனது தக்காண லாடமும் (பீகாரின்பகுதி), கோவிந்த சந்தனுக்குரிய வங்காளதேசமும், மகிபாலனது உத்ரலாடமும் (வங்காளத்தின் பகுதி) வென்று கொள்ளப்பட்டன. இவற்றின் பின்னர் சோழர்படை கங்கைக் கரையை அடைந்ததாக மெய்க்கீர்த்தி கூறுகிறது.

இப்படையெழுச்சியின் பயனாக வேங்கிமுதல் வங்காளம்வரை இருந்த அரசர்கள் சோழ அரசுக்குப் பணிந்தனர். கங்கைநீரைக் கொணர்ந்ததற்கு அடையாளமாக இராசேந்திரனின் புதிய தலைநகரில் கங்கைநீர் கலக்கப்பெற்று சோழ கங்கப் பேரேரி அமைக்கப்பட்டது.

தவிர அலைகடல் நடுவில் பல கலஞ்செலுத்தி இராசராசன் கடாரங்கொண்ட செய்தியையும், அவனுடைய 13ஆம் ஆண்டில் வரையப்பெற்ற மெய்க்கீர்த்தியாலறிய முடிகிறது. இப்படையெழுச்சி கி.பி. 1025ஆம் ஆண்டிற்குமுன் நடந்திருக்க வேண்டும். இராசேந்திரனின் படைகள் ஸ்ரீவிசயத்தின் சக்கரவர்த்தியான சுமித்திரனுடனும் மலேயாத் தீவிலுள்ள அவனது சிற்றரசர்களுடனும் போர்புரிந்தன. இப்படையெடுப்பிற்கான காரணம் அறிய முடியவில்லை. சோழப்பேரரசின் கடலாதிக்கத்தை ஒப்புக்கொண்ட பிறகு ஸ்ரீவிசயத்து அரசன் மீண்டும் தன்னாட்சியுரிமை பெற்றதாகத் தெரிகிறது. சுமத்திரா தீவில் 1088ஆம் ஆண்டில் பொறிக்கப்பெற்ற தமிழ்கல்வெட்டொன்று தென்னிந்தியா விற்கும், ஸ்ரீசயத்திற்கும் நடைபெற்ற வணிகத்தொடர்பை உணர்த்துகின்றது. கி.பி. 1015ஆம் ஆண்டில் சோழப்பேரரசனாகிய இராசராசனிடமிருந்தும், பின்னர் கி.பி. 1033ஆம் ஆண்டில் இராசேந்திர சோழனிடமிருந்தும், சீனாவிற்குத் தூது குழுக்கள் வந்ததாக சீனாவிலுள்ள சோங்கு மரபு வழிக் குறிப்பொன்று கூறுகின்றது.

பாண்டிய, சேர நாடுகளில் இராசேந்திர சோழனுடைய ஆட்சியில் ஏற்பட்ட அரசியல் கலகங்கள், இவ்வரசனுடைய மூத்தமகனும், இளவரசனுமாகிய இராசாதிராசன் என்பவனால் அடக்கப்பெற்றது. கி.பி. 1041ஆம் ஆண்டில் இலங்கையில் அரசு வகுத்த விக்கிரமபாகு, சோழர்களுடைய தலைமை ஆட்சியை உதறித்தள்ளுவதற்குச் செய்த கலகத்தை இராசாதிராசனே அடக்க வேண்டியிருந்தது. விக்கிரமபாகுவிற்குப் பிறகு இலங்கையில் பெரியதொரு அரசியல் குழப்பம் தோன்றியது. பாண்டிய நாட்டு சிற்றரசர்களும் கன்னோசி நாட்டிலிருந்து இலங்கைக்கு வந்த ஜெகதிபாலன் என்ற, தலைவனும் சேர்ந்துகொண்டு சோழப் பேரரசை எதிர்த்தனர். ஆனால் அவர்கள் செய்த கலகங்கள் அடக்கப்பெற்று அமைதி ஏற்பட்டது.

## இராசகேசரி முதலாம் இராசாதிராசன் (1044–1054)

இராசேந்திர சோழனின் இறுதிக்காலத்தில் சோழர்களுக்கும் சாளுக்கியர்களுக்கும் போர் மூண்டது. சாளுக்கிய அரசனான சோமேசுவர ஆகவமல்லன் வேங்கிநாட்டு ஏழாம் விசயாதித்தனை வேங்கி நாட்டு அரசனாக்கவேண்டும் என முயற்சித்தான். தன்னுடைய மைத்துனனாகிய வேங்கி நாட்டுமன்னன் இராசராசநரேந்திரனுக்கு உதவிபுரியும் நோக்கத்துடன் சாளுக்கியர்களை எதிர்ப்பதற்கு இராசேந்திரன் பெரும் சேனையொன்றை அனுப்பினான். காளிதிண்டி என்னுமிடத்தில் போர் நடந்தது. யார் இப்போரில் வெற்றிபெற்றார்கள் என உறுதியாகக் கூறமுடியவில்லை. இச்சமயத்தில் இராசேந்திர சோழன் இறந்தமையால் அவனுடைய மகன் இராசாதிராசன் சோழ அரசு பதவியைப் பெற்றான்.

இராசாதிராசன் சாளுக்கியரோடு தொடர்ந்து போர்புரிந்தான். தானியகடகம் என்னுமிடத்திலும் கொள்ளிப்பாக்கை என்னும் அரண்சூழ்ந்த இடத்திலும், கம்பிலி கோட்டைப் பகுதியிலும், பூந்துார் என்னுமிடத்திலும் சாளுக்கிய அரசில் உள்ள யதுகிரி

என்னுமிடத்தில் வெற்றித்தூண் அமைத்து, அதன் மீது புலியுருவம் பொறிக்கப்பட்டது. பின்னர் சோமேசுவரனுடைய தலைநகராகிய கலியாணபுரத்தை முற்றுகையிட்டு அதைத் தன்வசப்படுத்தி இராசாதிராசன் வீராபிஷேகம் செய்துகொண்டு 'விசயராசேந்திரன்' என்ற பட்டமும் புனைந்து கொண்டான். இவ்வெற்றிகளை ஜெயங்கொண்டார் தான் இயற்றிய 'கலிங்கத்துப் பரணியிலும்', ஒட்டக்கூத்தர் தாம் இயற்றிய 'மூவருலா'விலும் புகழ்ந்து போற்றியுள்ளனர்.

ஆனால் இவ்வெற்றிக்குப்பிறகு சாளுக்கிய அரசன் சோமேச்வர ஆகவமல்லன் சோழ அரசன் தம்மிடமிருந்து கைப்பற்றிய பகுதிகளை மீண்டும் தன்வயப்படுத்திக்கொண்டான், மேலும் சோழப்பேரரசின்மீது படையெடுத்தான். இக்காரணத்தினால் இராசாதிராசன் தன் தம்பி இரண்டாம் இராசேந்திரனுடன் சேர்ந்துகொண்டு சாளுக்கிய நாட்டின்மேல் படையெடுத்தான். கிருஷ்ணையாற்றங்கறையில் உள்ள கொப்பம் என்னுமிடத்தில் இராசாதிராசன் உயிர்துறந்தான். இரண்டாம் இராசேந்திரன் இச்சமயத்தில் சோழப் பேரரசனாக முடிசூட்டிக்கொண்டு தொடர்ந்து போர் புரிந்தான். சாளுக்கியர்களைத் தோற்கடித்தான், பின்னர் கொல்காபுரத்திற்குத் தன்னுடைய சேனையை நடத்தி வெற்றித்தூண் ஒன்றமைத்துத் திரும்பினான்.

## இரண்டாம் இராசேந்திரன் (1054–1064)

இரண்டாம் இராசேந்திரன் சாளுக்கியர்களை முறியடித்தபோதிலும்; சோழ சாளுக்கிய போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது. சாளுக்கிய பேரரசன் மீண்டும் சோழநாட்டின்மீது படையெடுத்தான். முடக்காறு என்னுமிடத்தில் நடந்த போரில் சாளுக்கிய அரசன் தோல்வியுற்றான்.

அதற்கிடையில் வேங்கி நாட்டு அரசன் இராசராசநரேந்திரன் சாளுக்கிய படைத் தலைவனான சாமுண்டராயன் என்பவனால் தோற்கடிக்கப்பட்டு நாட்டை விட்டு துரத்தப்பட்டான். ஆனால் சோழர்படைகள் வேங்கி நாட்டுக்குச் சென்று சாமுண்ட ராயனைக் கொன்று வேங்கி நாட்டை மீட்டன. மேலும் கூடல் சங்கமம் என்னுமிடத்தில் நடந்த போரிலும் சாளுக்கிய அரசன் சோமேசுவரன் தோல்வியுற்றான்.

## வீரராசேந்திரன் (1062–63 – 1070)

இரண்டாம் இராசேந்திர சோழனுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த வீரராசேந்திரன் சாளுக்கிய அரசன் ஆகவமல்லனை ஐந்து முறை போரில் வென்றதாக மெய்க்கீர்த்தி கூறுகின்றது.

கூடல் சங்கமப் போரிற்குப் பிறகு நடந்த நான்காம் சாளுக்கிய சோழப் போரிலும் சாளுக்கிய சோழப் போரிலும் சாளுக்கியர்கள் தோல்வியுற்றனர். இதனால் மீண்டும் தன்னை ஐந்தாம் முறை கூடல் சங்கமத்தில் எதிர்க்குமாறு சாளுக்கிய அரசன் சோழ அரசன் வீரராசேந்திரனை அழைத்தான்.

ஆகையால் கூடல்சங்கமத்திற்கு அருகே சுரந்தை என்னுமிடத்தில் வீரராசேந்திரன். முகாமிட்டு இருந்தான். ஆனால் சாளுக்கிய அரசன் போர்புரிய முன்வரவில்லை. சினம் கொண்ட சோழன் இரட்டிப்பாடி நாட்டில் வாழ்ந்த தேவநாதன், சித்தி, கேசி என்ற மூன்று சாளுக்கிய தலைவர்களையும் தோற்கடித்து அவர்களுடைய தலைநகரம் அழிவுறும்படிசெய்தான்.

மேலும் மேலைச் சாளுக்கியர்களுடைய செல்வாக்கை அறவே அழிப்பதற்காக வேங்கி நாட்டை நோக்கிப் படையெடுத்தான். விசயவாடாக்கருகில் மூன்று சாளுக்கியத் தலைவர்களைத் தோற்கடித்தான். கோதாவரி ஆற்றையும் கடந்து சக்கரக்கோட்டம், கலிங்கம் முதலிய இடங்களையும் கைப்பற்றியதாகத் தெரிகிறது.

சோமேசுவர ஆகவமல்லன் தற்கொலை செய்துகொண்டான். ஆகையால் அவன் மகன் இரண்டாம் சோமேசுவரன் கி.பி. 1068ல் கலியாணபுரத்தில் அரச பதவியேற்றான். ஆனால் அரசுரிமைக்காக விக்கிரமாதித்தன் என்பவன் தன் தமையனுடன் போரிட்டான். விக்கிரமாதித்தனுக்கு சோழ அரசன் வீரராசேந்திரன் படை உதவியளித்தான். சோழப் படை குத்தி என்னும் இடத்தைக் கைப்பற்றி, கம்பிலி நகரத்தையும் முற்றுகையிட்டது. இச்சோழ தலையீட்டால் இரண்டாம் சோமேசுவரனுக்கும் அவனுடைய தம்பிக்கும் ஓர் உடன்பாடு தோன்றியது. இவ்வுடன்பாடு சோழர்களுக்கும், சாளுக்கியர்களுக்கும் இடையே இதுகாறும் நடந்துவந்த பகைமையை மாற்றி நட்பு உண்டாக்குவதற்கு ஏற்றதாயிற்று. ஆறாம் விக்கிரமாதித்தன் இளவரசனாக ஒப்புக்கொள்ளப்பெற்று சாளுக்கிய நாட்டின் தென்பகுதிக்கு அரசனானான். வீரராசேந்திரன் தன்னுடைய மகள் ஒருத்தியை விக்கிரமாதித்தனுக்கு மணஞ்செய்து கொடுத்தான்.

இலங்கையில் சோழ அரசுக்கு எதிராக விஜயபாகு போர்புரிந்து சோழ ஆளுநர் களிடமிருந்து பல இடங்களைக் கைப்பற்றினான். இதனால் வீரராசேந்திரன் பெரியதொரு சேனையை. இலங்கைக்கு அனுப்பி விஜயபாகுவைத் தோற்கடித்தான். சோழராட்சியை நிலைநாட்டினான்.

## அதிராசேந்திரன் (கி.பி. 1070)

ஒரே ஆண்டு ஆட்சிசெய்த அதிராசேந்திரன் வீரராசேந்திரனின் மகனாவான். பிறகு ஓராண்டில் உயிர்நீத்தான். ஆனால் எவ்விதமான சூழ்நிலையில் உயிர்நீத்தான் என நம்பக் கூடிய வரலாற்று மூலங்கள் இல்லை. இவனுக்குப்பின்னர் கீழைச் சாளுக்கிய சோழமரபு களைச் சார்ந்த முதற்குலோத்துங்கன் பட்டம் எய்தினான்.

## சாளுக்கிய சோழர்கள்

முதலாம் குலோத்துங்கச் சோழன் கங்கை கொண்ட சோழபுரத்தில் சோழப்பேரரச னாக பதவியேற்றது பிற்காலச் சோழ வரலாற்றில் மிக முக்கியமானதாகும். சாளுக்கிய சோழர்களுக்கு முன் ஆட்சி செய்து வந்து சோழர்கள் சோழப் பேரரசை விரிவு

படுத்துவதில் ஈடுபட்டனர். இருநூறு ஆண்டுகளுக்கு மேல் ஆட்சி செய்துவந்த சாளுக்கிய சோழர்கள் இவ்வாறான முயற்சிகளில் ஈடுபடவில்லை. தங்களுடைய மூதாதையர்களால் அமைக்கப்பட்ட பேரரசுக்கு ஏதாவது ஆபத்து வந்தால்தான் போர்புரிய இச்சோழ அரசர்கள் முன்வந்தார்கள். ஆகையால் அவர்களின் நோக்கம் சோழப் பேரரசை கண்காணித்து காப்பது மட்டுமே. அப்பேரரசை விரிவுப்படுத்தும் நோக்கம் இல்லை.

## முதற் குலோத்துங்க சோழன் (கி.பி. 1070–1120)

தன் தந்தையின் வழியில் கீழைச் சாளுக்கிய அரச குலத்தைச் சேர்ந்தவனாவான்; தாய் வழியில்தான் சோழ்குலத்துடன் இணைப்பு இருந்தது. தவிர்க்க முடியாத நிலையில்தான் போர்புரிய முன்வந்தான். தன் முன்னோர்கள் செய்த முயற்சிகளைப்போல துங்கபத்திரைக்கு வடக்கே அமைந்த இரட்டபாடியைக் கைப்பற்ற இவன் முயற்சி யெடுக்கவில்லை. ஹொய்சாளரின் எழுச்சியால், தன் அரசின் ஒரு பகுதியை இழக்க நேர்ந்தபோது. அதை அவன் பொருட்படுத்தவில்லை. போர்புரிவதைவிட நாட்டு மக்களின் நல்வாழ்வைப் பெரிதும் விரும்பினான்.

குலோத்துங்கனின் சோழ அரசு கீழைச்சாளுக்கியருடைய வேங்கி நாட்டையும் அணைத்திருந்தது. சோழப்பேரரசு மேலைச்சாளுக்கிய பேரரசைவிட விரிவாக வளர்ந் திருப்பதைக் கண்டு பொறாமையுற்ற மேலைச் சாளுக்கிய அரசன் ஆறாம் விக்கிரமாதித்தன், ஹொய்சாள ஏரியங்கன், சாதவசேனன், கடம்பஜெயகேசி, நுள்ம்பபாண்டியர்கள் முதலியவர்களுடன் கூட்டணி அமைத்து சோழப்பேரரசின் வடபகுதியின்மீது படையெடுத்தான். நங்கலி, மணலூர், அளத்தி முதலிய இடங்களில் நடந்த போர்களில் விக்கிர மாதித்தன் தோற்கடிக்கப்பட்டான் எனத்தெரிகிறது.

குலோத்துங்கன் அரச பதவியேற்குமுன் பாண்டிய நாட்டை ஆண்டு வந்த பஞ்சவர் ஐவரும் தன்னரசு அடைந்தனர். ஆகையால் குலோத்துங்கன் பாண்டிய நாட்டின்மேல் படையெடுத்து அப்பாண்டிய அரசர்கள் தன் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொள்ளும்படி செய்தான். பாண்டிய அரசர்களைப்போன்று உரிமைபெற விரும்பிய திருவிதாங்கூர் சிற்றரசன் கோட்டாறு விழிஞம் என்னும் இடங்களில் முறியடிக்கப்பட்டான்.

குலோத்துங்கன் வட கலிங்க நாட்டின்மீது படையெடுத்து வெற்றியடைந்தான் என கலிங்கத்துப்பரணி கூறுகின்றது. கப்பம் கட்டாத அநந்தவர்மன் சோழகங்கன் என்ற அரசன் தோல்வியுற்று கப்பம் கட்ட ஒப்புக்கொண்டான்.

குலோத்துங்கன் மேலே கூறிய போர்களில் வெற்றிவாகை சூடினும், சில சோழ நாட்டுப் பகுதிகளைத் தன் ஆட்சிக் காலத்தில் இழந்தான். சோழ நாட்டுக்கு இறை செலுத்தி வந்த இலங்கை மன்னன் விஜயபாகு இறைமையைத் தவிர்த்து நாட்டுரிமை பெற்றான். சோழ நாட்டு ஆட்சிக்கு அடங்கி ஆட்சிபுரிந்துவந்த மைசூர் பகுதிகளாக கங்கபாடியும், தலைக்காடும் ஹொய்சாள வமிசத்து அரசர்களால் கைப்பற்றப்பட்டன. இப்பேரரசர் இறுதியாட்சிக் காலத்தில் வேங்கி நாட்டை சாளுக்கிய அரசனான ஆறாம் விக்கிரமாதித்தன் கைப்பற்றினான்.

குலோத்துங்கன் ஆட்சிக் காலத்தில் கேதா, மலேயா நாடுகளுக்கும் சோழநாட்டிற்கும் இடையே வாணிப உறவு இருந்ததாகத் தெரிகின்றது. மேலும் காம்போஜா நாட்டிற்கும் சீனப்பேரரசின் தலைநகரத்திற்கும் குலோத்துங்கசோழனே விஜயம் செய்ததாக வரலாற்றாசிரியர் சுப்பிரமணியம் கருதுகின்றார்.

குலோத்துங்கன் சைவ சமயத்தைப் பின்பற்றினான். பரணிபாடுவதில் வல்லவராகிய ஜெயங்கொண்டார் குலோத்துங்கனுடைய அவைப்புலவர். இவன்காலத்தில் தமிழிலும், தெலுங்கிலும் பல இயல், இசை, நாடக நூல்கள் வெளிவந்தன.

## விக்கிரம சோழன் (கி.பி. 1118–1135) அல்லது (கி.பி. 1120–1136)

இருபத்தைந்து ஆண்டுகளுக்குமேல் வேங்கி நாட்டின் அரசப் பெயராளாக ஆட்சி புரிந்த விக்கிரமசோழன் தன் தந்தை குலோத்துங்கனுக்குப்பின் சோழஅரசு பதவியேற்றான். இம்மன்னன் ஆட்சி செய்த காலத்திலே அமைதியான வாழ்க்கை நிலவியது. இவன் ஆட்சிக் காலத்தில் குறிக்கத்தக்க முக்கிய நிகழ்ச்சிகள் எதுவுமில்லை.

வேலாநாண்டு சோழ சிற்றரசர்கள் இவனுக்கு அடங்கி கப்பம் செலுத்தினர். மைசூர் மாநிலத்தில் உள்ள கங்கவாடியில் இவனுடைய கல்வெட்டுகள் பல காணப்பெறுகின்றமையால், அந்நாட்டை ஹொய்சாள மன்னர்களிடமிருந்து திருப்பிப் பெற்றிருக்கவேண்டும் என நாம் உணருகிறோம்.

சிற்றரசர்கள் கொடுத்த திறைப்பொருளைக்கொண்டு திருச்சிற்றம்பலமுடையார்க்கு இம்மன்னன் திருத்தொண்டுகள் செய்தான். திருச்சுற்று மாளிகை, கோபுரவாயில், கூட சாலை, பலிபீடம் முதலியவற்றை இவன் அமைத்ததாக அவன் மெய்கீர்த்திகள் உணர்த்துகின்றன.

குலோத்துங்கன் ஆட்சிக்காலத்திற்போலவே இவன் காலத்திலும் கங்கைகொண்ட சோழபுரமே தலைநகரமாயிருந்தது. ஒட்டக்கூத்தர் இவனுடைய அவைக்களப் புலவராகத் திகழ்ந்தார்.

## இரண்டாம் குலோத்துங்க சோழன் (1133–1150) அல்லது (1136–1150)

இவனது ஆட்சிக் காலத்தில் போர் எதுவும் நடைபெறவில்லை. நாட்டில் சமாதானம் நிலவியது. நாட்டின் எல்லை விரியவும் இல்லை. சுருங்கவும் இல்லை. புலவர்கள் ஆதரிக்கப் பெற்றமையின் தமிழ் வளரத் தொடங்கியது; வரலாறு தழுவிய இலக்கியத்தோற்றமும் நிகழ்ந்தது அக்காலத்தே எனலாம்.

இம்மன்னன் தில்லையில் செய்த பற்பல திருப்பணிகளை ஒட்டக்கூத்தர் தாமியற்றிய குலோத்துங்க சோழனுலா, இராசராச சோழனுலா, தக்கயாகப்பரணி ஆகிய நூல்களில் விளக்கிக் கூறியுள்ளார். தில்லையில் நான்கு தேரோடும் வீதிகள் அமைத்தும் பற்பல மண்டபங்கள் கட்டுவித்தும் அந்நகரை சிறப்பித்தான். பேரம்பலத்தையும், உட்கோபுரத்

தையும் திருச்சுற்று மாளிகையையும் பொன்மயமாக்கினான். எழுநிலைக் கோபுரங்கள் எடுப்பித்தான். சிவகாமக்கோட்டம் அமைத்தான். அதன் அருகே திருச்சுற்று மாளிகை யுடன் கூடிய திருக்குளம் ஒன்றமைத்தான்.

தில்லை திருச்சித்திரக்கூடத்தில் இருந்த திருமாலின் உருவத்தை பெயர்த்தெடுத்து வங்காளக்குடா அல்லது ஆற்றிலோ, குளத்திலோ இரண்டாம் குலோத்துங்கன் போடும் படி செய்ததாக ஒட்டக்கூத்தர் கூறியுள்ளார். ஆனாலும் இவன் வைணவ சமயக்காழ்ப் பற்றவன் என வரலாற்று ஆசிரியர்கள் கருதுகிறார்கள்.

## இரண்டாம் இராசராசசோழன் (1146–1163) அல்லது (1150–1163)

கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர், நெல்லூர், நிகரிலிச் சோழமண்டலத்தின் உட்பிரி வாகிய கங்கநாட்டைச் சேர்ந்த தகடூர் நாட்டிலும் இம்மன்னனின் கல்வெட்டுகள் கிடைக்கின்றன. எனவே கொங்கு நாடு, கங்க நாடு, வேங்கி நாடு ஆகியவற்றில் இவன் ஆட்சி நிலவியதென்பதும் வடக்கில் கோதாவரியிலிருந்து மேற்கே சேலம், கோலார் பகுதிகள்வரை இவன் நாட்டு எல்லைகள் பரவியிருந்தது எனவும் நாம் உணரலாம்.

தன்னுடைய பாட்டனைப் போன்றும், தகப்பனைப் போன்றும் இவனும் போரிலும் புகழிலும் ஆர்வம் காட்டவில்லை. தனக்கு அடங்கிய சிற்றரசர்களுடன் அமைதியான முறையில் தன்னாட்சியை நடத்தி நற்பெயரெடுத்தான்.

நாட்டை நன்முறையில் பாதுகாப்பதிலும் குடிமக்களுக்கான நன்மைகளைச் செய்வதிலும் இம்மன்னன் அதிக ஆர்வங்காட்டவில்லை. ஆகவே அரசனுடைய மதிப்பும் குறையத்தொடங்கிற்று. அரசாங்கத்தின் வலிமை சிறிது சிறிதாகக் குறையத் தொடங்கிற்று.

நாட்டின் தலைநகரை கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து, கும்பகோணத்திற்கு மேற்கேயுள்ள தாராசுரத்திற்கு மாற்றினான். அங்கே இராசராசேச்சுரம் என்ற கோவிலைக் கட்டினான்.

இவனுடைய ஆட்சி எப்போது முடிவடைந்தது என்று முடிவுசெய்வது கடினமாக விருக்கிறது. இவனுடைய இறுதிக் காலத்தில் உள்நாட்டுக் கலகம் விளைந்ததால்தான் சிக்கலான சூழ்நிலை நிலவியது.

## இரண்டாம் இராசாதிராசசோழன் (1163–1178)

இவனுடைய ஆட்சிக்காலத்தில் சிறப்பாக நடந்த நிகழ்ச்சி, இவன் படை வெற்றி யுடன் கலந்துகொண்ட பாண்டிய நாட்டு உள்நாட்டுப்போரேயாகும்.

பன்னிரெண்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் பாண்டிய நாடு ஐந்து சிற்றரசு களாகப் பிரிந்து, இரண்டு பேரரசுகளுக்கு அடங்கியிருந்தது. மதுரை நகரைத் தலைநகராகக் கொண்டு பராக்கிரம பாண்டியனும் திருநெல்வேலியைத் தலைநகராகக்கொண்டு

குலசேகர பாண்டியனும் அரசு செலுத்திவந்தனர். குலசேகரப்பாண்டியன் மதுரையின் மேல் படையெடுத்து பராக்கிரம பாண்டியனைக் கொன்றுவிட்டு மதுரையைத் தன் வயப்படுத்திக்கொண்டான்.

ஆனால் பராக்கிரம பாண்டியனுக்கு உதவி செய்ய வந்த இலங்கை நாட்டரசன் பராக்கிரம பாகுவின் படைகள், பராக்கிரம பாண்டியனின் புதல்வர்களில் ஒருவரை அரசனாக்கும் நோக்குடன், தொடர்ந்து குலசேகரப்பாண்டியன் படைகளுடன் போரிட்டன. குலசேகர பாண்டியனுக்கு சோழ மன்னன் இரோசாதிராசன் படை உதவியளித்தான். தொடக்கத்தில் இலங்கைப் படைகள் வெற்றியடைந்தபோதிலும், இறுதியில் வெற்றி சோழப் படைகளுக்கே கிடைத்தது. குலசேகர பாண்டியன் மீண்டும் மதுரையின் அரசனாகப் பதவியேற்றான்.

இதைக் கண்ட இலங்கை அரசன் பராக்கிரம பாகு மீண்டும் ஒரு படையை அனுப்பி பராக்கிரம பாண்டியனுடைய மகனான வீரபாண்டியனை மதுரையின் அரசனாக நியமிக்க முயற்சியெடுத்தான். இச்செய்கையைக் கண்ட சோழ்ப் படைத்தலைவர் பராக்கிரம பாகுவின் எதிரியாகிய ஸ்ரீவல்லபன் என்பானுக்கு உதவி செய்து இலங்கை அரசு பதவிக்கு போட்டியை உண்டாக்கினான். சோழப்படைகள் இலங்கையில் பல இடங்களில் வெற்றி வாகை சூடின. இக்காரணத்தால் பராக்கிரமபாகு வீரபாண்டியனுக்கு உதவி செய்ததை நிறுத்தியதோடு அல்லாமல் குலசேகர பாண்டியனை மதுரை மன்னனாக ஒப்புக்கொண்டான்.

ஆனால் நன்றிகெட்ட மதுரை பாண்டியன் குலசேகரன் இலங்கை பராக்கிரம பாகுவுடன் சேர்ந்துகொண்டு சோழ இராசாதிராசனுக்கு எதிராகக் கலகம் செய்தான். ஆகையால் சோழப்படையொன்று மீண்டும் மதுரைக்குச் சென்று குலசேகர பாண்டியனை அரியணையிலிருந்து நீக்கியது. வீரபாண்டியன் அப்பதவியை சோழர்களின் உதவியுடன் பெற்றுக்கொண்டான். இரண்டாம் இராசராசன் ஆட்சிக் காலம் முழுவதிலும் வீரபாண்டியன் சோழப் பேரரசிற்கு அடங்கி ஆட்சி செய்துவந்தான். மதுரையிலும், இலங்கையிலும் சோழப் படைகள் வெற்றியடைந்ததால் “மதுரையும் ஈழமுங் கொண்ட கோ இராசகேசரி” என்ற பட்டத்தை இரண்டாம் இராசராசன் மேற்கொண்டான்.

## வலிமை குன்றுதல்

முதலாம் குலோத்துங்கன் ஆட்சிக் காலத்திலிருந்தே சோழப்பேரரசின் வலிமை குன்றத் தொடங்கியது. மத்திய ஆட்சியிலும் அரசாங்கக் கொள்கையிலும் சிற்றரசர் களுடைய செல்வாக்கும் தலையீடும் மிகுதியாயின. குடிமக்களின் நன்மைக்கான ஆட்சி முறையில் அரசு அதிகாரங்கள் படிப்படியாக குறையத் தொடங்கின. அரசாங்கத்தின் நேர்பார்வையிலிருந்த நாட்டுப் பகுதி குறைந்து சிற்றரசர்களின் நாட்டெல்லை மேன்மேலும் வரிவடைந்தது. சிற்றரசர்கள் என்ற நிலையுடன் இல்லாமல் நிலமானியப் பிரபு முறை போல்வதோர் அமைப்பும் ஏற்பட்டு வளர்பிறை போல் நாளும் வளர்வதாயிற்று. இத்தலைவர்கள் பேரரசனிடம் நடந்துகொள்ள வேண்டிய கடமை

உரிமைகளைப் பற்றிய சட்டதிட்டங்களை வகுத்துக் கொள்வதற்கான ஓர் அரசியல் இணைப்பு அமைப்பு தங்களுக்குள்ளாகவே வகுத்துக் கொள்ளலாயினர். இதுகாறும் அரசனால் நியமிக்கப்பெற்று செயலாற்றி வந்த இத்தலைவர் முறை, தற்போது பிறப்புரிமையின் அடிப்படையிலே அமைவதாயிற்று. எனவே அரசனுடைய தாட்சண்யம் தேவையற்றதாயிற்று. இந்நிலை நாளும் நாளும் வளர்ந்ததால்தான் மிக விரைவிலேயே சோழப் பேரரசு வீழ்ச்சியுறலாயிற்று என்பது தெளிவாகும்.

## மூன்றாம் குலோத்துங்க சோழன் (கி.பி. 1178–1218)

குலோத்துங்க சோழன் காலத்தில் தொடர்ந்து பாண்டிய நாட்டுப் போர் நடந்தது, இவன் பாண்டிய நாட்டில் நடத்திய போரை மூன்று போர்களாகக் கொள்ளலாம்.

முதற்போர் வீரபாண்டியனை அரசனாக்கியமையால் ஏற்பட்டதாகும். சோழ மன்னர்கள் தனக்கு அளித்த உதவியை மறந்து நன்றி கெட்ட வீரபாண்டியன் சிங்கள மன்னனுடன் சேர்ந்து சோழனிடம் பணியாது நடந்தான். இதற்கிடையிலே குலசேகர பாண்டியனுடைய மகன் விக்கிரமபாண்டியன் மதுரை அரசைப் பெறுவதற்காக குலோத்துங்க சோழனின் உதவியை நாடினான். ஆகையால் விக்கிரம பாண்டியனுக்கு உதவி செய்யவந்த குலோத்துங்க சோழப்படை வீரபாண்டியனுடனும் இலங்கைப் படையுடனும் மோதி வெற்றியடைந்தது. வீரபாண்டியன் உயிர் தப்பி சேர நாட்டிற்கு ஓடி ஒளிந்துகொண்டான். விக்கிரமபாண்டியன் அரசுரிமை எய்தினான்.

முடியிழந்த வீரபாண்டியன் சேரனுடைய படையுடன் நெட்டூரில் தோற்றமையால் ஏற்பட்டது இரண்டாம் போராகும். வீரபாண்டியன் சேரனுடைய உதவியுடன் மதுரையின்மீது படையெடுத்தபோது மீண்டும் சோழப்படைகள் மதுரைக்கு அனுப்பப்பட்டன. வீரபாண்டியனுக்கு உதவிய சேரப்படைகள் சிதறியோடின. இரண்டாம் முறையாக தன்னுடைய அரசையும் படையையும் இழந்த வீரபாண்டியன் மீண்டும் சேரமன்னனிடம் அடைக்கலம் புகுந்தான். சோழன் கோபத்திற்கு அஞ்சிய சேரன், பாண்டியனையும் அழைத்துக்கொண்டு குலோத்துங்கனிடம் தஞ்சம் புக, அவன் இருவரையும் ஆதரித்து வீரபாண்டியனுக்கும் பாண்டிநாட்டின் ஒரு பகுதியின் ஆட்சியுரிமை வழங்கியது இரண்டாம் போரின் முடிவெனலாம்.

நன்றிகெட்ட பாண்டியர்களை அடக்குவதற்காகவும், இறுதியாக மதுரையை சோழமண்டலப் பகுதியாக மாற்றியமைத்ததுமே மூன்றாம் போரின் காரணமும் முடிவுமாகும்.

கி.பி. 1190ஆம் ஆண்டில் விக்கிரமபாண்டியன் இறந்தபிறகு அவனுடைய மகன் சடையவர்மன் குலசேகர பாண்டியன் மதுரையின் அரசனானான். நன்றிமறந்த குலசேகரன் சோழர்களுக்கு திறை செலுத்தாமல் காலம் கழித்தான். ‘கடலில் கரை அடித்துச்சென்று ஈழத்தை கைப்பற்றுங்கள்’ சிங்கள வேந்தன் தலையறுத்துவிட்டால் ‘தென்னவர் மூவரும் (சேர, பாண்டிய, சிங்களர்) நம்படி பணியர்’ என குலோத்துங்கன்

கூறியதாக அவனுடைய 16ஆம் ஆண்டு கல்வெட்டொன்று கூறுகின்றது. ஆகையால் சினம் கொண்ட குலோத்துங்க சோழன் பாண்டி நாட்டின் மீது படையெடுத்தான். மட்டியூர், கழிக்கோட்டை போர்களில் பாண்டியன் முறியடிக்கப்பட்டான். முற்றிலும் தோல்வியடைந்த குலசேகரபாண்டியன் நாட்டைவிட்டு ஓடிவிட்டான். குலோத்துங்க சோழன் மதுரையை சோழநாட்டுடன் சேர்த்து மதுரை மண்டலத்தின் பெயரை சோழ — பாண்டிய மண்டலம் என மாற்றியமைத்தான். சேர, சோழ, பாண்டிய நாடுகள் மூன்றிலும் குலோத்துங்க சோழனுடைய இறைமை அதிகாரம் நிலைபெற்றிருந்தமையால் 'திரிபுவனவீர தேவன்' என்ற பட்டத்தையும் மேற்கொண்டான்.

இப்பாண்டி நாட்டுப் போரில் தனக்கெதிராக படைத்துணை உதவிய சிங்கள அரசனை அடக்குமாறு அந்நாட்டின்மேல் குலோத்துங்கன் படையெடுத்துச் சென்று அங்கு நிகழ்த்திய போரில் சிறந்த வெற்றி பெற்றிருக்க வேண்டும் என அவன் கல்வெட்டுகள் மூலம் தெரிகின்றது.

ஈழநாட்டுப் படையெடுப்பு வெற்றிக்குப்பின் குலோத்துங்கன் கொங்கு நாட்டைக் கைப்பற்றினான் எனத் தெரிகிறது. கருவூரைத் தலைநகராகக் கொண்ட கொங்குநாட்டு சிற்றரசன் திறை செலுத்தாததால் தான் குலோத்துங்கன் கருவூரின் மேல் படையெடுத்து கொங்கு நாட்டரசனை முறியடித்தான். தோல்வியடைந்த கொங்கு வேந்தன் சோழனிடம் அடைக்கலம் புகுந்ததால் மீண்டும் அவனுக்கே அரசுரிமையளிக்கப்பட்டது. இதனால் கருவூருக்கு 'முடிவழங்கிய சோழபுரம்' என்ற பெயர் வழங்குவதாயிற்று.

நெல்லூர்ப் பகுதி ஆந்திரர்கள் ஆட்சி செய்து வந்த காஞ்சிபுரத்தையும் குலோத் துங்கன் கைப்பற்றினான். வாரங்கல் நாட்டுக் காகதீய மன்னர்களின் வேங்கி நாட்டின் படையெடுப்பைத் தடுத்து அவர்களையும் தோற்கடித்தான்.

மூன்றாம் குலோத்துங்கனுடைய கல்வெட்டுகள் தெற்கே குமரிமுனையிலிருந்து வடக்கேயுள்ள வேங்கி நாடு வரையில் காணப் பெறுவதால் சேரநாடு, பாண்டியநாடு, கொங்கு, கங்கம், தெலுங்கு முதலிய நாடுகளிலும் சோழப் பேரரசு பரவியிருந்ததெனக் கொள்ளலாம். ஆகையால் இவன் காலத்தில் சோழப் பேரரசு நிலைகுன்றாமல் சிறப்புற்றிருந்தது எனக்கூறலாம்.

மூன்றாம் குலோத்துங்கன் சைவசமய வரலாற்றில் ஒப்புயர்வற்ற பெரு வேந்தனாக விளங்கினான். குடுமியான்மலை, திரிபுவனம் ஆகிய இடங்களில் உள்ள கல்வெட்டுகள் குலோத்துங்கன் கட்டிய கோவில்களைப் பற்றிக் கூறுகின்றன. திருவிடைமருதூருக்கு அருகில் உள்ள திரிபுவன வீரேச்சுரம் கோவிலை எடுப்பித்தான்; தில்லையம்பதியில் பேரம்பல பொன்வேய்ந்தமையும், முகமண்டபம், மூன்றாம் பிரகாரம், சிவகாமக் கோட்ட கோபுரம் முதலியவைகளையும் அமைத்தான். சைவ சமயத்திற்கும், தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் குலோத்துங்கன் செய்த பெருந்தொண்டு சேக்கிழார் அடிகளைக்கொண்டு பெரியபுராணம் என்ற திருத்தொண்டர் புராணத்தை இயற்றி தமிழுலகத்திற்கு தந்தமையாகும்.

## மூன்றாம் இராசராச சோழன் (கி.பி. 1216–1256)

சோழப் பேரரசின் இறுதிக் காலமாகிய மூன்றாம் இராசராசன் மூன்றாம் இராசேந்திரன் ஆகிய இரு சோழ மன்னர்களுடைய ஆட்சியில் பல இன்னல்கள் தோன்றி அப்பேரரசு வீழ்ச்சியடைந்ததெனக் கூறலாம், பேரரசின் தெற்குப் பகுதியிலிருந்து பாண்டியர்களுடைய படையெடுப்பு மேற்கிலிருந்து ஹொய்சாள வமிச அரசர்களுடைய வெற்றிகளும், பேரரசிற்கு முன்னர் அடங்கியிருந்த பல சிற்றரசர்கள் செய்த கலகங்களும் அப்பேரரசின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணங்களாயின. கி.பி. 1279ஆம் ஆண்டுக்குப் பிறகு சோழப் பேரரசு பாண்டிய மன்னர்களுடைய பேரரசில் ஒரு பகுதியாக அமைந்தது.

## பாண்டியர் படையெழுச்சி

கி.பி. 1216ஆம் ஆண்டில் சடையவர்மன் குலசேகர பாண்டியனின் தம்பி மாறவர்மன் முதலாம் சுந்தர பாண்டியன் மன்னனாகப் பதவியேற்றான். இப்பாண்டிய மன்னன் தான் மூன்றாம் குலோத்துங்கனின் இறுதி ஆட்சி காலத்திலே சோழநாட்டின்மீது படை யெடுத்தான் என நீலகண்ட சாஸ்திரியும், சுப்பிரமணியமும் கூறுகின்றனர். ஆனால் மூன்றாம் இராசராசனுடைய ஆட்சியில் தான் (கி.பி. 1218) இப்படையெடுப்பு ஏற்பட்டது என சதாசிவ பண்டாரத்தார் கூறுவார்.

கி.பி. 1219ஆம் ஆண்டில் மாறவர்மன் சுந்தரபாண்டியன் சோழ நாட்டின்மீது படையெடுத்து தஞ்சையையும், உறந்தையையும் செந்தழல் கொளுத்தினான். பழையாறை வடதளி என்ற நகரத்தைக் கைப்பற்றினான். ஓடி ஒளிந்த மூன்றாம் இராசராசன், பாண்டியனுடைய அனுமதியுடன், கப்பம்கட்டி எஞ்சிய சோழநாட்டுப் பகுதிகளை ஆட்சி செய்து வந்தான். இவ்வெற்றிகளால் 'சோழநாடு கொண்டருளிய' 'சோணாடு வழங்கி யருளிய சுந்தர பாண்டியத் தேவர்' என கல்வெட்டுகள் புகழ்ந்து கூறுகின்றன. ஹொய்சாள வமிசத்து அரசனான இரண்டாம் வல்லாளத் தேவன் சோழ அரசனுக்கு உதவிபுரிய முன்வந்ததால்தான் பாண்டிய மன்னன் சோழ அரசு முழுவதையும் கைப்பற்றவில்லை.

## சிற்றரசர்களின் தொல்லை

முன்னர் சோழ அரசுக்குக் கப்பம் செலுத்தி வந்த பாணர்களும், காடவராயர்களும் கப்பம் செலுத்த மறுத்தனர். மகதை அல்லது மலாடு என்ற திருக்கோவலூர் பகுதியில் ஆட்சி செய்து வந்த பாண கோவனராயன் தன்னாட்சி அமைத்தான்; சோழ நாட்டின் மேற்பகுதியைக் கைப்பற்றினான். நீடுர் என்னும் இடத்தைச் சேர்ந்த நிலப்பகுதிகளை காடவ மன்னன் கோப்பெருஞ்சிங்கன் கைப்பற்றினான்.

## பாண்டியனுடைய இரண்டாம் படையெழுச்சி

வாணவர்கள், காடவராயர்கள், சேதிராயர்கள் முதலிய சிற்றரசர்கள் கப்பம் செலுத்த மறுத்ததால் சோழ அரசனால் வாக்குக் கொடுத்தபடி பாண்டியனுக்கு கப்பம் செலுத்த முடியவில்லை. சினம் கொண்ட பாண்டியன் மீண்டும் இரண்டாம் முறையாக கி.பி.

1231ஆம் ஆண்டில் சோழ நாட்டின் மேல் படையெடுத்தான். போரில் இராசராசன் தோல்வியடைந்ததோடு அல்லாமல் தன் சேனையையும், அரசுப் பதவியையும் இழந்தான். ஹொய்சாள மன்னனிடமிருந்து உதவி பெறுவதற்காக வடக்கு நோக்கிச் சென்று கொண்டிருந்த இராசராசனை காடவர்குலத்து கோப்பெருஞ்சிங்கன் சிறை பிடித்தான்.

சோழ நாட்டின் இழிநிலையை நோக்கிய ஹொய்சாள அரசன் வீரநரசிம்மன், சோழ அரசனை மீண்டும் பதவியில் அமர்த்தும் நோக்குடன் பாணர்குல மன்னர்களின் மகதநாட்டைக் கைப்பற்றினான். மேலும் எள்ளேரி, கலியூர் மூலை தொழுதூர், தொண்டைமான் நல்லூர், திருவதிகை, திருவக்கரை முதலிய இடங்களைக் கைப்பற்றி கோப்பெருஞ்சிங்கனுடைய சேந்தமங்கலத்தை முற்றுகையிட்டான். அஞ்சிய கோப்பெருஞ் சிங்கன் சோழ அரசன் இராசராசனை விடுதலை செய்தான். இம்முறைமூலம் மீண்டும் கி.பி. 1231ஆம் ஆண்டில் இராசராசன் அரசுரிமை பெற்று, கி.பி. 1256 ஆண்டுவரை பெயரளவில் அரசனாக ஆட்சி செய்தான்.

## மூன்றாம் இராசேந்திரன் (1256–1279)

இவன் சாளுக்கிய — சோழ வமிசத்தின் கடைசி அரசன். தமது ஆட்சியின் முற்பகுதியில் வெற்றி நடைபோட்ட இம்மன்னன் இறுதியில் சோழ அரசையே இழந்தான். பாண்டிய நாட்டின்மேல் படையெடுத்து மன்னன் மாறவர்மன் பாண்டியனைத் தோற்கடித்தான். இதன்மூலம் தன் தந்தை காலத்தில் ஏற்பட்ட தோல்வியின் இழிவுகளை நீக்கினான். ஒய்மா நாட்டு சம்புவராய மன்னனைத் தனக்கு அடிபணியும்படி செய்தான். ஆனால் காஞ்சிபுரத்தையும் அதைச் சூழ்ந்த பகுதிகளையும் தெலுங்கு சோழன் திக்கண்ட கோபாலனிடம் இழந்தான்.

கி.பி. 1251ஆம் ஆண்டில் மாறவர்மன் சுந்தரபாண்டியனுக்குப் பிறகு சடையவர்மன் சுந்தர பாண்டியன் அரசு பதவியேற்றான். இவன் 1257ஆம் ஆண்டில் சோழ அரசன் மூன்றாம் இர்ாசேந்திரனை தோற்கடித்தான்; சோழநாடு பாண்டியப் பேரரசின் ஒரு பகுதியாக மாறியது. இப்பாண்டிய மன்னன் ஹொய்சாள, சோழ, காகதீய வமிச அரசர்களையெல்லாம் வென்று தென்னிந்தியாவின் பெரும் பகுதியை பாண்டியப்பேரரசின் கீழ் கொண்டுவந்தான்.

## பயிற்சி வினாக்கள்

1) முதலாம் பராந்தகனின் சாதனைகளை மதிப்பிடுக.

2) முதலாம் இராசராசனின் பணிகளைப்பற்றி ஒரு கட்டுரை வரைக.

3) சாளுக்கிய சோழர்களின் வரலாற்றைப்பற்றி சுருக்கமாக ஒரு கட்டுரை வரைக.

4) சாளுக்கிய சோழர்களுக்கும், பாண்டியர்களுக்கும் இருந்த உறவு முறையைப் பற்றி விளக்கமாக ஒரு கட்டுரை வரைக.

## பாடம் – 9 இரண்டாம் பாண்டியப் பேரரசு

வரகுணவர்மன் ஆட்சிக் காலத்தில் முதலாம் பாண்டியப் பேரரசு அதன் புகழின் உச்சநிலையை அடைந்திருந்தது. வரகுணவர்மன் காவிரிக்கரையிலுள்ள இடவை வரையிலும் படையெடுத்துச் சென்றான். ஆனால் அப்பேரரசன் கி.பி. 880ஆம் ஆண்டு (இந்த ஆண்டு தற்போது கிடைத்துள்ள சான்றுகள் மூலம் சற்று மாற்றத்திற்குட்பட்டுள்ளது. பெரும்பாலும் இது 888-ஆம் ஆண்டாக இருக்கலாம்). நடைபெற்ற திருப்புறம்பியப் போரில் தோல்வியுற்றான். சோழராட்சியைத் தொடங்கிய விஜயாலயனின் மகன் ஆதித்தனும், பல்லவர் ஆட்சியை முடித்த அபராஜிதனும் இப்போரில் வெற்றி கொண்டனர். இர்போரின் விளைவாகப் பாண்டியப்பேரரசு நலிவுற்றது. வளர்ந்து வரும் சோழப்பேரரசு பொலிவுற்றது. ஆதித்தனுக்கடுத்தபடி சோழக்கட்டில் ஏறிய பராந்தகன், இரண்டாம் இராசசிம்மபாண்டியனைப் பலமுறை வெற்றி கொண்டான். பாண்டியப் பேரரசின் வலிமை குன்றிற்று. அவ்வமயம் பராந்தகனுக்கும் இராட்டிரகூட அரசனுக்குமிடையே பகைமை மூளத் தொடங்கிற்று. அதன் விளைவாகப் பராந்தகனின் மூத்த மகனாகிய இராஜாதித்தன் கி.பி. 949ஆம் ஆண்டில் நடைபெற்ற தக்கோலப் போரில் கொல்லப்பட்டான். பராந்தகன் சோழநாட்டின் வடபகுதியில் தம் படைகளை ஏவியதால், தென்பகுதி தளர்ந்து போயிற்று. இச்சூழ்நிலையைப் பயன்படுத்திய வீரபாண்டியன் கி.பி. 966ஆம் ஆண்டளவில் மதுரையை மீட்டு தன்னாட்சியை ஆரம்பித்தான். இவன் 'சோழன் தலைகொண்ட கோவீர பாண்டியன்' என்றும் 'சோழாந்தகன்' என்றும் புகழப்படுகிறான். இவனால் கொல்லப்பட்ட சோழன், பராந்தக சுந்தரசோழன் என்றும் சோழ இளவரசர்களுள் ஒருவனாகிய கண்டராதித்தன் என்றும் கருதப்படுகிறது. இப்பாண்டியனே கி.பி. 966ஆம் ஆண்டு நடைபெற்ற போரில் ஆதித்த கரிகாலனால் கொல்லப்பட்டான். 'வீரபாண்டியன் தலைகொண்ட கோப்பரகேசரிவர்மன்' என்ற விருதுப் பெயரையும் ஆதித்தன் ஏற்றுக்கொண்டான். வீரபாண்டியனின் மரணத்தைத் தொடர்ந்து பாண்டிய நாடு சோழர் ஆட்சிக்குட்படத் தொடங்கிற்று.

பாண்டிய நாட்டில் ஆக்கமேதுமில்லாத தேக்க நிலை ஏற்பட்டது. பாண்டியரும் உரிமையிழந்து காணப்பட்டனர். பாண்டியப்பேரரசு சோழரது காலடியில் வீழ்ந்து விட்டது. பாண்டியர்களோ வெறும் திறை செலுத்தும் சிற்றரசர்களாயினர். சில வேளைக்ளில் அவர்கள் உரிமை வேட்கையில் வெகுண்டெழுந்தனர். ஆனால் அவற்றால் பயனேதுமேற்படவில்லை. தொடர்ந்த ஆண்டுகளில் சோழராட்சியின் கீழ் இவர்கள் அவதிப்பட்டனர். பாண்டியர்களின் பெயர்கள் மட்டுமே சோழக் கல்வெட்டுக்களில் பொறிக்கப்பட்டுள்ளன. ஆனால் அவர்களைப் பற்றிய செய்திகளேதும் குறிக்கப்பட வில்லை. இராசராசன், இராசேந்திரன், குலோத்துங்கன் ஆகிய சோழப் பேரரசர்கள் பாண்டிய நாடு இணைந்த பெரும் சோழப் பேரரசினை ஆண்டு வந்தனர். இராசேந்திரன் காலத்தில் உரிமைப்போர் நடத்திய பாண்டியன், சோழப் பேரரசால் மலையமலைக்கு விரட்டப்பட்டான். பாண்டிய நாட்டைக் கைப்பற்றித் தம் மகனைப் பிரதிநிதியாக நியமித்து 'சோழ பாண்டியன்' என்று அழைத்துக் கொண்டான். முதலாம் குலோத்துங்கன் ஆட்சிக் காலத்தும், சோழ பாண்டியர் ஆட்சியே பாண்டிய நாட்டில் நடைபெற்று

வந்ததாகத் தெரிகிறது. பாண்டிய நாட்டுப் பெரும்பகுதிகள், கோட்டங்கள், வளநாடுகள், நாடுகள், யாவும் சோழப் பரம்பரையினர் பெயரைத் தாங்கி நின்றன. தம் படைகளையும் ஆங்காங்கு நிறுவி மேற்கொண்டு உரிமைப்போரோ, படைபலப்போரோ நடக்காவண்ணம் பாதுகாத்தனர். சோழப் பெயர் பெற்ற சில பாண்டியன் பிரதிநிதிகள். மாறவர்மன், பராக்கிரம சோழ பாண்டியன் என அழைக்கப்பட்டனர். சுருங்கக்கூறின், பாண்டிய நாடு சோழமயமாக்கப்பட்டது எனலாம்.

இச்சூழ்நிலையில் பாண்டியரும் வாளா வெட்டிகளாக இருந்துவிடவில்லை. அவர்கள் ஆங்காங்கு தத்தம் உரிமைப் போரினை நடத்தி வந்துள்ளனர். மானாபரணன், வீரகேரள பாண்டியன், சுந்தரபாண்டியன், விக்கிரம பாண்டியன், வீரபாண்டியன் போன்றோர் வெகுண்டெழுந்தனர். சீவல்லப் பாண்டியனும், பாண்டியன் வீரகேசரியும் சோழருக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தினர். முதலாம் குலோத்துங்கன் கி.பி. 1070ஆம் ஆண்டு சோழப் பேரரசன் ஆனான். இவன் பாண்டிய நாடு, ஈழம், சேரநாடு ஆகிய நாடுகளைக் கைப்பற்றிக் கொண்ட போதும், இவனுடைய செல்வாக்குப் பாண்டிய நாட்டில் நலிவுற்றது. பாண்டியர் நீட்சியுறத்தொடங்கினர் எனலாம்.

முதலாம் குலோத்துங்கனாட்சியின் போது பாண்டியர் ஆங்காங்கு தம் தன்னாட்சியை நிறுவிக் கொண்டனர். இச்செய்தி கேட்டு வெகுண்ட குலோத்துங்கன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்தான் ஐந்து (பஞ்ச) பாண்டியரை முறியடித்தான்; வெற்றித் தூண்களை எழுப்பினான். குலோத்துங்கனின் சமகாலப் பாண்டியருள் ஒருவன் சடையவர்மன் சீவல்லபன். இப்பாண்டியன் 'திரிபுவனச் சக்கரவர்த்திகள்' என்று அறியப்படுகிறான். இவன் 'மதுரைக் கோயிலில் உள்ளாளை அழகிய பாண்டிய கூடத்து பள்ளிக் கட்டிலில்' வீற்றிருந்தான் என்று தெரிகிறது. இவன் பெயரைக் கொண்ட 'சீவல்லப வளநாடு' பாண்டிய நாட்டில் இருந்ததாகத் தெரிகிறது. குலோத்துங்கனுக்குச் சமமாகப் பிறிதொரு பாண்டியன் மாறவர்மன் திரிபுவன சக்கரவர்த்தி பராக்கிரம பாண்டின். சடையவர்மன் பராக்கிரம பாண்டியனுக்குப் பின் முடிசூட்டிக்கொண்ட பாண்டியன் சடையவர்மன் பராந்தக பாண்டியன்; இவனுடைய கன்னியாகுமரிக் கல்வெட்டு, இவன் சேரரை வென்ற செய்தியையும், தென் கலிங்கத்தை வென்ற செய்தியையும் குறிப்பிடுகின்றது. மாறவர்மன் சீவல்லபன் கி.பி. 1132-33ஆம் ஆண்டுகளில் அரியணை ஏறியதாகத் தெரிகிறது. இவன் ஆணை பெற்ற ஆண்டபிள்ளை பட்ட அதிராத்ரயாஜி சுசீந்திரம் கோயிலுக்குக் கொடையளித்ததாக அறியப்படுகிறது. இவனுக்குப்பின் கி.பி. 1162ஆம் ஆண்டு பாண்டியன் நாட்டு முடியைச் சூட்டிக் கொண்டவன் சடையவர்மன் குலசேகர பாண்டியன். இவ்வேளையில் இவனுக்கும், பராக்கிரம பாண்டியனுக்கும் போர் நடந்ததாகத் தெரிகிறது. இவ்வுள்நாட்டுப் போரில் பராக்கிரம பாண்டியன் ஈழ நாட்டுதவியை நாடினான். இலங்கைப்படை இலங்காபுரன் என்பான் தலைமையில் பாண்டிய நாடு அடையுமுன், குலசேகரன் பாராக்கிரமனை வென்று கொன்றான். சிங்களப் படையோ முன்னேறி வந்து, பாண்டியப் படைத்தளபதிகளை வென்று, பலவிடங்களைக் கைப்பற்றியது. குலசேகரன் கொங்குப் படைகளையும், தம் படைகளையும், பராக்கிரம பாண்டியன் படைகளையும் இணைத்து, சிங்களரை எதிர்த்தான்; படுதோல்வியைத் தழுவினான், மதுரையைக் கைப்பற்றிய சிங்களர், பராந்தக

பாண்டியனின் மகனாகிய வீரபாண்டியனுக்கு முடிசூட்டி மகிழ்ந்தனர். குலசேகர பாண்டியன் மீண்டும் படை திரட்டிக்கொண்டு வீரபாண்டியனை எதிர்த்தான் வீரபாண்டியன் ஈழ உதவியை நாடினான். பராக்கிரம பாகு என்ற சிங்கள மன்னன் குலசேகரனை மீண்டும் வெற்றிகொண்டான்; வீரபாண்டியன் மீண்டும் அரியணையேறினான். குலசேகரபாண்டியனுக்கு உதவிசெய்யும் பொருட்டு சோழர் வந்தனர். இரண்டாம் இராசாதிராசன் குலசேகரனுக்கு உதவ முன்வந்தான். பராக்கிரம பாகுவும் வீர பாண்டியனும் போரில் தோல்வியைத் தழுவினர். குலசேகரன் பாண்டிய நாட்டு முடியடைந்தான். சிங்களனும் வேறு வழியின்றி குலசேகரனைப் பாண்டிய நாட்டு மன்னனாக ஒப்புக்கொண்டான். பாண்டிய நாட்டுக்கும், சிங்கள நாட்டுக்கும் புது உறவுகள் ஏற்படத் தொடங்கியதால், குலசேகரன் சோழரைப் பகைத்தான். மீண்டும் கி.பி. 1175ஆம் ஆண்டு சோழரால் அரசுக் கட்டிலை குலசேகரன் இழந்தான். இவனைத் தொடர்ந்து சடையவர்மன் பராக்கிரம பாண்டியனும், சடையவர்மன் வீரபாண்டியனும் அரியணை ஏறினர். சிலர் கருத்துப்படி குலசேகரனும், பராக்கிரமனும் இணையாட்சி நடத்தினர் என்றும் தெரிகிறது.

சடையவர்மன் வீரபாண்டியன் கி.பி. 1175இல் முடிசூட்டிக் கொண்டான். இவன் கி.பி. 1180 வரையிலும் பாண்டிய நாட்டையாண்டதாகத் தெரிகிறது. குலசேகர பாண்டியனின் மகனான விக்கிரம பாண்டியன் மூன்றாம் குலோத்துங்கனின் உதவி பெற்று, வீரபாண்டியன் மீது போர் தொடுத்தான். பாண்டியனோ சிங்களவர் உதவியை நாடினான். பாண்டியரும், சிங்களவரும், வேணாட்டினரும் சோழப்படைகளை எதிர்த்தனர். 1180ஆம் ஆண்டு நடைபெற்ற போரில், இக்கூட்டுப்படைகள் சிதறடிக்கப்பட்டன. 1180ஆம் ஆண்டு விக்கிரமபாண்டியனே மதுரைக்கு மன்னரானான்.

நாடிழந்த வீரபாண்டியன் சேரர் உதவியை நாடினான். வீரபாண்டிய சேரப்படைகள் மதுரை நோக்கிப் பாய்ந்தன. இது கேட்ட மூன்றாம் குலோத்துங்கன் வீரபாண்டியனை நெட்டூரில் வழிமறித்து போரிட்டான். போரில் வெற்றி கொண்ட சோழன் பாண்டிய முடியைக் கவர்ந்தான். வீரபாண்டியன் மீண்டும் நாடிழந்தான்; குலோத்துங்கன் அடிகளைப் பணிந்தான்; சோழன் சில பகுதிகளை அவனுக்களித்து, முடியாட்சி மீட்பு தந்தான். ஆனால் மதுரையில் கி.பி. 1190ஆம் ஆண்டு வரை விக்கிரம பாண்டியன் ஆட்சியே நடைபெற்று வந்தது. இவன் சோழர் கைபட்ட பொம்மை.

மூன்றாம் குலோத்துங்கனுக்குப் பின் அரியணையேறிய சோழன், மூன்றாம் இராசராசன், வலிமை குன்றியவன். சோழப் பரம்பரையின் வீழ்ச்சியால் பாண்டியர் வலிமை பெறத்தொடங்கினர். சிற்றரசுத் தன்மையையும் உதறி எறியத் தலைப்பட்டனர். சோழபாண்டியர் என்ற பிரதிநிதிப் பதவியையும் வேறுடன் அறுத்துவிட்டனர். இப்பாண்டியப் பேரரசு கி.பி. 1190ல் நிறுவப்பட்டு கி.பி. 1310 (1312) வரை நீடித்திருந்த தாகத் தெரிகிறது. இப்பாண்டியரைப் பற்றிய கல்லெழுத்துக்களும், அந்நியர் பயணக் குறிப்புகளும் நமக்குக் கிடைத்துள்ளன. மார்க்கோ போலோ, வாசாஃப் போன்ற அந்நியரின் பயணக்குறிப்புகளும், கீழ்ஹார்ன், சுவாமிக்கண்ணுப்பிள்ளை, N. சேதுராமன் போன்றோரின் காலக்கணிப்பு முறைகளும் பெரிதும் பயன்படுகின்றன. இவர்கள் (பாண்டியர்கள்) கோயில் கொத்தளங்கள் பல அமைத்துள்ளனர். கோபுரங்கள், கோட்டைகள் பல கட்டியெழுப்பியுள்ளனர்.

## சடையவர்மன் குலசேகர பாண்டியன் (1190–1216)

விக்கிரம பாண்டியனின் ஆட்சிக்காலம் பாண்டியர் மறுமலர்ச்சிக் காலத்தின் தொடக்கமென்று பேராசிரியர் ஆரோக்கியசாமி கருதுகிறார். இப்பாண்டியனின் மகன் என்று பலராலும் கருதப்படும் முதலாம் சடையவர்மன் குலசேகர பாண்டியனே, இப்பேரரசைத் தோற்றுவித்தான். பின்னவன் முன்னவனின் மகன்தானா என்பது உறுதியாகத் தெரியவில்லை என்று பேராசிரியர் இராமன் கருதுகிறார். குலசேகரபாண்டியன் ஏறத்தாழ 1218ஆம் ஆண்டுவரை பாண்டிய நாட்டையாண்டான். இவன் தரணி முழுதுடையாள் என்னும் சேர நாட்டு இளவரசியைத் தம் பட்டத்து ராணியாகக் கொண்டான். கோதை இரவிவர்மன் இவனுக்கு மைத்துனரானான். இவனுடைய மெய்க்கீர்த்திகள் "பூவின் கிழத்தி", 'பூதல மடந்தை', 'பூதல வனிதை' என்று தொடங்கின. இவனது பள்ளிக்கட்டில் 'மழவரையன்', 'காலிங்கரையன்', 'முனையதரையன்' என்ற பெயர்களால் அழைக்கப்பட்டன. சேர இளவரசனாகிய கோதை இரவிவர்மன் சேத்தூரிலுள்ள பெருமாள் கோவிலைக்கட்டினான் இது 'சேரங்கராயன் விண்ணகர்' என்று அழைக்கப்படுகிறது. இவனாட்சியின்போது 'குலசேகர நரசிங்க மண்டபம்' ஒன்று இருந்ததாக திருப்பரங்குன்றம் கல்லெழுத்து அறிவிக்கின்றது.

இவன் மதுரையை ஆளுங்கால், மூன்றாம் குலோத்துங்கன் கொங்கு நாட்டைத் தாக்கினான். கருவூரை அவன் கைப்பற்றினான். வெற்றிபெற்ற குலோத்துங்கன் மதுரையில் மீண்டும் முடிசூட்டிக்கொள்ள விழைந்தான். இது கேள்விப்பட்ட குலசேகரன் தம் நிலைமையுணர்ந்து, இச்சோழனைப் பகைக்கத் தொடங்கினான். சோழனோ இவனை நன்றி மறந்தவன் என்று கொண்டு இவனை அடக்கத்திட்டமிட்டான் இருதரப்புப்படைகளும் மட்டியூர், கள்ளிக்கோட்டை என்னுமிடங்களில் மோதின. பாண்டியனுக்கு சிங்களர் உதவி தந்தனர். தோல்வியைத் தழுவிய பாண்டியனோ, மதுரையைவிட்டோடினான். குலோத்துங்கன் மதுரையில் முடிசூட்டிக்கொண்டான். கோபங்கொண்ட சோழன் பல மண்டபங்களை இடித்துப் பாழ்படுத்தினான். 'சோழ பாண்டியன்', 'திரிபுவன வீரதேவன்' என்ற விருதுப் பெயர்களை அவன் சூட்டிக் கொண்டான். இச்செயல்கள் கி.பி. 1202க்கு முன் நடந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. ஆனால் மட்டியூர்ப்போர் கி.பி. 1205இல் நடைபெற்றதாகப் பேராசிரியர் இராமன் கருதுகிறார். எப்படியும் சோழன் பாண்டிய நாட்டைச் சோழமண்டலத்துடன் இணைத்துக்கொண்டான். சில ஆண்டுகள் கடந்து தாம் வென்ற நாட்டை குலசேகரனுக்கே தந்தான் என்று தெரிகிறது. இவன் அந்தணர்க்குப் பிரம்மதேயம் வழங்கியுள்ளான். எப்படியும் இவன் சோழர்க்கு அடங்கியே ஆண்டுவந்துள்ளான்.

இவன் தம் பெயரால் வெட்டப்பட்டகுளம் ஒன்றி ஆழப்படுத்துவதற்கு, நூறு கிராமங்களைக் கொடையாக அளித்தான். கப்பலூரைச் சேர்ந்த மானாபரண மூவேந்த வேளான் வகையிலிருந்து தியாகஞ்சிறிய பேராறு ஒன்று வெட்டினான். இவனாட்சியின் போது நிலங்கள் அளக்கப்பட்டுள்ளன. இவன் பயன்படுத்திய புது அளவைகள் 'களவழி நாடால்வான்' என்று அறியப்படுகின்ற அதிகாரிகளால் பயன்படுத்தப்பட்டுள்ளன. நிலவரி ஒழுங்காக வசூலிக்கப்பட்டதாகத் தெரிகிறது. இவன் காலத்து அரசியல் தலைவர்களில் களவழி நாடாள்வான் தலைசிறந்தவன். இவன் கி.பி. 1288ஆம் ஆண்டுவரை உயிர் வாழ்ந்திருக்கலாம்.

## முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1216–1239)

மாறவர்மன் சுந்தரபாண்டியன் தம் அண்ணனின் ஆட்சியின்போது பட்டத்து இளவரசனாக இருந்திருந்தான். கி.பி. 1216ஆம் ஆண்டிலேயே அரசபதவி பெற்றான். இவர்கள் இருவரும் விக்கிரமபாண்டியனை பெரிய நாயனார் என்றும், அழக பெருமாள் என்ற தலைவனை மைத்துனன் என்றும் கருதுவதால், இவன் குலசேகரனுக்குத் தம்பி என்று கூறத்தோன்றுகிறது. இவனது பட்டத்தரசி உலகமுழுதுமுடையாள். இவனுடைய சமகால சோழமன்னன் மூன்றாம் இராசராசன், குலோத்துங்கனின் படைவெற்றியால் துவண்டுபோன பாண்டியர் சோழரைப் பழிவாங்கத் திட்டமிட்டனர். இந்நோக்குடன் அவன் சோழனாட்டின் மீது படையெடுத்தான்; இராசராசனை வென்றான். இப்படை யெடுப்பு மூன்றாம் குலோத்துங்கன் காலத்திலேயே நடந்ததாகத் தெரிகிறது. உரையூரையும், தஞ்சையையும் கைப்பற்றினான். இவற்றை நாசமாக்கினான். பல மாளிகைகளும், பட்டணங்களும் தீக்கிரையாயின. சில பகுதிகளைப் பாண்டிய நாட்டுடன் இணைத்துக் கொண்டான். சோழன் பழையாறையில் தஞ்சம் புகுந்தான். வெற்றியின் சிறப்பால் உந்தப்பட்ட பாண்டியன் 'வீராபிஷேகம்' பண்ணினான். 'சோணாடு கொண்டருளிய தேவர்' என்ற விருதுப் பெயரையும் அவன் கொண்டான். சோணாட்டு மன்னன் என்றும் தம்மை முடிசூட்டிக்கொண்டான். பின் சிதம்பரத்தில் நடராசரை வாழ்த்தினான், வணங்கினான். தாம் கைப்பற்றிய சோணாட்டை சமயக் கோடைகளாகப் பலருக்கு அளித்தான். இப்படிச் சோழருக்கு வழங்கியதால் வடபால் வளர்ந்து வந்த போசளரை எதிர்க்க வழி செய்தான்.

போசளர், சோழப் பேரரசுடன் மணவுறவு கொண்டிருந்தனர். பாண்டியரின் எழுச்சி யால் அவதியுற்ற சோழரைக் காத்திடவும் அவர்கள் முயன்றனர். வீரநரசிம்மன் சோழருக் குதவ முன் வந்தான். இராசராசனையே சோணாட்டுக்கு மன்னராக்கி, போசளரை மடக்கினான்.

கி.பி. 1224ஆம் ஆண்டு காடவராயனாகிய கோப்பெருஞ்சிங்கன் மூன்றாம் இராசராசனை சேந்தமங்கலத்தில் சிறையிட்டான். வீரநரசிம்மன் கோப்பெருஞ்சிங்கனின் நாட்டைத்தாக்கினான். இராசராசன் சிறை மீட்கப்பட்டான். மகேந்திர மங்கலத்து சுந்தரபாண்டியனை வென்றதாகவும் போசளர் கூறுகின்றனர்.

இவன் கொங்கு நாட்டு அரசுரிமைப்போரில் தலையிட்டான். வடகொங்கு வேந்தன் பாண்டியன் அவை புகுந்தான். தென்கொங்கு மன்னனும் பாண்டியன் முடிவணங்கி நின்றான். அவர்களிடையே ஏற்பட்ட போட்டிப் பகைமைகளைத் தீர்த்து, அவர்களுக்கு நண்பனானான். கொங்கு மன்னர்கள் பாண்டியருக்கு நண்பராயிருந்தனர்.

மூன்றாம் இராசராசன் ஒழுங்காய் திறை செலுத்தவில்லை 1123ஆம் ஆண்டு தம் பெரும் படையினை சோணாடு நோக்கி ஏவினான். சோழன் வெற்றி கொள்ளப்பட்டான். சோழராட்சியும் இத்துடன் முடிவடைந்ததாகத் தெரிகிறது. திருச்சியும், புதுக்கோட்டையும் பாண்டியர் வ்சமாயின. வெற்றிக் களிப்பால் பாண்டியன்; வீராபிடேகமும், விசயாபி டேகமும் நடத்தினான். இவன் சோணாடு வழங்கியருளிய ஸ்ரீ சுந்தரபாண்டியத்தேவர் என்றும் சோணாடு கொண்டு முடிகொண்ட சோழபுரத்து வீராபிஷேகமும் விசயாபிடேக

மும் பண்ணியருளிய சுந்தரவீரபாண்டியத்தேவர்' என்று புகழப்படுகிறார். சோணாட்டுப் போர் பெரும்பாலும் இவனுடைய பதினைந்தாம் ஆட்சியாண்டுக்குப்பின் நிகழ்ந்ததாகக் கருதப்படுகிறது. போசளரின் தலையீட்டால் இவன் சோணாட்டில் தம் ஆட்சியை நிலை நாட்ட இயலவில்லையென்றும் தெரிகிறது. இப்பாண்டியன் போசள அரசன் நரசிம்மனுக்குத் திறை செலுத்தினான் என்று கத்திய கர்ணாமிர்தம் என்ற கன்னட நூல் நிறுவுகின்றது. கி.பி. 1236ஆம் ஆண்டுக் கல்வெட்டொன்று போசளர் படைத் தலைவனான 'மகாப்பிரதானி போக தண்ட நாயகன்' பாண்டிய நாட்டின்கண் கொள்ளையடிக்காமல் இருத்தற்பொருட்டு அவனுக்குக் காப்புரிமை (immunity) அளிப்பதற்காக இளையான்குடி வாழ் மக்களிடம் தனி வரியொன்று (special cess) வசூலிக்கப்பட்டதாகக் கூறுகின்றது. போசளர் பாண்டிய நாட்டெல்லையைத் தாக்கினர். பாண்டியன் இது கண்டு மனம் பொருமினான். ஆனால், அவனால் ஏதும் செய்ய இயலாத நிலையில் போசளருக்கு அடங்கியிருந்தான்.

இப்பாண்டியனின் மதுரை அரியணை 'மழவராயன்' என்று அழைக்கப்படுகிறது. இவன் வரகுண ஈசுவரம் கோயிலில் 'சுந்தரபாண்டியன் சந்தி' நடைபெற வகை செய்தான். இவன் வைணவத் திருத்தலங்களுக்கும் மான்யம் வழங்கியுள்ளான். சிவன் கோயில்களுக்கு நிவந்தங்கள் அளித்துள்ளான். திருச்சி மாவட்டம் பள்ளபட்டியையடுத்துள்ள ரெங்கமலையின் மீது சிவன் கோயிலொன்று கட்டியுள்ளான்.

இவ்வாட்சியின் போது பல அரசு அதிகாரிகள் நல்லாட்சிக்காக அயராது உழைத்துள்ளனர். சோழன் உய்ய நின்றாடுவானான குருகுலத்தரையன், கண்டன் உதயன் செய்தான், காங்கேயன் திருக்கானப் பேருடைத்தான், மழவச் சக்கரவர்த்தி ஆகியோர் அவ்வதிகாரிகளில் சிறப்புடையோர். இவர்களில் சிலர் திருத்தலங்களும் கற்றளிகலும் கண்டுள்ளனர். புலவர்களையும், ஆசான்களையும் இவர்கள் போற்றினர். மேலும் திருப்பத்தூர் கல்வெட்டொன்று வேறு பதினொரு அதிகாரிகளைக் குறிக்கின்றது. களவாயில் நாடாள்வானான கண்டன் ஆளுடையானும் ஒருவன்.

பாண்டியன் பல விருதுப் பெயர்களைக் கொண்டிருந்தான்; ஞானசமுத்திரன், கலியுகராமன், அதிசயபாணியதேவர், சோணாடு கொண்ட சோணாடு வழங்கியருளிய தேவர் என்பன சில. இவன் பெயரால் வழங்கப்பட்டதே 'சுந்தரபாண்டியன் சதுர்வேதி மங்கலம்'. விழாக்கள், இம்மன்னனின் பெயரால் நடைபெற்றுள்ளன. 'முடிவழங்கும் பெருமாள் சந்தி' இதற்கு எடுத்துக்காட்டு. அதன்படி பல நாணயங்களையும் வெளியிட்டான்.

கோயில் திருப்பணிகள் பலவும் இவன் மேற்கொண்டான். மதுரை திருவாலவா யுடையார் சுவாமி சன்னதி ஒன்பது நிலைக் கிழக்குக் கோபுரத்தைக் கட்டி முடிக்கும் பெரும்பணியை இவன் மேற்கொண்டான். மதுரை மேலமாசி வீதியிலுள்ள 'இம்மையில் நன்மை தருவார் கோவில்' இவனால் கட்டப்பட்டதேயாகும். சுந்தரபாண்டியன் திருமதிலும், அம்மன் கோயிலில் உள்ள சுந்தரபாண்டிய மண்டபம் மதுரைக்கோயிலில் இவனால் பணியப்பட்டவை. திருவானைக்கோயில் ஜம்புகேசுரர் கோயிலில் ஏழடுக்கு

சுந்தரபாண்டியன் திருக்கோபுரமும் இவன் அமைத்தது. இக்கோயிலின் பழையமதில், 'திருநீற்று சுந்தரபாண்டியன்' என்னும் பெயர் பெற்று வழங்குகிறது. இவன் இல்லாளின் பெயரில் திருபுவனமாதேவி நல்லூர் என்ற ஊரையும் ஏற்படுத்தினான்.

இவன் சிறந்த பேரர்வீரன், இறைப்பற்றுடையோன், கலையுள்ளம் கொண்டோன். அரசியல் ஆண்மையும் நுண்மையும் கொண்டவன். இவனாட்சிக்காலம் மதுரையின் மீட்புக்காலம்; மறுமலர்ச்சிக்காலம்.

## இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1238–1251)

முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் ஆட்சி இறுதியின் போது இரண்டாம் சடையவர்மன் குலசேகரபாண்டியன் இளவரசனாக இருந்தான். சுந்தரபாண்டியனின் கல்வெட்டொன்று குலசேகரன் என்ற பெயர்கொண்ட மைத்துனரைக் குறிக்கின்றது. இளவரசன் குலசேகரனும், கல்வெட்டில் கண்ட குலசேகரனும் ஒருவரா, வேறானவரா என்பது தெரியவில்லை. இவன் ஏறத்தாழ இரண்டாண்டுகள் (1237-38) ஆட்சி புரிந்திருக்கலாம்.

இவனுக்கடுத்து அரியணை ஏறியவனே இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன். இரண்டாம் சடையவர்மன் குலசேகரனும், இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனும் சகோதரர்களாக இருக்கலாம். மூத்தவன் இறந்துவிடவே, இவன் பதவிக்கு வந்தான் என்க. இவனுடைய மதுரை அரியணை 'இரண்டாம் மழவராயன்', 'பல்லவராயன்' என்னும் பெயர்களைக் கொண்டுள்ளன. இம்மன்னனின் இல்லாள் உலக முழுதுடையாள். இவன் மாறவர்மன் விக்கிரமபாண்டியனுக்கு உடன்பிறந்தான். சோழ மன்னன் வீரசோமேசுவரன் இவனுக்கு மாமன் என்றும் தெரிகிறது. விக்கிரமசோழன் தூண்டுதலால் இவன் பல நிவந்தங்கள் அளித்துள்ளான். போசளரின் செல்வாக்கு பாண்டிய நாட்டில் பெருகி யுள்ளது. திருமயத்தில் வைணவர்க்கும், சைவர்க்கும் ஏற்பட்ட மோதலை போசளர் தீர்த்து வைத்தனர். போசளர் வீரசோமேசுவரன் பெயரில் ஓர் ஊர் அமைக்கப்பட்டது. மூன்றாம் இராசேந்திரன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து, பாண்டியனைத் திறைசெலுத்தச் செய்தான். போசளர் தலையீட்டினால் பாண்டியன் தலை தப்பிற்று. வீரசோமேசுவரன் தம் கல்வெட்டுகளில் 'இராசேந்திரனைப் போரில் வென்றவன்' என்றும் 'பாண்டியன் குலக்காவலன்' என்றும் கூறிக்கொண்டான். நாங்குநேரிக் கல்வெட்டு 'இரணசிங்கவீரன் தெரிந்த வில்லிகள்' என்ற படைப்பிரிவைக் குறிக்கின்றது. ஐயன் மழவராயன் போன்ற அரசியல் அதிகாரிகள் இவனாட்சியின்போது புகழடைந்தனர். 'வாழவல்ல பாண்டீசுவரர்' கோயில் இவனாட்சியின்போது கட்டப்பட்டதாகத் தெரிகிறது.

## முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1251–1268)

இரண்டாம் பாண்டியப்பேரரசின் பெரும்பேரரசன் இவனே. பாண்டியப் பேரரசு அதன் பரப்பிலும், பெயரிலும் விரிவடைந்து உச்ச நிலையை அடைந்தது. இவன் 'எம் மண்டலமும் கொண்டருளிய சுந்தரபாண்டிய தேவர்' என்றும், 'எல்லாம் தலையானான பெருமாள்' என்றும் 'காஞ்சி புரவராதீசுவரன்' என்றும் 'சமஸ்த ஜகநாதரன்' என்றும்

'சேரனை வென்ற பாண்டியதேவன்' என்றும், 'ஹேமாச்சாதானராஜக' என்றும், 'மகா ராஜாதிராஜஸ்ரீ பரமேஸ்வரர்' என்றும் 'மரகதப் பிருதுவி பிரித்' என்றும் 'கோயில் பொன் வேய்ந்த பெருமாள்' என்றும் பல விருதுப் பெயர்களால் அழைக்கப்பட்டான்.

இப்பாண்டியப் பேரரசு வடக்கே நெல்லூர் கடப்பா முதல் தெற்கே குமரி வரை பரவியிருந்த்து. சோழ, சேர, தொண்டை நாடுகள் இவனது நாட்டின் பகுதிகளாயின. தென்னாட்டு மன்னர்கள் இவனது பெயராண்மையை தலைமேற்கொண்டு வாழ்ந்தனர். போசளர் பலம் குன்றிப்போயினர். கொங்கு நாடும், சிங்களம், கேரள நாடுகள் வெற்றி கொள்ளப்பட்டன, கேரளம் கப்பம் (திறை) கட்டப்பணிக்கப்பட்டான். காஞ்சி பாண்டியரின் இரண்டாம் தலைநகராயிற்று.

இவன் ஈடு இணையற்ற போர் வீரன். திட்டமிட்டுப் போர் தொடுப்பதில் வல்லவன். இவனுடைய போர் வெற்றிகளை சீரங்கக் கோயில், திருப்பூண்டித்துறைக் கல்வெட்டுகள் விளம்புகின்றன. சில நடுகற்களும் இவனாட்சிக் கால வெற்றிகளைப் படம்பிடிக்கின்றன. மேலும் திருவேந்திபுரம், சிதம்பரம், திருப்புட்குடி, திருநெல்வேலி, காஞ்சிபுரம், திருக்கோவிலின் கல்வெட்டுக்களும் இவன் சிறப்பைக் குறிக்கின்றன. மார்க்கோபோலோ என்ற வெனீஸ் நாட்டுப் பயணியின் குறிப்புகளும், அராபிய நாட்டு வாஸாபின் குறிப்புகளும் இக்காலத்தைப் படம்பிடிக்கின்றன.

இக்காலத்தில் சோணாட்டை மூன்றாம் இராசேந்திரனும், சேர நாட்டை வீரரவி உதயமார்த்தாண்டவர்மனும், கண்ணனூரில் போசளரும், பல்லவ நாட்டில் கோப்பெருஞ் சிங்கனும் ஆட்சி செலுத்தி வந்தனர். கொங்குநாடு, மகத நாடு (ஆறகழூர்), காஞ்சிக்கடுத்து தெலுங்குப் பல்லவர் நாடு என்பனவும் நிலைபெற்றிருந்தன. போசளர் பலம் வாய்க்கப் பெற்றவர். மகத நாட்டை வாணகோவராயர் ஆண்டனர். காஞ்சிக்கடுத்த பல்லவ நாட்டை விசய கண்டகோபாலன் ஆண்டுவந்தான். காகாத்திய நாட்டை கணபதி என்ற பலம் பொருந்திய மன்னன் ஆண்டு வந்தான். பல்லவ நாட்டையாண்டு வந்த கோப்பெருஞ் சிங்கன் பெரும் வெற்றி வீரன். பாண்டிய மன்னனை எதிர்க்கத் துணிந்தவர் போசளர், காகாத்தியர், கோப்பெருஞ்சிங்கன், சோழர் ஆகியோர். இவர்களில் முதன்மையானோர் போசளரே.

இச்சிற்றரசர்களையும், பேரரசர்களையும் திட்டமிட்டுப் போராடி வென்றான். முதன்முதலில் தம் படைகளை சேரநாடு நோக்கி ஏவி, அந்நாட்டு மன்னனை வென்று, மலைநாட்டை அழித்து, சேரனைத் திறைசெலுத்தக் கட்டளையிட்டான். இதனையடிப் படையாகக் கொண்டே, சம்புகேசவரர் கோயிலில் சேரனை வென்றான்; 'திருநாள்' கொண்டாடச் செய்தான். திருநெல்வேலிக்கடுத்த ஊர், 'இரவிவென்ற சதுர்வேதி மங்கலம்' என்று அழைக்கப்பட்டது.

சோழ மன்னன் மூன்றாம் இராசேந்திரன் போர் வீரன். ஆனால் அவன் பாண்டி யனுக்கு இணையன்று. இவன் சோணாட்டைத் தாக்கினான் சோழன் திறை செலுத்தும் மன்னனாக மாற்றப்பட்டான். இச்சோழன் மரணத்திற்குப்பின் சோணாடு பாண்டிய நாட்டுடன் இணைக்கப்பட்டது.

போசளர் பாண்டியரை எதிர்க்கத் துணிந்தனர். போசளத் தலைவன் சிங்கணன் போரில் மாண்டான். கண்ணனூர் கொப்பம் பாண்டியர் வசமாயிற்று. பெருஞ்செல்வம் பாண்டியர் கைவசமாயிற்று.

சிங்கள மன்னனும் வெற்றி கொள்ளப்பட்டான். எண்ணற்ற யானைகளும், குதிரைகளும் பாண்டியர் வசமாயின. முத்துக் குவியல்கள் பாண்டியப் படைகளுக்குக் கிட்டின. பாண்டியனின் கடற்படை வலிமையை இப்போர் காட்டுகிறது.

அடுத்தபடியாக, அவன் கருநாடகத் தலைவன் சோமனை வென்று கொன்றான். இவனுக்கு நண்பனாக நடித்து, போசளருக்கு உதவியவனே சோமன். திருச்சிப் போரில் கொல்லப்பட்ட துரோகி சோமனாகலாம் என்று கருதப்படுகிறது. மேலும் இவன் கருநாடக மன்னன் ஒருவனை வென்று, யானைகளைத் திறையாகக் கொண்டான்; இக்கருநாடக மன்னன் வீரராமனாதனாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

சேந்தமங்கலத்தைத் தம் படைவலியிடமாகக் கொண்ட கோப்பெருஞ்சிங்கன் தாக்கப்பட்டான். காடவ அரசன் பாண்டியனுக்கு அடிபணிந்தான். எண்ணற்ற யானைகளும், குதிரைகளும், இதர செல்வங்களும் பாண்டியர் வசமாயின. கோப்பெருஞ் சிங்கன் பாண்டியன் மேலாண்மையை ஏற்றுக்கொண்டபின் நடைபெற்ற போசளப் போரில் பாண்டியனுக்கு உதவி புரிந்ததாகத் தெரிகிறது.

பின் மகத நாட்டு வாணாதிராயர் வெற்றி கொள்ளப்பட்டனர். அந்நாடு பாண்டியர் வசமாயிற்று. தெலுங்குச்சோழர் இப்பாண்டியனிடம் தோல்வியுற்றனர். சிற்றரசனாகிய கந்த கோபாலன் போரில் வெற்றிகொள்ளப்பட்டு, கொல்லப்பட்டான். காஞ்சியும் கைப்பற்றப்பட்டது. கொங்குநாடும் முற்றுகையிடப்பட்டு, பாண்டிய நாட்டுடன் இணைக்கப்பட்டது. பின் பாண்டியன் காஞ்சியில் தன் தலைநகரை நிறுவினான்.

இறுதியில் காகாத்திய மன்னன் கணபதியும், பாண்டியனிடம் தோல்வியுற்றான். இவ்வெற்றிக்களிப்பால் வெல்லூரில் வீராபிஷேகம் நடத்தினான். பாண்டியப் பேரரசு கிருட்டிணை நதிவரை பரவிற்று.

இவன் செய்த அறக்கொடைகள் ஏராளம்; தில்லையம்பலப் பெருமானடி பணிந்து துலாபார தானங்கள் செய்தான். அக்கோயிலைப் பொன்னால் வேய்ந்தான். சிதம்பர விஷ்ணு, சிவன் கோயில்களுக்குப் பல மானியங்கள் வழங்கினான். அக்கோயிலின் மேலைக் கோபுரம் சுந்தரபாண்டிய கோபுரமென அழைக்கப்படுகிறது. மதுரை சுந்தரேஸ்வரர் கோவிலின் கீழைக் கோபுரம் இவனால் பணியப்பட்டது. சீரங்கப் பெருமான் கோயிலை அழகுபடுத்தினான்; விரிவு படுத்தினான்; தங்கத்தாலான நரசிம்ம உருவத்தை அளித்தான். நரசிம்ம உருவம் பொறித்த பொன்வேய்ந்த கூரையையும் கட்டினான். அவ்வாலய நடுப்பகுதியைப் பொன்னால் வேய்ந்தான். கருவறைத் திருமால் பொன் உருவத்துக்குத் தம் பெயரைச்சூட்டி மகிழ்ந்தான். ஆலயத்தில் தங்கக்கலன்கள் நிறைந்த உணவறையையும் கட்டினான். சித்திரைத் திருவிழா 'உலா' நடத்த

உத்தரவிட்டான். அக்கோவிலுக்கு அவன் செய்த சேவைகள் அளித்த கொடைகள் எண்ணிலடங்காதவை. கோயிலொழுகு என்ற வைணவ நூல் இவற்றை உரைப்பதுடன் கல்வெட்டுக்களும் எடுத்தியம்புகின்றன.

மேலும் தஞ்சையிலுள்ள திருக்கோயிலில் சிவன் கோயில் திருப்பணி குறைவற நடைபெற்றது. பல கோயில்களில் இப்பாண்டியன் சந்தி விழா படிமங்கள் எடுத்தான். நாட்டிய, நாடக, இசை மாதர்களைப் போற்றினான். அவர்களுக்கு பரிசில்கள், நில மானியங்கள், அரசு அதிகார விருதுகள் பல வழங்கினான். கோயில்களில் நாட்டிய மண்டபங்கள் கட்டியதாகவும் தெரிகிறது. இதற்கு எடுத்துக்காட்டு அழகர் கோவிலில் அவனால் கட்டபட்ட மண்டபமே. திருவைகுண்ட விஷ்ணுகோவிலின் சுந்தர பாண்டிய கோபுரம் இவனால் எழுப்பப்பட்டது.

மேலும் இவன் அவனிவேந்தராமன், 'இராஜ சூர்யா', 'சித்திபதிரவி', 'இரண்டாவது இராமன்' போன்ற பிற விருதுப் பெயர்களையும் கொண்டிருந்தான்.

இவன் கால பாண்டிய நாட்டையும், அதன் பரப்பையும், அதன் ஆட்சிச் சிறப்பையும், மன்னனின் தீரத்தையும், மக்களின் மன மகிழ்ச்சியையும், செல்வச் செழிப்பையும் கேள்விப்பட்ட மார்க்கோபோலோ இந்நாட்டை வியந்து பாராட்டியுள்ளான். இவனுடைய கூற்றுப்படி தமிழகத்தில் இணையாட்சி இருந்ததாகக் கருதத் தோன்றுகிறது. இவனுடைய இறுதியாண்டு திட்ட வட்டமாகத் தெரியவில்லை.

மேற்கூறிய செய்திகள் மூலம் இவன் இணையற்ற போர்வீரன்; சமயப் பொறையுடையோன்; தெய்வபக்தி மிக்கோன்; தெய்வீகச் செயல்கள் புரிவோன்; பேரரசன் என்று கூறுதலில் குறையில்லை.

## சடையவர்மன் வீரபாண்டியன் (1218–1263 அல்லது 1253–1274)

இவன் கி.பி. 1253ஆம் ஆண்டு முதல் இணையாட்சி புரியும் அரசப் பகர ஆளுநராக நியமிக்கப்பட்டான். இவனுடைய கல்வெட்டுக்கள் கி.பி. 1274 வரையிலும் கிடைத்துள்ளன. சிலர் கருத்துப்படி இவன் கி.பி. 1268 வரை நல்லாட்சி செய்திருக்கலாம் என்று தோன்றுகிறது. இவனுடைய கல்வெட்டுக்கள் பாண்டியநாடு, சேரநாடு, தொண்டைநாடு, கொங்கு நாட்டிலும் கிடைத்துள்ளன. இவற்றில் அதிகம் திருநெல்வேலி, இராமநாதபுரம், புதுக்கோட்டைப் பகுதிகளிலிருந்து கிடைத்தவை. இவன் ஈழப்போரில் அந்நாட்டு மன்னனைக் கொன்றான். திரிகோணமலை திரிகடகிரியில் மீன் கொடி பொறித்து வைத்தான். தில்லையில் 'வீரபாண்டியன் திருமண்டபம்' இவன் பெயரில் உள்ளது. இவன் 'கொங்குகீழக்கொண்டு, கொடுவடுகு கோடழித்து' என்று புகழப்படுகிறான். 'கங்கையிருகரையும், காவியுங்கைக் கொண்டவன்' என்று கூறப்படுகிறது. மேலும் கந்த கோபாலனையும், போசளனையும் வென்றதால் 'வல்லானை வென்றான்' என்று அழைக்கப்படுகிறான். இவனுடைய இல்லாள் சொக்கத்தாண்டாளான, உலக முழுதுடையாள் என்று தெரிகிறது. இவன் காலத்து நீதி வழுவா நெறிமுறையும், நீலக்குலத்தகை முறையும், ஆட்சியில் ஆலோசனைக் கூட்டமும் புழக்கத்திற்கு நாணயங்

களும் இருந்தன என்று கருதப்படுகிறது. இவன் கி.பி. 1281இல் இறந்து போயிருக்கலாம் என்று கருதப்படுகிறது. இவனும் தம் முன்னோர் ஆண்ட நாட்டை பிறர் வசமாக்காமல் பாதுகாத்தான்.

### மாறவர்மன் குலசேகர பாண்டியன் (1263–1311)

இவன் கி.பி. 1289ஆம் ஆண்டு பாண்டிய நாட்டு முடியை சூட்டிக் கொண்டான். ஏறத்தாழ 40 ஆண்டுகள் அரசாண்டான். வெளிநாட்டார் குறிப்புப்படி பாண்டிய நாட்டில் ஐந்து (பஞ்ச) பாண்டியர் ஆட்சி நடைபெற்று வந்ததாகத் தெரிகிறது. அவர்களிடையே போர் மூளா வண்ணம் தாயார் காத்து வந்தார் என்றும் மார்க்கோபோலோ கூறுகிறார். இப்பஞ்ச பாண்டியர் ஆட்சியை வாசாபும், இலங்கைக் குறிப்புகளும் அறிவிக்கின்றன. கல்வெட்டுக்களில் காணும் பாண்டியர் மாறவர்மன் விக்கிரமன், மாறவர்மன் குலசேகரன், சடையவர்மன் சுந்தரன், சடையவர்மன் வீரபாண்டியன், மாறவர்மன் சீவல்லபன் என்போர், மாறவர்மன் குலசேகரன் இவர்களில் மூத்தோன்.

மாறவர்மன் குலசேகரனின் கல்வெட்டுகள் ‘தேர்போல்’ என்று தொடங்குகிறது. இம்மெய்க்கீர்த்தி மூலம் இவன் சோழநாடு, கொங்கு நாடு, மலாடு (சேதி நாடு), தொண்டை நாடு, தெலுங்கு நாட்டுப்பகுதி, மலை நாடு ஆகியவற்றின் திறைபெற்றான் என்று தெரிகிறது. சேர்வைமடக் கல்வெட்டு இவன்மலைநாடு, சோணாடு, இரு கொங்கு நாடுகள், ஈழம், தொண்டை மண்டலங்கள் வென்றான் என்று தெரிவிக்கிறது. ஆரியச் சக்கரவர்த்தி படைத்தலைவன் ஈழத்தைத் தாக்கினான்; புத்தரின் பற்களைக் கவர்ந்து கொண்டான் என்றும் தெரிகிறது. ஈழமன்னன் பராக்கிரமபாகு புத்தரின் பற்களை இனிதின் பெற்றுக்கொண்டான் என்றும் அறிகிறோம். இவன் கொல்லத்தையும் தாக்கிக் கைப்பற்றினான். இவன் ‘சரவண பெல்குளம்’ என்ற பகுதியையோ, தெலுங்கு வீமனின் நாட்டுக்குற்பட்ட ‘குளம்’ என்ற பகுதியையோ கைப்பற்றியிருக்கலாம். இவ்வாறு ‘குளத்திடத் தெலுங்கு வீமன்’ என்ற மெய்க்கீர்த்தி இக்கருத்தினை விளக்குகிறது. கேரளத்தின் கொல்லப் பகுதியைக் கைப்பற்றியதால், இவன் ‘கொல்லம் கொண்டான்’ என்று அழைக்கப்பட்டான்.

இக்காலத்துப் பாண்டியனொருவன் (கரூர்) என்ற இடத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செலுத்தியதாகத் தெரிகிறது. இவனோ தம் பதினைந்தாம் ஆட்சியாண்டில் கண்ணனூரில் தங்கியிருந்தான் என்று தெரிகிறது. இவன் விக்கிரம பாண்டியனை நடு நாடு, தொண்டை நாடு பகுதிகளுக்குப் பிரதிநிதியாக நியமித்தான்.

இவனுடைய திருநெல்வேலிக் கல்வெட்டு இவன் கேரளரையும், போசளரையும், சோழரையும் வென்ற செய்தியைக் காட்டுகிறது. வாணாதிராயர் கலிங்கராயன் இவனாட்சியின்போது பல கோயில்களையும் அக்ரகாரங்களையும் நிறுவியுள்ளான். இவர்கள் பாணர்களாயிருக்கலாம். அப்பாணர்மாவெலி மன்னர் வழியினர் என்று தெரிகிறது. இவனது திருவருள் பெற்ற ஒரு கல்வெட்டு உறையூரிலுள்ள ஒரு தலைநகரை உய்யக்கொண்டான் திருமலை’ என்று கூறுகின்றது. கைப்பற்றிய நாடுகளில் தம் தம்பியரை

நியமித்தும் நல்லாட்சி கண்டான். சீனாவுக்கும் தமிழகத்துக்குமிடையே கலாசார உறவுகள் நிலவிவந்தன. கி.பி. 1280ஆம் ஆண்டு ஜமாலுதீன் என்பானை சீனாவுக்குத் தூதனுப்பி னான். பாண்டியன் அனுப்பிய பொருட்களைப் பெற்ற சீனன், யாக்திங்பீ என்பானைப் பாண்டிய நாட்டிற்குத் தூதனுப்பினான். 1282ஆம் ஆண்டு அவன் சீனாவுக்குத் திரும்பினான். கி.பி. 1285இல் மீண்டும் சீனாவுக்கு இரண்டாம் தூதுக்குழுவனுப்பினான். விலையுயர்ந்த பொருட்களையும் பரிசாகப் பாண்டியன் அனுப்பிவைத்தான்.

இவனுடைய ஆட்சியாண்டு கி.பி. 1310, 1311, 1312ல் முடிந்ததாகக் கருதுவர் அறிஞர். முன் வரலாற்றாளர் கி.பி. 1310இல் என்றும், பேராசிரியர் இராமன் கி.பி. 1311இல் முடிந்தது என்றும், ந. சேதுராமன் கி.பி. 1312இல் முடிந்ததாகவும் கருதுகின்றனர்.

மார்க்கோபோலோ, பாண்டிய நாட்டில் செல்வச் செழிப்பிருந்தது என்று கூறும் போது, வாஸாப் பாண்டிய நாட்டில் அரசுப் போட்டி நிகழ்ந்தது என்கிறார். இப்போட்டி யில் குலசேகரனின் இரு புதல்வர்கள் பங்கு கொண்டனர். தம் விருப்பப்படி மாற்றாந் தாய்க்குப்பிறந்த வீரபாண்டியனுக்கு முடிசூட்டியதால் கோபங்கொண்ட தம் மகன் சுந்தரபாண்டியன் கி.பி. 1310இல் தந்தையைக் கொன்றான் என்று தெரிகிறது. ஆனால் இவனுடைய கல்வெட்டுக்கள் கி.பி. 1312 வரை இருப்பதை சேதுராமன் காட்டுகிறார். ஆகவே சேதுராமன் கருத்துப்படி, பாண்டிய நாட்டில் அரசுரிமைப் போட்டி ஏற்படவில்லை என்பதாம். ஆனால் வாஸாப் பாண்டிய நாட்டில் அரசுரிமைப்போர் ஏற்பட்டதாகத் தாம் அறிவிக்கப்பட்டார் என்று கூறுகிறார்.

மனம்குமுறிய சுந்தரபாண்டியன் வீரபாண்டியனை எதிர்க்கத் துணிந்து முஸ்லீம் களின் உதவியை நாடியதாகத் தெரிகிறது. மாலிக்காபூர் மதுரை நோக்கிப் படையெடுத் தான் என்றும் தெரிகிறது. பாண்டியநாட்டில் ஏற்பட்ட கலகத்தைப் பயன்படுத்தி சேரன் இரவிவர்மன் பாண்டிய நாட்டைத்தாக்கி காவிரிக்கரைவரை முன்னேறியதாகத் தெரிகிறது. இவ்வாறு பாண்டியர் போட்டியாலும், அன்னியர் படையெடுப்பாலும், அல்லலுற்ற பாண்டியப் பேரரசு சிதறுண்டு போயிற்று. மதுரையில் டில்லி சுல்தான்களாட்சியும் நிறுவப்பட்டது.

**பயிற்சி வினாக்கள்**

1) முதலாம் மாறவர்ம சுந்தரபாண்டியனின் வீரச் செயல்களை விளக்குக.

2) முதலாம் சடையவர்ம சுந்தர பாண்டியனின் வெற்றிகளை விவரிக்க.

# பாடம் – 10 சோழர் ஆட்சிமுறை – சமுதாய வாழ்க்கை – கலை, கட்டடக்கலை – பொருளாதாரம்

பண்டைக்காலத்தில் தமிழ்கூறும் நல்லுலகத்தைச் சிறப்புடன் ஆண்ட மூன்று அரச குடும்பங்களில் சோழர் குடும்பமும் ஒன்றாகும். பல்லவர்களின் ஆட்சி வீழ்ச்சி அடைந்து கொண்டிருந்தபோது, சோழர்கள் விசயாலயச் சோழன் தலைமையில் படிப்படியாக தமிழகத்தில் மீண்டும் முக்கியத்துவம் பெறலாயினர். குறிப்பாக, இராசராசசோழன் காலத்தில் தமிழர் நாகரிகம் மிக உன்னத நிலையை அடையத்தொடங்கிற்று. தமிழகம் முன்பு எப்போதும் காணாத சிறப்புடன் பலம் மிக்கதுமான மத்திய அரசின் கீழ் புகழின் உச்ச நிலையை அடைந்தது.

சோழப் பேரரசர்கள் பண்டைக் காலந்தொட்டே கடைப்பிடித்து வந்த ஆட்சி முறையைக் கையாண்டாலும், தாங்கள் பெரும் ஆட்சியாளர்கள் என்பதை சில புது முறைகள் மூலம் நிரூபித்தார்கள். தல ஆட்சி நிறுவனங்களுக்கு பேரளவு சுயஆட்சி உரிமையை அவர்கள் அளித்தபோதிலும், பலரும் வியக்கும் வண்ணம் சிறப்புடன் மத்தியில் ஆட்சி நடத்தினார்கள். ஆட்சி இயந்திரம் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அதாவது மத்தியில் மன்னரைத் தலைமையாகக் கொண்ட முடியாட்சி, நிலமானிய அடிப்படையிலான மாநில ஆட்சி, ஊர்களில் தல ஆட்சி முறை ஆகியவையாகும்.

## நடுவண் அரசு

நாட்டில் பரம்பரை முடியாட்சி நிலவியது. மேலும், அரசருக்குப் பல்வேறு அரண்மனைகளும், ஏராளமான அதிகாரிகளும் இருந்தனர். நாட்டின் (உயர்) தலைமை அதிகாரியாக அரசனே விளங்கினார். அவர் பெயரளவில் மட்டுமல்லாது உண்மையாகவே ஆட்சி செய்தார். மூத்த பிள்ளையே அரசுரிமை பெற்றதாகவும் அறிகிறோம். எனினும் வாரிசுரிமைப் போரே நடைபெறவில்லை என்று நாம் எண்ணிவிடலாகாது. கண்ட ராதித்ய சோழனின் மரணத்திற்குப் பிறகு உத்தம சோழன், இரண்டாம் ஆதித்யசோழன் ஆகிய இருவருக்குமிடையில் உரிமைப்போர் நடைபெற்றதாகக் கருதப்படுகிறது. இவ்வாரிசு உரிமைப்போர் ஒரு எடுத்துக்காட்டாகும். அரசு இயந்திரத்தின் தலைமை அலுவலராக விளங்கிய அரசனை, மூவுலகுக்கும் தலைவன் என்னும் பொருள்படும் திரிபுவனசக்கரவர்த்தி என்னும் பெயரால் அழைத்தனர். சோழப் பேரரசர்கள் காலத்தில் அரசனின் அதிகாரம் உச்ச நிலையை அடைந்தது. அவர் அடைந்த வெற்றிகளும், பிறவும் அவர்தம் கல்வெட்டுக்களில் முறைபடுத்திச் செதுக்கப்பட்டன. தஞ்சைப் பெரிய கோயிலும் அரசரின் உன்னத நிலைக்கு எடுத்துக்காட்டாய் விளங்குகிறது.

அரண்மனைகளும், சிவில், இராணுவ அலுவலகங்களும் மேலும் மேலும் வளர்ச்சி அடைந்திருந்தன. நிலைமைக்குத் தக்க விதத்தில், அரசனைச் சுற்றி ஒரு பாதுகாப்புப்படை எப்போதும் இருந்து வந்தது. அதற்கு மெய்க்காப்பாளர் படை என்று பெயர். அரண்மனை வேலையாட்கள் தலைநகரில் தனி இடங்களில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் அணுக்கர் என்றறியப்பட்டனர்.

ஆட்சி இயலில் அரசனின் பங்கினைப் பொறுத்த அளவில் அவன் சொல்லே சட்டமாக விளங்கியது. எனினும், அவற்றைச் செயல்படுத்தும் போது தனி முறைகளும் கையாளப்பட்டு வந்தன. சோழ அரசர்கள் ஆலோசனைகள் கேட்டும், நிதானித்தும் ஆழ்ந்த யோசனைகள் செய்துமே தங்களது பணிகளைச் செய்து வந்தார்கள். இதற்கு என்று உயர் அதிகாரிகளைக் கொண்ட "உடன்கூட்டம்" என்ற ஓர் பேரமைப்பு இருந்தது என்பதை நாம் நினைவு கொள்ள வேண்டும். இவ்வதிகாரிகள் அரசனுக்கு அவ்வப்போது உதவி புரிவதற்கென்றே எப்போதும் அரசனுடன் இருந்து வந்தனர். இவ்வதிகாரிகள் அரசனுக்கும் அரசதிகாரிகளுக்கும் இடையில் தொடர்பு ஏற்படுத்துபவர்களாக விளங்கி, அரசனின் ஆணைகளை பிற அதிகாரிகளுக்கு வழங்கி, அதனை நிறைவேற்றச் செய்வதோடு, அதன் விளைவுகளையும் பின்னர் அரசனுக்கு அறிவித்தும் வந்தனர். நாட்டின் உயர் ஆட்சியாளராக விளங்கியதால் அரசன் அவ்வப்போது நாட்டு நிலைமை களை நேரடியாக அறிந்து கொள்ளும் பொருட்டு, தாமே நாடு முழுவதும் பயணம் மேற்கொண்டு நிலைமைகளை அறிந்து வரும் பழக்கம் நடைமுறையில் இருந்து வந்தது. இதன்மூலம் தல ஆட்சிக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய முடிந்தது. மத்திய அரசின் வேலை, நாட்டில் பாதுகாப்பை சிறப்பாக ஏற்படுத்திச் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டு வதாய் இருந்தது. அரசனின் கடமைகளுக்கு சட்டத்தொகுப்புகள் வழிகாட்டிற்று. அரசன் நாட்டின் சட்டத்தின் பிறப்பிடமாய் விளங்கவில்லை. மாறாக, அவன் நாட்டு மக்களின் சமுதாய வாழ்க்கையையும், பிற சட்டங்களையும் மதித்து போற்றுபவனாக விளங்கினான்.

சோழர் ஆட்சிமுறை அதிகார வர்க்கத்திற்குரிய அமைப்பாக விளங்கியது. ஓர் அமைச்சரவை அப்போது செயல்பட்டதற்கான சான்றுகள் கிடைக்கவில்லை. ஆனால் அரசனுக்கு ஆட்சியில் உதவி புரிவதற்கென்று பலதரப்பட்ட அதிகாரிகள் இருந்து வந்தனர். அவர்கள் திறமையுடன் அரசனுக்கு உதவியதோடு, பிற அரசு இயந்திரங்களும் திறமையுடன் செயல்பட துணை புரிந்தார்கள். அதிகாரிகள் மக்களில் இருந்து வேறுபட்டவர்களாகத் தங்களைக் காட்டிக் கொண்டார்கள். அவ்வதிகாரிகளிலும் இருபிரிவினர் இருந்தனர். உயர் அதிகாரிகள் 'பெருந்தனம்' எனப்பட்டனர். அவர்களுக்கு அடுத்த நிலையில் இருந்தவர்கள் 'சிறுதனம்' என்று அழைக்கப்பட்டனர். ஆனால் சிவில், இராணுவ அமைப்புகளில் அவ்வித வேறுபாடுகள் இருக்கவில்லை. மக்கள் மத்தியில் இருந்து உயர் அதிகாரிகளைப் பிரித்துக் காட்டும் பொருட்டு அவர்கள் சிறப்புப் பட்டங்களைக் கொண்டிருந்தனர். நாட்டில் அரசப் பிரதிநிதிகளாக அரச குடும்பத்தைச் சார்ந்தவர்களே நியமிக்கப்பட்டனர். குறிப்பாக, மதுரையை ஆண்ட பிரதிநிதிகள் அரச குடும்பத்தினராகவே விளங்கினர்.

## ஆட்சி இயந்திர அமைப்பு

ஆட்சி சிறப்பாக நடைபெறும் பொருட்டு நாடு பல்வேறு சிறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. பேரரசு ஒன்பது மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒன்பது மண்டலங்களாவன : (1) ஜெயங்கொண்ட சோழமண்டலம், (2) ராசராசபாண்டிமண்டலம், (3) மும்முடிச்சோழமண்டலம், (4) முடிகொண்ட சோழமண்டலம், (5) நிகரில்லா சோழ மண்டலம், (6) சோழ மண்டலம், (7) வேங்கி மண்டலம், (8) மலை மண்டலம், (9) அதிராசராச மண்டலம் ஆகியவையாகும். மண்டலங்களின் தலைவர்களாக அரசப்

பிரதிநிதிகள், அதாவது பெரும்பாலும் இளவரசர்கள் விளங்கினார்கள். மண்டலங்கள் வளநாடுகளாகவும், வளநாடுகள் மேலும் நாடுகளாகவும் பிரிக்கப்பட்டன. இவைகள் கூற்றம் அல்லது கோட்டம் என்றும் அழைக்கப்படுவதுண்டு. பேரரசில் சிறு பகுதிகள் பலநேரங்களில் பல்வேறு மாற்றங்களுக்குள்ளாவதும் உண்டு. கூற்றம் அல்லது கோட்டங்கள் பல்வேறு மாற்றங்களுக்குள்ளாவதும் உண்டு. கூற்றம் அல்லது கோட்டங்கள் பல்வேறு கிராமங்களாகப் பிரிக்கப்பட்டன. கிராமத்தில் கிராமப் பஞ்சாயத்து ஆட்சி நிலவியது. கிராமப் பஞ்சாயத்து ஆட்சியில் மத்திய அரசு தலையிடுவதில்லை. T.V. மகாலிங்கம் தமது `South Indian Polity' என்ற நூலில் ஒவ்வொரு நாடும் 50 கிராமங்களைக் கொண்டிருந்தது என்று கூறுகிறார். சில நேரங்களில் பெரிய கிராமம் ஒன்று தனிப்பகுதியாகக் கொண்டு ஆட்சி செய்யப்பட்டது. அது 'தனியூர்' என்று அழைக்கப்பட்டது. இவ்வாறு பலதரப்பட்ட அதிகாரிகளின் ஆட்சியும் அதே நேரத்தில் கிராமங்களில் கிராம பஞ்சாயத்து ஆட்சியும் சேர்ந்து நாட்டில் சிறப்பான ஆட்சிக்கு வழி கோலப்பட்டது.

## வருவாய்

விளை நிலத்தில் இருந்து வந்த வருமானமே அரசின் முக்கிய வருமானமாக இருந்தது. நாட்டை முதன் முதலாக ராசராச சோழன் காலத்தில் அதாவது கி.பி. 1002இல் தான் அளந்து தீர்மானிக்கப்பட்டது. பின்னர் முதலாம் குலோத்துங்கன் காலத்தில் மறுபடியும் நிலங்கள் அளக்கப்பட்டன. நிலங்கள் அளந்து தரம் பிரிக்கப்பட்டாலும், பல்வேறு நேரங்களில் திருத்தி அமைக்கப்பட்டன. நிலங்கள் பொதுவில், வரி செலுத்தப்படும் நிலம், வரி செலுத்தப்படாத நிலம் என்று இருவகையாக பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு கிராமம், நகரம் இவைகளிலும் மக்கள் வசிக்கும் இடம், கோயில், குளம், கால்வாய்ப் பகுதிகள், பறைச்சேரி, கம்மாச்சேரி போன்றவற்றிற்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தது. வரி விதிக்கப்பட்ட நிலங்கள் அதன் தரத்தைப் பொறுத்தும், அதில் விளையும் பயிரைப் பொறுத்தும் பல்வேறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. நிலத்தில் வேலி (Veli) என்பது வருமானம் வரும் பெரும்பகுதியாக இருந்தது. வேலி மீண்டும் மா, குழி, முக்காணி, அரைக்காணி என்று பிரிக்கப்பட்டிருந்தது. வருவாயில் ¾ பங்கு வரியாக வசூலிக்கப்பட்டது. சுரங்கம், காடு இவைகளில் இருந்தும் அரசுக்கு வருமானம் வந்தது. மேலும் போரில் கைப்பற்றப்படும் பொருட்கள் குறுநில மன்னர்களிடம் இருந்து பெறப்படும் கப்பம், அரசின் பரிசுப் பொருட்கள் முதலியனவும் அரசுக்கு வருமானமாய் அமைந்தன. நிலவரி வசூல் மிகவும் கடுமையானதாக இருந்தது. வரி வசூலிப்பவர்கள் மக்களைத் துன்புறுத்தி எவ்வளவு வசூல் செய்ய முடியுமோ அவ்வளவு வசூலித்தனர். ஆனால் அரசுக்கு ஒரு குறிப்பிட்ட அளவை மட்டுமே செலுத்தினர். வரியை பணமா கவோ, தானியமாகவோ தம் வசதியைப் பொறுத்து செலுத்தலாம். அரசு வருமானத் திலிருந்து அரசரது செலவுகளும், அரண்மனைச் செலவுகளும், படை, கப்பற்படை, சாலைகள், கால்வாய் வெட்டல், வேறு பொது வேலைகள் இவைகளுக்கென்றும் செலவுகள் செய்யப்பட்டன.

## இராணுவம்

இராணுவத்தைப் பொறுத்தவரையில் தரைப்படை, கப்பற்படை இரண்டுக்கும் அரசனே தலைமைப் படைத் தளபதியாக விளங்கினான். கப்பற்படையைப்பற்றி நாம்

அறிந்து கொள்ள ஓரளவுதான் சான்றுகள் கிடைக்கின்றன. தஞ்சைக் கோயில் கல்வெட்டி லிருந்து அவர்கள் படை அமைப்பைப் பற்றி நாம் நன்கு அறிந்து கொள்ள முடிகிறது தனித்தனி பிரிவுகளாக, தனித்தனி பெயர்களுடன் படைகாணப்பட்டதாக அறிகிறோம். அரசனைச் சுற்றி அவனைக் காப்பதற்கென்று மெய்க்காவல்படை ஒன்று இருந்ததாக அறிகிறோம். தஞ்சைக் கோயிலில் அவர்களைப்பற்றிய குறிப்பு காணப்படுகிறது. அவர்கள் தங்கள் உயிரையும் ஈந்து அரசனைக் காப்பார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நிரந்தரப் படைப்பிரிவின் எண்ணிக்கையை அறிவதற்கான சான்றுகள் கிடைக்கவில்லை. சில முக்கியமான இடங்களில் நிலையான படையையும் வைத்திருந்தனர். எடுத்துக்காட்டாக, முதலாம் குலோத்துங்கன் கோட்டாற்றில் படை வைத்திருந்ததாக அறிகிறோம்.

எண்ணிலடங்கா கப்பல்கள், கொந்தளிக்கும் கடலைக்கடந்து ஸ்ரீவிஜய படையெடுப் பின் போது முதலாம் இராசேந்திர சோழனின் படைகளைக் கொண்டு சென்றதாய் நாம் அறிகிறோம். இப்பெரும் கப்பற்படை திடீர் என்று தோன்றி இருக்க முடியாது மாறாக, சோழ அரசர்கள் காலத்தில் கப்பற்படைக்கு அளிக்கப்பட்ட சிறப்பு அம்சத்தைத் தான் நாம் மனதில் கொள்ள வேண்டும். ஆனால் சோழமண்டலக் கடற்கரைப் பகுதியில் கப்பற் கட்டப்பட்டதற்கான சான்றுகள் நமக்குக் கிடைத்தபாடில்லை. இராசராசசோழன், இராசேந்திர சோழன் ஆகியோர் காலத்தில் சோழர்கள் தங்கள் கப்பற்படையின் துணையுடன் வங்காள விரிகுடாவை தங்கள் ஏரியாக மாற்றி இருந்தனர்.

## நீதித்துறை

நீதி வழங்கும் உரிமையைப் பொறுத்த வரையில் தலத்திலேயே அதற்கான வழிகள் வகுக்கப்பட்டிருந்தது. கிராம சபைகள் இது விஷயத்தில் பேரளவு உரிமை பெற்றிருந்தன. அவர்கள் நியாயத்தார் என்ற சிறு குழுக்களை ஏற்படுத்தி நியாயம் வழங்கினர். அரசன் இருந்து நீதி வழங்கிய தர்மாசனம் (Dharmasanas) என்று பெயர். இச்சபையில் அரசனுக்கு உதவிசெய்ய கற்றறிந்த பிராமணர்கள் இருந்தார்கள். அவர்கள் சட்டத்தில் தேர்ச்சிப் பெற்றுக் காணப்பட்டனர். கல்வெட்டுக்களில் அவர்கள் சட்ட நிபுணர்கள் என்று பெயர் சொல்லத்தக்க தர்மாசனபட்டர்கள் (Dharmasanabhattas) என்றழைக்கப்படுகின்றனர். நீதித்துறையைப்பற்றி அவ்வளவாக அறிந்துகொள்ள வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. எனினும், அக்கால வழக்கு விசாரணை முறைபற்றி அறிந்துகொள்ள இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் பெரிய புராணத்தில் வரும் சுந்தரமூர்த்தி நாயனார் அவர்களின் வழக்கு விசாரணையை நாம் எடுத்துக் கொள்ளலாம். ஆனால் இராசராசசோழன் கால்த்திய வழக்கு விசாரணை முறைக்கும், இரண்டாம் குலோத்துங்கன் காலத்திய வழக்கு விசாரணை முறைக்கும் பெரும் வேறுபாடு இருந்ததாகக் கருதமுடியாது.

வழக்கு விசாரணை முறைக்கு என்று மேற்கொள்ளப்பட்ட விசாரணை முறை சாதாரண முறையில்தான் அமைந்திருந்தது. கடுமையான சட்டங்கள் மூலம் வழக்குகள் விசாரிக்கப்படவில்லை. வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் தாங்களே தங்கள் பகுதி விசயங்களை எடுத்துக் கூறவேண்டுமே தவிர தற்காலத்தில் உள்ளதுபோல் வழக்குரைஞர்கள் அமர்த்திக்கொள்ளப்படவில்லை. எழுதப்பட்ட பத்திரக் குறிப்புக்களே அத்தாட்சிக் குறிப்புக்களாக, ஒரு வழக்கின்போது ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றும்

அறிகிறோம். சிவில், கிரிமினல் வழக்குகளை தற்காலத்தில் வேறுபடுத்தி இருப்பதுபோல் அக்காலத்தில் வேறுபடுத்தி இருக்கவில்லை. மேலும் தற்காலத்தில் உள்ள சட்டத்தொகுப்பு களைப் போல் குற்றங்களைத் தெள்ளத்தெளிதில் அலசி ஆராயும் முறையும் இல்லாமல் இருந்தது. திருட்டு, விபச்சாரம், அல்லது கற்பழிப்பு (adultery), கள்ளக் கையெழுத்திடல், கால்நடைகளைத் திருடுதல் முதலியன பெருங்குற்றங்களாகக் கருதப்பட்டன. இத்தகைய குற்றங்களைச் செய்தவர்கள் கிராமசபையில் பணிபுரிய தடைசெய்யப்பட்டதாக உத்தரமேரூர் குறிப்பு அறிவிக்கிறது. சட்டத்துறை பொதுவாக கருணை காட்டுவதாகவே காணப்பட்டது. பெரும்பாலும் குற்றங்களுக்கு அபராதம் வசூலிக்கப்பட்டது. அரசனின் ஆட்களுக்கு எதிரான குற்றங்களை அரசனே நேரில் விசாரிப்பது வழக்கம். உதாரணமாக இராசராசசோழன், தன் அண்ணன் இரண்டாம் ஆதித்தியன் இறப்பிற்குக் காரணமாய் இருந்தவர்களை விசாரித்து அவர்களின் சொத்துக்கள் முழுவதையும் பறிமுதல் செய்தான் என்று அறிகிறோம். எனினும் மூன்றாம் இராசராசன் காலத்தில் இராஜதுரோகம் நாளுக்குநாள் அதிகரித்தது என்பதையும் நாம் மறுக்க முடியாது. சோழர்கள் ஆட்சிக் காலத்தில் உள்நாட்டு அமைதி முழுவதுமாக ஏற்பட்டிருந்தது என்று கூறலாம்.

ஆட்சி இயந்திரத்தில் மாறுபாடான கருத்துக்களும், இணக்கமான முறையில் செயல்பட்டு வந்தன என்றறிய முடிகிறது. அரசன் யதேச்சதிகாரம் செலுத்தினாலும், கிராமங்களில் கிராம பஞ்சாயத்தாட்சி சிறப்பாக நடைபெற்று வந்தது. கிராம பஞ்சாயத் தாட்சி முறை சோழர் ஆட்சியின் சிறப்பம்சமாக விளங்கியது. பேரரசின் பரப்பையும் தற்காலத்தைப்போன்ற செய்திப் போக்குவரத்து இன்மையையும் கணக்கில் கொண்டு பார்த்தால் அக்கால ஆட்சிமுறை அக்காலத்திற்கு மிகவும் ஏற்ற ஒன்றாக இருந்தது என்பதில் ஐயமில்லை. துவக்க காலத்தில் சோழ மன்னர்கள் போர் புரிவதிலும் தங்கள் வல்லாட்சியை ஏற்படுத்துவதிலும் கண்ணுங்கருத்துமாய் இருந்தார்கள். ஆனால் பிற்காலச் சோழர்கள் மக்களுக்கு நல்லாட்சி வழங்குவதிலேயே அதிகக் கவனம் செலுத்தலாயினர். இதனை நாம் முதலாம் குலோத்துங்கன் நல்லாட்சி வழங்கும் பொருட்டு நாட்டில் பல்வேறு சுங்கவரிகளைக் குறைத்தமையை எண்ணிப் பார்க்கும்போது அறியலாம். சுங்கவரியைக் குறைத்து நாட்டில் வாணிபம் சிறக்க வழிவகுத்ததால் அவன் "சுங்கம் தவிர்த்த சோழன்" என்று மக்களால் போற்றப்பட்டான். எனவே சோழர்கள் ஆட்சியை முழுவதுமாக நாம் நோக்கும்போது மொத்தத்தில் அது திறம்படவும், மக்களுக்கென்றே நடத்தப்பட்ட ஒன்றாகவும் இருந்ததை அறியலாம்.

## சோழர் கால ஆட்சிமுறை

சோழர் காலத்தில் மிகவும் உன்னத நிலையை அடைந்திருந்த கிராம ஆட்சிமுறை அதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தோன்றி இருக்க வேண்டும். சோழர் காலத்தில் அரசியல் கோட்பாட்டில் அல்லது ஆட்சி நிறுவனங்களின் அமைப்பில், வளர்ச்சியில் பெரும் மாற்றங்கள் குறிப்பாக கிராம சபைகளிலும், நாடுகள், வளநாடுகள் ஆகியவற்றில் ஏற்பட்டிருந்தன. இவைகளின் தோற்றம் பற்றி முன்னமேயே அறிந்திருந்தாலும், தென்னகத்தில் காணப்படும் நூற்றுக்கணக்கான கல்வெட்டுக்கள், அவற்றின் அமைப்பு அலுவல்கள் முதலியவற்றை அறிந்துகொள்ள நமக்கு பேரளவு துணைபுரிகின்றன. இவைகளில் இருந்து, பண்டை நாட்களில் நம் இந்திய நாடு தலசுய ஆட்சி நிறுவன அமைப்பில் பெற்றிருந்த ஓர் உன்னத நிலையினை நாம் அறிந்துகொள்ளலாம்.

சங்க காலத்திற்குப் பிறகு கிராம ஆட்சி சிறப்புடன் வளர்ந்து வரலாயிற்று. பிற்காலப் பல்லவர்களின் கல்வெட்டுக்கள் 'ஊரார்' அல்லது கிராம மக்கள் பற்றிக் குறிப்பிடுகின்றன. அவர்கள் உள்ளூர் சேர்ந்த விவகாரங்களை நிர்வகித்து வந்தனர். பாண்டிய நாட்டிலும், கடுங்கோனின் ஆட்சிக் காலத்தில் அரசன் கிராம சட்டமன்றங்களுக்கு (Village Assembly) நன்கொடைகள் வழங்கியதாக அறிகிறோம். ஆயினும், சோழர் காலத்தில் கிராம ஆட்சி மிகவும் நேர்த்தியான முறையில் வளர்ச்சி அடைந்திருந்தது என்பதை நாம் நன்கு அறிந்து கொள்ள முடிகிறது.

கிராம ஆட்சியில் இரண்டு வகையான அமைப்புகள் இருந்ததாக நாம் அறிய முடிகிறது. அதாவது 'ஊர்' 'சபா' ஆகியவை. பல்வேறு இடங்களில் 'ஊர்' 'சபா' இரண்டுமே ஏற்பட்டிருந்தன. அவ்விடங்களில் 'ஊர்' தனியாகவோ அல்லது 'சபா'வுடன் சேர்ந்தோ தேவையைப் பொறுத்து செயல்பட்டு வந்தது.

சோழர்கால 'சபா' அல்லது 'மகாசபா'வைப்பற்றி அறிந்துகொள்ள சிறந்த சான்றுகள் கிடைக்கின்றன. 'ஊர்' என்பது பிராமணரல்லாத மற்ற இன மக்களை உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு கிராம அமைப்பாகும். அதன் உறுப்பினர்கள் "கணம்", "ஆளும் கணம்" என்ற பெயர்களால் அழைக்கப்பட்டனர்.

'சபா' அக்ரஹாரம் அல்லது சதுர்வேதி மங்கலங்களில் இருந்தது. பராந்தகனின் உத்தரமேரூர் கல்வெட்டுக்களில் இருந்து, வாரியங்கள் அல்லது கழகங்கள் அமைப்புபற்றி, சபாவில் ஏற்படுத்தப்பட்ட தீர்மானங்களை அறிய முடிகிறது. எல்லா கிராம ஆட்சி அலுவலகங்களிலும் "சபா" தான் மேன்மை பெற்ற ஒன்றாக இருந்தது. இது கிராம சம்பந்தமான விசயங்களில் சிறப்பதிகாரம் பெற்று விளங்கியது. அதன் அரசியலமைப்பு கிராமத்திற்குக் கிராமம் வேறுபட்டிருந்தது. பல்வேறு காலங்களில் அதன் அமைப்பில்கூட வேறுபாடு காணப்பட்டது. சில இடங்களில் அதன் அங்கத்தினர்களாக வயது வந்த ஆண்கள் அத்தனை பேரும் இருந்தனர். ஆனால் சில இடங்களில் அது பொறுக்கி எடுத்த குழுவாக இருந்தது. அப்படிப்பட்ட சபைகளில் உறுப்பினர்களாவதற்கு சில தகுதிகள் தேவைப்பட்டது. கிராம சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் ஊருக்கு ஊர் மாறுபட்டது. ஒரு இடத்தில் 300 ஆக இருந்தது, மற்றொரு இடத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 512 ஆகவும், சில இடங்களில் ஆச்சரியப்படும் விதத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 1000 ஆகக்கூட இருந்தது. பெரும்பாலும் எல்லா கிராமங்களிலும் கிராமத் தலைவன் இருப்பது உண்டு. அதன் கூட்டத் தொடர்களும் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்டு வந்தன. சில இடங்களில் கூட்டம் நடத்தவென்று அரசன், பொதுக்கட்டிடங்கள் கட்டித் தருவதும் உண்டு. பொதுவாக இச்சபைகளின் கூட்டத்தொடர் கோயில்கள், சில இடங்களின் புளிய மரத்து நிழல் போன்றவற்றில் நடைபெற்றது. இக்குழுக்களின் அமைப்பு வேலைகள் முதலியவற்றைப் பற்றி அறிந்து கொள்வதற்குப் போதிய சான்றுகள் நமக்குக் கிடைக்கின்றன. ஒரு கிராமம் 30 தெருக்களாகப் பிரிக்கப்பட்டது. இதில் இருந்து 12 பேர் வருடாந்திர குழு, பொன்குழு ஆகியவற்றின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். ஒரு நிரந்தரக் குழுவும் ஏற்படுத்தப்பட்டது. சில பகுதிகளில் நீதித்துறைக் குழுக்கள் போன்ற பல தரப்பட்ட குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன. குழுக்களின் எண்ணிக்கையும், உறுப்பினர்களின்

எண்ணிக்கையும் கிராமத்திற்குக் கிராமம் மாறுபட்டிருந்தது என்பதையும் ஈண்டு நோக்கத்தக்கது. இக்குழுக்களின் உறுப்பினர்கள் "வாரியப்பெருமக்கள்" என்றழைக்கப் பட்டனர். மகாசபையைப் பெருங்குடி என்றும் அதன் உறுப்பினர்களைப் பெருங்குடி மக்கள் என்றும் அழைக்கலாயினர்.

உறுப்பினராவதற்கான தகுதிகள் கீழ்க்காணுமாறு நிர்ணயிக்கப்பட்டிருந்தன. பொதுவாக ¼ வேலி நிலமாக வைத்திருப்பதும், குறிப்பிட்ட பகுதியில் சொந்த வீடு உள்ளமையும் வயது வரம்பு 35 முதல் 70 வரையும், மேலும் வேறு வித்தகர்களாகவும் இருக்க வேண்டும். இக்குழுக்களில் மூன்று முறை உறுப்பினர்களாக இருந்தவர்கள், கணக்குகளை ஒழுங்காக தாக்கல் செய்யாதவர், தகாப்புணர்ச்சி உடையோர், திருட்டு கையூட்டு வாங்கியவர் முதலியவர்கள் தேர்தலில் போட்டியிடத் தகுதியற்றவராகக் கருதப்படுவர். தகுதி உள்ளவர்களில் தேர்வுமுறை நடைபெறும். அதாவது அவர்களது பெயர் தனித்தனி ஓலைகளில் எழுதி ஒரு குடத்தின் உள் இடப்படும். பின்னர் அந்தக் குடத்தில் உள்ள ஓலைகள் ஒரு சிறு பையனைக்கொண்டு குலுக்கி எடுக்கப்படும். அம்முறையில் தேர்ந்து எடுக்கப்பட்டவர் கிராம சபைகளின் உறுப்பினராக அறிவிக்கப் படுவர். குறிப்பாக இம்முறைக்கு "குடவோலை முறை" என்று பெயர். இத்தகைய முறையில் குழுவை ஏற்படுத்திய பிறகு அவர்களுக்கு பொறுப்புக்கள் ஒப்படைக்கப்படும். இவர்களே அந்தந்த வாரியப் பெருமக்கள் என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் ஊதியம் பெறாது தங்கள் வேலைகளைக் கவனித்தனர்.

கிராம, மாநகராட்சிகளிலும் இத்தகைய முறையில் அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். அத்தகைய உறுப்பினர்கள் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடாதிருக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன என்பதையும் இங்கு நாம் குறிப்பிட்டாக வேண்டும். மேலும், மூன்று முறை இச்சபையில் உறுப்பினர்களாக இருந்தவர்களுக்கு மீண்டும் உறுப்பினராக உரிமை வழங்கப்படாமல் இருந்தது. ஏனெனில், ஊரில் உள்ள எல்லா மக்களுக்கும் இத்தகைய வாய்ப்புக்களை அளிக்க வேண்டும் என்ற பெரும் நோக்கமே காரணமாக இருந்தது என்பதையும் நாம் கருத்திற்கொள்ள வேண்டும். மேலும் இச்சபைகளின் அமைப்பு, நடவடிக்கைகள் முதலியன முற்காலத்திலும் தற்காலத்திலும் உள்ள எந்த ஒரு மக்களாட்சி ஸ்தாபனங்களுக்கும் சற்றும் குறைந்திருக்கவில்லை என்பதையும் நினைவுபடுத்துகின்றன.

கிராமங்களில் பொதுவாக, ஆட்சியின் ஒவ்வொரு பிரிவின் முழுமையான செயல்களையும் ஒன்று அல்லது பல குழுக்கள் சேர்ந்து செய்தன. கிராம ஆட்சி அலுவலகம் தமது அதிகார எல்லைக்குட்பட்ட எல்லா அலுவல்களையும் எத்தகைய தலையீடும் இன்றி செவ்வனே செய்தது. அதன் சொத்துக்களை பொதுநலன் கருதி விற்கவோ, அடமானம் வைக்கவோ உரிமை பெற்றிருந்தது. பஞ்சம் பற்றாக்குறை முதலியன நேரிடும்போது இத்தகைய குழுக்கள் மக்களுக்கு பெரும் தொண்டு புரிந்து மக்களுக்குச் சேவை செய்யலாயிற்று. அத்தகைய நேரங்களில் தேவையானால் அவைகள் கோவில் கருவூலங்களில் இருந்து பணத்தைக் கடனாகப் பெற்றது, அல்லது தம்மிடம் உள்ள சொத்துக்களை விற்றது. கிராமம் அரசுக்கு செலுத்த வேண்டிய வரிகளுக்கு இத்தகைய குழுக்களே முழுப் பொறுப்பாயிற்று. உதாரணமாக இரு கிராம சபையின் உறுப்பினர்கள்

தங்கள் அரசுக்குச் செலுத்த வேண்டிய வரியைச் செலுத்தாமையால் முழுவதுமாக கைது செய்யப்பட்டனர் என்று தெரிய வருகிறது. ஒரு முறை அரசன் ஒரு கிராம சபையின் மீது அபராதம் விதித்ததாக நாம் அறிகிறோம். அந்த கிராம சபையானது பணத்தைச் சட்டவிரோதமான முறையில் செலவு செய்ததாகக் கோயில் நிர்வாகிகள் அரசனிடம் முறையிட்டிருந்தனர்.

கிராம நிலங்களைப் பொறுத்த வரையில் அது பெரும் அதிகாரம் செலுத்தியது. பொதுவாக மக்கள் உரிமையில் அது தலையிடுவதில்லை. இம்மன்றங்கள் சந்தையை ஒழுங்குபடுத்துதல், வரிகளை விதித்தல் போன்றவற்றை செய்ததோடு பொதுத் தேவையை முன்னிட்டு புதுவரிகள் விதிக்கவும் உரிமை பெற்றிருந்தன. மேலும் கிராம மக்களைக் கட்டாயப்படுத்தி வேலை வாங்கவும் உரிமை பெற்றிருந்தது. குடிநீர் வசதி செய்து தருவது, தோட்டங்களை நன்கு பராமரிப்பது, பாசன வசதி செய்துதருவது, செய்தித் தொடர்பு செய்வது முதலியன அவற்றின் முக்கிய வேலையாகக் கருதப்பட்டது. கிராம சபைகளின் பொறுப்பை அரசும் நன்கு உணர்ந்திருந்தது. கிராம அலுவலகங்களும் தங்கள் பொறுப்பையும், கடமையையும் நன்கு உணர்ந்திருந்தன. குறிப்பாக கோயில்கள், பிற ஸ்தாபனங்கள் பற்றி தமக்குள்ள பொறுப்பை அவை நன்கு அறிந்திருந்தன. கல்வி நிறுவனங்கள் தருமஸ்தாபனங்கள் முதலியன பொதுவாக கோயில் நிறுவனங்களுடன் இணைக்கப்பட்டிருந்தன.

மேலும் இந்த கிராம சபைகள், கொள்ளைக்காரர்கள், மக்கள் விரோதிகள், அவர்களிடம் இருந்து மக்களைக் காப்பதற்கு வேண்டிய தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டன. மக்களைப் பாதுகாக்க தீரச்செயல்கள் புரிந்தவர்களைச் சிறப்பித்துப் பாராட்டியது. மேலும் கிராம சபையினர் தங்கள் கிராமத்திற்கெதிராக அல்லது கோயில்கள், பிற அமைப்புகள் முதலியவற்றிற்கெதிரான எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளலாகாது என்று வற்புறுத்தப்பட்டது. அதுபோல் கோயில் அதிகாரிகள் கிராமங்களுக்கெதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டால் அதனையும் உடனேயே அரசனுக்கு அறிவிக்க வேண்டும் என்றும் கூறப்பட்டது. கிராம சபைகள் ஏற்படுத்தும் சட்டங்களில் சில அரசனின் ஒப்புதலையும் பெற வேண்டி இருந்தது. அதுபோல் அரசக்கட்டளைகளில் ஏதாவது கிராமத்தின் உரிமையைப் பாதிப்பதாய் இருந்தால், அது அந்த கிராமத்தின் சபைக்கு அனுப்பப்பட்டு அதன் அனுமதியைப் பெற்ற பின்னரே அச்சட்டம் அரசு பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்படும்.

பெரும் குற்றங்களைத் தவிர, பிற குற்றங்களைத் தமது எல்லைக்குள் விசாரிக்கும் உரிமையும் கிராம சபைகளுக்கு உண்டு. கிராம சபைகளில் நியாயம் வழங்குவோர் 'நியாயத்தார்' என்றழைக்கப்பட்டனர். இத்தகைய உரிமைகளை கிராமசபைகள் விஜய நகரப் பேரரசின் ஆட்சியின்போது இழந்து விட்டதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. எனினும், சோழர் காலத்தைத் தல சுயஆட்சி நிறுவனங்களின் பொற்காலம் என்று கூறினால் மிகையாகாது.

## நிதித்துறை

நிலவரியே அரசாங்கத்தின் முக்கிய வருவாயாக இருந்தது. நிலவரி போன்றே தொழில் வரியும் வசூலிக்கப்பட்டது. வரியை விதிக்கும் போது பழையபழக்கத்தின்படி

அவ்வரியைக் கொடுக்கக்கூடிய மக்களின் சம்மதம் பெற்றே விதிக்கப்பட்டது. இவ்வாறு பெற்ற வரிகள் கடமை எனவும் குடிமை எனவும் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. கடமை என்பது நிலவரியாகும். இது காணிக்கடன், இறை எனவும் கல்வெட்டுக்களில் காணப்படுகிறது. குடிமை என்பது நிலவரியில்லாத பிறவரிகள். இவை சுங்கம் எனவும் வழங்கப்பட்டது. எனவே சோழர் காலத்தில் கடமை, இறைமை, திறை எனப்படும் மூவகை வரிகள் வசூலிக்கப்பட்டன. அரசு வரி வசூலித்தது போல கிராம சபைகளும், வணிகர்குழு போன்ற சில தொழில் நிறுவனங்களும் பற்பல காரியங்களுக்கென குறிப்பிட்ட வரிகளை வசூலித்ததாக அறிகிறோம். இவ்வாறு வசூலிக்கப்பட்ட வரிகளில் பெரும் பகுதியும் அரசாங்க அலுவலர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்கே பயன்படுத்தப்பட்டன. அடுத்த அதிகச் செலவினம் தரைப்படை, கடற்படை நிர்வாகங்களுக்காகும். சில அதிகாரிகளுக்கு அவர்கள் வசித்த இடத்திலிருந்து குறிப்பிட்ட வரியோ, வரியின் பகுதியோ சம்பளமாகப் பெற்றனர். நகைகளும், நவரத்தினங்களும் சேமநிதியாக சேமிக்கப்பட்டன. வரியைப் பணமாகவோ, தானியமாகவோ செலுத்தலாம்.

மேலும் தறியிறை, செக்கிறை, மனை இறை, சுங்காடிப்பாட்டம், தட்டாரப்பாட்டம், இடைப்பாட்டம், ஈழம் பூட்சி, வண்ணாரப்பாறை, கண்ணாலக்காணம், குசக்காணம், ஓடக்கூலி, நீர்கூலி, உல்கு, தரகு, மரவிறை, இலைக்கூலம் போன்ற பல வரிகளும் வசூலிக்கப்பட்டதென கல்வெட்டுக்கள் கூறுகின்றன. தறியிறை என்பது நெய்தல் தொழில் செய்வோர்க்கு விதிக்கப்பட்ட வரியாகும். பிற வரிகள் தொழில்கள் பற்றிய வரிகள் என்று பெயரிலிருந்தே அறியலாம். கள்ளிறக்கும் தொழிலாளிகளிடம் வாங்கிய வரி 'ஈழம் பூட்சி' எனப்பட்டது. மணமக்கள் தம் திருமண நாளில் அரசாங்கத்திற்குச் செலுத்தும் வரியே கண்ணாலக்காணமாகும். ஓடம் செலுத்தி வாழ்க்கை நடத்துவோர் தந்த வரியை 'ஓடக்கூலி' என்பர். முதலாம் இராசராசன் கல்வெட்டிலிருந்து மக்கள் குடியிருப்புகள் உள்ள நிலம், கோயில்கள், குளங்கள், கால்வாய்கள் செல்லும் இடம், பறைச்சேரி தொழில்கள், குடியிருப்புகள், சுடுகாடு போன்ற இடங்களெல்லாம் வரிவிதிக்கப்படாத நிலங்கலாயிருந்தன. நிலவரியும், பிறவரிகளும் கிராமசபையாராலேயே வசூலிக்கப்பட்டு, அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. நிலவரியும் பிற வரிகளும் ஈராண்டுகள் நிரம்பி மூன்றாமாண்டு தொடங்கியும் கொடுக்கப்படாமலிருக்குமாயின், கிராமசபையார் அந்நிலங்களைக் கைப்பற்றி ஏலம் விட்டு அவ்வரிகளுக்கு ஈடு செய்வது வழக்கமாய் இருந்தது. செலவுகள் போக மீதமுள்ள தொகை இருப்பு நிதியாக சேர்த்து வைக்கப்பட்டது. நாட்டில் வறட்சி, பஞ்சம் போன்றவை ஏற்பட்டால் அப்பணம் மக்களுக்கு உதவி செய்யப் பயன்பட்டது. பிரமதேயம் என்பது ஒரு கிராமத்தில் உள்ள நிலத்தின் பகுதிகளைப் பல பிராமணர்களுக்கு இறையிலியாகக் கொடுப்பதாகும். அவ்வாறன்றி, ஒரு கிராமம் முழுவதுமே ஒரே பிராமணனுக்குக் கொடுக்கப்படுமாயின், அது ஏகபோகம் எனப்படும். அதாவது ஒருவனே அனுபவிப்பது என்பது பொருள்படும். தேவதான நிலங்கள் அந்தந்த தெய்வங்களின் அடையாளச் சின்னம் பொறிக்கப்பட்ட கற்களை நட்டு வரையறை செய்யப்பட்டன.

### சமுதாய வாழ்க்கை

மிகத் தொன்மை வாய்ந்த சோழ மரபினரின் மக்கள் எண்ணிக்கை எவ்வளவு என்று திட்டப்படுத்துவது எளிதல்ல. ஏனென்றால் அக்காலத்தில் ஏன்—மிக அண்மைக்

காலம் வரை — மக்கள் தொகையைக் கணக்கெடுக்கும் வழக்கமேயில்லை; சோழப் பேரரசும் எக்காலத்தும் ஒரே அளவினதா இல்லை. மக்கள் தொகைக் கணக்கெடுப்பது பற்றி அரசாங்கம் அக்கறை எடுத்துக்கொள்ளவில்லையா என்பது தெரியவில்லை. ஆகையால் அக்கால சமூகநிலை, சமூக வாழ்க்கை முதலியவற்றை அறிந்து கொள்வதற்கு இஃதொரு பெரும் குறையாகிவிட்டது.

சில நகரங்களிலும், ஊர்களிலும் இப்போதுள்ள மக்களைக் காட்டிலும் அதிக மக்கள் இருந்தனரென கல்வெட்டுகளிலிருந்து ஊகிக்கலாமென்று பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி கருதுகிறார். இன்று போல் அன்றும் வேளாண்மையில் ஈடுபட்ட ஊர்கள் மிகப்பலவாக இருந்தன. தொழில் துறைகளும், வாணிகமும் பட்டணங்களில் சிறப்பாக வளர்ந்திருந்தன. பொதுவாக நகரங்களிலும், கிராமங்களிலும் அமைதி நிலவியது. ஆனால் மண முறைகளில் சமுதாய நியதி இன்றிருப்பவை போலவே அன்றும் இருந்திருக்க வேண்டுமென்று சாஸ்திரி கூறியிருக்கிறார். ஆனால், இந்த நூற்றாண்டில் திருமண முறையிலும், மிக அண்மையில் சடங்குகளிலும் பெரும் மாற்றம் வந்துள்ளதைக் காண்கின்றோம். சமுதாய நியதியும் மிகமிக மாறியுள்ளது. வெளிநாட்டாரோடு, அதிலும் குறிப்பாக ஆங்கிலேயரோடு ஏற்பட்ட தொடர்பினால் சமூக முன்னேற்றம், குறிப்பாக உயர் கல்வி பொருளாதார நிலை முதலியவற்றில் உயர்ந்தவர்களிடையே வாழ்க்கை முறை, சமூக நியதி ஆகிய யாவும் உயர்ந்துள்ளன. ஆனால் இது எல்லோருக்கும் ஒரே முறையான பயனை அளிக்கவில்லை. நகரங்களில் இருந்தவர்களிடமும், செல்வர்களிடமும் தான் புது வாழ்க்கை முறையும் சமூகச் சடங்குகளும் உயர்ந்தன; செலவுகளும் அதிகரித்தன; இன வேற்றுமைகளும் சங்க காலத்திலிருந்ததைவிட வளர்வதாயின. பேராசிரியர் கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி, சோழர் காலத்தில், தொழிலை ஒட்டிய ஜாதி வேற்றுமை சிறிது ஊக்கம் குன்றியது என்று கூறுகிறார். மரபுத்தொடர்பு முன்னிருந்தது போல் வலுவுற்றிருக்கவில்லை என்றும், சிலர் அவரது பண்டைத்தொழிலைக் கைவிட்டு வேறு தொழிலைக் கடைப்பிடித்தனர் என்று கூறியுள்ளார். அதற்குச் சான்றாக எண்ணாயிரம் என்னும் ஊரில் பிராமணர் வாணிகத் தொழிலைப் பின்பற்றினர் என்றும், அக்காரணத்தால் அவர் வளஞ்சிய எண்ணாயிரத்துத் தெற்குச் சாலை வணிகரோடு இணைத்துக் கருதப்பட்டனர் என்றும் கூறுவர். ஆனால் இவ்வொரு குறிப்பிலிருந்தே சாதி வேற்றுமை அற்றுவிட்டதென்றோ, பண்டைத் தொழில்களைப் பலரும் புறக்கணித்துப் புதுத்தொழில்களைக் கடைப்பிடித்தன ரென்று பொதுவாகச் சொல்ல வழியில்லை. இக்காலத்தில் பிராமணர்களின் உயர்ந்த வகுப்பினராக, பெரும்பாலும் மதச் சார்புடைய தொழில்களிலேயே ஈடுபட்டிருந்தனர்; கல்வியில் மேம்பட்ட நிலையில் இருந்தனர். பிராமணர்கள் தாங்கள் குடியிருந்த ஊர்களிலுள்ள சபைகளில் சேர்ந்து தனித்து வாழ்ந்ததுடன் கூடுமான வரையில் மற்ற இனத்தவர்களுக்கு அந்தப்பகுதியில் நிலவுடமையில்லாமல் செய்து வந்தனர். அந்த நாள்களில் பிராமணர்கள் வேத சாஸ்த்திரங்களில் வல்லவர்களாயிருந்ததுடன் கோயில் மண்டபங்களில் அமர்ந்து மகாபாரதம் போன்ற வடமொழி நூல்களைப் பொதுமக்களுக்கு எடுத்துக்கூறி கதாகாலட்சேபம் செய்து வந்தனரெனவும் தெரிகிறது. அவர்களுடைய கல்வி மேம்பாட்டைக் கண்டு மகிழ்ச்சியடைந்த ஊர்ப்பொதுமக்கள், ஊர்ப்பொது நிலங்களுள் சிலவற்றை வேதவிருத்தி, பட்டவிருத்தி, புராணவிருத்தி போன்ற பெயர்களோடு இறையிலி நிலங்களாகக் கொடுத்து, அவர்களை ஆதரித்தனரெனவும் சாசனங்களால் தெரியவருகிறது.

பிராமணர்களைத் தவிர வேறுசில வகுப்பினரும் தமக்கென்று சில உரிமைகளைப் பெற்றுக்கொண்டனர். தச்சன், கொல்லன், தட்டான், கன்னான், கொத்தன் என்று கூறப்படும் ஐவகைக் கம்மாளர்களும் மிகவும் முயன்று பல உரிமைகளைப் பெற்றனர் என்று தெரிகிறது. அவர்கள், தாங்கள் விஸ்வகர்மப் பிராமணர்கள் என்றும், எனவே பிராமணர்களைப்போன்று பூணூல் அணிதல் போன்ற சடங்குகளைச் செய்யும் உரிமை வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டனர். இவ்வெடுத்துக்காட்டிலிருந்து, சாதி வேற்றுமைகளும், சாதிப் பொறாமைகளும், குறைகளை வற்புறுத்தல்களும் அக்காலத்திலேயே ஓங்கி வளர்ந்து விட்டன என்பதறியப்படும்.

பொதுவாக மக்கள் பழங்காலத் தொழில்களைக் கைவிட்டு புதுத்தொழில்களை மேற்கொள்ளவில்லையானாலும், ஒரு சில வகுப்பினர்கள் கலப்புத்திருமணம் செய்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. இக்காலத்தில் அனுலோமர், பிரதிலோமர் என்ற இணைப்பு வகுப்பினர் இருந்தனரெனக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இது உண்மையில் கலப்பு மணத்தால் நிகழ்ந்ததா? மிகப்பழங்காலத்தில் தோன்றியிருந்த புராணக்கதைகளின் சார்பாக எழுந்த வகுப்பினரைப் பின்பற்றியதால் வந்ததா? என்பது அறியக்கூடவில்லை. எனினும் சோழர் காலத்தில் சிலர் இவ்வாறு பின்பற்றியிருக்கக்கூடும் எனத் தெரிகிறது. முதற்குலோத்துங்கன் ஆட்சியின் இறுதிக் காலத்தில் நிகழ்ந்த மாற்றத்தை இதற்கோர் எடுத்துக்காட்டாகக் காட்டலாம். ஒரு கல்வெட்டு ராசாஸ்ரய சதுர்வேதி மங்கலத்து பட்டர்கள் சாஸ்திரங்களை ஆராய்ந்து ரதகாரர்கள் என்ற அனுலோம வகுப்பினர் ஈடுபடக்கூடிய தொழில்களை எடுத்துக்காட்டியுள்ளனர். அதாவது, கட்டடங்கள், தேர் ஆடம்பரவண்டி முதலியவை கட்டுவது, கோபுரங்கள், மண்டபங்களின் பணிசெய்விப்பது; உருவச் சிலைகள் ஆக்குவது; யாகத்திற்கு வேண்டிய செயல்களைச் செய்வது முதலியவை இவர்களுடைய தொழில் என்று வரையறுத்தனர். 1169ஆம் ஆண்டுக்குரிய கல்வெட்டொன்றிலிருந்து ரதகாரர் என்போர்கள் கொல்லர், தட்டார், தச்சர், கொத்தர் முதலியோர் சேர்ந்திருந்தரெனத் தெரிகிறது.

பிரதிலோமர், அனுலோமர் வகுப்பினரைத்தவிர வேறு இனத்தவர்களுக்கும் சில தனி உரிமைகளைச் சோழமன்னர்கள் வழங்கியிருந்தனர். தமிழகத்தின் தெற்குக் கோடியில் இருந்த இடையர்கள் நன்மைதீமைக் காலங்களில் பேரிகை முழக்கலாம் எனவும், நன்மைக்குப் பல்லக்கில் ஏறிச் செல்லலாம் எனவும், தீமைக்கு மேல் வளைவுள்ள பாடைகட்டி அதன்மேல் சுட்டுக்கட்டிக் கொள்ளலாம் எனவும், தாங்கள் வீடுகளுக்கு சுண்ணாம்புச் சாந்து பூசிக் கொள்வதுடன் இருபுறமும் வாயிற்படிகள் அமைத்துக் கொள்ளலாம் எனவும் உரிமை வழங்கப்பட்டதாக மதுரை மாவட்டம் மேலூர் தாலூகா கீரனூர்க் கல்வெட்டொன்றால் அறியப்படுகிறது.

சோழப் பேரரசர் காலத்தில் தோன்றிய ஒரு விந்தையான சமூகப் பாகுபாடு வலங்கை இடங்கைச் சாதியினர் எனப்படுவதாகும். மாடிகர், பேடர் என்ற இவ்வடக்குப் பகுதியினர் இடங்கை வகுப்பினர் என்று கூறப்பட்டனர். சோழ நாட்டுத் தமிழர்களிடையே பிராமணர்களையும் வேளாளர்களையும் தவிர மற்ற சாதியைச் சார்ந்தவர்கள் இந்த இரு வகுப்பில் எதனையும் சாராதவராயிருந்தனர். பாண்டி நாட்டிலும் கேரளத்திலும் இந்த இரண்டு வகுப்பினரைச் சார்ந்த மக்கள் வாழ்ந்திருந்த போதும்

அவர்கள் இப்பாகுபாட்டைக் கையாண்டதாகத் தெரியவில்லை. கரிகாலன் காலத்தில் மக்கள் மன்னனிடம் அவர்களுடைய குறைகளை அறிவிக்கச் சென்றபோது, மன்னனது இருபக்கத்திலும் நின்று முறையிட்டனரென்றும், அதுமுதல் மன்னருக்கு வலக்கைப்பக்கம் நின்றவர் வலங்கையினரென்றும், மற்றவர் இடங்கையினரென்றும் கருதப்பட்டனர். இது முதன்முதல் வந்த கரிகாலனைச் சார்ந்ததென்றால் அதற்கு அடிப்படையே இல்லை. ஏனென்றால் இவர்களைப்பற்றி முதன் முதலாகக் கேள்விப்படுவதே கி.பி. 11ஆம் நூற்றாண்டிலேதான்.

சங்க காலத்தில் அடிமை முறை பெருவாரியாக இல்லாவிடினும் சில அடிமைகள் இருந்திருக்க வேண்டும். சோழப் பேரரசு காலத்தில் அடிமை முறை வழக்கத்திலிருந்தது என்பதற்கு ஐயமில்லை. அடிமைகள் பொதுவாக கோயிலை ஒட்டியே அடிமைப்பட்டனர். கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்ட அடிமைகள் கோயில்களுக்கு விற்கப்பட்டதாகவே தெரியவருகிறது. ஆனால், ஒரு விந்தையான வழக்கம் குறிப்பிடத்தக்கது. சிலர் தம் விருப்பத்தாலேயே கோயில்களுக்கு அடிமைகளாக விற்றுக் கொண்டனர். கோயிலில் சில திருப்பணி செய்வதற்காகவும் அடிமைகள் வாங்கப்பட்டனர். உணவுப் பண்டங்கள் முதலிய கோயிற் பிரசாதங்கள் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்ததால், இவர்களை வழக்கமாக இருந்த அடிமைகளைப்போல் கருதுவதற்கில்லை.

உழவுத்தொழிலில் பண்ணையாள் முறை என்ற ஒரு திட்டம் அண்மைக்காலம் வரையில் இருந்ததை அறிவோம். மக்கள் சமூக வாழ்க்கையைப் பற்றிக் கூறும்போது உணவுபற்றி அறிவது மிகத்தேவை. சங்ககாலத்திலிருந்து பெரும் மாற்றம் எதுவும் உணவு நிலையில் ஏற்படவில்லை. முக்கியமான உணவுப்பொருள் நெல் அரிசி தான். இதற்கு சோழநாட்டில் எப்பொழுதுமே ஒரு தனிப்பெருமை உண்டு. நெல், அரிசி, தவிர சோளம், கம்பு, கேழ்வரகு, பயிறு, உளுந்து, கடலை, எள் முதலியனவெல்லாம் இடம் பெறுகின்றன. அவல், பொரி முதலியவற்றையும் மாங்கனி, வாழைக்கனி, பலாக்கனி ஆகியவற்றையும் மக்கள் விரும்பி உண்டனர். பாற்சோறு, அக்கார அடிசில், புளிஞ்சோறு என்று பல வகையான சோறுகள் சமைக்கப்பெற்றன. காய்கறி வகைகளைப் பொரித்தும், துவட்டியும், தாளித்தும் உண்பர். சோற்றுடன் கட்டித் தயிரும், ஆடைத் தயிரும் கலந்துகொள்வதுண்டு. அன்றைய மக்களிடையே கட்டுச்சோறு உண்ணும் வழக்கம் இருந்தது. பழச்சாற்றில் இஞ்சியை ஊறவைத்து உண்பதுண்டு. சமண முனிவர்கள் புல்லரிசி, அல்லிக்காயரிசி, மூங்கிலரிசி, தோரை என்ற அரிசி வகைகள், காய், கிழங்கு, பழம், வள்ளிக்கிழங்கு, மலைவாழைப்பழம் ஆகியவற்றை உண்டு வந்தனர். வேடர்கள், கிழங்கு, தேன், ஆண் பன்றி, முள்ளம்பன்றி இறைச்சிகள், நெய் ஆகிய பண்டங்களை விரும்பி உண்டனர். வெப்பத்தைப் பெருக்கும் கள் வகைகளையும் அருந்தினர். மணை மேல் அமர்ந்து கலங்களிலிருந்து உணவு எடுத்து உண்ணுவது அக்காலத்துப் பொதுவாகக் காணப்பட்ட பழக்கம். தண்ணீர்ப் பந்தல்களில் வழிப்போக்கருக்கு வழங்கப்பட்ட தண்ணீரில் பூவும் சந்தனமும் கலந்திருக்கும். நறுமணம் வீசும் விறகுகள், செல்வர்கள் வீட்டுச் சமையல் அடுப்பில் எரிக்கப்பட்டன. நெல்லின் விலை இடத்துக்கு இடம் சற்று மாறுதலடைந்திருந்தது. சாசனங்களிலிருந்து சாமான்களின் விலைகளைப்பற்றி ஒன்றும் தெளிவாக அறிவதற் கில்லை. வெகுதூரத்திலிருந்து கொண்டுவரப்பட்ட மதிப்பு மிக்க பொருள்கள் தாம்

பணம் கொடுத்து வாங்கப்பெற்று வியாபாரம் நடந்தது. உலோகங்களுடைய விலைபற்றி திருப்பனந்தாளில் 1099ல் கிடைத்த கல்வெட்டின்படி, ஒரு காசுக்கு 35 பலம் வெண்கலமும், 30 பலம் பித்தளையும் என அறிகிறோம்.

சில சாசனங்களில் ஒரு சில குறிப்புக்களில் பஞ்சங்களைப்பற்றி குறிப்பிடப்பட்டிருக்கின்றன. தென்னாற்காட்டில் தோன்றிய பஞ்சத்தால் மக்கள் நிலங்களை விற்றபின், அரசாண்டநல்லூர் என்ற ஊரை விட்டு அகன்றனர். மிகத்துயரமடைந்த மக்கள் வெளியூர்களுக்குச் சென்று வேலையாட்களாக அமர்ந்தனர். மிகப்பெரிய பஞ்சம் ஒன்றைப்பற்றி ஆலங்குடியில் (தஞ்சாவூர் மாவட்டம்) கி.பி. 1152ல் கிடைத்த கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆண்கள் முழந்தாள் வரையில் ஆடையணிந்தனர். தலையில் தலைப்பாகையணிந்து, வேட்டியைக் கச்சமாக கட்டிக்கொண்டிருந்தனர். மேலாடை ஆண்கள் அணிந்ததாகத் தெரியவில்லை. பெண்கள் கொய்சகம் வைத்துப் புடவைகள் அணிந்தனர். பொதுவாக பெண்கள் மேலாடை அணிந்து தம் மார்பை மறைக்கும் வழக்கம் அந்நாளில் இல்லை. ஓவியங்களிலோ, சிற்பங்களிலோ, பெண்கள் மேலாடையுடன் தோன்றவில்லை. ஆனால் அவர்கள் கச்சு மட்டும் அணிவதுண்டு. பெண்களும் முழந்தாள் அளவே உடையணிவது வழக்கம். ஆடைகள் பலவகைப்பட்டிருந்தன. பாலாவி போன்ற மெல்லிய துணி, காடியூட்டிய பூந்துகில், செவ்வண்ணப்பட்டுள்ள இறக்குமதியான அயல் நாட்டுத்துணிகள், வெண்பட்டு முதலியவை அவைகளில் சிலவாகும். படை வீரர்கள் முழந்தாள் அளவாக வட்டுடை அணிவர். வேடர்கள் செருப்பு அணிவர்.

## பழக்க வழக்கங்கள்

சங்ககாலப் பழக்கங்கள் சில சோழர் காலத்திலும் தொடர்ந்துவந்தன. கார்த்திகை மாதம் கார்த்திகை நாள் அன்று குன்றின் மேல் விளக்கிட்டனர். வெள்ளம் பெருகி வருவதை முரசறைந்து மக்களுக்கு முன்னறிவிப்புச் செய்தனர். மன்னனின் வரலாறுகள் நாடகமாக நடத்திக் காட்டப்பட்டன. உணவுகொண்டஉடன் நூறடி உலவிவர வேண்டுமென்று மருத்துவ நூல்கள் வற்புறுத்தின. குழந்தைகள் பிறந்ததும் அதற்கு மண்பொட்டிடுவார்கள். பிறகு அதைக் குளிப்பாட்டுவார்கள்; மருந்து வார்ப்பார்கள்; குழந்தைகளுக்கு சாதகங்கள் கணித்து வைப்பதுண்டு. பெயர் சூட்டுவிழா குழந்தை பிறந்த பன்னிரண்டாம் நாள் நடைபெறும். ஐந்தாம் ஆண்டில் குழந்தையை பள்ளிக்கு அனுப்புதல் ஒரு மங்கலச் சடங்காகக் கொண்டாடப்பட்டது. ஆசிரியர்களுக்கு பயிற்சி தொடங்கிய நாளன்று காணிக்கையாக பொற்காசுகள் அளிப்பதுண்டு. குழந்தைகளுக்குக் காவலாக வீட்டில் விடிவிளக்கு எரிந்துகொண்டேயிருக்கும். சோழர் காலத்தில், பிணங்களை சுடுகாட்டில் எரிக்கும் வழக்கம் ஏற்பட்டுவிட்டது. பெண்களும் பிணங்களுடன் சுடுகாட்டிற்குப் போவது வழக்கம். விதவைப் பெண்கள் தாம் அணிந்திருக்கும் வளையல்களை உடைத்து, அணிகலன்களைக் களைந்து விடுவார்கள். பிணத்தை சுடுகாட்டில் வைத்ததும் அங்கிருந்த தலைமகன் உப்பில்லாமல் பொங்கிய சோற்றைப் பலியாகத் தூவுவான். மலைகளிலிருந்து குதித்து உயிர்விடும் வழக்கம் இருந்தது. மன்னன் துறவுக்கோலம் பூண்டநாளன்று அங்காடிகள் பூட்டப்பட்டன. விருந்தினர் வீட்டுக்கு வந்தவுடன் அவர்களுக்கு

வெற்றிலைப்பாக்கு வழங்குவதுண்டு. விருந்தினர் நீராடி எழுந்தவுடன் வீட்டுக்குடையவர்கள் அவர்களது கால்களைக் கழுவி மணைமேல் இருத்துவார்கள். உண்டபிறகு வெற்றிலைப் பாக்கு போட்டுக் கொள்வார்கள். பிராமண விருந்தினருக்கு பொன்தட்டும் பக்கத்தட்டுகளும் வைத்து உணவு படைப்பார்கள்.

## திருமணம்

மன்னர்கள் பல மனைவியரை மணந்தார்கள். பொதுமகன்கள் பெரும்பாலும் ஒரு மனைவியோடுதான் வாழ்ந்தனர். திருமணத்திற்கேற்ற நல்ல நாளையும், வேளையையும் கணிகர் கணித்துக் கூறுவார்கள். திருமணம் கெட்ட வேளைகளில் நடைபெறுவதில்லை. ஒரு பெண்ணின் கையைப் பற்றுவதற்கு முதல் உரிமை பெற்றவன் அவளுடைய தாய்மாமனாவான். பெண் வீட்டார் மணமகனைத் தேடிச் செல்லுதல் பழந்தமிழரின் பண்பாட்டுக்கு முரணாகும். மணமகன் வீட்டார் பெண்ணை நாடி மணமகள் வீட்டிற்கு வர வேண்டும். மணமகன் பெண்ணுக்கு பரிசம் போட வேண்டும். பெண் வீட்டார் மணமகனுக்கு வரதட்சிணை வழங்குதல் தமிழரின் மரபு அன்று. பெண்களுக்கு நிலங்களை மகட்கொடையாகக் கொடுக்கும் வழக்கம் அந்நாளிலும் உண்டு. மனைவியின் சீதனச் சொத்தை செலவழிக்கும் உரிமை கணவனுக்கு இல்லை எனத் தெரிகின்றது. பெண்களுக்கு பன்னிரெண்டு ஆண்டுகளில் திருமணம் நடைபெற்றது. திருமணப் பந்தலில் தீ வைப்பதுண்டு. திருமணச்சடங்குகளை அந்தணர்கள் நடத்தி வைத்தனர். பெண்ணின் பெற்றோர் மணமகனுக்குத் தம் பெண்ணை தாரை வார்த்துக் கொடுப்பர்.

## பொழுதுபோக்கு

குதிரைப்பந்தயம், யானைப்பந்தயம், கோழிப்போர் முதலியவை அன்றைய மக்களின் சில முக்கியமான பொழுதுபோக்குகளாகும். பெண்கள் நீர் விளையாட்டுகளிலும், பந்து விளையாட்டிலும் பங்கு கொண்டனர். விழாக் காலங்களிலும் பல்வேறு பொழுது போக்குகளிலும், விளையாட்டுகளிலும், வேடிக்கைகளிலும் மக்கள் ஈடுபட்டனர். இசை, நாடகம், கூத்து போன்ற பொழுது போக்குகளிலும் பங்கு கொண்டனர். சோமபானம் என்ற தனிப்பட்ட மது ஒன்றை பெண்கள் அருந்தினர். உயர்வரிசை மக்கள் பல்லக்கேறி பயணம் செய்தனர். மக்கள் குளித்துவிட்டு மரக்கட்டைச் செருப்பை அணிந்து வீட்டுக்குள் நுழைவார்கள். யவனர் செய்த பெட்டிகளில் நகைகள் பூட்டி வைக்கப்பட்டன.

மருத்துவம் சோழநாட்டில் நன்கு வளர்ச்சி அடைந்திருந்தது. நோயை மருந்தினாலும், அறுவையினாலும் குணப்படுத்துவதற்கு மருத்துவர்கள் பயிற்சி பெற்றிருந்தனர். வாதம், பித்தம், சிலேட்டுமம் என்ற மூன்று நாடிகளை நன்கு ஆராய்ந்திருந்தனர். மருத்துவ வசதிகள் குடிமக்களுக்கும் தவசிகளுக்கும் செய்யப்பட்டிருந்தது. எண்ணாயிரம், முக்கூடல் போன்ற இடங்களில் மருத்துவச் சாலைகள் நடைபெற்று வந்தன.

## சமயம்

சோழர்காலத்தில் சமயவளர்ச்சியில் பல மாற்றங்களும், புதுக்கருத்துக்களும் தோன்றின. ஆனால் அடிப்படையான கொள்கைகள், நம்பிக்கைகள் வழிபாடுகள்

போன்றவை சோழர் காலத்திலும் மக்களிடையேயிருந்து வந்தன. சோழர்காலம், கோயில்கள் உயர்நிலையடைந்த காலமாகும். பல கோயில்கள் கட்டப்பட்டன மட்டுமின்றி கோயில்கள் பழுதுபார்க்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டன.

வழிபாட்டில் சோழர் காலத்தில் சிவனுக்கே முதலிடம் தரப்பட்டது. அடுத்து திருமால், முருகன் ஆகியோர் இடம் பெற்றனர். தேவி வழிபாட்டில் பார்வதியும், இலக்குமியும் சிறப்பான இடத்தைப் பெற்றனர். சூரியனுக்கு தனிக்கோயில்கள் சில எழுப்பப்பட்டன. சூரியனார் கோயில் என்ற ஊரில் உள்ள சூரியன் கோவிலில் வழிபாடுகள் நடத்த முதலாம் குலோத்துங்கன் ஏற்பாடுகள் செய்தான். இராசராசன் பெரும் வெற்றிகள் பல பெற்றதிலிருந்து கோயில்கள் பல எடுப்பிக்கப்பெற்றன. அணியலங்காரங்களால் மேன்மைப்படுத்தப்பட்டன. மிகப் புகழ்பெற்ற பிரகதீசுவரர் கோயில் கங்கை கொண்ட சோழபுரக் கோயில்களேயன்றிப் புகழ்பெற்ற எண்ணிறந்த கோயில்கள் எடுப்பிக்கப்பெற்றன. உதாரணமாக திருநெல்வேலி மாவட்டம் பிரமதேசத்தில் எடுப்பிக்கப்பெற்ற திருவாலீசுவரம் கோயில் மிகச்சிறப்புற்றது; அருமையான வேலைப்பாடுகள் கொண்டது. முதலாம் ஆதித்தியன் ஆட்சியிலமைந்த மாபெரும் சிறப்பு யாதெனில் மலைமுதல் கடல்வரை காவிரியாற்றின் இரு பக்கங்களிலும் மிகப்பல கோயில்களைக் கட்டுவித்ததே என்று அன்பில் செப்பேடுகள் கூறுகின்றன. அதேபோலவே முதல் பராந்தகனும் பல கோயில்களைக் கட்டினான். சிதம்பரம் கோயிலைப் பொன்வேய்ந்தது அவனது அருஞ்செயல். மன்னர்கள் தவிர அவர்கள் உறவினர், அலுவலாளர் பலர் கோயில் கட்டும் பணியில் ஈடுபட்டனர். சோழர் காலம் கோயில்களின் உயர்வான காலம் மட்டுமன்று, அவர் தொடங்கி வைத்த ஆர்வம் பிற்காலத்திலும் வளர்ந்தோங்கியது.

அக்காலத்துக் கோயில்களில் சிறப்பு வாய்ந்ததும், செழிப்பு வாய்ந்ததும் தஞ்சாவூர் பிரஹதீசுவரர் கோயிலாகும். கி.பி. 1009ல் கட்டிமுடிக்கப்பட்ட இக்கோயில் இந்தியக் கோயில்களிலேயே மிக உயரமானதும், பெரியதும் என்பதற்கு ஐயமில்லை, தென்னிந்தியக் கட்டிடக் கலையில் மாணிக்கம் என இதைக் கருதலாம். இக்கோயிலுக்கு இராசராசன் தனது 29ம் ஆட்சி ஆண்டுக்குள்ளாகவே அளவற்ற பொன்னும் சொத்துக்களும் அளித்தான். கோயில் பணிக்காக நானூறு தளிச்சேரிப் பெண்டுகள் பல சிறு கோயில் களிலிருந்து இங்கு நியமிக்கப்பட்டனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒருவீடும் ஆண்டுக்கு 100 கலம்நெல் அளிக்கும் ஒரு வேலி நிலமும் கொடுக்கப்பட்டது. தஞ்சாவூர்க் கோயில் தமிழ்நாட்டின் பொருளாதார நிலையை பெருக்குவதில் பெரும் பங்கு கொண்டிருந்தது. முதலாம் இராசேந்திரன் காலத்தில் தோன்றிய கங்கைகொண்ட சோழபுரம் கோவில் தஞ்சாவூர்க் கோயிலைவிடச் சிறியதாயிருந்தாலும், அழகிலும் சிற்ப வேலைகளிலும் மிகச் சிறந்ததாகும். சோழப் பேரரசர்கள் காலத்தில் தோன்றிய மிகப்பல கோயில்களில் தாராசுரம், திரிபுவனம் முதலியவையும் குறிப்பிடத்தக்கவை. சைவக் கோயில்கள் மிகுதியாகத் தோன்றிய போதிலும், அனந்தாழ்வார் கோயில் போன்ற சில வைணவக் கோயில்களும் சோழர் காலத்தில் கட்டப்பட்டன. விக்கிரம சோழன் ஸ்ரீரங்கம் அரங்கநாதர் கோயிலுக்குப் பல புதிய அமைப்புக்கள் செய்து வைத்தான்.

கோயில்களைத் தவிர இந்து மதத்தைப் பரவச் செய்வதற்கு தொண்டாற்றியவை மடங்களேயாகும். பெரிய கோயில்களுக்கு அருகில் அமைக்கப்பட்ட மடங்கள் சோழர் காலத்தில் தான் அதிகரித்தன. முதலில் பொதுவாகச் சமயம் பற்றிய ஆராய்ச்சிகளும், பயிற்சிகளும் நடைபெற்றன. பிறகு சில தத்துவங்களையும் கொள்கைகளையும் பற்றித் தீவிர ஆராய்ச்சிகளை தனிப்பட்ட முறையில் மடங்கள் நடத்தி வந்தன. இவற்றில் சிறந்த குருக்கள் தலைவர்களாயிருந்தனர். மடங்களுக்கு சோழ மன்னர் பெரிதும் துணை புரிந்தமையால் பெரும்பற்றப்புலியூர், மேலைச்சேரி, பதஞ்சலி தேவர்மடம், கீழையூர்மடம், திருவானைக்கா நடுவில் மடம், திருச்சத்தி முற்றத்து முதலியார் மடம் முதலிய மடங்கள் சிறப்புடன் விளங்கின. கோவிந்தபுத்தூரில் திருத்தொண்டத் தொகையான் திருமடம் நிறுவப்பட்டது. வழிப்போக்கருக்கு உப்பு, விளக்கெண்ணை வழங்குவதும், நோய்க்கு மருத்துவம் செய்வதும் இம்மடம் மேற்கொண்டிருந்த சில குறிப்பிடத்தக்க கடமைகளாகும்.

இந்து சமயத்தின் இரு கண்கள் எனக் கருதப்படும் சைவம், வைணவம் ஆகிய இரு பெரும் சமயங்களும் சோழர் ஆட்சியில் சிறப்புடன் வளர்ந்து வந்தன. ஆனாலும் சோழர் காலத்தில் சைவ சமயம் தான் உன்னத நிலையை அடைந்தது எனலாம். சைவ அடியார்கள் ஊர் ஊராகச் சென்று கி.பி. 7ஆம் நூற்றாண்டு முதல் இவன் பேரில் உருக்கமான பக்திப் பாடல்களை (தேவாரப் பாடல்கள்) பாடினார்கள். தவிர, சோழர் காலத்தில் தான், இவையாவும் திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டு கோயில்களில், முறையாகப் பாடப்பட்டு வந்தன. வைணவ ஆழ்வார்களும் அதற்கு முன்னரே தோன்றிப் பக்திப் பாடல்களைப் பாடினர். நாலாயிர் திவ்வியப் பிரபந்தத்தில் அவை தொகுக்கப் பெற்று வைணவக் கோயில்களில் பாடப்பெற்றன. சைவ நாயன்மார்களும், வைணவ ஆழ்வார்களும் வைதீக சமயத்துக்குப் புத்துயிர் அளிப்பதற்காகவே பிறவி எடுத்தவர்கள் வைதீக சமயம் மீண்டும் ஒரு முறை வலிகுன்றிச் சரிந்து விடாதபடி திறமையான அடிப்படையின் மேல் அவற்றை நிறுவினார்கள். பல்லவர் காலத்தில் வைணவமும் கிளர்ச்சியுற்று எழுந்தது. வைணவ சமயத்தில் நெஞ்சை அள்ளும் பாடல்களைப் பாடித் தமிழகத்தில் பக்தி வெள்ளம் பெருகச் செய்தவர்கள் ஆழ்வார்களாவர். ஆழ்வார்கள் பன்னிருவர் தமிழகத்தின் பல இடங்களிலும், தோன்றியவர்கள். வைணவ சமயம் பல்லவ நாட்டில் தோன்றிச் சோழ நாட்டில் வளர்ந்து பாண்டிய நாட்டில் மலர்ச்சியுற்றது. சோழர் காலத்தில் இவர்கள் பாசுரங்கள் வைணவக்கோயில்கள், மடங்கள், வைணவர் வீடுகள் ஆகியவற்றிலெல்லாம் செல்வாக்குப் பெற்றது.

வைணவக் கோயில்களில் மூர்த்தியின்மையால் அமர்ந்து நாலாயிரப் பிரபந்தப் பாடல்களைப் பாராயணம் செய்யும் வழக்கம் உண்டு. ஆயினும் சோழர்கள் தேவாரம் ஓதுவதைக் கண்காணித்து வருவதற்காகவே 'தேவார நாயகம்' என்ற உயர்நிலை அலுவலர் ஒருவரை நியமித்திருந்தனர். வைணவக் கோயில்களில் திருவாய் மொழியையும், திருமங்கையாழ்வார், குலசேகராழ்வார் பாசுரங்களையும், சாற்று முறை செய்து வரப் பலமானியங்கள் அளிக்கப்பட்டுள்ளன. முதலாம் இராசராசன் காலத்திலுள்ள உக்கல் கல்வெட்டு வைணவக் கோயில்களில் திருவாய்மொழி பாடியதைக் குறிப்பிட்டதிலிருந்து, தேவாரத்தைப் போலவே திருவாய் மொழியும் அக்காலத்தில் சிறப்புற்றிருந்ததாகக் கருதலாம். நம்மாழ்வாரின் வழிபாடு முதலாம் இராசராசன் காலத்திலேயே தொடங்கி

யிருந்தது. வைணவருக்குத் தலையாய கோயில் திருவரங்கத்துக் கோயில் தான். வழி நடைவைணவருக்கு உண்டியளிப்பதாக நிவந்தம் நிறுவப்பட்ட செய்தியொன்றை திருக்கோவலூர்க் கல்வெட்டொன்று தெரிவிக்கிறது. மன்னர்கள் பல மதப்பிரிவுகளுடனும் வேற்றுமையில்லாது நடந்த போதிலும், மக்கள் சிலர் கடும் போட்டிகளைத் தோற்று வித்தனர். சைவ வைணவப் போட்டிகள் சோழர் காலத்தில் இருந்ததை திருக்கடையூர் மகாசபை ஏற்படுத்திய ஒரு திட்டத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம். ஆக, பொதுவாகவே சைவரும் வைணவரும் தனித்தனியாகவே வாழ்ந்து வந்தனர்.

சோழப் பேரரசின் முற்பகுதியில் சமயப் பிரிவுணர்ச்சியும், போராட்டங்களும் அறவே இல்லாதபடி மன்னர்கள் எல்லா மக்களையும் வேற்றுமையின்றி நடத்தி வந்து நன்கொடைகள் அளித்தனர். மிகப்பெரிய நோக்கமுடைய முதலாம் இராசராசன் தன் விரிவான மனப்பான்மையைப் பல வகையிலும் காண்பித்ததோடு, அவரது பெரிய கோயிலில் வைணவம், பௌத்தம் ஆகிய மதங்களிலுள்ள காட்சிகளையும், ஆய்வுப் பொருட்களை அலங்கரிக்க முன் வந்தார். அவருடன் உடன்பிறந்த குந்தவை அம்மையார் சிவனுக்கும், விஷ்ணுவுக்கும், சமண மகாவீரருக்குமாக ஒரே இடத்தில், அதாவது இன்று தாதாபுரம் என்று அழைக்கப்படும் இராசராசபுரத்தில் அமைத்து நன்கொடைகளும் வழங்கினார். சில கோயில்களில் சைவ அம்பலங்களும் வைணவ அம்பலங்களும் ஒன்றுக்கொன்று அருகிலேயே இருந்தன. (உதாரணம் சிதம்பரம் கோயில்). சிவன், விஷ்ணு உருவங்கள் எந்தெந்த இடங்களில் அமைய வேண்டுமென்பதைத் திருக்கோவையார் நுட்பமாகக் குறிப்பிடுகிறது.

சிவன் கோயிலில் சில வைணவப் படிமங்களும், வைணவக் கோயிலில் சைவ உருவச் சிலைகளும் காணப்பட்டன. பல கோயில்களில் முக்கிய தெய்வத்தோடு, அவரவரது பல்வேறு பண்புக் கூறுகளும், அவரோடு சார்புடைய மிகப்பல படிமங்களும் கூட அமைக்கப்பட்டிருந்தன. கணபதி, சுப்ரமணியர், மஹாவிஷ்ணு, சூரியன் ஆகிய தெய்வச் சிலைகளையும் அமைத்துள்ளனர். இவற்றோடு சிவனடியார்களின் சிலைகள் சிலவும் காணப்பட்டன; அவற்றுள் குறிப்பாகத் தேவாரம் பாடிய பெரியோர்களும், மெய்ப்பொருள் நாயனார், சிறுத்தொண்டர், சீராளர், சிவபெருமானின் அனுக்கிரக மூர்த்தியான சண்டேசுரர் ஆகியோரின் படிமங்களும் இருந்தன. இதே கோயில்களில், துர்க்கா, பரமேஸ்வரி, எமலத்துத் துர்க்கையார், ஓம்காரசுந்தரி, காலபிடாரி முதலிய தேவிகளின் படிமங்களும் கோயில்களில் இருந்தன. அன்றியும் கிருஷ்ணன், இராமர், சீதை, லட்சுமணன், அனுமான் ஆகியவர்களுக்கும் சிலைகள் அமைக்கப்பட்டிருந்தன. சமய உட்பிரிவுகளைச் சார்ந்த பல தெய்வங்கள், தேவதைகள் ஆகியோரின் படிமங்கள் சில கோயில்களில் அமைந்தமைக்கு ‘எண்ணாயிரம்’ ஓர் எடுத்துக்காட்டு. அதுபோன்று நாயன்மார்கள், ஆழ்வார்கள் ஆகியோருக்குக் கோயில்களில் சிலைகளும் எடுக்கப்பட்டன. இந்து மதத்தில் பல்வேறு பகுதிகள் இருந்தபோதிலும் அதன் பொதுப்பாங்கான தன்மை குறிப்பிடத்தக்கது. பக்தர்கள் தல யாத்திரை செய்து தெய்வங்களை வணங்கினர். கிராம தேவர்களுக்கும், தேவதைகளுக்கும் உயிர்ப்பலி நடைபெற்றது. ஆகவே இந்துமதம் பல கொள்கைகளும், கருத்துக்களும் ஒன்று சேர்ந்த ஓர் இணைப்பு எனக் கூறலாம்.

## சைவம்

அக்காலத்தில் தழைத்தோங்கிய சைவத்தின் நிலையை முதலாம் இராசராசனின் கல்வெட்டுகள் விளக்குகின்றன. திருத்தொண்டர்களின் வாழ்க்கை வரலாறும், பதிகங்களும் அப்பொழுதே மக்கள் மனத்தைக் கவர்ந்திருந்தன. இந்து சமயத்தில் மும்மூர்த்திகள் தத்துவம் ஏற்றுக் கொள்ளப்பட்டதாயினும் சிவனே முழு முதற்கடவுளாகக் கொள்ளப் பட்டார். அழித்தல் தொழிலை ஏற்றவராயினும் அவர் தோற்றம் இறுதியற்றவர் என்று சைவ சமயம் கூறுகிறது. அதை சோழர் காலத்திய தமிழகம் ஏற்றிருந்தது. சமய குருமார்கள் நால்வரும் தம் பாடல்களின் மூலம் சைவ வழிபாட்டையும் நடராச தத்துவத்தையும் நாடறியப் பரப்பினார்கள். எனினும் அவர்களுடைய தமிழ் மறையில் பொதிந்து கிடந்த மெய்ப்பொருள்களைத் தனியே திரட்டிச் சிலைகளில் வடித்துக் காட்டிய பெருமை சோழர்களையே சாரும். சங்கராச்சாரிய சுவாமிகள் அத்வைத வேதாந்தத்தை நாடெங்கும் போதித்து வந்தார். அவருடைய சிறந்த தொண்டினால் பௌத்தம் ஒழியிழந்தது. ஆனால் அதன் விளைவாக மக்களுக்கு கடவுள் பக்தி குறைந்தது. வெறும் தருக்கவாதமாகவும், அறிவுமுறையில் மட்டும் உணரக்கூடியதாகவும் இருந்த வேதாந்தமானது மக்களிடையே கடவுள் பற்றைத் தோற்றுவிக்கவும் ஒழுக்கங்களை வளர்க்கவும் கோயில்களின் அமைப்பிலும் சமய இலக்கிய வளர்ச்சியிலும் மக்கள் கருத்தை ஈர்க்கும் நோக்கத்தில் கருத்தூன்றலாயினர். சோழர் காலத்தில் சைவ சித்தாந்தம், விசிட்டாத்து வைதம் என்னும் இரு கோட்பாடுகள் நிறுவப்பெற்றன. கடவுள் ஒருவர் உண்டு; உயிர் என்பது ஒன்று உண்டு; அது தன்னைத்தான் அறியக்கூடாமலும் இறைவனை அறியக் கூடாமலும், அதைத் தடைசெய்யும் இருள் ஒன்று உண்டு என்பது சைவ சித்தாந்தத்தின் அடிப்படைத் தத்துவம் ஆகும். இறைவனைப் பதி என்றும், உயிரைப் பசு என்றும், இருளைப் பாசம், தடை, தளை, ஆணவம் என்றும் கூறுவர். ஆணவ இருளில் சிக்குண்டு உழல்கின்ற உயிர்களிடம் இறைவனுக்கு அருள் சுரக்கின்றது.

## வைணவம்

சைவத்துக்கு நாயன்மார் செய்த தொண்டைப்போல் ஆழ்வார்கள் வைணவத்திற்குச் செய்தனர். முற்காலத்து ஆழ்வார்கள் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்போராவர். வைணவக் கோயில்களில் திருவாய்மொழி, திருமங்கையாழ்வாரின் பாசுரங்களையும் குலசேகர ஆழ்வாரின் பாசுரங்களையும் சாற்றுமுறை செய்துவரப் பல நிவந்தங்கள் அளிக்கப்பட்டுள்ளன. வைணவத் தத்துவத்தை ஆராய்ந்து விளக்கியவருள் முதன்மையானவர் இராமானுசர் ஆவார். இவர் 11ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஸ்ரீபெரும்புதூரில் பிறந்தவர். அவர் ஸ்ரீ சங்கராச்சாரியாரின் மாயாவாதத்தை மறுத்து வாதிட்டார்; உபநிஷத்துக்கள் ஒரு பொருண்மை வாதத்தைக் கற்பிக்கவில்லையென்று வாதாடி, விசிஷ்டாத்வைதத் தத்துவத்தை உருவாக்கினார். இது உருவமுடைய கடவுள் மீது பக்தியையும், வேதாந்த தத்துவத்தையும் சமரசப்படுத்தியது. இயன்ற இடத்திலெல்லாம் கோயில் சடங்குமுறைகளைச் சீர்திருத்தம் செய்து அவர் கொள்கையைப் பின்பற்றின வர்களை ஒன்றாய் இணைத்தார். சோழர் சைவத்தில் பெரும்பற்றுள்ளவர்களாதலால் இராமானுசரின் செல்வாக்கை வெறுத்தனர்.

## தெய்வீக ஒப்புவித்தல்

திருப்பதிகங்களும் பாசுரங்களும் தமிழில் ஓதப்பட்டதோடு கூட வேதத்திலிருந்து செய்யுள்களும், சிவன் கோயில்களிலும் வைணவக் கோயில்களிலும் அதற்கென்று நியமிக்கப்பட்ட பிராமணர்களால் ஓதப்பட்டு வந்ததென்று சோழர் கல்வெட்டுகளிலிருந்து தெரியவருகின்றது. மக்கள் மனதில் பக்தியை வளர்ப்பதற்காகவே இத்தகைய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன எனலாம்.

கோயில்களில் பல விழாக்கள் கொண்டாடப்பட்டன. சோழமன்னர்கள் பிறந்த நட்சத்திரங்களில் விழாக்கள் எடுக்கப்பட்டன. மாசி மாதந்தோறும் மக நட்சத்திரத்தன்று கோயில்களில் பெருவிழா எடுப்பதுண்டு. கும்பகோணத்தில் மகாமகம் கொண்டாடப் பட்ட செய்தியை பதினான்காம் நூற்றாண்டு கல்வெட்டொன்றால் அறிகிறோம். பொதுவாக சிவன் கோயில்களில் சங்கராந்தி, தைப்பூசம், சிவன்ராத்திரி, சித்திரை விழா, கார்த்திகைத் திருநாள் ஆகிய நன்னாள்களிலும் கிரகணங்கள் நிகழ்ந்த காலங்களிலும் விழாக்கள் எடுக்கப்பட்டன. நவக்கிரக வழிபாடு தமிழகமெங்கும் பரவியிருந்தது.

## சமணம்

காவிரிப்பூம்பட்டினத்தைப் போலுள்ள நகரங்களில் சமணர்கள் வாழ்ந்தனர். நாளடைவில் அவர்களது தெய்வங்கள் சிலவற்றை இந்துக்கள் தங்களுடையதாக ஏற்றுக்கொண்டனர். சோழர் காலத்திலும், சில மக்கள் சமணத்தை ஆதரித்தனரெனத் தெரிகிறது. பள்ளிச்சந்தம் அதாவது சமணப்பள்ளிகளுக்கு இறையிலியாக அளித்த நிலம் பற்றிச் சோழர் காலத்திலும் கேள்விப்படுகிறோம். சோழர் காலத்தில் சீவகசிந்தாமணி திருத்தக்கத்தேவர் என்ற சமண முனிவரால் இயற்றப்பட்டது. இதிலிருந்து சமணர் தமிழை வளர்த்தனர் என்று தெரிய வருகிறது. தமிழ்மொழிக்கு வளமூட்டிய மற்றொரு சமண காவியம் பெருங்கதையாகும். கேரளத்தின் தென்பகுதிகளில் சமணப் பள்ளிகளின் சிதைவுகள் காணப்படுகின்றன. நாகர்கோவிலில் காணப்படும் நாகரம்மன் கோயில் 11ஆம் நூற்றாண்டுவரை சமணர் கோயிலாக இருந்தது. தஞ்சாவூர் மாவட்டம் கூகூரில் தன் பெயரால் ஒரு சமணப்பள்ளி எடுப்பதற்கு முதலாம் குலோத்துங்கன் நிலம் வழங்கியதாக ஒரு கல்வெட்டு கூறுகிறது. சமண மதத்தவரை அழிப்பதற்காக சோழ அரசர்கள் முயற்சிக்கவில்லை.

## பௌத்தம்

மிகக்குறைவான சான்றுகளே சோழப் பேரரசர் காலத்தில் பௌத்தம் இருந்ததாகக் கூறுகின்றது. புகழ்பெற்ற லெய்டன் மானியம் என்ற பட்டயம் நாகப்பட்டினத்திலுள்ள ‘சூடாமணி வர்மதேவர்’ என்ற பௌத்த விகாரத்திற்கு ஓர் ஊர் முழுவதுமே நன்கொடையாக அளிக்கப்பெற்றதாகக் கூறுகிறது. தவிர பௌத்த திருச்சின்னங்களைக் காஞ்சிபுரத்தில் இன்றுங் காணலாம். பௌத்த அறிஞர்களும் தமிழ் இலக்கியத்திற்குத் தொண்டு செய்துள்ளனர்.

சோழப் பேரரசர்கள் காலத்தில் பொதுவாக மதங்கள் ஒற்றுமையுடன் வளர்ந்தோங்கி யிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது.

ஒப்பனைக் கலை, சோழர் காலத்தில் மிக உயர்ந்த நிலையை அடைந்திருந்தது. தம்மை ஒப்பனை செய்து கொள்வதில் நெடுநேரம் செலவிட்டிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. பெண்கள் பலவகையர்ன நறுமணப் பண்டங்கள் கலந்த நீரில் மங்கள நீராடுவர். கண்ணுக்கு மைதீட்டிக் கொள்வர்; மார்பில் குங்குமக் குழம்பைப் பூசிக் கொள்வர்; விரல்களுக்கும் பாதங்களுக்கும் செம்பஞ்சுக் குழம்பு ஊட்டிக்கொள்ளுவார்கள். நறுமணம் வீசும் மலர்களை அணிவார்கள். கொண்டையில் மலர் வளையங்கள் சூடுவார்கள். கண்கவரும் ஒப்பனைகளைச் செய்து கொண்டு தம் அழகை எடுப்பாகக் காட்டிக் கொள்வதைப் பெருமையாகக் கொண்டனர் சோழர் காலத்துப் பெண்கள்.

## இசைக்கலை

வாய்ப்பாட்டுக்குக் குழலும், யாழும், வீணையும் பக்கவாத்தியங்களாக நின்றன. பண் கேட்டலும், நாடகம் பார்த்தலும் மக்களின் பொழுது போக்காகும். இசைக்கச்சேரி இன்னமுறையில் இயற்றப்பட வேண்டுமென்று இலக்கணம் வகுக்கப்பட்டிருந்தது. ஓவியக்கலையும் சிறப்புற்றிருந்தது. மண்டபங்களின் சுவர் மேல் யானை, மான் போன்ற விலங்குகளின் உருவங்களும், தாமரை, வேறுமலர்கள், குளம் ஆகியவற்றின் உருவங்களும் வண்ணங்களால் எழுதப் பெற்றன. இசையில் வல்லார்கள் ‘வாத்திமராயன்’ என்று அறியப்பட்டார்கள். இவர்களுக்கு மான்யங்கள் விடப்பட்டிருந்தன.

## நடன நாட்டியக் கலை

தமிழக வரலாற்றில் நடன—நாட்டிய—திருத்தியக்கலைகள் சோழர் காலத்தில் உச்ச நிலையை அடைந்தன. இவை பெரும்பாலும் கோயில் அரண்மனைக் கலையாக விளங்கின. நாட்டிய ஆசான் ‘நட்டுவன்’ என்றழைக்கப்பட்டான். இவன் ‘நிருத்தமராயன்’ ‘நிருத்தப்போரையன்’ என்ற பட்டங்களைப் பெற்றிருந்தான். நடனமாதர்கள் தலைக்கோலிப் பட்டம் பெற்று விளங்கினர். இவர்கள் ‘தமிழ்க்கூத்து’, ‘ஆசிரியக்கூத்து’, ‘சொக்கம் சந்திக்கூத்து’, அபிநயம், மெய்க்கூத்து, தாண்டவம், அடைவு ஆகியவற்றில் கைதேர்ந்து விளங்கினர்.

## கட்டடக்கலை

கட்டடக்கலை, சிற்பக் கலை, ஓவியம், உருவச்சிலை செதுக்குவது ஆகிய நுண்கலை எல்லாம் மிகச் சிறப்புற்று சோழப் பேரரசர் காலத்தில் வளர்ந்தன. கலைகள் யாவும் கோயிலை ஒட்டியே வளர்ந்தன. சோழப் பேரரசின் வளர்ச்சி சிறந்த கலை வளர்ச்சிக்கு அடிகோலியது. இவர்களுக்கு முன் வாழ்ந்த பல்லவ, பாண்டிய மன்னர்கள் உருவாக்கிய கோயிற்கலைகளே இவர்களுக்கு முன்னோடியாகும். பிற்காலப் பல்லவர் காலத்தில் பாறையில் குடைத்தெடுத்த கோயில் குறைந்து கட்டட அமைப்புக்குரிய கோயில்கள் பல தோன்றன. இவற்றைத் தொடர்ந்தே பிற்காலச் சோழ மன்னர்கள் தஞ்சாவூர், கங்கைகொண்ட சோழபுரம் ஆகிய இடங்களில் மாபெரும் கோயில்களை எடுப்பித்தனர். சிற்பம், ஓவியம், வெண்கலப்படிமங்களை உருவாக்குதல் எல்லாம் சோழர்காலத்தில்

வளர்ச்சியுற்றன. தென்னாட்டுக் கட்டடக்கலையை நன்கு ஆராய்ந்தே ஜோவேர்துப்ராயில், சோழர் கட்டடக்கலையில்தான் சிறந்தவர்; சிற்பவேலையில் பல்லவரைப்போல் உயர் நிலையை அடையவில்லை என்று கூறியுள்ளார்.

கி.பி. 850 முதல் 1250 வரையுள்ள காலத்தில் சோழர்களின் சிறந்த கோயில்கள் அமைக்கப்பட்டன. சோழநாடு முழுவதிலும், அதைத்தொடர்ந்து பாண்டிய நாட்டிலும் எண்ணற்ற கோயில்கள் கட்டப்பட்டன. சோழநாட்டில் செங்கற்களால் கட்டப்பட்ட கோயிலுக்குப் பதிலாகக் கற்களால் கட்டப்பட்ட கோயில்கள் தோன்றின. அவற்றுள் பழமையானதாகத் திருக்கழுக்குன்றத்துக் கோயிலைக் குறிப்பிடலாம். சோழப் பேரரசின் முற்காலத்தில் தோன்றிய சிறு சோழக் கோயில்கள் ஏறத்தாழ பிற்கால பல்லவர்காலக் கோயில்களை ஒத்திருந்தன. பழைய சோழர் கோயில்களில் சிறு கோயில்கள் உட்கோயிலிலிருந்து விலகி அதன் எதிராக முற்றத்தின் சில இடங்களில் அமைக்கப் பட்டன. இச்சிறுகோயில்களில் பரிவார தேவதை எனப்படும் துணைத் தெய்வங்களின் படிமங்கள் காணப்படுகின்றன. கட்டடக்கலையில் இடைக்கால மாறுதலின் எடுத்துக்காட்டாக காணப்பட்டது திருக்கட்டளைக் கோயிலாகும். அதாவது தற்போதைய சுந்தரேசுவரர் கோயில் இதன் உட்கோயிலில் கர்ப்பக் கிரகமும், ஓர் அர்த்த மண்டபமும் உள. அதையடுத்து இருக்கின்றது ஒரு முக மண்டபம்.

தென் ஆற்காடு மாவட்டத்துக் கிளியனூர், அகஸ்தீசுவரர் கோயில் முதலாம் பராந்தகன் காலத்துத் தோன்றியதாகும். இதன் அடித்தளம் தாமரைப்பூவின் இதழ்கள் போல் விரிந்து அமைக்கப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்துத் திருவிடைமருதூர் மகாலிங்க சுவாமி கோயில் கி.பி. 910ல் கட்டப்பட்டது. இக்கோயிலின் அடித்தளம் எண்கோணமாக அமைந்த குமுதத்தின் மீது கட்டப்பட்டுள்ளது. இக்கோயிலில் நேர்த்தி யான வேலைப்பாடுகளைச் சுவர்களின் அரங்கங்களில் காணலாம். கொடும்பாளூர் மூவர் கோயில் சுந்தர சோழன் காலத்தைச் சார்ந்தது. அதைச் சுற்றி சில சிறு கோயில்கள் ஒரு சுவருக்குள் அமைந்திருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டன. மேற்கில் வாசல் இருந்ததாகவும் அறியப்படுகின்றன. ஒவ்வொரு கோவிலிலும் 18 அடிச்சதுர அளவுள்ள அர்த்த மண்டபம் இருந்தது.

தஞ்சாவூர்க் கோயில் ஆவணங்களின்படி கி.பி. 1003ஆம் ஆண்டு இந்தக் கோயிலில் வேலை தொடங்கப்பட்டு 1006ல் வேலை முடிவுற்றது. அவ்வாண்டில் மன்னன் அக்கோயிலில் பொன்னாலாகிய பூக்களால் நடுக்கோயிலில் பூசனை செய்து வணங்கினான். கி.பி. 1009-10ல் விமானத்தின் உச்சியில் இறுதி மகுடமாகச் செப்புக் கவசத்தை ஆடம்பரவிழா ஒன்று எடுத்துக் கோயிலுக்கு இராசராசன் அர்ப்பணித்தான். தமிழகக் கட்டடக் கலையின் பெருமிதத்தையும், சோழப் பேரரசின் விரிவையும், செழிப்பையும் இக்கோயில் வெளிப்படுத்துகிறது. இக்கோயிலின் நீளம் 180 அடியாகும். பட்டைக்கூம்பு வடிவ விமானத்துடன் இதன் நீளம் 190 அடியாகும். இக்கோயிலின் விமானம் உயர்தரமானது. கங்கை கொண்ட சோழபுரம் கோயிலும் பெரிய கோயிலின் தனிச் சிறப்புக்களைப் பின்பற்றியதாகவே இருந்தது. இதன் அடிப்படைக்கொள்கை சற்று வேறுபட்டதாகவே தோற்றம் அளிக்கிறது. பெர்ஸிபிரௌன் இதைத் தஞ்சாவூர் கோயிலின் பெண்வடிவம் என்று கருதுகிறார். ஏனென்றால் தஞ்சாவூர் கோயிலின் ஆண்மை வாய்ந்த விறுவிறுப்பு இதில் காணவில்லை.

பிற்காலச் சோழர் காலத்தில் கலை முதிர்ச்சி பெற்றமையின் எடுத்துக்காட்டாக விளங்கியவை கோபுரங்களும், மண்டபங்களும். ஏனென்றால் பிற்காலச் சோழர் காலத்தில் கோயிற்பணிகள் தொடர்ந்து ஆர்வத்துடனே நடைபெற்றன. இரண்டாம் இராசராசனால் கட்டப்பட்ட தாராசுரம் ஐராவதேசுவரர் கோயில் தஞ்சாவூர் மாவட்டத்துக் கோயில்களில் சிறப்பு வாய்ந்தது. கல்வெட்டுக்களிலிருந்து திரிபுவனம் வீரேசுவரர் கோயில் மூன்றாவது குலோத்துங்கனால் அமைக்கப்பட்டது என்று தெரியவந்துள்ளது.

## சிற்பக்கலை

சோழர் காலச் சிற்பிகள் பல்லவ சிற்பிகளைப் போல செதுக்கோவியத்தில் உயர்நிலை அடையவில்லை. சோழர்கள் பெரிய சுவர்க்கோல ஓவியம் செதுக்க முன்வரவில்லை. அவர்கள் புடைப்பியல் செதுக்கோவியத்திலேயே கருத்தை ஒருமுகப்படுத்தினர். அன்றியும், நாயன்மார்கள், ஆழ்வார்கள் பாடிய பாசுரங்கள் தெய்வங்களின் பற்பல வடிவங்களை அமைப்பதற்கு ஊக்கமளித்தன. வரலாற்றுரைக்கும் சிற்பங்கள்சிறு அரங்கங்களில் தொடர்ச்சியாகக் காட்டப்பட்டுள்ளன. உதாரணமாக கும்பகோணம் நாகேசுவரர் கோயிலில் அரங்கங்கள் ஆறு அங்குல நீளம் நாலு அங்குல அகலம் கொண்டதாகக் காணப்படுகின்றன. சோழச் சிற்பிகள் உருவப்படக் கலையிலும் பின்தங்கவில்லை. சோழர்கள் எண்ணற்ற உலோக உருவச்சிலைகள் வார்த்து உருவாக்கினர் என்பது கவனத்திற்குரியது. உலோகம் பயன்படுத்தாத இடங்களைத் தவிர மற்ற இடங்களில் சிற்பக்கலை கட்டடக் கலைக்கு துணையாய் நின்றது. சோழ சிற்பங்கள் உருவப்படம். தெய்வ வடிவம், ஒப்பனையான சிற்பம் என்று மூன்று வகையைச் சார்ந்தது. சோழ உருவச் சிற்பங்கள் அக்கால உடை, தலைமயிர்க் கொண்டை, நகைகள் இவற்றை குறிக்கின்றன. வழிபட்டு வரும் உருவச்சிலைகள் சில கல்லிலும் உலோகத்திலும் அமைந்துள்ளன. சோழர் காலத்தில் சைவ உருவச்சிலைகள் மிகுதியாக உள்ளன. நாட்டியத்தின் மன்னனான நடராஜ பிம்பத்தைப் பலரும் போற்றுகின்றனர். தலைக்கு மேலே தீ எரிகிறது போலக் காண்பிக்கும் திருவாசிகை, நடுவில் தோன்றும் அவரது முகமலர்ச்சியும் சாந்தமும் கூறமுடியாது. அவர் வலக்கையால் இயக்கும் உடுக்கையின் ஒலி உலக முழுவதிலுள்ள சீவராசிகளை இயங்கச் செய்கின்றன. பல நடராச உருவங்கள் புன்னகையோடு காணப்படுகின்றன. இந்தப் புன்னகை துன்பத்தையும் இன்பத்தையும் ஒரே விதமாக வணங்கும் தெய்வம் ஸ்கந்தன் அல்லது சுப்பிரமணியன். இத்தெய்வத்தின் ஒரு பழைய வெண்கல உருவம் முட்டை வடிவத்திலுள்ள பிரபாவோடு திருவிடைக்களியில் காணப்படுகிறது. இதை மிக உயர்ந்த சிற்பவேலை என்று அறிஞர் கருதுகின்றனர்.

இராமாயணம், மகாபாரதம், சிவபெருமானின் லீலைகள், அடியார்கள் வாழ்க்கை வரலாறுகள் போன்ற பலவற்றையும் சித்தரிக்கும் சிற்பங்களும் கிடைத்துள்ளன. இவை திறம்பட அமைக்கப்பட்ட வேலைப்பாடுகளென்பதற்கு ஐயமில்லை. திருபுவனக் கோயிலுள்ள ஓர் இராமாயணக் காட்சி பல கைகளும் தலைகளும் உள்ள இராவணன் சீதையைத் தன் தேரில் எடுத்துச் செல்வதையும், வழிமறுத்த சடாயு இராவணனால் கொல்லப்படுவ்தையும் சித்தரிக்கிறது.

## ஓவியக் கலை

சோழர் காலத்து ஓவியக்கலையும் பல்லவ பாண்டிய ஓவியக்கலையைப் பின்பற்றி வளர்ந்ததென்றும் கூறலாம். ஓவியத்தில் அமைக்கப்பட்ட கலைப்பாணியைப் பார்த்தால் தென்னிந்திய ஓவியங்கள் புகழ்பெற்ற அஜந்தா, சிகிரியா, பாக், பாதாமி எல்லோரா ஆகிய இடங்களிலுள்ள ஓவியங்களிலிருந்து பலவகையிலும் மாறுபட்டது. தஞ்சாவூர் கோயிலிலுள்ள சோழர் ஓவியங்கள் மதச்சார்புடையவை. சோழர்கால ஓவியக்கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாய் தஞ்சைப் பெரிய கோவில் விளங்குகிறது. நாயன்மார்கள், சிவபெருமானின் ஆகாய நாட்டியம், சுந்தரர் திருமணம் போன்றவை வண்ண ஓவியங்களாய்த் தீட்டப்பட்டுள்ளன.

தமிழக வரலாற்றில் சோழப் பேரரசர் காலம் பலவகையாலும் பொற்காலம் எனக் கருதப்பட்டுள்ளது. தமிழரின் நாகரிகம் அப்போது உயர்நிலையை அடைந்ததென்று சில அறிஞர்கள் கருதுகின்றார்கள். சோழர் காலத்தில் எண்ணற்ற கோயில்கள் கட்டப்பட்டன. கோயில்களை ஒட்டி நுண்கலைகள் வளர்ந்தன. கட்டடக்கலை, செதுக்குக்கலை, சிற்பக் கலை, உருவச்சிலை அமைக்கும் கலை, ஓவியக்கலை, ஒப்பனைக்கலை, நாட்டியக்கலை ஆகியவை மிகச் சிறப்படைந்தன என்பதில் ஐயமேதுமில்லை.

## பொருளாதாரம்

வள்ளுவர் வாக்குப்படி 'பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை' என்றிருப்பதைப் போல், தனிமனிதனுடைய வாழ்க்கைக்கு பொருள் இன்றியமையாததாக இருக்கும் போது, மக்கள் நன்மைக்காக செயல்படும் அரசாங்கத்திற்கு பொருள் மிக மிகத் தேவை என்பது சொல்லாமலே விளங்கும். அத்தேவையைப் பூர்த்தி செய்ய அரசன் தன்னுடைய குடிமக்களை நாடுகிறான் என்று சொன்னால் அதில் வியப்பொன்றுமில்லை. அவ்வாறு குடிகளிடமிருந்து பெறும் பொருள் அரசாங்க வரி என்று கொள்ளப்படுகிறது. குடிகளிடம் விதிக்கப்படும் வரி நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ வசூலிக்கப்படலாம். இந்த வரிகள் நிலவரியாக இருந்தால் கடமை எனவும் பிறவரிகளாக இருந்தால் குடிமை எனவும் வழங்கப்பட்டது. இந்த் வரிகளில் பெரும்பகுதி அரசாங்க அலுவலர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்காகவே பயன்படுத்தப்பட்டு வந்தது. வரியை மக்கள் பணமாகவோ தானியமாகவோ செலுத்தினர். விளைபொருளை ஆறுபங்காக்கி அதில் ஒரு பகுதியை அரசாங்க வரியாகத் திரட்டினர். பரிமேலழகர் குறளுக்கு எழுதிய உரையில் 'அரசனுக்கு இறைப்பொருள் ஆறிலொன்றாயிற்று' என் குறிப்பிடுகின்றார். செங்கற்பட்டு மாவட்டம் சோழசிங்கபுரத்தில் வரையப்பட்ட கல்வெட்டு ஒன்றில் 'அறுகூறினால் பரவுமாய்' என்று குறிப்பிடப்பட்டிருப்பதைக் காணலாம்.

தஞ்சை மாவட்டம் ஆலங்குடி கல்வெடடிலிருந்து, சோழநாட்டிலிருந்து விலை நிலங்களில் வேலி ஒன்றுக்கு ஒரு கழஞ்சு பொன் வீதம் போர்வரி என்ற ஒரு வரி விதிக்கப்பட்டிருந்ததாகத் தெரிகிறது. இது கட்டாயதேவையான காலங்களில் திரட்டப் படும் வரியாதலால் இது மற்றவரிகளிலிருந்து மாறுபட்டது என்பது தெளிவு. முதலாம் இராசராசன் கல்வெட்டொன்றிலிருந்து குடியிருப்புகள் உள்ள நிலம், கோயில்கள், குளங்கள், கால்வாய்கள் செல்லும் இடம், புவையர்பாடித்தொழில்கள், குடியிருப்புகள்,

சுடுகாடு போன்ற இடங்களெல்லாம் வரி விதிக்கப்படாத நிலங்களாயிருந்தன என்பது தெரிய வருகிறது. சோழப் பேரரசர் காலத்தில் நிலவரியும் பிறவரிகளும் கிராம சபையோராலே திரட்டப்பெற்று, அரசாங்கத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. வரியைத் திரட்டுவதற்கான உரிமையை கிராம சபையார் பெற்றிருந்தனர் என்பது ஒரு கல்வெட்டிலிருந்து தெரிய வருகிறது. இவ்வரிகள் இரண்டு ஆண்டுகள் முடிந்து மூன்றாம் ஆண்டு ஆரம்பத்திலும் கொடுக்கப்படாமல் இருந்தாலோ அல்லது நிலவரியோ அல்லது வேறு வரிகளோ கொடாமல் வேற்றூர் போய் குடிபுகுந்தாலோ, அவர்களுடைய நிலங்களை கிராம சஸ்பயார் பறிமுதல் செய்து விற்று, வரிகளுக்கு ஈடு செய்யும் நிகழ்ச்சிகளும் கல்வெட்டுகளால் அறியவருகின்றன. இப்படி வரிகொடாமல் இருந்த சிலருடைய நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக கல்வெட்டுகள் நமக்கு உணர்த்துகின்றன. சிலர் பத்து, பதினைந்து ஆண்டுகளாக வரிகொடாமல் இருந்தபோதும் அவர்கள்மீது எந்த நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்பதை சில குறிப்புகளிலிருந்து நாம் அறியும்போது அக்காலத்திலும் ஊழல் இருந்திருக்கிறது என்பது புலனாகிறது.

மக்கள் வரிகொடாமல் வேற்றூர் செல்வதற்கு அதிகாரிகளின் கொடுமைகளும் காரணமாக இருந்திருக்கின்றன என்பது சில கல்வெட்டுக்களிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. தொண்டைமண்டலம் திருவொற்றியூர் பகுதிக்கு தலைவனாயிருந்த யாதவ ராயனின் தண்டல் அதிகாரி வரி பாக்கிக்காக அவ்வூர் கிராம சபையாரை சிறையிலடைத்திருக்கிறான் என்ற செய்தி தஞ்சை மாவட்டத்திலுள்ள இரு கல்வெட்டுக்களிலிருந்து தெரிய வருகிறது. நிகரிலிச் சோழமண்டலம், சயங்கொண்ட சோழமண்டலம் இராசேந்திர பதினெண்பூமி ஆகிய மண்டலத்திலிலுள்ள 48 நாடுகளிலும் பசுக்களுக்கும், எருமைகளுக்கும் எவ்விதவரியும் விதிக்கப்படும் பழக்கம் இல்லை. சோழப் பேரரசு காலத்தில் பிறவரிகளாகவும் அதிகமான பொருள் திரட்டப்பட்டது. இவற்றுள் நிலவரியும், பிறவரிகளுள் ஒரு சிலவுமே அரசாங்கத்திற்குச் சொந்தமானவை. மற்றவைகளை ஊர்மக்களுக்காக கிராம சபையார் பிரித்து நல்ல காரியங்களைச் செய்து வந்தனர். அரச குடும்பத்தாருக்கான செலவு போக மீதி தொகை சேமிக்கப்பட்டு வறட்சிக் காலத்தில் மக்களுக்காக பயன் படுத்தப்பட்டு வந்தது. அன்னியர் படையெடுப்பின்போது கோயில்கள் தகர்க்கப்பட்டன என்பதற்கு காரணம் அங்கு சேமித்து வைக்கப்பட்டிருந்த பெரும் பொருளே ஆகும். மக்களிடமிருந்து பிரித்து சேமித்து பொருளை அரசனும், செல்வரும் மக்களுக்காகவே பயன்படுத்தி வந்ததால் சோழர் காலத்தில் ஒரு வியக்கத்தக்க சமூகப் பொருளாதார இணக்கம் நிலவியதென்பது பெருமைப்படுவதற்குரியதேயாகும்.

அரசாங்க வருவாய்களுள் சிறந்தது நிலவரியே ஆகும். நிலவரியைத் திரட்டுவதற்காக நாட்டிலுள்ள நிலம் முழுவதையும் அளந்து அதில் நீர் நிலம் (நன்செய்), கொல்லை (புன் செய்), நத்தம் (குடியிருப்பு மனை), கரம்பு (தரிசு நிலம்), காடு ஆகியவற்றை வகைப்படுத்தி அரசாங்கத்திற்கு வரவேண்டிய வரிய்யைக் கணக்காகத் திரட்டினர். முதலாம் இராசராசர் காலத்திலும் முதல் குலோத்துங்கனின் ஆட்சிக் காலத்திலும், மூன்றாம் குலோத்துங்கனின் ஆட்சிக்காலத்திலும் இவ்வாறு நிலங்கள் அளக்கப்பட்டு வரிகள் திரட்டப்பட்டு வந்தன. அந்நாளில் நிலஅளவு குழி, மா, வேலி என்று கணக்கிடப்படும். ஒரு குழி என்பது ஒரு கோல் சதுரம் கொண்டதாகும். கோல் என்பது பதினாறு சாண் அல்லது பன்னிரண்டடி

கொண்ட அளவாகும். அளந்து குறிக்கப்பட்ட நிலங்கள் அவற்றின் விளைவுக்குத் தக்கபடி தரம் பிரிக்கப் பெற்றன. ஒன்று முதல் பதினான்கு வரை நிலத்தின் தரங்கள் இருந்தன என்று தெரிகிறது.

நாட்டுப்புற மக்களில் பலரும் உழவுத் தொழிலையே நம்பி இருந்தனர். நிலமுடையவனுக்கே அக்காலத்தில் சமுதாயத்தில் மதிப்பும் மரியாதையும் இருந்து வந்தது. வாணிபத்தின் அடிப்படை பண்டமாற்றாக உரிய பொருளாகக் காணப்பட்டது. எனவே நிலக்கிழார்களே அக்காலப் பொருளாதாரத்தின் அடிப்படையாக இருந்தனர். ஊர்ப் பொதுவாக இருந்த நிலம் தவிர மீதமுள்ள விளைநிலத்தின் உரிமையை மூன்று பிரிவு களாகக் கொள்ளலாம். முதலாவதாக பாசனங்களில் வெள்ளான் வகை என்று கூறப்பட்டு உழவுத் தொழிலையே சொந்தமாகக் கொண்டு அரசாங்கத்திற்கு வரிசெலுத்திக் கொண்டு வந்த குடிமகனுக்கே உரிமையுள்ள நிலவுரிமை வரியாகும். அரசாங்கத்தில் அவரவர் செய்துவந்த பணிகளுக்கும், பிற அலுவல்களுக்கும் ஏற்ப அரசாங்கத்தாலும், செல்வராலும் கிராமசபை போன்றவற்றாலும் கொடுக்கப்பட்ட நிலங்கள் இரண்டாவது வகையாகும். இவை சீவிதம், போகம், காணி, விருத்தி, பற்று, புறம், பட்டி, முற்றுட்டு போன்ற பற்பல பெயர்களால் அவரவர் செய்த அலுவல்களுக்கேற்ப வழங்கப்பட்டு வந்தன. மூன்றாவது வகை பெரும்பாலும் அரசாங்கத்தாலும், சிறுபான்மை சபைகள் போன்றவற்றாலும் தானமாகக் கொடுக்கப்பட்டவையாகும். பிற்காலச் சோழர் காலத்தில் இவ்வாறு வரிவாங்கிக் கொள்ளும் உரிமை கொடுக்கப்பட்டது பெரும்பாலும் காவல் அதிகாரிகளுக்கும், சேனைத் தலைவர்களுக்குமே எனலாம். இது தவிர கோயில்கள், மடங்கள், அன்னதான சத்திரங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் குறிப்பிட்ட சிலருக்கு நிலங்களின் அனுபோக உரிமை கொடுக்கப்பட்டிருந்தது. கிராம சபை ஊர் மன்றங்களில் பணிபுரிவோருக்குக் கூட இதுபோல அனுபவ உரிமையுடன் நிலம் கொடுக்கப்பட்டதுண்டு. தர்ம சொத்துக்கள் பற்றிய நிலவுரிமையை முக்கியமான மூன்று பகுதிகளாகக் கொள்ளலாம். அவை பிரமதேயம், தேவதானம், சாலாபோகம் என்பனவாம். இவற்றுள் பிரமதேயமும் தேவதானமும் ஒரே கிராமத்தில் இருப்பது உண்டு.

தென்னிந்திய நாணயங்களைப் பற்றிய தொடர்பான வரலாறு இல்லையென்றாலும் சாசனங்களிலும், நாணயங்களிலும் காணும் சில உட்பொறிப்புகள் வரலாற்றை ஒருவாறு உருவாக்குவதில் பயனளிக்கின்றன. எலியட் என்ற அறிஞர் திட்டப்படுத்தியுள்ள உத்தமச் சோழனின் பவுன் நாணயம் உண்மையில் 50 முதல் 60 பொன்துகள் எடையுள்ளனவா யிருப்பதால், இந்த நாணயம் பழைய கத்யாயன வகுப்பை சார்ந்ததாயிருக்க வேண்டும். நாளடைவில் சோழர்கால தங்க நாணயங்கள் வெள்ளியோடு கலப்படம் செய்யப்பட்டு மதிப்பு குறைந்தன. முதலாம் இராசராசனின் சிங்கள மாதிரி நாணயங்கள் ஒருவாறு நல்ல தங்கமாயிருந்த போதிலும், கிடைத்துள்ள பிற்கால மன்னர்களின் நாணயங்கள், குறிப்பாக முதலாம் இராசேந்திரன் காலந்தொட்டு தங்கத்தால் பூசப்பட்ட வெள்ளியே என்று கூறலாம்.

மக்கள் சமூக வாழ்க்கையைப் பற்றிக்கூறும்போது உணவு பற்றிக் கூறுவது மிகவும் அவசியமாகிறது. நெல், அரிசிதான் அக்காலம் முதலே முக்கிய உணவுப் பொருளாக இருந்தது. இது வழக்கமாகக் காணப்பட்டது. நெல்லின் விளைச்சலுக்கும், தரத்திற்கும்

ஏற்ப விலை குறைந்தும், மிகுந்தும் காணப்பட்டது. கி.பி. 1012ஆம் ஆண்டு காலஹஸ்திக் கல்வெட்டு, ஒரு பொன்னுக்கு ஏழு கலம் நெல் விற்றதாக அறிவிக்கிறது. இதிலிருந்து பொன்னே அக்கால நாணயங்களில் சிறந்து விளங்கியது என்பது தெரிகிறது. பொருட்களின் விலைகளைப்பற்றி சாசனங்களிலிருந்து ஒன்றும் தெளிவாகத் தெரிவதற்கில்லை என்றாலும் வெகு தூரத்திலிருந்து கொண்டு வரப்பட்ட மதிப்புமிக்க பொருள்கள் பணம் கொடுத்து வாங்கப்பெற்று வியாபாரம் நடந்தது. உலோகங்களுடைய விலை பற்றி ஒரு சில விவரங்களே கிடைக்கின்றன. திருப்பனந்தாளில் 1099இல் கிடைத்த கல்வெட்டின்படி ஒரு காசுக்கு (அதாவது அரைக் கழஞ்சு பொன்னுக்கு) 35 பலம் வெண்கலமும் 80 பலம் பித்தளையும், 26-2/3 பலம் தகரமும், 70 பலம் கலப்பு உலோகமும் (தார்) கிடைத்தது என்று தெரிய வருகிறது. நாடு செழிப்புடன் காணப்பட்டாலும் அடிக்கடி பஞ்சம் வந்து மக்களை வருத்தியது. பஞ்சத்திற்கு ஆளான மக்கள் மிகுந்த துன்பப்பட்டு வெளியூர் சென்று கூலி வேலை செய்து பிழைத்தனர் என்று சில சாசனங்களிலிருந்து அறிகிறோம்.

ஆண்களும் பெண்களும் தங்களை ஒப்பனை செய்து கொள்வதில் அதிக நேரம் செலவிட்டிருக்க வேண்டுமென்று தெரிகிறது. பெண்கள் பலவகையான நறுமணப் பண்டங்கள் கலந்த நீரில் நீராடுவதும், கண்களுக்கு மை தீட்டிக்கொள்வதும், விரல்களுக்கும், பாதங்களுக்கும் செம்பஞ்சுக் குழம்பை ஊட்டிக்கொள்வதுமாக பலவித ஒப்பனைகளைச் செய்து வந்தனர். யானையின் கொம்பினால் செய்யப்பட்ட சீப்புகளும், நவமணியிழைத்த பொற்சீப்புகளும் தலைவாருவதற்குப் பயன்படுத்தப்பட்டன. பெண்களுடைய அழகும், கவர்ச்சியும் புலவர்களையும், சிற்பிகளையும், கவிஞர்களையும் கவர்ந்திழுக்க அவர்கள் அதற்கேற்றாற்போல் தம்முடைய திறமைகளை தொழிலின்மூலம் வெளிக்கொணர்ந்தனர்.

இசையையும், கூத்தையும் விளக்கிய நூல்கள் பல வழங்கி வந்தன. வாய்ப்பாட்டுக்கு குழலும், யாழும், வீணையும் பக்க வாத்தியங்களாகின்றன. இடையர் ஏறுதழுவும் போது ஏறங்கோள் என்ற தனிப்பறை ஒன்று முழக்குவர். வீணையின் உறைக்கு எழினி என்று பெயர். கூத்தாடி முதிர்ந்த பெண்களுக்கும், பின்பாட்டுப் பாடிய பெண்களுக்கும் நாட்டியத்திற்கு பதம் பாடிய பெண்களுக்கும் தோரிய மடந்தையர் என்று பெயர். மக்கள் பயின்று வந்த கலைகள் அறுபத்து நான்கு வகையாக தொகுக்கப்பட்டிருந்தன. கடவுள் பற்றிலிருந்து சில காலங்களில் சமயச் சார்பான மூடநம்பிக்கைகள் பல தலைதூக்கின. மறுபிறவியிலும், பேய், பிசாசு ஆகியவற்றிலும் நம்பிக்கை இருந்தது. சகுனம் பார்ப்பதும், கனவுகளுக்குப் பலன் காண்பதும் அக்காலத்தில் இருந்து வந்த முக்கியமான மூட நம்பிக்கைகள் ஆகும். அரசன் மக்களுக்கு ஏதாவது முக்கிய செய்திகளை அறிவிக்க விரும்பினால் நாடகமாகக் காட்டப்பட்டு வந்தன. நாடகத்தொழில் அக்காலத்தில் சிறந்து விளங்கியது. குழந்தை பிறந்த பன்னிரண்டாம் நாள் அதற்குப் பெயர் சூட்டுவிழா நடைபெற்று வருவது வழக்கம். விருந்தினர்களை உபசரித்து அவர்களுக்கு வெற்றிலைப் பாக்கு வழங்கப்பட்டது. இரும்பும், எஃகும் சேர்த்து சவரக்கத்திகள் செய்யப்பட்டன. நாவிதன் கத்தியை தீட்டுக்கல்லின் மேல் தேய்த்து கூராக்கிய பின்னரே உபயோகப்படுத்துவது வழக்கம். விஷ வைத்திய நூல், இசை நூல் போன்ற பல்வேறு நூல்கள் அக்காலத்தே எழுதப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு வந்தன.

சோழப் பேரரசின் காலத்தில் தொழில்கள் பெரும்பாலும் கோயில்களை ஒட்டியே வளர்ந்தன. இந்தக் காலத்தில் சிறியதும் பெரியதுமான கோயில்கள் பல கட்டப்பட்டன. இவைகளை ஒட்டியே கட்டக்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை முதலியவும் ஓங்கி வளர்ந்தன. போருக்குரிய பலவகை கருவிகள், படைக்கலங்கள், படைக்கல அணிகள் போன்றவற்றின் உற்பத்தியாலும் பல தொழில்கள் வளர்ச்சியடைந்தன. தச்சு வேலை அந்தக் காலந்தொட்டே உயர்நிலை பெற்றிருந்தது. இலக்கியக் குறிப்புகளைக் கொண்டும், சிற்பங்கள், ஓவியங்கள் ஆகியவற்றைக் கொண்டும், கல்வெட்டுச் செய்திகளைக் கொண்டும் பெண்கள் அணிந்திருந்த அணிகலன்களைப் பற்றி அறிந்து கொள்ளலாம். கோயில் சபைகளில் பொன்னை உரைகாண்பதற்கென்றே தனிவாரியம் ஒன்று அமைந்திருந்தது. இவ்வாரியத்தில் உறுப்பினர் ஒன்பதின்மர் அமர்ந்து பணி புரிந்தனர். மாதந்தோறும் ஏழுரை மஞ்சாடி பொன் அவர்கட்கு ஊதியமாகக் கொடுக்கப்பட்டது. பித்தளை, செம்பு ஆகிய உலோகங்களால் அழகிய அணிகலங்கள் செய்யப்பட்டன. இவர்களுடைய காலத்தில் வெண்கலத்தால் செய்த உருவங்கள் உலகப் புகழ் பெற்று விளங்கின. வீட்டு உபயோகத்திற்கும் மற்றும் பொதுச் சிற்றுண்டிச் சாலைகளிலும் மட்பாண்டங்களையே பயன்படுத்தி வந்தனர் என்று தெரிய வருகிறது. போர்க்கருவிகள் பல இரும்பினால் செய்யப்பட்டிருந்தன. கடல் நீரிலிருந்து உப்பைப் பாகுபடுத்தி எடுத்தனர். பாகுபடுத்தப் பட்ட உப்பைச் சொந்த ஊரில் மட்டுமல்லாது வேற்றூர்களுக்கும் கொண்டு சென்று விற்று வந்தனர். உப்பு விளைவிப்பதிலும் விற்பதிலும் தமிழர்கள் வெகுகாலமாக ஈடுபட்டு வந்தனர். இது பெரும்பாலும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் தான் நடந்து வந்தது. கல்வெட்டுகளில் குறிப்பிட்டிருக்கும் உப்பளங்களிற் சில மரக்காண், ஆய்துறை வாரியூர் கன்னியாகுமரி என்ற ஊர்களிலிருந்தன. உள்நாட்டு வாணிபத்திற்கான போக்குவரத்துக்கு கடல், ஆறு ஆகியவை எல்லா இடங்களிலும் வசதியாக வாய்க்கவில்லை. ஆறுகளிலிருந்து சென்ற வாய்க்கால் வேளாண்மைக்குப் பயன்படுத்தப்பட்டதே ஒழிய வாணிபத்திற்கு மிகுதியாகப் பயன்படுத்தப்படவில்லை. 'பெருவழி' என்று கல்வெட்டுக்கள் குறிப்பிடும் நெடுஞ்சாலைகள் நாட்டின் முக்கிய பகுதிகளுக்கு நகரங்கள் வழியாகச் சென்றன. வாணிபத்தை செழிப்படையச் செய்வதற்காக பல சங்கங்களையும் அமைப்புகளையும் ஏற்படுத்திக் கொண்டனர். இச்சங்கங்கள் வழியாக நாட்டிற்கு பல நன்மைகள் ஏற்பட்டன. பொதுக் காரியங்களில், குறிப்பாக கோயில் காரியங்களை இவர்கள் முன்னின்று நடத்திப் புகழ் சேர்த்தனர். சோழப் பேரரசின் காலத்தில் தான் அரேபியாவுடனான குதிரை வாணிகம் முதன் முதலில் தோன்றியிருக்க வேண்டுமென்று கருதப்படுகிறது. சீனாவிலிருந்து பலவிதமான பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன. சோழப் பேரரசு காலத்தில் நடந்த வெளிநாட்டு வாணிபத்தில், நாம் அறிவதற்காக கிடைத்துள்ள சான்றுகள் மிகக் குறைவேயாகும். இதைப்பற்றி அறிவதற்குத் துணை இருப்பது அரேபிய, சீன குறிப்புகளேயாகும்.

ஆசிரியர் வீட்டுத் திண்ணைகளில் மாணவர்களை உட்காரவைத்து பாடம் சொல்லிக் கொடுத்ததாகத் தெரிகிறது. இதிகாசங்களையும், புராணங்களையும், கோயில்களிலும், மடங்களிலும் பிரசங்கங்கள் செய்து பொது மக்களுக்கு உணர்த்தினர். உயர் கல்வி கற்க வேண்டியிருந்தது. அதனால் மதமும் மாணவர்களுக்கு கற்கவேண்டிய ஒரு பகுதியாகவே இருந்தது என்று சொன்னால் அது மிகையாகாது. தென்னாற்காடு மாவட்டம் இராசராச சதுர்வேதி மங்கலம் சபையார் அரசாங்க அதிகாரி ஒருவர்

முன்னிலையில் முதல் இராசேந்திர சோழ தேவன் உத்தரவுப்படி எண்ணாயிரம் என்ற அவ்வூர் கல்லூரி ஆசிரியர்களின் ஊதியத்திற்கும் மாணவர்களின் உணவிற்கும் ஏற்பாடு செய்வதாக முடிவு செய்தனர். பிற்காலச் சோழர்கள் காலத்தில் வடமொழியும், வடமொழி நூல்களும் எந்த அளவிற்கு போற்றி வளர்க்கப்பட்டன என்பதை தெளிவாய் அறிந்து கொள்ள முடிகின்றது. முதலாம் இராசராசன் பழக்கத்திற்குக் கொணர்ந்த மெய்க்கீர்த்திப் பகுதி எளிய, இனிய ஆசிரியப்பா நடையிலமைந்து படிப்போர் உள்ளம் கவர்வதாயும் அவ்வப்போது நடந்த செய்திகளை உடனுக்குடன் படம் பிடித்துக் காட்டுவது போலவும் அமைந்து, அக்கால இலக்கியத்துக்கோர் எடுத்துக்காட்டாய் அமைந்துள்ளது எனலாம். செய்யுள் வடிவில் அமைந்துள்ள மெய்க்கீர்த்திகளில் தமிழ் செய்யுளிலக்கணத்தில் விரிவாக பேசப்பெறும் பலவகை அடியமைப்புகள் இருப்பதைக் காணலாம். திரிபுவனியைச் சேர்ந்த மானகுலாசனிச் சேரியிலிருந்த கவிகுமுத சந்திரர் என அழைக்கப்பெற்ற திரு. நாராயணப் பட்டர் என்பார் முதல் குலோத்துங்கச் சோழனின் வரலாறு தழுவிய குலோத்துங்கச்சோழ சரிதை என்றொரு நூல் இயற்றியதாகவும், முதற் குலோத்துங்கச்சோழன் ஆணைப்படியே அவ்வூர்சபை அதிகாரிகள் தக்காரைக் கொண்டு அதனை நன்கு, ஆய்வு செய்து சிறந்ததென்று கண்ட பின்னர் பன்னிரெண்டு மாநிலம் பரிசாக வழங்கியதாகவும் தெரிய வருகிறது. மேலும் ஐம்பெருங்காப்பியங்களான சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி போன்ற நூல்களும், நீலகேசி, சூளாமணி, கல்லாடம், கலிங்கத்துப்பரணி, நளவெண்பா, பெரியபுராணம் போன்ற நூல்களும் சோழர் காலத்தொடர்பினை விளக்குவதாக அமைந்துள்ளதைக் காணலாம். இன்னும் சில இலக்கண நூல்களும், நிகண்டுகளும் சோழ மன்னர்கள் காலத்தில் தோன்றியிருப்பதாகத் தெரிகிறது.

சோழர் காலத்தில் வேறுபட்ட பல தொழில்களை மக்கள் மேற்கொண்டிருந்தனர். போர்த்தொழிலைச் செய்ய மன்னர்களுக்கு வேண்டிய போர்க் கருவிகளைக் கொல்லர்கள் உலையில் ஆக்கித்தந்தனர். இறைவனை அண்டி வாழ்ந்த மேல் இனத்தார் என்று கருதப்பட்ட அந்தணர்களுக்கு கோயில் வாழ்க்கை நலமாய் அமைந்தது. சட்டத்தைக் கையில் கொண்டு கோயில், அதைச் சுற்றிய தெருக்கள், அதற்கென்ற தேவதானங்கள், வரியிலி நிலங்கள், இதர நன்கொடைகள் என்று பெற்று, நாட்டின் பொருளாதாரத்தை அவர்கள் கணித்தனர். உழவுத்தொழில் ஊக்குவிக்கப்பட்டது. எனினும் அவ்வப்போது உழவர்கள் அரசின் ஆணைப்படி தங்கள் நிலங்களை விட்டு வெளியேறி, பாழ்நிலங்களில் குடிபுகுந்தனர். தங்கள் உழைப்பால் உயர்ந்த நிலங்கள் அந்தணர்க்கு பிரம்ம தேயங்களாக விடப்பட்டன. வணிகர் புதுப்பட்டங்கள் பெற்று நாட்டில் சிறந்து விளங்கினர். கோயிலைச் சுற்றிய பொருளாதாரத்தைக் கணிப்பதில் வணிகருக்கும் பங்கிருந்தது. வர்த்தகச் சபைகள், சித்திரமேழிப் பெரிய நாட்டார் என்ற வேளாண்மைப் பிரிவுகள், இக்காலத்தில் இருந்தன. இடைக்காலத் தமிழகத்தில் சிறப்புற்று விளங்கிய தொழில்களில் பல கோயில் ஒப்பனையைச் சார்ந்ததாகும். படிமங்கள் செய்தல், உருவங்கள் கல்லில் வடித்தல் ஓவியங்கள் தீட்டுதல், இவை போன்ற இன்னபிற தொழில்கள் மூலமும் தமிழ் நாட்டுப் பொருளாதாரம் கணிக்கப்பட்டது.

இடைக்காலத் தமிழகப் பொருளாதாரத்தைக் கணித்த மற்றுமொரு தொழில் மக்கள் அணிந்த அணிகலன்களைச் செய்யும் பொற்கொல்லர் தொழிலாகும். பொற்கொல்லர் விதவிதமான அணிகளை வனப்புடனும், மெருகுடனும் செய்து தந்தனர். இவற்றிற்குப்

பிற நாடுகளில் தேவை இருந்ததாகவும், பிற நாடுகளிலிருந்து பலப்புது ரகங்கள் தமிழகம் வந்ததாகவும் அறிகிறோம். ஒரு நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கும் மிகமுக்கிய இரு தொழில்களில் கைவினைத் தொழில் ஒன்று ஆகும். மற்றொரு தொழில் வேளாண்மை. உணவு உண்ணத் தேவை; உயிர் வாழ இன்றியமையாதது. அழகு தருவது ஆபரணங்கள், அதிக அழகு தருவது பொன்னாலாகிய நகைகள். அதற்குமேல் அழகு தருவது வைரம், முத்து, பவளம், மணி வகைகள். இத்தொழில்கள் நாட்டிற்குப் பெரும் செல்வத்தைச் சேர்த்தன என்று கூறலாம்.

சமைத்த உணவை உண்ண உண்கலங்கள் மண்கலங்கள் தேவை. மட்கலங்களைத் தவிர உலோகங்களால் ஆகிய பாத்திரங்களும் பழக்கத்திலிருந்தன. குயவர் இவற்றை அழகுடனும், வண்ணங்களிலும் வனைந்தனர். நாட்டின் செல்வத்தை அறுதியிடுவது வணிகம். அதைக் குறிக்கப்பயன்படுவது நாணயம். நாணயச் சாலைகள், பல்வேறு நாணயங்கள் நாட்டில் இருந்துள்ளன. இத்தொழில்களைக் கொண்டு சோழர்கால பொருளாதாரத்தை அறுதியிடலாம்.

### பயிற்சி வினாக்கள்

1) சோழர்கால தல ஆட்சி பற்றி எழுதுக.

2) கலை, கட்டடக்கலை வளர்ச்சிக்கு சோழப் பெருவேந்தர்கள் ஆற்றிய பணியினை ஆய்க.

## பாடம் – 11

# தமிழகத்தின் மீது இசுலாமியர் படையெடுப்பு, மதுரை சுல்தானியம், தமிழகத்தில் ஹொய்சாளர்கள்

முகமதியர்கள் எட்டாம் நூற்றாண்டு வாக்கில் இந்தியப் பகுதிகளில் தங்களது ஆதிக்கத்தை வளர்க்கத் தொடங்கினார்கள். தொடக்க காலத்தில் வடஇந்தியப் பகுதிகளிலேயே தங்களது கவனத்தை செலுத்தி வந்தார்கள். முதன் முதலாக 13, 14ஆம் நூற்றாண்டுகளில்தான் தென்னிந்தியப் படையெடுப்புகள் துவங்கின. 13ஆம் நூற்றாண்டில் காரா பகுதியின் ஆளுநராக அனுப்பப்பட்டிருந்த அலாவுதீன் கில்ஜிதான் முதன் முதலாக தென்னிந்தியாமீது படையெடுத்தான். அலாவுதீன் சுல்தானாக பதவியேற்றபின் 14ஆம் நூற்றாண்டின் தொடக்ககாலத்தில் தனது படைத்தலைவனான மாலிக்காபூர் என்பவனை தென்னிந்தியாவுக்கு அனுப்பி வைத்தான். இத்தென்னிந்தியப் படையெடுப்புக்குக் காரணம் நாடுகளைக் கைப்பற்றிக் கொள்ள வேண்டுமென்பது அல்ல. தென்னிந்தியப் பகுதிகளின் செல்வச்செழிப்பே ஆகும். தென்னிந்தியாவின் செல்வச் செழிப்பை அறிந்த அலாவுதீன் தென்னிந்தியாவைக் கொள்ளையடித்து ஏராளமான செல்வங்களை தனது கருவூலத்திற்குக் கொண்டு செல்ல விரும்பினான். இது தவிர, தென்னிந்தியாவின் அரசியல்நிலை மிக மோசமான நிலையிலிருந்தது. தேவகிரியின் யாதவர்களும், துவார சமுத்திரத்தின் ஹொய்சாளர்களும், வாரங்கல்லின் காகாத்தியர்களும், மதுரையின் பாண்டியர்களும், நலிந்த நிலையிலிருந்த சோழர்களும் தங்களுக்குள் பகைமையை வளர்த்து கொண்டிருந்தனர். எனவே, வடஇந்தியா முழுவதையும் தனது வாளின் வலிமையால் வெற்றிகண்ட அலாவுதீன், தென்னிந்தியாவைக் கொள்ளையடிப்பதில் தனக்கு இடற்பாடிருக்காது எனக் கருதினான். மாலிக்காபூர் முதலில் தேவகிரியின் யாதவர்களைத் தோற்கடித்தான். தேவகிரி தரைமட்டமாக்கப்பட்டு செல்வங்கள் கொள்ளையிடப்பட்டன. தேவகிரியின் இராமச்சந்திரன், டெல்லி சுல்தானியத்தின் அதிகாரத்தை ஏற்றுக்கொண்டான். அதன்பின் மாலிக்காபூர் தொலைதூரத் தென்னிந்தியப் பகுதிகளுக்குச் சென்றான்.

### தமிழகத்தில் மாலிக்காபூரின் படையெடுப்புகள்

வாரங்கல் கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டிருந்த வேளையில் தமிழகத்தின் திரண்ட செல்வ வளம் குறித்து மாலிக்காபூர் கேள்வியுற்றான். 1310ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் பத்தொன்பதாம் நாள் ஒரு பெரும்படையுடன் பாண்டியநாடு நோக்கிப் புறப்பட்டான். முகமதிய எழுத்தாளர்களால் மாபார் என அழைக்கப்பட்ட பாண்டியநாடு கொல்லத்திலிருந்து நெல்லூர் வரை பரவிக்கிடந்தது. மாலிக்கபூரின் தமிழகப் படையெடுப்பின் நோக்கம் இஸ்லாமிய சமயத்தை பரப்புவது அல்ல. ஆனால் பொன்னின்மீது அவன்கொண்ட பேராசையே அவனை இப்படையெடுப்புக்கு தூண்டிற்று. இரண்டரைத் திங்கள் பயணத்திற்குப் பின் தனது படைவீரர்கள் சில

நாட்களாக ஓய்வு கொண்டிருந்த தேவகிரியை அடைந்தன. அலாவுதீன் கில்ஜியின் படைகளை வழிப்படுத்துவதற்காக, தேவகிரியின் அரசனான இராமசந்திரன், பரசிராமத்தேவர் என்பவரை நியமித்தார்.

ஹொய்சாள எல்லையில் அமைந்த பண்ட்ரி (Bandri) என்னுமிடத்தை அடைந்தவுடன் தனது எதிரிகளின் வலிமையை அறிந்துவர மாலிக்காபூர் தனது உளவாளிகளை அனுப்பினான். ஹொய்சாள அரசரான மூன்றாம் வல்லாளன் தனது படையுடன் மதுரையை நோக்கிச் சென்றிருந்ததாக, மாலிக்காபூருக்குத் தகவல் எட்டியது. மதுரையில் பாண்டிய இளவரசர்களான சுந்தரபாண்டியனுக்கும், வீரபாண்டியனுக்குமிடையே மூண்ட உள்நாட்டுப் போரினைப் பயன்படுத்திக் கொண்டு, தமது மூதாதையர் தமிழகத்தில் இழந்துவிட்ட உடமைகளைத் திரும்பப்பெறும் நோக்கத்துடனே மூன்றாம் வல்லாளன் மதுரைக்குச் சென்றிருந்தான். (இத்தகைய உள்நாட்டுப் போர் பாண்டிய இளவரசர்களிடையே நடைபெறவில்லை என்பது அண்மைக்கால வரலாற்றாய்வாளர் களின் கருத்து). மாலிக்காபூர் ஓர் ஆயத்தக் குழுவினைக் கூட்டினான். அக்குழுவில் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தின்படி தேர்ந்தெடுக்கப்பட்ட 10,000 குதிரை வீரர்களுடன், 1311ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் துவாரசமுத்திரத்தை அடைந்தான். தனது நாட்டில் ஏற்படவிருந்த முகமதியர்களின் படையெடுப்பைப்பற்றிக் கேள்வியுற்ற மூன்றாம் வல்லாளன், மதுரையை விட்டு விரைந்து தன் தலைநகரை அடைந்தான். தன் நாட்டில் ஏற்பட்டிருந்த படையெடுப்பின் கோரத்தைப் பார்த்த வல்லாளன், தான் மிக அண்மையில் படையெடுத்த பாண்டிய இளவரசர்களின் உதவியைக் கோரினான். வீரபாண்டியன், அவனது கோரிக்கைக்கிணங்க ஓர் இராணுவத்தை அனுப்பி வைத்தான். இருப்பினும், எதிரிகளின் படைவலிமையை நன்குணர்ந்த வல்லாளன் அவர்களுடன் சமாதானம் செய்துகொள்ள தனது பிரதிநிதிகளை அனுப்பினான். ஆண்டுத்திறை செலுத்தவும், தனது செல்வத்தையும், யானைகளையும், குதிரைகளையும் எதிரிகளிடம் ஒப்படைக்கவும். உடன்பட்டான்.

துவாரசமுத்திரத்தில் சிலநாள் தங்கிய மாலிக்காபூர் 1311ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11ஆம் நாள் மாபார் நோக்கிச் சென்றான். அவனது படைகள் மாபாரை அடைவதற்கான வழிகளைக் கடக்க அவன் மூன்றாம் வல்லாளனின் உதவியைப் பெற்றான். பல இன்னல்களைக் கடந்து, ஐந்து நாட்கள் பயணம் செய்து மாலிக் மாபாரின் எல்லையை அடைந்தான். மாலிக்காபூரின் படையெடுப்பின் போது பாண்டியநாடு பிளவுபட்டு குழப்ப நிலையிலிருந்தது. மாறவர்மகுலசேகரபாண்டியர்க்கு இரண்டு ஆண்மக்கள் இருந்தனர். அவர்கள் வீரபாண்டியனும், சுந்தரபாண்டியனுமாவார்கள். இவர்கள் இருவரும் அரியணைக்காகத் தம்முள் சண்டையிட்டுக்கொண்டனர். இச்சண்டையில் சுந்தர பாண்டியன் தோற்கடிக்கப்பட்டு மதுரையை விட்டுத் துரத்தப்பட்டான். தோல்வியுற்ற சுந்தரபாண்டியன் உதவிதேடி அலைந்தான். அவன் டெல்லி சுல்தானிடமிருந்து நேரடியாகவோ அல்லது அப்பொழுது தென்னாட்டில் இருந்த சுல்தானின் தளபதியான மாலிக்கிடமிருந்தோ உதவியை எதிர்பார்த்தான். எப்படியிருந்த போதும் மதுரை விவகாரத்தில் மாலிக்காபூர் தலையிடுவதற்கு சுந்தரபாண்டியனின் இந்நிலை ஒரு ஏதுவாக

அமைந்தது என வரலாற்றாசிரியர் S.K. ஐயங்கார் பகர்கின்றார். முதலாவதாக மாலிக் வீரபாண்டியனின் தலைநகரான வீரதாவளத்தை (பீர்துள்) நோக்கிப் படையெடுத்தான். தென்னிந்தியாவின் இதர மன்னர்களைப்போல, பாண்டிய இளவரசன், கோட்டைக்குள்ளேயே தங்கி, அதன் வாயில்களை மூடிக்கொள்ளவில்லை. அவ்விதம் செய்திருப்பானேயானால் எதிரிகளால் கோட்டை எளிதில் கைப்பற்றப்பட்டிருக்கும். அன்றியும் தம்மைவிட வலுவில் சிறந்த முகமதியரின் படையுடன் வெளிப்படையான மோதலைத் தவிர்க்கவே விரும்பினான். இருப்பினும் அவன் அடிக்கடி எதிரிகளுக்கு இடையூறுகள் கொடுத்து வந்தான். இதன் மூலம் நாடு முழுமையும் போர் நிகழ்ச்சிகளுக்கு ஆட்படுத்தப்பட்டது. இத்தகையப் போர்த்தந்திரம் இறுதியில் எதிரிகளை பலவீனப் படுத்திற்று. அன்றியும் தனது தலைநகர் எதிரிகளால் கைப்பற்றப்படும் முன்னரே வீரபாண்டியன் அதைவிட்டு வெளியேறினான். மேலும் மாலிக்காபூரின் போர் நிகழ்ச்சிகள் இடைவிடாது பெய்த மழையால் தடையுற்றன. இத்தகைய இன்னல்களுக்கிடையேயும், தப்பியோடிய மன்னனைத் துரத்தி, காபூர் குண்டூரை நோக்கிச் சென்றான். கொடிய போரின் பின் குண்டூரைக் கைப்பற்றிய போதும் அவனால் வீரபாண்டியனை சிறைப்பிடிக்க முடியவில்லை. வீரபாண்டியன் ஊடுருவவியலாத காட்டிற்குள் தப்பி ஓடினான்.

இவ்விதம் தப்பியோடிய இளவரசனைத் தேடும் முயற்சியை மாலிக்காபூர் கைவிட நேர்ந்தது. அதன்பின் மாலிக் சிதம்பரத்தை அடைந்தான். அங்கு மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். அங்கிருந்த பொற்கோவில் (Golden Temple) சிதைக்கப்பட்டது. திருவரங்கம் கோவிலும் கண்ணனூரைச் சுற்றியிருந்த பல கோவில்களும் மாலிக்காபூரால் சிதைக்கப்பட்டன. பின்திடீரென பாண்டியர் தலைநகராகிய மதுரையை நோக்கித் திரும்பினான். இதுவே திரண்ட செல்வத்தைக் கைப்பற்றிக்கொண்டு தனது தலைநகரைத் துறந்த சுந்தரபாண்டியன் இருந்த இடமாகும். படையெடுப்பாளர்கள் சொக்கநாதர் ஆலயத்திற்குத் தீயிட்டனர். இந்தச் சூழ்நிலையில் சுந்தரபாண்டியனின் உறவினரான விக்கிரபாண்டியன் படையின் தலைமையை ஏற்று மாலிக்காபூரைத் தாக்கினான். மாலிக்காபூர் தோற்கடிக்கப்பட்டான். இத்தோல்வியானது வரலாற்றாளரான வாஸப் என்பவரால் உறுதிப்படுத்தப்படுகிறது. இத்தோல்வியின் பின்னும் தான் கொள்ளையடித்த பொருட்களை டெல்லிக்கு அனுப்பும் வகையில் பத்திரமாக வைத்திருக்க முடிந்தது. அமிர்குஸ்ரூவ் என்பவரின் கூற்றுப்படி இக்கொள்ளைப் பொருட்களுள் 512 யானைகளும், 5000 குதிரைகளும், அளவிறந்த ஆபரணங்களும் அடங்கும். மேலே குறிப்பிட்டிருப்பதுபோல் சுந்தரபாண்டியன், வீரபாண்டியன் ஆகிய சகோதரர்கள் மாற்றாந்தாய் மக்களும் அல்ல, தங்களுக்குள் சண்டை போட்டவர்களும் அல்ல. இவர்கள் இருவரும் ஒன்றிணைந்தே மாலிக்காபூரை எதிர்த்தனர் என்பது அண்டைக்கால ஆய்வில் தெரிய வந்துள்ளது. (மேலும் விவரத்திற்கு பக்கம் 220 பார்க்க).

மாலிக்காபூர் மதுரையிலிருந்து நேரடியாக டெல்லிக்குத் திரும்பினானா அல்லது தொலைவான தென்புலத்திலிருந்த இராமேஸ்வரத்தைத் தாக்கினானா என்பது இன்னும் வரலாற்றாளர்களால் தீர்க்கப்படாத புதிராக உள்ளது. சித்பந்த் ராமேசர் என்ற இடத்தில் எழுப்பப்பட்ட ஒரு மசூதி பற்றிய ராமேசர் (Sit Bund Ramesar) என்பது இராமேஸ்வரத் தையே குறிப்பதாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இராமேஸ்வரப் படையெடுப்புப்

பற்றி குறிப்பிடுகின்ற ஒரே வரலாற்றாளர் பெரிஷ்டாவே பராணியோ அல்லது இஸாமியோ — இதுபற்றி எதுவும் குறிப்பிடவில்லை. இந்த இடத்தின் அமைவிடம் துவாரசமுத்திரத்திற்கு அருகில் அரபிக்கடலில் அமைந்திருந்ததாக பெரிஷ்டாவே, குறிப்பிடுவதிலிருந்து கூற்றை அவரே மறுப்பதும் தெரிகிறது. இருப்பினும் மதுரையிலிருந்து இராமேஸ்வரம் வரையான படையெடுப்பு மாலிக்காபூர் போன்ற ஒரு திறமைமிகு வீரனுக்கு சாத்தியமற்றது என்று கருதுவதற்கும் இடமில்லை. அங்கு மாலிக்காபூருக்கு மசூதி ஒன்றை எழுப்புவதற்கு அவகாசம் கிட்டியிராது என்று கருதினாலும், இராமேஸ்வரத்தாக்குதல் சாத்தியமற்றது என்று முற்றிலும் தள்ளிவிட முடியாது. எனவே இதுவரை நமக்குக் கிட்டியுள்ள சான்றுகளினடிப்படையில் இது குறித்த ஒரு உறுதியான முடிவிற்கு வர இயலவில்லை.

மதுரைப்படையெடுப்பு ஒரு மகத்தான சாதனையாகும். பல கோவில்களைச் சிதைத்து பல ஊர்களையும் நகரங்களையும் தரைமட்டமாக்கியபோதும், மாலிக்காபூரால் பாண்டிய இளவரசர்களைத் தோற்கடிப்பதில் தனக்குச் சாதகமான விளைவுகளை ஏற்படுத்தாவிட்டாலும் அது ஓர் அரிய நிகழ்ச்சியேயாகும். தென்னிந்தியாவில் இஸ்லாமிய விரிவாக்க வரலாற்றில் இப்படையெடுப்பு குறிப்பிடத்தக்க எவ்விளைவையும் ஏற்படுத்தவில்லை. டெல்லிக்குத் திரும்பிய மாலிக்காபூர் அலாவுதீன் கில்ஜியால் மிகச் சிறப்பான மரியாதைகளுடன் வரவேற்கப்பட்டான்.

தமிழகத்தின் மீதான இரண்டாவது முகமதியப் படையெடுப்பு அலாவுதீன் கில்ஜியின் மூன்றாவது மகனான முபாரக்ஷாவின் ஆட்சிக் காலத்தில் நடத்தப்பட்டது. இப்படையெடுப்பு அவனது படைத்தளபதியான குஸ்ரூகான் தலைமையில் நடைபெற்றது. 1314ஆம் ஆண்டு, குஸ்ரூகான் மாபாரின் எல்லைக்குச் சென்றான். மாபாரைத் தாக்கத் தொடங்கிய போது, பாண்டிய இளவரசர்கள், முன்பு போன்றே தந்திரங்களைப் பயன் படுத்தி, நேரடிப் போரைத் தவிர்த்தனர். தங்களது செல்வத்தைக் காப்பாற்றிக்கொண்டனர். வரலாற்றாளர் பராணி, குஸ்ரூகான் தானாகவே மாபாரில் சுதந்திர அரசை நிறுவ முயற்சி செய்தான் எனவும், அம்முயற்சிக்கு அவனது சகஅதிகாரிகள் உதவவில்லை எனவும், அதனால் அவனது எண்ணத்தைக் கைவிட்டான் எனவும் குறிப்பிடுகின்றார். எனவே இந்த இரண்டாவது படையெடுப்பும் கொள்ளையிடுவதாகவே அமைந்தது.

பொதுவாக தென்னிந்தியாவையும், குறிப்பாக தமிழகத்தையும் சுல்தானிய ஆட்சியின்கீழ் கொண்டு வருவதற்கான முதல் முயற்சி கியாஸ்—உத்—தீன் துக்ளக் ஆட்சிக்காலத்திலேயே எடுக்கப்பட்டது. மதுரையின் பாண்டிய அரசு கி.பி. 1321ஆம் ஆண்டு டெல்லி சுல்தானிய அரசால் கைப்பற்றப்பட்டது என உள்நாட்டு முகமதிய வரலாற்றாளர்கள் குறிப்பிடுகின்றனர். கி.பி. 1327ஆம் ஆண்டு முகமதுபின் துக்ளக் தனது தலைநகரை டெல்லியிலிருந்து தேவகிரிக்கு மாற்றும்போது பாண்டிய அரசு சுல்தானிய அரசின் பகுதியாக இருந்தது என பராணியின் குறிப்புகளிலிருந்து அறியப்படுகிறது. எனவே கி.பி. 1323ஆம் ஆண்டு வாக்கில் டெல்லிப்படை பாண்டிய நாட்டைக் கைப்பற்றியிருக்கக்கூடும். இதற்கு முந்திய தேதியில் பாண்டியநாட்டின் மீதான துக்ளக் படையெடுப்பு பற்றி செய்தி எதுவும் இதுவரை தெரியவில்லை. 1320ஆம் ஆண்டு படையெடுப்பினை முகம்மது பின் துக்ளக்கே தலைமையேற்று நடத்தியிருக்கக்கூடும்

என வரலாற்றாளர்கள் கருதுகின்றனர். ஆனால் இந்த அரசகுடும்ப இளவலின் வெற்றி பற்றிய எந்தக் குறிப்பினையும் இஸ்லாமிய வரலாற்றாளர்கள் எழுதாமைக்குக் காரணம் என்ன என்பது தெளிவாகத் தெரியவில்லை.

## மதுரை சுல்தானியம்

மூர்இனத்தைச் சார்ந்த பயணியான இபின் பதூதாவின் பயண நூலான ரெக்லா (Rehla) தான் மதுரை சுல்தானிய வரலாற்றை அறிந்து கொள்வதற்கு உதவும் முக்கிய சான்றாக அமைகிறது. இபின்பதூதா, கியாஸ்உதின் முகம்மதுஷா தமகனி என்பவரது ஆட்சிக்காலத்தில் மாபாருக்கு வந்திருந்தார். அவர் நேரடியாகக் கண்டதையும் கேட்டதையும் தனது குறிப்பில் எழுதிவைத்துச் சென்றார். 1323இல் துக்ளக் மதுரையைத் தலைநகராகக் கொண்ட மாபாரின் ஆளுநராக நியமித்தான். இஸாமி எனும் வரலாற் றாளர் ஜலாலுதீன் மதுரையின் கொத்தவாலாகவே நியமிக்கப்பட்டான் என்கிறார். ஆனால், ஜலாலுதீனின் மகளை மணந்துகொண்ட இபின் பதூதா, அவன் மதுரையின் ஆளுநர் என்கிறார். இபின்பதுதாவின் கருத்து ஏற்புடைத்தாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஜலாலுதீன் சில ஆண்டுகள் சுல்தானுக்குப் பயந்து செயல்பட்டான். ஆனால் முகம்மதுபின்துக்ளக் உள்நாட்டில் பல இன்னல்களை அனுபவிக்க நேர்ந்தபோது ஜலாலுதீன்தானே சுதந்திரமாக இயங்க முற்பட்டான். 1334-35 ஆண்டுகளில் ஜலாலுதீன் சுதந்திர சுல்தானாகப் பிரகடனப்படுத்திய போது முகம்மதுபின்துக்ளக் அவனுக்கெதிராக படை ஒன்றை அனுப்பினான். பராணியின் கருத்துப்படி அப்படை ஜலாலூதீனால் தோற்கடிக்கப்பட்டு மதுரையிலேயே நிறுத்திவைக்கப்பட்டது. அதன்பின், முகம்மதுபின் துக்ளக் தானே, தௌலதாபாத், வாரங்கல் பகுதிகளின் வழியாக, ஜலாலுதீனுக்கு எதிராகப் படைநடத்தி வந்தான். ஆனால், வாரங்கள் பகுதியில் சுல்தானும் அவனது வீரர்களும் வாந்திபேதி (Cholera) நோயால் தாக்கப்பட்டனர். இதே நேரத்தில் டெல்லி, மாளவம் பகுதிகளில் பஞ்சம் ஏற்பட்டது. லாகூர் பகுதியில் புரட்சிகள் ஏற்பட்டன. எனவே ஜலாலுதீனைத் தோற்கடித்து பணியவைக்கவேண்டும் எனும் தனது எண்ணத்தைக் கைவிட்டு, சுல்தான் முகம்மது, டெல்லி நோக்கிச் சென்றான். இவ்விதம் மாபார் சுதந்திர அரசாக வழி ஏற்பட்டது. ஜலாலுதீன், ஜலாலுதீன் ஆஷன்ஷா என்ற பெயரைத் தனக்குச் சூட்டிக் கொண்டான். தனது பெயராலேயே தங்கம், வெள்ளி நாணயங்களை வெளியிடலானான்.

ஜலாலுதீன், அமைதியான முறையில் தனது ஆட்சியை செலுத்த முடியவில்லை. ஏனெனில் சுல்தானுக்கு எதிரான அவனது புரட்சியைப் பயன்படுத்திக்கொண்டு, இந்துக்கள் தங்களது ராஜ்யத்தை இஸ்லாமியர்களிடமிருந்து கைப்பற்றிக்கொள்வதற்கு முயற்சி செய்தார்கள். ஜலாலுதீன் ஆட்சியைப்பற்றிய விளக்கமான செய்திகள் எதையும் இபின்பதூதா குறிப்பிடவில்லை. ஆனால் ஐந்து ஆண்டுகள் ஆட்சி செய்தபின் அவன் கொல்லப்பட்டதாகவும், அவனைத் தொடர்ந்து அவனது அமீர்களில் ஒருவரான அலாவுதீன் உதாஜி என்பவன் பதவியேற்றதாகவும் குறிப்பிடுகின்றார். உதாஜி தனது ஓராண்டுகால ஆட்சியின் போது தனது நம்பிக்கை துரோகிகளுக்கெதிராகப் போரிட்டுக்

கொண்டிருந்தான். போர்க்களத்தில் அவன் அம்பு எறியப்பட்டு (கி.பி. 1339-40) கொல்லப்பட்டான். அலாவுதீன் உதாஜி இன்றும் இஸ்லாமியச் சமயத்துக்காகத் தியாகம் செய்தவன் எனப் போற்றப்படுகின்றான். மதுரையில் வைகையின் வட கரையில் (கோரிப்பாளையம்) அமைக்கப்பட்டுள்ள அவனது கல்லறை, இன்றும் இஸ்லாமியருக்கு ஒரு யாத்திரைத்தலமாக அமைந்துள்ளது. அலாவுதீன் உதாஜி இறந்தபின் அவனது மருமகனான குதிப்உதீன் மதுரை சுல்தானானான். ஆட்சிக்கு வந்த நாற்பது நாட்களுக்குள் இவரது கொள்கையிலிருந்து மாறுபட்ட இவனது பெருங்குடிமக்கள் இவனைக் கொன்றனர்.

குதிப்உதீனுக்குப்பின், ஜலாலுதீன் ஆஸன்ஷாவின் மருமகனான கியாசுதீன் முகமதுஷா தமகனி ஆட்சிப்பொறுப்பேற்றான். கியாசுதீன் மற்றவர்களைவிட மிகக் கொடுங்கோன்மையானவன். கொள்கையற்றவன், நம்பிக்கைத்துரோகி ஆவான். இந்துக்களை கூண்டோடு கொலை செய்வதிலேயே இவன் மகிழ்வெய்தினான். இந்துக்கள் கொலை செய்யப்படுவதையும், துன்புறுத்தப்படுவதையும் கண்டு, ஹொய்சாளமன்னன் வீரவல்லாளனால் அமைதியாக இருக்கமுடியவில்லை. எனவே அவன் மாபார் மீது படையெடுத்தான். கண்ணனூரை முற்றுகையிட்டான். இம்முற்றுகை பத்துமாதங்கள் தொடர்ந்தது என்று இபின்பதூதா குறிப்பிடுகின்றார். இந்த இக்கட்டான சூழ்நிலையில் மதுரையிலிருந்து ஒருபடை கண்ணனூருக்கு அனுப்பப்பட்டது. கண்ணனூரில், இஸ்லாமியருக்கும், வீரவல்லாளனுக்கும் கடும்போர் நடந்தது. இஸ்லாமியர் வெற்றி யடைவது அல்லது செத்துமடிவது என்ற விரக்தியில் போரிட்டனர். ஹொய்சாளப்படை தோற்கடிக்கப்பட்டு சிதறியடிக்கப்பட்டது. மூன்றாம் வீரவல்லாளன் கைது செய்யப் பட்டான். தொடக்கத்தில் எதிரிகளால் பண்புடன் நடத்தப்பட்ட வீரவல்லாளன், அவனது செல்வமனைத்தும் கவ்ரப்பட்டபின்பு, தோலுரிக்கப்பட்டு கொல்லப்பட்டான். அவனது உடலில் வைக்கோல் திணிக்கப்பட்டு மதுரைக் கோட்டை சுவரில் தொங்கவிடப்பட்டான். இவ்வாறான கொடுங்கோலனான கியாசுதீன் தொடர்ந்து ஆட்சி செய்ய முடியவில்லை. அதிகமான அளவு போதைப் பொருளை உண்டு, தானே தனது முடிவைத் தேடிக்கொண்டான்.

கியாசுதீன் முகமது ஷாதமகனிக்குப்பின் அவனது மருமகன் நாஸிருதீன் மதுரை சுல்தான்னான். இவன் டெல்லி சுல்தானியத்திலேயே பணியாளாக இருந்தவனாவன். தான் சுல்தானாக வந்தபின் தனது பெருங்குடியினரின் ஆதரவைப் பெறுவதற்காக அவர்களுக்கு ஏராளமான தங்கத்தை வாரி இறைத்தான். நாஸிருதீன் பதவிக்காலத்தில் இபின்பதுதா சீனாவுக்குச் சென்றுவிட்டதால் அக்காலத்திய மாபாரின் வரலாற்றை சரியாக அறியமுடியவில்லை. கி.பி. 1344 முதல் 1356 வரையான ஆண்டுகளில் மதுரை சுல்தானியர்கள் நாணயங்களை வெளியிடவில்லை. ஏனெனில் நாஸிருதீனுக்குப்பின் வந்த சுல்தான், குர்பத்ஹாஸன் கங்கு, திறமையற்றவனாக கோமாளி போன்று செயல்பட்டான். எனவே மக்கள் இவனுக்கு எதிராகக் கலகம் செய்தனர். இந்நிலையைப் பயன்படுத்திக் கொண்ட விஜய நகரப் பேரரசர் முதலாம் புக்கர் பெரும் படையுடன் மாபார் மீது படையெடுத்தார். குர்பத் ஹாசன் கங்கு கைது செய்யப்பட்டு கொல்லப்பட்டான். மாபார்

பகுதி முழுவதும் விஜயநகர ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டது. இச்செய்தி இயின்ஃபின் தாரிக்கி பீரூஷாகி (Tarikhi Firuzshahi) எனும் நூலிலிருந்து கிடைத்தாகும். ஆனால் முதலாம் புக்கரின் இவ்வெற்றி நிண்ட நாள் நீடிக்கவில்லை. விஜயநகரப்படைகள் மதுரையிலிருந்து சென்றவுடனேயே மீண்டும் சுல்தானிய அரசு துவங்கப்பட்டது. அடில்ஷா, பகருதீன் முபாரக்ஷா ஆகியோரின் தலைமையில் ஆட்சி நடைபெற்றது. இவர்கள் கி.பி. 1352 முதல் 1371 வரை தொடர்ந்து ஆட்சி செய்தனர். 1317ஆம் ஆண்டு பக்ரூதீன் முபராக்ஷாவை, விஜயநகரத்தின் முதலாம் புக்கரின் மகனான குமாரகம்பணன் தோற்கடித்துக் கொன்றான் என அ. கிருஷ்ணசாமி குறிப்பிடுகின்றார். ஆனால் சில வரலாற்றாளர்கள் குமாரகம்பணன் மதுரை சுல்தானியத்தின் கடைசி சுல்தானான அலாவுதீன் சிக்கந்தர்ஷாவையே கொன்றிருக்கக்கூடும் எனக்கருதுகின்றனர். எப்படியிருப்பினும் 1371ஆம் ஆண்டு சுமார் 40 ஆண்டுகள் நீடித்த மதுரை சுல்தானிய அரசுக்கு முடிவு கட்டப்பட்டது. அதுமுதல் அப்பகுதி விஜயநகர அரசின் ஆளுகையின் கீழ்க்கொண்டுவரப்பட்டது.

## தமிழகத்தில் ஹொய்சாளர்கள்

துவாரசமுத்திரத்தின் ஹொய்சாளர்கள், கல்யாணி சாளுக்கியர்களின் சிற்றரசர்களாக பலகாலம் இருந்து வந்தனர். சாளுக்கியப் பேரரசு அழியும் தருவாயில் ஹொய்சாளர்கள் தங்களின் வளர்ச்சியில் நாட்டம் செலுத்தினர். சாளுக்கிய வம்சம் சிறப்புற்றிருந்த போது ஹொய்சாளர்கள் அவ்வரசுக்குப்பணிந்த, மரியாதைமிக்க சிறிய அரசர்களாக இருந்தனர். சாளுக்கிய ஆறாம் விக்கிரமாதித்தியன் காலத்தில் அவனது அரசினைக் காக்கும் தூண்களாகவும், அவனது சிறப்பினைப் பெற்றவர்களாகவும், வினயாதித்தியா என்ற ஹொய்சாளனும் அவன் மகன் எரெயெங்கா என்பவனும் இருந்தனர். குலோத்துங்க சோழனுக்கு எதிரான போரில், அவர்கள் விக்கிரமாதித்தனுக்கு ஆதரவாக ஈடுபட்டனர். சிறப்புற்றிருந்த சாளுக்கியப்பேரரசு, ஆறாம் விக்கிரமாதித்தன் இறந்த பிறகு ஏற்பட்ட பெரும் குழப்பத்தில் தனது செல்வாக்கையும் சிறப்பையும் இழந்தது. இதனைப் பயன்படுத்திக்கொண்ட எல்லைப்புற சிற்றரசுகள் பகிரங்கமாக பேரரசுத்தளையினை எடுத்தெறிந்துவிட்டுத் தங்களை சுதந்திர அரசுகளாக்கிக் கொண்டனர். இதன் காரணமாக, பன்னிரெண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், மூன்று அரசவ்ம்சங்கள் சுதந்திர அரசுகளாயின. அவைகளில் ஒன்றுதான் ஹொய்சாள வம்சம். சாளுக்கியப் பேரரசின் தெற்குப் பகுதிகள் ஹொய்சாள அரசின் பகுதிகளாயின. இப்பகுதிகள் முதலாம் குலோத்துங்க சோழன் இறந்த பிறகு, சோழநாட்டிலிருந்து சாளுக்கியர்களால் கைப்பற்றப்பட்டவையாகும்.

### விஷ்ணுவர்த்தனன்

வினையர்தித்தியா, அவன் மகன் எரெயெங்கா ஆகியோருக்குப்பின் ஹொய்சாள நாட்டின் தலைவனாக வந்தவன் முதலாம் வல்லாளன் (1100-10) ஆவான். இவனைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த இவனது இளைய சகோதரன் பிட்டிதேவன் என்ற விஷ்ணுவர்த்தனன், சுதந்திர அரசனாக விளங்கினான். இவனே ஹொய்சாள ஆதிக்கத்தை

உருவாக்கியவன் எனக்கூறலாம். ஏனெனில், அவனது முன்னோர்கள் ஹொய்சாள அரசை ஏற்படுத்தி அதன் பரப்பை விரிவுபடுத்தினாலும், அவர்கள், சாளுக்கிய அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டே இருந்து வந்தனர். விஷ்ணுவர்த்தனன் சிறந்த வீரனாகவும், பேரவா மிகுந்த ஆட்சியாளனாகவும் இருந்தான். அவன், 1160இல் சோழர்களின் சிற்றரசரான அதிகைமானைத் தோற்கடித்து தனக்காட்டுப் பகுதியைக் கைப்பற்றினான். அதன்பின் சாளுக்கியருக்கெதிராகத் திரும்பினான். முதன் முறையாக வெற்றியும் பெற்றான். உச்சங்கியின் பாண்டிய அரசரும், கோவாவின் இரண்டாம் கடம்ப ஜெயகேசியும் இவனுக்கு ஆதரவு கொடுத்தனர். எனினும் கிருஷ்ணா நதிவரை சென்ற இவன் சாளுக்கியரால் தோற்கடிக்கப்பட்டு திறைசெலுத்த கட்டாயப்படுத்தப்பட்டான். இவனது மகன் நரசிம்மன், தெற்குத் தலைநகரமான துவாரசமுத்திரக் காப்பாளனாக்கப்பட்டான். அதன்பின் விஷ்ணுவர்த்தனன் பங்காபுரம் என்ற இடத்திற்குச் சென்று அங்கு தனது எஞ்சிய நாட்களைக் கழித்தான். நரசிம்மன் ஆட்சிக் காலத்தில் அவன் சாளுக்கியர்களை ஓரளவே மதித்து செயல்பட்டான்.

## சோழர்கள் ஆட்சியில் ஹொய்சாளர்கள் தலையீடு

விஷ்ணுவர்த்தனனின் பேரனான வீரவல்லாளன் தனது அரசின் பகுதிகளை கிருஷ்ணா நதிவரை விரிவுப்படுத்தினான். தரவி, மைசூர் அரசின் கிழக்கு, வடகிழக்குப் பகுதிகளையும் தனது ஆட்சிப்பகுதிக்குள் கொண்டு வந்தான். 1193ஆம் ஆண்டுவாக்கில் சாளுக்கிய அரசும் அழியும் தருவாயிலிருந்தது. அதனைப் பயன்படுத்திக் கொண்ட வீரவல்லாளன் தன்னைப் பூரண சுதந்திர அரசனாக்கிக்கொண்டான். இவன் தொடர்ந்து 1220 வரை அரசு செலுத்தினான். இவனது ஆட்சிக்காலம் முடிவதற்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்புதான் சாளுக்கிய — சோழப் பேரரசன் மூன்றாம் இராசராசன் ஆட்சிக்கு வந்தான். 1230ஆம் ஆண்டு வீரவல்லாளனைத் தொடர்ந்து அவன் மகன் வீரநரசிம்மன் பதவியிலமர்ந்தான். வீரநரசிம்மனின் ஆட்சி தொடர்ந்து 1235ஆம் ஆண்டு வரை நீடித்திருந்தது. பதவியேற்ற முதல் ஆண்டிலேயே வீரநரசிம்மன் சோழப்பேரரசின் விவகாரங்களில் தலையிட வேண்டியதாயிற்று. குலோத்துங்கனுக்குப்பின் பாண்டியர்களின் சோழருக்கு எதிரான படையெடுப்புகள், சோழ பாண்டிய விவகாரங்களில் தலையிடுவதற்கான வாய்ப்பினை ஹொய்சாளருக்குக் கொடுத்தன. ஒரு வேளை ஹொய்சாளர்கள் தங்களை தமிழகத்தின் வல்லமைச் சமநிலையைக் காப்பவர்களெனக் கருதியிருக்கக்கூடும். வீரநரசிம்மன், சோழ பாண்டியர் தலைநகரங்களுக்கு இடைப்பட்ட பகுதியில், அதாவது திருவரங்கத்தைச் சுற்றியுள்ள பகுதியில், தனது படைக்களத்தை அமைத்தான். தற்காலிகமாக பாண்டியர்களின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தினான்.

இவனது பின்தோன்றலான இரண்டாம் நரசிம்மன், சோழப்பேரரசன் மூன்றாம் இராசராசன் அவனது எதிரியான காடவர் கோப்பெருஞ்சிங்கனால் தாக்கப்பட்டபோது, சோழர்களுக்கு உதவ முன் வந்தான். காடவர் கோப்பெருஞ்சிங்கன் சேந்தமங்கலம் பகுதியின் சிற்றரசனாவான். இரண்டாம் நரசிம்மன் துவார சமுத்திரத்திலிருந்து புறப்பட்டு வழியில் மகத அரசைச் சூறையிட்டான். அதன் பிறகு காஞ்சியை நோக்கிச் சென்றான். இந்நிலையில் ஹொய்சாள நாட்டின் வட எல்லைப் பகுதியில் யாதவர்களின் படை

யெடுப்பு ஏற்பட்டது. இதன் காரணத்தால் மூன்றாம் இராசராசனுக்கு உதவியாக இரு தளபதிகளை மட்டும் இரண்டாம் நரசிம்மன் அனுப்பி வைத்தான். இத்தளபதிகள் காடவ சிற்றரசனான கோப்பெருஞ்சிங்கனுக்கு எதிராகப் போரிட்டனர். போரின்போது அவர்கள் நான்கு இலங்கைத் தளபதிகளைக் கொன்றனர். கோப்பெருஞ்சிங்கன், இராசராசனை விடுதலை செய்யும்படி கட்டாயப்படுத்தப்பட்டான். தவிர இராசராசனுக்கு மீண்டும் அவனது பேரரசு திருப்பிக் கொடுக்கப்பட்டது. இவ்வாறு ஹொய்சாளர்களின் முதல் தலையீடு தமிழகத்தில் சோழர்களை திடீர் அழிவிலிருந்து காப்பாற்றியது.

## வீரசோமேஸ்வரன்

இரண்டாம் நரசிம்மனுக்குப்பின் அவன் மகன் வீரசோமேஸ்வரன் 1233ஆம் ஆண்டு அரசு எய்தினான். சோமேஸ்வரன் தனது தந்தையின் ஆட்சிக்காலத்திலேயே நாட்டு விவகாரங்களிலும் அரசு விவகாரங்களிலும் அவனுக்குப் பெரிதும் துணையாக இருந்தான். தமிழகத்தில் இரண்டாவது ஹொய்சாளத் தலையீட்டிலும் அதிக பங்கெடுத்துக் கொண்டான். 1244ஆம் ஆண்டுவாக்கில் சோழநாட்டில் மூன்றாம் இராசராசனுக்கும் அவனது சகோதரன் மூன்றாம் இராசேந்திரனுக்குமிடையே வாரிசுப் போர் ஒன்று ஏற்படுவதுபோல் தோன்றியது. எனவே நாட்டில் குழப்பநிலை உருவாகியது. சோமேஸ்வரன் இராசராசனுக்கு ஆதரவாகப் போரில் இறங்கினான். போர்க் களத்தில் இவன் இராசேந்திரனைத் தோற்கடித்தான். ஆனால் சில நாட்களில் இவன் இராசேந்திர சோழனுடன் நட்பு உடன்பாடு செய்து கொண்டான். ஒருவேளை இச்சமயத்தில் மூன்றாம் இராசராசன் இறந்திருக்கக்கூடும். அதன்பின் வீரசோமேஸ்வரன் கண்ணனூர் என்ற இடத்தில் தன்னை வலிமைப்படுத்திக்கொண்டான். ஸ்ரீரங்கத்திற்கு வடக்கே ஐந்துமைல் தொலைவில் உள்ள இப்பகுதியில் சோமேஸ்வரன் 1262ஆம் ஆண்டு அவன் இறக்கும் வரை தங்கியிருந்தான். வீரசோமேஸ்வரனும் அவனது தந்தை நரசிம்மனும் 'சோழ ராஜ்ய பிரதிஷ்டபானாச்சார்யா' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றிருந்தனர். இதன் பொருள் சோழ அரசனுக்கு அவனது அரியணையைப் பெறுவதற்கு உதவினர் என்பதாகக் கொள்ளலாம். இதன்பிறகு ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளுக்கு மேல் ஹொய்சாளநாடு இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஆட்சி செய்யப்பட்டு வந்தது.

கி.பி. 1254-55இல் வீரசோமேஸ்வரனின் மகளான வீரராமநாதன், ஹொய்சாள அரசின் தென் பகுதியின் ஆட்சியாளனானான். அவனது தலைநகரங்களாக திருவரங்கத் திற்கருகிலிருந்த கண்ணனூரும், வடக்கே சேலம் மாவட்டத்தில் குந்தனி பகுதியும் அமைந்திருந்தன. இவனது மாற்றாந்தாய் மகனான மூன்றாம் வீரநரசிம்மன் சில எல்லைப்புறப்பகுதிகளில் ஆட்சி செலுத்தினான். 1293ஆம் ஆண்டு வீரராமநாதன் இறந்தான். அதன்பின் அவனது மகன் வீரவிஸ்வநாதன் மூன்று ஆண்டுகாலம் ஆட்சி செலுத்தினான்.

## மூன்றாம் வீரவல்லாளன்

வீரராமநாதன் இறந்த அதேகால கட்டத்தில் மூன்றாம் வீரநரசிம்மனும் இறந்து போயினான். அவனுக்குப்பின் ஆட்சி பீடத்தை அலங்கரித்தவன் அவனது மகனான

மூன்றாம் வீரவல்லாளன் ஆவான். இவனே 13ஆம் நூற்றாண்டின் பிற்பட்ட காலத்தில் ஹொய்சாள அரசை மீண்டும் இணைத்தான். இவன் பேரரசின் மூன்று முக்கிய பகுதிகளில் மூன்று தலைநகரங்களை வைத்திருந்தான். அவை ஹலேபிட், குந்தனி, கண்ணனூர் என்பவையாகும். ஒருங்கிணைக்கப்பட்ட ஹொய்சாள ராஜ்யத்தின் கடைசி சிறந்த மன்னன் இவனேயாவன். மாலிக்காபூரின் தென்னிந்தியப் படையெடுப்புக்கு முன்பு வீரவல்லாளன் தனது பேரரசின் பகுதிகளை அமைதியான ஆக்கிரமிப்பு மூலமாக விரிவுபடுத்தினான். பாண்டியநாட்டில், வீரபாண்டியன், சுந்தரபாண்டியன் எனும் இரு சகோதரர்களுக்குமிடையே நடைபெற்றதாகக் கூறப்படும் வாரிசுரிமைப்போர் மூன்றாம் வீரவல்லாளன் அந்நாட்டின் விவகாரங்களில் தலையிடும் வாய்ப்பினைப் பெற்றான். பாண்டிய அரசிடம் ஹொய்சாளர்கள் இழந்த பகுதிகளை திரும்பப்பெற முயன்றான். ஆனால் துவாரசமுத்திரத்தின் மீதான இஸ்லாமியப் படையெடுப்பு அவனை மதுரையிலிருந்து திரும்பக்கட்டாயப்படுத்தியது. முகம்மதிய படைகளின் கொடுமையைக்கண்டு அஞ்சிய வீரவல்லாளன் தனது பிரதிநிதிகளை அனுப்பி அனுமதி உடன்பாடு செய்து கொண்டான். அதன்படி தனது உடமைகளைக் கொடுப்பதாகவும், ஆண்டுதோறும் திறை செலுத்துவதாகவும் ஏற்றுக்கொண்டான். அதன்பின் இவன் சுதந்திரமாக நாட்டை ஆள்வதற்கு அனுமதிக்கப்பட்டான். முகம்மதியர் தமிழகத்தில் கொள்ளையிட்டுக் கொண்டிருக்கும்போது தமிழக அரசியல் நிலை சீர்கெட்டது. பாண்டிய இளவரசர்களுக்கிடையே நடந்ததாகக் கருதப்படும் வாரிசுப் போரும், முகம்மதியப்படை யெடுப்பும் பாண்டிய அரசவம்சத்தைத் தாழ்வுபடுத்தியது. ஆனால், அண்மைக்கால ஆராய்ச்சியின்படி N. சேதுராமன் தனது `Pandian Empire, Chronology Reconstructs History' என்ற நூலில் பாண்டிய நாட்டில் வீரபாண்டியன், சுந்தரபாண்டியன் எனும் இருசகோதரர்களுக்கிடையே எந்தவிதமான வாரிசுப்போரும் நடைபெறவில்லை எனவும். மாலிக்காபூரின் துணையை நாடிய சுந்தரபாண்டியன் பஞ்சபாண்டியர்களில் ஒருவனான மற்றொரு சுந்தரபாண்டியனாவான் எனவும் நிரூபித்திருக்கின்றார். எனினும் கேரள நாட்டைச் சேர்ந்த அரசன் இரவிவர்மன் குலசேகரன், இவ்விரு சகோதரர்களையும் தோற்கடித்து சோழ, பாண்டிய அரசுகளை தனது ஆளுகையின் கீழ்கொண்டு வந்தான். விரைவிலேயே வீரபாண்டியன் பெரும்படை ஒன்றினைத்திரட்டியும் மூன்றாம் வீரவல்லாளனின் உதவிபெற்றும் தமிழகத்திலிருந்து கேரள மன்னனைத் தோற்கடித்து வெளியேற்றினான்.

ஹொய்சாள மூன்றாம் வீரவல்லாளன் முகமதுபின்துக்ளக்கிடம் தோற்று சரணடைந் தானா இல்லையா என்பது சர்ச்சைக்குரிய வினாவாக இருந்து வருகின்றது. பெரிஷ்டா எனும் முகமதிய ஆசிரியர், சுல்தான் முகமதுபின்துக்ளக்கின் படைபலத்தைக்கண்டு அஞ்சி, மூன்றாம் வல்லாளன், சுல்தானின் அதிகாரத்திற்குப் பணிந்தான் என்பதாகக் குறிப்பிடுகின்றார். ஆனால் 1327ஆம் ஆண்டுவாக்கில் முகமதியர்களால் துவாரசமுத்திரம் தாக்கப்பட்டு அழிக்கப்பட்டது என வரலாறு கூறுகிறது. இதன்படி, வல்லாளன் முகமதியருக்குப் பணியாது தொடர்ந்து அவர்களுக்கெதிராகக் கடும்போர் செய்து பின்பே அடக்கப்பட்டிருக்ககூடும் எனத்தெரிகிறது. தவிர, 1328ஆம் ஆண்டு தேதியிட்ட கல்வெட்டுக் குறிப்பொன்று அவ்வாண்டு வீரவல்லாளன் சுதந்திர அரசனாக ஆட்சி

செய்தான் எனக் குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டுக் குறிப்பு மேற்கூறிய பெரிஷ்டா போன்றோரின் கருத்துக்கள் உண்மைக்குப் புறம்பானவை என நிருபிக்கின்றது. எனவே, ஒருவேளை, வீரவல்லாளன், தொடக்கத்தில் சுல்தானை எதிர்த்து போரிட்டிருக்கலாம். அதன்பின் அவன் தோற்கடிக்கப்பட்டு ஒரு உடன்படிக்கை செய்திருக்கலாம்; சுல்தான் ஹொய்சாள அரசில் சில பகுதிகளை அவனுக்கு மீண்டும் அளித்து சுதந்திர அரசனாக இயங்கச் செய்திருக்கலாம்.

மதுரை சுல்தானிய அரசின் துவக்கம், அதனது வெறுக்கத்தக்க கொடுங் கோன்மையான ஆட்சிமுறை ஆகியவை ஹொய்சாள மூன்றாம் வீரவல்லாளனின் தலையீட்டை மதுரைப்பகுதியில் துரிதப்படுத்தின. இச்சமயத்தில் வீரவல்லாளனுக்கு எண்பது வயது நிரம்பியிருந்தது. முதுமை நிரம்பிய வீரவல்லாளன் மாபார் (மதுரை) பகுதிமீது படையெடுத்தான். இஸ்லாமியர்களால் காக்கப்பட்டுவந்த வலிமை வாய்ந்த கோட்டைகளில் ஒன்றான கண்ணனூரைத் தரைமட்டமாக்கினான். இபின்பதுதா இப்போர் பற்றிய ஒரு புவியியல் சார்ந்த கருத்தினைக் கூறியுள்ளார். அவரது கருத்துப்படி, கண்ணனூர் முற்றுகை பத்து மாதங்கள் நடந்தது. வலிமைப்படுத்தப்பட்ட முகமதியப்படை மாபாரிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டது. வீரவல்லாளன் தீரமுடன் போரிட்டான். தொடர்ந்து நடைபெற்ற போரில் ஹொய்சாளப் படை நாசமாக்கப்பட்டது. வீரவல்லாளன் கைது செய்யப்பட்டான். தொடக்கத்தில் எதிரிகளால் பண்புடனேயே வீரவல்லாளன் நடத்தப்பட்டான். ஆனால் அவனது கருவூலமனைத்தும் கைப்பற்றப்பட்ட பின்பு அவன் கொல்லப்பட்டான். அவன்தோல் உரிக்கப்பட்டது. அவனது உடலில் வைக்கோல் திணிக்கப்பட்டு மதுரைக் கோட்டையில் அவ்வுடல் மக்களின் பார்வைக்காகத் தொங்கவிடப்பட்டது. வீரவல்லாளனின் இந்த வருந்தத்தக்க முடிவு தமிழகத்தில் ஹொய்சாளரின் தலையீட்டுக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

## பயிற்சி வினாக்கள்

1) தமிழக வரலாற்றில் ஹொய்சாளரின் பங்கினை விவரிக்க.

2) மதுரை சுல்தானிய ஆட்சியின் விளைவுகளை ஆய்க.

# பாடம் – 12 விஜயநகர ஆட்சியின்கீழ் தமிழகம்

வடபுலத்தில் முஸ்லீம்கள் ஆட்சி ஏற்பட்ட பிறகு இந்து சமயம், கலாசாரம், பண்பாடு இவற்றிற்கு பெரும் அழிவு ஏற்படலாயிற்று. இதனின்றும் இந்து சமயத்தை, இந்து கலாசாரத்தை, இந்துக்களின் பண்பாட்டை கட்டிக் காப்பதெற்கென்றே தோற்றுவிக்கப் பட்டதுதான் விஜயநகரப் பேரரசு. பின்னர் கூட இதே எண்ணத்தில்தான் சத்திரபதி சிவாஜியும் ஓர் பேரரசினை ஏற்படுத்தினார் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். இப்பேரரசினைத் தோற்றுவித்த, சங்கமனின் புதல்வர்களாகிய ஹரிஹரனும், புக்கனும் காகதீய வமிசத்தைச் சேர்ந்த பிரதாப ருத்திர தேவனுடைய அரசவையில் அலுவல் பார்த்து பிறகு 1323இல் வாரங்கல்லை முஸ்லீம்கள் கைப்பற்றிய பிறகு கம்பிலி என்னும் நாட்டிற்குச் சென்றனர். 1327இல் கம்பிலியை முகமது பின் துக்ளக் கைப்பற்றிய பிறகு ஹரிஹரனும், புக்கனும் சிறைப்படுத்தப்பட்டு டெல்லிக்குக் கொண்டு செல்லப்பட்டனர். டெல்லியில் அவர்கள் இஸ்லாம் சமயத்தைப் பின்பற்றினர். கம்பிலி மக்கள் இஸ்லாமிய ஆளுநராகிய மாலிக் என்பானுக்கு எதிராகக் கலகம் செய்தனர்.

முகம்மது பின் துக்ளக் ஹரிஹரனையும், புக்கனையும் இந்த சூழ்நிலையில் கம்பிலியுக்கு ஆளுநர், துணை ஆளுநர்களாக நியமித்தார். காரணம் அவர்கள் அப்பகுதியைச் சார்ந்தவர்கள். எனவே மக்களை எளிதில் அடக்கி மீண்டும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவார்கள் என்று முகம்மது துக்ளக் கருதியதேயாகும். ஆனால் முகமது பின் துக்ளக் நினைத்தவாறு காரியங்கள் நிறைவேறவில்லை. கலகத்தை நடத்திய சோமதேவாவுடன், ஹொய்சாள அரசன் மூன்றாம் வீரவல்லாளன் சேர்ந்து கொண்டு ஹரிஹரனையும் புக்கனையும் தோறகடித்தனர். எனவே ஹரிஹரனும், புக்கனும் அகதிகளாக அலைந்து திரிந்தனர். இந்த நேரத்தில்தான் அவர்கள் வித்யாரண்யர் என்ற பெரும் ஞானி ஒருவரின் உதவியைப் பெற்றனர். பிறகு அந்த ஞானியின்படி துங்கபத்திரை நதியின் வடகரையில் அமைந்துள்ள அனகொண்டி என்ற இடத்திற்கு நேர் தெற்கே தங்களது தலைநகரை ஏற்படுத்திக் கொண்டனர். பிற்காலத்தில் இது பெரும் பேரரசாக விளங்குகிறது.

விஜய நகரத்தை அமைத்ததில், இருந்து சமயத்தையும், இந்துக்களுடைய பூர்வ மரியாதை பக்தியையும், காப்பாற்றித் தென்னிந்திய கலாசாரத்தை நிலை நிறுத்துவதற்காக விஜய நகரத்தை ஹரிஹரதேவர் அமைத்தான் என்பது வரலாற்று அறிஞர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட பேருண்மையாகும். துங்கபத்திரை நதியின் வடகரையில் உள்ள குன்றுகள் இராமாயணத்தில் கூறப் பெற்றுள்ளன. ரிஷ்யமுகபர்வதம், மதங்கமலைகள், மலைய வந்த மலைகள் என நம்பப்படுகின்றன. இம்மலைகளில் வசிக்கும் வானரங்கள் இராமாயணத்தில் பேசப் பெற்றுள்ள வானரங்களின் வழி வந்தவை எனவும் இப்பகுதி களில் வாழும் மக்கள் அனுமான் என்ற ஆஞ்சநேயரைத் தங்கள் குல தெய்வமாகக் கொண்டு வணங்குவதைக் காணலாம். விஜய நகரம் அமைந்த இடம் இந்துக்களுடைய முக்கிய இதிகாசமாகிய இராமயணத்தோடும், இராமன், இலக்குவன், அனுமான் ஆகிய இதிகாச வீரர்களுடைய வாழ்வோடும் தொடர்புள்ளது ஆகும். இந்தச் சமயக் கருத்தும் விஜய நகரம் ஏற்படுத்துவதற்குத் துணை புரிந்திருக்க வேண்டும். எப்படியும் கம்பிலி 1336இல் முஸ்லீம் ஆட்சியில் இருந்து விடுபட்டது. கம்பிலியின் விடுதலை விஜயநகரப் பேரரசு ஏற்படப் பெரிதும் வழிகோலியது.

விஜய நகரப் பேரரசு ஏற்படுத்தப்பட்ட நேரத்தில் தமிழகத்தில் இரு அரசுகள் ஏற்படலாயின. அவற்றில் ஒன்று சம்புவராயப் பேரரசு; மற்றையது மதுரை சுல்தானியம் சம்புவராயர் பகுதியில் சித்தூர் மாவட்டத்தின் பகுதிகள் சில. செங்கல்பட்டு, வட, தென் ஆற்காடு மாவட்டங்கள் முதலியன அடங்கும். அதுபோல சற்றேறக்குறைய கொள்ளிடத்தின் கரையில் இருந்து இராமேஸ்வரம் வரை உள்ள பகுதிகள் மதுரை சுல்தானின் ஆட்சிக்குட்பட்டிருந்தது.

## முதலாம் ஹரிஹரனின் கீழ் தமிழகம்

பேராசிரியர் அ். கிருஷ்ணசாமியின் கருத்துப்படி, விஜயநகர அரசு 1344-1356க்கு இடையில் முதன்முதலாக தமிழகத்தின் மீது படையெடுத்திருக்க வேண்டும். இதற்கு கண்டெடுக்கப்பட்டுள்ள கல்வெட்டுச் சான்றுகளையும் நாணயச்சான்றுகளையும் தமக்கு ஆதாரமாகக் கொண்டுள்ளார். மதுரை சுல்தானான குர்பத் ஹாசன் கங்குவிற்கெதிராக மக்கள் கலகத்தில் ஈடுபட்டபோது முதலாம் புக்கர், மதுரையில் படையெடுத்து வெற்றி கொண்டார். இந்த முதலாம் புக்கர், முதலாம் ஹ்ரிஹரனின் தம்பி ஆவார். ஆயினும் இவ்வெற்றி நீண்ட காலம் நிலைக்கவில்லை. முதலாம் புக்கரின் கீழ் உள்ள விஜய நகரப் படைகள் திரும்பிச் சென்ற உடன் அடில்ஷா என்பவன் சுதந்திர நாடாக மதுரையைப் பிரகடனப்படுத்திக் கொண்டான்.

## முதலாம் புக்கரின் கீழ் தமிழக்ம் – குமார கம்பணனின் தென்னிந்திய படையெடுப்பு

முதலாம் புக்கர் விஜயநகரின் அரசரானதும், தம் மகன் குமாரகம்பணனை அனுப்பி தென்னகத்தைக் கைப்பற்ற நினைத்தான். குமார கம்பணர் சம்புவராயரது நாட்டைக் கைப்பற்றிவிட்டு, மதுரை சுல்தானியத்தையும் தவிடுபொடியாக்கினார். குமார கம்பணரின் இப்படையெடுப்பை அறிந்து கொள்ள நமக்குத்துணையாய் இருப்பவை கம்பணனின் மனைவி கங்காதேவி எழுதிய மதுரா விஜயம் என்ற நூலும், ராஜநாத திண்டிமா எழுதிய சாலுவ பியூதயமும் ஆகும். இவை தவிர 132 கல்வெட்டுக்களின் துணையும் நமக்குக் கிடைத்திருக்கின்றன. இவை தமிழகத்தில் கண்டெடுக்கப்பட்டவை.

## ராஜகம்பீர ராஜ்யத்தின்மீது படையெடுப்பு

ராஜ கம்பீர ராஜ்யம் என்பது செங்கல்பட்டு, வடதென் ஆற்காடுகள், முதலிய பகுதிகளை உள்ளடக்கியது ஆகும். மதுரைக்குச் செல்லுவதற்கான வழி தொண்டை மண்டலம் வழியாகச் சென்றதால், கம்பணர் முதலில் ராஜகம்பீர ராஜ்யத்தைப் பிடித்தார். ராஜகம்பீர ராஜ்யத்தை ஆண்ட சம்புவராயர்கள் முதலில் சோழர்களின் கீழ் பகுதியில் இருந்தவர்களாவர். முஸ்லீம்கள் தமிழகத்தைத் தாக்கியபோது இந்த சம்புவராயர்கள் தங்கள் பகுதியைச் சுதந்திர நாடாக அறிவித்துக் கொண்டனர். இவர்களின் உன்னத காலம் 1321-39 வரை ஆண்ட வென்றுமண்கொண்டான் காலம் முதல் ஆரம்பமானது. அவனுக்குப்பிறகு அவன் மகன் ராஜநாராயண சம்புவராயன்தான் குமார கம்பணாவுடன் போரிட்டவன்.

குமார கம்பணன் தன் புகழ் மிக்க தென்னகப் படையெடுப்பை முல்பகலில் உள்ள தனது தலைமை அலுவலகத்தில் இருந்து நடத்தினான். குமார கம்பணன் விரிஞ்சிபுரம் சென்று பின்னர் சம்புவராயரின் படைகளைத் தாக்கி தோற்கடித்தார். கங்காதேவியின் 'மதுரா விஜயம்' என்ற நூலில் சம்புவராயர் குமார கம்பணனால் கொலை செய்யப்பட்டான் என்று அறிகிறோம். ஆனால், கல்வெட்டுக்கள் அடிப்படையில் பார்க்கின் சம்புவராயர் கொலை செய்யப்படவில்லை; மாறாக குமார கம்பணணின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொள்ள வற்புறுத்தப்பட்டான் என்று அறிகிறோம்.

## கொங்கு நாட்டுப் படையெடுப்பு

தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றிய பிறகு கொங்குதேசம் விஜய நகர ஆட்சியின் கீழ் வந்தது. இப்படையெடுப்புக்களின் போது கம்பணனுக்கு சிறப்பாக அவனது படைத்தளபதி கந்துரகுளி மாரய்ய நாயக்கர் உதவி புரிந்ததாக அறிகிறோம்.

## மதுரைப் படையெடுப்பு

சம்புவராயர்களின் வீழ்ச்சியும், தொண்டை மண்டலம் விஜயநகருடன் இணைக்கப் பட்டதும் ஆகிய செயல்கள் விஜயநகருக்கும், மதுரைக்கும் இடையில் நேரடித் தொடர்பு ஏற்படுத்தியது. மதுரை சுல்தானியம் 1333ஆம் ஆண்டில் ஜலாலுதீன் அஸன்ஷாவால் முகமதுபின் துக்ளக் காலத்தில் ஏற்பட்டது. மதுரை சுல்தானியம் ஏறத்தாழ 46 ஆண்டுகளே நிலைத்திருந்தது. மதுரை சுல்தானின் ஆட்சியில் இந்துக்கள் பட்ட பெரும் இன்னல்களைக் கண்ணுற்ற விஜயநகர அரசு, மதுரை மக்களை விடுவிக்க எண்ணி மதுரையில் படையெடுத்தது. மதுரையில் சுல்தான்களின் ஆட்சியின்போது பெரும்பாலான இந்துக் கோயில்கள் அழிக்கப்பட்டன. பலகோயில்கள் முஸ்லீம்களின் பள்ளிவாசல்களாக்கப் பட்டன. இந்துக்கள் படுகொலை செய்யப்பட்டனர். பசுக்கள் வெட்டிக் கொல்லப்பட்டன. இத்தகைய நிலையை இந்து அரசரான முதலாம் புக்கர் போன்றவர்களால் அனுமதிக்கமுடியாது. எனவே புக்கர், குமாரகம்பணனை மதுரையைக் கைப்பற்றுமாறு பணித்தார்.

கி.பி. 1370இல் தென் ஆற்காட்டில் உள்ள செஞ்சியில் இருந்த விஜயநகரப் படைகள் திருவரங்கம் பக்கத்தில் உள்ள சமயவரம் என்னும் இடத்தில் மதுரை சுல்தானின் படைகளைத் தோற்கடித்தன. மதுரை சுல்தான்களின் செல்வாக்கு மிக்க இடமான கண்ணனூர் குப்பம் என்ற இடத்தை விஜயநகரப் படைகள் கைப்பற்றின. பின்னர் இப்படைகள் திருவரங்க நாதப்பெருமானின் கோயிலைத் தாக்காமல் மதுரையை நோக்கிச் சென்றன. மதுரைக்கும் திருச்சிராப்பள்ளிக்கும் இடையில் நடந்த கடும்போரில் சுல்தான் தோற்கடிக்கப்பட்டு கொல்லப்பட்டார். சுல்தானின் மரணம் போரின் போக்கில் எவ்வித மாறுதலையும் ஏற்படுத்தவில்லை. சுல்தானின் படைவீரர்களில் சிலர் தலைநகரின் பாதுகாப்பான இடத்தில் இருந்து கொண்டு விஜய நகரப் படைகளுக்குப் பணிய இன்னமும் மறுத்தனர். குமார கம்பணர் மதுரையை முற்றுகை இட்டு அதனைத் திறமையாகக் கைப்பற்றினார். இவ்வாறு மதுரை சுல்தான்களின் ஆட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. மதுரையை கைப்பற்றியதால் இராமேஸ்வரம் வரையுள்ள தென்னகம் முழுவதும் விஜயநகரப் பேரரசின் கீழ்வந்தது. குமாரகம்பணன் மதுரையின் ஆளுநராகப் பதவி ஏற்றார்.

குமாரகம்பணனின் ஆட்சிக் காலம் தமிழகத்தில் சிறந்த காலமாகக் கருதப்படுகிறது. குமாரகம்பணன் பெரும் வெற்றி வீரர் மட்டுமன்று மாறாக விஜயநகரின் இலட்சியங்களை தமிழகத்தில் சிறப்பாக நிறைவேற்றினார். 1363 முதல் 1463 வரை ஏறத்தாழ ஒரு நூற்று ஆண்டு காலம் விஜய நகர ஆட்சி தமிழகத்தில் சிறப்பாக இரண்டாம் ஹரிஹரன், விருப்பண்ண உடையார், முதலாம் தேவராயர், இரண்டாம் தேவராயர் போன்றோர்களால் வேரூன்றியது. ஆனால் மாலிக் அர்ஜுனனின் ஆட்சியின் பிற்பகுதியில் விருப்பாக்ஷா (Virupaksha) என்ற திறமையற்றவன் காலத்திலும் விஜயநகரின்பிடி தமிழகத்தில் தளரலாயிற்று.

## தமிழகத்தின் மீதான ஒரிஸ்ஸா படையெடுப்பு

மல்லிகார்ஜுனர் ஆட்சிக்காலத்தில் ஒரிஸ்ஸாவைச் சேர்ந்த கபிலேஸ்வர கஜபதி என்பவன் தமிழகத்தின்மீது படையெடுத்தான். முதலில் கபிலேஸ்வரன் ரெட்டி முடிநாட்டைக் கைப்பற்றினார். பின்னர் தனது ஒன்றுவிட்ட சகோதரர் கணதேவர் தலைமையில் ஒரு படையை அனுப்பி கிருஷ்ணாவைக் கடந்து கொண்டவீடு மாநிலத்தில் நுழையச் செய்தான். பல முக்கிய கோட்டைகள் விஜயநகரிடம் இருந்து கைப்பற்றப் பட்டன. குறிப்பாகக் கொண்டவீடு, பெனு கொண்டா, ஆதங்கி (Addanki) முதலிய கோட்டைகள் படையெடுப்பாளர்களின் கையில் வீழ்ந்தன. கபிலேஸ்வரனின் புதல்வர் களில் ஒருவரான குமாரஹம்வீரா என்பவன் கொண்ட வீட்டின் ஆளுநராக நியமிக்கப் பட்டான். மேலும் விஜயநகரப் பேரரசின் தென் மாநிலங்களைக் கைப்பற்றவும் அவன் பணிக்கப்பட்டான்.

ஹம்வீரா சிறந்த போர் வீரரும், திறமையான தளபதியுமாவார். இவர் 1463இல் தென்னகத்தின் மீது பெரும் படையுடன் நுழைந்தார். இவருக்குத் துணையாக அவரது மைந்தன் குமார கபிலேஸ்வர மகாபத்திரா என்பவன் இருந்தான். ஒரிய நாட்டுப் படைகள் கிழக்குக் கடற்கரையில் உள்ள முக்கியத் துறைமுகங்கள் யாவற்றையும் கைப்பற்றின. காவிரி வரை எவ்விதத் தடையும் இன்றி ஹம்வீரா தம் படைகளை நடத்திச் சென்றார். இந்த ஒரிஸ்ஸாவின் படையெடுப்பு தென்னகத்தில் எவ்விதமான பெரும் மறுதல்களையும் ஏற்படுத்தவில்லை. மாறாக சிறிது குழப்பம் நிறைந்த சூழ்நிலையை மட்டும் உருவாக்கியது. ஆயினும் இரண்டு வருட காலத்தில் ஒரிஸ்ஸாவின் படைகள் பின்வாங்கிக் கொள்ளப்பட்டன. இதற்கான காரணங்கள் தெரியவில்லை.

## தமிழகத்தில் சாளுவநரசிம்மன்

மல்லிகார்ஜுனனின் படுகொலையைத் தொடர்ந்து நாட்டில் நில்விய குழப்பமான சூழ்நிலையும், இரண்டாம் விருப்பாக்ஷா (Virupaksha II) அரியணையை அபகரித்துக் கொண்டமையும் சாளுவ நரசிம்மன் தனது அதிகாரத்தினை ஏற்படுத்தப் பெரிதும் உதவின. இவர், குமாரகம்பணனின் தளபதிகளில் ஒருவரான சாளுவ மங்கு என்பவரின் சந்ததியினன் ஆவார். சாளுவ நரசிம்மனின் வியத்தகு செயல் யாதெனில் ஒரியர்களிடம் இருந்து தமிழகத்தை மீட்டுக் கொண்டதாதும். ஒரியர் கி.பி. 1463இல் தற்கால தென் ஆற்காடு மாவட்டத்தின் பகுதிகளைக் கைப்பற்றி இருந்தார்கள். சாளுவ நரசிம்மன் ஒரியர்களை வீழ்த்தியதோடு, கிழக்குக் கடற்கரைப் பகுதிகளை குறிப்பாக கிருஷ்ணா நதிவரை உள்ள பகுதிகளை முழுவதுமாக வெற்றி கொண்டார்.

சாளுவ நரசிம்மர் கஜபதி படையெடுப்பாளர்களை வெல்ல முயற்சி செய்து கொண்டிருந்தபோது, பாணர்களின் தலைவர் புவனகவீர சமர கோலாகலர், விஜயநகர அதிகாரத்திலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு தன்னை தனியரசாக்கிக் கொண்ட தோடு காஞ்சியை நோக்கிப் படையெடுத்து அதனையும் கைப்பற்றிக்கொண்டார். சாளுவ நரசிம்மன் உடனேயே உதயகிரியிலிருந்து தெற்கு நோக்கி பாணர் தலைவனை அடக்கப் புறப்பட்டு, இராமேஸ்வரம் வரை அவனைத் துரத்திச் சென்றான்.

ஓரியர்களின் படையெடுப்பு, காஞ்சியைப்பாணர் தலைவன் பிடித்தது. தமிழகம்மீது பாமினி படையெடுப்பு முதலியன தென்னகத்தில் சங்கமாவின் ஆட்சிக்குக் கெட்ட பெயரை ஏற்படுத்திற்று. ஆனால் சாளுவநரசிம்மன் தான் தமிழகத்தை வெளியார் படையெடுப்புக்களில் இருந்தும், உள்நாட்டுக்கலங்களிலிருந்தும் காத்து சிறப்படையச் செய்தான். சாளுவநரசிம்மன் இல்லாவிட்டால் விஜயநகரச் சிறப்பு ஓர் கடந்த கால நிகழ்ச்சியாக இருந்திருக்கும்.

## தமிழகத்தில் நரசநாயக்கரின் ஆட்சி

சாளுவ நரசிம்மனின் இறப்பிற்குப் பிறகு சோழ, பாண்டிய, சேர நாட்டுத்தலைவர்கள் தத்தம் பகுதிகளை சுதந்திரநாடாக்கிக் கொண்டனர். முதலில் சாளுவநரசிம்மனின் மகனான நரசநாயக்கர், தஞ்சாவூர், திருச்சி ஆகிய சோழப் பகுதிகளை ஆண்டுவந்த கோனேரிராஜா என்பவனுக்கெதிராகப் படையெடுப்பு நடத்தினார். கோனேரிராஜா தோற்கடிக்கப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார். பிறகு நரசநாயக்கர் மதுரைப் பகுதியிலிருந்த மறவருக்கு எதிராகப்படையெடுத்து விஜயநகரப் பேரரசின் மேலாண்மையை ஏற்றுக் கொள்ளச் செய்தார். தென்காசிப்பகுதியை ஆண்ட மனுபூஷணன் என்ற பாண்டியர் தலைவனையும் தோற்கடித்தார். தென்காசிப்பாண்டிய பகுதி விஜயநகரின் கீழ் சிற்றரசாயிற்று.

## தாமிரபரணிப் போர் (1523)

1523, ஜுலை 27ஆம் நாள் வெளியிடப்பட்டதாகக் கருதப்படும் காளகஸ்தி பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ள கல்வெட்டில், அச்சுதர் திருவாடியின் அரசனையும், திருவாங்கூரை ஆண்ட அரசனையும், சாளுவ நாயக்கனையும், தும்பிச்சிநாயக்கனையும் தோற்கடித்துவிட்டு தாமிரபரணி ஆற்றின் கரையில் ஒரு வெற்றித் தூணையும் நாட்டினார் என்று அறியக்கிடைக்கிறது.

கிருஷ்ணதேவராயரின் மறைவிற்குப் பிறகு விஜயநகரின் அரசியல்குழப்பம் மிகுந்த சூழ்நிலை ஏற்பட்டது. பேரரசருக்கு வாரிசான அவரது மருமகன் மிகவும் சிறுபிள்ளையாக இருந்ததால் இராமராயர் அரசுரிமையைக் கைப்பற்ற முனைந்தார். ஆனால் பேரரசரின் குடும்பத்தின்மீது உண்மையான அன்பு காட்டிய சாளுவ வீரநரசிம்மர் என்பவரால் இம்முயற்சி தடைப்பட்டது. அவர் அரசர் குடும்பத்திற்கு எவ்வித உறவு முறையினர் என்பதைப் பற்றிய ஆதாரங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. எப்படியும் அவர், அச்சுதர் தலைநகர் வந்து சேரும்வரை இராமராயர் தம்முயற்சியில் வெற்றி அடையாவண்ணம் காத்து நின்றார். பின்னர் அச்சுதர் ராமராயருடன் ஓர் இணக்கமான சூழ்நிலையை

உருவாக்கிக்கொண்டு முடிசூட்டிக்கொண்டார். இம்முடிவு, இதுவரை அரசியலிலிருந்து விலகி நின்று வந்த சாளுவ நரசிம்மருக்குப் பெரும் ஆத்திரத்தைத் தந்தது. எனவே பேரரசின் தென்பகுதியில் அவர் கலகத்தில் ஈடுபட்டார். அதேநேரத்தில் பரமக்குடியை ஆண்ட தும்பிச்சிநாயக்கர் என்பவர் தாமும் விஜயநகரின் மேலாண்மையை எதிர்த்து வந்ததோடு, சாளுவ நரசிம்மருக்கு ஆதரவும் தந்தார். பேரரசின் தென் எல்லையில் திருவாங்கூரின் திருவடி ஆட்சியாளர் உதயமார்த்தாண்டவர்மன், பாண்டிய அரசன் ஸ்ரீவல்லபனை தென்காசியினின்றும் விரட்டி அடித்து விட்டு தமது அதிகாரத்தை அங்கு நிறுவினார். பாண்டிய அரசன் ஸ்ரீவல்லபன் விஜயநகருக்கு திறைசெலுத்தி வந்தான். எனவே அச்சுதராயர் ஒரு பெரும் படையை சலகராஜு சின்ன திருமலை என்பவரின் தலைமையில் தெற்கு நோக்கி அனுப்பி அமைதி நிலைநாட்டச் செய்தான். தாமிரபரணிப் பகுதியில் நடந்த பெரும்போரில் பேரரசுப் படைகள் வெற்றி பெற்றன. கலகக்காரர்களின் படைகள் சின்னாபின்னமாக்கப்பட்டன. பின்னர் கலகக்காரர்கள் மன்னிக்கப்பட்டனர். மீண்டும் பாண்டியமன்னன் ஸ்ரீவல்லபன் அரியணையில் அமர்த்தப்பட்டு, அவன் இழந்த பகுதிகளும் அவனுக்கு அளிக்கப்பட்டது. பாண்டியமன்னன் தன் நன்றியின் அடையாளமாகத் தனது மகளை பேரரசருக்கு மணமுடித்து வைத்தான்.

### சின்ன திம்மரின் படையெடுப்பு

பேரரசின் இரண்டாவது தென்னகப் படையெடுப்பு கி.பி. 1544இல் நடந்தது. இந்த நேரத்தில் திருவாங்கூரின், அரசனாக இருந்தவன் வீர உண்ணி கேரளவர்மன். இவன் கயத்தாறு பகுதியின் அரசனான வெட்டும் பெருமாள் என்பவனுடன் கூட்டு சேர்ந்து கொண்டு, மீண்டும் பாண்டிய அரசனுக்குரிய பல பகுதிகளைக் கைப்பற்றி இருந்தான். தற்போது விஜயநகரின் அரசராக சதாசிவராயர் இருந்தார். ஆனால் உண்மையான ஆட்சியாளராக இராமராயர் இருந்து வந்தார். எனவே தென்னகத்தில் மீண்டும் அமைதி ஏற்படுத்தும் பொருட்டு சின்ன திருமலை, வித்தலராயர் என்ற இருவரின் தலைமையில் ஒரு பெரும்படையை ராமராயர் அனுப்பி வைத்தார். விஜயநகரப் படைகள் புவனகிரி வழியாக தெற்கு நோக்கிச் செல்லும்போது புவனகிரியையும் தாக்கி அதனையும் கைப்பற்றிக்கொண்டது. பின்னர் கலகக்காரர்களுக்கெதிராக நடைபெற்ற பெரும் போரில் பேரரசுப்படைகள் வெற்றி வாகை சூடியது. வித்தலராயர் திருச்செந்தூரில் தங்கி இருந்தபோது போர்த்துக்கீசியர்கள் அப்பகுதி குடிமக்களை அச்சுறுத்தி மிரட்டினார்கள் என்பதைக் கேள்விப்பட்டு அப்பகுதி போர்த்துக்கீசியர்களைக் கடுமையாகத் தண்டித்தார். மீண்டும் பாண்டிய மன்னன் அரியணை அமர்த்தப்பட்டான்.

ஆயினும், 1548இல் மீண்டும் பேரரசு படைகளுக்கெதிராக திருவிதாங்கூர் படைகள் போரிட்டன; அப்போரில் வித்தலராயர் உயிரிழந்தார். அது முதல் விஜயநகரின் அதிகாரத்தில் இருந்து திருவிதாங்கூர் விடுபட்டது. தென்னகத்தின் பிற பகுதிகள் மதுரை நாயக்கர்களின் ஆளுகைக்குட்பட்டது.

### மதுரை நாயக்கர்கள்

மதுரை நாயக்கர்களின் ஆட்சிக்கு எப்போது அடித்தளமிடப்பட்டது என்பதில் வரலாற்றறிஞர்களிடையே பெரும் கருத்து வேறுபாடு நிலவுகிறது. இதுபற்றி பல்வேறு வரலாற்றறிஞர்கள் பல்வேறு காலகட்டங்களைத் தங்களுக்கு ஆதாரமாகக் கொண்டுள்

ளனர். சில வரலாற்றறிஞர்கள் விஜயநகரப்பேரரசின் பிரதிநிதியாக நாகமநாயக்கர் மதுரையில் நாயக்கர் ஆட்சி ஏற்படக் காரணமாய் இருந்தது என்கின்றனர். வேறு சில வரலாற்று ஆய்வாளர்கள் நாகமநாயக்கரின் மகன் விஸ்வநாத நாயக்கர் மதுரையின் ஆளுநராக விஜயநகரப் பேரரசரால் நியமிக்கப்பட்டது முதல் கணக்கிடுகின்றனர். இக்கருத்தினைக் கூறும் வரலாற்று எழுத்தாளர்கள் நாயக்கர்கள் அரசியல் துறைக்கும் ஆட்சித்துறைக்கும் தலைவர்களாக கி.பி. 1529இல் நியமிக்கப்பட்டதை, ஆதாரமாகக் கொள்கின்றனர். R. சத்தியநாதய்யர் இதே கருத்தினைக் கூறியுள்ளார்.

பேரரசர் கிருஷ்ணதேவராயர் அவையில் நாகமநாயக்கர் பெரும் புகழ்மிக்க அலுவலராக இருந்தார். அவரது தனிச்சிறப்புகளைக் கண்ணுற்ற பேரரசர் கிருஷ்ணதேவ ராயர் தமது பேரரசின் தென்பகுதிகளைக் கண்காணிக்கும் பொருட்டு தமது பிரதிநிதியாக (agent) நாகமநாயக்கரை மதுரையில் நியமித்தார். அக்காலத்தில் தென்னகத்தில் இருந்த சூழ்நிலை நாகமநாயக்கர் தம் அதிகாரத்தை மேலும் நிலைநிறுத்திக் கொள்ள உதவியது. அதாவது அந்நேரத்தில் சோழர் தலைவன் ஒருவன் பாண்டிய நாட்டின் வடபகுதியைக் கொள்ளையடித்தான்; இதனால் பாண்டிய அரசன் பேரரசரிடம் முறையிட, பேரரசர் நாகமநாயக்கரை அனுப்பி பாண்டியனுக்கு உதவினார். சோழனை எளிதில் விரட்டி அடித்தார். பின்னர் நாகமநாயக்கர் பேரரசரின் அதிகாரம் தென்னகத்தில் நல்ல முறையில் நிலைநாட்ட, பாண்டிய அரசனையும் பதவி நீக்கிவிட்டு தனது அதிகாரத்தைப் பெருக்கிக் கொண்டான். பின்னர் கிருஷ்ணதேவராயருக்கெதிராக திரும்பினான். இச்சமயத்தில்தான் நாகமநாயக்கரின் மகன் விஸ்வநாத நாயக்கர் தமது தந்தைக்கு எதிராகவும் பேரரசருக்கு ஆதரவாகவும் நடந்துகொண்டு கலகத்தை அடக்கினான். இதன்பிறகு விஸ்வநாதனை, பேரரசின் மதுரை பிரதிநிதியாக கி.பி. 1529இல் கிருஷ்ணதேவராயர் நியமித்தார்.

விஸ்வநாதரின் ஆட்சியில் மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, திருச்சி, கோயம்புத்தூர், சேலம், திருவாங்கூர் பகுதிகள் அடங்கியிருந்தது. அவர் மதுரை, திருச்சி நகரங்களின் பாதுகாப்பைப் பெருக்கினார். கோயில்களையும் புதுப்பித்தார். மக்கள் ஆதரவினைப் பெறும் முகத்தான், பொதுநலத்திட்டங்களை ஆரம்பித்தார். பாளையங்கள் முறையைப் புகுத்திப் பேரரசின் அதிகாரத்தை மேலும் பெருக்கிக்கொண்டார். நாட்டில் புதிதாக 72 பாளையங்கள் ஏற்படுத்தி, அவைகளை பாளையக்காரர்கள் என்னும் அதிகாரிகளின் கீழ் கொண்டு வந்தார். ஓரளவு படைசார்ந்த நிலமானிய முறையை ஏற்படுத்தி பேரரசின் அதிகாரத்தினை தமது பகுதிகளில் செயலாக்கினார்.

நமக்குக் கிடைத்துள்ள சான்றுகளிலிருந்து விஸ்வநாத நாயக்கர் ஓர் உண்மையான ஊழியனாக சதாசிவராயருக்கும் ராமராயருக்கும், தமது வாழ்வின் இறுதிவரை பணியாற்றி வந்தார் என்பது தெரிகிறது. பேரரசின் ஆணைகளை மிகவும் உண்மையுடன் நிறைவேற்றிய தோடு ராமராஜ வித்தலரின் தென்னகப் படையெடுப்பின்போது முழு ஆதரவு நல்கினார். அவரது எல்லா செயல்களிலும் அவருக்கு அரியநாத முதலியார் என்பவர் உதவியாக இருந்தார்.

விஸ்வநாத நாயக்கர் 1564இல் இறந்தபோது அவரது வாரிசாக அவரது மகன் கிருஷ்ணப்ப நாயக்கர் பதவி ஏற்றார். இவ்வாறு ஆளுநர் பதவி பரம்பரை உரிமையாயிற்று. மதுரை மேலும் ஓரளவு சுதந்திர நாடாக ஆயிற்று. கிருஷ்ணப்ப நாயக்கர் பதவி ஏற்ற

நேரத்தில் சில பாளையக்காரர்களால் நாட்டில் கலகம் ஏற்பட்டது. அந்த நேரத்தில் அரியநாதர் பேரரசுப் படைகளுக்கு ஆதரவாக தலைக்கோட்டைப் போரில் பங்கேற்பதற்காக ஒரு படையுடன் வடக்கு நோக்கிச் சென்றார். கலகத்தை முன்னின்று நடத்தியவன் தும்பிச்சி நாயக்கன் என்ற தொட்டியத் தலைவனாவான். கலகத்தை அடக்கப் பேரரசுப் படைக்குத் தலைமை தாங்கிச் சென்ற பெத்த கேசவப்பநாயக்கனைக் கலகக்காரர்கள் வென்றனர். ஓர் படை அனுப்பப்பட்டது. இப்படை கலகக்காரனான தும்பிச்சி நாயக்கரைத் தோற்கடித்து சிரச்சேதம் செய்தது. கலகம் முழுவதுமாக அடக்கப்பட்டது.

கிருஷ்ணப்ப நாயக்கரின் இரண்டாவது வெற்றிச் செயல் யாதெனில் இலங்கையின் மீது படையெடுத்து, கண்டியின் ஆட்சியாளனை வெற்றி கொண்டது ஆகும். ஆனால் இது நம்பத் தகுந்த செய்தியாயில்லை. காரணம் இலங்கை வரலாற்றுச் செய்திகளைத் தொகுத்துக் கூறும் மகாவம்சம் என்ற நூலில் இதுபற்றிய செய்தி காணப்படவில்லை. கிருஷ்ணப்ப நாயக்கர் சதாசிவர், ராமராயர் போன்றோர்களுக்கு உண்மையாக உள்ள குறுநில ஆட்சியாளராக விளங்கினார். திருவாங்கூருக்கு எதிராக வித்தலராயர் படையெடுத்தபோது அவருக்கும் கிருஷ்ணப்ப நாயக்கர் பெரிதும் உதவினார். நலம்சார்ந்த நல்லாட்சியை மக்களுக்கு வழங்கினார். கிருஷ்ணாபுரம் என்ற புதிய நகரை நிர்மாணித்தார். பல அழகிய கோயில்களைக் கட்டினார். கிருஷ்ணப்ப நாயக்கருக்குப் பிறகு அவர் மகன் வீரப்பநாயக்கர் பதவி ஏற்றார்.

## செஞ்சியை ஆண்ட நாயக்கர்கள்

குமாரகம்பணரின் காலத்தில் இருந்தே தொண்டை மண்டலப் பகுதிகளின் தலைநகர்களில் ஒன்றாக செஞ்சி விளங்கியது. ஆனால் கிருஷ்ணதேவராயர் காலம் தொட்டு செஞ்சியில் நாயக்கர் முறை நிரந்தரமாக ஏற்படுத்தப்பட்டது. பேரரசர் கிருஷ்ண தேவராயர் காலத்தில் தொண்டை மண்டலம் பல குறுநில அரசுகளாகப் பிரிக்கப்பட்டது. ஆனால் அந்த குறுநில மன்னர்கள் பேரரசரின் தலைமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். எனவே பேரரசர், வையப்ப நாயக்கர் என்பவர் தலைமையில் ஒரு படையை அனுப்பி அந்த குறுநில மன்னர்களை அடக்க நினைத்தார். வேலூரின் அருகில் பேரரசின் படைகள் முகாமிட்டிருந்தன. இதைக் கேள்வியுற்ற அக்குறுநில மன்னர்கள் பேரரசர் கிருஷ்ணதேவராயருக்கு அடிபணிந்தனர். மேலும் திறை செலுத்தவும் ஒப்புக்கொண்டனர். இந்நிகழ்ச்சிக்குப்பிறகு தொண்டைமண்டலத்தில் நாயக்கர் முறை ஏற்படுத்தப்பட்டு செஞ்சி அதன் தலைநகராக்கப்பட்டது. விஜய நகர ஆட்சியின் போதிருந்த அதிகாரப்பரவல் முறையைவிட புதிய நாயக்கர் ஆட்சி முறை மேலும் சிறந்து விளங்கியது. இப்புதிய முறையைப் புகுத்தியவர் செஞ்சியை ஆண்ட வையப்ப நாயக்கர் ஆவார். இவர் வடஇந்தியாவில் மணிநகபுரத்தில் காஸ்யப்ப குலத்தைச் சார்ந்த சின்னதிம்ம நாயக்கரின் மகனாவார். இவர் 1526 முதல் 1541 வரை பதவி வகித்தார். இவர் இந்து கோயில்களுக்கு பெரும் நன்கொடைகள் வழங்கினார். இவருக்குப் பிறகு அவர் மகன் கிருஷ்ணப்ப நாயக்கர் என்ற துப்பாக்கி கிருஷ்ணப்ப நாயக்கர் பதவி ஏற்றார். இவர் 1541 முதல் 1554 வரை ஆட்சி செய்தார். கிருஷ்ணப்ப நாயக்கருக்குப் பிறகு சூரப்ப நாயக்கர் பதவிக்கு வந்தார். இவர் 1554 முதல் 1567 வரை ஆட்சி செலுத்தினார். இவர் காலத்தில்

தான் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தலைக்கோட்டைப் போர் நடந்தது. பாவன புருஸோத்தமா என்ற நூலை எழுதிய ஆசிரியர் சூரப்பாவிற்கு 'கர்நாடக சிம்ஹாசன் பிரதிஷ்ட பனஆச்சார்யா என்ற பட்டத்தை வழங்கினார். அ. கிருஷ்ணசாமி இதுபற்றிக் குறிப்பிடுகையில் இந்தப் பட்டம் சூரப்ப நாயக்கர்; தலைக்கோட்டை போரில் தமது பங்கினை நிறைவேற்றிய பிறகு மேற்கொண்டதாகும் என்கிறார். சூரப்ப நாயக்கருக்குப் பிறகு கிருஷ்ணப்ப நாயக்கர் கி.பி. 1567இல் பதவி ஏற்று 1575 வரை ஆண்டார்.

### தஞ்சை நாயக்கர்கள்

கிருஷ்ணதேவராயருக்கு வாயில்காப்போனாக திம்மப்ப நாயக்கர் இருந்தார். பின்னர் இவர் தொண்டைமண்டலத்தின் ஒரு பகுதிக்கு அமர நாயக்கராக நியமிக்கப்பட்டார். அவர் மகன் சேவப்பா என்பவர் அச்சுதராயருக்கு வெற்றிலை தருபவராக பணியாற்றினார். பின்னர் அச்சுதராயர் தஞ்சைப் பகுதியை சேவப்பநாயக்கருக்கு சீதனமாகக் கொடுத்தது முதல் தஞ்சை நாயக்கர் முறை ஏற்பட்டது. சேவப்பாவின் மனைவியான மூர்த்தி யம்பா என்பவர் அச்சுதராயரின் மனைவி வரதாம்பாவின் சகோதரியாவார். இதைப்பற்றிக் குறிப்பிடும் நூல், தஞ்சாவூர் ஆந்திர ராஜுலு சரித்திரம் ஆகும். ஆனால் சாகித்யரத்னாகர என்ற பிறிதொரு நூல் சேவப்ப தமது திறமையால் தஞ்சை ஆட்சியை கைப்பற்றினார் என்கிறது. சேவப்ப நாயக்கருக்குப்பிறகு அவர் மகன் அச்சுதப்ப நாயக்கர் பதவிக்கு வந்தார். இவர்கள் ஆட்சி 1523 முதல் 1600 வரை தஞ்சையில் இருந்தது. இந்த அச்சுதப்பரின் ஆட்சியின்போதுதான் தலைக்கோட்டைப்போர் நிகழ்ந்தது. தஞ்சை நாயக்கர்கள் விஜய நகரப் பேரரசருக்கு மிகவும் உண்மையுடன் நடந்து கொண்டார்கள்.

தலைக்கோட்டைப் போர் விஜய நகரப் பேரரசின் உன்னத காலத்தில் ஏற்பட்டது. 1565க்குப் பிறகு விஜய நகரம் தனது அத்தனை சிறப்புக்களையும் இழந்தது. எனினும் 1616இல் தோப்பூர் போர் வரை விஜய நகரத்தின் ஆட்சி நடைபெற்றது. ஆரவிடு மரபைச் சார்ந்த ஆட்சியாளர்கள் பின்னர் தங்கள் தலைநகரத்தை விஜயநகரத்திலிருந்து பெனுகொண்டாவிற்கும் பின்னர் முறையே சந்திரகிரி. வேலூர் போன்ற இடங்களுக்கும் மாற்றினர். இப்படி 1565க்குப் பிறகு தமிழகம் விஜயநகர ஆட்சியில் முக்கியத்துவம் பெற்றது. முதலாம் ஸ்ரீரங்கன், முதலாம் வெங்கடர் இன்னும் சொன்னால் ராமதேவராயர் ஆகியோர் காலத்திய கல்வெட்டுக்கள் அவர்கள் ஆட்சி தமிழகத்திலும் பரவி இருந்ததாக குறிப்பிடுகின்றன.

## ஆட்சிமுறையும் சமுதாயமும்

விஜயநக்ரப் பேரரசு தென்னகத்தை முஸ்லீம்களின் தாக்குதல்களில் இருந்து காத்து இந்து கலாசாரம், பண்பாடு முதலியவற்றிற்கு முஸ்லீம்களால் ஏற்படவிருந்த பெரும் இடர்ப்பாட்டினைத் தடை செய்தது. பேரரசர்கள் ஆளுநர்களின் துணை கொண்டே இதனைச் செய்து வந்தனர். இனி அவர்களது ஆட்சிமுறையையும் அக்காலச் சமுதாய முறையையும் பற்றி இப்பாடத்தில் நோக்கலாம்.

### மத்திய அரசாங்கம்

விஜயநகர ஆட்சியின் பல்வேறு பிரிவுகளை ஆராயுமுன் மத்திய அரசின் அமைப்பினை முதலில் காணலாம். மத்தியகால ஐரோப்பாவில் நிலமானியமுறை

எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட்டதோ அது போலவே அக்காலத்தை நாம் மனதில் கொண்டு நோக்கும்போது வலிமை மிக்க மத்திய அரசு மிகவும் தேவையான ஒன்றாக விளங்கிற்று. அரசன் தேசிய ஒற்றுமையின் சின்னமாக விளங்கினான். மேலும் ஆட்சி இயந்திரத்தின் இயக்க மையமாக விளங்கினான். ஆயினும் அவன் ஏக உரிமை பெற்ற வல்லாட்சியாளராக இருக்கவில்லை. மாறாக சில பழக்கவழக்கங்கள், மரபுகள் அவன் செயல்களைக் கட்டுப்படுத்தி வந்தன. வரிவிதிப்பு முறைகளும் கூட சில பழக்கங்களைக் கொண்டே விதிக்கப்படுவதாய் அமைந்தன. மத்திய அரசு பல துறைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு துறையையும் கண்காணிக்க அரசு வழிவந்த அதிகாரிகள் இருந்தனர். தலைமைச் செயலகம் சிறப்பான முறையில் அமைக்கப்பட்டிருந்தது. மேலும் அது அரசு மாளிகையிலேயே செயல்பட்டு வந்தது. நாட்டின் முக்கிய அதிகாரிகள் தலைமை அமைச்சர், தலைமைக் கருவூலத்தார் பேரரசுக்குரிய ஆபரணங்களைப்பாதுகாப்பவர், காவல்துறையினர் முதலியோராவர்.

## மாநில அரசாங்கங்கள்

விஜயநகர ஆட்சியாளர்கள் தமிழகத்தை ஐந்து ராஜ்யங்களாகப் பிரித்திருந்தனர். அவை முறையே சந்திரகிரி ராஜ்யம், திருவதிகை ராஜ்யம், சோழ ராஜ்யம், படைவீடு ராஜ்யம், மதுரை ராஜ்யம், அல்லது பாண்டிய ராஜ்யம் என்பனவாகும். தென்காசி பாண்டியர்களும், திருவாங்கூர் ஆட்சியாளர்களும் பேரரசருக்கு திறை செலுத்திவந்த குறுநில மன்னர்களாக விளங்கினர். மேற்கூறப்பட்ட ஐந்து ராஜ்யங்களும் விஜயநகரப் பேரரசின் படிப்படியான விரிவை ஒட்டி ஏற்பட்டது. எனவே ஒவ்வொன்றும் பரப்பளவில் வெவ்வேறாகக் காணப் பட்டது. இவைகள் சோழர்காலத்திய மண்டலங்களைவிட மிகவும் பரப்பில் குறைந்து காணப்பட்டன. அவைகள் மீண்டும் வளநாடுகளாகவும், வளநாடுகள் நாடுகளாகவும் பகுக்கப்பட்டன. இவைகள் சில நேரங்களில் குரம் அல்லது கொட்டம் என்றழைக்கப் படுவதும் உண்டு, நாடு என்பது 50 கிராமங்கள் சேர்ந்த ஒன்றாகும். கிராம ஆட்சியைச் சிறப்பாக நடத்தும் பொருட்டே இவைகள் ஏற்படுத்தப்பட்டன. இவைகளை ஐம்பதின் மேலகரம் என்பர். ஒவ்வொரு ஐம்பதின் மேலகரத்திற்கும் ஒரு தலைமை கிராமம் உண்டு, உத்திரமேரூர் போன்ற சில கிராமங்கள் தனியூர் என்றழைக்கப்படுவதுண்டு. ஆயினும் தனியூர் என்று அழைக்கப்பட்டதற்கான காரணம் தெளிவாகத் தெரியவில்லை.

ராஜ்யங்களில் ஆட்சி மகாமண்டலேஸ்வரர்கள் என்ற ஆட்சியாளர்களால் ஆட்சி செய்யப்பட்டது. இவர்களைப் பேரரசர் நியமிப்பார். பெரும்பாலும் மகாமண்டலேஸ்வரர்கள் அரச குடும்பத்தில் இருந்தே நியமிக்கப்பட்டனர். அந்த உயர் அதிகாரிகள் தற்காலத்தில் மகாணங்களில் ஆளுநர்கள் மேற்கொள்ளும் அலுவல்களை மேற்கொண்டு வந்தனர். அவர்களுக்கு ஆட்சியில் உதவ மகா பிரதானி, தண்டநாயக்ர் என்ற இரு உயர் அதிகாரிகள் இருந்தனர். இந்த அலுவலர்களைப்பற்றி சில இடங்களில் கல்வெட்டுக்களில் காணமுடிகிறது. அவர்களது கடமைகள் இவை என வரையறுக்கப் படவில்லை. ஆயினும் மகாபிரதானி என்பவர் ஆட்சி அலுவலராகவும் தண்ட நாயக் என்பவர் இராணுவத்துறையைக் கவனித்து வந்ததாகவும் கருதுகின்றனர். இவர்களைத் தவிரவும் ஏராளமான சிறு அலுவலர்கள் இருந்திருக்கின்றனர். அவர்கள் கண்காணிகள், வாசல் கருணீகள் முதலியோராவர். மாநில அலுவலர்களின் அதிகாரங்கள் அவர்களுக்கு

அரசவைக்குடும்பத்தினர்களுடன் உள்ள தொடர்பைப் பொறுத்து வேறுபட்டிருந்தது. குமாரகம்பணர், விருப்பணர் போன்ற இளவரசர்கள் தங்கள் அதிகார எல்லைக்குள் மிகச்சிறந்த முறையில் அதிகாரம் செலுத்தினர் என்றறியமுடிகிறது. அவர்கள் தனி நாணயங்கள் வெளியிடவும், புதிய வரிகள் விதிக்கவும் உரிமை பெற்றிருந்தனர். சட்டம் ஒழுங்கு நிலைநாட்டல், நீதி வழங்கல் முதலியவற்றைப் பொறுத்த வரையில் அவர்கள் பகுதிகள் மட்டில் பேரரசருக்குமிகவும் பொறுப்பு மிக்கவர்களாக இருந்தனர்.

## தமிழகத்தில் நிலமானிய முறை – நாயங்கார முறை

நாட்டின் ஆட்சியாளரே நிலத்தில் உரிமையாளர் என்ற முறை உண்மையில் செயல்பட்டது. விஜயநகரின் கீழ் தமிழகத்தில், வெளி ஆட்சியாளர்களான சங்கம வமிசம், துளுவ வமிசம் முதலியவற்றில் ஆட்சி இங்கு ஏற்பட்டபோது அவர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள மக்களைக் கொண்ட ஓர் அமைப்பு தேவைப்பட்டது. அவர்கள் போரின் போது அரசருக்கு உதவினர். இதற்காக அவர்களுக்கு நிலம் வழங்கப்பட்டது. அரசனிடம் இருந்து இம்முறையில் நிலம் பெற்றவர்கள் அமர நாயக்கர்கள் என்றழைக்கப் பட்டனர். அவர்கள் பகுதி அமரம் என்றழைக்கப்பட்டது. இந்த அமர நாயக்கர்கள் அரசனுக்கும், விவசாயிகளுக்கும் இடையில் தொடர்பு ஏற்படுத்துபவர்களாவர். அவர்கள் போரின்போது அரசனுக்கு குறிப்பிட்ட அளவு காலாட்படை, குதிரைப்படை, யானைப் படை முதலியவற்றைத் தந்து உதவ வேண்டும். ஒவ்வொரு நாயக்கர்களும் மேற்கொண்ட முக்கிய கடமையாக இது கருதப்பட்டது. அரசனிடம் இருந்து பெற்ற நிலங்களுக்காக ஒரு குறிப்பிட்ட வரியை இந்த நாயக்கர்கள் அரசனுக்கு ஆண்டுதோறும் செலுத்த வேண்டும். மேலும் குறிப்பிட்ட நாட்களில் அரசனுக்கு விலைமதிப்பு மிக்க பரிசுப்பொருட்களை அவர்கள் செதுத்த வேண்டும். இத்தகைய நாயங்கார முறை என்று வழங்கப்பட்ட நிலமாினிய முறை, குமார கம்பணர் தமிழகத்தைத் தாக்கும்போது தமிழகத்திலும் நிலவிவந்தது.

இனி மகாமண்டலேஸ்வரர்களுக்கும், நாயக்கர்களுக்கும் இடையே நிலவிய உறவுமுறையை நோக்கலாம். மகாமண்டலேஸ்வரர்கள் ராஜ்யத்தில் அரசப் பிரதிநிதிகளாக விளங்கினார்கள். ஆனால் நாயக்கர்கள் அரசருக்கு இராணுவ உதவி புரிபவராகக் காணப்பட்டனர். இவர்கள் தங்கள் அதிகார எலலைக்குட்பட்டு ஒருவருக்கொருவராக அரசருக்கு உதவிசெய்தனர். பேரரசர் கிருஷ்ணதேவராயர் காலத்திலிருந்து தென்னகத்தில் குறிப்பாக செஞ்சி, தஞ்சை, மதுரை போன்ற இடங்களில் மூன்று பெரும் நாயக்கர் முறை ஏற்படுத்தப்பட்டது. மகாமண்டலேஸ்வரர்களின் ராஜ்யங்களும் அமர நாயக்கர்களின் கீழ் நாயக்கர் முறையில் ஏற்படுத்தப்பட்டது. இந்த அமரநாயக்கர்களுக்கு உதவியாக துணை நாயக்கர்கள் இருந்தார்கள். இவர்கள் பாளையக்காரர்கள் எனப் பட்டனர். இந்த பாளையக்காரர்கள் நாயக்கர்கள் மூலமாக மத்திய அரசுப் போர்ப்படை வீரர்களாக அனுப்பி வைக்க வேண்டும். பாளையக்காரர்களின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகள் பாளையங்கள் என்றழைக்கப்பட்டன. ஏறத்தாழ 72 பாளையங்கள் மதுரையில் ஏற்படுத்தப்பட்டதாக அறிகிறோம். விஸ்வநாத நாயக்கர் தான் பாளையங்கள் முறையை ஏற்படுத்தினார். அவர்காலம் தொட்டு தல ஆட்சியில் பாளையங்கள் முக்கிய பங்கு வகிக்கலாயின. இந்தப் பாளையங்களின் வேலை என்னவெனில் உள்நாட்டு வெளிநாட்டு

குழப்பங்கள், தாக்குதல்களிலிருந்து பாளையங்களைப் பாதுகாப்பதுடன், பாளையக் காரர்கள் ஓரளவு இராணுவ, காவல், வருமானம் வரிவிதிப்பு அதிகாரங்களைக் கொண்டு விளங்கினார்கள்.

## தல ஆட்சி நிறுவனங்கள்

விஜயநகர காலத்தைச் சார்ந்த கல்வெட்டுக்களை நன்கு அலசி ஆராயும்போது அவர்கள் காலத்திய தல ஆட்சி மன்றங்களான சபா, ஊர், நாடுபற்றி தெளிவாக அறியமுடிகிறது. 1336 முதல் 1500 வரை உள்ள காலத்தைச் சார்ந்த 616 கல்வெட்டுக் களில் 45 கல்வெட்டுக்கள் மட்டுமே அவர்கள் காலத்திய ஊர், சபா, நாடு முதலிய வற்றைப்பற்றி அறிந்து கொள்ள நமக்குத் துணைபுரிகின்றன. இதிலிருந்து விஜயநகர ஆட்சிகாலத்தில் தல ஆட்சி நிறுவனங்கள் படிப்படியாக தங்கள் மதிப்பை இழந்து வந்தன என்று அறியமுடிகிறது. அதற்கான காரணங்கள் தெரியாமல் இல்லை. தமிழக ஆட்சியை கவனித்துக்கொள்ளும் பொருட்டு பேரரசர்களாக தமிழகத்திற்கு அனுப்பப் பட்ட மகாமண்டலேஸ்வரர்களும், நாயக்கர்களும் தமிழக மக்களின் பிரதிநிகள் அல்லர். அவர்கள் தெலுங்கு மொழி பேசிய ஆட்சியாளர்களின் ஏவலர்களாக விளங்கினார்கள். மேலும் தமிழகப் பண்பாட்டினைப்பற்றி அதிக அக்கறை கொள்ளாதவர்களாயும் விளங்கினார்கள். எனவே அவர்கள் தமிழக மன்னர்களான, சோழ, பாண்டிய அரசர்களால் பெரிதும் போற்றிச் சிறப்பிக்கப்பட்டதோடு பாதுகாக்கப் பட்டும் வந்த தல ஆட்சி நிறுவனங்களான ஊர் சபாவைப்பற்றி சிறிதுகூட அக்கறையற்றவர்களாக இருந்தனர். மேலும் தெலுங்கர்கள் தமிழகத்தில் புதிதாக ஏற்படுத்தியிருந்த நாயங்கார முறை, ஆயகார் முறை போன்றவற்றாலும் தமிழர்களின் தல ஆட்சி நிறுவனங்கள் தங்கள் சிறப்பை இழக்கவேண்டியநிலை ஏற்படலாயிற்று.

## ஆயகார் முறை

கிராம ஆட்சியில் ஆயகார் முறை மிகவும் முக்கியமானதொரு அமைப்பாகும். இதன்படி ஒவ்வொரு கிராமமும் ஒரு தனிப் பகுதியாகக் கருதப்பட்டது. அதன் முக்கிய அலுவல்கள் 12 பேர் கொண்ட ஒரு குழுவால் நடத்தப்பட்டன. அவர்கள் ஆயகார் என்று பொதுவாக அழைக்கப்பட்டனர். இத்தகைய முறையின் தோற்றத்தைக்கண்டு பிடிப்பது எளிதான காரியமன்று. இந்த ஆயகார்கள் மாநில அரசின் பிரதிநிதிகளாக விளங்கினார்கள். முதல் மூன்று பேரும் அரசால் நியமிக்கப்பட்டனர். அவர்கள் 1 கர்ணம் 2 தலையாரி 3 மணியகார். கர்ணம் என்பவர் கிராமத்தின் வருமான கணக்குகளை வைத்துக் கொள்வார். அவருக்கு உதவியாக மணியகாரர் இருப்பார். இவரின் முக்கிய வேலை யாதெனில் அரசின் நிலவரி வசூலிப்பதாகும். தலையாரி என்பவன் பணியாள் ஆவான். அவன் ஊர்க்காவல் பணியும் புரிந்து வந்தான். அவன் தமிழகத்தில் வெட்டியான் என்றழைக்கப்பட்டான். பிற அலுவலர்கள் அரசு அதிகாரிகளல்லர். அவர்கள் ஊதியந்தரும் வாழ்க்கைத் தொழிலாளர்களான புரோகிதர்கள் பொற்கொல்லர் குடிநீர் வழங்குபவர், கருமான் அல்லது கொல்லன், தச்சன், குயவன், வண்ணான், அம்பட்டன், செம்மான் முதலானோர்களாவர். அவர்களுக்கு அரசிலிருந்து எவ்விதமான ஊதியங்களும் வழங்கப்படவில்லை. ஆனால் அவர்களுக்கு அவர்களின் வேலையைக் கருத்தில் கொண்டு வரி விதிக்கப்படாமல் நிலங்கள் வழங்கப்பட்டன. அதற்கு மான்யங்கள் என்று பெயர்.

பேரரசர்களும், மாநில ஆளுநர்களும் நாணயங்கள் வெளியிடும் உரிமை பெற்றிருந்தனர். தமிழக மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களுக்கும், விஜயநகர ஆட்சியாளர்கள் வெளியிட்ட நாணயங்களுக்கும் பெரும் வேறுபாடு காணப்படுகிறது. விஜயநகர ஆட்சியாளர்கள் மிகவும் நேர்த்தியான முறையில் சிறந்த நாணயங்களாக வெளியிட்டனர். அவர் காலத்தில் விஜய நகரப் பேரரசில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட வெளிநாட்டினர்களான பார்போசா போன்றோர் விஜயநகர அரசர்களின் இந்தச் செயலைக் கண்டு வியந்து போற்றினார்கள் என்பதை அறிய முடிகிறது.

## கோயில் ஆட்சிமுறை

தென்னிந்தியக் கோயில்கள் இந்து கலாசாரம், பண்பாடு இவற்றை எடுத்தியம்பும் கலைக் கூடங்களாக இன்றும் விளங்குகின்றன. இடைக்காலத்தில் ஏற்பட்ட முஸ்லீம் ஆட்சியாளர்களின் தலையீடுகள் தென்னகக் கலைக் கோயில்கள் பண்டைக்காலம் முதல் மேற்கொண்டிருந்த ஆட்சி முறைக்குத் தடை ஏற்படுத்தி சிதைவுறச் செய்தன. இந்து தர்மத்தின் காவலர்களாக விளங்கிய விஜய நகரப் பேரரசர்கள் கோயில் வழிபாட்டு முறையை மீண்டும் சிறப்பாகக் கொண்டு வந்ததோடு பழுதடைந்த பழைய கோயில்களைப் புதுப்பித்து அத்துடன் கோயில் ஊழியர்களிடையில் ஏற்பட்ட பிணக்குகளையும் தீர்த்து வைத்தனர். பேரரசர்களும், ஆளுநர்களும் கோவில்களுக்கு வேண்டிய பொன்னையும் பொருளையும் நிலங்களையும் பிற தொண்டுகளையும் செய்தனர். கோயில்களுக்குப் பரிசாக அளிக்கப்பட்ட நிலங்கள் தேவதானம் எனப்பட்டது. பெரும்பாலான பழைய கோயில் அதிகாரிகள் பதவி நீக்கப்பட்டனர். அவர்களுக்குப் பதில் புதிய அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். கோயில்களும், அதன் ஆட்சியும் மகாமண்டலேஸ்வரர்களின் நேரடி கண்காணிப்பின்கீழ் கொண்டு வரப்பட்டன.

## சமுதாயம்

விஜயநகர ஆட்சிக் காலத்தில் சமூக அமைப்பைப்பற்றி முழுவதுமாக அறிந்து கொள்ள பின்வரும் காரணங்கள் தடையாய் அமைந்துள்ளன. முதலாவதாக வெளிநாட்டுக் குறிப்புகளோ அல்லது உள்நாட்டுச் செய்திகளோ எதுவுமே மக்களின் நிலைமையைப் பற்றி உண்மையான முறையில் விளக்கவில்லை. மேலும் அக்காலத்தைச்சார்ந்த உள்நாட்டு இலக்கியங்களும் புராண இலக்கியங்களும், பக்திநெறியூட்டுவனவாயும் இருப்பதால் சரித்திர ஆராய்ச்சிக்கு இவை துணைபுரியவில்லை. கடைசியாக வெளிநாட்டினர்கள்கூட தங்கள் குறிப்புகளில் கடற்கரைப் பகுதிகளில் வாழ்ந்த மக்களைப் பற்றித்தான் குறிப்பிட்டு சொல்கிறார்களே தவிர தமிழக மக்களைப்பற்றி குறிப்பாகச் சொல்லவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் மக்களது நிலைமையை அறிந்து கொள்ள, கிடைக்கக்கூடிய ஆட்சி பற்றியதும் ராணுவம் பற்றியதுமான செய்திகளைக்கொண்டு அக்கால அரசியலில் மக்கள் நிலைமையை அறியலாம்.

## நாடும் மக்களும்

தொடக்க காலம் முதலே தென்னிந்தியா கிராமங்கள் நிறைந்ததோர் நாடாக விளங்கி வந்திருக்கிறது. பெரும் பகுதிகளை உள்ளடக்கிய பெரும் கிராமங்கள் நகரம் என்றழைக்கப்

பட்டன. பல்வேறு காரணங்களை முன்னிட்டு இத்தகைய நகரங்கள் பல தென்னகத்தில் தோன்றி இருக்கின்றன. நிருவாகத் தலைமை இருப்பிடத்தை முன்னிட்டும், வாணிபம், வர்த்தகம் இவற்றின் வளர்ச்சியை முன்னிட்டும் சில கிராமங்கள் நகரங்களாக மாறின. சிலநேரங்களில் புதுநகரங்களை அரசர்களே, சில காரணங்களை முன்னிட்டு ஏற்படுத்து வதும் உண்டு. இவ்வாறு ஏற்பட்ட முக்கிய நகரங்களாக காஞ்சிபுரம், நாகப்பட்டினம், தஞ்சாவூர், ஸ்ரீரங்கம், மதுரை, ஸ்ரீவில்லிபுத்தூர், திருநெல்வேலி, இராமேஸ்வரம் முதலியவை விளங்கின.

தென்னகம் முழுவதும் விஜய நகரப் பேரரசின் ஆதிக்கம் பரவியதைத் தொடர்ந்து தென்னகத்தின் ஒரு பகுதியைச் சார்ந்த மக்கள் பிற பகுதிகளுக்குக் குடி பெயர்ந்தனர். கல்விமான்களும், வேதவிற்பன்னர்களும், மதபோதகர்களும் ராயர்களின் உபசரணை களால் கவரப்பட்டனர். எனவே அவர்கள் நிரந்தரமாக தெலுங்கு, கன்னட நாட்டவர்களும் தமிழகத்தில் வந்து குடியேறலாயினர். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் குடியேறியவர்களைச் சார்ந்தவர்களின் உறவினர்களுக்கும் ராயர் நிலங்களை மானியமாக வழங்கினார். இப்படி மக்கள் குடியேறியும் குடிபெயர்ந்தும் கலப்படமான குடி-அமர்ந்ததால் புது சூழ்நிலைகளில் பல ஜாதியினர் குடியேறினர். இப்படியாக தெலுங்கு பேசும் பிராமணர்களான பலிஜா, கம்மா, ரெட்டி முதலானோர் குடியேறினர். இவர்கள் தமிழகத்தைப் பொறுத்த வரையில் அந்நியர்கள் என்றாலும் அவர்களும் தமிழகத்தில் குடிபுகுந்தனர். இவர்களும் பின்னர் புதுசூழ்நிலையுடன் கலந்து விட்டார்கள். இது போலவே பிள்ளைமார்களும், முதலியார்களும், அரவவேலமர் போன்றோர்களும் மேலும் சில பிரிவினருமான தமிழ் பேசும் பிராமணர்கள் தங்கள் பகுதிகளில் இருந்து குடிபெயர்ந்து பேரரசின் வடபகுதிகளில் சென்று நிரந்தரமாகக் குடியேறினர்.

வைதீக இந்துக்களாக பிறந்து வளர்ந்தமையால் விஜயநகர அரசர்களும் முஸ்லீம்களைப் போல் சமயப் பற்று மிக்கவர்களாக இருந்தனர். எனவே சாதி முறையிலும் விடாப்பிடியாக இருந்தனர். சமூகத்தில் பிராமணர்கள் அளவுக்கு மீறிய அளவில் உயர்த்தி வைக்கப்பட்டனர். அவர்களுக்கு அரசில் பல சலுகைகள் தரப்பட்டன. எக்குற்றம் செய்தாலும் மரணதண்டனை போன்ற கடும் தண்டனை அவர்களுக்குத் தரப்படவில்லை. பெரும்பாலானவர்கள் தீவிரமாக அரசியலில் பங்கு கொண்டனர். சிலர் ஆட்சியியலிலும், சிலர் படைத்தலைவர்களாகவும் விளங்கினர். சிலரே கோயிலில் பணிபுரிந்து வந்தனர். கம்மார், பொற்கொல்லர், பித்தளைக்கலம் செய்பவர்கள், தச்சர், சிலை வடிப்பவர்கள் முதலானோர் சமூகத்தின் இரண்டாம் நிலை குடிமக்களாவர் இவர்கள் பஞ்சலோகர் என்றழைக்கப்பட்டனர். பஞ்சலோகர்களின் 72 பிரிவினர் இருந்தனர். சில கல்வெட்டுக்கள், இவர்கள் பல நேரங்களில் சமூக சிறப்புரிமைகளுக்காகவும், பொது விழாக்களிலும், கோயில்களிலும் சிறப்புக்களைப் பெறவும் சண்டையிட்டு வந்ததாக கல்வெட்டுச் சான்றுகள் மூலம் அறிகிறோம். கைக்கோளர் என்ற சமூகத்தினர் மிகவும் செல்வாக்குப் பெற்றிருந்தனர். இவர்கள் பெரும்பாலும் கோயில்களைச் சுற்றியுள்ள இடங்களில் வாழ்ந்து வந்தனர். குமார கம்பணனின் ஆட்சிக் காலத்தில் தமிழகக் கோயில்களைச் சுற்றியுள்ள இடங்களில் வாழ்ந்து வந்தனர். குமார கம்பணனின் ஆட்சிக்காலத்தில் தமிழகக் கோயில்கள் பற்றி அவர் பிறப்பித்த சட்டங்களை கைக்கோளர் திறம்பட நிறைவேற்றவில்லை என்பதையும் அறிகிறோம். நெசவாளர்கள் தம் தொழிலை

சிறிய அளவில் நடத்தினார்கள் அவர்களும் சமுதாயத்தில் பல சலுகைகள் பெற கிளர்ச்சிகள் நடத்தி இருக்கிறார்கள். அம்பட்டர்கள் அரசிடம் பல சிறப்பு சலுகைகள் பெற்றனர். அவர்களுக்கு சில வரிச் சலுகைகள் அரசால் வழங்கப்பட்டிருந்தன. ஆனால் அவர்களுக்கு இச்சலுகைகள் அரசால் வழங்கப்படக் காரணம் என்ன என்பது தெரியவில்லை. தொம்பரர் என்பவர்கள் பொதுவாக கழைக்கூத்தாடிகளாவர். வெளிநாட்டினர்கள் இவர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது சூனியக்காரரர்கள் என்றும், கணியர் என்றும் குறிப்பிடுகின்றனர். இம்மக்கள் விழாக்காலங்களில் பொழுது போக்குக் காட்சிகள் நடத்தி பொதுமக்களை மகிழ்வித்தனர் என்று அறிகிறோம். இம்மக்கள் குடிசைகளில் வாழ்ந்து வந்தனர். பொதுவாக மக்கள் மேற்கொண்டிருக்கின்ற தொழில் அடிப்படையில் இனமாகப் பிரிக்கப்பட்டனர் என்று அறிய முடிகிறது.

## திருமணம் – பெண்களின் நிலை

கன்னிகாதானம் என்ற முறைதான் நாடுமுழுவதும் திருமணம் என்று போற்றிக் கொண்டாடப்பட்டது சீதனம் வழங்கும் முறையும் குழந்தைத் திருமணமும் நாட்டில் இருந்து வந்தன. நிலங்களும், சிலநேரங்களில் கிராமங்களும் சீதனமாகத் திருமணத்தின் போது வழங்கப்பட்டதாக அறிகிறோம். உயர் சாதியினர் என்று கருதபட்டவர்கள் மத்தியில் பலதார மணம் என்ற கொடிய பழக்கமும் காணப்பட்டது என்று தெரிய வருகிறது. நாட்டில் அடிமை முறையும் நிலவியதாக வெளிநாட்டவர்களான அப்துர் ரஸாக், பார்போஸா போன்றவர்களின் குறிப்புகளிலிருந்து தெரிகிறது. மக்கள் பல்வேறு வழிகளில் அடிமைகளாக்கப்பட்டனர். சில் விவரமில்லாத் குடும்பத்தினர் தங்களை மரபுரிமையாக வருகிற அடிமைகளாக விற்றன்ர். கால்நடைகளைப்போல் இவர்களையும் ஒருவர் இன்னொருவருக்கு கைமாற்று செய்யலாம். கடன் பெற்றபின் அக்கடனைத் திருப்பி செலுத்த வழிஇல்லாதவர்களும், கடன் அளித்த பெரும் புள்ளிகளின் அடிமைகளாக ஆக்கப்படுவதும் உண்டு. போரில் சிறைபடுத்தப்பட்ட பிரிவினரும் நாட்டில் அடிமைகளாக்கப்பட்டனர். ஆயினும் பொதுவில் அவர்கள் நல்லமுறையில் நடத்தப்பட்டார்கள் என்று கூறப்படுகிறது. உடன் கட்டை ஏறுதல் அல்லது சதிமுறையும் தமிழர்கள் மத்தில் பொதுவில் நிலவியதாகத் தெரிகிறது. இம்முறைப்படி கணவன் இயற்கையாகவோ அல்லது அகாலமரணமடைந்தாலோ உடனேயே இவனது இளம் மனைவயர் எக்குற்றமும் செய்தறியாத மனைவியர் விரும்பினாலும், விரும்பாமல் இருந்தாலும் கணவனுடன் உயிருடன் கொளுத்தப்பட்டனர். இதனை வேதங்களைக் கற்ற பார்ப்பனர்கள் எனப்படும் புரோகிதர்கள் அதற்கான கூலியை பெற்று முன் நின்று நடத்துவார்கள் ஆயினும் பெண்கள் சமுதாயத்தில் உயர்ந்த நிலையில் இருந்தார்கள் என்றும் அறிகிறோம். அவர்கள் அரசியலிலும், சமூகத்திலும் நல்ல நிலையில் இருந்ததோடு சிறந்த கல்வி கற்றவர்களாகவும் விளங்கி இருக்கிறார்கள். பெண்கள் பொறுப்பு வாய்ந்த பணிகளில் அமர்ந்திருந்ததாக நூனிஸ் என்ற வெளிநாட்டுப்பயணி குறிப்பிடுகிறார். பொது விழாக்களில் பெண்கள் பங்கு ஏற்பது என்பது மிகவும் முக்கியம் என்று கருதப்பட்டிருக்கிறது. மகா நவமி விழாக்களின் போது அழகு நங்கையர் கோயல்களிலும் சிலைகளின் முன்னும் நாட்டியம் ஆடினார்கள் என்றும் அறிகிறோம். இலக்கியத் துறையில் பெண்கள் மிகவும் உன்னதநிலை அடைந்திருந்ததாகவும் தெரிய வருகிறது. குமார கம்பண்ணரின் மனைவியான கங்காதேவி “மதுராவிஜயம்” என்ற சிறந்த

நூலை இயற்றியுள்ளார். குமார கம்பணாவின் தமிழகப் படையெடுப்பைப் பற்றி அவள் கூறியுள்ள செய்திகள் மிகவும் நுண்மையும், தெளிவும் உள்ளவையாகக் காணப்படுகிறது. திருமலாம்பாள் என்பவர் மற்றொரு பெண் புலவர் ஆவார். இவர் வரதாம்பிகா பரிணயம் என்ற நூலை கலைத்திறனோடு மிகவும் சுவைபட எழுதினார். பரத்தையர் தொழில் சட்ட பூர்வமாக்கப்பட்டது. விலை மகளிர் பல சிறப்புக்கள் அரசிடம் பெற்று மேலான நிலையில் இருந்தனர்.

## உணவும் உடையும்

உணவுப் பழக்கங்களைப் பொறுத்தவரையில் மிகவும் கட்டுப்பாடுகள் இருக்கவில்லை. பழங்கள், காய்கள், எண்ணெய், மாமிசம் முதலியனவும் (எருது, பசுவின் மாமிசம் நீங்கலாக) பொதுமக்கள் உண்டு வந்தனர். பார்ப்பனர்கள் சைவ உணவு வகைகளான வெண்ணெய், அரிசி, சர்க்கரை, பால் முதலியவற்றை உண்டனர். பொதுவாக உணவு உண்ண வாழை இலையை மக்கள் பயன்படுத்தினார்கள். அரசனும் அவன் குடும்பத்தினரும் உடைகளுக்கென்று அதிகப்பணம் செலவிட்டதாகக் குறிப்புகளில் இருந்து தெரிகிறது. வேலைப்பாடுகள் நிறைந்த பட்டுத் துணிமணிகளையும் விலை உயர்ந்த ஆடைகளையுமே அவர்கள் பெரும்பாலும் அணிந்தனர். தலையில் குல்லாய் அணியும் பழக்கமும் அவர்களிடம் இருந்தது. பொதுமக்கள் மேலாடையின்றி காணப்பட்டனர். கம்பளி ஆடைகள் குறைந்த அளவிலேயே பயன்படுத்தப்பட்டு வந்தன. உயர்நிலையில் இருந்தவர்களே காலணி அணியும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தனர். பெண்கள் பொதுவாக இரண்டு ஆடைகளை தங்கள் உடலில் கட்டிக் கொண்டனர்.

ஆண்பெண் இருபாலாரும் அணிகலன்கள் அணிவதை பெரிதும் விரும்பினார்கள். எல்லா மக்களும் நகைகளையும், பளபளப்புமிக்க ஆபரணங்களையும் காதுகளிலும், கழுத்திலும் மேற்கைகளிலும் மணிக்கட்டுகளிலும் விரல்களிலும் அணிந்தனர். அழகு மங்கையர்கள் நறுமணப்பொருட்கள், மலர்கள் முதலானவற்றை மிகவும் விரும்பினார்கள். பிரபுக்கள் ஆடம்பரமான படுக்கைகளைப் பயன்படுத்தினர். மக்களின் சமுதாய வாழ்க்கையைப் பற்றி கூறும் போது அவர்களது விளையாட்டுக்கள், பொழுதுபோக்கு அம்சங்கள், திருவிழாக்கள் முதவியவற்றைப் பற்றி குறிப்பிடாமல் இருக்கமுடியாது. மற்போர், காட்சிச் சண்டைகள், வேட்டையாடுதல், குதிரையேற்றம், சதுரங்க ஆட்டம் முதலியன பொது மக்கள் விரும்பிய பொழுதுபோக்கு அம்சங்களாகும். இசை, நாட்டியம் முதலியனவும் நிரந்தர அரங்குகளில் நடத்தப்பட்டு மக்களுக்கு மனமகிழ்வூட்டப்பட்டது. கூத்தாட்டு பொம்மைக் காட்சிகளைப் பொதுவாகக் காணலாம். இசையுடன் கோலாட்டமும், கும்மியும் நடத்தப்பட்டது. தீபாவளி, மகாநவமி, ஹோலி முதலான பண்டிகைகள் மக்களால் பெரிதும் கொண்டாடப்பட்டதாக வெளிநாட்டினர் தங்கள் செய்திகளில் குறிப்பிட்டுச் சென்றுள்ளனர்.

## பொருளாதார நிலை

முற்கால தமிழகத்தின் தன்னிறைவு பெற்ற கிராமங்களே என்றும் தமிழகப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருந்து வருகின்றன. விஜயநகர ஆட்சியாளர்களின்

காலத்தில் தல ஆட்சி முறைகள் ஓரளவு அகற்றப்பட்டன; அரைகுறை நிலமானிய முறை மீண்டும் புகுத்தப்பட்டது. நிருவாக அதிகாரங்கள் ஒருமுகப்படுத்தப்பட்டன. எனினும் மக்களின் பொருளாதார வாழ்க்கை பழமைமுறையைப் போன்றே என்றும் வளர்ச்சியுற முயற்சிகள் செய்யப்பட்டன; கோயில்கள் பொருளாதாரத்தின் மையமாகத் திகழ்ந்தன; கோயில்கள் மக்கள் நல்வாழ்வுக்கு கடன் கொடுக்கும் வங்கிகளாகவும், நிலச்சுவான்தார்களாகவும், தங்களது நிலங்களில் பயிரிட வேலையாட்களை அமர்த்தும் தலைவர்களாகவும் பொருளாதார வாழ்க்கையில் தங்களது பணிகளைச் செய்தன.

## விவசாயம், பண்ணைகள் ஆடுமாடு வளர்த்தல்

இன்றுபோலவே அன்றும் பெரும்பான்மையான மக்கள் தங்கள் வாழ்க்கை நிலைக்காக விவசாயத்தையே நம்பியிருந்தனர். ஆட்சியாளர்களும் விவசாயத்துறையின் முக்கியத்துவத்தை உணர்ந்தே இருந்தனர். ஆளப்படுபவர்களின் நன்மையைக் கருதி அரசர்கள் வேளாண்மையை வளர்த்தனர். பல அணைகளைக் கட்டினர்; கால்வாய்களை வெட்டினர்; இம்மாதிரியான நீர்ப்பாசன வேலைகள் கோயில் நிருவாகிகளாலும் அரசு அதிகாரிகளாலும் நடைமுறைப்படுத்தப்பட்டன. வேளாண்மையில் அரிசி, கரும்பு. காய்கறிகள், பருப்பு வகைகள், பழ வகைகள், நறுமணப் பொருட்கள் ஆகியவற்றை மக்கள் பயிர் செய்தனர். மலபார் பகுதி அங்கு விளையும் நறுமணப் பொருட்களினால் செல்வச் சிறப்புற்றது. இஸ்லாமிய வரலாற்றாளர் இபின் பதுதா மலபார் பகுதியை மிளகு நாடு என வருணிக்கின்றார். ஆனால் விஜயநகர ஆட்சிக் காலத்தில் பயிர் செய்வதற்கு பழைய முறைகளே பின்பற்றப்பட்டன. வேளாண்மை வளர்ச்சியில் விலங்குகளின் பங்கு என்ன என்பது பற்றி அறியத்தக்க சான்றுகள் கிடைக்கவில்லை. ஆனால் கலப்பையின் உபயோகம் அடிக்கடி இலக்கியங்களில் கூறப்படுகின்ற காரணத்தினால் வீட்டில் வளர்க்கும் பிராணிகள் விலங்குகள் ஆகியவை ஏராளமாக இக்காலத்தில் இருந்ததிருக்கக்கூடும் என கருதப்படுகிறது. எருமைகள், எருதுகள், செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள் போன்றவை வளர்க்கப்பட்டுவந்ததாகக் கருதப்படுகிறது. பசுக்களும், நாய்களும் பெரிதும் போற்றிப் பாதுகாக்கப் பட்டன. தாங்கள் வளர்க்கும் பிராணிகளுக்கு உணவு வழங்குவதில் ம்க்கள் பெரும் கவனம் எடுத்துக் கொண்டனர்.

கோயில்கள் ஏற்கனவே கூறியது போல் பொருளாதாரத்தின் மையமாக இருந்த தோடு மட்டுமல்லாமல் கைத்தொழில், சிறுதொழில்கள் போன்றவற்றை வளர்க்கின்ற, ஊக்குவிக்கின்ற ஒரு நிறுவனமாக இயங்கி விளங்கியது. இவ்வாறு நாட்டுப்புற வளர்ச்சிக்கும் கோயில்கள் உதவின. தாம் கொடுத்துதவிய கடன்களை மக்களிடமிருந்து திரும்பப் பெற முடியாத நிலையில் கோயில்கள் கடன்காரர்களிடமிருந்து அவர் தம் நிலங்களை விலைக்கு வாங்கின.

இன்றைக்கு இருப்பது போன்ற பெரும் அளவு பெரிய தொழிற்சாலைகள் விஜயநகர ஆட்சியாளர்களின் காலத்தில் இல்லாதிருந்த போதும் நாட்டு மக்களுக்குத் தேவையான தன் நிறைவுப் பொருட்கள் அக்காலத்தில் உற்பத்தி செய்யப்பட்டு வந்தன. சர்க்கரை, வெல்லம், மண்டசாரி (Mandasari) ஆகிய பொருட்கள் கரும்பிலிருந்து தயாரிக்கப் பட்டன. தேங்காய், எள், ஆமணக்கு விதை ஆகியவற்றின் மூலமாக எண்ணெய்

தயாரிக்கப்பட்டது. குயவர் தொழில் கிராமங்களில் விரிவு படுத்தப்பட்டு வந்தது. பெரும்பான்மையான நாட்டுப்புற மக்கள் மட்பாண்டங்களையே பயன்படுத்தினர், எனினும் இத்தொழல் மக்களின் தலையாயத் தேவைக்கு மேலாக வளர்ச்சியடையவில்லை. புதிய கோயில்கள் கட்டுதல், கோயில்களுக்குத் திருப்பணிகள் செய்தல், நீர்ப்பாசன வசதிகள் செய்தல் ஆகியவை கட்டிடத் தொழில் வளர்ச்சிக்கு துணையாகயிருந்தன. பெரும் கட்டிடங்கள், மண்டபங்கள் கட்டப்பட்டதன் காரணத்தினால் செங்கல், சுண்ணாம்பு உற்பத்தி செய்யும் தொழில்கள் வளர்ச்சியுற்றன. தாமிரத்தினால் செய்யப் பட்ட பல்வகைப்பட்ட பாண்டங்கள் உபயோகத்திலிருந்தன. பொருட்கள் தயாரிப்பதில் யானைத்தந்தமும் பயன்படுத்தப்பட்டது. இதனால் பல்வேறு கைத்தொழில்கள் சிறப்புற்றன. வண்டிகள் பல்லக்குகள் போன்ற போக்குவரத்து சாதனங்கள் மரத்தினால் செய்யப்பட்டன.

விஜயநகர ஆட்சிக் காலத்தில், தமிழகத்தில், பருத்தித்தொழில் மிக முக்கியமானதாக போற்றப்பட்டு வந்தது. ஆடை உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட முறைகள் பற்றியும், ஆடை உற்பத்தி மையங்கள் பற்றியும் அறிந்து கொள்வதற்கு ஓரளவு சான்றுகள் கிடைத்திருக்கின்றன. பருத்தித் தொழில் கான்—பா—மெய் (Kan Pa Mei) என்ற நகரத்தில் பெரும் அளவில் நடைபெற்றதாக குறிப்பிடப்படுகிறது. இந்நகரம் கள்ளிக்கோட்டையிலிருந்து 167 கல் தொலைவில் இருந்ததாகக் கூறப்படுகிறது. எனவே இது தற்கால கோயம்புத்தூராக இருந்திருக்கக்கூடும் என அறியப்படுகிறது. இப்பகுதி மக்களால் ஒரு வகையான ஆடை தயாரிக்கப்பட்டது. தமிழகத்தின் ஆடை உற்பத்தி பன்னாட்டு அளவில் வரவேற்கப்பட்டதால் நாட்டில் ஏராளமான பருத்தி பயிர் செய்யப்பட்டது. ஒரு நாட்டின் வாழ்வும், முன்னேற்றமும் அந்நாட்டின் வணிகத்தைப் பொறுத்தே அமைகிறது என்பது வெள்ளிடை மலை, அரசாங்கத்திற்குத் தேவையான பல சாதாரண ஆடம்பரப் பொருட்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப் பட்டன. இலங்கை, அரேபியா ஆகிய நாடுகள் விஜயநகர ஆட்சிகாலத்தில் தமிழகத்திற்கு யானை, குதிரை ஆகியவற்றை தந்துதவின. அரிசி, சர்க்கரை, வெல்லம், மிளகு, தேங்காய் ஆகிய பொருட்கள் தமிழகத்திலிருந்து அரேபியா, பாரசீகம், ஓர்ம்ஸ் (Ormus) ஆகிய பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. தென்னிந்தியாவிற்கும் குறிப்பாக தமிழகத்திற்கும் இலங்கைக்கும் இடையே நெருங்கிய வாணிபத் தொடர்பு இருந்து வந்தது. உணவுப் பொருட்கள், நறுமணப் பொருட்கள், மூலிகைகள், உலோகப் பொருட்கள்; முதலிய பல பொருட்கள் பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. சோழ மண்டலக் கரையோர வாணிபம் மலபார் பகுதியிலிருந்த இந்து இஸ்லாமிய வணிகர்களால் நடத்தப்பட்டது. எனினும் நாட்டின் பெரும்பான்மையான வாணிபம் போர்ச்சுகீசியர்கள் ஆங்கிலேயர் போன்ற வணிக இனத்தவர்களிடையே சிக்கியிருந்தது.

தமிழக மக்களின் வாழ்க்கைத்தரம் குறித்து கணிப்பது மிகவும் கடினமானது. பல்வேறுபட்ட மக்களின் வாழ்க்கைத்தரம் ஐயத்திற்கு இடமின்றி பல்வேறு நிலைகளிலிருந்தது. அதாவது அனைத்து மக்களும் ஒரேதரமான வாழ்க்கையைப் பெற்றிருக்கவில்லை. பிரபுக்களும், பணம் படைத்த சுவான்தாரர்களும், ஆடம்பரமான, ஊதாரித்தனமான, பொறுப்பற்ற பல செலவினங்களில் ஈடுபட்டனர். ஆனால் அதே நேரத்தில் சாதாரண மக்கள் வறட்சிக் காலத்திலும், பஞ்சகாலத்திலும் அவர்களின் நிலை

மிக பரிதாபத்திற்குரியதாக இருந்தது. இருப்பினும், பொருட்களின் விலை உயரவில்லை. மாறாக பொருட்களின் விலை குறைந்திருந்தது. வாஸ்கோடகாமா, கள்ளிகோட்டையில் ஏராளமான தானியங்களின் விலை குறைந்திருந்ததாகக் குறிப்பிடுகின்றார்.

நிலவரியே முக்கிய வரியாக இருந்தது. இது தவிர, மீன்பிடித்தல், உப்பு தயாரித்தல், துணிகளுக்கு சாயம் தயாரித்தல், மட்பாண்டம் தயாரித்தல் போன்ற தொழில்களுக்கு வரி திரட்டப்பட்டது. விபசாரம் அங்கீகரிக்கப்பட்டு பாதுகாப்புக் கொடுக்கப்பட்டது. இத்தொழிலில் ஈடுபடுபவர்களிடமிருந்து வரியும் திரட்டப்பட்டது. பலபொருட்களுக்கு சுங்க வரியும் விதிக்கப்பட்டது.

**இலக்கியம்**

விஜயநகர ஆட்சியில் தமிழிலக்கியம் பெருமளவு மாறுபட்ட மறுமலர்ச்சியேதும் ஏற்படுத்தவில்லை. ஆனால் இவ்வளர்ச்சி சோழர் கால இலக்கியப்படைப்பின் மறுபதிப்பும் தொடர்ச்சியுமே ஆகும். இதற்கான காரணங்களை ஆராயத் தேவையில்லை. விஜயநகரப் பேரரசர்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆதரவு காட்டவுமில்லை. அதேநேரத்தில் அவ்வளர்ச்சியைத் தடுத்து நிறுத்தவுமில்லை. தமிழகத்தை குமாரகம்பணர் கைப்பற்றிய பின்பு, இந்நாடு முகமதியர்களின் தெய்வ உருவ உடைப்புச் செயல்களிலிருந்து காப்பாற்றப் பட்டது. குமாரகம்பணர் சாம்புவராய இந்து அரசினைத் தகர்த்தாலும், தமிழகத்தில் முகமதியர்களின் ஆட்சியையும் அவர் தம் அட்டூழியங்களையும் அழித்ததை மறக்க முடியாது. குமாரகம்பணாவின் கோவில் ஆட்சி முறை அமைதியையும், சைவவைணவ சமயங்களின் எழுச்சியினையும் ஏற்படுத்தியது. இவ்வாறு சமயப்புத்துயிர்ப்பு ஏற்பட்ட காரணத்தினால் தமிழ் இலக்கியமும் இக்காலத்தில் வளர்ச்சியுற்றது. இவ்விலக்கியங்களில் பெரும்பான்மையானவை சமய இலக்கியங்களாகவே இருந்தன. அதுவும் சைவ, வைணவ சமயத்தைச் சார்ந்தவைகளாகவே இருந்துவந்தன.

வைணவ சமயத் தத்துவத்தைச் சேர்ந்த இலக்கியங்களில் ரகஸ்யங்கள் (Rahasyas) மிக முக்கியமானவையாகும். ரகஸ்யங்கள் என்பவை வைணவ மறையுரைத் தத்துவ இலக்கியங்கள் ஆகும். பிள்ளைலோகாச்சாரியார் எழுதிய ஸ்ரீவாஷபூசன் எனும் நூல் பதினெட்டு ரகஸ்யங்களில் மிகச் சிறப்புமிக்க ஒன்றாகும். ராமானுஜரின் சிறந்த சீடர்களில் ஒருவரான வேதாந்த நாதர் (வேதாந்த தேசிகர்) ரகஸ்யத் யாஷரா என்ற நூலை எழுதினார். இந்நூல் மிக உயர்தரமானதொரு இலக்கியப் படைப்பாகும். வேதாந்த தேசிகர் சிறந்த அறிஞர்; எழுச்சிமிக்க எழுத்தாளர். இவர் சமயப் பற்றுமிக்க பல தமிழ்க் கவிதைகளைத் தொகுத்தார். இத்தொகுப்பு நூல் தேசிக பிரபந்தம் என்று அழைக்கப்படுகிறது. தென்னிந்திய வைணவர்கள் இந்நூலினைச் சிறப்பாகப் போற்றிக் காத்தனர். தென்கலை வடகலை என்னும் முறைகள் இலக்கிய வளர்ச்சிக்குத் துணைபுரிந்தன. தென்கலை ஆச்சாரியராகிய மணவாள மாமுனிகள் சமய இலக்கியங்களுக்கு உரை எழுதினார்.

கம்பர் இராமாயணத்தை எழுதியது போன்றே வில்லிபுத்தூரார் வியாசரின் மகாபாரதத்தை தமிழில் எழுதி மக்கள் படித்து இன்புற வழி செய்தார். தமிழ் இலக்கியக் கவிதைகளில், அவரால் எழுதப்பட்ட பாரதம் மிகச்சிறப்பான ஒன்றாகக் கருதப்படுகிறது. வில்லிப்புத்தூராரின் பாரதம் 4350 கவிதைகளைக் கொண்டிருக்கிறது. இந்நூலில்

மனிதப்பிறவி எடுத்த கிருஷ்ணபரமாத்மா, தலைமைக் குருவிடம் தூதுவராகப் போவது போன்று சித்திரிக்கப்பட்ட காட்சி இன்றும் படிக்கப் படிக்க மக்களிடையே மகிழ்ச்சியைத் தருகிறது என்பதில் ஐயமில்லை. எனவே, தென்னிந்திய — வைணவ சமயத்தின் பிற்கால ஆழ்வார்களில் ஒருவராக வில்லிபுத்தூராரைக் கருதினால், அது குற்றமாகாது.

இக்கால சைவசமயத் தத்துவ எழுத்தாளர்களில் முன்னணியில் நிற்பவர் அருணகிரிநாதர் ஆவார். இவர் இரண்டாம் தேவராயரின் சமகாலத்தவராவார். இவர் தெய்வீக சக்தியால் தூண்டப்பட்டு பாடத் தொடங்கினார். இவர் 1360 தெய்வத் திருப்பதிகங்களை எழுதினார். இவரது பாடல்கள் அனைத்தும் முருகக் கடவுளைப் பற்றியதேயாகும். அவரது திருப்புகழ் என்னும் நூல் தெய்வீகத் தமிழிசையில் மிகச்சிறந்த, என்றும் அழியாத இடத்தைப் பெறுகிறது. விஜயநகரப் பேரரசர் கிருஷ்ண தேவராயரின் அவைக்களத்தில் வீற்றிருந்த ஹரிதாஸ் என்னும் புலவர் இருசமய விளக்கம் என்னும் நூலினை யாத்தார். இந்நூல் சைவ, வைணவ சமயங்கள் பற்றிய விளக்கங்களைக் கூறுகிறது. கச்சியப்பசிவாச்சாரியார் என்பவர் தமிழிலும், சமஸ்கிருதத்திலும் அதிகப் புலமை பெற்றவராக இருந்தார். இவர் சுப்பிரமணியக்கடவுளின் பாதகாணிக்கையாக கந்தபுராணம் என்ற நூலினை இயற்றினார். தமிழக மக்களாலும், சைவத்தமிழர்களாலும், பெரிதும் வரவேற்கவும், போற்றவும் பட்டது. சமயத்தத்துவம் பற்றிய மக்களின் கைப்புத்தகமாக இந்நூல் கருதப்பட்டது. தவிர, இந்நூல் முருகன் — வள்ளி ஆகியோரைத் தலைவனும், தலைவியுமாகக் கொண்டே தெய்வீகக்காதல் கதை கூறும் நூலாகவும் அமைகிறது. இக்காதல் கதையில் வில்லனாக வரும் சூத்திரன் முடிவில் முக்தியடைவதாக இந்நூல் குறிப்பிடுகிறது.

நிரம்பவழகிய தேசிகர் என்பவர் சிறந்த அறிஞரும் தமிழ், சமஸ்கிருதம் ஆகியவற்றில் நல்ல புலமைபெற்றவரும் ஆவார். இவரால் எழுதப்பட்டதே புகழ்மிக்க, சிறந்த நடையில் எழுதப்பட்ட சேதுபுராணம் ஆகும். சேதுபுராணத்தில் காணப்படும் பல தமிழ்ச் சொற்கள் மிகச்சில தமிழ் அகராதிகளில் மட்டுமே காணத்தக்கவைகளாக உள்ளன. விஜயநகர ஆட்சிக்காலத்தில் தென்காசியில் சிற்றரசனாக இருந்த அதிவீரராம பாண்டியன் தானே சிறந்த புலவராகவும், அறிஞராகவும் திகழ்ந்தார். இவர் பல நூல்களை யாத்திருக்கின்றார். அவரது நூல்களில் குறிப்பிடத்தக்கவை, நிடதம், காசிக் காண்டம் கூர்ம புராணம், லிங்க புராணம் ஆகியவையாகும். சிதம்பரம் கோவில் பற்றிய புராதனக் கதைகளை விளக்கும் கோவில்புராணம் என்ற நூலை உமாபதிசிவம் என்பவர் எழுதினார். திருமலைநாதன் என்பவர் சொக்கநாதர் உலா, சிதம்பர புராணம் ஆகியவற்றை எழுதினார். இவர்தம் மகன் பரஞ்சோதியார் திருவிளையாடல் புராணம் என்ற நூலை எழுதினார். 1225 பாடல்களைக் கொண்ட நல்லூர் வீர கவிராயரால் இயற்றப்பட்ட அரிச்சந்திர புராணம் என்னும் நூல் சிறந்த ஒன்றாகும். மாணிக்கவாசகரின் வழியைப் பின்பற்றி தஞ்சை வாணன் கோவை என்னும் நூலைத் திருச்சிற்றம்பலக் கவிராயரும், பொய்யாமொழிப் புலவரும் இணைந்து இயற்றியுள்ளனர். இந்நூலில் இவர்கள் பாண்டிய மன்னன் மாறவர்ம குலசேகரனைப் புகழ்ந்து பாடியுள்ளனர்.

தம் இலக்கியத்தில் கவி காளமேகம் மிகக் குறிப்பிடத்தக்க ஒரு புலவராவர். இவரது இயற்பெயர் வரதன். ஆங்கில இலக்கியத்தில் புகழ்மிக்க லூயி காரல் (Lewis Corrol), எட்வர்டு லியர் (Edward Lear) ஆகியோருடன் ஒப்பிடத்தக்க அளவில், தமிழ்

இலக்கியத்தில் ஓர் உன்னத இடத்தைப் பெற்று இவர் விளங்கினார். இவரது கருத்தாழமும், சொல்லாட்சியும் நனிசிறந்தன. காளமேகம் கணப்பொழுதில் ஓராயிரம் கவிதைகளை யாக்கும் திறன் பெற்றவர் என்று குறிப்பிடப்படுகிறது. இவர் திருவானைக்காவலில் எழுந்தருளியுள்ள இறைவனைப் புகழ்ந்து ஓர் உலா இயற்றியுள்ளார். இவர் இயற்றியுள்ள கவிதைகள் பலவாக இருந்தாலும், அவற்றுள் இவர் பாடியுள்ள நகைச்சுவையும், வசையும் மிகும் கவிதைகளே நினைவு கொள்ளத்தக்கவை. இராஜ நாராயண சம்புவராயரின் சமகாலப் புலவர்களாகக் கருதப்படும் இரட்டையர்களுள் ஒருவர் கண்பார்வையற்றவர். மற்றவர் கால்முடமானவர். குருடர், முடமான புலவரைத் தன் தோள்களில் தாங்கிவர, பின்னவர் அவருக்கு வழிகாட்ட, அவர்கள் ஊர் ஊராகச் சென்று புரவலர்களைப் பாடியும் யாசித்தும் தம் பிழைப்பை நடத்தி வந்தனர். இவ்விருவரும் கவிதைகள் இயற்றுவதில் வல்லவர். ஒரு பாடலின் முதலிரண்டு அடிகளை ஒருவர் பாட, எஞ்சிய இரண்டடிகளை மற்றவர் பாடி முடிப்பாராம். இவ்விருவரின் கூட்டு முயற்சியால் தோன்றியதே ஏகாம்பரநாதர் உலா.

முன்னோர் இயற்றிய பல இலக்கண, இலக்கிய நூல்களுக்கு தரமான உரைகள் பலவும் தோன்றிய காலம் இது எனலாம். பவணந்தி முனிவரால் யாக்கப்பட்ட நன்னூல் என்னும் இலக்கண நூலுக்கு மயிலைநாதர் என்பவரால் இயற்றப்பட்ட உரையே மிகப் பழமையானதாகும். அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்துக்கு பன்னிரண்டாம் நூற் றாண்டில் சிறப்பு மிக்க ஓர் உரையினை எழுதினார். தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய சேனாவரையர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் போன்ற உரையாசிரியர்களும் இக்காலத்தவரே. நச்சினார்க்கினியர் கலித்தொகை, பத்துப்பாட்டு, சீவகசிந்தாமணி ஆகிய நூல்களுக்கு உரையியற்றியுள்ளார். திருக்குறளுக்கு பரிமேலழகர் இயற்றிய உரையே சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் திறன் பெற்றது. இக்காலத்துச் சிறப்புடன் விளங்கிய இதர புலவர்கள் சைவ எல்லப்ப நாவலர், தொல்காப்பிய தேவர், மெய்கண்டார் என்போராவர்.

**சமயம் – இந்து சமயம்**

இஸ்லாமியத் தாக்குதல்களிலிருந்து இந்து சமயத்தையும், மரபினையும் அறநெறி களையும் காத்தற் பொருட்டே விஜயநகரப் பேரரசு தோற்றுவிக்கப்பட்டது. இந்நோக் கினைக் கருத்திற்கொண்டே, குமாரகம்பணர் தமிழகத்தை வென்று தன்னாட்டுடன் இணைத்தார். இந்து சமயக் காவலர் என்ற முறையில், குமார கம்பணர் தமிழகத்தில் முஸ்லீம்களால் ஏற்பட்டு வந்த தெய்வ உருவ உடைப்புச் செயல்களைத் தடுத்தார். சிதைக்கப்பட்ட ஆலயங்கள் புதுப்பிக்கப்பட்டன. அங்கு வழிபாடுகள் திரும்பவும் நடைமுறைக்கு வந்தன. திருவரங்கம் ஆலயத்தில் அரங்கநாதரின் விக்கிரஹம் மீண்டும் திருநிலைப்படுத்தப்பட்டது. விஜயநகர மன்னர்கள் ஆட்சியின்கீழ் சமயப் பொறை நிலவியது என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. வைணவர், மாதவர், சமணர், இஸ்லாமிய கிருத்துவ சமயங்கள் அனைத்தும் ஒரே சமயத்தில் வளம் பெற்று ஓங்கின. சமய அடிப்படையில் எந்த ஒரு மனிதனும் தவறாக நடத்தப்படவில்லை.

## சைவ சமயம்

ஆரம்பகால விஜயநகர மன்னர்கள் சைவசமயத்தில் அதிக நாட்டம் உடையவர்களாக இருந்தனர். தம்மைக் காத்துவந்த தெய்வமான விருபாக்ஷரின் பிரதிநிதிகளாகவே அவர்கள் தம் நாட்டை ஆண்டு வந்தனர். தமிழகத்தில் சைவசமயம் மூன்று பிரிவுகளாக விளங்கி வந்தது. அவையாவன அத்வைதர்கள் அல்லது ஸ்மார்த்தர்கள், பாசுபதர்கள், வீரசைவர்கள் என்போராவர். இவர்கள் கணபதி, சிவன் அம்பிகை, விஷ்ணு, சூரியன் போன்ற கடவுளர்களை வழிபட்டு வந்தனர். இவை ஒரே பரம்பொருளின் பல்வேறு அவதாரங்களே என்று கருதினர். அவர்களுக்கு வேதாகமச் சடங்குகளிலும், வர்ணாசிரம தர்மத்திலும் நம்பிக்கை கொண்டிருந்தனர். சைவாகமத்திற்கு அதிக முக்கியத்துவம் காட்டிய பிரிவினர் பாசுபதர்களாவர். ஆனால் அவர்கள் வேதங்களை மறுக்கவில்லை. பாண்டிய நாட்டில் பாசுபத இயக்கம் மிகக்குறுகிய அளவிலேயே செயல்பட்டு வந்தது. சைவர்களிலிருந்து தோன்றியவர்களே வீரசைவர்கள் என்னும் பிரிவினர். அவர்கள் சைவர்களே உயர்ந்தவர்கள் என்று கருதினர். சிவனை மட்டும் அவர்கள் வழிபட்டு வந்தனர். இவர்கள் வேதங்களையும், அந்தணர்களையும் புறக்கணித்தனர். மேலும், குழந்தைத் திருமணத்தை எதிர்த்தனர்; விதவை மறுமணத்தை ஆதரித்தனர். அவர்கள் எங்கெங்கு சென்றாலும் தம்முடன் லிங்கத்தையும் உடன் எடுத்துச்செல்வர்.

## சைவ சித்தாந்தம்

சிவஞான போதத்தை இயற்றிய மெய்கண்ட தேவரே இவ்வியக்கத்தைத் தோற்றுவித்தவர். இவ்வியக்கத்தைப் பின்பற்றுபவர்கள் வழிபாட்டுச் சடங்குகளைவிட பக்திக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்தனர். விக்கிரஹ ஆராதனையை எதிர்த்தனர். பக்தி நெறி ஒன்றே முக்தியடைவதற்கான வழி என நம்பினர்.

## வைணவம்

வைணவசமய ஆச்சாரியரான இராமானுஜர் காலத்திலிருந்தே தமிழகத்தில் இச்சமயத்தை பின்பற்றுவோர் எண்ணிக்கை பரவலாயிற்று. விஜயநகர, நாயக்க மன்னர்களில் பலரும் வைணவத்தைப்பின்பற்றியவர்களே. இக்காலத்தில் தான் வைணவ சமயத்தில் இறைவனை சரணடைதல் குறித்த கருத்து வேறுபாடுகள் வடகலை, தென்கலைப் பிரிவிற்கு வழி வகுத்தன. சுயமுயற்சியே முக்தி பெறுவதற்கு அவசியமானது என்பது வடகலையாளர்களின் கருத்து. ஆனால் தென்கலையினரோ முக்தி பெறுவதற்கு சுயமுயற்சியே தேவையில்லை; ஏனெனில் தெய்வீக அருள் என்பது இயல்பாகவே இருக்கவேண்டிய ஒன்றாகும் என்று கருதினர். இவ்விருபிரிவினருக்கும், பெண்தெய்வம் இலக்குமியின் அமைவிடம் குறித்து மாறுபட்ட கருத்துக் கொண்டிருந்தனர். வடகலை இயக்கத்திற்கு வேதாந்ததேசிகர் என்பவர் தலைமையேற்று விளங்கினார். மணவாள மாமுனிகள் தென்கலை இயக்கத்தின் தலைவராவார். இத்தகைய கருத்து வேறுபாடுகளிருந்த போதிலும் தமிழக மக்களின் வாழ்வில் தலையாய ஒரு சக்தியாக வைணவம் நீடித்தது.

சமணம்தமும் விஜயநகர ஆட்சிக்காலத்தில் தமிழகத்தில் போற்றிப் பாதுகாக்கப் பட்டது. தமிழகத்தின் பல பகுதிகளில் இம்மதம் வளர்ச்சியடையவும் செய்தது. இருகப்பதண்டநாதர் என்பவர் காஞ்சிபுரத்திற்கு அருகில் ஒரு சிறு சமணக்குடியேற்றத்தை ஏற்படுத்தினார். செங்கல்பட்டு, வடஆற்காடு, தென் ஆற்காடு ஆகிய மாவட்டப்பகுதிகளில் சமண மடங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

1545ஆம் ஆண்டு, புனித பிரான்சிஸ் சவேரியார், இந்தியாவுக்கு வந்தார். அவர் தம் வருகைக்குப்பின்பே தென்னிந்தியாவில், குறிப்பாக தமிழகத்தில், கிறிஸ்தவசமயம் பரவத்துவங்கியது. போர்த்துக்கீசியர்கள் இந்தியாவுக்கு வந்தபின்பு, அவர்கள் கடலோரப் பகுதிகளிலும் குமரிமுனையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் தங்கி, அப்பகுதியில் வாழ்ந்த இந்துக்களை சமய மாற்றத்திற்குத் தூண்டினர். மீனவ சமுதாயத்தவர்களிடையே இருக்கும் கிறிஸ்தவர்கள் போர்ச்சுக்கீசியர்களால் சமயமாற்றம் செய்யப்பட்டவர்களே. மேற்கூறிய நிகழ்ச்சிகள் யாவும் விஜயநகர அரசர்கள் தமிழகத்தில் சமயப்பொறையைப் பின்பற்றினர் என்று தெளிவாக்குகின்றன.

## கலை, கட்டடக்கலை

தமிழகத்தில் விஜயநகர ஆட்சியாளர்கள் காலத்துக் கலை என்பது முழுக்க முழுக்கக் கோயில் கலையே என்றால் அது மிகையாகாது. தவிர தமிழகத்தில் விஜயநகர ஆட்சிமுறை என்றாலே அது கோவில் ஆட்சிமுறையே எனக் கூறுவர். அவர்தம் கலை, சோழ, பாண்டியப் பேரரசர்களின் கோயில் கலையின் தொடர்ச்சியே எனலாம். விஜயநகரப் பேரரசு காலத்தில், தமிழகத்தில் கட்டப்பட்ட அல்லது திருப்பணி செய்யப்பட்ட கோவில்களில் அவர்கள் கையாண்ட கோவில் கட்டிடப் பண்புகள் தனிச்சிறப்புப் பெற்றவையாகும். மூலப்பொருள், நுட்ப வேலைப்பாடு அலங்காரம் போன்றவை அவர்தம் கோவிற்கலையின் முக்கிய அம்சங்களாகும். தென்னிந்தியக் கோவில்களில் குறிப்பாக தமிழகத்தில் காணப்பெறும் அம்மன்கோவில்கள் அவர்களது கோவில் கலையின் தனிச்சிறப்பே. இவ்அம்மன் கோவில்கள் மூலக் கோவிலில் இறைவனின் துணைவியாருக்காக ஏற்படுத்தப்படும் ஒரு சிறு அமைப்பான கோயிலாகும். மற்றொரு சிறப்பு மிக்க அமைப்பு கோவில்களில் காணப்படும் கல்யாண மண்டபங்கள் ஆகும். இக்கல்யாண மண்டபம் பெரும்பாலும் தூண்களாலான திறந்த மேடையை உடைய ஒரு மண்டபமாகும். இம்மண்டபத்தின் நடுவில் மேடை அமைக்கப்பட்டிருக்கும். விழாவின்போது இறைவன் இறைவியரது படிமங்கள் இம்மேடைமீது வைக்கப்பட்டு வணங்கப்படும். இவைதவிர அவர்கள் கோவில்களில் நீண்ட பகுதிகளையும் சேர்த்தனர். இப்பகுதிகள் பெரும்பாலும் பெரும் தூண்களைக் கொண்ட மண்டபங்களாக இருந்தன. இவையே ஆயிரங்கால் மண்டபங்கள் என அழைக்கப்பட்டன. இவை கோவில்களில் சிறந்த இடத்தைப் பெற்றன. ஆயிரங்கால் மண்டபங்களில் காணப்படும் கற்றூண்களில் பாய்ந்து நிற்கும் குதிரைகளும்,சீறிக்கொண்டு நிற்கும் நிலையிலுள்ள கற்பனை மிருகங்களும், யாளிகளும் காணப்பெறுகின்றன. அவற்றின்மீது அமர்ந்திருக்கும் இவுளி வீரர்கள் பலவித ஆயுதங்களைத் தங்கள் கைகளில் கொண்டு போருக்குச் செல்லும் நிலையிலுள்ளனர். சில தூண்கள் ஒரு சிறு கழியைக்கொண்டு தட்டினால் சரிகமபதநி என்ற ஏழிசைகளும் உண்டாகும்படியான முறையில் அமைக்கப்பெற்றுள்ளன. தூண்களின் உச்சிப் பகுதிகளில்,

புதிய முறையில் அலங்காரங்கள் தோன்றுகின்றன. இதழ்—பலகை முதலியவற்றிற்கு மேலுள்ள முகப்புகளில் குவிந்த வாழைப்பூ குவிந்த தாமரை மலர் போன்ற வடிவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பாண்டிய மன்னர்கள் துவங்கிய கோபுர அமைப்பு விஜயநகர ஆட்சிக் காலத்தில் சிறப்புற அமைக்கப்பட்டது.

தமிழகம் எண்ணிறந்த, கோவில்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இக்கோவில் களில் அனைத்துமே விஜயநகர ஆட்டியாளர்களால் எழுப்பப்படவில்லை; எனினும், இவற்றில் பலவற்றை அவர்கள் எழுப்பினார்கள். பல கோவில்களுக்கு திருப்பணி செய்தார்கள். பெரும்பான்மையான கோவில்களின் பகுதிகளைக் கட்டினார்கள் என்பது தெளிவு. இக்காலத்தில்தான் தமிழகத்தின் கோவில்கள் பலவற்றில் பெரும் கோபுரங்கள் எழுப்பப்பட்டன. உதாரணமாக கிருஷ்ணதேவராயர் சிதம்பரம் நடராஜர் கோவிலின் வடக்குக் கோபுரத்தையும், காஞ்சிபுரத்தில் ஒரு கோபுரத்தையும் கட்டினார். திருவண்ணாமலை, திருவரங்கம், இராமேசுவரம், மதுரை, திருவில்லிபுத்தூர் கோவில்களின் இராயகோபுரங்கள் பின்னால் கட்டப்பட்டன.

வேலூர்க் கோட்டையில் உள்ள ஜலகண்டீஸ்வரர் கோவில் கல்யாண மண்டபத் திற்குச் சிறப்புப் பெற்றதாகும். இம்மண்டபத்தினை கலைவல்லுநர் பெர்சிபிரௌன் (Percy Brown) செல்வம் மிக்கதும், அழகு வாய்ந்ததுமான மண்டபம் எனக் கூறுகின்றார். இம்மண்டபம் திராவிடக் கலையமைப்பின் சிறப்பிற்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைகிறது. இதில் யாளியுடன் அமர்ந்திருக்கும் குதிரைவீரர்களும் மிக அழகாக சித்தரிக்கப்பட் டுள்ளனர். காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோவிலின் கோபுரம் தென்னிந்திய கோவில்களில் அமைக்கப்பட்டிருக்கும் உயரமான கோபுரங்களில் ஒன்றாகும். இதன் உயரம் 188 அடி ஆகும். இது 10 அடுக்குகளைக் கொண்டிருக்கிறது. இக்கோபுரம் கிருஷ்ணதேவராயரால் எழுப்பப்பட்டது. இக்கோபுரம் பல்கலை நுட்ப வேலைபாடுகலைக் கொண்டிருக்கின்றது. ஏகாம்பரநாதர் கோவிலுக்குள் பல மண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளன. காஞ்சிவரதராஜ சுவாமி கோவிலில் பல பகுதிகள் விஜயநகர அரசர்களால் கட்டப்பட்டதே. இக்கோயிலில் கருங்கல் தூண்களாலான கல்யாண மண்டபம் குறிப்பிடத்தக்கதாகும். மண்டபத்தின் பீடத்தில் அமைக்கப்பட்டிருக்கும் மரச்சட்டத்தில் (Panel) இராமபிரான் ஏழு சாலமரங்கள் மீது அம்பெறிவது போன்று அமைக்கப்பட்டிருக்கும் காட்சி மிக சிறப்பானதாகும்.

சிதம்பரம் கோவிலில் ஏராளமான பகுதிகள் விஜயநகர அரசர்களால் கட்டப்பட்டது. 140 அடி உயரமான வடக்குக் கோபுரம் கிருஷ்ணதேவராயரால் கட்டப்பட்டது. இக்கோபுரத்தின் ஒரு பகுதி கருங்கல்லாலும் மற்ற பகுதிகள் செங்கல், காரை ஆகியவற்றாலும் கட்டப்பட்டதாகும். பரவலான இடத்தைக் கொண்ட இக்கோவிலின் ஆயிரங்கால் மண்டபம் இக்காலத்தில் கட்டப்பட்டதேயாகும். மண்டபத்தின் தூண்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கருங்கல்லினாலானவையாகும். பார்வதி கோயிலுக்கு முன்னால் அமைந்திருக்கும் முகமண்டபம் சிறந்த வேலைப்பாடுகள் அமைந்ததாகும். விஜயநகர், நாயக்கர் ஆட்சிக் காலத்தில் திருவரங்கம் கோவிலில் பிரகாரங்கள் கோபுரங்கள், மண்டபங்கள் அமைக்கப்பட்டன. இக்கோவிலில் அமைந்திருக்கும் சேசகிரியார் மண்டபம் குதிரை அவை (horse court) என அழைக்கப்படுகிறது. வட

ஆற்காடு மாவட்டத்தில் விரிஞ்சிபுரம் என்ற ஊரில் அமைக்கப்பட்டிருக்கும் கோவில் அதன் மண்டபத்திற்காக புகழப்படுகிறது. பாண்டிச்சேரியில் அலைவாய்க்கரையில் (fore-shore) அமைக்கப்பட்டிருக்கும் தனியாக நின்ற நிலையிலான தூண்கள் பல உருவச் சிற்பங்களைக் கொண்டிருக்கின்றன. அவை துவக்கத்தில் செஞ்சியில் இருந்தன. அதில் உள்ள சிற்பங்கள் செஞ்சி நாயக்க வம்சத்தவரின் உருவங்களாக இருக்கக்கூடும். திருவண்ணாமலைக் கோவிலிலுள்ள கிழக்கு கோபுரம், ஆயிரங்கால் மண்டபம், திருக் குளம் முதலியன கிருஷ்ணதேவராயரின் சமநோக்கு நிலையினை எடுத்துக்காட்டுகின்றன.

மதுரையிலுள்ள மீனாட்சி — சுந்தரேசுவரர் ஆலயம் காலத்துக்குக் காலம் பல மாறுதல்களை அடைந்தது. இன்றுள்ள நிலையில், இக்கோவில் 17ஆம் நூற்றாண் டிலிருந்ததைப் போலவே, திராவிட சமயக் கலையை மையமாகக் கொண்டுள்ளது. இக்கோவிலில் இரண்டு பெரும்கோவில்களைக் காணலாம். 850 அடி நீளமும் 725 அடி அகலமும் உள்ள அகலமானதும் உயர்ந்த மதிற்சுவர்களால் சூழப்பெற்றதுமான ஓரிடத்தின் மத்தியில் இவ்விரு கோயில்களும் அமைந்துள்ளன. இக்கோவிலில் உள்ள கிளிகத்தி மண்டபம், கம்பத்தடி மண்டபம், ஆயிரங்கால் மண்டபம், புது மண்டபம் போன்றவை என்றும் விஜயநகர நாயக்க அரசர்களை நினைவு கூறுகின்றன. கம்பத்தடி மண்டபம், இருபத்துநான்கு சிவமூர்த்தங்கள் பற்றிய அழகான சிற்பங்களைக் கொண்டுள்ளது. எட்டு ஒற்றைக்கல்தூண்கள், தண்டையம் அல்லது பளுதாங்கும் சுவரொட்டிகள் ஆகியவை இம்மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இவை விஜயநகரக் கலையின் சிறப்பு அம்சமாகும். ஆயிரங்கால் மண்டபம், மதுரை விசுவநாதநாயக்கரின் அமைச்சரான அரியநாத முதலியாரால் கட்டப்பட்டது எனக் கூறப்படுகிறது. இது மிகச்சிறந்த அமைப்பை உடையது. கலை வல்லுநர் பெர்குஸன் இதுபோன்ற சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த மண்டபம் எங்கும் காணக்கிடைக்காது என்கின்றார். இதன் கிழக்கு, மேற்கு பகுதிகள் தூண்களால் நிரப்பப்பட்டுள்ளன.

### பயிற்சி வினாக்கள்

1) விஜயநகர அரசு தமிழகத்தில் நிறுவுவதற்கான சூழ்நிலைகளை விவரி.

2) தமிழகத்தில் விஜயநகர ஆட்சிமுறை பற்றி எழுதுக.

3) விஜயநகர அரசர்கள் தமிழகத்தின் சமய, கலை வளர்ச்சிக்குச் செய்த தொண்டினை விளக்குக.

## பாடம் – 13 மதுரை நாயக்கர்கள்

சங்கம வமிச சகோதரர்களால் தொடங்கப்பட்ட விஜயநகரப் பேரரசு, குமார கம்பணர், கிருஷ்ணதேவராயர், அச்சுதராயர் ஆகியோரின் ஆட்சியின்போது தென்குமரிக் கடல்வரை விரிவடைந்தது. சோழ, பாண்டிய சம்புவராய நாடுகள் அப்பேரரசுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டன. பரந்த பேரரசை விஜயநகரிலிருந்தவாறே சிறப்புற ஆள இயலாது என்பதை உணர்ந்த இப்பேரரசர்கள், தமிழ்ப் பகுதிகளைப் பல மண்டலங் களாகப் பிரித்து, தகுதியுடைய நாயக்கர்களை ஆளுநர்களாக நியமித்தனர். பேரரசர்கள் வலிமை குன்றிய காலத்து இந்நாயக்கர்கள் தத்தம் சுதந்திரத்தை அறிவித்து முழுஉரிமை பெற்ற மன்னர்களாக ஆளத்தொடங்கினர். அவ்விதம் மதுரையைத் தலைநகராகக் கொண்ட விஜயநகரப் பேரரசுப்பகுதி பிற்காலத்தில் மதுரை நாயக்கர் நாடாயிற்று. மதுரையம்பதியில் விஜயநகரப் பேரரசர்கள் ஆளுநர்களை கி.பி. 1529ஆம் ஆண்டிலிருந்து நியமிக்கத் தொடங்கினர். இந்த ஆளுநர்வழி வந்த முதலாம் முத்துவீரப்பர் பேரரசிடமிருந்து, தம் நாட்டைப் பிரித்து தனி நாடாக்க முயன்றார். ஆனால் அம்முயற்சி களில் அவர் முழு வெற்றி பெறவில்லை. முத்துவீரப்பர் தொடங்கி வைத்த இந்த சுதந்திர வேட்கையை திருமலை முழுமையாக்கி முடித்து வைத்தார். பெரும்பாலும் திருமலையே மதுரை நாயக்கர் தனிநாட்டைத் தோற்றுவித்தார் என்பது பொருந்தும். ஏனெனில் அவர் பேரரசுக்குக் கப்பம் கட்ட மறுத்தார்; அழியும் தருவாயில் இருந்த பேரரசை மொத்தமாக அழிக்க அதற்கு எதிராகப் படையெடுத்தார்; முகம்மதியருடன் கூட்டுச்சேர்ந்து பேரரசர் மூன்றாம் ஸ்ரீ ரங்கரை வரலாற்றிலிருந்தே ஒழித்துக்கட்டத் திட்டமிட்டார்.

### மதுரை நாயக்கர் பற்றிய வரலாற்றுச் சான்றுகள்

மதுரை நாயக்கரைப் பற்றிய செய்திகள் பல அவைக் குறிப்புகளிலும், வரலாறு தொடர்பான பிற இலக்கியங்களிலும், மேநாட்டாரின் கைப்பிரதிகளிலும், சமயப் போதகரின் கடிதங்களிலும், அண்டை நாட்டுக் குறிப்புகளிலும் பரக்கக் காணலாம். ஆனால் இவர்களைப் பற்றிய வரலாற்றை நெல்சன் என்ற மேநாட்டார் முதன்முதலாகத் தொகுத்து வெளியிட்டார். முதல் முயற்சியாகிய காரணத்தால் அவருடைய நூலில் பல குறைகள் ஏற்பட வாய்ப்பிருந்தது. அவருக்குப் போதிய மூலச்சான்றுகள் கிடைக்கவில்லை; கிடைத்த மூலச் சான்றுகளையும் நுணுகி ஆய்ந்தறிய வாய்ப்பில்லை; ஆய்ந்தவற்றையும் பாரபட்சமின்றி நோக்க இயலவில்லை. எனினும் நெல்சன் வரைந்த The Madura Country, வரலாற்றுப் பின்னணியில் வரையப்பெற்ற முதல் நூல் என்பதில் ஐயமில்லை. நெல்சனின் நூலில் காணப்பட்ட குறைகளைக் கண்ணுற்ற ரெங்காச்சாரி, அதிக ஆர்வத்துடன், விரைந்து பாடுபட்டு, நிறைய மூலச்சான்றுகளைச் சேகரித்து History of the Nayaks of Madura என்ற நூலை வரைந்தார். இந்நூல் Indian Antiquary என்ற வெளியீட்டில் வெளிவந்துள்ளது. ரெங்காச்சாரியாவின் கருத்துக்கள் பலவற்றை ஏற்றும், பலவற்றை மறுத்தும் பேராசிரியர் ஆர். சத்தியநாதைய்யர் History of the Nayaks of Madura என்ற நூலை வரைந்தார். இந்த நூலில் ஆசிரியர் பல பாதிரியார்களின் கடிதங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துத் தந்துள்ளார். இப்பேராசிரியரின் இந்நூலை ஆதாரமாகக்கொண்டு ஆகி. பரந்தாமன் தமிழில் மதுரை நாயக்கர் வரலாறு என்ற நூல் எழுதினார். பேராசிரியர் சத்தியநாதைய்யர் எங்கு முடித்திருந்தாரோ, அதன்

தொடர்ச்சியை பேராசிரியர் கு. இராசய்யன் History of Madurai என்ற நூலில் வரைந்துள்ளார். இவற்றின் அடிப்படையில் மதுரை நாயக்கர் வரலாற்றைச் சற்று ஆய்வோம்.

## மதுரை நாயக்கராட்சித் தன்மை

மதுரை நாயக்கர் காலத்தில் வட இந்தியப் பண்பாடு தமிழகத்தில் முன்னைவிட அதிக ஆதரவுடன் பரவிற்று. தெலுங்கர், கன்னடியர், சௌளராட்டிரர், முஸ்லீம்கள், வடநாட்டு அந்தணர் போன்ற பலர் தமிழகத்தில் குடிபுகுந்தனர். இவர்கள் படையில் பணிபுரிந்தனர். நெசவுத் தொழில் புரிந்தனர்; சமயப்பணி மேற்கொண்டனர். மிக முக்கியமான பணிகளை மேற்கொண்ட இவர்களுக்கு நாயக்க மன்னர்களிடம் அதிக பிடிப்பு இருந்தது. அரசியல் செல்வாக்குப் பெற்ற இவர்கள் தமிழகத்தில் இதரத்துறை களிலும் திகழத் தொடங்கினர். மேலை நாடுகளிலிருந்து கிறிஸ்தவ சமயப்பிரச்சாரம் செய்ய பல பாதிரியார்கள் தமிழகம் வந்தனர். தமிழகத்தில் அவர்கள் கோயில்களையும், கல்விக்கூடங்களையும் நிறுவி, சமயப் பிரச்சாரம் மேற்கொண்டனர். மேநாட்டுப் பண்பாடும் தமிழகத்தில் பரவலாயிற்று. மைசூரின் உடையார்கள், இராமநாதபுரச் சேதுபதிகள், டில்லியின் மொகலாயர், பீஜப்பூர்—கோல்கொண்டாவின் பாமினிகள், விஜயநகரத்தின் அரவீடுமன்னர்கள், தஞ்சை நாயக்கர்கள், மராட்டியர்கள், திருவிதாங்கூர் மன்னர்கள் முதலானோர் தமிழகத்தில் அவ்வப்போது படையெடுத்தனர். மக்களுடைய வாழ்வில் அமைதி பாதிக்கப்பட்டது. சுபிட்சம் சரியத் தொடங்கிற்று; வரிவசூல் அதிகமாயிற்று; மாற்றாரின் தாக்குதலால் தமிழகத்தின் சில குறிப்பிட்ட இனத்தார்கள் அவதிப்பட்டனர். தமிழகத்தில் நாயக்கர்களுக்கு தொடக்கத்தில் எதிர்ப்பு இருந்தது. ஏனெனில் இவர்கள் தமிழகத்திற்குப் புதியோர் அந்நியர். ஆகவே நாட்டில் பாதிப்பு ஏற்பட்டதும். நாயக்கராட்சியில் கலை, இலக்கியம் வளர்ந்தன. ஆனால் வர்த்தக—வாணிப விரிவாக்கம் அதிகம் ஏற்படவில்லை. கட்டடக்கலை, இசைக்கலை, நாட்டியக்கலை, கல்விக்கலை சீரழியாமல் காக்கப்பட்டன. கட்டடக் கலையில் வெளிநாட்டு அம்சங்களும் இடம்பெறத் தொடங்கின. மதுரை நாயக்கர்கள் தமிழகத்தில் ஆட்சி புரிந்த காலம் ஒரு கலப்புப் பண்பாட்டுக் காலமாக மாறிற்று.

## மதுரை நாயக்கரின் ஆட்சிக்காலம்

மதுரை நாயக்கர் மதுரையில் கி.பி. 1529 முதல் கி.பி. 1736ஆம் ஆண்டு வரை ஏறத்தாழ இரு நூற்றாண்டுகள் ஆட்சி நடத்தினர் என்று பேராசிரியர் சத்தியநாதைய்யர் கருதுகிறார். இப்பேராசிரியருக்குப்பின் மதுரையின் தொடர்ந்த வரலாற்றை வரைந்த பேராசிரியர் இராசய்யனும் கி.பி. 1736இல் இருந்துதான் தம் ஆராய்ச்சியைத் தொடங்குகிறார். பேராசிரியர் சத்தியநாதைய்யர் விஸ்வநாதநாயக்கர் நியமனம் பெற்ற ஆண்டாகிய கி.பி. 1529யை நாயக்கராட்சியின் தொடக்கமாகக் கொள்கிறார். விஸ்வநாதர் முழு உரிமை பெற்ற ஆளுநராக அச்சுதராயரால் நியமிக்கப்பட்டார். ஆனால் அவருக்குமுன் விஸ்வநாதரின் தந்தையாகிய நாகம நாயக்கரை மதுரையின் ஆளுநராகக் கிருஷ்ணதேவராயர் நியமித்திருந்தார். செஞ்சி, தஞ்சை நாயக்கர் நாட்டு ஆளுநர்களும் அவ்வாறு கிருஷ்ணதேவராயர் காலத்து நியமிக்கப்பட்டவர்களே. கிருஷ்ணதேவராயர் காலத்தில் இவ்வாளுநர்கள் முழுஉரிமை பெற்று விடவில்லை. நாகம நாயக்கருடைய

கலகத்தை அடக்கி, மதுரையை விஸ்வநாதர் காப்பாற்றிய காரணத்தால், நிலைபெறச் செய்யப்பட்டதே விஸ்வநாதரின் ஆட்சி. இக்கருத்தினை கல்லெழுத்துக்களும், பாரம்பரியங் களும் சுட்டுகின்றன. ஆகவே மதுரை நாயக்கராட்சியின் தொடக்கம் கி.பி. 1529ஆம் ஆண்டு என்பதில் தவறில்லை.

ஆனால் ஆட்சியின் முடிவு பற்றிய காலக்கணிப்பில் சற்று வேறுபாடுள்ளது. பெரும்பான்மை அறிஞரும் 1736ஆம் ஆண்டையே மதுரை நாயக்கராட்சியின் முடிந்த ஆண்டாகக் கொள்வர். ஆனால் பேராசிரியர் மகாலிங்கம் தம் `Readings in South Indian History' என்ற நூலில் கி.பி. 1739ஆம் ஆண்டைக் குறிப்பிடுகிறார். அவர் அதற்கு வேண்டிய மூலச்சான்றுகளைத் தருகிறார். திருச்சியிலிருந்த மதுரை ராணி மீனாட்சியை சந்தா சாகிப் கைதுசெய்து கி.பி. 1739ஆம் ஆண்டு வரைக் கொல்லாது, சிறையிட் டிருந்தான். மனம் உடைந்து போயிருந்த மீனாட்சிக்கு நச்சுக் கொடுத்து 1739இல் முடிவடைந்தது என்றால் பொருந்தும். இருப்பினும் கி.பி. 1736இல் மீனாட்சி கொல்லப்பட்டாள் என்ற கருத்தினைப் பல ஆசிரியர்களும் ஒப்புக் கொள்வதனால் நாம் கி.பி. 1736ஆம் ஆண்டை எடுத்துக் கொள்வதில் தவறில்லை. ஏனெனில் அவள் அப்போது சிறைசெய்யப்பட்டு அவளுடைய நாடு முஸ்லீம்களால் கைப்பற்றப்பட்டு விட்டது.

## விஸ்வநாத நாயக்கர் (1529–1564)

விஜயநகரப் பேரரசின் பெரும் புகழ் பெற்ற பேரரசராகிய கிருஷ்ணதேவராயரின் நம்பிக்கைக்குரிய அதிகாரிகளில் ஒருவரே நாகம நாயக்கர் (Nagama Nayak). நாகம நாயக்கரின் தவப்புதல்வனே விஸ்வநாத நாயக்கர். மகப்பேறு இல்லாது வருந்திய நாகம நாயக்கர் காசிவிஸ்வநாதரை நினைந்து வாழ்த்தினார். அவருடைய ஆழ்ந்த பக்தியின் பரிசாகப் பிறந்தவரே விஸ்வநாதர் என்று இரண்டாம் வேங்கடரின் கூனியூர் ஏடுகள் சுட்டுகின்றன. ஆனால் இந்நிகழ்ச்சி நடந்த ஆண்டு திட்டவட்டமாக அறியப்படவில்லை. நாகமர் தம் மைந்தனையும் கிருஷ்ணதேவராயரின் அவையில் பணியாளராக நியமித்துக் கொண்டார். அதாவது விஸ்வநாதரின் பதினாறாவது வயதில், அதாவது கி.பி. 1511இல் இது நடைபெற்றது என்றால், அவர் ஒரு வேளை கி.பி. 1495ஆம் ஆண்டளவில் பிறந்திருக்கக்கூடும். நாகம நாயக்கர் கிருஷ்ணதேவராயரிடத்து பதவி உயர்வு பெற்றது போல், விஸ்வநாதர் அச்சுதராயரிடத்து நன்மதிப்பும், பதவி உயர்வும் பெற்றார்.

## பதவி உயர்வுக்குரிய காரணங்கள்

தம் தந்தையைப்போல் விஸ்வநாதர் திறமையுடையவர். சிந்தித்துச் செயல்படும் மனப் பக்குவம் வாய்க்கப்பெற்றவர். தம் வேலைகளை திறம்படச் செய்து முடித்த காரணத்தால், பேரரசரிடம் நன்மதிப்பும் நம்பிக்கையும் பெற்றுக்கொண்டார். தரக்குறை வான வேலையையும் மனமுவந்து செய்து முடித்தார். உழைப்பில் நம்பிக்கையுடைய அவருக்கு அரசியல் உயர்வு காத்திருந்தது. மதுரையை அப்போது சந்திரசேகரன் என்ற பாண்டியன் ஆண்டு வந்தான் என்றும் சோழர்களும் பாண்டியர்களும் எதிரிகளே என்றும் வீரசேகரன் என்ற சோழன் மதுரையைத் தாக்கி, மதுரையில் முடிசூட்டிக் கொண்டான். அவதியுற்ற பாண்டியன் ராயரின் உதவியை நாடினான். ராயர் நாகமரைப் பணித்து

வீர சேகரனை விரட்டினார். தஞ்சையில் நாகமர் தம் செல்வாக்கை வளப்படுத்திக் கொண்டார். பிற எல்லைகளையும் தாக்க முற்பட்டார். இதனை விரும்பாத ராயர் நாகமரை ஒடுக்கத் திட்டமிட்டார். தந்தையை முறியடிக்கத் தனையனே தேர்ந்தெடுக்கப் பட்டார். இவ்வாறு விஸ்வநாதர் மதுரை நோக்கிப் புறப்பட்டார். அவ்வமயம் நாகமர் கலகத்திலீடுபட்டிருந்தார். கலகத்தையடக்கப் பெரும் படையுடன் விஸ்வநாதர் மதுரையடைந்தார். தந்தையுடன் போரிட்டு வெற்றி பெற்ற தனையன், தம் தந்தை செய்த தவறுக்காக அவரைச் சிறை செய்யத்தவறவில்லை, தம் தந்தையை ராயரிடம் ஒப்படைக்கத் தயங்கவுமில்லை. விஸ்வநாதரின் பணிவு தம் தந்தையின் தலையைக் காத்து நின்றது. விஸ்வநாதரின் திறமையைப் பாராட்டி, கீழ்படிவை போற்றி, ராயர் அவரை தென்னாட்டு ஆளுநராக நியமித்தார். 'பாண்டிய நாட்டின் தலைவன்' என்றும் 'தென்னக முடியின் தலைவன்' என்றும் அவரை ராயர் போற்றிப் புகழ்ந்தார். நாகமரைப் பற்றிய செய்திகள் இத்துடன் முற்றுப் பெறுகின்றன. இக்கதையைப் பாண்டியன் அவைக் குறிப்புகளும், பாரம்பரியங்களும் சுட்டுகின்றன.

விஸ்வநாதர் தொடக்கத்தில் பாண்டிய — சோழப் பகுதிகள் உள்ளிட்ட பரந்த நிலப்பரப்புக்கு ஆளுநரானார். கி.பி. 1530இல் ராயர் இறந்து போகவே, விஜயநகருக்குப் பேரரசராகிய அச்சுதராயர் தம் மனைவியின் தங்கை கணவராகிய செவப்பரை சோழமண்டல ஆளுநராக நியமித்தார். இப்புதுமுறைப்படி, திருச்சிப்பகுதி மதுரைக்கும், வல்லம் தஞ்சைக்கும் சென்றன. இதனை இரு பகுதிகளின் ஆளுநர்களும் விரும்பி மாற்றிக் கொண்டவை என்று அவைக் குறிப்புகள் கூறுகின்றன. இவ்விதம் ராயரும் தம் ஆளுநரின் வளர்ந்துவரும் செல்வாக்கைக் குறைத்தார் என்க.

### தென்னகத்தில் கலகம்

புதிதாகப் பெற்ற திருச்சிப் பகுதியை நாயக்கர் சீரமைத்துக் கொண்டிருந்தபோது, கயத்தாற்றில் பஞ்சபாண்டியர் கலகம் விளைவித்தனர். (பஞ்சபாண்டியர் ஐவர். இவர்கள் முதலாம் குலோத்துங்கன் காலத்துக்கு முன்பிருந்தே ஐந்து பகுதிகளை — திருநெல்வேலி, கயத்தாறு, தென்காசி — இரு பகுதிகள் நிலையற்றவைகளாகத் தோன்றுகின்றன — மதுரை மன்னனுக்குக் கீழ்ப்படிந்து ஆண்டு வந்தனர். மற்றுமொரு கருத்து, இவர்கள் சந்திர சேகரனின் பாட்டனாரின் முறையற்ற புதல்வர்கள் என்பது. முதலாம் குலோத்துங்கன் ஐந்து பாண்டியர்களை வென்றதாகக் கூறுகிறான். மார்கோப்போலோ ஐந்து சகோதர பாண்டியர்கள் பாண்டிய நாட்டை ஆண்டதாகக் கூறுகிறார். வடக்கிருந்து வந்த விஸ்வநாத நாயக்கரை எதிர்க்க அவர்கள் தயங்கவில்லை. விஸ்வநாதர் பஞ்ச பாண்டியரை முறியடித்துத் தம் செல்வாக்கை நிலைநாட்ட தம் தளபதியாகிய அரியநாத முதலியை அனுப்பினார். (அரியநாத முதலி காஞ்சிப்பகுதியை சேர்ந்தவர். அவருடன் பலர் நெல்லைப் பகுதியில் குடிபுகுந்து, வாழ்விடங்களை நியமித்துக்கொண்டனர்.) வெற்றி நழுவிவிடும் என்னுணர்ந்த விஸ்வநாதர் தாமாகவே கயத்தாறு நோக்கிப் புறப்பட்டார். இது கேட்டு நடுக்குற்ற பாண்டியர் தோல்வியைத் தழுவினர் என்று அறியப்படுகிறது. விஸ்வநாதர் இவ்வெற்றியைத் தம் திறமையாலும், அரசியல் வெல்திறத்தாலும் பெற்றுக்கொண்டார். சில சான்றுகள் இப்பிரச்சினை அத்துடன் முடிந்துவிட்வில்லை

என்றும், அதற்கு முடிவு காணவேண்டிய அச்சுதராயர் திருநெல்வேலிப்படையெடுப்பை மேற்கொண்டார் என்றும் அறிவிக்கின்றன. இதற்குப்பின் இப்பிரச்சனைக்கு முடிவு ஏற்பட்டுவிட்டது.

### கம்பம் – கூடலூர்ப் போர்

கம்பம் — கூடலூர்ப் பகுதிகளும் மதுரையம்பதியைச் சேர்ந்தவை. இப்பகுதிகளையும் ஒரு சோழன் கைப்பற்றிக் கொண்டான். திறைப்பணம் முடங்கிவிட்டது. முடங்கிப்போன திறைப்பணத்தைப்பெறும் நோக்குடன் விஸ்வநாதர் இப்பகுதிகளையும் தாக்கினார். தமக்கு நம்பிக்கைக்குரிய ராம பத்ர நாயக்கை (Ramabhadra Nayak) கம்பம் — கூடலூர்ப் பகுதிக்கு அனுப்பினார். ராமபத்ரர் கம்பத்தைத் தாக்கி வெற்றி பெற்றார். இவ்விரு பகுதிகளும் மதுரையுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டன.

### நாயக்கர் நாட்டு எல்லை

விஸ்வநாதரின் மதுரைநாடு மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, திருச்சி, கோவை, சேலம் பகுதிகளையும், திருவிதாங்கூர்ப் பகுதிகளையும் கொண்டிருந்தது. விஸ்வநாதர் பாண்டியநாட்டுப் பகுதியையும், சோழநாட்டையும் தொடக்கத்தில் ஆண்டு வந்தார். இக்கருத்தினை அவைக் குறிப்புகளும், கல்லெழுத்துக்களும் வலியுறுத்துகின்றன. இவ்விதமே அவர் 'தென்னக அரியணையில் தலைவன்' ஆனார்.

### பாளையங்களின் தோற்றம்

விஸ்வநாதர் மதுரை நாயக்கர் நாட்டை விரிவுபடுத்தினார். வளப்படுத்தினார். திறமையுடன் ஆட்சி நடத்தினார். ஆட்சிமுறையையும் வகுத்துத் தந்தார். 1736ஆம் ஆண்டு வரை அவருடைய நிர்வாக முறை பின்பற்றப்பட்டு வந்தது. அவருடைய நிர்வாகத் திறமைக்கு எடுத்துக்காட்டு பாளயப்பட்டு முறைகளே. இப்பாளையப்பட்டு முறையினை இவரே தமிழகத்தில் முதன் முதலில் கொண்டுவந்தார் என்று பேராசிரியர் சத்திய நாதைய்யர் கூறுகின்றார். இதனைப் பழங்காலப் பாண்டியர்களே செயற்படுத்தினர்; இது வழிவழி வந்த ஒன்று. விஸ்வநாதர் இதனைப் புதுப்பித்து, அரச அனுமதி மட்டுமே தந்தார் என்று பேராசிரியர் இராசய்யன் விளம்புகிறார். வாணா மதுரை (மானாமதுரை) வாணகோவரா‌யர் (பாணர்), கொற்கையின் பாண்டியர், ஐந்து பாண்டியர் போன்றோர் பாளயக்காரர் என்ற நிலையில் ஆங்காங்கு ஆட்சி நடத்தி வந்துள்ளனர். எனவே இதன் தோற்றகர் விஸ்வநாதர் என்றால் பொருந்தாது. அழியும் தறுவாயில் இருந்த இப்பாளயப்பட்டு முறைக்குப் புது ஊக்கத்தை, புனர்வாழ்வை விஸ்வநாதர் தந்தார் என்பது பொருந்தும்.

நிலை பெற்றிருந்த குறுகிய அல்லது பாளையங்களின் அதிகாரத்தை மதுரை நாயக்கரால் பறித்தெடுக்க இயலவில்லை. வழிவழி வந்த சிறப்பு ஆட்சிமுறையாகிய காரணத்தால், இவர் இம்முறையைப் புதுப்பித்து, புனர்வாழ்வு தந்தார். அரசியல், பொருளாதார, படை நுணுக்க நோக்குடன் இதனை இவர் புதுப்பித்தார். பாண்டியன் அவைக் குறிப்புப்படி இவர் 72 பாளையப்பட்டுகளுக்கு அரச அனுமதி அளித்தார்.

இப்பாளையப்பட்டுகளின தலைவன் பாளையக்காரர் (Poligar) என்று அழைக்கப்பட்டார். பாளையப்பட்டுகளைப் பொறுத்தளவில் பாளையக்காரர்களே மன்னர்கள். அவர்கள் பாதுகாப்பு, நிதி, படை, அதிகாரங்களுட்டன் திகழ்ந்தனர். தங்களுடைய வருவாயில் 1/3 பகுதியை அவர்கள் மதுரை நாயக்கருக்கு திறையாகச் செலுத்தப் பணிக்கப்பட்டனர். அத்துடன் படைப்பிரிவு ஒன்றையும் வைத்திருந்தனர். நாயக்கமன்னர் தேவைப்படுமிடத்து, இப்படை பயன்படுத்தப்பட்டது. நாட்டை அன்னியரிடமிருந்து காப்பதில் இவர்களுக்கும் பங்கு இருந்தது. வருவாயில் 1/3 பகுதியை இப்படைக்குப் பயன்படுத்த வேண்டும். எஞ்சிய 1/3 பகுதி மட்டும் இவர்களுக்குச் சொந்தம். இப்பாதிப்படை பிரபுத்துவ (Para-military or semi-military-feudal System) முறை மூலம் நாட்டில் தம் செல்வாக்கை முன்னணிக்குக் கொண்டு வந்தார். இவருக்கு எதிராக வாள்தூக்கிய இவர்களை அரசியல் வெல்திற முறையில் அடக்கினார். அவர்களின் நன்மதிப்பைப் பெற்றார். இப்பாளையப்பட்டு முறையை பரம்பரைச் சொத்தாக மாற்றி தம்மை எதிர்த்தோரை அதிக பொறுப்புள்ள அதிகாரிகளாக மாற்றினார். இப்பாளையப்பட்டு முறை அன்றைய நிலையில் பயனுள்ளதாயிருந்தது.

விஸ்வநாதர் பதவி பெறும்போது நாட்டில் அமைதியில்லை; சீரழிந்து காணப்பட்டது. பொருளாதாரப் பற்றாக்குறை, கடின வரிவசூல், வேளாண்மையில் கவனக்குறைவால் பற்றாக்குறை, ஆட்சிமுறையும் சீர்கெட்டிருந்தது. தலத்தலைவர்கள் அதிக அதிகாரம் தேடி அலைந்தனர். போர்கள், பொருள், சேதங்கள், அமைதியின்மை இதனைப் பார்த்த நாயக்கர் வேளாண்மையை புனரமைப்பு செய்தார். காடுகள் அழிக்கப்பட்டு, விளை நிலங்களாக ஆக்கப்பட்டன. பாழடைந்து கிடந்த நிலங்களை விளை நிலங்களாக மாற்றினார். நீர்ப்பாசன முறைக்கு கவனம் எடுத்துக்கொள்ளப்பட்டது. நாட்டில் செழிப்பும், அமைதியும் ஏற்பட்டன. நாட்டை முன்னேற்றப்பாதையில் விஸ்வநாதர் கொண்டு வந்தர்ர்.

## பிற சீர்திருத்தங்கள்

மதுரை, திருச்சிப்பகுதிகளில் கோட்டை கொத்தளங்களை எழுப்பி, படைப் பாதுகாப்பு தந்தார். காவிரிக் கரையின் அடர்ந்த காடுகள் அகற்றப்பட்டு, நாட்டைக் கொள்ளைக்காரரின் தீங்கிலிருந்து காப்பாற்றினார். புனிதப் பயணிகளின் உயிருக்கும் உடமைக்கும் தீங்கேற்படாவண்ணம் பாதுகாப்பு தந்தார். திருச்சி நகரம் படைப்பாது காப்புடன் தோற்றமளித்தது. அதனைச் சுற்றி ஆழமான அகழி வெட்டப்பட்டது. நெல்லை நகரம் பெரிதாக்கப்பட்டது. புதுக்குடியிருப்புகளும், புதுக் கிராமங்களும் ஏற்படுத்தப் பட்டன. கிரர்மப்புற மக்களின் வசதிக்காகச் சாலைகள் வெட்டப்பட்டன. பாசன முறை வலுப்படுத்தப்பட்டது. கோயில்கள் பல பணியப்பட்டன. மதுரை மீனாட்சி சுந்தரேசர் ஆலயம் செப்பனிடப்பட்டது. அதன் ஆயிரங்கால் மண்டபத்தை அரியநாத முதலி எழுப்பினார் என்று கூறப்படுகிறது. திருச்சி, ஸ்ரீரங்கம் ஆலயங்களைப் பழுதுபார்த்தார். திருவரங்கக் கோயிலைச் செப்பனிட அவர் மூன்று லட்சம் பொன் செலவிட்டார் என்று கோயிலொழுகு என்ற நூல் கூறுகின்றது. இவ்வகையிலான பொதுப்பணிகள் மூலம் அவர் மக்களின் நன்மதிப்பைப்பெற்றார். அவருடைய வெற்றிக்கு அவருக்குக் கீழ் பணியாற்றிய அதிகாரிகளும் காரணமே. அவருடைய திட்டங்களும் செவ்வனே

செயல்படுத்த, அதிகாரிகள் ஒத்துழைத்தனர். தம் தந்தைக்குக்கீழ் பணியாற்றிய சில நம்பகமான அதிகாரிகளை தம் ஆட்சியிலும் ஏற்றுக்கொண்டார். அவர்களில் அரியநாத முதலியார் முதன்மையானவர். இறக்கும்வரை முழு மூச்சுடன் அயராது உழைத்தவரே அரியநாதர். அவர் காஞ்சியிலுள்ள ஓர் எளிய குடும்பத்தில் தோன்றியவர். தம் உழைப்பால் உயர்ந்தவர். தளவாய் (Dalavay), பிரதானி (Pradhani) போன்ற உயர்ந்த பதவிகளைப் பெற்றவர். புதுமண்டபத்தில் காட்சி தரும் அவருடைய குதிரைச்சவாரி செய்யும் நிலையிலுள்ள சிலை (equestrian statue)யும், ஆயிரங்கால் மண்டபத்தில் காட்சி தரும் சிலையும் இவற்றை விளக்கவல்லன. நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டப் பாடுபட்ட அதிகாரிகளில் தலையானவர் இராமபத்ர நாயக்கரே (Rama Bhadra Nayak) என்பார். அவைக்குறிப்புகளில் பெரும்பான்மை இடங்களில் குறிப்பிடப்படுபவரும் இவரே.

விஸ்வநாதரின் மரணத்தைப் பற்றிய செய்திகளை இவ்வகைக் குறிப்புகள் தருவதில்லை. ஆனால் அவர் தம் எழுபதாவது வயதில் இறந்ததாகக் கருதப்படுகிறது. அவருடைய மரணத்துக்கு முன் 1564ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 25ஆம் நாள் தம் மகன் கிருஷ்ணப்பர் முடிசூட்டப்பட்டார்.

இக்குறிப்பிடத்தக்க மனிதனின் குறிப்பிடத்தக்க வாழ்க்கை அவருடைய சிறப்புக் குணங்களை வெளியிட்டு நிற்கின்றது. அவர் பேராற்றல் மிக்க பெருவீரர் இல்லை என்ற போதிலும், போர்ப் பயிற்சி பெற்ற ஒரு போர் வீரர். நுண்ணறிவும், அடக்கமும் உடைய ஓர் ஆளுநர். விதவிதமான போட்டிப் பூசல்களினூடே, தம் நாட்டை ஒழுங்குபடுத்தி, ஆண்டதிறமை இதனைச் சுட்டுகின்றது. அவைக் குறிப்புகளும், வரலாற்றாளரும் அவரை புகழத் தவறியதில்லை; சிறப்புக்களைக் கூறத் தயங்கவுமில்லை. ஆனால் அவருடைய வாழ்க்கையை சற்று நுணுகி ஆய்ந்தால், இவ்விதப் புகழ்ச்சிக்கு இடம் இல்லாதது பார்க்கலாம். இருப்பினும், விஸ்வநாதர் செயற்றிறம் மிக்க ஆளுநர். நாட்டில் அமைதியும் ஒழுங்கும் ஏற்படுத்தியமை அவரையே சாரும். பாளையப்பட்டு முறையைப் புதுப்பித்து, புத்துயிர் ஊட்டியதால், வேறுபட்ட பல பிரச்சனைகள் எளிதில் தீர்க்கப்பட்டன. அரசியல் வெல்திறம் (Statesmanship) அதிகம் அவரிடம் குடிகொண்டிருக்கவில்லை என்று கருதப்படுகிறது. அவர் மறவர் நாட்டை அடக்கியாள இயலவில்லல. இந்நிலை தம் நாட்டு அமைதியைப் பாதித்தது தம் திட்டங்களில் அதிகாரிகளின் பங்கு இருந்ததால் மட்டுமே அவர் வெற்றி பெற வாய்ப்பிருந்தது. மதுரையின் மன்னர் என்ற போதிலும், அவர் தம் விருப்பப்படி ஆளும் சுதந்திரமான மன்னர் அல்லர். பேரரசின் தென்னகப் போர்களில் அவர் சிறப்புப் பெயர் தேடியதாகத் தெரியவில்லை. பேரரசுக்கு அவர் அடங்கி நடந்ததாகக் கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. பேரரசின் அடக்கமான, பணிவுடைய மன்னர் என்ற முறையில் இவர் தமிழகத்தில் ஆட்சி நடத்தினார். ஆனால் உள்நாட்டு பிரச்சினைகளைப் பொறுத்த அளவில் பேரரசு இவருடைய திட்டங்களில் தலையிட்டதாகத் தெரியவில்லை. முழு சுதந்திரத்துடன் உள்நாட்டுப் பிரச்சினைகளை அவர் அணுகினார். விஸ்வநாதரின் சாதனைகளில் புதுமைக்கு அதிக இடம் இல்லை என்றாலும், நம் தனித்தன்மைக்கு அதிக இடம் இருப்பதைக் காணலாம். மதுரை நாயக்கராட்சியை மகோன்னத நிலைக்குக் கொண்டு வந்தமைக்கு அடிப்படைக் காரணமாக அமைந்தவர் விஸ்வநாதர் என்றால் மிகையாகாது.

## முதலாம் கிருஷ்ணப்பர் (1564–1572)

கி.பி. 1561ஆம் ஆண்டு கிருஷ்ணப்பர் அரியணை ஏறினார். இவருடைய ஆட்சி பாளையக்காரர்களின் கலகத்தில் துவங்கியது. இச்சமயம் தலைக்கோட்டையில் ஏற்பட்ட பெரும் போரில், முகம்மதியரை எதிர்த்து போரிடுமாறு அரியநாதர் அனுப்பப்பட்டார். இப்பாளையக்காரக் கலகத்தின் தலைவர் பரமக்குடியின் தும்பிச்சி நாயக்கர். தும்பிச்சி நாயக்கர் மதுரையில் அதிகம் செல்வாக்குப் பெற்றிருந்தார் என்று அவைக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. ஆகவே இவர் வெறும் பாளையக்காரராக இருந்துவிட விரும்பவில்லை. தம் நிலையை உயர்த்திக் கொள்ளும் நோக்குடன், ஒரு படையைச் சேர்த்துக் கொண்டார். அதனை பரமக்குடியில் தமக்குக் கீழ் வைத்திருந்தார். தம் நோக்கத்தில் ஈடேற, அண்டை நாட்டைத் தாக்கியழித்தார்; கிருஷ்ணப்பரை அவமதித்தார். பெரிய கிருஷ்ணப்ப நாயகரை (Peda Krishnappa Nayak) அனுப்பி, தும்பிச்சியை அடக்குமாறு முதலாம் கிருஷ்ணப்பர் பணித்தார். ஆனால் பெரிய கிருஷ்ணப்பரை தும்பிச்சி கொன்று விட்டார். இரண்டாம் முயற்சியில் மட்டுமே முதலாம் கிருஷ்ணப்பர் வெற்றி பெற வாய்ப்பிருந்தது. இச்சமயம் இறந்துபோன பெரிய கிருஷ்ணப்பரின் மகனாகிய சின்ன கேசவர் (Chinna Kesavar), பதின்மூன்று பாளையக்காரர்களுடனும், அவர்களின் படைகளுடனும் தும்பிச்சியைத் தாக்கினார். தும்பிச்சி அடக்கப்பட்டு, அவர் தலை துண்டிக்கப்பட்டது. கொல்லப்பட்டவரின் பிள்ளைகளை கிருஷ்ணப்பர் பழி தீர்த்துக்கொள்ளவில்லை; ஆனால் தும்பிச்சியின் நாடும் கவரப்பட்டது.

### கண்டிப் படையெடுப்பு

கண்டி அரசன் தும்பிச்சிக்கு நண்பன். தும்பிச்சியின் கொலையைக் கேட்டு, கோபமுற்ற கண்டி அரசன் கிருஷ்ணப்பரைப் பகைத்துக் கொண்டான். பெரும் கோபமுற்ற முதலாம் கிருஷ்ணப்பர் நாற்பத்திரண்டு பாளையக்காரப் படைகளின் உதவியுடன் மன்னார் (Mannar) பகுதியை நோக்கிப் படையெடுத்தார். திறை செலுத்துமாறு கண்டி அரசருக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால் கண்டி அரசர் இவ்வேண்டுகோளுக்குச் செவிசாய்க்கவில்லை. தம் நான்கு அமைச்சர்களின் தலைமையில் வந்த 40,000 போர் வீரர்களைக் கொண்டு, படையெடுத்து வந்தோரை கைது செய்ய கண்டியரசன் திட்டமிட்டான். புத்தளம் (Puttalam) போரில், சின்ன கேசவர் கண்டி அரசனைத் தோற்கடித்தார். பெரும்பகுதி கண்டிப்படைகள் கைது செய்யப்பட்டனர். ஆனால் கண்டி அரசன் கைது செய்யப்படவில்லை; அவனோ போர்க்களத்தில் விழுப்புண் எய்தி மாண்டான். தம் மைத்துனராகிய விஜய கோபால (Vijaya Gopala Nayak) நாயக்கரை கண்டியின் ஆளுநராக நியமித்தார். இப்படையெடுப்பு பற்றிய செய்திகளை மகாவம்சம் எங்கணும் கூறாத காரணத்தால், இப்படையெடுப்பு உண்மையில் நிகழ்ந்ததா என்று ஐயப்பட வேண்டியுள்ளது.

முதலாம் கிருஷ்ணப்பர் பேரரசுக்கு கீழ்ப்படிந்தே நடந்தார் என்று 1567இல் வெளியிடப்பட்ட சதாசிவரின் கிருஷ்ணாபுரம் பட்டயங்கள் பகருகின்றன. நெருக்கடிச் சமயங்களில் படையும் பொருளும் பேரரசுக்குக் கொடுத்துதவினார். அரியநாதர் தலைக்கோட்டைப் போரில் பங்கு பெற்றமையே இதற்குச் சான்று. வித்தளரின் (Vitthalaraya) தென்னிந்தியப் படையெடுப்புக்கு இவர் உதவினார். கிருஷ்ணப்பர் சிறந்த

போர் வீரர்; அனுபவம் மிக்க ஆட்சியாளர், மக்களின் நலனைப் பேணியவர். பாளையம்கோட்டைக்குக் கிழக்கேயுள்ள கிருஷ்ணாபுரத்தையும், திருநெல்வேலிக்கு மேற்கேயுள்ள கடயம் கிருஷ்ணாபுரத்தையும் எழுப்பினார். பல பழங்கோயில்கள் பழுதுபார்க்கப்பட்டன. பல புதுக் கோயில்கள் பணியப்பட்டன. அவர் ஒரு சிவன் கோவிலைக் கட்டியதாகவும், தெப்பக்குளத்தை அமைத்ததாகவும், பல அக்கிரகாரங்களை தொடங்கியதாகவும் அறிகிறோம். முதலாம் கிருஷ்ணப்பர் கி.பி. 1572இல் இறந்தார்.

## வீரப்ப நாயக்கர் (1572–1595)

கிருஷ்ணப்பரின் மூத்தமகன், வீரப்பர் 1572இல் தம் அரியணை ஏறினார். 'சின்ன தொரை' (Chinna Dorai) என்ற பெயருடன் கிருஷ்ணப்பரின் பிறிதொரு மகனாகிய விஸ்வநாதர் ஆட்சியில் பங்கு பெற்றிருந்தார். 'ஆளும் அரசருக்கு அடுத்தபடியாக அவருடைய இளவல் ஆட்சிப் பொறுப்பேற்கும் முறை இத்துடன் ஆரம்பமாகிறது' என்று நெல்சன் கூறுகின்றார். ஆனால் கல்வெட்டுச் சான்றுகள் இக்கருத்துக்கு மாறான செய்தியையே தருகின்றன. நெல்சனின் கூற்று 'இணையாட்சி'யைச் சுட்டுகிறது. ஆனால் ஒரே வேளையில், ஒரே அரியணையில் இருவர் இருந்து ஆளும் முறை தமிழக வரலாற்றில் இல்லை. ஆனால் ஆளும் அரசருக்கடுத்தபடியாக 'இளையராஜா' அதாவது 'யுவராஜா' என்ற பதவியுடன் ஒருவர் இயங்கும் முறையை நாம் சோழப் பேரரசர் காலத்திலிருந்தே காணலாம். எடுத்துக்காட்டாக, இராசராசன் ஆளும் பொழுது இராசேந்திரன், இளைய ராஜாவாக இருந்து வந்தான். 'இளையராஜா' அலங்கரிக்கும் பதவிக்கும், 'இணையாட்சி' யினர் அலங்கரிக்கும் பதவிக்கும் வேறுபாடுண்டு. முன்னையது அதிக அதிகாரம் இல்லாத பதவி; பின்னையது 'அதிகாரப் பங்கீட்டு ஆட்சி' அல்லது 'இணையாட்சி'யாகும். போதிய சான்றுகள் இல்லாத காரணத்தால் நெல்சனின் 'இணையாட்சி'க் கருத்தை நாம் ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

## வாணாதிராயர் கலகம்

வாணாதிராயர் மானாமதுரையை ஆண்டு வந்த சிற்றரசர்கள். இவர்கள் பாணர் (Banar) வழி வந்தோர். பாணர்கள் மாவலிப் பேரரசின் வழியினர் என்பது கருத்து. வாணா மதுரையே பிற்காலத்து மானாமதுரையாயிற்று. இப்பகுதியை மாவலி வாணாதிராயர் என்ற பாளையக்காரர் ஆண்டு வந்தார். இவருடைய முன்னோர்கள் மதுரை நாயக்கருக்கு அடங்கி நடந்து வந்தனர். வாணாதராயரின் கலகத்துக்குரிய காரணங்கள் புலப்படவில்லை. மாவலி வாணாதிராயர் மானாமதுரையை பலப் படுத்தினார். கோட்டை கொத்தளங்களை எழுப்பினார். அண்டை நாடுகளைத் தாக்கினார். வீரப்பர் இக்கலகத்தை அடக்கினார். இக்கலகப் பாளையக்காரரின் பாளையம் கைப்பற்றப்பட்டது. இதனை அடக்கியதால் தம் நாட்டை பெருங்கலகத்திலிருந்து காப்பாற்றிக் கொண்டார்.

பொதுவாக வீரப்பரின் ஆட்சிக்காலம் அமைதியும் ஒழுங்கும் நிறைந்த காலம். செழிப்பு அதிகமிருந்த காலம். தம் இதர காலத்தை நிலையான செயல்கள் புரிவதில் செலவிட்டார். திருச்சிக்கோட்டை விரிவாக்கப்பட்டது. அருப்புக்கோட்டையில்

புதுக்கோட்டை எழுப்பப்பட்டது. சிதம்பரம், மதுரைக் கோயில்கள் செப்பனிடப்பட்டன. வெள்ளியம்பலம், ஆயிரங்கால் மண்டபம், மூர்த்தியம்மன் மண்டபம், சுற்று மண்டபம், வீரப்ப மண்டபம் ஆகியவற்றை வீரப்பரே கட்டி எழுப்பினார் என்று திருப்பணிமாலை என்ற நூல் கூறுகின்றது. கம்பத்தடி மண்டபத்தை (Kambattadi Mandapa) இவரே கட்டினார் என்ற சுந்தரேசர் ஆலய 1584-ஆம் ஆண்டுக் கல்வெட்டு செப்புகின்றது. இதன் தூண்கள் பல புராணக்கதை ஓவியங்களாலும் சிற்பங்களாலும் அலங்கரிக்கப் பட்டுள்ளன.

வீரப்பர் பாரபட்சமற்ற மன்னர். மக்களின் நல்வாழ்வுக்காக பாடுபட்டார். நாட்டில் ஒழுங்கும், நீதியும் நிலைத்திருக்க முயன்றார். இவருடைய பரந்த உள்ளத்தை கோரிப்பாளயக் கல்லெழுத்து வலியுறுத்துகின்றது. ஏசு சங்கத்தார் மதுரையில் சங்கத்தை நிறுவ அனுமதி வழங்கப்பட்டனர். சமய மாற்றக் கொள்கையைப் பரப்பவும் ஆதரவு தரப்பட்டது. பேரரசரைப் பொறுத்தளவில் கீழ்ப்படிதலுடன் நடந்துகொண்டார். திருமலைக்கும், சீரங்கருக்கும் அடங்கியே நடந்தார். வீரப்பர் ஏறக்குறைய இருபத்தி இரண்டு ஆண்டுகளும், ஒன்பது மாதங்களும் ஆட்சி புரிந்தார். கி.பி. 1595ஆம் ஆண்டில் அவர் மரணமடைந்தார்.

## இரண்டாம் கிருஷ்ணப்பர் (1595–1601)

கிருஷ்ணப்பருடைய மிகவும் குறுகிய ஆட்சிக் காலம் இரண்டு நிகழ்ச்சிகளுக்குப் பெயர் பெற்றது. மதுரை நாயக்கர் நாட்டின் முதல் தளவாயாகப் பணியாற்றிய அரியநாதர் கி.பி. 1600ல் மரணமடைந்தார். இவருடைய மரணத்தால் மதுரை நாடு பாதிக்கப்பட வில்லை; எனினும் அவருடைய மறைவு நாட்டுக்குப் பேரிழப்பாகும். மீண்டும் பாண்டியர்கள் செல்வாக்குப் பெறத் தொடங்கினர். கிருஷ்ணப்பர் கி.பி. 1601இல் மற்றந்தார்.

## முத்து கிருஷ்ணப்பர் (1601–1609)

இரண்டாம் கிருஷ்ணப்பரைத் தொடர்ந்து உடனே முத்து கிருஷ்ணப்பர் அரியணை ஏறிடவில்லை. கல்லெழுத்து, நாணயச் சான்றுகள் நாட்டில் ஏற்பட்ட இடையீட்டைச் சுட்டுகின்றன. இவ்விடையீட்டுக்குக் காரணம், அவருடைய இளவலாகிய கஸ்தூரி ரங்கரின் முறையற்ற தலையீடேயாகும். ரங்கர் மதுரையரசின் அரியணையைக் கவர்ந்து கொண்டார். அரியணை ஏறிய ஒரு வாரகாலத்திற்குள் ரங்கர் மக்களின் எழுச்சியால் கொல்லப்பட்டார்.

முத்து கிருஷ்ணப்பரின் சாதனைகளில் தலையாயது சேதுபதிகளின் நாட்டை மறு பரிசீலனை செய்து ஒழுங்குபடுத்தியதேயாகும். இக்காலத்தில் மறவர் நாடு, மதுரை யிலிருந்து நியமிக்கப்பட்ட இரண்டு கமிஷனர்களால் கண்காணிக்கப்பட்டு வந்தது. விஸ்வநாதரால் செயல்படுத்தப்பட்ட இம்முறை கி.பி. 1600 வரையிலும் செயல்பட்டு வந்தது. 1600ஆம் ஆண்டிலிருந்து மறவர் நாட்டில் குழப்பங்கள் மலியத் தொடங்கின. கலகங்களால் அமைதி பாதிக்கப்பட்டது. கிராமங்கள் கொள்ளையடிக்கப்பட்டன. கிராமப் புறமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். வழிப்போக்கர்களும், புனிதப் பயணிகளும்

கொள்ளையடிக்கப்பட்டு கொல்லப்பட்டனர். மக்கள் இடையே பீதி நிலவியிருந்தது. பயத்தினால் மக்கள் இராமேஸ்வரம் கோயிலுக்குக்கூடப் போக இயலாமல் தவித்தனர். கடலோரப்பகுதிகளில் போர்ச்சுக்கீசியரின் அழிவுச்செயல்கள் பெருகின. அவர்கள் கடலோரச் செல்வங்களைக் கொள்ளையிடத் தொடங்கினர். சேதுபதிகளும் தங்களுடைய அரசியல், பொருளாதார, சமய காரணங்களால் புனர் வாழ்வு பெறத் தொடங்கினர். அவைக் குறிப்புகள் இவற்றிற்குரிய அடிப்படைக்காரணங்களை விளக்கிக் கூறுகின்றன.

மறவர் நாட்டில் அமைதி ஏற்படுத்துமாறு முத்து கிருஷ்ணப்பர் சடையத்தேவர் உடையான் சேதுபதியைப்பணித்தார். சடையத்தேவர் இராமநாதபுரத்தைப் பலப்படுத்தி, கோட்டை மதில்களை எழுப்பினார். பொகளூரையும் (Poga!ur) படைக்கலங்களுடன் பலப்படுத்தினார். இராமேஸ்வரம் செல்லும் புனிதப்பயணிகளுக்கு காவல் வழங்கினார். அடங்காதத் தலைவர்களை அடக்கினார். காளயார் கோவிலில் (Kalayar Koil) வல்லமை வாய்ந்த அரசு நிறுவினார். இவ்வாறு நாட்டில் அமைதியை சடையத்தேவர் ஏற்படுத் தினார். இச்சாதனைகள் சேதுபதிகளின் புனர் வாழ்வுக்கு வழி வகுத்தன.

முத்து வீரப்பர் அமைதியான ஆட்சியை வழி நடத்திச் சென்றார். சேதுபதிகளின் புனரமைப்பு இதற்குத்தகுந்த எடுத்துக்காட்டு. சேசு சங்கத்தாரை பொறையுடன் நடத்தினார். இதற்குச் சான்று இராபர்ட்—டி — நொபிலியே (Robert de Nobili). கோயில் கட்டுவதிலும், புது நகரங்கள் தோற்றுவிப்பதிலும், தண்ணீர்த் தொட்டிகள், குளங்கள், கால்வாய்கள் போன்ற வேளாண்மைச் சீர்த்திருத்தங்கள் செய்வதிலும் தம் செல்வத்தைச் செலவழித்தார். முத்து கிருஷ்ணப்பர் கி.பி. 1609இல் மரணமடைந்தார்.

## முதலாம் முத்து வீரப்பர் (1609–1623)

முத்து கிருஷ்ணப்பருக்குப்பின் அவருடைய மகன் முத்துவீரப்பர் கி.பி. 1609இல் அரியணை ஏறினார். வீரப்பர் தம்மை விஜயநகரிடமிருந்து மொத்தமாக விலக்கிக் கொள்ள விழைந்தார். கி.பி. 1611-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 30ஆம் நாள் வீகோ பாதிரியார் எழுதிய கடிதம், வீரப்பர் விஜயநகருக்கு ஒழுங்காக கப்பம் கட்டுவதில்லை என்று அறிவிக்கின்றது. அவர் விரும்பி கப்பம் கட்டியதுமில்லை. மதுரை நாட்டை முழு சுதந்திர நாடாக்கவே அவர் திட்டமிட்டார்.

விஜய நகரில் ஏற்பட்ட குழப்பங்களும் இவருடைய வாய்ப்பை வளப்படுத்தின. பேரரசர் முதலாம் வேங்கடர் இறக்கவே, ஜக்கராயருக்கும், யாச்சமருக்குமிடையே போட்டிப்பகை மூண்டது. ஜக்கர் விஜய நகர அரவீடுவம்சத்தாரின் ஆட்சியை அத்துடன் முடிக்கத் திட்டமிட்டார். யாச்சமர் அவ்வமிச ஆட்சியை மீண்டும் பலப்படுத்தப் பாடுபட்டார். இந்தப் பெரும் போட்டியில் வீரப்பர் ஜக்கரின் பக்கம் நின்று போராடினார். மேலும் மதுரைக்கும் தஞ்சைக்குமிடையே சுமுகமான உறவு இருக்கவுமில்லை. தஞ்சையைத் தாக்கவும், ஜக்கருக்கு உதவி செய்யவும் வேண்டி, வீரப்பர் தம் தலை நகரை மதுரையிலிருந்து திருச்சிக்கு மாற்றினார். 1616இல் தோப்பூரில் மூண்ட போரில் ஜக்கராயர் கொல்லப்பட்டார். வீரப்பர் தோல்வியைத் தழுவினார். விடுதலையை வீரப்பர் நினைத்த அளவுக்குப் பெற இயலவில்லை. பாண்டியருடன் சுமுகமான உறவு கொண்டிருந்தார். தஞ்சை நாயக்கருடன் நடந்த போரில் பாண்டியன் வீரப்பருக்கு உதவினார்.

முத்து வீரப்பர் தஞ்சையைத் தாக்கிய வேளையில் மைசூரின் இராஜஉடையார் திண்டுக்கல் பகுதியைத் தாக்க, முகிலன் (Mukilan) என்ற படைத்தலைவனை அனுப்பினார். விருப்பாட்சி, கன்னிவாடி பாளையக்காரர்கள் படையுடன் வந்தோரை விரட்டியடித்தனர். இவ்வுதவிக்காக விருப்பாட்சி பாளயக்காரர் 'பாதைக் காவலர்' என்ற பட்டத்தையும், கன்னிவாடி பாளையக்காரர் 'சின்னமைசூரன்' என்ற விருதையும் பெற்றனர்.

சமயம், பேரரசு ஆகியவற்றைப் பொறுத்தளவில் முத்து வீரப்பரின் ஆட்சி ஒரு புது திருப்பத்தைத் தந்தது. மைசூரைப் பொறுத்தளவில் தொடர்ந்த படையெடுப்பின் தொடக்கமாகவும் அமைந்தது. சேசு சங்கத்தாரின் சமயப் பிரச்சாரத்திற்குத் தடைகள் தோன்றலாயின. முழு சமயமாற்றத்தை முத்து வீரப்பர் ஆதரிக்கவில்லை.

## திருமலை (1623–1659)

மதுரை நாயக்கரில் பெரும் புகழும் பேரும் தேடியவர் திருமலையே. திருமலை 1623இல் இருந்து நாட்டை ஆளத் தொடங்கினார். அவருடைய ஆட்சி 30 ஆண்டுகள் நீடித்தன; அவ்வாட்சி கி.பி. 1659இல் முடிவடைந்தது என்று வேறுபட்ட கருத்துக்கள் உள்ளன. திருமலையின் ஆட்சி 30 ஆண்டுகள் நீடித்தது என்றால், அவருடைய மரணம் 1659இல் ஏற்பட்டது என்றால், அவர் 1629இல் தான் அரியணை ஏறியிருக்க முடியும். ஆனால் அவருடைய ஆட்சி 1623இல் தொடங்கியது என்றால் அவருடைய ஆட்சியின் முடிவு 1653இல் ஏற்பட்டிருக்க வேண்டும். மாறாக அவருடைய ஆட்சியின் முடிவு 1659இல் ஏற்பட்டிருக்கிறது. அவ்வாறாயின் 1623இல் இருந்து 1628 வரை திருமலை என்னவாக இருந்தார்? தம் அண்ணன் வயது முதிர்ச்சியடைந்திருந்த காரணத்தால் திருமலை ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கலாம். ஆனால் அவர் தம் தமையனின் மரணத்திற்குப் பின்னரே முடிசூட்டிக் கொண்டிருக்க வாய்ப்புள்ளது. ஆகவே 1623 முதல் 1628 வரை பெயரளவில் மன்னராகவும், 1628 முதல் 1659 வரை உண்மை மன்னராகவும் திருமலை மதுரையை ஆண்டிருக்கலாம்.

## வெளிநாட்டுக் கொள்கை (பேரரசுடன் போர்)

திருமலை விஜயநகரப் பேரரசின் மேலாண்மையை மதித்து நடந்தார் என்று இரண்டாம் வேங்கடரின் கூனியூர் (Kuniyur) பட்டயங்கள் அறிவிக்கின்றன. பெயரளவில் மட்டுமே திருமலை விஜயநகரப் பேராண்மையை ஒப்புக்கொண்டார். திருமலை முழுச் சுதந்திரத்தை விரும்பியே திட்டங்களைத் தீட்டினார் என்று சேசு சங்கத்தாரின் கடிதங்கள் கூறுகின்றன. கப்பம் கட்டுவதைக்கூட திருமலை விரும்பவில்லை. திருமலையின் திட்டங்கள் காலம் பார்த்துப் பாயும் புலிபோல் பதுங்கிக் கிடந்தன. 1641இல் இரண்டாம் வேங்கடர் மறைந்தார். 1642இல் மூன்றாம் சீரங்கர் விஜயநகரப் பேரரசர் ஆனார். புலி பாயும் காலம் வந்து விட்டது. இரண்டாம் வேங்கடருக்கு நேர்மாறான கொள்கை களையுடையவர் மூன்றாம் சீரங்கர். மதுரையைப் பொறுத்தளவில் சீரங்கர் விரோதியாகவே தோன்றினார். பரம்பரை உரிமைகளை மனதிற்கொண்டு, சீரங்கர் 1645இல் மதுரையைத் தாக்கினார். தஞ்சை, செஞ்சி நாயக்கரின் உதவியுடன் திருமலை சீரங்கரை எதிர்த்தார். தஞ்சை நாயக்கர் இவ்வுடன்பாட்டை இரகசியமாகப் பேரரசருக்கு அறிவித்தார். தஞ்சை நாயக்கர் துரோகம் செய்த காரணத்தால், திருமலை

கோல்கொண்டா சுல்தானின் உதவியை நாடினார். மிர் ஜம்லா (Mir Jumla) தலைமையிலான கோல்கொண்டாப் படைகள் பேரரசின் கீழ் எல்லைகளைத் தாக்கின. பேரரசைக் காப்பாற்றுதற்பொருட்டு, மதுரையை விடுத்து, பேரரசர் வேலூருக்கு ஓடினார். சீரங்கர் முதலில் முகம்மதியரை வென்றார். மேலும் சுல்தான் வேலூரைத் தாக்கவே, செயலற்றுப் போன பேரரசர் செய்வதறியாது திகைத்தார். ஆகவே அவர் நாயக்கரின் உதவியை நாடினார். அவருடைய இம்முயற்சி பயன்தரவில்லை என்று புரோயென்ஸா (Proenza)ப் பாதிரியாரின் கடிதம் கூறுகிறது. மேற்கொண்டு வெற்றி பெற இயலாது என்பதுணர்ந்த பேரரசர் தஞ்சைக் காடுகளுக்குச் சென்று, பின் மைசூரில் அடைக்கலம் புகுந்தார்.

வேலூரைக் கைப்பற்றிய கோல்கொண்டா சுல்தான் செஞ்சியை முற்றுகையிட்டான். இதுகேட்டு பீதியடைந்த தஞ்சை மன்னர் நம் நாட்டை மாற்றானிடம் ஒப்படைத்தார். இதனால் பீதியடையாத திருமலை கோல்கொண்டா சுல்தானை முறியடிக்க, பிஜப்பூர் சுல்தானுடன் சேர்ந்து கொண்டார். பிஜப்பூர் சுல்தானின் உதவியுடன் திருமலை செஞ்சியைக் காப்பாற்றப் புறப்பட்டார். முற்றுகை நீண்டு நடந்த போதிலும், மதுரைப்படையால் வெற்றியேதும் பெற இயலவில்லை. முடிவில் இரு சுல்தான்களும் ஒப்பந்தம் செய்து கொண்டனர். பிஜப்பூரின் எதிர்ச் செயலும், மதுரைப் படையிடையே ஏற்பட்ட பிரிவினையும் தமிழ்நாட்டில் நாயக்கரின் செல்வாக்கைப் பாதித்தன. செஞ்சி முகம்மதியர் கைவசமாயிற்று. திருமலைக்கு உதவ வந்த பிஜப்பூரியர் செஞ்சிக்கு மன்னராயினர். செஞ்சிக்குப்பின் முகம்மதியர் தஞ்சையையும், மதுரையையும் தாக்கினர், கொள்ளையடித்தனர். இறுதியில் தஞ்சை, மதுரை நாயக்கர் முகம்மதியருக்கு அடிபணிந்தனர். கள்ளர்களின் உதவி பெற்ற திருமலை முகம்மதியரை துரத்தியடித்தார் என்றும் கூறப்படுகிறது. அவர்கள் செஞ்சிக்கு ஓடி ஒளிந்து கொண்டனர் என்றும் கூறப்படுகிறது. முகம்மதியரின் செயல்கள் ஓய்ந்தபின் மூன்றாம் சீரங்கர் மைசூரின் உதவியுடன் பேரரசைத் திருப்பிப் பெற முயன்றார். போர்க்கொள்ளைகளைப் பங்கிடுவதில் ஏற்பட்ட வேறுபாட்டால், பிஜப்பூர் சுல்தானும், கோல்கொண்டா படைத்தலைவன் மிர்ஜம்லாவும் பகைவர்களாயினர். இதனைப் பயன்படுத்திய சீரங்கர் வேலூரைக் கைப்பற்றினார். 1652இல் வேலூரே விஜயநகரப் பேரரசு ஆயிற்று.

சீரங்கரின் இச்செயல் திருமலைக்கு வெறுப்பூட்டியது. மீண்டும் திருமலை வேலூரையும், மைசூரையும் தாக்குமாறு பிஜப்பூர் சுல்தானை வேண்டினார். 'நாட்டைக் காப்பாற்றவல்ல நரசிங்கருக்கு உதவி செய்யாமல் திருமலை மீண்டும் முகம்மதியருக்கு உதவி செய்தார்; உதவிக்கு மைசூரை அழைக்காமல் அதனைத் தாக்குமாறு முகம்மதியரைத் தூண்டினார்' என்று புரோயென்ஸா பாதிரியார் கூறுகின்றார். இம்முடிவு பெரும்பாலும் பொருத்தமானதே. ஆனால் பேராசிரியர் சத்தியநாதைய்யர் திருமலையின் செயல்களை ஆமோதித்தார். சீரங்கனும் மைசூரும் முகம்மதியரை விட திருமலைக்குப் பகைவர்கள். 1653இல் பிஜப்பூர் படைகள் மைசூரையும் வேலூரையும் தாக்கின. சீரங்கன் பிஜப்பூர் தளபதி கான் மகம்மதோடு (Khan Mahammad) அமைதி உடன்பாடு செய்து கொண்டார். சந்திரகிரிக் கோட்டையையும், சுற்றுப்புறங்களையும் சீரங்கர் பிஜப்பூருக்கு வழங்கினார்.

திருமலையின் இச்செயல் அவருடைய சுயநலத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டு என்று கருதப்படுகிறது. வேலூரைத் தாக்க இரண்டாம் முறையாக பிஜப்பூர் சுல்தானை திருமலை அழைத்திருக்கக்கூடாது; இச்செயல் அவருடைய அரசத்துரோகத்தைக் காட்டுகிறது என்று பேராசிரியர் S.K. அய்யங்கார் கருதுகிறார். ஆனால் பேராசிரியர் சத்தியநாதைய்யர் திருமலையின் இச்செயலை துரோகமாகக் கொள்ளவில்லை. அந்நியரை விஜயநகர் மீது முதலில் ஏவிய சீரங்கரைப் போன்று திருமலை துரோகி அல்ல. அந்நியர் பேரரசுக்குட் பட்ட நாடுகளைத் தாக்கும்போது, அந்நாடுகளைப் காப்பாற்ற வேண்டிய சீரங்கரோ, அவர்களுடன் இணைந்து அந்நாடுகளைத் தாக்கும் போது ஏன் அப்படிப்பட்ட பேரரசுக்கு அடங்கி நடக்க வேண்டும்? எவ்வகையிலும் சீரங்கர் திருமலைக்கு பயன்படாநிலையில் ஏன் திருமலை சீரங்கருக்குத் திறை செலுத்த வேண்டும்? இந்நிலையில் மதுரைப்படை தாமே இயங்கி வந்தது. தம் படை பலத்தை நம்பியே அந்நியரை எதிர்த்தது. தம் வருவாயை நம்பியே போர்களில் ஈடுபட்டது. ஆகவே திருமலை பேரரசருக்கு உதவுவதாக நடித்துக்காட்ட விரும்பவில்லை. வேலூரே பேரரசு என்ற அளவுக்குக் குறைக்கப்பட்டபின் ஒரு பேரரசர் ஏன் அப்படிப்பட்ட பேரரசருக்கு மற்றவர்களின் கீழ்படிவு எப்படிக் கிடைக்கும்?

பிஜப்பூர் சுல்தான் சீரங்கனுக்கு நீண்ட நாள் எதிரி. 1653இல் சந்திரகிரியைக் கைப்பற்றிய கோல்கொண்டா சுல்தானும் சீரங்கனுக்குப் பகைவன் ஆயினான். இருதலைக் கொள்ளி எறும்பாகிய சீரங்கன் மொகலாயர் உதவியை நாடினான். உதவி நாடிய சீரங்கனுக்கு உதவி ஏதும் கிட்டவில்லை. நண்பர்களும் விரோதியாயினர். ஒரு காலத்தில் அடிபணிந்து ஆண்ட ஆளுநர்களும் உதவி செய்யவில்லை. காலத்தின் விளையாட்டால் அல்லலுற்ற சீரங்கன் சிற்றரசர்களால் தூக்கி எறிந்து விளையாடப்பட்ட பந்தாயினான். சந்திரகிரி, வேலூரிலிருந்து விரட்டப்பட்ட சீரங்கனுக்கு பேரரசில்லை, அரியணையில்லை. அவன் 1658இல் சந்திரகிரியை விட்டு மைசூருக்குச் சென்றான். அங்கு 1672இல் இறந்து விட்டான். சீரங்கனின் மரணத்துடன் விஜயநகரப் பேரரசும் மறைந்து விட்டது.

பேரரசிடமிருந்து முழுச் சுதந்திரத்தைப் பெறவிழைந்து போராடிய முதல் மதுரை நாயக்கர் திருமலையே என்று நெல்சன் கூறுகின்றார். இதனைப் பேராசிரியர்கள் அய்யங்காரும், சத்தியநாதைய்யரும் ஒப்புக் கொள்வர். இதனை நாம் ஏற்றுக் கொள்வதற்கில்லை. ஏனெனில் திருமலைக்கு முன் முத்துவீரப்பர் முயன்று தோற்றார். 1610இல் எல்லாம் மைசூரின் இராய உடையார் சுதந்திரம் வெளியிட்டுக் கொண்டார். சுதந்திரம் பெற்ற அரசன் என்ற வகையில் அவர் சீரங்கப்பட்டணத்தைக் கைப்பற்றிக் கொண்டார். இதனை கல்லெழுத்துக்களும், சேசு சங்கத்தாரின் கடிதங்களும் வலியுறுத்துகின்றன.

## மைசூர்ப்போர்

மெக்கன்சீ கைப்பிரதிகள் (Mackenzie Manuscripts) மைசூருக்கும் மதுரைக்கும் ஏற்பட்ட போரைக் கூறுகின்றன. மைசூரின் மன்னன் சாமராய உடையார் திண்டுக்கல் பகுதியைக் கைப்பற்ற வேண்டி, ஜரசூர நந்திராயா (Jarasura nandi Raya) என்பவரின் தலைமையில் படைகளை ஏவினான். மதுரையின் தளவாயாகிய இராமப்பையனும்,

கன்னிவாடியின் பாளயக்காரராகிய ரங்கண்ண நாயக்கரும் இணைந்து, மைசூர்ப் படைகளை விரட்டி அடித்தன. தமிழ்நாட்டின் எல்லையிலிருந்து அவர்களை விரட்டியடித்த மதுரைப்படை, மைசூரின் தலைநகரை முற்றுகையிட்டதாகக் கூறப்படுகிறது. மதுரை தளவாய் புகழின் உச்சநிலைக்கு எட்டினார்.

## திருவிதாங்கூர் படையெடுப்பு

ராமராய வித்தலர் திருவிதாங்கூரின் திருவதி (Tiruvadi) அரசரை வென்றார். திருவதி அரசர் விஜயநகருக்கு அடிபணிந்து, திறை செலுத்தி வந்தார். மதுரை நாயக்கருக்கும் அடங்கி நடந்தார். திருமலையின் காலத்தில் இவ்வுறவு பாதிக்கப்பட்டது. திருவிதாங்கூரின் உண்ணி கேரளவர்மன் (Unni Kerala Varma) என்ற மன்னன் (1631இல் அரியணை ஏறியவன்) மதுரைக்குக் கப்பம் கட்டத் தவறினான். கப்பம் கட்ட மறுத்ததால் கோபங்கொண்ட திருமலை, திருவிதாங்கூர் நோக்கிப் படையெடுத்தார். மதுரைப்படைக்கு தளவாய் இராமப்பையயன் தலைமை தாங்கினார். இராமப்பையயன் திருவிதாங்கூர் மன்னரை முறியடித்தான் என்று 1635இல் திருவதி மன்னன் வெளியிட்ட கல்லெழுத்தும், இராமப்பையயன் அம்மானையும் கூறுகின்றன. திருவிதாங்கூர் மன்னர்கள் மதுரைக்குத் திறை செலுத்தும் சிற்றரசர்களாயினர். இதனை ஜான் நியூகாப் (John Nieuhoff) பின் குறிப்புகள் சுட்டுகின்றன.

## சேதுபதிகளுடன் உறவு

இராமநாதபுரச் சேதுபதிகள் மதுரை நாயக்கருக்கு அடங்கிய சிற்றரசர்களே. ஒழுங்காய் மதுரைக்கு திறையும் செலுத்தி வந்தனர். 1623இல் கூத்தன் (Kuttan) சேதுபதி இராமநாதபுரத் தலைவர் ஆனார். அவருக்குப்பின் இரண்டாம் சடையத்தேவர் பதவி பெற்றார். இவர் 'தளவாய் சேதுபதி' என்ற விருதுப் பெயரால் அறியப்பட்டார். இரண்டாண்டுகால ஆட்சிக்குப்பின் திருமலைக்கும், தளவாய் சேதுபதிக்குமிடையே வேறுபாடு ஏற்பட்டது. தளவாயின் முறையற்ற தம்பியாகிய தம்பி (Thambi) மறவர் நாட்டுத் தலைவராக விழைந்தார். திருமலை, தம்பியின் வேண்டுகோளுக்கு இணங்கினார். திருமலைக்கும் தளவாய்க்குமிடையே போர் மூண்டது. அவைக் குறிப்புக்கள் வேறு காரணங்களைக் கூறுகின்றன. மதுரைக்குத் தளவாய் அடங்கவில்லை; திறை ஒழுங்காய் செலுத்தவில்லை என்பனவே அவை. இராமப்பையயனும், ரங்கண்ணநாயக்கனும் இணைந்து மறவர் நாட்டைத் தாக்கினர். முதலில் தோல்விகளைத் தழுவியபோதும், அவர்கள் சேதுபதியை இராமேஸ்வரத்திற்கு விரட்டினர். படை மாற்றத்திற்காக பாம்பனில் பாலம்கட்டி, சேதுபதியைத் தாக்கினர். சேதுபதி கைது செய்யப்பட்டார். போர்ச்சுக்கீசியரின் உதவியுடன் மட்டுமே சேதுபதியை திருமலையின் படைகள் கைது செய்ய இயன்றது. இப்போரில் இராமப்பையயன் இறத்தாகவும் கூறப்படுகிறது. 1638-இல் வெளியிடப்பட்ட ஒரு கல்லெழுத்து இராமப்பையயன் கோவாவுக்குத் தூதராகச் சென்றார் என்று அறிவிக்கின்றது. ஆகவே இராமப்பையயன் இப்போரில் மாண்டதாகக் கூற இயலவில்லை. திருமலை இப்போரில் பெருவெற்றி பெற்றார். தம்பி இராமநாத புரத்தின் மன்னன் ஆனார்.

மறவர் நாட்டில் அரசுரிமைப்போர் முடிந்தபாடில்லை. தம்பியின் ஆட்சியில் மக்கள் வெறுப்படைந்தனர். தளவாய் சேதுபதியின் மருமக்களாகிய ரகுநாதரும் நாராயணரும் தம்பியை எதிர்த்து கலகம் செய்தனர். தம்பி, திருமலையின் உதவியை நாடினார். மறவர் நாட்டின் அடிப்படை கலகக் காரணத்தை உணர்ந்த திருமலை தளவாயை விடுவித்து, மன்னராக மாற்றினார். 1645இல் தளவாய் சேதுபதியை தம்பி கொன்றான். பின்னர் திருமலை சேதுபதி நாட்டை மூன்று பகுதிகளாகப் பிரித்தார். ரகுநாதரும், அவருடைய தம்பி தணக்கத்தேவரும், தம்பியும் பங்காளிகளாயினர். சேதுபதி நாட்டின் ஒற்றுமைக்கு இது ஊறுவிளைவித்தது. தம்பியும், தணக்கத்தேவரும் இறந்துபோகவே, ரகுநாதர் சேதுபதியானார். அவர் நாயக்கருக்கு அடங்கி நடந்தார். நாயக்கருக்கு படை, பொருள் உதவிகள் புரிந்தார். முகம்மதியப் படைகளை விரட்டுவதிலும், பாளையக்காரர்களை அடக்குவதிலும் இவருக்குப் பெரும் பங்குண்டு. இவ்வுதவிக்காக ரகுநாதர் முத்துச் செல்வத்தில் பங்கு வழங்கப்பட்டார். 'நாட்டுக் காவலர்' என்ற விருதும் வழங்கப்பட்டது. 'திருமலை சேதுபதி' என்ற பட்டப் பெயரும் அவருக்கு அளிக்கப்பட்டது.

### மூக்கறுப்புப் போர்

திருமலை பிஜப்பூர் சுல்தானுடன் கொண்டிருந்த நட்புறவை மைசூரின் அரசனாகிய கந்திரவ நரசராயன் (Kanthirava Narasa Raya) விரும்பவில்லை. ஆகவே திருமலையைத் தாக்கத் தகுந்த காலத்தை நோக்கியிருந்தான். பிஜப்பூர்ப் படைகள் மைசூரை விட்டு வெளியேறியதும், மதுரையைத் தாக்கத் தகுந்த தருணம் கிட்டியது. மதுரையைத் தாக்குமாறு தளவாய் ஹம்வீர (Hamvira) என்பவர் அனுப்பப்பட்டார். 1656இல் சத்திய மங்கலப்பகுதி தாக்கப்பட்டு, கைப்பற்றப்பட்டது. அப்படை மதுரை நோக்கி அனுப்பப் பட்டது. மதுரைக்குச் செல்லும் வழியில் அகப்பட்டோர் மூக்குகள் அரியப்பட்டன. இவ்வேளையில் திருமலை நோய்வாய்ப்பட்டிருந்தார். பாளயக்காரர்களுக்கும், உறவு கொண்ட பிறமன்னர்களுக்கும் செய்தி அனுப்பப்பட்டது. ரகுநாத சேதுபதி மட்டும் வேண்டுகோளுக்கு இணங்கினார். 25,000 படைகளுடன் சேதுபதி மதுரையை நோக்கி வந்தார். திருமலை சேகரித்த 35,000 வீரர்களுடன் மறவர்களும் சேர்ந்து மதுரையைக் காத்து நின்றனர். மைசூர்ப்படைகள் திண்டுக்கல் பகுதிக்கு விரட்டியடிக்கப்பட்டனர். திண்டுக்கல் அருகில் நிகழ்ந்த போரில் இருதரப்பினரும் ஏறத்தாழ 12,000 வீரர்களை இழந்தனர். சேதுபதியின் இவ்வீரச் செயலைப் பாராட்டி 'திருமலை சேதுபதி' என்ற விருது அவருக்கு வழங்கப்பட்டது. பல நன்கொடைகளும் வழங்கப்பட்டன; வேறுபல சலுகைகளும் சேதுபதிக்குத் தரப்பட்டன.

மதுரையைக் காப்பாற்றிய பெருமையை சேதுபதிக்கு ஒட்டு மொத்தமாக கருநாடக ஆளுநர் வரலாறு தருகின்றது. மைசூரை எதிர்த்து பிறிதொரு படையெடுப்பு மதுரை நடத்தியதாகப் பாதிரியார்களின் கடிதங்கள் அறிவிக்கின்றன. இப்படையெடுப்பின் தலைவர் யார் என்று குறிப்பிடப்படவில்லை. திருமலையின் இறுதிக்காலத்தில், திருமலையின் இளவலாகிய குமார முத்தும் (Kumara Muthu), ரங்கண்ண நாயக்கரும் சேர்ந்து மைசூர் மீது படையெடுத்ததாக மக்கன்சீ கைப்பிரதிகள் அறிவிக்கின்றன. மதுரையிலிருந்து மைசூரியரை விரட்டியது மேற்கூறியவர்களென்றும் இக்கைப்பிரதிகள் சுட்டுகின்றன. மைசூரில் மதுரை வீரர்களால் மூக்கறுப்பு நிகழ்த்தப்பட்டது. மதுரைப்

படைகள் நஞ்சங்கூடு (Nanjankudu) வரையிலும் முன்னேறிச் சென்று, அன்று மைசூரியர் செய்த அதே மூக்கறுப்பு நிகழ்ச்சி நடத்தினர். இப்போரின் இறுதிக்குள் திருமலையும் இறந்து விட்டார்.

## ஐரோப்பியருடன் உறவு

தமிழகத்தில் உறைந்திருந்த ஐரோப்பிய வர்த்தகச் சங்கங்கள் விவகாரங்களில் தொடக்கத்திலிருந்தே திருமலை தலையிடவில்லை. ஆனால் போர்ச்சுகீசியருக்கும் டச்சுகாரருக்குமிடையே போட்டி ஏற்பட்டது. இருவருக்குமிடையே நிகழ்ந்த சண்டைகளில் திருமலை நடுநிலை வகித்தார். தளவாய் சேதுபதியைக் கைதுசெய்வதில் போர்ச்சுக்கீசியர் பேருதவி புரிந்தனர். இவ்வுதவியை மதித்து, போர்ச்சுக்கீசியருக்கு திருமலை சில சலுகைகளை வழங்கினார். இதனால் பொறையுற்ற ஆலந்தியர் திருமலையை வெறுக்கத்தொடங்கினர். 1648இல் போர்ச்சுக்கீசியருக்காக திருமலை ஆலந்தியரை காயல்பட்டினத்திலிருந்து விரட்டினார். பழிக்குப்பழி தீர்க்கத் திட்டமிட்ட ஆலந்தியர், திருச்செந்தூர் கோயிலைக் கைப்பற்றி, அதன் படைக் களஞ்சியமாக மாற்றினர். தூத்துக்குடியைத் தாக்கினர். 1658இல் தூத்துக்குடி ஆலந்தியரால் கைப்பற்றப்பட்டது. அங்கு தங்கியிருந்த போர்ச்சுக்கீசியர் விரட்டப்பட்டனர். ஆலந்திரியரின் ஊடுருவலைத் தடுக்க திருமலை எம்முயற்சியையும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. கடலோரப்பகுதிகளை ஐரோப்பியருக்கு விட்டுக்கொடுத்து, அவர்கள் அளித்த திறையுடன் மனதிருப்தி திருமலை அடைந்திருக்க வேண்டும்.

## தலைநகர் மாற்றம்

அவைக் குறிப்புகளும், பாதிரியார்க் கடிதங்களும் திருமலை தலைநகரை திருச்சியிலிருந்து மதுரைக்கு மாற்றியதாக அறிவிக்கின்றன. தலைநகர் மாற்றத்திற்கு அறிஞர் பல காரணங்களைத் தருவர். மதுரை மீனாட்சியும் சுந்தரேசரும் தம் மண்டைச் சளி நோயை நீக்குவர் என்ற மூடநம்பிக்கையில் தலைநகரை மாற்றினார் என்று சிலர் கருதுவர். திருச்சிராப்பள்ளி முடி நாட்டின் நடுவில் அமைந்திராக் காரணத்தால் தலைநகரை மதுரைக்கு மாற்றினார் என்பர் மற்றும் சிலர். இப்புவியியல் அடிப்படையிலான கருத்து பெரும்பாலும் பொருந்துவதாக உள்ளது. திருச்சிராப்பள்ளி தாக்குதல்களுக்கு அண்டையில் இருப்பதைப் பலரும் உணர்ந்தனர். மத்தியில் அது அமையாத காரணத்தால், முடிநாட்டை கண்காணிப்பது கடினம். மதுரையின் வீழ்ச்சி, முடிநாட்டின் வீழ்ச்சியைக் குறிக்கும். ஆகவே திண்டுக்கல் பகுதியைப் பலப்படுத்தவும், மதுரையை வளப்படுத்தவும் வேண்டி தலைநகரை திருமலை மாற்றினார். மேலும் அன்றைய மதுரை தமிழகப் பண்பாட்டின் பிறப்பிடம், உறைவிடம்; மதுரையிலிருந்துதான் மற்ற பகுதிகளுக்கு தமிழ்ப் பண்பாடு பரவி வந்தது; முடிநாட்டின் நடுப்பகுதி மதுரையே. மதுரை இந்து சமயத்தின் நல்ல பண்புகளையும், தத்துவங்களையும் கொண்டு இயங்கிய பகுதி, மத்தியிலிருந்தபடி இதரப்பகுதிகளை கண்காணிக்கலாம் என்று திருமலை எண்ணியிருப்பார்.

இந்து சமயத்தில் தளராத நம்பிக்கையுடையவர் திருமலை. ஆகவே அவர் பல சமயச்சீர்திருத்தங்களைச் செய்துள்ளார். அவற்றில் தலையாயது சித்திரைத் திருவிழாவாகும். தெப்பத்திருவிழா, தேர்த்திருவிழா போன்ற விழாக்களை ஒழுங்குபடுத்தினார். நவராத்திரித்

திருவிழாவை நடத்துமாறு திருமலை சேதுபதிக்கு அனுமதி வழங்கினார். கோயில்கள் பல புதுப்பிக்கப்பட்டன; பல பழுதுபார்க்கப்பட்டன; இன்னும் பல செப்பனிடப்பட்டன. பல கோயில்கள், சத்திரங்கள், மண்டபங்கள், வழிப்போக்கர் விடுதிகள் கட்டப்பட்டன. கோயில்களுக்குப் பல தானங்கள், வரியிலா நிலங்களும் மான்யமாக விடப்பட்டன. தெப்பக்குளங்கள் பல வெட்டப்பட்டன. அவற்றில் மிக பிரசித்தி பெற்றது மாரியம்மன் தெப்பக்குளமாகும். புது மண்டபம் அல்லது வசந்தமண்டபம் அவரால் பணியப்பட்டது. திருமலையின் புகழை அழியாது காத்து நிற்பது அவர் கட்டியெழுப்பிய மகால் (Mahal) ஆகும். இது இந்திய முஸ்லீம் கலைகளின் இணைவின் எடுத்துக்காட்டு. மதுரையில் நெய்தல் தொழிலை ஊக்கப்படுத்த, சௌராஷ்டிரப் பகுதியில் இருந்து பல தொழிலாளரை அழைத்து, மதுரையில் குடியேற்றினார். திருமலையிடம் சௌராட்டிர மக்கள் அதிக சலுகைகள் பெற்றுத்திகழ்ந்தனர். திருமலையின் காலத்தில் இதர இனத்தார்கள் ஒடுக்கப்பட்டனர். குறிப்பாக நாடார் இனத்தைச் சேர்ந்தோரும், மறவர்களும் ஒடுக்கப்பட்டதாக சான்றுகளுள்ளன. ஆகவே திருநெல்வேலிப் பகுதியிலிருந்து அவருக்கு எதிர்ப்பு இருந்த வண்ணமேயிருந்தது. அவருடைய காலத்தில் பல நாடார்கள் முகம்மதியர் வசப்பட்டு முஸ்லீம்களாயினர் என்று செவிவழிச் செய்தி கூறுகின்றது. மறவர்களை திருமலை சேதுபதி மூலம் அடக்கி வைத்திருந்தார். இசை, நாட்டியக் கலைகளை ஆதாரித்தார். தம் அவையில் பல நாட்டியமாதர்களை வைத்திருந்தார்.

கோயில்களில் நாட்டியம் ஆடி, பாட்டிசைத்து, பக்திப்பாசுரங்களையும் பதிகங் களையும் பாடும் தேவதாசிகளை வைத்திருந்தார். சீரங்கக் கோயிலில் புதுப்பணிகள் செய்தார்; மண்டபங்களைக் கட்டி எழுப்பினார். மதுரை வீரன் என்ற ஒரு மாவீரன் (இன்று தெய்வ மகன்) என்று வழிபடப்படும் திருமலையின் காலத்தில் வாழ்ந்து வந்ததாக மதுரை வீரன் அம்மானை அறிவிக்கின்றது. திருமலையின் தளவாயாக இருந்து பெரும் புகழ் தேடிய இராமப்பையன் மீது பாடப்பட்டதே இராமப்பையன் அம்மானை. திருமலை சிறந்த் போர்வீரன்; ஆட்சியாளர், இராஜதந்திரி. மதுரை நாயக்கர் நாடு அவர் காலத்தில் அதன் உச்ச நிலையை எட்டியது.

## இரண்டாம் முத்துவீரப்பர் (1659)

திருமலையின் மரணத்திற்குப்பின், அவருடைய மகன் இரண்டாம் முத்து வீரப்பர் 1659இல் அரியணை ஏறினார். முத்து வீரப்பர் திருமலையின் முறையற்ற மகன் என்று கருதப்படுகிறது. இக்கருத்திற்குப் போதிய ஆதாரங்களில்லை. திருமலைக்கு முறையான ஒரு மகன் இருந்ததாக கல்லெழுத்துக்கள் அறிவிக்கின்றன. முத்து வீரப்பர் முடிசூட்டிக் கொள்வதை திருமலையின் இளவலாகிய குமார முத்து விரும்பவில்லை. மைசூர்ப் படையெடுப்புக்குப்பின் குமாரமுத்து மதுரையிலே தங்கியிருந்தான். அவைக் குறிப்புகள் இவர்களுக்கு இடையே நிலவிய போட்டியைக் குறிப்பிடுகின்றன. ரங்கண்ண நாயக்கரின் தலையீட்டின் பேரில், இருவருக்குமிடையே உறவு ஏற்படுத்தப்பட்டது. இதன்படி குமாரமுத்து சிவகாசியையும், சில இதரப் பகுதிகளையும் பெற்றார்.

முத்து வீரப்பரின் ஆட்சியின் போது முகம்மதியரின் ஊடுருவல் அதிகமாயிருந்தது. நாயக்கர் நாட்டை காப்பாற்றும் நோக்குடன் பிஜப்பூரின் சுல்தானாகிய அடில் ஷா (Adil Shah) தளபதிகளாகிய சாகோசியையும் (Sagosi), முல்லா முகம்மதையும் (Mula

Muhammad) அனுப்பினார். திருச்சிராப்பள்ளி முற்றுகைக்குள்ளாயிற்று. மதுரையின் தளபதியாகிய லிங்கம நாயக்கர் (Lingama Nayaka) திருச்சிராப்பள்ளியைக் காத்து நின்றார். திருச்சியின் படைச் சிறப்பினைக் கண்ணுற்ற முகம்மதியர் திருச்சியை விட்டு வெளியேறினர். ஆனால் திடீரென்று தஞ்சையைத் தாக்கினர். தஞ்சையின் அரண்மனைப் பகுதி காப்பாற்றப்பட்ட போதிலும், தஞ்சைத் தளபதிகளின் கவனக்குறைவினால் தஞ்சை அடிபணிந்து விட்டது. தொடர்ந்து மன்னார் கோவிலும், வல்லமும் வீழ்ந்தன. தொடக்கத்தில் வெற்றி பெற்ற முகம்மதியரால் நாட்டைச் சூறையாட இயலவில்லை. ஏனெனில் கள்ளர்கள் நாட்டை முன்னதாகவே கொள்ளையடித்துச் சென்றனர். இப்பகுதி வாழ் மக்கள் மதுரையிலும், சத்தியமங்கலத்திலும் அடைக்கலம் புகுந்தனர். தொடர்ந்து ஏற்பட்ட பஞ்சத்தால் முகம்மதியர் பாதிக்கப்பட்டனர். பல வீரர்களும், குதிரைகளும் மாண்டன. பஞ்சத்தைத் தொடர்ந்து வந்த தொத்து நோயால் மேலும் பலர் அவதிப்பட்டனர். படையினரிடையே வேறுபாடுகள் தலைதூக்கின. மதுரை நாயக்கரிடமிருந்து சாதாரண தொகையைப் பெற்று, முல்லா முகம்மது நாடு திரும்பினார். பணம் கொடுத்து முத்து வீரப்பர் நாட்டில் அமைதியை ஏற்படுத்தினார். இச்சாதனைக்குச் சிற்றை நாட்களில் அவர் இறந்தார்.

## சொக்கநாதர் (1659–1682)

முத்து வீரப்பருக்குப்பின் மதுரை நாயக்கர் நாட்டுக்கு சொக்கநாதர் மன்னரானார். அவர் பதினாறு வயது சிறுவனாக இருந்த காரணத்தால், ஆட்சிப் பொறுப்பை தளவாயும், பிரதானியும், ராயசமும் ஏற்று நடத்தினர். அவருடைய பெயரில் இம்மூவரும் நாட்டையாண்டனர். முகமதியரிடமிருந்து நாட்டைக் காக்க வேண்டுமென்று புதுவரிகள் பல விதித்தனர். புது வரிகளாலும் புது அதிகாரங்களாலும் தத்தம் செல்வாக்கையும் செல்வத்தையும் பெருக்கிக் கொண்டனர். மூவரும் இணைந்த சர்வாதிகார ஆட்சியை சொக்கநாதர் விரும்பவில்லை. அவர்களின் செயல்களை மன்னர் கண்டித்த போது, அவரைப் பதவியிலிருந்து அகற்ற அவர்கள் சதித்திட்டம் செய்தனர். இதனை இரகசிய மாகக் கேள்வியுற்ற மன்னர், இவர்களுடைய செல்வாக்கைத் தம் நம்பகமான அதிகாரிகள் மூலம் ஒடுக்கினார். ராயசம் கொல்லப்பட்டார்; பிரதானியின் கண்கள் கெடுக்கப்பட்டன; தளவாய் இரகசியமாக தப்பித்துக் கொண்டார். தளவாய் சாகோசியுடனும், தஞ்சை மன்னன் விஜயராகவனுடனும் இணைந்து திருச்சியைத் தாக்கினான். இம் முற்றுகையில் அவனுக்கு 12,000 போர் வீரர்களும், 7000 குதிரைப்படையினரும் உதவி நின்றனர்.

சொக்கநாதர் 50,000 வீரர்களைச் சேர்த்துக் கொண்டு, திருச்சியைக் காப்பாற்றப் புறப்பட்டார். சாகோசியும், தளவாயும் வெற்றி வாய்ப்பிழந்து, தஞ்சையை நோக்கிப் புறப்பட்டனர். சொக்கநாதர் அவர்களைத் துரத்தினார். இருபடைத் தளபதிகளும் செஞ்சியை நோக்கி விரைந்தனர். அந்நியரின் அழிவுகளிலிருந்து நாடு காப்பாற்றப்பட்டது. நாட்டில் ஏற்பட்ட பஞ்சத்தால் மக்கள் அவதிப்பட்டனர். பஞ்ச நிவாரணம் சொக்கநாதர் அளித்தும் மக்கள் அல்லலுற்றனர்; ஆயிரக்கணக்கானோர் பஞ்சத்தால் மாண்டனர்.

## வானமியானின் படையெடுப்பு

அடில்ஷாவின் புகழ்பெற்ற தளபதியாகிய வானமியான் திருச்சிராப்பள்ளியை முற்றுகையிட்டான். சொக்கநாதர் துணிந்து அவனை எதிர்த்த போதிலும், நாட்டில்

பெரும்பீதி ஏற்பட்டது. வானமியானின் வீரர்கள் பெருஞ்சேதம் அடைந்த காரணத்தால், தாக்குதலை விடவேண்டிய அவசியம் ஏற்பட்டது. முகம்மதியர் நாட்டுப் பகுதிகளைச் சூறையாடி, மக்களைத் துன்புறுத்தினர். முகம்மதியரின் கொடுஞ் செயல்களைக் கண்டு வருந்திய மக்கள் பலர் பொதுப்படுகொலை செய்து கொண்டனர். சொக்கநாதர் வானமியானுடன் உடன்படிக்கை செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. சொக்கநாதர் முகம்மதிய தளபதிக்கு பெருந்தொகை கொடுப்பதாக வாக்களித்தார். வானமியானை விரட்டியபின், சொக்கநாதர் தஞ்சைமீது படைகளை ஏவி, பழிக்குப்பழி தீர்த்துக் கொள்ள திட்டமிட்டார். சொக்கநாதரைக் காட்டிக் கொடுத்த விஜயராகவன் மதுரையின் மன்னிக்க முடியாத பகைவனானான். வல்லம் கைப்பற்றப்பட்டது. விஜயராகவன் சொக்கநாதரின் உயராண்மையை ஒப்புக்கொண்டார். வல்லம் தற்காலிகமாகவே கைப்பற்றப்பட்டது என்றும், அதனை விஜயராகவன் 1664இல் கைப்பற்றினார் என்றும் நியூஹாப் பாதிரியாரின் கடிதம் அறிவிக்கின்றது.

## சேதுபதியுடன் போர்

திருமலையால் பெரிதும் போற்றப்பட்ட ரகுநாத சேதுபதி, முகம்மதியரின் படை யெடுப்பின்போது சொக்கநாதருக்கு உதவவில்லை. இளையோனாகிய சொக்கநாதருக்கு அடிபணிய ரகுநாத சேதுபதி விரும்பவில்லை. இவ்வித நடவடிக்கைகளை விரும்பாத சொக்கநாதர் மறவர் நாட்டின்மீது படையெடுத்தார். திருப்பத்தூர், புதுக்கோட்டை, மானாமதுரை, காளயார் கோயில் பகுதிகள் கைப்பற்றப்பட்டன. சேதுபதியோ கொரில்லாப் போர் முறையைப் பின்பற்றினார். சொக்கநாதரால் கொரில்லாப் படைகளுக்குப் பதில் கூற இயலாமல், மதுரைக்குத் திரும்பினார். சொக்கநாதர் மதுரையில் திருவிழாக்கள் நடத்துவதற்கு விரைந்த போது, தம் தளபதிகள் மேற்கொண்டு போரை நடத்தினர். மதுரைத் தளபதிகள் தோல்வியைத் தழுவினர். தோல்வியைக் கேள்விப்பட்ட சொக்கநாதர் சேதுபதியை அடக்கும் முயற்சியிலிருந்து விலகிக் கொண்டார்.

## மைசூருடன் போர்

1667இல் சொக்கநாதர் மைசூர் மீது படையெடுத்ததாக வில்க்ஸின் சான்றுப்படி ரங்காச்சாரியா கருதுகிறார். இப்படையெடுப்பின் இறுதியில் சொக்கநாதர் ஈரோட்டையும், தாராபுரத்தையும் இழந்தார். இதனை வலியுறுத்தும் வரலாற்றுச் சான்றுகள் வேறேது மில்லை.

## தஞ்சைப் போர்

சொக்கநாதர் தஞ்சைமீது இரண்டாவதாகப் படையெடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தஞ்சாவூரி ஆந்திர ராஜுலு சரித்திரம் என்ற நூல் அப்போருக்கான காரணங்களைத் தருகின்றன. விஜயராகவன் தம் மகளை சொக்கநாதருக்குக் கொடுக்க மறுத்தான். தஞ்சை நாயக்கர் தம்மை உயர்ந்தோர் என்றும், மதுரை நாயக்கரை சூத்திரர் என்றும் கருதியதே அதற்குக் காரணம். விஜயராகவனின் மறைமுகமான தாக்குதல் சொக்கநாதரைப் பாதித்தது. இரு நாயக்கருக்குமிடையே ஆறாத பகை இருந்து வந்தது. தஞ்சை நாயக்கர் இளவரசி, திருமலையால் துன்புறுத்தப்பட்ட செய்தியும் விஜயராகவனை

வெறுப்பூட்டச் செய்தது. தஞ்சைக்கும் பேரரசுக்குமிடையே நிலவிய நெருங்கிய உறவு சொக்கநாதரை எரிச்சலூட்டியது. விஜயராகவன் மதுரைத் தளபதியுடன் சேர்ந்து திருச்சிராப்பள்ளியை முற்றுகையிட்டது வெறுப்பூட்டியது. ஆகவே தஞ்சை முகம்மதியருடன் சேர்ந்து, மதுரையைத் தாக்கியது. 1664இல் மதுரை வல்லத்தை இழந்ததால் சொக்கநாதர் மனம் பொருமினார். பன்னெடுங்காலமாக இருந்து வந்த காழ்ப்புணர்ச்சிக்கு, திருமண மறுப்பு திடீர்க் காரணமாயிற்று.

சொக்கநாதரின் திருமணத்தரகர்கள் தஞ்சையில் ஏளனம் செய்யப்பட்டனர். கொடுக்கப்பட வேண்டிய சிறு மரியாதை கூட அவர்களுக்குத் தரப்படவில்லை. பழிதீர்க்கத் திட்டமிட்ட சொக்கநாதர், வேங்கடகிருஷ்ணப்ப நாயக்கர் தலைமையில் படையொன்றை தஞ்சை நோக்கி ஏவினார். தஞ்சையின் சிறுபடையொன்று தோற்கடிக்கப் பட்டது. வல்லம் கைப்பற்றப்பட்டது. விஜயராகவனின் பெரும்படையும், மதுரைப் படையும் மோதின. மதுரைப்படை வெற்றி பெற்றது. மும்முறை திருமணப் பேச்சுகள் விஜயராகவனுடன் நடத்தப்பட்டன. ஆனால் தஞ்சை மன்னன் எதற்கும் செவி சாய்க்காது, மறுப்பு தெரிவித்தார். தஞ்சை முற்றுகைக்குள்ளாகியது. மதுரைப்படை தஞ்சை நகரில் நுழைந்தது. அந்தப்புரம் அழிக்கப்பட்டது. விஜயராகவனும், மகன் மன்னாருதாசும் போரில் மாண்டனர், விஜயராகவனின் தலையை சொக்கநாதர் துண்டித்தார் என்றும் கூறப்படுகிறது. இது உண்மைக்குப் புறம்பான செய்தி. ஏனெனில் சொக்கநாதர் இப்படையெடுப்பில் நேரடி பங்கு கொள்ளவில்லை.

தஞ்சை முடிநாடு மதுரைக்கு அடிபணிந்தது. சொக்கநாதரின் ஒன்றுவிட்ட இளவலாகிய அழகிரி நாயக்கர் (Alagiri Nayak) தஞ்சையின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். சிற்றாண்டுகள் சொக்கநாதருக்கு அடங்கியே நடந்தார். பேராசையால் உந்தப்பட்ட அழகிரி, சொக்கநாதரை மதியாது, தன்னிச்சையாக ஆளத்தொடங்கினார். தம் அமைச்சர் களின் தலையீடு இருந்தபோதிலும், சொக்கநாதர் தம் தம்பி மீது ஐயப்பாடு கொண் டிருந்தார். அழகிரிக்கும் சொக்கநாதருக்குமிடையே காணப்பட்ட வேறுபாட்டைப் பயன் படுத்திய வெங்கண்ணா (Venkanna) என்ற முன்னால் ராயசம், அழகிரியிடம் இருந்த படியே, அழகிரியைப் பதவியிலிருந்து அகற்றத் திட்டமிட்டார். தஞ்சையின் நான்கு வயது பாலகனாகிய செங்கமலதாஸ் (மன்னாருதாசின் மகன்) நாகப்பட்டினத்தில் வாழ்வதாகச் செய்தி வெளியிட்டான். செங்கமலதாசுக்காக, வெங்கண்ணா பீஜப்பூர் சுல்தானிடம் உதவி நாடினார். சுல்தான் சிவாஜியின் ஒன்றுவிட்ட சகோதரனாகிய எகோஜி (வெங்காஜி)யை அனுப்பி, அழகிரியை முடி துறக்கச் செய்தான். எகோஜியின் படையெடுப்பைக் கண்ணுற்ற அழகிரி, சொக்கநாதரின் உதவியை நாடினான். சொக்கநாதர் உதவிக்கு முன்வரவில்லை. தஞ்சை எகோஜியால் கைப்பற்றப்பட்டது. செங்கமலதாஸ் முடிசூட்டப்பட்டார். அழகிரி மைசூருக்கு ஓடி ஒளிந்து கொண்டார்.

தஞ்சையில் செங்கமலதாஸின் ஆட்சியும் நீடிக்கவில்லை. வெங்கண்ணாவுக்குத்தாம் எதிர்பார்த்தது கிடைக்கவில்லை. வெங்கண்ணா மீண்டும் சூழ்ச்சி செய்யத் தொடங்கினார். எகோஜியால் செங்கமலதாசை முடிதுறக்கச் செய்து, தஞ்சையை மராத்தியர்வசம் ஒப்படைத்தான்.

### ஈரோட்டுப்போர் (1670)

சொக்கநாதரின் ஐந்து செப்புப்பட்டயங்கள் அவர் மூன்றாம் சீரங்கரின் மேலாதிக்கத்தை ஒப்புக்கொண்டதாக அறிவிக்கின்றன. சொக்கநாதர் திருமலையின் கொள்கைகளை பேரரசரைப் பொறுத்தளவில் பின்பற்றவில்லை என்று தெரிகிறது. 1662ஆம் ஆண்டின் புரோயென்ஸாப் பாதிரியாரின் கடிதத்தின்படி அவர் முகம்மதியரை விரட்டிவிட்டு மீண்டும் விஜயநகரப் பேரரசைப் புதுப்பிக்கத் திட்டமிட்டார்; செஞ்சி நாயக்கர் ஆட்சியை மீண்டும் கொண்டுவர விரும்பினார். தஞ்சை நாயக்கரையும், செங்கல்பட்டு பூவிரிந்த மல்லியின் மன்னரான தமரில அய்யப்பரையும் (Damerla Ayyappa), பீஜப்பூரின் ஒரு தளபதியையும் சேர்த்துக்கொண்டு மைசூரைத் தாக்கினார். இக்கேரி (Ikkeri)யின் செவப்பநாயக்கர் இவ்வணியில் சேர்ந்தாரா, இல்லையா என்பது தெரியவில்லை. 1670இல் இவ்வணிப் படைகளும், மைசூர்ப் படைகளும் ஈரோட்டில் மோதின. இவ்வணி வெற்றி கொள்ளப் பட்டது; தமரில அய்யப்பா போரில் உயிரிழந்தார். தம் நாட்டு எல்லைப் பகுதிகள் பலவற்றையும் சொக்கநாதர் இழந்தார். இத்தோல்வியால் மூன்றாம் சீரங்கரின் வருங்காலம் இருட்டிக்கப்பட்டது.

### சொக்கநாதரின் முடிதுறப்பும், முடிபெறுதலும்

சொக்கநாதரின் வெளிநாட்டுக் கொள்கை அவருடைய சிறப்பைப் பெரிதும் பாதித்தது; பணவிரயம் ஏற்பட்டது. கோபமுற்ற மக்கள் கூட்டம் அவரை முடிதுறக்கச் செய்துவிட்டு, இளவலாகிய முத்துலிங்க நாயக்கரைப் பதவியில் அமர்த்திற்று. புது அரசும் அரசியல் சூழ்நிலையைச் சரிக்கட்டவில்லை. நாட்டில் ஒழுங்கற்ற ஆட்சியும், நியாயமற்ற செயல்களும் மலிந்தன. பஞ்சம், பசி, பட்டினி, நோய்கள் பரவின. அத்துடன் வெள்ளத்தால் சேதங்களும் விளைந்தன. மக்களிடையே வெறுப்பு மனப்பான்மை வளர்ந்தது. இச்சூழலைப் பயன்படுத்திய ரஸ்தம் கான் (Rustam Khan) அரியணையைக் கவர்ந்து கொண்டான். அவன் சொக்கநாதரால் விரும்பப்பட்ட ஒரு முகம்மதியப் போர்வீரன். அவன் சொக்கநாதரை விடுதலை செய்து, மன்னனாகப் பிரகடனம் செய்தான். உண்மையில் நாட்டையாண்டது சொக்கநாதரல்ல, இம்முகம்மதிய வீரனே. ஈராண்டுகள் இவனாட்சி நடைபெற்றது. 1680இல் மைசூரியர் திருச்சிராப்பள்ளியை முற்றுகை யிட்டபோது, காப்பாற்றத் தவறிய ரஸ்தம்கான் சூழ்ச்சிக்குள்ளானான்; கொலை செய்யப்பட்டான். சொக்கநாதர் மீண்டும் பதவி ஏற்றம் பெற்றார்.

சொக்கநாதரின் இறுதி நாட்கள் துன்பமயமானது. திருச்சிக்கோட்டை மைசூரின் புகழ் பெற்ற குமரய்யா என்ற தளபதியால் தாக்கப்பட்டது. சொக்கநாதர் எகோஜியையும், செஞ்சியின் மராத்தியப் படைத்தளபதியையும் உதவிக்கு அழைத்தார். சேதுபதியும், மராத்தியரும் படையனுப்பினர். இப்படையெடுப்பைக் கண்ணுற்ற குமரய்யா நடுக்குற்றான். சொக்கநாதருடன் அமைதிப் பேச்சைத் தொடங்கினான். மராத்தியரைத் தமிழ்நாட்டிலிருந்து விரட்ட குமரய்யாவுடன் சொக்கநாதர் உடன்படிக்கை செய்யத் தூண்டப்பட்டார். இந்த உடன்படிக்கை தவிர்க்கப்பட்டது. சொக்கநாதரின் கூட்டுப்

படையினரை பிரிக்க மீண்டும் குமரய்யா முயன்றான். இம்முயற்சியிலும் தோல்வியுற்ற குமரய்யா தம் நாடு திரும்பினான். செஞ்சியின் படைத்தளபதியாகிய அரசுமலை குமரய்யாப் படையின்மீது பாய்ந்து, மதுரையிலிருந்து அவர்களை விரட்டினான். அவர்களின் உடைமைகளைக் கைப்பற்றியபின், அரசுமலை திருச்சியை முற்றுகை யிட்டான். இம்மாற்றத்தைக் கேள்வியுற்ற சொக்கநாதர் வருத்தத்தால் மனமுடைந்து மரணமடைந்தார்.

தம் ஆட்சியில் தாம் செய்த தவறுகளால் தோல்வியுற்ற மன்னரே சொக்கநாதர். நல்ல போர் வீரராய் இருந்த போதிலும், வீரருக்குரிய விவேகம் அவரிடம் குடி கொண்டிருக்கவில்லை. தமக்குக் கீழிருந்த சிற்றரசர்களைப் பகைத்தார்; அவர்களுடைய உதவியைப் பொருட்படுத்தவில்லை. அவர்களை ஒதுக்கினார். தம்முடைய காலந் தாழ்ந்த செயல்கள் பயன்தரவேயில்லை. வயதுமுதிர்ச்சிக் காலத்தில், தனித்தியங்க இயலாத அவர், தம் அமைச்சர்களின் கைப்பொம்மையாக விளங்கினார். அந்நியரின் விருப்புகளுக்குத் தலை வணங்கி வாழ்வதல்லாது, வேறு எந்த வழியையும் அவர் காணவில்லை. வரிக்கொடுமையில் அவராட்சியில் மக்கள் அவதிப்பட்டனர். புது வரிகள் மூலம் பெருமளவு செல்வத்தைச் சேர்த்துக் கொண்டார். மக்கள் சொக்கநாதருக்கு துச்சமாகத் தோற்றமளித்தனர். ஆனால் மக்களுக்கு மன்னர் துச்சமாகத் தோன்றினார். தங்களால் அவருடைய செயல்களைத் தாங்க இயலாத காலத்தில், அவருக்கு எதிராகக் கலகம் விளைவித்தனர். மதுரை நாயக்கர் நாட்டின் அழிவின் தொடக்கமாக சொக்கநாதரின் ஆட்சி அமைந்தது. அழிவைத் தூண்டும் சக்திகளைத் தம் விவேகமற்ற செயல்களால் தீவிரப்படுத்தினார். திருமலை மக்களுடைய உள்ளங்களில் நிற்பதுபோல் சொக்கநாதர் நிற்க இயலவில்லை.

## மூன்றாம் முத்து வீரப்பர் (1682–1689)

மூன்றாம் முத்து வீரப்பரின் இயற்பெயர் ரங்க கிருஷ்ண முத்து வீரப்பர் என்பதாம். இவர் சொக்கநாதருக்கும் மங்கம்மாளுக்கும் பிறந்தவர். இவர் 1682இல் தம் தந்தைக்குப் பின் அரியணை ஏறினார். இவர் அரியணை ஏறும்போது அரசியல் வான் சற்று மந்தமாகவேயிருந்தது. தம் பெற்றோரின் சொத்தில் சில பகுதிகள் மட்டுமே இவருக்குக் கிட்டின. எஞ்சியவற்றை மைசூர் அரசர், தஞ்சையில் சாம்பாஜி மன்னர், இராமநாதபுர சேதுபதியும் வைத்திருந்தனர். மறவரின் உதவியுடன் மைசூர் மன்னன் மதுரையைத் தாக்கினான். மதுரை அரண்மனை சூழ்ச்சிகள், தகாச் செயல்களின் உறைவிடமாக இருந்தது. 1682இல் மதுரை அரியணை தொல்லைகளின் இருப்பிடமாகவே இருந்தது. ரங்க கிருஷ்ணரின் எதிரிகளோ மதுரைக்காகப் போரிட்டுக் கொண்டிருந்தனர். மைசூரின் நாட்டுப்புறங்களை தஞ்சையின் சாம்பாஜிப் படைகள் அழித்துக்கொண்டிருந்ததால், மைசூர்ப் படைகள் மதுரையை விட்டு வெளியேறத் தொடங்கின. தங்களுடைய நாட்டுக்கே தீங்கு ஏற்படும்போது மைசூர்ப் படைகள் ஆக்கிரமிப்பை விட்டுத்தானாக வேண்டியிருந்தது. செஞ்சியில் எகோஜிக்கு எதிராக மக்கள் கலகம் விளைவித்தனர். எகோஜியோ, தம் ஆட்சியில் வெறுப்புற்று எழுந்த மக்களை அடக்கிக் கொண்டிருந்தார்.

இச்சமயத்தில் தம் நாட்டின் சில பகுதிகளை சேதுபதி கைப்பற்றிக் கொண்டார். இராமநாதபுரத்தில் தம் தளவாயின் கலகத்தை சேதுபதி அடக்க வேண்டியிருந்தது. இவ்விதமான சூழல்களைப் பயன்படுத்திய ரங்க கிருஷ்ணர் தம் சிற்றரசர்களின் உதவி பெற்று, மைசூரியரை விரட்டியடித்தார். 1686இல் தாம் இழந்த பகுதிகளை மீட்டுக் கொண்டார். நாட்டில் அமைதியைக் கொண்டு வந்தார்; ஆட்சிசீர்திருத்தங்களில் தம் கவனத்தைச் செலுத்தினார்.

## முகம்மதியருடன் தம் கொள்கை

ரங்க கிருஷ்ணர் முகம்மதியருக்கு அடிபணிந்து வாழும் மன்னரல்ல. இவர் தம் தனிச் சுதந்திரத்தை மற்றவர்கள் பறித்திடாவண்ணம் தம்மை பார்த்துக்கொண்டார். இவருடைய மனவுறுதியை அவைக்குறிப்புகள் ஒரு நிகழ்ச்சி மூலம் விளக்குகின்றன. ஔரங்கசீப்பின் படைகள் எந்நாட்டைக் கைப்பற்ற நினைத்ததோ அந்நாட்டின் எல்லைக்குள் நுழைந்து, பேரரசரின் காலணிகளில் ஒன்றை ஊர்வலமாக எதிரியின் அரண்மனையைச் சுற்றி எடுத்துவந்தனர். எதிர்க்கத் துணிவற்ற சிற்றரசர்கள் காலணியை வணங்கி, அதனை அரியணையில் வைத்து, குப்புற விழுந்து வணங்குவர். அதுபோன்ற ஓர் ஊர்வலம் ரங்க கிருஷ்ணர் அரண்மனையைச் சுற்றியும் வந்தது. மன்னரைப் பார்த்து செய்தி கூற வந்த முகம்மதியரை, மன்னன் நலமின்மையால் பார்க்க இயலாத நிலையில் இருக்கிறார் என்று கூறியனுப்பினார். காலணி ஊர்வலம் மதுரைக் கோட்டைக்குள் நுழைந்து, கலகம் செய்யத் தொடங்கினர். ரங்ககிருஷ்ணர் தலை வணங்குமாறு பணிக்கப்பட்டார். ரங்க கிருஷ்ணர் உடனே ‘நடப்பதற்கு இரு காலணிகள் வேண்டுமே. பேரரசர் ஒன்று தான் கொடுத்தனுப்பியுள்ளார்’ என்று ஏளனம் கூறினார். கோட்டையை விட்டு வெளியேற்றப்பட்ட முகம்மதியர் கலகம் செய்யவே, அவர்கள் விரட்டி அடிக்கப்பட்டனர். இதனைக் கேள்வியுற்ற பேரரசர் இப்பழக்கத்தை அடியோடு நிறுத்திக்கொண்டார்.

மொகலாயரின் இப்பழக்கம் வரலாற்றுக்குப் புதிதல்ல. பாரசீக மன்னர்கள் எதிரிகளின் தோல்வியை வலியுறுத்த அவர்களிடமிருந்த ‘மண்ணும் நீரும்’ கேட்பர். காலணி ஊர்வலம் அது போன்ற ஒரு பழக்கமே. இந்நிகழ்ச்சிக்குப்பின் ரங்க கிருஷ்ணர் பல பிரச்சனைகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது. மேற்கூறப்பட்ட பாதுஷா இந்துக்களின் பரம விரோதியாகிய ஔரங்கசீப் ஆவார். 1689வரை (ரங்க கிருஷ்ணரின் மரணம் வரை) ஔரங்கசீப் கோல்கொண்டாவையும், பிஜப்பூரையும்தகர்த்த வண்ணமே யிருந்தார். அவ்வேளையில் ரங்க கிருஷ்ணரின் மறுப்பைச் சற்றும் பேரரசர் பொருட் படுத்தவில்லை. ரங்க கிருஷ்ணரின் தலை தப்பியது. ரங்க கிருஷ்ணர் அவுரங்கசீப்புக்குப் பாடம் ஒன்று கற்பித்தார் என்பது ஔரங்கசீப்பின் வரலாற்றில் நடக்க இயலாத ஒன்று. இம்மாதிரியான கதைகளைக் கூற விழைந்த மனூசியும் (Manucci) இதனைக் கூறவில்லை. நடக்கக்கூடாத வெறும் பொய் நிகழ்ச்சியாக இது தோன்றவில்லை.

## சேதுபதியுடன் தொடர்பு

சொக்கநாதரை மீண்டும் அரியணையில் அமர்த்த கிழவன் சேதுபதி செய்த சேவைகள் பாராட்டப்பட்டன. அதற்காக கிழவனுக்குச் சில சலுகைகள் தரப்பட்டன.

இவற்றைச் சாதகமாகக் கொண்டு, சேதுபதி மதுரையை மதியாது நடக்கத் தொடங்கினார். மதுரையை எதிர்த்து போர் நடந்த காரணத்தால் கிழவன் தம் தளவாயாகிய குமார பிள்ளையை 1686இல் கொன்றான். குமாரபிள்ளை மதுரையைச் சேர்ந்த அதிகாரி. சொக்கநாதர் அவருடைய சேவையை கிழவனுக்கு மாற்றித் தந்திருந்தார். இதனால் இருநாடுகளுக்குமிடையே போட்டிப் பூசல் வலுத்தது. சேதுபதிக்கு உதவுமாறு, தஞ்சை மன்னன் தம் தளபதியை அனுப்பினார். இருதரப்புப் படைகளுக்குமிடையே ஏற்பட்ட சண்டையில், மதுரைப்படை சிதறடிக்கப்பட்டது. தஞ்சை மன்னனின் உதவிக்காக பட்டுக்கோட்டையும், பாம்பனாரும் தஞ்சைக்கு வழங்கப்பட்டது.

ரங்க கிருஷ்ணர் பரந்த உள்ளம் படைத்தவர். பிறசமயத்தாரையும் இந்துக்கள் போன்று நடத்தினார். சேசு சபையாரிடம் சுமூகமான உறவை வைத்திருந்தார். தம் அதிகாரிகளோ, தம் சமயத்தாரோ சேசு சபையாருக்குத் தீங்கு செய்யின் அவர்களுக்கு விரைந்து நீதி வழங்கினார். எனினும் மறவர் நாட்டில் சமயப் பொறையின்மையால், பாதிரியார்கள் துன்புறுத்தப்பட்டனர். ஜான்—டி—பிரிட்டோவும் (John de Britto) அவரது நண்பரும் சேதுபதியால் துன்புறுத்தப்பட்டனர். அவர்கள் சிவனை வழிபடுமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர். ரங்க கிருஷ்ணரே இதற்குக் காரணம் என்று கூற இயலாது. சேதுபதி நாடு தன்னாட்சி பெற்ற நாடாக இயங்கியது. ரங்க கிருஷ்ணர் பலமுறை சேதுபதியைப் பணிய வைக்க முயன்றும் ஈடேறவில்லை.

அவர் பல கோயில்கள், கொத்தளங்கள், மண்டபங்கள், விடுதிகள் எழுப்பினார். பிராமணர்க்கு அக்ரகாரங்கள் அமைத்துத் தந்தார். நன்னெறியில் மதுரை நாயக்கரில் அவருக்கு நிகர் அவரே. ஒருமணமே செய்திருந்தார். ரங்க கிருஷ்ணர் 1689இல் அம்மை நோயால் இறந்தார் என்று சேசு சபையினரின் கடிதங்கள் அறிவிக்கின்றன.

### மங்கம்மாளின் பகர ஆளுகை (1689–1706)

ரங்க கிருட்ணருக்கு, மரணத்திற்குப்பின் ஒரு மகன் பிறந்தான். அவனே விஜயரங்க சொக்கநாதர். மூன்று வயதினனான விஜயரங்கர் முடிசூட்டப்பட்டார். விஜயரங்கருக்காக, பாட்டியாராகிய மங்கம்மாள் பகர ஆளுநர் என்ற முறையில் நாட்டை ஆண்டு வந்தாள். ராணி மங்கம்மாளின் பகர ஆட்சி வெளிநாட்டு, உள்நாட்டு கொள்கைகளுக்குப் பெயர் பெற்றது.

எதிரிகளைப் பகைப்பதைக் காட்டிலும் அவர்களிடம் நட்பைக் கொள்வதே சிறந்தது என்ற கொள்கையுடையவள் ராணி. ஆகவே அரசி கோழை என்று பொருளல்ல. ஆண்மை கொண்ட பெண்; பெண்மையால் அரசியலில் வெற்றிக்கொடி நாட்டியவள். அவளுடைய வெளிநாட்டுக் கொள்கை மதுரைக்கு திடீர் அழிவைத் தரவில்லை. மாறாக அது மதுரையின் அழிவை சற்று தள்ளிப் போட்டது. அவளுடைய பெண்மையில் மயங்கிய பகைவரும் அவளுக்கு நண்பராயினர். ஆகவே மதுரைக்கு வந்த அழிவு தடுக்கப்பட்டது; உள்நாட்டு விவகாரங்களில் தலையிடப் போதிய சூழ்நிலையும் இதனால் ஏற்பட்டது.

நாட்டு நடப்புக்குத் தக்கவாறு தம்கொள்கைகளைத் தீட்டினாள். போர்ப்பிரகடனம் செய்யுமுன் எதிரியின் பலத்தையும் தம் பலத்தையும் ஒப்பு நோக்கினாள். பல போர்கள் அவள் புரிந்தாலும், மதுரைக்கு அமைதி தந்தாள். அவளுடைய ஆளுகையின் போதுதான், மொகலாயர் ஆதிக்கம் தக்காணத்திலும் விரைந்து பரவி வந்தது. 1693இல் திருச்சிராப்பள்ளியையும், 1697இல் தஞ்சையையும் ஜுல்பிகர்கான் (Zulfigar Khan) தாக்கியபோது அரசி அவற்றைச் சாதுரிமாகச் சமாளித்தாள். மொகலாயரின் உயராண் மையைப் பெயரளவில் ஒப்புக்கொண்டாள். காலத்துக்குத்தக்க நடவடிக்கை மதுரையை மொகலாயர் வசமிருந்து காப்பாற்றியது.

## மைசூரின் படையெடுப்பு

இச்சமயம் மைசூரை சிக்கதேவராயர் (Chikkadeva Raya) ஆண்டு வந்தார். அவர் ஆக்கிரமிப்புக் கொள்கையில் நம்பிக்கை கொண்டு, மதுரையின் எல்லைகளைத் தாக்கினார். 1690ஆம் ஆண்டளவில் அவர் சேலம் முதல் காவிரி வரையுள்ள பகுதிகளைக் கைப்பற்றியிருந்தார். பெட்னூரின் பெரும் பகுதிகளைக் கைப்பற்றியிருந்தார். அவர் மதுரையையும் தாக்கத் திட்டமிட்டார். மதுரையின் வட எல்லையிலுள்ள தலைவர்கள் அவருக்கு அடி பணிந்தனர். திருச்சிராப்பள்ளியை தளவாய் குமரய்யா முற்றுகையிட்டார். திருச்சியைக் கைப்பற்றுமுன் வீடு திரும்புவது இல்லை என்று அவன் சூளுரைத்திருந்தான். இச்சமயம் மராத்தியர் மைசூரைத் தாக்கினர். குமரய்யா படைகளை பின் வாங்கிக் கொண்டார். இவ்வாறு திருச்சியை மங்கம்மாள் காப்பாற்ற முடிந்தது.

## திருவிதாங்கூருடன் தொடர்பு

ரங்ககிருஷ்ண முத்து வீரப்பரின் காலத்தில் திருவாங்கூரின் பகர ஆளுநர் உமயம்மை ராணி மதுரைக்கு அடங்கி நடந்தார். இரவிவர்மனின் பதவி ஏற்புடன் கொள்கையும் மாறிவிட்டது. கேரள அரசன் தற்போது மதுரைக்குக் கப்பம் கட்ட மறுத்தான். கட்டாயத்தின் பேரில் ஆண்டுதோறும் படையனுப்பப்பட்டு திறை சேர்க்கப்பட்டது. கேரளத்தில் எட்டு வீட்டு பிள்ளைமாரால் ஏற்பட்ட பிரச்சினைகளால் இரவிவர்மனால் மதுரைப் படைகளுக்குப் பதிலடிகொடுக்க இயலவில்லை. 1696இல் மதுரைப்படை கேரளத்தில் வந்தபோது, இரவிவர்மன் சூழ்ச்சித் திட்டம் ஒன்று தீட்டினான். ஒரேதிட்டத்தில் மதுரைப் படைகளையும் தம் அமைச்சர்களையும் முறியடிக்கும் திட்டம் இது. படையெடுத்து வந்த படைகளுடன் உறவாடிக் கொண்டான். அவர்களை ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிறுத்தி வைத்தான். அமைச்சர்களைக் கொல்ல மதுரைப் படை உதவிபுரிவதாயின், தம் நாட்டில் ஒரு பகுதியை அதற்குத் தருவதாக வாக்களித்தான். படையெடுத்து வந்தோர் இதற்கிணங்கினர். கலகக்கார அமைச்சர்கள் நசுக்கப்பட்டனர். உள்நாட்டிலேற்பட்ட பிரச்சனை ஒருவாறு முடிந்தது. பின் கல்குளத்தில் தங்கியிருந்த மதுரைப் படைகளைத் தாக்கி விரட்டினான். மதுரைப்படை எதிர்பாராத தாக்குதலுக்கு ஈடு செய்ய இயலாமல் தப்பி ஓடியது.

1697இல் நரசப்பையன் (Narasappaiya) என்ற தளவாய் படையுடன் திருவிதாங்கூருக்கு அனுப்பப்பட்டான். கேரள அரசனைத் தண்டிக்கும் அனுமதியும் அவனுக்கு வழங்கப்பட்டது. போரில் நரசப்பையன் வெற்றி பெற்றான். தடைப்பட்டுக்கிடந்த திறை மொத்தமாகப் பெறப்பட்டது. விலை மதிப்பிடவியலாப் பொருட்களும் அவருக்குக் கிடைத்தன. அவற்றில் மிக முக்கியமானவை பீரங்கிப் படைப்பொருட்களே. அவை எண்ணப்பட்டு மதுரை, திருச்சிக்கோட்டைகளில் வைக்கப்பட்டன. வேலுப்பிள்ளை போன்ற வரலாற்றாளர் நரசப்பையன் படையெடுப்பை ஒப்புக்கொள்வதில்லை. ஆனால் இது உண்மையல்ல என்று கூறுவதற்கில்லை.

## தஞ்சைப்போர்

தஞ்சை மன்னன் ஷாஜி (Shahji) மதுரையின் எல்லைப் பகுதிகளைத் தாக்கி வந்தான். நட்புறவு மூலம் தஞ்சைப் படைகளை வெற்றி கொள்ள முயன்று ராணி தோல்வியுற்றாள். 1700இல் மதுரை தஞ்சை மீது போர்ப் பிரகடனம் செய்தது. தஞ்சைப் படையை விரட்டும் பொறுப்பு தளவாய் நரசப்பையனுக்கு தரப்பட்டது. கொள்ளிடத்தைத் தாண்டிய மதுரைப்படை தஞ்சையை ஆங்காங்கே முன்னறிவிப்பு இன்றி தாக்கியது. தஞ்சை தோல்வியுற்றது; நாடு கொள்ளையிடப்பட்டது. ஷாஜி மனம் பொருமினார். சேதத்தின் மூலமும் பணம் கொடுத்தும் ஷாஜி அமைதி உடன்பாடு செய்து கொண்டான். இதற்குப்பின் இரு நாடுகளுக்குமிடையே நல்லுறவு புதுப்பிக்கப்பட்டது.

ஆனால் மைசூரின் தொல்லை மதுரைக்கு இருந்த வண்ணமேயிருந்தது. காவிரி நீரைத் தம் நாட்டுக்கு மாற்றும் நோக்குடன் மைசூர் அரசன் காவிரியின் குறுக்கே அணை கட்டினான். இது மதுரையையும் தஞ்சையையும் வெகுவாகப் பாதித்தது. காவிரி உலர்ந்து போயிற்று. பருவக்காற்று மழையும் பொய்த்து விட்டது. நாட்டில் நீர்ப்பஞ்சம் ஏற்பட்டது. தஞ்சை, மதுரை அரசர்கள் இணைந்து மைசூரைத் தாக்கத் திட்டமிட்டனர். அதற்குள் காவிரி கரை புரண்டோடியது. அணைக்கட்டும் நாசமாயிற்று. மைசூரின் திட்டங்களும் பாழாயின.

## சேதுபதியின் தொடர்பு

கிழவன் சேதுபதி நாளுக்கு நாள் அரசியல் வானில் ஒளிவிட்டுக் கொண்டிருந்தான். ரங்க கிருஷ்ணரின் காலத்தில் கிழவன் பெற்ற சலுகைகளால், இன்று மதுரையை எதிர்க்கத் துணிந்து விட்டான். திறை செலுத்துவதை நிறுத்திவிட்டான். தம் சுயாட்சியை வெளிவிடக் காலம் பார்த்திருந்தான். உள்நாட்டைப் பொறுத்தளவில் தன்னிச்சையாக ஆட்சி நடத்தினான். மேலும் 1700இல் சேதுபதி ஷாஜிக்கு படைகொடுத்து உதவினான். இவையனைத்தும் மதுரைக்கும் இராமநாதபுரத்திற்கும் இடையே பகையை வளர்த்தன. கிழவன் சேதுபதி மதுரையால் தாக்கப்பட்டான். 1702இல் நரசப்பையன் தஞ்சைப் படையுடன் மறவர் நாட்டைத் தாக்கினான். மதுரைப் படையோ தோல்வியைத் தழுவியது. தொடர்ந்த போரினால் மதுரைப்படை வலுவிழந்து காணப்பட்டது. மறவர் படை எண்ணிக்கையில் அதிகமிருந்ததால், மதுரைப்படை பீதியடைந்தது. மேலும் மறவர்படை

கொரில்லாப்போர் முறையில் பயிற்சியுடையதாய் இருந்தது. மறவர் வீரம் மிக்கவர்கள்; அவர்களை அடக்குதல் எளிதன்று. அதற்குப் பின் கிழவன் மதுரையுடன் தமக்குள்ள தொடர்பை அறுத்துக்கொண்டு தன்னாட்சி ஏற்படுத்தினான். 1709இல் அவன் தஞ்சைப் படைகளை வென்றான்; அறந்தாங்கியைக் கைப்பற்றினான். மங்கம்மாளின் இம்முயற்சி வெற்றி தரவில்லை; அடங்காக்கிழவன் அடக்கப்படவுமில்லை. அவனுடைய் மரணத்துக்குமுன் இராமநாதபுரம் தனி நாடாயிற்று.

## கிறிஸ்தவருடன் தொடர்பு

இக்காலத்தில் கிறிஸ்தவ சமயத்தால் பல பிரச்சினைகளை சமாளிக்க வேண்டி யிருந்தது. பிரிட்டோ பலரை தம் சமயத்துக்கு மாற்றம் செய்தார்; அதன் பயனாக தம் உயிரையும் இழந்தார். மறவர் நாட்டில் தடியத் தேவர் என்ற இளவரசனையும், வேறு சிலரையும் பிரிட்டோ சமயம் மாற்றினார். தம் மனைவி வழி உறவினனாகிய தடியத்தேவர் சமயம் மாறியது கேட்டு கோபங்கொண்ட கிழவன் திருச்சபைகளை அழிக்க உத்தர விட்டான். பிரிட்டோவும் தோழரும் கைது செய்யப்பட்டனர்; சிறையிலடைக்கப்பட்டனர். பின்னர் ஓரியூருக்கு நாடு கடத்தப்பட்டனர்; அங்கு ஓரியூர்த் தேவனால் பிரிட்டோ கொல்லப்பட்டார். அவருடைய உடம்பு கொத்தி நொறுக்கப்பட்டு, கழுகுகளுக்கு போடப்பட்டது. மங்கம்மாள் பலமுறை தலையிட்டும் பிரிட்டோ காப்பாற்றப்படவில்லை. பிரிட்டோவின் மரணத்திற்குப்பின் ஏறத்தாழ ஏழாண்டுகள் வரை, அதாவது 1700 வரை கிறிஸ்துவ எதிர்ப்பு இராமநாதபுரத்தில் இருந்து வந்தது. பிரிட்டோவின் மரணத்தையொட்டி ஓரியூர்த்தேவனும், அவன் அமைச்சனும் இறக்கவே, மக்கள் உள்ளங்களில் ஐயப்பாடுகள் ஏற்படத் தொடங்கின. சேதுபதி தாம் செய்த தவறுக்காக மனம் நொந்தார் என்று கூறப்படுகிறது. கிழவனுக்குப்பின் வடுகநாத தேவர் கிறிஸ்தவ சமயப் பிரச்சாரத்தில் தலையிடவில்லை. சமய மாற்றம் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமேயிருந்தது.

மதுரையைப் பொறுத்தளவில் கிறிஸ்துவர்களுக்குச் சமயப்பொறை வழங்கப்பட்டது. மங்கம்மாள் கிறிஸ்தவர்களைப் பொறையுடன் நடத்தினாள். சமயப்பிரச்சாரக் காரணங்களுக்காக சிறைவைக்கப்பட்ட மெல்லோப் பாதிரியார் (Mello) விடுதலை செய்யப்பட்டார். தர்பாரில் போசேத் (Bouchet) பாதிரியார் மங்கம்மாளால் வரவேற்கப் பட்டார். கிறிஸ்துவர்களுக்காக அவருடைய விண்ணப்பம் உற்று நோக்கப்பட்டு, கேட்டவை வழங்கப்பட்டன. அச்சலுகைகளை நரசப்பைய்யன் அவையில் அறிவித்தான்.

நற்பணிகளுக்காக நாட்டுச் செல்வங்களைச் செலவழித்தார். கோயில், கொத்தளங்கள், கோட்டைவாயில்கள், மண்டபங்கள், வழிப்போக்கர் தங்கும் விடுதிகள், பயணியர் விடுதிகள் எழுப்பப்பட்டன. பழைய சாலைகள் செப்பனிடப்பட்டன; புதியன போடப்பட்டன. தெருக்களின் மருங்குகளில் மரங்கள் நடப்பட்டன. பயணியர் விடுதிகள் ஆங்காங்கே சிறப்புடன் இயங்கி வந்தன. 1701இல் வெளியிடப்பட்ட ஒரு கல்லெழுத்து உண்டிவழங்கும் சங்கத்திற்கு நிலம் விட்டதைக் கூறுகின்றது. மங்கம்மாள் பிராமணர்க்கு

அக்ரகாரங்கள் அமைத்தாள். தண்ணீர்த் தொட்டிகள் எழுப்புவதிலும், நீர்ப்பாசனம் செய்வதிலும் தம் கவனத்தைச் செலவிட்டனர். 1687, 1704ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட உய்யக்கொண்டான் கால்வாயருகில் கிடைத்த கல்லெழுத்துக்கள் இதனைக் கூறுகின்றன.

மங்கம்மாள் துன்பச்சூழலில் இறந்தாள் என்று நெல்சன் அறிவிக்கின்றார். தளபதி அச்சய்யாவுடன் கொண்டிருந்த முறையற்ற தொடர்பால் தம்பெயரை இழந்தாள். பேரன் வளர்ந்து வயதுக்கு வந்தபோதும் ஆட்சிப்பொறுப்பை அவனிடம் ஒப்படைக்கத் தயங்கினாள். இதனால் மக்கள் அவளிடம் வெறுப்படைந்தனர். இறுதியில் அவள் கைது செய்யப்பட்டு, சிறையிலிடப்பட்டு, அங்கு இறந்தாள். நெல்சனின் இச்சான்றுகளுக்கும் போதிய ஆதாரம் வேறில்லை. பாதிரியார்களின் கடிதங்கள் மங்கம்மாளின் மரணம்பற்றி ஏதும் கூறுவதில்லை. கல்லெழுத்துப்படி அவள் 1706இல் இறந்தாள். அவள் பகர ஆளுநராக 18 ஆண்டுகள் மதுரையம்பதியை நிர்வகித்தாள்.

## விஜயரங்க சொக்கநாதர் (1706–1732)

1706இல் மங்கம்மாள் இறந்தபின் சொக்கநாதர் அரியணை ஏறினார். அவராட்சியின் போது நாட்டில் குழப்பங்கள் பெருகின. இவற்றைக் கண்டு மன்னர் வருந்தியதில்லை. அமைச்சர்கள் புதுவரிகளிட்டு மக்களைத் துன்புறுத்தினர். தவறிழைத்து ஆளும் அமைச்சர்கள் மீது மன்னன் நடவடிக்கை எடுக்கவில்லை. நாட்டுச் செல்வத்தை பயனற்ற இன்பங்களில் விரையமாக்கினார். இதனைத்தளவாய் நரசப்பையனும், வெங்கடராகக வாச்சாரியாரும் பயன்படுத்தி, பொதுச்சொத்தைச் சூறையாடினர். 1710-1720ஆம் ஆண்டுகளில் வறட்சியும் பஞ்சமும் ஏற்பட்டன. மன்னருக்கு எதிராகக் கலகம் ஏற்பட்டது. மன்னனின் ஆற்றலின்மை ஆட்சியையும் அழித்தது, நாட்டின் பரப்பளவையும் சிதைத்தது. சேலம், கோயம்புத்தூர் மொத்தமாக மைசூருக்குச் சென்றது. மறவர் நாடு சுதந்திரமாயிற்று. 1726இல் பகைவரால் தாக்கப்பட்ட கேரள அரசன் சொக்கநாதரிடம் உதவி நாடினான்; ஆனால் கேரளனைக் காக்க மதுரையால் இயலவில்லை. ஆகவே திருவிதாங்கூரும் பிரிந்து சென்றது. சொக்கநாதர் 1732இல் இறந்தார்.

## மீனாட்சி (1732–1736)

சொக்கநாதரின் மனைவியே மீனாட்சி. ஆண்மகவு இல்லாக் காரணத்தால் மீனாட்சியே நாட்டையாளத் தொடங்கினாள். திருமலை நாயக்கரின் வழிவந்த பங்காரு திருமலையின் மகனாகிய விஜயகுமார் என்பவனைத் தத்து எடுத்திருந்தாள். மீனாட்சியை அவளுடைய சகோதரனாகிய வேங்கட பெருமாள் நாயக்கர் ஆதரித்தார். மீனாட்சியை அகற்ற திருமலை செய்த முயற்சி பலிக்கவில்லை. தஞ்சை, மதுரையம்பதிகளை ஆர்காட் நவாபின் படைகள் தாக்கின. நவாப் தோஸ்த் அலியின் மகன் சப்தர் அலியும் (Safdar Ali) சந்தா சாகிபும் (Chanda Sahib) (தோஸ்த் அலியின் மருமகன்) இப்படையெடுப்பை நடத்தினர். எதிரிப்படைகளின் வருகையை மதுரையின் எதிரிகள் பயன்படுத்திக் கொண்டனர். சப்தர் அலியை பங்காரு திருமலை கையீட்டுக் கொடுத்துத் தம்பக்கம் சேர்த்துக் கொண்டனர்.

சப்தர் அலி நடுவராக இருப்பதாயும், அனைத்துக் கட்சி மாநாட்டைக் கூட்டி, கோரிக்கை களை உற்று நோக்கி, தகுந்த முடிவு தருவதாயும் அறிவித்தார். மாநாடுகூட்டும் வேண்டு கோளுக்கு மீனாட்சி செவி சாய்க்கவில்லை. பங்காருவுக்குச் சாதகமாக சப்தர் அலியும் தம்முடிவை வெளியிட்டார். மீனாட்சி சந்தா சாகிபுடன் பேச்சு வார்த்தை தொடங்கி னாள். அமைதி ஏற்படுமாயின் சந்தா சாகிபுக்கு ஒரு கோடி ரூபாய் தருவதாயும் வாக்கிறுத்தாள். சந்தா சாகிபும் இதற்கிணங்கினான். பின்னர் சந்தா சாகிபை மீனாட்சி தம் அவையில் வரவேற்றாள். இதுபற்றி அவைக் குறிப்புகள் தரும் சான்றுகளும் செய்திகளும் ஒன்றுக்கொன்று முரண்பாடானவை. இச்சமயம் மீனாட்சிக்கும் பங்காருவுக்கும் உறவு ஏற்பட்டது என்றும், சந்தா சாகிபிடமிருந்து நாட்டைக் காப்பாற்ற விஜயகுமார் அனுப்பப்பட்டார் என்றும் கூறப்படுகிறது.

மீனாட்சியின் செயல்களால் வெறுப்புற்ற சந்தாசாகிபு ஆற்காடு திரும்பினான். 1736இல் மீண்டும் அவன் திருச்சிராப்பள்ளிக்கு வந்தான். இச்சமயம் மதுரையைக் கைப் பற்ற வேண்டும் என்ற நோக்குடன் வந்தான். திருச்சிக் கோட்டையைக் கைப்பற்றினான். கோவிந்தைய்யா, ராவணய்யா தலைமையில் 80,000 படையைத் தெற்கு நோக்கி யனுப்பினான். திண்டுக்கல்லைத்தாக்கிவிட்டு, அப்படைகள் மதுரைக்குப் புறப்பட்டன. பங்காரு திருமலை இப்படையெடுப்பாளரை எதிர்க்கப் படை சேர்ந்தார். அம்மயநாயக்க னூரில் நடைபெற்றபோரில் மதுரைப்படை சிதறடிக்கப்பட்டது. பங்காரு சிவகங்கையில் அடைக்கலம் புகுந்தார். மதுரையம்பதி முஸ்லீம்கள் கைக்குள்ளாயிற்று; மீனாட்சி சிறையிடப்பட்டாள். பின்னர் நஞ்சு ஊட்டப்பட்டு கொல்லப்பட்டாள். மீனாட்சியின் மரணத்துடன் மதுரை நாயக்கர் அரசும் முற்றிற்று.

**பயிற்சி வினாக்கள்**

1) மதுரை நாயக்கர் முடிநாட்டின் தோற்றத்தை வரைக.

2) திருமலையின் சாதனைகளை மதிப்பிடுக.

3) ராணி மங்கம்மாளின் ஆட்சியைப் பற்றி எழுதுக.

4) விஸ்வநாதரின் சாதனைகளை ஆய்க.

5) ‘சொக்கநாதரின் ஆட்சி நாயக்கராட்சியின் வீழ்ச்சியின் தொடக்கம்’ ஆராய்க.

**பாடம் – 14**

# தஞ்சை நாயக்கர்கள் – செஞ்சி நாயக்கர்கள்

## தஞ்சை நாயக்கர்கள்

தமிழகத்தில் விஜயநகரப் பேரரசின் மிகச்சிறந்த ஆட்சிப் பகுதிகளுள் தஞ்சையும் ஒன்றாகும். படை வீட்டு வம்சத்தின் சம்புவராஜ்யம் தோல்வியுற்றவுடனேயே தஞ்சைச் சோழப் பேரரசின் பகுதிகளைனத்தும் குமாரகம்பணரின் அதிகாரத்தினுள் கொண்டு வரப்பட்டது. படை வீடு வமிசம் கம்பணரால் தோற்கடிக்கப்படும் தருவாயில், சோழர்கள், கேரள அரசு வமிசத்தவர்கள், பாண்டியர்கள் ஆகியோர் விஜயநகர அரசின் நண்பர் களாகவே இருந்தனர் என கங்காதேவியின் மதுரா விஜயம் கூறுகிறது. கி.பி. 1521ஆம் ஆண்டுவாக்கில் தமிழகம் முழுவதையும் தமது ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்த கிருஷ்ண தேவராயர், தமிழகப் பகுதிகளை மூன்று பிரிவுகளாக, மூன்று தலை நகரங்களின் கீழ் பகுத்தார். அவையாவன, செஞ்சி, தஞ்சாவூர், மதுரை ஆகியவற்றைத் தலைநகரங்களாகக் கொண்ட பகுதிகளேயாகும். கிருஷ்ண தேவராயர், தொண்டை மண்டலத்தில் அமர நாயக்கராக, திம்மப்ப நாயக்கர் என்பவரை நியமித்தார் எனக் கூறப்படுகின்றது. இந்த திம்மப்ப நாயக்கர் ஆரம்ப காலத்தில் வாயிற் காவலராகப் பணியாற்றி வந்தவரேயாவார். ருக்மணிபரிநயம் என்னும் நூல், திம்மப்ப நாயக்கர் பிறப்பால் ஒரு சூத்திரர் எனவும், பேரரசரிடம் அவர் கொண்டிருந்த மரியாதையே அவரை இந்நிலைக்கு உயர்த்தியது எனவும் குறிப்பிடுகின்றது.

சுதந்திர தஞ்சை நாயக்கர் அரசைத் தோற்றுவித்தவர், திம்மப்ப நாயக்கர், வையம்பா ஆகியோரின் மைந்தரான செவப்ப நாயக்கரேயாவார், என தஞ்சாவூரி ஆந்திர ராஜுலூ சரித்திரம், தஞ்சாவூரி வரி சரித்திரம் ஆகிய நூல்கள் குறிப்பிடுகின்றன. அச்சுதராயரின் தனி உதவியாளராகப் பணிபுரிந்த செவப்பர் பேரரசின் அடப்பைக்காரராகவும் பணி செய்தார். அவரது, விசுவாசம், தைரியம், ஆர்வம் ஆகியவற்றைக் கண்ட அச்சுதராயர், அவருக்கு, தனது மனைவியார் வரதாம்பிகாவின் தங்கையான மூர்த்தி மங்காவைத் திருமணம் செய்து கொடுத்தார். பேரரசருக்குத் தமது நன்றியைத் தெரிவிக்கும் வகையில், செவப்பர், தனது மகனுக்கு அச்சுதப்பர் என்று பெயரிட்டார். அரச வமிசப்பெண்ணைத் திருமணம் செய்து கொண்ட பின்பு செவப்பர் தஞ்சையின் ஆளுநராக அமர்த்தப்பட்டார். ஆனால் அவரது பதவி உயர்வு பற்றி மூன்று விதமான கருத்து வேற்றுமைகள் கூறப்படுகின்றன. அவை 1. அவர் தஞ்சையின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். 2. செவப்பர், தஞ்சாவூரைத் தனது மனைவி மூர்த்தி மங்காவுக்குச் சீதனமாகப் (ஸ்ரீதானம்) பெற்றார். 3. கி.பி. 1532இல் தஞ்சையைக் கைப்பற்றினார். சாகித்திய ரத்னகாரம் எனும் நூல் தஞ்சையை செவப்பர் கைப்பற்றினார் என்ற கருத்தை ஆதரித்துக் கூறுகின்றது. ஆனால் எஸ். கிருஷ்ணசாமி அய்யங்காரின் ஆதாரங்களும், மறைத்திரு ஹூராஸின் விஜயநகரத்தின் அரவீடு வமிசத்து வரலாற்று நூலும் தஞ்சை செவப்பரின் மனைவிக்குச் சீதனமாகக் கிடைத்தது என்ற கருத்தினை ஆதரிக்கின்றன. எஸ்.கே. அய்யங்காரும், ஹூராஸ் அடிகளும், தமது விசுவாசத்தால் செவப்பர் மூர்த்தி மங்காவை மனைவியாகவும், அதன் மூலமாக தஞ்சையைச் சீதனமாகவும் பெற்றார் என்கின்றனர்.

செவப்ப நாயக்கர், சோழமண்டலம், தொண்டை மண்டலத்தின் தென் பகுதிகள் ஆகியவற்றை ஆட்சி செய்து வந்தார். மதுரை நாயக்கரின் ஆட்சிப்பகுதியிலடங்கிய வல்லம் என்ற பகுதியைத் தனக்காகப் பெற்றுக் கொண்டார். இதற்கு மாற்றாக திருச்சியை மதுரை நாயக்கருக்கு உட்படுத்தினார். இவரது ஆட்சிக் காலத்தில் தான் நாகப்பட்டினத்தில் போர்த்துக்கீசியரின் குடியேற்றங்கள் ஏற்பட்டன. தஞ்சைத் தரணியைச் சேர்ந்த மூவலூர் என்னுமிடத்தில் அமைந்துள்ள திருக்கோயிலுக்கு திருப்பணி செய்வதற்காக பத்துவேலி நிலத்தை செவப்பர் தானமாக வழங்கினார். தஞ்சையில் அமைந்திருந்த சிவகங்கை குளத்தைப் பழுதுபார்த்த செவப்ப நாயக்கர் அதற்கு செவப்பனேரி என்ற புதிய பெயரும் இட்டார். கி.பி. 1549ஆம் ஆண்டு பிராமணர்களுக்கு உணவு கொடுக்கவும், சன்னியாசி களை நிர்வகிப்பதற்கும் இவர், நிலங்களைத் தானமாக வழங்கினார். தஞ்சையில் சிவகங்கைக் கோட்டையைக் கட்டினார்; பல கோபுரங்களைக் கட்டினார்; பல மண்டபங்கள் எழுப்பப்பட்டன; விருத்தாச்சலம், திருவண்ணாமலை ஆகிய இடங்களில் உள்ள கோயில்களில் பிரகாரங்களை எழுப்பினார். போர்த்துக்கீசியருக்கு எதிரான போரிலும், திருவாங்கூர் அரசருக்கு எதிரான போரிலும், கி.பி. 1565ஆம் ஆண்டு நடந்த தலைக்கோட்டைப் போரிலும் செவப்ப நாயக்கர் பேரரசருக்கு உதவினார். கி.பி. 1580இல் செவப்பர் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

செவப்பரின் மகனான அச்சுதப்பரும், மூர்த்தியம்பா என்னும் மூர்த்திமங்கா (செவப்பரின் மனைவி)வும் (கி.பி. 1580இல்) அரியணை ஏற்றனர். இவ்வாட்சி கி.பி. 1600ஆம் ஆண்டு வரைத் தொடர்ந்தது. கி.பி. 1560ஆம் ஆண்டு வாக்கில் அச்சுதப்பர் யுவராஜா அல்லது இளவரசராக இருந்திருக்கக்கூடும். தஞ்சைப் பெரிய கோயிலில் காணப்படும் அவரது முதல் கல்வெட்டு ஒன்று, பொற்கொல்லருக்கு இவர் கொடுத்த நிலதானம் பற்றிக்கூறுகிறது. இவர் தலைக்கோட்டைப் போரில் முதன்மைப் பங்கு பெற்றார்; பேரரசருக்கு உறுதுணையாக இருந்ததுடன், திறையும் செலுத்தி உதவினார். தவிர, பேரரசருக்கு அடங்காத மதுரை நாயக்கரை அடக்குவதற்காகப் பேரரசருக்கு பெரிதும் துணைபுரிந்தார். மதுரை நாயக்கர் வல்லம் பிரகாரம் (வல்லம்) என்ற இடத்தில் நடந்த போரில் தோற்கடிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இப்போர்களில், தஞ்சையின் அச்சுதப்பர் பேரரசருக்கு, பொருளாதார, இராணுவ, மற்றும் பல உதவிகளை நல்கியதாகக் கூறப்படுகிறது. காலவெள்ளத்தால், மதுரை நாயக்கரின் வளர்ச்சியை இவர் தடுத்து வந்தார்.

போர்த்துக்கீசியருடன் நடந்த போரில், இவர், யாழ்ப்பாணத்தின் (Jaffna) ஆட்சியாளருக்கு உதவினார். ஆனால் இவரது நண்பரான யாழ்ப்பாண ஆட்சியாளர் தோற்கடிக்கப்பட்டதுடன் தஞ்சைத்தரணியில் தஞ்சம் புகவேண்டிய நிலைக்கு உட்படுத்தப் பட்டார். இவருக்கு கோவிந்த தீட்சிதரும் உதவியாக இருந்தார். ஹூராஸ் அடிகளார் அச்சுதப்பரின் சாதனைகள் சிலவற்றைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றார். அவை, 1) நாகப்பட்டினத்தில், டச்சுக்காரர்கள் போர்த்துக்கீசியருக்கு எதிராக குடியேற்றங்களை ஏற்படுத்த முயன்றபோது அதைத்தடுத்தார். பிமண்டா எனும் அடிகளார் (1597), நாகப்பட்டினத்தில் வசிக்கும் போர்த்துக்கீசியர் பற்றி குறிப்பிடுகின்றார். 2) நாகப்பட்டி னத்தில் திருச்சபை ஒன்று அமைக்குமாறு பிமண்டா அடிகளாருக்கு அச்சுதப்பர் அழைப்பு விடுத்தார். ஏற்கனவே, தரங்கம்பாடியில் திருச்சபை ஒன்றின் கட்டிட வேலை நடந்து கொண்டிருந்தது. இவர் வசிப்பதற்காக ஓரிடத்தை 500 டக்கெட்ஸ் (duckets) கொடுத்து

விலைக்கு வாங்கினார். 3) காவல்குடரு என்ற இடத்தில் அமைந்துள்ள விநாயகர் திருக் கோயிலில் காணப்படும் வெங்கடரின் கல்வெட்டு ஒன்று அச்சுதப்பரால் வெளியிடப் பட்டதே. வெங்கடரின் கல்வெட்டு ஒன்று (1596-97), கோவிந்த தீட்சிதருக்கு அச்சுதப்பர் அளித்த நன்கொடை ஒன்றினையும், ஸ்ரீரங்கம் திருவரங்க நாதருக்கு அச்சுதப்பரால் அமைக்கப்பட்ட வைர அரியணை பற்றியும், இராமேஸ்வரத்திருக்கோயிலில் வீற்றிருக்கும் இராமநாதசுவாமிக்கு இவர் அளித்த கொடைபற்றியும் குறிப்பிடுகின்றது. 4) வெங்கடர் பேணுகொண்டா மீது போர் தொடுத்தபோது இவருக்கு இரகுநாதரை உதவியாக அச்சுதப்பர் அனுப்பி வைத்தார். கிருஷ்ணதேவராயரால் துவக்கப்பட்ட திருவண்ணா மலை அருணாசலேஸ்வரர் திருக்கோயில் அச்சுதப்பர் காலத்தில் கட்டிமுடிக்கப்பட்டது. நாட்டு மக்களின் சார்பாக பல பிரம்மதேயங்களை இவர் பிராமணர்க்கு வழங்கினார்; அக்ரஹாரங்கள் பல ஏற்படுத்தப்பட்டன. புகழ்மிக்க கும்பகோணம் மஹாமஹம் குளம் கோவிந்தரால் பழுதுபார்க்கப்பட்டது. சேம்பியன் நாட்டின் ஒரு பகுதியான ஸ்ரீதேசத்தில் அமைந்துள்ள கோயிலுக்கு நிலம் தானமாகக் கொடுக்கப்பட்டது. மாயுரம், கும்பகோணம், திருவிடைமருதூர் ஆகிய ஊர்களில் காவிரிக்கரைகள் பழுதுபார்க்கப்பட்டன.

கி.பி. 1595ஆம் ஆண்டுவாக்கில், மதுரை தஞ்சை நாயக்கர்கள் வெங்கடபதிராயருக்கு எதிராகப் புரட்சி செய்தனர் என பெர்ரன் (Perron) என்பவர் குறிப்பிடுகின்றார். ஆனால் ஹீராஸ் அடிகளின் கருத்துப்படி புரட்சி பிற்காலத்தில் ஏற்பட்டது. இப்புரட்சி பற்றிய கருத்தில் பெர்ரன் தனக்குத்தானே குழம்பியிருக்கக்கூடும். வெங்கடர், தஞ்சை நாயக்கரான அச்சுதப்பருக்கு எதிராகப் போர் தொடுத்தார் என கோடின்ஹோ அடிகளார் குறிக்கின் றார். அச்சுதப்பரின் கீழிருந்த காஞ்சிபுரத்தைக் கைப்பற்றும் அளவு வலிமை படைத்த படையை வெங்கடர் வைத்திருந்ததாகவும் அவர் கூறுகின்றார். அச்சுதப்பருக்கும் வெங்கடருக்குமிடையே பகைமை வளர்வதற்கான காரணம் காஞ்சி நகரைக் கைப்பற்று வது, தக்க வைத்துக் கொள்வது என்பது தானே தவிர திறை செலுத்துவதில் ஏற்பட்ட தவறல்ல என ஹீராஸ் அடிகள் குறிப்பிடுகின்றார். கி.பி. 1600ஆம் ஆண்டு அச்சுதப்பர் இறந்தபோது சுமார் 370 பெண்கள் முறைப்படி தற்கொலை செய்து கொண்டார்கள் என, 1600ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் பதினேழாம் தேதியிட்ட தனது கடிதம் ஒன்றில் கோட்டின் ஹோ அடிகள் குறிப்பிட்டுள்ளார். சார்யி (Jarrie) அடிகள் பிமண்டா அடிகள் ஆகியோரின் கருத்துப்படி எழுபது மனைவிகள் உடன்கட்டை ஏறினார்கள்.

இரகுநாதபியூதயம் என்னும் நூல், அச்சுதப்பர் புனிதப்பயணம் தொடர்ந்தார் எனக் குறிப்பிடுகின்றது. ஹுராஸ் அடிகள், கி.பி. 1597இல் இரகுநாதர் அரியணையெய்தினார் எனக் கூறுகின்றார். அவர் உள்நாட்டுப்போருக்கும் இலங்கைக்கு எதிரான போருக்கும் முற்பட்ட காலத்திலேயே அரியனை ஏறினார் என்ற கருத்தும் நிலவுகிறது. எவ்வா றெனினும் கி.பி. 1600இல் அவர் அரசெய்தினார். இதற்கு முன்பு அவர் இளவரசராக இருந்திருக்கக்கூடும் எனவும் வரலாற்றாளர் பகர்வர். இரகுநாதரின் அரசுகட்டில் ஏறுதல் பற்றி மேலும் கருத்துக்கள் நிலவுகின்றன. இரகுநாதரின் தந்தை தனது மூத்தமகனுக்குப் பதிலாக இளவலான இரகுநாதரை தனது வாரிசாகத் தேர்ந்தெடுத்தார். இதனால் தனது மூத்த புதல்வரைச் சிறையிலடைத்தார். சிறையிலடைக்கப்பட்ட தனது சகோதரரை இரகுநாதர் கொடூரமாகக் கொன்றார். பின் 1600இல் அரசெய்தினார். பிராமணர்கள் வசமிருந்த பேணுகொண்டாவைக் கைப்பற்றிய பின்பு இவர் தஞ்சையை அடைந்தார்.

இவர் தம் தந்தை இவருக்கு சிறப்பான வரவேற்பினை அளித்தார். இவர் தம் சேவையை ஏற்றுக்கொண்ட பேரரசர், இவரது வேண்டுகோளுக்கிணங்க செஞ்சியின் இரண்டாம் கிருஷ்ணப்பரை விடுதலை செய்தார். இரகுநாதரின் தந்தை இறந்ததைத் தொடர்ந்து சகோதரர்களுக்கிடையே நடந்த போர் பற்றிய சரியான ஆதாரங்கள் கிடைக்கவில்லை. கி.பி. 1610ஆம் ஆண்டுவாக்கில் தஞ்சை நாயக்கருக்கும் பேனுகொண்டாவின் ஆட்சியாளருக்குமிடையே நல்லுறவு இல்லை எனக் கூறுவது வரலாற்றடிப்படையில் உண்மைக்குப் புறம்பானதேயாகும்.

பேரரசர் முதலாம் வெங்கடர் சாந்தோமைத் தாக்கியபோது இரகுநாதர் அவருக்கு உதவினார். தோப்பூர்ப் போரில், பேனுகொண்டாவை மதுரை நாயக்கரிடமிருந்து கைப்பற்ற செய்த முயற்சியில் பங்கு கொண்டு சிறந்த தளபதி என நிரூபித்தார். பேரரசருக்கு இன்னல்கள் வந்தபோது அவரது உதவிக்கு வந்தார். கி.பி. 1616-17இல் நடந்த உள்நாட்டுப் போரின்போது, ஜக்க தேவராயர் பேரரசுக்கு எதிரணித் தலைவராகவும், யாச்சம நாயக்கர் பேரரசின் தலைவராகவும் போர் நடத்திய போது இரகுநாதர் பேரரசின் படைகளுக்கு தமது ஆதரவை நல்கினார். ஜக்கதேவராயர், மதுரை நாயக்கர், திருவதியின் அரசர் ஆகியோர் தோற்கடிக்கப்பட்டனர்.

மதுரை நாயக்க மன்னரான முத்து வீரப்ப நாயக்கர் தமது தலைநகரை மதுரை யிலிருந்து திருச்சிக்கு கி.பி. 1616இல் மாற்றினார். இந்நிகழ்ச்சி பகைமையை வளர்ப்பதற் காக செய்த முயற்சி என இரகுநாதர் கருதினார். ஆர். சத்தியநாதய்யர், இது போர் ஏற்படுத்தக்கூடிய ஒரு முன்னேற்றம் என்பதாகக் குறிப்பிடுகின்றார். ஆனால் ந. சுப்பிரமணியம் இது தற்காப்பு முயற்சியே என்கிறார். தலைநகர் மதுரையிலிருந்து திருச்சிக்கு மாற்றப்பட்ட தன் உண்மையான சூழ்நிலை, ஒருவேளை மேற்கூறப்பட்ட இரு ஆசிரியர்களின் கருத்துக்கும் இடைப்பட்டதாக இருக்கக்கூடும். கி.பி. 1616ஆம் ஆண்டுவாக்கில் மதுரை, தஞ்சை நாயக்கர்கள் தங்களுக்குள் பகைவர்களாகவே இருந்தனர். எனவே, ஒருகாலத்தில் தஞ்சையின் பகுதியாக இருந்த திருச்சி, மீண்டும் தனக்குக் கிடைக்க எண்ணி திருச்சி மீது படையெடுக்கும் நோக்கம் தஞ்சை நாயக்கர் அரசுக்கு வருவதற்கு எல்லா வகையான சூழ்நிலையும் இருந்தது. எனவே தன்னைக்காத்துக்கொள்ளவும், தனக்குத் தற்சமயம் சொந்தமாக இருக்கும் திருச்சியைக் காத்துக்கொள்ளவும், முத்து வீரப்பநாயக்கர்தனது தலைநகரை மாற்றியிருக்கக்கூடும். தஞ்சைக்கும், வல்லம் பகுதிக்கும் அருகாமையில் திருச்சி இருப்பதால், திருச்சியிலிருந்து கொண்டு, தமது நீண்ட நாளைய ஆசையை நிறைவேற்றி, தஞ்சையைக் கொள்ளவேண்டும் என முத்து வீரப்பர் நினைத்திருக்கலாம். முத்து வீரப்பருக்கு எதிரியாக இருப்பதைத் தவிர்ப்பதற்காக தஞ்சையின் இரகுநாதர் முத்துவீரப்பரின் மகளைத் திருமணம் செய்து கொண்டார். ஆனால் இத்திருமணத்தின் பலன் மிகக் குறைந்ததாகவே இருந்தது. மதுரை நாயக்கராக வந்த சொக்கநாத நாயக்கரின் முயற்சி தஞ்சைக்கும் மதுரைக்குமிடையே பகைமையை வளர்த்ததே தவிர நட்பை வளர்க்கத் தவறியது.

இரகுநாதநாயக்கர், கடற்கரைப் பகுதிகளிலமைந்துள்ள சோலகரின் (solagar) அரசுக்கு எதிராகவும், யாழ்ப்பாணத்து போர்த்துக்கீசியருக்கு எதிராகவும் படை ஒன்று அனுப்பினார். சோலகர், அதாவது கொள்ளிடம் ஆற்றின் வடபகுதியிலமைந்துள்ள

நாட்டின் ஆட்சியாளர், செஞ்சிநாயக்கரின் உதவிகொண்டு, தஞ்சைக்குத் தொல்லை கொடுத்தான். சோலகருக்கு எதிராகப் படையெடுப்பு ஒன்றை நடத்திச்சென்ற இரகுநாதர் அவரைப் பணியவும் வைத்தார். செஞ்சியின் இரண்டாம் கிருஷ்ணப்பர் அவமானம் தாங்காது ஓடினார். யாழ்ப்பாண ஆட்சியாளரைப் போர்த்துக்கீசியர்கள் அவரது நாட்டை விட்டு விரட்டியபோது, முன்னவர் தஞ்சைநாயக்கரிடம் உதவி கோரினார். தேவகோட்டை யிலிருந்து புறப்பட்டு மன்னார்குடாவைக் கடந்து, போர்த்துக்கீசியரைத் தோற்கடித்து தஞ்சைப்படை, மீண்டும் யாழ்ப்பாண அரசரைப் பதவியலமர்த்தியது. ஆனால் இவ்வெற்றி குறைந்த காலமே நிலைத்திருந்தது. போர்த்துக்கீசியர் பெரும் படைதிரட்டி மீண்டும் யாழ்ப்பாண, தஞ்சைப் படைகளைத் தோற்கடித்தனர்.

இரகுநாதபியூதயம் என்னும் நூல் முராஸஸ் மக்கள் தலைவருக்கு எதிரான இரகுநாதநாயக்கரின் வெற்றியைப்பற்றி விளக்குகிறது. முராஸஸ் தலைவர் வடஆற்காடு மாவட்டம், கோலார், முல்பஹால் பகுதிகளடங்கிய கோலார் மாவட்டம் ஆகியவற்றில் வாழ்ந்தவராவர். இரகுநாதர், மத்லஆனந்தர் ஆகியோர் தலைமையிலான படை ஒன்று குரோட்டா — காணமா (Krotta Kanama) போர்க்களத்தில், தம்மனக்கவுடரைத் தோற்கடித்து பேரரசருக்கு திறை செலுத்துமாறு அவரைக் கட்டாயப்படுத்தியது. "பேரரசரின் எதிரிகளனைவரையும் தோற்கடித்த இரகுநாதர், கர்நாடகத்தின் அனைத்துப் பகுதிகளையும், மீண்டும், முதலாம் வெங்கடரின் கீழ்க்கொண்டு வந்தார்" என ராமபத்ராம்பாள் கூறுகின்றார். இவ்வெற்றி கி.பி. 1591ஆம் ஆண்டுவாக்கில், அதாவது இரகுநாதர் தஞ்சை மன்னராக பட்டமேற்பதற்கு முன்பு, நடந்ததாகும் என விருத்தகிரீசன் கருதுகின்றார்.

இவர்தம் ஆட்சிக்காலத்தில், ஐரோப்பியர், போர்த்துக்கீசியர், டச்சுக்காரர்கள், டேனியர்கள், ஆங்கில வணிகர்கள் ஆகியோர் கோரமண்டலக் கடற்கரைப் பகுதியில் அதிகமாகக் குடியேறினர். டச்சுக்காரர்களும், போர்த்துக்கீசியரும், புதிய குடியேற்றங்களை ஏற்படுத்துவதிலும், புதிய பண்டகசாலைகளை நிறுவுவதிலும், விஜயநகர அரசர்களின் நன்மதிப்பைப் பெறுவதிலும் போட்டிபோட்டுக்கொண்டனர். இரகுநாதர், இப்போட்டிக் காலத்தில் நாகப்பட்டினம், சாந்தோம் பகுதிகளில் போர்த்துக்கீசியருக்கு எதிராக, டச்சுக்காரர்களுக்கு உதவ முன்வந்தார். இதற்கு, போர்த்துக்கீசியரின் வாணிப, சமயக்கொள்கைகளே காரணமெனக் கூறப்படுகிறது. கி.பி. 1610இல் டச்சுக்காரர்கள் இரகுநாதரிடமிருந்து தெக்னானபட்டினத் (Tegnanpatam)தைப் பெற்றனர். தரங்கம் பாடிக்கும் நாகப்பட்டினத்திற்குமிடையிலான திருமிழிப்பட்டினத் (Trimilipatam)தில் கோட்டை ஒன்றை எழுப்ப டச்சுக்காரர்கள் முயன்றபோது, தமது சமயத்திற்கு இன்னல்வரும் என்று கருதி தஞ்சைநாயக்கர், அனுமதி மறுத்தார்.

டச்சுக்காரர்கள், போர்த்துக்கீசியரின் கப்பல்கள் கடலில் அழிவதற்கு முயன்றார்கள். ஆனால் பின்னவர்கள், டச்சுக்காரர்களின் ஆதிக்கத்தை வளரவிடாமல் தடுக்க பெருமுயற்சி எடுத்துக் கொண்டனர் என ஆங்கிலேயர்கள் கருதுகின்றனர். 1624ஆம் ஆண்டு ஆங்கிலேயர்கள் பண்டகசாலை ஏற்படுத்தச் செய்த முயற்சியில் தோற்றனர். கி.பி. 1620இல் தரங்கம்பாடியில் டாங்ஸ்பர்க் என்னும் குடியேற்றம் ஒன்றை நிறுவ டானியருக்கு தஞ்சை நாயக்கர் அனுமதி நல்கினார். வெளிநாட்டவருக்குக் கொடுக்கப்

பட்ட அனுமதிகளிலிருந்தும், கொடைகளிலிருந்தும், சோழமண்டலக் கடற்கரைப் பகுதியில் வாணிபம் செய்ய உதவியதிலிருந்தும் நோக்கும்போது, தஞ்சை நாயக்கர்கள் எல்லா ஐரோப்பியரிடமும் பொறுமையாக நடந்து கொண்டனர் எனத் தெரிய வருகின்றது.

கு. இராசய்யன், "செஞ்சி கிருஷ்ணப்ப நாயக்கரின் சமகாலத்தவரான இரகுநாத நாயக்கர் (1600-1634), தஞ்சையின் நாயக்க மன்னர்களில் தலை சிறந்தவர்" எனக் கூறுகின்றார். தமது எதிரிகளுக்கெதிரான பல வெற்றிகளாலும், பேரரசரின் எதிரிகளான — பாமினி சுல்தான்கள், மதுரை, செஞ்சி நாயக்கர்கள், சோலகர், முராஸஸ் தலைவர், யாழ்ப்பாண போர்த்துக்கீசியர், மற்றும் பலர்மீது கொண்ட வெற்றிகளாலும் இரகுநாதர் புகழப்படுகின்றார். இவர், இலக்கியத்தில் வல்லவர்; இசையில் தேர்ந்தவர்; யக்ணநாராயண தீட்சிதர், கோவிந்த தீட்சிதர் ஆகியோரின் பிரதம சீடர். சமயப்பொறை மிக்க ஆட்சியாளர்; பேரரசரின் நம்பிக்கைக்குரிய நண்பர்; எதிரிகளுக்கெதிரான கொடுமையான ஆயுதமாவார். இவர், நாட்டில் அமைதியையும், செல்வச்செழிப்பையும், முன்னேற்றத்தையும் நிறுவி விட்டுச் சென்றார். ஆனால், இவை அனைத்தும் அவரது வழித்தோன்றலால் அழிவுக்குட் பட்டது. இவரது வழித்தோன்றலான விஜயராகவ நாயக்கர் கி.பி. 1593இல் பிறந்து கி.பி. 1633இல் தனது நாற்பதாவது வயதில் அரசு கட்டில் ஏறினார். நாற்பதாண்டுகள் ஆட்சி செய்து பின் 1673இல் இவ்வுலக வாழ்வு நீத்தார்.

விஜயராகவ நாயக்கர், தனது தந்தையைப்பற்றிக் கூறும் இரகுநாதபியூதியத்தின் ஆசிரியரேயாவார். இவர் தனது சகோதரர்களையே கொன்று குவித்து தமது பதவியைத் தக்க வைத்துக் கொண்ட கொலைகாரரேயாவார். இவர், தனது மூத்த சகோதரரின் கண்களைக் கெடுத்து பிடுங்கி எரிந்ததாகக் கூறப்படுகிறது. தனது மகன் மன்னாருதாசைக் கைது செய்து பொன்விலங்கிட்டு அழைத்துச் சென்றவர். சூடாமணி தீட்சிதரின் ஆனந்தராகவ நாடகம், அச்சுதர், ராமபத்திரர் எனும் விஜயராகவரின் இரு மைந்தர்களைப் பற்றிக் கூறுகிறது. ஆனால் இவ்விருவர் பற்றியும் நமக்கு மிகக்குறைந்த செய்திகளே கிடைக்கின்றன. இவ்வாறு தனது பதவிக்கும், அரியணைக்கும் எதிராக இருந்த அனைவரையும், சகோதரர் என்றும் மைந்தரென்றும் பாராது கொன்று குவித்ததன் மூலம் விஜயராகவர் தனது நிலையைத் ஸ்திரப்படுத்திக்கொண்டார்.

இவர் மதுரை நாயக்க அரசுடன் நல்லிணக்க உறவு வைத்திருக்கவில்லை. ஆனால் பேரரசர்களான இரண்டாம் வெங்கடருடனும், மூன்றாம் ஸ்ரீரங்கருடனும் நட்புணர்வு கொண்டிருந்தார். விஜயநகர அரவீடு வமிசத்தின் இறுதி மன்னரான மூன்றாம் ஸ்ரீரங்கர் விஜயராகவரின் நடவடிக்கைகளை வெகுவாக மாற்றியமைத்தார். பேரரசின் பழைய பெருமையையும் புகழையும் நிலை நாட்டும் பொருட்டு, ஸ்ரீரங்கர் தமது தென்னக சிற்றரசுகளைக் கீழ்ப்படியச் செய்யவும், பேரரசினை விரிவுபடுத்தவும் படையெடுப்பு, ஒன்றினை நடத்தினார். இதனை அறிந்த மூன்று நாயக்கர் அரசுகளும் — மதுரை, தஞ்சை, செஞ்சி — பேரரசருக்கு எதிராக இணைந்தன. ஆனால், விரைவிலேயே விஜயராகவ நாயக்கர் தனது உறவை மாற்றிக்கொண்டு மதுரை நாயக்கரை எதிர்த்தார். மதுரையில் திருமலை நாயக்கர், பேரரசர் ஸ்ரீரங்கரைத்தாக்கும்படி கோல்கொண்டாவின் சுல்தானைத் தூண்டினார். இவ்வாறு இருபக்கங்களிலும் எதிர்ப்பு வலுக்கவ்வே பேரரசர்

தமது தென்னகப் படையெடுப்பைத் திரும்பப்பெற்றார். பிஜப்பூர் சுல்தான் தாக்குதல் நடத்தியபோது ஸ்ரீரங்கரின் நிலை கவலைக்கிடமானது. ஸ்ரீரங்கர் மதுரை நாயக்கரை எதிர்த்து, பின் தெளிவற்ற நிலையில் தானே புறக்கணித்து தஞ்சாவூர், மைசூர் வழியாக தம் தலைநகர் சென்ற அதே நேரத்தில் விஜயராகவ நாயக்கர் மதுரைக்கு எதிராகச் செயல்பட முற்பட்டார்.

மதுரை நாயக்கரின் பகைமையைச் சம்பாதித்த விஜயராகவர் அமைதியற்ற, பாதுகாப்பற்ற நிலையிலிருந்தார். கோல்கொண்டாவின் சுல்தான் தஞ்சைக்கு எதிராகப் படையெடுத்தார். தஞ்சை மன்னரும், படைவீரரும், மக்களும், குழப்பமடைந்த நிலையில், செய்வதறியாது ஓடினர். நாயக்கர் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார். ஒன்றுமில்லாததற்கு அலட்டிக்கொள்ளும் இவர்தம் ஆட்சி இவ்வாறு முடிந்தது என்ப் பேராசிரியர் சத்தியநாதய்யர் பகர்கின்றார். தஞ்சை நாயக்கர் அவமானத்திற்குட்பட்டு, கோல் கொண்டா சுல்தானுடன் உடன்பாடு செய்து கொண்டார். கி.பி. 1648இல் பிஜப்பூரின் சுல்தான் செஞ்சியைக் கைப்பற்றினார். பின் தஞ்சையை நோக்கிப் படை நடத்தினார். தஞ்சை நாயக்கர் இம்முறையும் தோற்கடிக்கப்பட்டு எதிரியிடம் சரணடைந்தார். 1653இல் தஞ்சை மீது படையெடுத்து எதிரிகளிடமும் தோற்றார். மதுரையின் முத்து வீரப்ப நாயக்கர், தனது ஆட்சிப் பகுதிகளைக் காப்பதற்காக 1659ஆம் ஆண்டுக்குப்பின் திருச்சியை வலிமைப்படுத்தினார். இதனையறிந்த விஜயராகவர், ஷாஜி, முல்லா முகமது ஆகியோரின் கீழிருந்த பிஜப்பூரியப்படைகளை, திருச்சியை முற்றுகையிடுமாறு கட்டாயப்படுத்தினார். ஆனால் பிஜப்பூர் படைகள் முதலில் தஞ்சைக்கு எதிராகச் சென்று அதனைக் கைப்பற்றின. வல்லம், மன்னார்குடி ஆகியவை பிஜப்பூரியரிடம் சிக்கின. பின்பு பிஜப்பூர் படைகள் திருச்சியை நோக்கிச் சென்றன. இத்தருணத்தில் மதுரை சொக்கநாத நாயக்கரின் திறமைமிக்க படைத்தளபதியான லிங்கம நாயக்கரால் திருச்சி பாதுகாக்கப்பட்டு வந்தது. திருச்சி நகரம் பலமான காவலுக்குட்படுத்தப்பட்டிருந்தாலும், அவர்களது கொள்ளைப் பொருட்கள் கள்ளர்களால் அபகரிக்கப்பட்டிருந்தாலும், தாக்குதல்கள் நடத்தியதாலும், பிஜப்பூரியப்படை தனது வெற்றி வாய்ப்பை இழந்து ஓடியது.

ஒரு திருமண உடன்பாட்டு விவகாரத்தில் மேலும் மேலும் மதுரை நாயக்கருக்கும் தஞ்சை நாயக்கருக்குமிடையே பகைமை மலைபோல் வளர்ந்தது. மதுரை நாயக்க மன்னரான சொக்கநாதர், தஞ்சையின் விஜயராகவரின் மகளைத் திருமணம் செய்து கொள்ள விரும்பினார். ஆனால் இதனை மறுத்ததோடு மட்டுமின்றி, விஜயராகவ நாயக்கர், சொக்கநாதரின் தூதுவரையும் அவமானப்படுத்தினார். சொக்கநாதர் தஞ்சைக்கு எதிராக இராணுவப் படையெடுப்பு ஒன்றை நடத்துமாறு அழகிரி நாயக்கரைப் பணித்தார். சொக்கநாத நாயக்கர் தானே சுமார் 70000 வீரர்களைக் கொண்ட படை ஒன்றை தஞ்சைக்கு எதிராக நடத்தினார். ஆனால் வானமியான் என்பவரின் தலைமையிலான பிஜப்பூர் படை திருச்சியைத் தாக்க முற்பட்டபோது சொக்கநாதர் தமது தஞ்சைப் படையெடுப்பிலிருந்து பின் வாங்கினார். கி.பி. 1673ஆம் ஆண்டு வெங்கட கிருஷ்ணப் பரின் கீழ் அனுப்பப்பட்ட படை வல்லத்தைக் கைப்பற்றியது. தஞ்சை தகர்க்கப்பட்டது. சோம்பித்திரிந்த, திறமையற்ற, உதவாக்கரையாயிருந்த தஞ்சை நாயக்க மன்னர் போரிட்டுக் கொண்டிருந்த போது கொல்லப்பட்டார். அதே ஆண்டில் தஞ்சைப் பகுதியை ஆட்சி

செலுத்தும் உரிமையை அழகிரி நாயக்கருக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால் அழகிரியோ விரைவில் தனது எஜமானரையே கவிழ்க்கும் அளவுக்கு உயர்ந்ததோடல்லாமல் தஞ்சை மக்களுக்கு இன்னல்களும் தந்தார். அரண்மனை மண்டபத்தில் ஒரு முழுமைப் புரட்சி ஏற்பட்டு முடிவில் அழகிரி வெளியேற்றப்புட்டார். மராட்டியரின் உதவி கொண்டு செங்கமலதாஸ் என்பவர் அரசுப் பொறுப்பேற்றார். செங்கமலதாஸ், விஜய ராகவ நாயக்கரின் சட்டத்திற்குப் புறம்பான மைந்தராவார். இவர் தனது வாக்குறுதிகளைக் காப்பாற்றவில்லை என்று கூறி, மராட்டிய எகோஜி, செங்கமலதாஸை விரட்டிவிட்டு, அரியணையையும் கி.பி. 1675இல் கைப்பற்றினார்.

## செஞ்சி நாயக்கர்கள்

கோட்டை நகரமான செஞ்சி தமிழகத்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க நகரங்களில் ஒன்றாகும். இந்நகர் சோழப் பேரரசர் கால சிங்கவர்மனின் நினைவாகப் பெயரிடப் பட்டது. பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், பதினான்காம் நூற்றாண்டின் முதற்பகுதியிலும் செஞ்சி ஹொய்சாளப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்தது. ஹொய்சாள மூன்றாம் வீரவல்லாளன் காலத்தில் இந்நகர் மிகச்சிறப்புற்று விளங்கியது. கி.பி. 1341-42இல் மதுரை சுல்தானால், கண்ணனூர் கோப்பம் என்ற இடத்தில், வீரவல்லாளன் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். தென்னாற்காடு, வடஆற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களில் கிடைக்கப்பெற்ற கல்வெட்டுகளிலிருந்து கோபனராயர் என்பவர் செஞ்சியின் சுதந்திர ஆட்சியாளராக இருந்தார் எனத் தெரிய வருகிறது. சுந்தர பாண்டியன் தொண்டைமண்டலப் பகுதிகளில் நுழைந்த போது, கோபனராயர், அவருக்குப் பெரிதும் உதவியாக இருந்தார்.

முல்பகராஜியத்தின் ஆளுநராக (1356-66)யிருந்த கம்பணர் தனது ஆதிக்கத்தை செஞ்சியிலும் பெருக்கினார். வீரகம்பராய சரித்திரம் அல்லது கங்காதேவியின் மதுராவிஜயம், வீரகம்பணர் விரிஞ்சிபுறத்திலிருந்து புறப்பட்டு ராஜகம்பீர ராஜ்யம் வரை சென்று அதன் ஆட்சியாளரான ராஜநாராயணரைத் தோற்கடித்தார்; மரதகணகாராவைத் (விரிஞ்சிபுரம் என அடையாளம் காட்டப்படுகிறது) தலைநகராக்கினார்; (கம்பணரின் திறமை வாய்ந்த தளபதிகளில் ஒருவரான கோபனராயரே (கோயில்களைக் காப்பவர்) மதுரை சுல்தானியம், படைவீட்டின் சாம்புவ ராஜியம் ஆகியவற்றின் வீழ்ச்சிக்குக் காரணமாவார், எனக் குறிப்பிடுகின்றது). மற்றொரு சிறந்த படைத்தலைவர் சளுவமாங்கு (ஓலை நாயகர்) ஆவார். வேதாந்த தேசிகர், தனது, குருபரம்பரை என்ற நூலில் கோபன ராயரின் இராணுவ நடவடிக்கைபற்றியும் வீரதீரச் செயல்கள் பற்றியும் குறிப்பிடுகின்றார், கம்பணரின் படையெடுப்புக் காலங்களில், கோபனராயர், செஞ்சியின் ஆளுநராக விருந்தார் என கோயில் ஒழுகு குறிப்பிடுகின்றது. தமிழகத்தில் விஜயநகரப்பேரரசின் எல்லைப் பகுதிகளைப் பெருக்க கோபனராயர் உதவினார் எனவும், இவர் தம் சேவைக்கு நன்றி செலுத்தும் வகையில் இவருக்கு செஞ்சியின் ஆட்சிப்பொறுப்பு கொடுக்கப்பட்டது என்றும் விருபாக்சராயரின் ஆலம்பூண்டி செப்பேடுகள் குறிப்பிடுகின்றன. (ஸ்ரீரங்கத்தின் ஸ்ரீரங்கநாதர் உருவச்சிலையைக் காப்பதில் இவரும் பங்கெடுத்துக்கொண்டார்). ஸ்ரீரங்கத்தில் சிலையை நிலை நிறுத்துவதற்கு முன்பு இவர் அதனை செஞ்சிக்கு எடுத்துச் சென்றிருந்தார். பிரப்ண்ணமிர்தம் என்ற நூலை எழுதிய அனந்தராயர், கோபனராயர்

திருப்பதியிலிருந்து ஸ்ரீரங்கநாதரின் உருவச்சிலையைக்காண செஞ்சிக்குச் சென்றார் எனக் கூறுகின்றார். சமயவரத்தில் முகமதியர்களைத் தோற்கடித்துவிட்டு கோபனராயர் ஸ்ரீரங்கத்திற்குச் சென்றார். அதன்பின் மதுரை சுல்தானியத்தின் ஆணி வேரை அகற்றப்பாடுபட்டார்.

செஞ்சியின் விஜயநகர ஆளுநர்கள் குரும்பர்களின் பகைவர்களாக இருந்தனர் ஆனால் அப்பகுதியின் வெள்ளாளருடன் நட்புடனிருந்தனர். கிருஷ்ணதேவராயரின் ஆட்சிக்காலத்தில், தமிழகம், தஞ்சை, மதுரை, செஞ்சி நகரங்களைத் தலைநகரங்களாகக் கொண்ட மூன்று நாயக்க அரசுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. சமஸ்கிருத வார்த்தையான நாயகா என்பதிலிருந்து தோன்றியதே நாயக்கர் ஆகும். நாயக்கர் என்பது, தலைவர் தளபதி, குறிப்பாக இராணுவத்தில் படைத்தலைவர், என்பதனைப் பொதுவாகக் குறிக்கும் ஆனால் விஜயநகர ஆட்சிக் காலத்தில் மாநில ஆளுநர் என்ற பொருளைக் குறிப்பதாக இருந்தது. இவர் தமது ஆட்சிப் பகுதியின் அதிகாரம் அனைத்தையும் ஒருங்கே கொண்டிருந்தவராவார். செஞ்சிநாயக்கர் அரசின் ஆட்சி எல்லை, கடற்கரைப்பகுதியில் வடக்கே பாலாறு முதல் தெற்கே கொள்ளிடம் வரை பரவியிருந்தது.

செஞ்சி நாயக்கர் பற்றிக் கிடைத்திருக்கும் செய்திகள், மற்ற நாயக்கர் மன்னர்களைப் பற்றி அறியக் கிடைத்த செய்திகளை விட மிகக் குறைந்ததே என சி.எஸ். ஸ்ரீனிவாசாச் சாரியார் கூறுகின்றார். மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் திருக்கோயிலில் கிடைக்கும் இரு கல்வெட்டுக்கள் செஞ்சி நாயக்கர் மன்னர்களின் வரிசைக்கிரமமான பெயர்களைக் குறிப்பிடுகின்றன. செஞ்சி நாயக்கர்கள், வட இந்தியாவிலிருக்கும் மணிநாகபுரத்திலிருந்து வந்தவர்கள் எனவும், செஞ்சிக்கு வந்து வையப்ப நாயக்கரின் கீழ் குடியேறினர் எனவும் இக்கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. சூரப்ப நாயக்கரின் கல்வெட்டு ஒன்று மணிநாக புரம் என்ற இடத்தின் பெயரைக் கொண்டிருக்கின்றது. கர்நாடக ராஜாக்கள் சுவிஸ்தார சரித்திரம் என்னும் நூல், விஜயநகரப்படை ஒன்று குரும்பர்களைத் தாக்கி செஞ்சியைக் கைப்பற்றியது எனக் கூறுகின்றது. இது கூறுகின்ற காலம், குமாரகம்பணரின் தொண்டை மண்டலப் படையெடுப்பின் காலத்தை ஒத்ததாக உள்ளது. கோபனராயர் ஆளுநராக இருந்தபோது அவரது ஆட்சி எல்லை சிதம்பரம்வரை பரவியிருந்தது என குருபரம்பரை கூறுகிறது. சிதம்பரத்தில், இவர், கி.பி. !370-இல் கோவிந்தராஜர் சிலையை அரங்கேற்றிய தாக குருபரம்பரை குறிப்பிடுகின்றது. "முறைப்படியான அரசப் பிரதிநிதித்துவ அல்லது ஆளுநர் ஆட்சி முறை, செஞ்சியில், முதன் முதலாக, கி.பி. 1464-ஆம் ஆண்டு முதல் அதாவது வெங்கடபதி நாயக்கர் இப்பகுதியின் ஆட்சியாளராக வந்தது முதலே தொடங்கியது" என சி.எஸ். ஸ்ரீனிவாசாச்சாரி உரைக்கின்றார். பால வெங்கடபதியின் தாமிரப்பட்டயச் சாசனம் ஒன்று இவர் கி.பி. 1464ஆம் ஆண்டு வாக்கில் சமண எதிரியாக இருந்தவர் எனக் கூறுகிறது. அவர்தம் சம காலத்தில் திண்டிவனம், காஞ்சிபுரம், மதுரைப் பகுதிகளில் சமணர்தம் எண்ணிக்கை அதிகமாயிருந்தது.

எஸ்.எம். எட்வர்ட்ஸ் ("An Account of the Chengy Rajas". Indian Antiquary, Vol. IV) என்பவர், செஞ்சியின் தோற்ற வரலாறும், நாயக்கர் வம்சத் தோற்ற வரலாறும், தங்கார் (Dhangar) என்னும் அமைச்சர்கள் வரலாறும் ஆழ்ந்த ஆராய்ச்சிக்குப் பின்னே ஒரு முடிவுக்கு வரக் கூடியவை எனக் கூறுகின்றார். செஞ்சி நாயக்க வம்சத்தின் மூல வரலாறு

ஒரு சிக்கலான பிரச்சினையே. செஞ்சி நாயக்கர் வம்சத்தின் காலக்கணக்கீடும் தெள்ளத் தெளிவான முடிவினை இதுவரை பெறவில்லை என அ. கிருஷ்ணசாமி குறிப்பிடுகின்றார். ஆண்டுக் கணிப்பு நூலிலும், கையெழுத்துப் பிரதிகளிலும், எஸ்.எம்.எட்வர்ட்ஸின் விமரிசனங்களிலும் காணக்கிடைக்கின்ற அரசர்களின் பெயர்கள் பரம்பரைக் கருத்துக் களுக்கு மாறாக உள்ளன. வையப்பர், துபாக்கி கிருஷ்ணப்பர் ஆகியோரின் துணையுடன், கிருஷ்ண தேவராயர் கர்நாடகப் பகுதிக்குள் நுழைந்து அவரது அதிகாரத்தை நிலை நாட்டிவிட்டு அதன் ஆட்சிப் பொறுப்பை துபாக்கி கிருஷ்ணப்பரிடம் ஒப்படைத்தார் எனக் கூறப்படுகிறது. எனவே, துபாக்கி கிருஷ்ணப்பர் செஞ்சி நாயக்கர் அரசினைத் தோற்றுவித்தவர் எனத் தெரியவருகிறது. கி.பி. 1521 வரை, இவரது ஆதிக்கம், நெல்லூரிலிருந்து கொள்ளிடம் வரை பரவியிருந்தது. கிருஷ்ணதேவராயரின் கர்நாடகப் படையெடுப்பு கி.பி. 1509க்குப் பின்பே ஏற்பட்டது; கிருஷ்ணதேவராயர் கி.பி. 1521இல் செஞ்சியைக் கைப்பற்றிய பின்பே, துபாக்கி கிருஷ்ணப்பர் செஞ்சியின் சுதந்திர மன்னராக விளங்கினார். சி.எஸ். ஸ்ரீனிவாசாச்சாரியார், துபாக்கி கிருஷ்ணப்பர் செஞ்சி நாயக்கர் வம்சத்தினைத் தோற்றுவித்த மன்னரும், முதல் சுதந்திர மன்னருமாவார் எனக் கூறுகின்றார். மேலும், இதனை வலியுறுத்தும் வகையில் ஹீராஸ் அடிகள் தம் கருத்தைக் கூறுகிறார். துபாக்கி கி.பி. 1521ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்தார் எனவும் குறிப்பிடுகின்றார்.

## வையப்பர்

கல்வெட்டு ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு, அ. கிருஷ்ணசாமி, சி.எஸ். ஸ்ரீனிவாசாச்சாரியாரின் கருத்தினை மறுத்துக் கூறுகின்றார். தெற்கே கிருஷ்ண தேவராயரின் ஆதிக்கத்தை நிலை நாட்டிவிட்டு, வையப்பர் எனும் தளபதி தனக்கு உதவியாகவிருந்த துபாக்கி கிருஷ்ணப்பரை அப்பகுதியின் ஆட்சியாளராக அமர்த்திச் சென்றார் என்பது சி.எஸ். ஸ்ரீனிவாசாச்சாரியின் கருத்தாகும். ஆனால், அ. கிருஷ்ணசாமி, வையப்பரே செஞ்சிநாயக்கர் வம்சத்தைத் தோற்றுவித்தவராவார் என விவாதிக்கின்றார். வேலூர், தொண்டைமண்டலம், சோழமண்டலம் ஆகியவற்றை வென்று கைப்பற்றிய விஜய நகரப் பேரரசர், அப்பகுதிகளின் ஆட்சியாளர்கள் தமக்கு செலுத்த வேண்டிய திறைப் பணத்தை நிர்ணயிக்கும்படி, தனது தளபதியான வையப்பரைப் பணித்தார். அதன் படி, வையப்பர், திறைப் பணத்தை நிர்ணயம் செய்து, தவணை முறையில் வசூலிக்கவும் செய்தார். தென்னாற்காடு மாவட்டத்தில் ஸ்ரீமூசனம், திருக்கோயிலூர் ஆகிய ஊர்களில் இவர் கோயில் எழுப்பியதாகவும் புகழப்படுகின்றார். வையப்பர் கி.பி. 1526 முதல் 1541 வரை செஞ்சி நாயக்கராக இருந்தார் என அ. கிருஷ்ணசாமி கூறுகின்றார். அவர் கூற்றுப்படி "நான்கு பட்டியல்களில்* குறிப்பிடப்படும் பெயர்களில் வையப்பர் மூன்று பட்டியல்களில் வருகின்றார். ஆகவே செஞ்சி நாயக்க அரசைத் தோற்றுவித்தவர் அவரே எனக் கொள்ளலாம்".

## துபாக்கி கிருஷ்ணப்பர்

கல்வெட்டு சாசனங்களின்படி வாரிசு பெத்தகிருஷ்ணப்பர் என்பவராவர். மெக்கன்சியின் கையெழுத்துப் பிரதி இந்த வாரிசு அல்லது பின்வந்தவர் பெயரை துபாக்கி கிருஷ்ணப்பர் என அழைக்கின்றது. ஒருவேளை, "துபாக்கி", "பெத்த" ஆகிய வார்த்தைகள்

பெயருக்கு முன்னால் வரும் அடை மொழிகளாக இருந்திருக்கக்கூடும். தமிழகத்தில் விஜயநகரப் பேரரசரான கிருஷ்ண தேவராயரின் படையெடுப்பின் போது, துபாக்கி கிருஷ்ணப்பர் அவருக்கு உதவியாக வந்தார். தோல்வியுற்றவர்கள் செலுத்த வேண்டிய திறைப் பணத்தை நிர்ணயிப்பதிலும், வசூலிப்பதிலும் இவர் வையப்பருக்கு உதவினார். இவரும் தென்னாற்காடு மாவட்டத்தில் ஸ்ரீமுசனம், திருக்கோயிலூர் ஆகிய ஊர்களில் கோயில் எழுப்பியதற்காகப் புகழப்படுகின்றார். துபாக்கி கிருஷ்ணப்பரும், வையப்பரும் இக்கோயில்கள் கட்டியதற்காகப் புகழப்படுவதால் இருவரும் சேர்ந்தே இக்கோயில்களை எழுப்பியிருக்கக்கூடும். மிகப் பெரும் தானியக் களஞ்சியங்கள் திருமண மண்டபம், மூன்று மலைகளைச் சுற்றி அமைக்கப்பட்ட பெருஞ்சுவர்கள் ஆகியவை துபாக்கி கிருஷ்ணப்பரால் உருவாக்கப்பட்டதே எனக் கூறப்படுகிறது. இவரது, அமைதியான, நீண்டகால ஆட்சிக் காலம் செஞ்சி நகரத்தின் விரிவாக்கத்துக்கும், பேட்டைகளின் வளர்ச்சிக்கும், சுற்றுப்புற வளர்ச்சிக்கும் வித்திட்டது. இதுவரை ஆனந்தகிரி என அழைக்கப்பட்டு வந்த கோட்டைக்கு 'இராஜகிரி' என்ற பெயரைக் கொடுத்தவர் இவரேயாவர். இந்த இராஜகிரி யின் முகப்பைச் சுற்றி பெருஞ்சுவர்களை எழுப்பினார். சி.எஸ். ஸ்ரீனிவாசாச்சாரியார், ஹுராஸ் அடிகள் ஆகியோரின் கருத்துப்படி துபாக்கி கிருஷ்ணப்பரின் வாரிசு அச்சுதராய நாயக்கர் என்பவராவார். இந்த அடையாளக் குறிப்பு மெக்கன்சியின் எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டு கூறப்பட்டதாகும். இந்த அச்சுத விஜய ராமபத்ர நாயக்கர், செஞ்சியில், விஜய நகரப் பேரரசரான அச்சுதராயரின் ஆளுநராகயிருந்தார். இவர் சந்திரகிரிகோட்டையைத் தமது இருப்பிடமாகக் கொண்டிருந்தார். செஞ்சியின் வெங்கடரமணசாமி கோயிலில் கிடைக்கப்பெற்ற கல்வெட்டு ஒன்று அக்கோயிலுக்கு இவரால் கொடுக்கப்பட்ட நன்கொடை ஒன்றினைப் பற்றிக் குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டு அச்சுதராய நாயக்கர் கி.பி. 1540-41இல் செஞ்சியின் ஆட்சியாளராயிருந்தார் எனவும் கூறுகிறது. அதாவது, அச்சுதராயரின் மகாமண்டலேஸ்வரராக இருந்தார் எனக் குறிக்கப்பட்டுள்ளது.' விஜய நகரப் பேரரசரின் பெயரால் இவர், சந்திரகிரியின் சிதம்பரேஸ்வரர் கோயிலுக்கும், கோபிநாதப் பெருமாளுக்கும் நன்கொடைகள் வழங்கினார்.

இவருக்கு அடுத்த செஞ்சி ஆட்சியாளர் முத்தியால் நாயக்கர் என சி.எஸ். ஸ்ரீனிவாசாச்சாரியார் கருதுகின்றார். இந்த முத்தியால் நாயக்கரே செஞ்சி (ராஜகிரி) யிலுள்ள வெங்கடரமணசாமி கோவில் எழுப்பப்படுவதற்கு மூலகர்த்தாவாக இருந்தவ ராவார். செஞ்சி நாயக்கர் வம்சத்தில் இதுவரை வந்த ஆட்சியாளர்களில் இளைஞரான முத்தியால் நாயக்கர் இக்கோயிலை எழுப்பியிருந்தால் எப்படி இவருக்கு முன்பிருந்த மன்னரின் நன்கொடை அக்கோயிலுக்கு அளிக்கப்பட்டிருக்கும்? அல்லது எவ்வாறு ஏற்கனவே மூத்தமன்னரொருவரால் நன்கொடை வழங்கப்பட்ட ஒரு கோயில் அவர் தம் வாரிசு காலத்தில் கட்டப்பட்டிருக்க முடியும்? இல்லாத ஒரு கோயிலுக்கு மன்னர் ஒருவர் நன்கொடை வழங்கியிருக்கின்றார் என்று ஏற்றுக்கொள்வது எவ்வாறு பொருந்தும்? எனவே, இங்கு காலக்கணக்கீட்டில் சிக்கலான, மாறுபட்ட முறை பயன்படுத்தப்பட் டுள்ளது என்பது புலனாகிறது. இங்கு, அ. கிருஷ்ணசாமி அவர்கள் கூறும் கருத்து

*1. Inscriptions (no. 860 of 1917)  2. Indian Antiquary (vol. 55)
3. Mackenzie Manuscripts  4. Other sources

சிந்திக்கவைக்கின்றது. அவரது கருத்துப்படி, அச்சுத ராமபத்திர நாயக்கர் செஞ்சியின் ஆளுநராக இருந்திருப்பாரேயன்றி ஆட்சியாளராக (மன்னராக) இருந்திருக்க மாட்டார் என்பதாகும். துபாக்கி கிருஷ்ணப்பரின் அடுத்த நேர் வாரிசுகள், சூரப்ப நாயக்கரும், கிருஷ்ணப்பருமேயாவர் என அவர் கூறுகின்றார். துபாக்கி கிருஷ்ணப்பர் இரு மனைவியர்களைப் பெற்றிருந்தார். (1) இலட்சுமாம்பா என்ற மனைவி மூலம் பிறந்த மகன் முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர், (2) வெங்கலாம்பா என்ற மனைவி மூலம் பிறந்த மகன் சூரப்ப நாயக்கர் ஆவர். இந்த இருவருமே அரியணையை அலங்கரிக்கும் வாய்ப்பைப் பெற்றனர். சூரப்பநாயக்கர் ஏறத்தாழ கி.பி. 1544 முதல் 1567 வரையும், முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர் ஏறத்தாழ கி.பி. 1567 முதல் 1575 வரையும் ஆட்சி செலுத்தினர். சூரப்ப நாயக்கர் மூத்தவர், ஆனால் இரண்டாம் மனைவியின் பிள்ளை என்றதாலும், கிருஷ்ணப்பர் இளையவர் ஆனால் அரசகுடும்ப அரசியாருக்குப் பிறந்தவர் என்றதாலும், விஜய நகரப் பேரரசரான சதாசிவராயர் துபாக்கி கிருஷ்ணப்பரின் வாரிசாக சூரப்ப நாயக்கரை ஏற்றுக் கொண்டிருக்கக்கூடும்.

## சூரப்ப நாயக்கர்

செஞ்சியின் வெங்கடரமணசாமி கோயிலின் தெற்குச் சுவரில் காணக்கிடைக்கும், தமிழ்க்கல்வெட்டு, சதாசிவராயரின் பெயரால் சூரப்பநாயக்கர் வழங்கிய நன்கொடை பற்றி தெரிவிக்கின்றது. தவிர, இக்கல்வெட்டு அடபத்து வல்லப்ப நாயக்கரால் ஒரு திருவிழாவிற்கு வழங்கப்பட்ட நன்கொடையும் குறிப்பிடப்பட்டுள்ளது. சதாசிவராயின் மற்றொரு கல்வெட்டு, அடப்ப சூரப்ப கிருஷ்ணமநாயக்கர் அய்யனால் வழங்கப்பட்ட கிராமதானத்தைப் பற்றி விளக்குகிறது. சூரப்ப நாயக்கரின் அவையில் வீற்றிருந்த ரத்தினகிரி ஸ்ரீனிவாச தீட்சிதர் என்னும் கவிஞர், புவனபுருசோத்தமா என்ற நாடகத்தை சூரப்பருக்கு அர்ப்பணித்துள்ளார். இந்நாடகத்தில் சூரப்ப நாயக்கர் பொட்ட பூபாலரின் மகனாகவும், கர்நாடக அரியணையை மேன்மையடையச் செய்தவராகவும் வர்ணிக்கப்படுகின்றார். தலைக்கோட்டைப் போரில் பேரரசுக்கு உதவியாக சேவைகள் செய்ததின் பயனாக சூரப்ப நாயக்கர், கர்நாட சிம்ம பிரதிஸ்ட பாணாச்சாரியா என்ற சிறப்புப் பெயரைப் பெற்றார். ஆனால் சிஸ்.எ. ஸ்ரீனிவாசாச்சாரியார், சூரப்ப நாயக்கர் திருமலைக்கோ அல்லது முதலாம் ஸ்ரீரங்கருக்கோ ஆதரவாயிருந்ததன் பயனாகவே இப்பெயரைப் பெற்றிருக்கக் கூடும் எனக் கருதுகின்றார். ஆனால், அ. கிருஷ்ணசாமி, சூரப்ப நாயக்கர், சதாசிவராயருக்கும், ராமராயருக்கும் பணிந்து செயல்பட்டார் எனவும், தலைக் கோட்டைப் போரின் போது தனது சிற்றரசுப் படையினை அனுப்பியிருக்கலாம் எனவும் கூறுகின்றார். அதே சமயத்தில் அவ்வாறு படை அனுப்பினாரா இல்லையா? என்பதை நிரூபணம் செய்ய நமக்கும் போதிய சரியான சான்றுகள் இல்லை எனவும் அவர் குறிப்பிடுகின்றார். இருப்பினும், சான்றுகள் தரும் உண்மையின் படி சூரப்ப நாயக்கர் சதாசிவராயர், ராமராயர் ஆகியோரின் சமகாலத்தவரே என்பது தெரிய வருகிறது. ஆனால். சி.எஸ். ஸ்ரீனிவாசாச்சாரியார் அவர்கள், அக்கால செஞ்சி ஆட்சியாளர்களின் காலத்தில் சூரப்பரின் காலத்தைக் கணக்கிட்டு அவரை உரிய இடத்தில் வைப்பது என்பது சிக்கலானது; அவருக்கும் இரண்டாம் கிருஷ்ணப்பருக்கும் உள்ள தொடர்பினைக் குறிப்பிட்டுக்காட்டுவது என்பது குறிப்பாக சிக்கலானது

(இரண்டாம் கிருஷ்ணப்பர் வெங்கடபதிராயரின் காலத்தில் கி.பி. 1515 முதல் 1614 வரை செஞ்சி மன்னராக இருந்தார்) என்கின்றார். இவர்தம் இக்கருத்தைப் பிற்கால அறிஞர் எவரும் மறுத்திருப்பதாகத் தெரியவில்லை.

### முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர்

அ. கிருஷ்ணசாமி அவர்களது வம்சாவளிப் பட்டியலின் படி, அடுத்த செஞ்சி நாயக்க மன்னர் துபாக்கி கிருஷ்ணப்பரின் மற்றொரு மகனான கிருஷ்ணப்ப நாயக்கராவர். இந்த செய்தியை, கி.பி. 1546 முதல் கி.பி. 1575 வரையான ஆண்டுகளின் தேதியிட்ட எட்டு கல்வெட்டுக்கள் உறுதிப்படுத்துகின்றன. இவர், தமது ஒன்று விட்ட சகோதரரான சூரப்ப நாயக்கர் இறந்த பின்பே, செஞ்சி நாயக்க அரசின் அதிகாரம் முழுமையையும் பெற்றிருக்கக்கூடும் எனக் கருதப்படுகிறது.

மெக்கன்சியின் கருத்துச் சேகரிப்பு, கி.பி. 1570 முதல் கி.பி. 1600 வரை செஞ்சியை ஆண்ட மன்னர் வெங்கடப்ப நாயக்கர் என அறிவிக்கின்றது. வெங்கடப்ப நாயக்கர் அரியணை ஏறும் போது கிருஷ்ணப்பரின் ஆட்சிக் காலம் முடிவுற்று விடவில்லை. மாறாக, கிருஷ்ணப்பர் மேலும் ஐந்து ஆண்டுக்காலம் செஞ்சியில் ஆட்சி செய்தார். இந்தக் காலம் செஞ்சியின் சிறந்த நாயக்க மன்னரான இரண்டாம் கிருஷ்ணப்பரின் சமகாலமாக இருக்கின்றது. எனவே உண்மைக்குப் புறம்பான வரலாற்று நிகழ்ச்சி வெங்கடப்பரை, கிருஷ்ணப்பர் என அடையாளம் காட்டியிருக்கக்கூடும். ஏறக்குறைய ஒரே காலத்தைச் சேர்ந்த வேறுபட்ட மூன்று சுதந்திர நாயக்கர் மன்னர்கள் பற்றிய செய்தி காலக்கணக்கீட்டில் முரண்பாடாக உள்ளது. அரியணை காலியாக இல்லாதபோது மற்றொரு மன்னர் அரியணை ஏறினார் என்று கூறப்படுவது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதே. மிகச்சிறிய பகுதியான செஞ்சியை மூன்று மன்னர்கள் சமகாலத்தில் ஆண்டனர் எனக் கருதினாலும் அது கேலிக்கூத்தாகிவிடும்.

### இரண்டாம் கிருஷ்ணப்பர்

இரண்டாம் கிருஷ்ணப்பர் அரியணை ஏறியபோது தான் செஞ்சி நாயக்கர் வம்சத்தின் வம்சாவளிப்பட்டியலும், காலக் கணக்கீட்டு முறையும் ஏறக்குறைய ஒரு சரியான அமைப்பினைப் பெற்றது எனலாம். இவர் பேரரசர் முதலாம் வெங்கடர். தஞ்சையின் இரகுநாத நாயக்கர் ஆகியோரின் சமகாலத்தவர் என கிருத்துவ போதகர்களின் (Jesuit) ஆவணங்கள் குறிப்பிடுகின்றன. போதகர்களின் ஆவணங்களில் கூறப்படும் கிருஷ்ணப்பரை, வெங்கட்ப்ப நாயக்கரின் மகனான வரதப்ப நாயக்கருடன் அடையாளப் படுத்துவது தவறான வழியில் அழைத்துச் செல்வதைப் போன்றதாகும். இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர் செஞ்சியை சுதந்திர அரசாக ஏற்படுத்திய பின்பே வரதப்ப நாயக்கர், அப்பா நாயக்கர் போன்றோர் ஆட்சி செய்ய வந்தனர். சமகால இலக்கியங் களோ, அல்லது சமகால உள்நாட்டு வெளிநாட்டுக்குறிப்புக்களோ, ஆவணங்களோ வரதப்ப நாயக்கர் என்ற பெயரை எங்கும் குறிப்பிடவில்லை. இவர், இவரது மாமன் ஒருவரால் கைது செய்யப்பட்டு விட்ட காரணத்தினால் இவரது பட்டமேற்பு காலந்தாழ்ந்தது என பிமண்டா அடிகள், பெர்ரன் ஆகியோர் எடுத்துரைக்கின்றனர்.

கி.பி. 1586ஆம் ஆண்டு கிருஷ்ணப்பர் அவரது எஜமானராயிருந்த வெங்கடபதி ராயருக்கு எதிராகக் கலகம் செய்தார்; தோற்கடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டார். இவருக்கு ஆதரவாக, தஞ்சையின் இரகுநாத நாயக்கர், தலையிட்டு இவரை விடுதலை செய்தார். இவ்வுதவிக்கு ஈடாக கிருஷ்ணப்பர் தனது மகளைத் தஞ்சையின் இரகுநாதருக்கு மணம் முடித்துக் கொடுத்தார். வெங்கடபதிராயரிடமிருந்து இரண்டாம் கிருஷ்ணப்பரை மீட்ட செய்தி, ராமபத்ராம்பா என்பவர் எழுதிய இரகுநாதபியூதயம் என்ற நூலிலும், யக்ன நாராயணதீட்சிதர் எழுதிய சாகித்தியரத்னகரம் என்ற நூலிலும் காணப்படுகிறது.

புரட்சியாளரான கிருஷ்ணப்பர் தோற்கடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டார் என்றும் இவரைத் தோற்கடித்த வெங்கடர் என்பவர், இவர் சிறையிலிருந்த காலத்தில், செஞ்சியை ஆண்டார் எனவும் கூறப்படுகின்றது. இந்த வெங்கடரே, வெங்கடபதிராயர் என்பவராக இருக்கக்கூடும். இந்த வெங்கடர் காலகஸ்தியின் மூன்று வேலூரகோட்டி தலைவர்களில் மூத்தவராவார் எனவும் கருதப்படுகின்றது.

கி.பி. 1597இல் செஞ்சிக்கு விஜயம் செய்த போர்த்துக்கீசிய பயணியான பிமண்டா அடிகள், இந்நகரம் இந்தியாவின் சிறப்புமிக்க நகரங்களில் ஒன்று எனவும், போர்ச்சுக் கல்லில் லிஸ்பனைத் தவிர மற்ற நகரங்களை விடப் பெரியது என்றும் எடுத்தியம்பி யுள்ளார். ஒரே இடத்தில் மலையில் பல கற்கட்டிடங்களையும், அதைச்சுற்றி கருங்கல் சுவர்களையும் கொண்டு அதைச் சுற்றி தண்ணீர் நிரம்பிய அகழிகளைக் கொண்டிருக் கின்றது என பிமண்டா கூறுகின்றார். அதற்கு மத்தியில் பூமியின் அடிப்பரப்பிலிருந்து எழுப்பப்பட்ட, சிறிய பாதுகாப்பான கோபுர அமைப்புகள் கொண்ட, எப்படை யெடுப்பாலும் தகர்க்க முடியாத சுவர்கள் உள்ளன. கிருஷ்ணப்பர் தமிழகத்தின் குறிப்பிடத் தக்க சிறந்த மன்னர்களில் ஒருவராக கி.பி. 1606ஆம் ஆண்டு வாக்கில் திகழ்ந்தார். பிமண்டா, கோட்டைக்குள்ளேயே இரா்ணுவ அமைப்புகள், அணுகுண்டுத்தூள்கள் ஆகியவற்றைக் கண்டதாகக் கூறுகின்றார். செஞ்சி நாயக்கர் மன்னரைச் சுற்றி ஆயிரம் ஆயுதம் தாங்கிய வீரர்கள் காவலிருந்தனர் எனவும், மன்னருக்கு முன் சுமார் 300 யானைகள் வரிசையாக நிறுத்தப்பட்டிருக்கும் எனவும் அவர் கூறுகின்றார். பிமண்டா அடிகளார் வேலூர் அல்லது ஆற்காடு வழியாக செஞ்சியில் நுழைந்திருப்பார். செஞ்சியில் அவருக்கு அரச மரியாதை கொடுக்கப்பட்டிருக்கக் கூடும். செஞ்சி நாயக்க மன்னரது கட்டிடங்களின் சிறப்பை, குறிப்பாக, தாழ்வாரங்கள், கோபுரங்கள் ஆகியவற்றை இவர் விளக்குகின்றார். இவையனைத்தும் ஒரு குறிப்பிட்ட திட்ட வடிவில் அமைக்கப் பட்டிருப்பதாகக் கூறுகின்றார்.

1906ஆம் ஆண்டின் போதகரின் கடிதம் ஒன்று, மூன்று நாயக்க அரசுகளில் (வேலூர், தஞ்சை, செஞ்சி), செஞ்சி நாயக்கர்களே திறமை மிக்க அதிகாரம் பெற்றவர்களாக இருந்தனர் எனக் கூறுகின்றது. செஞ்சியின் சிற்றரசுகள் — (i) திருவதியின் இளவரசர் (கடிலம் ஆற்றங்கரையில்) (ii) கொள்ளிடத்தின் முகத்துவாரத்திலிருந்த சாலவராச்சா அல்லது சோலகா அரசர் (தேவகோட்டை) (iii) வேலூர் நாயக்கர்கள்; இந்த மூன்று சிற்றரசர்களில் செல்வாக்குப் பெற்றவர் தேவகோட்டைத் தலைவரேயாவார் தேவகோட்டையின் தலைவர், விஜயநகரப் படைத்தலைவரான வித்தலராயரையே தோற்கடித்தவராவார். வேலூர் நாயக்க மன்னரான சின்னபொம்ம நாயக்கரின் மகனான லிங்கம் நாயக்கர், செஞ்சி நாயக்கருக்கும், விஜயநகரராயருக்கும் எதிராகக் கிளர்ச்சிகள் செய்தார்.

கிருஷ்ணப்பர், போர்த்துக்கீசியர், டச்சுக்காரர் ஆகியோருடன் நட்பு கொண்டிருந்தார். தேவனாம்பட்டினத்தில் (Tegnapattam) கோட்டை ஒன்று கட்டிக்கொள்ள டச்சுக்காரர்களுக்கு அனுமதி வழங்கினார். இந்த அனுமதி கி.பி. 1608ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30ஆம் நாள் ஓலையில் எழுதிக் கொடுக்கப்பட்டது. டச்சுக்காரர்களின் பிரதான எதிரிகளான போர்த்துக்கீசியர்கள், டச்சுக்காரர்கள் கோட்டை எழுப்புவதை தடுக்கும்படி விஜயநகர அரசர் மூலமாக செஞ்சி நாயக்கருக்கு பரிந்துரை செய்தனர். கடலூரில் கட்டப்பட்ட கோட்டை அல்லது பண்டகசாலை பின்னாளில் புனித டேவிட் கோட்டையின் மையமாகியது. மேலும், போர்த்துக்கீசியர்கள், டச்சுக்காரர்களை அவர்தம் மூட்டை முடிச்சுகளுடன் தேவனாம்பட்டினத்திலிருந்து விரட்டியடிக்கும்படியும், விஜயநகர அரசர் மூலமாக செஞ்சி நாயக்கரிடம் பரிந்துரைத்தனர். டச்சுக்காரர்கள் இதன் காரணமாக, அதிக முயற்சி செய்து திருப்பாப்புலியூர், பழவேற்காடு (pulicat) ஆகிய பகுதிகளில் தங்கள் ஆதிக்கத்தை விரிவுபடுத்தினர். செஞ்சியின் ஆயர்களும், கிருஷ்ணப்பரின் பிராமண அதிகாரிகளும் அவர்களுக்கு உதவினர், காத்தனர். பேரரசரின் எண்ணத்திற்கு மாறாக செஞ்சி நாயக்கரின் நன்மதிப்பையும் டச்சுக்காரருக்குத் தேடித்தந்தனர். கிருஷ்ணப்பர் எல்லா சமயத்தவரிடமும் அன்பு செலுத்தினார். குறிப்பாக கிருத்தவ போதகர்கள், சமணர்கள், சைவ சமயத்தவர்கள் ஆகியோருக்கு ஆதரவினை நல்கினார். பிமெண்டா அடிகளாருக்குக்கொடுக்கப்பட்ட வரவேற்பு ஒன்றே அவர்தம் சமயப்பொறைக்குச் சான்றாகும். இவர், கிருத்தவ போதகர்களுக்கு திருச்சபை கட்டவும், சமணர்கள் சித்தனூரில் ஆலயம் எழுப்பவும், சைவ சமயத்தவர் திண்டிவனத்தில் கோயில் எழுப்பவும் அனுமதி வழங்கினார்.

கிருஷ்ணப்பர், மகாவிஷ்ணுவின் பக்தராக சமயத்துறையில் விளங்கினார். இவர் வைணவக் கடவுளை தமது குடும்ப தெய்வமாகக் கொண்டிருந்தது, வெங்கடபதிராயரின் ராஜகுருவான தட்டாச்சாரியாரின் தூண்டுதலே ஆகும் எனக் கூறப்படுகிறது. சிதம்பரத்தில் வைணவக்கோயில் ஒன்று எழுப்புவதற்கான பொறுப்பு இவரையே சாரும். பல கோயில்களுக்கு நன்கொடைகள் வழங்கினார். புதிய குடியேற்றங்களை ஏற்படுத்தினார். விளைச்சலைப் பெருக்கினார். மிகப் பெரும்படை ஒன்றை நிர்மானித்தார். வெள்ளாற்றங்கரையில் புதிய கிருஷ்ணாபுரத்தை உருவாக்கி அங்கு குடியேற்றங்களை ஏற்படுத்தத் தூண்டினார்.

தலைக்கோட்டைப் போருக்குப்பின், விஜயநகரப் பேரரசின் செல்வாக்கு சிறிது சிறிதாகக் குறைந்து வருவதைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட கிருஷ்ணப்பர், பேரரசுக்கு இதுவரை செலுத்திவந்த திறைப்பணத்தை நிறுத்திவிட்டு சுதந்திரமாக இயங்கத் தொடங்கினார். பேரரசர் என்றும் இவர்மீது சந்தேகம் கொண்டிருந்தார், அவர் என்றுமே அரசரின் நல்லெண்ணத்தையும், நம்பிக்கையையும் திரும்பப்பெற முயலவில்லை. பேரரசின் வடபகுதியில் வெங்கடபதிராயருக்கு துரதிர்ஷ்டம் பிடித்தபோது செஞ்சிநாயக்கருக்கு இலாபகரமாக இருந்தது. அவர் பேரரசுக்கு எதிராகக் கலகம் செய்தார். பேரரசர் தென்பகுதிகளில், முகாமிடவில்லை என்பதனை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு சுதந்திரமாக இயங்க முற்பட்டார். முதன்முதலாக கி.பி. 1604இல் வேலூரைக் கைப்பற்றி தனது சுய அதிகாரத்தை நிலைநாட்டினார். செஞ்சியில் ஏற்பட்ட இப்புதிய மாறுதல்களைக் கண்டு கோபமுற்ற பேரரசர், செஞ்சியைக் கைப்பற்ற, தனது

தளபதிகளில் ஒருவரான வேலூரகோட்டியாச்சமரை பெரும்படையுடன் அனுப்பினார். கி.பி. 1607ஆம் ஆண்டின் இறுதியில் செஞ்சிநாயக்கர் தோற்கடிக்கப்பட்டு படையெடுப்பாளரால் சிறையிலடைக்கப்பட்டார். இதற்கிடையில் பேரரசர் வெங்கடபதிராயர் வேலூரைக் கைப்பற்றி அங்கு தன் அதிகாரத்தை நிலைநாட்டினார். அதன்பின் செஞ்சியை நோக்கிப் புறப்பட்டார். கிருஷ்ணப்ப நாயக்கர், பேரரசின் முன்னிலையில் தம் குடும்பசகிதமாக அடிபணிய வேண்டிய கட்டாயத்திற்குள்ளானார். சுமார் ஆறு இலட்சம் குருசேடோக்கள் (போர்த்துக்கீசிய நாணயம்) செலுத்துமாறு கட்டாயப் படுத்தப்பட்டார். தஞ்சை, மதுரை நாயக்கமன்னர் இப்பிரச்சினையில் தலையிட்ட பின்பே கிருஷ்ணப்பர் மீண்டும் தனது தலைநகரை அடைய பேரரசர் அனுமதி வழங்கினார். இது கிருஷ்ணப்பருக்கு இரண்டாவது கலகமும், தோல்வியுமாகும் எனக்கூறப்படுகிறது. அவமானம் தாங்க முடியாத நிலையில் மனம் நொந்து, கிருஷ்ணப்பர், அரசபதவியைத் துறந்து ஸ்ரீரங்கத்தில் அமைதியாக வாழ முடிவு செய்தார். ஆனால் தொடர்ந்து விஜயநகரப் பேரரசில் நடைபெற்ற வாரிசுரிமைப் போரில் புரட்சியாளரான ஜக்கதேவராயருக்கு ஆதரவாக கிருஷ்ணப்பர் இறங்கினார். இவருக்கு மதுரை நாயக்கரும், திருவதியின் அரசரும் உதவினர். தோப்பூரில் (1616-17) நடந்த போரில் இவர் போர்க்களத்திலிருந்து பயந்து ஓடினார். அதன்பின்னரும் இவர் கலகக்காரர்களுக்கு ஆதரவு தெரிவித்தார். இம்முறை தஞ்சை நாயக்கர் இவரை எதிர்த்தார். எனவே, கிருஷ்ணப்பர், வெள்ளாற்றங்கரைப் போரில் தோற்கடிக்கப்பட்டார். ஜக்கதேவராயரின் இறப்புக்குப்பின், செஞ்சியின் தெற்குப்பகுதியில் கலகக்காரர்களுக்கெதிரான போர் தொடர்ந்து நடைபெற்றதால் செஞ்சி நாயக்கருக்கு, இப்போரில் பங்கு பெற வாய்ப்புக் கிடைத்தது. கிருஷ்ணப்பர், முழு மனதாக பேரரசின் ஆதரவாளராக மாறினார். புதிய பேரரசருக்கு திறையையும் செலுத்தினார்.

கிருஷ்ணப்பரின் வழித்தோன்றல்கள் வரதப்ப நாயக்கரும், அப்ப நாயக்கரும் ஆவர். இவர்கள் அற்பமான திறமையற்ற மக்கள் உடைமைகளைக் கையாண்ட அரசர்களாக இருந்தனர். அப்பநாயக்கர் முஸ்தபாகான் என்ற படைத்தலைவனின் கீழ்வந்த பீஜப்பூர் படையால் தோற்கடிக்கப்பட்டார். இரண்டாவதாக, கான் கானன் (Khan-Khanan) என்பவரின் கீழான பிஜப்பூர் படையிடம் தோற்றார். ஆனால், கல்வெட்டுக்களில், கி.பி. 1670-71 வரையான ஆண்டுகள் வரை, வரதப்ப நாயக்கரின் பெயர் காணப்படுகிறது. கி.பி. 1648-1671 ஆண்டு வாக்கிலேயே செஞ்சி தனது சுதந்திர அரசு ஸ்தானத்தை இழந்துவிட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். தமிழகத்தில் முகமதியர்களின் பகுதிகளில் ஒன்றாக இப்பகுதி மாறியது. பெரும்பாலான செஞ்சி நாயக்க மன்னர்கள் தலைநகருக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, மேலும் மேலும் அங்கு கோட்டைகளையும், அரண்களையும் எழுப்பினர். இன்றும் அழியாத நிலையிலிருக்கின்ற கோயில்களும், மண்டபங்களும் செஞ்சி நாயக்கர்களின் கைத்திறனுக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைகின்றன. திருவண்ணாமலை, திண்டிவனம் கோயில்களை உருவாக்கியவர் அச்சுத ராம பத்ர நாயக்கராவார். நாயக்க மன்னர்கள் கற்றறிந்த அறிஞர்க்கு ஆதரவளித்தனர். பிராமணர்களுக்கு நிலதானம் கொடுத்தனர். இவ்வாறு செய்கின்ற தானங்கள், அறிஞர்களை அரசர் போற்றுதல் போன்ற நிகழ்ச்சிகள், தமிழகம் ஆங்கிலேயரால் முழுமையாகக் கைப்பற்றப்படுவதற்கு முன்பு வரை தமிழக வரலாற்றில், ஒரு பொதுவான பண்பாக இருந்து வந்ததாகும். விஜயநகரப் பேரரசின் வீழ்ச்சியையத் தொடர்ந்தே செஞ்சி நாயக்க அரசும் வீழ்ந்தது.

## வேலூர் நாயக்கர்கள்

செஞ்சி நாயக்கர் அரசின் மூன்று கீழ்ப்படியான பகுதிகளில் ஒன்றான வேலூர் நாயக்கர் அரசு சின்ன நாயக்க பொம்மரால் தோற்றுவிக்கப்பட்டது. அவரது தொடக்க கால கல்வெட்டு 1546ஆம் ஆண்டு வெளியிடப்பட்டதாகும். அர்ப்பாக்கம், அரியூர், சதுப்பேரி ஆகிய பகுதிகளும் இவரது ஆட்சிப் பகுதியில் அடங்கியிருந்தன. சதாசிவராயர், இராமராயர், முதலாம் ஸ்ரீரங்கர் ஆகியோரின் ஆட்சிக்காலத்திலிருந்தே இவர் செஞ்சி நாயக்க அரசின் கீழ்ப்படியான நிலையிலிருந்தவராவார். கி.பி. 1576இல் செஞ்சியின் கிருஷ்ணப்ப நாயக்கரின் அனுமதியுடன். சின்ன பொம்ம நாயக்கர், திப்ப சமுத்திரம் என்னும் கிராமத்தை, வேலூரிலுள்ள சிவன் கோயிலுக்கு தானமாக வழங்கினார். இவர், அப்பய்ய தீட்சிதர் என்ற அறிஞரை ஆதரித்ததோடல்லாமல், கனகாபிஷேகம் என்ற விழா ஒன்றும் நடத்தி அனைவருக்கும் மரியாதை செய்தனர்.

இவரது வாரிசான லிங்கம நாயக்கர், கி.பி. 1601 வரை, செஞ்சியின் சிற்றரசராகவே ஆட்சி செய்து வந்தார். ஆனால், லிங்கமநாயக்கர், செஞ்சியின் நேரடியான மேலாண் மையை மனதார ஏற்றுக்கொண்டு செயல்பட்டார் என உறுதியாகக் கூற முடியவில்லை. முதலாம் வெங்கடரே, லிங்கமரை செஞ்சிக்குக் கீழ்ப்படிந்து நடக்குமாறு பணித்திருக்கக் கூடும். இந்நிகழ்ச்சி, விஜயநகரப் பேரரசிடமிருந்தும், செஞ்சி நாயக்கரிடமிருந்தும் பிரிந்து சுயமாக இயங்கும் வலுவினை லிங்கமருக்கு நல்கியது. லிங்கமரும் அவ்வாறு பிரிந்து சுயமாக இயங்கவும் விரும்பினார். முதலாம் வெங்கடரின் ஆட்சிக்காலத்தில் பெரும் பேடு சீமை என அழைக்கப்பட்டு வந்த செங்கல்பட்டு, மதுராந்தகம் வட்டங்கள் வேலூர் நாயக்கர் அரசின் பகுதிகளாக இருந்தன. லிங்கமரின் ஆதிக்கத்திலிருந்து இவைகளைப் பிரிக்க எண்ணியமுதலாம் வெங்கடர், இப்பகுதிகளை, வேலுகோட்டி கஸ்தூரி ரங்கப்பரின் மைந்தரான யாச்சம நாயக்கரிடம் ஒப்படைத்து, அவரை அமரமாக நியமித்தார் (amaram). அமரமாக நியமிக்கப்பட்ட யாச்சமர் தனது ஆட்சிப்பகுதியை விரிவுபடுத்தக்கருதி, அண்டை நாடுகளைக் கைப்பற்ற முயன்றார். லிங்கமரின் கீழ்ப்படிந்த ஆட்சியாளரான நாகரின் கட்டுப்பாட்டிலிருந்த உத்திரமேரூர்க் கோட்டையைத் தாக்கினார். இவ்வாறு, செஞ்சி, வேலூர் நாயக்கர்களின் எதிரியான யாச்சமரின் வளர்ச்சியை பேரரசர் தடை செய்யாதிருந்ததைக் கண்ணுற்ற அவ்விருவரும் தமது வாழ்நாள் முழுவதும் கலகங்களைச் செய்த வண்ணமிருந்தனர்.

லிங்கமர், யாச்சமருக்கு எதிரான கூட்டணி ஒன்றை ஏற்படுத்துவதன் மூலமாக விஜயநகரப் பேரரசின் கொள்கைகளுக்கு ஒரு முடிவுகட்ட விரும்பினார். இக்கூட்டணி யில், மதுரை, தஞ்சை, செஞ்சி நாயக்கர்கள் சேர்ந்திருந்தனர் என வெங்கடரமணய்யா கூறுகிறார். இக்கூட்டணி கி.பி. 1601ஆம் ஆண்டு அல்லது அதற்குப் பின்பே ஏற்பட்டதாக இருப்பதால், இக்காலத்தில் பேரரசரிடம் அதிக மரியாதையும், நம்பிக்கையும் கொண்டி ருந்த தஞ்சையின் இரகுநாதர் இதில் சேர்ந்திருப்பார் என்பது நம்பும்படியாயில்லை. மதுரையின் முத்துக்கிருஷ்ணப்பநாயக்கர் இதில் கூட்டாளியாயிருந்திருப்பார் என ஏற்றுக் கொள்வதற்கும் சரியான ஆதாரம் கிடையாது. ஆனால் சந்தேகத்திற்கிடமின்றி, ஏற்கனவே கலகம் செய்துவந்த செஞ்சி நாயக்கர், பேரரசருக்கெதிரான இக்கூட்டில், உடன் பட்டிருந்தார் என்பது தெளிவாகிறது. வேலூரின் லிங்கமரும், அவரது கீழ்ப்படிவான நாகரும் சேர்ந்து, 100 யானைகள், 500 இரட்டைக் குதிரைகள், 10,000 வில்வித்தை

விற்பண்ணர்கள், 12,000 பழைய துப்பாக்கி தாங்கிய வீரர்கள், 30,000 தரைப்படையினர் ஆகியோரடங்கிய பெரும்படை ஒன்றைத் திரட்டி, அப்படைக்குத் தலைவராக தாவுள பாப்பா நாயிடு என்பவரை நியமித்தனர் எனக் கருதப்படுகின்றது. இப்படை கி.பி. 1601இல் உத்திரமேரூரை நோக்கிச் சென்று கோட்டையை முற்றுகையிட்டது. உத்திரமேரூர்ப் போர்களத்தில், யாச்சம நாயக்கர், எதிரிப்படையை தோற்கடித்ததோடல்லாமல் தாவுள பாப்பா நாயுடுவையும் கொன்றார். உத்திரமேரூர், வேலூர் ஆகியவற்றின் வீழ்ச்சியால் வலுப்பெற்ற யாச்சமர், துரிதமாக, பேரரசின் ஆதரவுடன், செஞ்சியைத் தாக்கினார்.

லிங்கமரின் புரட்சிக்கு முக்கிய காரணம், மதுரை, தஞ்சை, செஞ்சி ஆகியவற்றைப் போன்று, தாமும் சுதந்திரமாக இயங்க வேண்டும் என்ற ஆவலேயாகும். ஆனால், அரவீடு வம்சத்தின் சிறந்த மன்னரான முதலாம் வெங்கடர், தமிழகத்திலிருக்கும் தமது சிற்றரசுகளைத் தனக்கும் கீழ்ப்படிந்தே வைத்திருக்க விரும்பினார். அதன் காரணமாகவே இவர் தமது தலைநகரைப் பேனு கொண்டாவிலிருந்து தமிழகத்திற்கருகே சந்திரகிரிக்கு மாற்றினார். வேலூரின் நாயக்கர் திறை செலுத்த மறுத்தபோது, கட்டாயப்படுத்தப்பட்டார். இக்கட்டாயத்தை அவர் செவிசாய்க்காத போது, பேரரசர் அவரை அச்சுறுத்தினார். எனவே, அ. கிருஷ்ணசாமி, பேரரசரின் படையெடுப்புக்குக் காரணம் நாயக்க மன்னர்கள் தாங்கள் செலுத்த வேண்டிய திறைப் பணத்தை செலுத்தத் தவறியதேயாகும் எனக்கருதுகிறார்கள்.

கி.பி. 1604இல் சந்திரகிரியின் போதகரான கோடின்ஹோ அடிகளார், வேலூரின் லிங்கம நாயக்கர் கைது செய்யப்பட்டு அழைத்து வந்ததைக் கண்ணுற்றதாகக் குறிப்பிடு கின்றார். சென்ன நாயக்கர் என்பவரால் வேலூர், இரண்டு மாதங்கள் வரை முற்றுகை யிடப்பட்டது. யாச்சம நாயக்கரின் மைத்துனரான சென்னநாயக்கர், முன்னல் சமவெளி யில், வேலூரின், லிங்கம நாயக்கரைத் தோற்கடித்து, வேலூர் கோட்டையைக் கைப்பற்றி னார். வேலூர் நகரம் முற்றுகையிடப்பட்டிருந்தபோது, லிங்கமர் தீரமுடன் போரிட்டார். எனினும், அவரது இரு அதிகாரிகள் சென்ன நாயக்கருடன் சேர்ந்து கொண்டு இவரை ஏமாற்றி விட்டதால் இவர் போரில் தோற்க வேண்டியதாயிற்று. லிங்கமரின் மைந்தர், சென்னநாயக்கருக்கு, ஐந்துலட்சம் பெறுமான பொன், விலைமதிப்பற்ற கற்கள், முத்துகள் ஆகியவற்றைக் கொடுத்தார். எனினும் சென்ன நாயக்கர் அவைகளைப் பெற்றுக் கொள்ள மறுத்து விட்டார். கி.பி. 1604இல் முதலாம் வெங்கடர் வேலூரை அடைந்து அதனை விஜய நகர நாயக்கர்களின் தலைமைப்பீடமாக ஆக்கிக் கொண்டார். 1606இல் வெங்கடர் வேலூரில் தனது அரசவையை ஏற்படுத்தினார், ஆனால் சந்திர கிரியிலேயே தங்கி வந்தார். இதன்பின் வேலூர் கோட்டை — ராயவேலூர் — விஜயநகர ராயர்களின் அரசுப்பீடம் என அழைக்கப்படலாயிற்று.

### பயிற்சி வினாக்கள்

1) தஞ்சையின் இரகுநாத நாயக்கரின் சாதனைகளை எடுத்துக் கூறுக.

2) தமிழக வரலாற்றில் செஞ்சியின் இரண்டாம் கிருஷ்ணப்பரின் பங்கினை ஆய்க.

3) தஞ்சை, செஞ்சி, வேலூர் நாயக்க அரசுகள் வீழ்ச்சியடையக் காரணமாயிருந்த சூழ்நிலைகளை ஆய்க.

# பாடம் – 15 நாயக்கர் ஆட்சிமுறை

## மத்திய, தல ஆட்சிகள் – படை அமைப்பு – சட்டமும் நீதியும் – வருவாயும் வர்த்தகமும் – சமுதாயமும் பொருளாதாரமும்

நாயக்கராட்சி முறை 'நாயங்கர' நிர்வாகம் (Nayankara System) என்று அறியப் படுகிறது. இது விஜயநகரப் பேரரசர்களால் சிறப்பாட்சியின் பொருட்டு தோற்றுவிக்கப் பட்ட ஒருவித படை நிர்வாக முறையாகும். பேரரசு பெருகிச் சென்றதால் விஜயநகரத் திலிருந்தபடி பேரரசரால் நாட்டைத் திறம்பட நிர்வகிக்க இயலாது என்று உணர்ந்த கிருஷ்ணதேவராயர் புகுத்திய நிர்வாக முறையாகும். இவர் தமிழ்நாட்டை முப்பெரும் பகுதிகளாகப் பகுத்து, தஞ்சை, மதுரை, செஞ்சி ஆகிய நகரங்களில் இந்நாயக்கராட்சியை நிறுவினார். பேராற்றல் படைத்த பேரரசருக்குக் கீழ் இம்முறை அடக்கத்துடன் இயங்கி வந்தது. பேரரசரை விட அதிகாரமும் ஆற்றலும், அறிவும் பெற்ற நாயக்கரின் கீழ் இது தனித்தியங்கியது. மதுரையிலும், தஞ்சையிலும், செஞ்சியிலும் இம்முறை குறிப்பிடத்தக்க சாதனைகளைப் புரிந்த வேளையில் இக்கேரியிலும், வேலூரிலும், ஆர்மகோனிலும் சில பாதிப்புகளுடன் இயங்கிவந்தது. இத்தமிழ்நாட்டு நாயக்கர் தமிழக வரலாற்றில் பாளையப்பட்டு முறையினைப் புதுப்பித்து ஆதரித்தனர். இது நாயக்கர்களுக்கு அடங்கி இயங்கிவந்த ஒருவித நிர்வாக முறையாகும். நாயங்கர, பாளையப்பட்டு முறைகள் பரம்பரை உரிமைகளைப் பெற்று இயங்கி வந்தன. ஆனால் இவர்களுடைய ஆட்சியின் எல்லைகளும், ஆதிக்க எல்லைகளும், செல்வாக்குப் பகுதிகளும், இதர கடமைகளும் வரையறுக்கப் பட்டிருந்தன. பேராதிக்கம் பெற்ற திருமலை, செஞ்சியின் இரண்டாம் கிருஷ்ணப்பர் போன்றோரின் காலத்தில், இம்முறை பேரரசையே தாக்கியது; விஜயநகரை அழிப்பதாகவும் தோன்றியது; அதன் அழிவின்பேரில் நாயக்கர்கள் வளர்ந்தனர்; பாளையக்காரர்களின் அழிவைப் பயன்படுத்தி நாயங்கர முறை விரிவாகியது. வல்லமையுள்ள பாளையக்காரர்கள் நாயங்கர முறையைத் தாக்கினர்; அதன் அழிவைத் துரிதப்படுத்தினர். கிராங்களின் எல்லைகளை அவமதித்து அவற்றை பாளையங்களுடன் சேர்த்துக் கொண்டனர். இம்முறை விஜயநகரப் பேரரசின் வளர்ச்சிக்கும், அதன் நிலையான செல்வாக்குக்கும் காரணமாயிற்று. விஜயநகரப் பேரரசர்களின் ஆட்சித் திறமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டு அவர்கள் விட்டுச் சென்ற ஒரு நிர்வாக முறை.

அரசுத் தந்திரமும், விவேகமும், ஆற்றலும் கொண்ட பேரரசர்கள் நாயங்கர முறையை அடக்கியாண்டனர். அடங்காத நிலையில் அவற்றை அழிக்கவும் தயங்கியதில்லை. நாகம நாயக்கர் அச்சுத ராயரின் காலத்தில் கலகம் செய்தார். நாகமரின் மகனை ஏவி நாகமர் அடக்கப்பட்டார். மதுரை நாயக்கர் நாடு விஸ்வநாதரிடம் ஒப்படைக்கப்பட்டது தஞ்சையில் வீரநரசிம்மர் கலகம் செய்தார். அவரை அடக்கி அவர் நாடு கைப்பற்றப் பட்டது. வேலூர் நாயக்கர் நாடு கலைக்கப்பட்டது. செஞ்சிகூட பலமுறை எச்சரிக்கப் பட்டது. அரவீட்டின் வெங்கடபதிராயர் மதுரை மீது படையெடுப்பதாக அச்சுறுத்தி வந்தார். நாயக்கர்கள் பாளையக்காரர்களைத் தாக்கி அவற்றைக் கைப்பற்றினர். எடுத்துக் காட்டாக பரமக்குடியின் தும்பிச்சி நாயக்கர் கொல்லப்படல்; அவருடை நாடு மதுரை யுடன் சேர்த்துக் கொள்ளப்படல்; மானாமதுரையின் வாணாதிராயன் அடக்கப்படுதல்;

திருமலைக் காலத்தில் சேதுபதி நாடு பங்கிடப்படுதல்; வல்லமையுடைய பாளையக்காரர்கள் நாயக்கர் நாட்டை அச்சுறுத்தவும் தயங்கியதில்லை. எடுத்துக்காட்டாக, இராமநாத புரத்தின் கிழவன் சேதுபதி. இவர் மதுரையைப் புறக்கணித்து, தன்னிச்சையாக நாட்டை யாண்டு வந்தார். நாயங்கர முறை பாளையக்காரர்கள், சிற்றரசர்கள், ஆதிக்கமுடைய தனி நபர்கள் ஆகியோரின் ஆதரவைப்பெற்றக் காலத்தில் சிறப்புற்று விளங்கியது. அவர்களை மதிக்கப்படாத காலத்தில் நாயக்கர் நாடு சரியத் தொடங்கியது.

நாயங்கர முறையின் தலைவர் நாயக்கர் என்று அழைக்கப்பட்டார். நாயக்கர் என்றால் தலைவன் என்று பொருள்படும். நாயகன் என்றால் குடும்பத் தலைவன் என்பது போல், நாயக்கர் என்றால் குடும்பமாகிய ஒரு நாட்டுக்குத் தலைவன் என்று பொருள்படும். இந்த நாயக்கர் ஆளுநராகவோ (Governor), பிரதேசத் தலைவராகவோ (Viceroy), குறிப்பிட்ட நாட்டுப் பகுதியின் தலைவராகவோ (Lord) இருக்கலாம். சால்டோர் (Saletore) என்ற வரலாற்றாளர் நால்வகை நாயக்கர்களைக் குறிப்பிடுகின்றார் : (i) தணணாயகா (Dannayaka) அல்லது தண்டநாயகா (Dandanayaka), (ii) நாயகா (Nayaka), (iii) அமரநாயகா (Amaranayaka), (iv) படைநாயகா (Patteyanayaka). விஜயநகருக்கு பாரசீகத்திலிருந்து வருகைதந்த அப்துர் ரஜாக், நீதிபரிபாலனத்திற்குப் பெயர் பெற்றவர் தண்ணாயகர் என்கிறார். இத்தண்ணாயகர்கள் பெரும் நிலப்பிரபுக்களின் தலைவர்களாகவும் இந்து வந்துள்ளனர். 1445-46 ஆம் ஆண்டுகளில் லக்கண்ண — தண்ணாயகா தென்கடல்தலைவன் (Dakshina Samudradhipati) என்று அழைக்கப்பட்டார். தண்ணாயகர் நீதி பரிபாலனத்துடன், நாட்டையாளவும் செய்துள் ளனர் என்பது இதிலிருந்து பெறப்படும். மேலும் படைத்தளபதிகளாயும், படைத் தலைவர்களாயும் இயங்கி வந்துள்ளனர்.

'தண்ணாயகரைத் தவிர மற்ற முப்பிரிவுகளின் தன்மையையும், சிறப்பினையும் வரையறுத்துக் கூறிட இயலவில்லை' என்றும், 'அதிலும் குறிப்பாக நாயக்கர்களின் நிலையைத் திட்டவட்டமாகக் கூறிட முடியவில்லை' என்றும் சால்டோர் கூறுவார். 'நாயக்கர்கள் ஆளுநர் முதற்கொண்டு சாதாரண அரசு அதிகாரிவரை பணிபுரிந்து வந்தனர்'. எனவேதான் அவர்களுடைய அரசியல் நிலையை வரையறுத்துக் கூறிட இயலவில்லை. பேராசிரியர் மகாலிங்கம், இவர்கள் 'படைப்பிரபுக்கள்' என்று கருதுகிறார். தொடர்ந்து, போர் நடைபெற்று வந்த காலத்தில் நிலையான படை தேவைப்பட்டது. இதனை 'படைப்பிரபுக்கள்' தந்து வந்தனர். இந்த படைப்பிரபுக்களாகிய நாயக்கர்கள் தாங்கள் வைத்திருந்த, அல்லது படைக்களத்திற்கு கொண்டு வந்த படைவீரர்களைப் பொறுத்து நிலம் மான்யமாக வழங்கப்பட்டனர் என்று அவர் கூறுகிறார். மன்னனுக்காக குதிரைப்படை வைத்திருந்த படைத்தலைவர்களே நாயக்கர்கள்; இவர்கள் ஒருவேளை தங்களுடைய உழைப்புக்குத்தக்க ஊதியம் வழங்கப்பட்டவர்களாக இருக்கலாம் என்று சாலடோர் கருதுகிறார். தாங்கள் செய்த சேவைக்காக கிராமங்களே மொத்தமாக அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவ்விதம் நாயக்கருக்கு வழங்கப்பட்ட கிராமங் களையும், கிராமங்கள் வழங்கு முறையும் கல்லெழுத்துக்கள் குறிப்பிடுகின்றன. நாயகா என்ற பதவிக்காக எல்லப்ப (Yellappa) நாயக்கருக்கு ஹந்தரகல் (Handarahal) என்ற ஊரை கிருஷ்ணதேவராயர் வழங்கினார் என்று 1510ஆம் ஆண்டுக்குரிய கல்லெழுத்து அறிவிக்கின்றது. பேராசிரியர் சீனிவாசாச்சாரி கருத்துப்படி நாயக்கர் என்றால் தலைவர்

அல்லது படைத்தளபதி என்பதாம். அப்பதவி பெரும்பாலும் ஒரு படைத்தலைவனைக் குறிப்பதாகும் என்று அவர் கருதுகிறார். நாயக்கர்கள் கோயில் கண்காணிப்பாளராகவும், சோதகராகவும் பணியாற்றியுள்ளனர் என்று பல கல்லெழுத்துக்கள் அறிவிக்கின்றன. திருக்காளக்குடியில் கிடைத்த ஒரு கல்லெழுத்து "கோயில் வழிபாடு முன்மாதிரி நடைபெற கோயில் கண்காணிகளாகப் பல நாயக்கன்மாரை குமார கம்பணர் நியமித்தார்" என்று கூறுகிறது.

இவர்களுடன் அமரநாயக்கர்களும் இருந்திருக்கிறார்கள். இவர்களில் சிலரைக் கல்லெழுத்துக்கள் 'மூத்தோர்' (senior) என்று கூறுகின்றன. மூத்த அமர நாயக்கர்கள் சற்று அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தோர் என்று தெரிகிறது. இப்பதவிக்குப் பிராமணரும் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த அமர நாயக்கர்களும் நிலம் கொடையாக வழங்கப்பட்டுள்ளனர். தங்கள் வீடுகளைக் காக்க காவலர்களையும் நியமித்துள்ளனர். பேரரசர் சதாசிவ ராயர், ராமராஜுகாருவை (Rama Raju Garu) பெனு கொண்ட சீமையின் ஆளுநர் (Amaranayakatana) என்று அழைத்துள்ளார். அமர நாயக்கர் பதவிக்காக அச்சுதராயர் அச்சுதராயபுரத்தை நாராயணதேவருக்கு வழங்கியுள்ளார். திருவிதாங்கூர்ப்போர் வெற்றியில் முடிந்தபின், ராமராஜ அய்யன் அமரநாயக்கமாக திருவதிதேசத்தை விஸ்வநாத நாயக்கருக்கு அளித்தான்.

படைநாயக்கரின் அரசியல் நிலை பற்றி ஏதும் அறியக்கிடைக்கவில்லை. படை நாயக்கரை சாலடோர் அமரநாயக்கருடன் வைத்தெண்ணுகிறார். அமரமாகேல் (Amaramahale) என்பது அமரமாகணியுடன் (Amaramagani) தொடர்புடையதாகத் தோன்றுகிறது. போதிய சான்றுகளில்லாக் காரணத்தால் இவற்றை வரையறுத்துக் கூறிவிட இயலவில்லை.

ஆனால் இவற்றிற்கிடையேயுள்ள தொர்டர்பு யாது? நாயகா என்ற சொல் தண்டநாயகா, அமரநாயகா, படையநாயகா என்ற சொற்களின் வழித்தோன்றலா? அல்லது நாயகா என்றால் சாலடோர் சுட்டும் இரண்டாவது பிரிவாகிய நாயகரைக் குறிப்பதா அல்லது இவை அனைத்தும் ஒரே பிரிவைக் குறிப்பனவா? அல்லது தண்டநாயகா, அமரநாயகா, படைய நாயகா, தனித் தனிப் பதவிகளைக் குறிப்பனவா? நாயகர் என்ற சொல் பொய்சாளர் காலத்திலிருந்தே இருந்து வருவதா? இவ்வினாக்கள் ஆராய்ச்சியாளருக்கு விடப்பட வேண்டியவை. இவற்றின் தனித்தனியான பொருள்கள் வரையறுக்கப்பட்டாலொழிய, மேற்கூறப்பட்ட நால்வகையினரைப்பற்றி எதுவும் முடிவாகக் கூறிட இயலாது.

பரந்தாமனார் கருத்துப்படி நாயக் என்ற சொல் நாயகா என்ற சொல்லின் வழித்தோன்றலே. நாயக்கர் இன்று தெலுங்கு வழி வந்த ஒரு இனத்தைக் குறிக்கிறது. நாயகா என்றால் குடும்பத் தலைவன், அல்லது நாட்டுத் தலைவன். அமரம் என்ற நிலமான்யத்துக்குரியவன் அவனே. படை அல்லது காவலுக்காக வழங்கப்படுவதே அமரமான்யம் என்று மக்ளீன் (Maclean) கருதுகிறார். 'இப்பதவியின் தன்மை புலப்படவில்லை; அமரநாயகா என்றால் தேவர்களின் தலைவனாகிய இந்திரனைக் குறிக்கும்; என்று ஃப்ளீட் (Fleet) கூறுகின்றார். அமர நாயகர் என்றால் ஒரு வேளை ஆளுநராக இருக்கலாம் என்று சாலடோர் கருதுகிறார்.

பேராசிரியர் சீனிவாசாச்சாரியும் நாயக் என்ற சொல் நாயகா என்ற சொல்வழி வந்ததாகக் கருதுகிறார். "நாயக் என்றால் சமஸ்கிருத மொழி சொல்லாகிய நாயகாவின் வழித் தோன்றலே. நாயக் என்றால் படைத்தலைவன் என்பதாம். இது ஆளுநருக்கு வழங்கப்பட்டமை விஜயநகரத்தின் தனித்தன்மையைக் காட்டுகிறது" என்றார் அவர்.

விஜயநகரப் பேரரசர்கள் தம் பேரரசைப் பல மாகாணங்களாகவும் மாகாணங் களைப் பல மாவட்டங்களாகவும் பிரித்து, நம்பகமான பிரபுக்களிடம் ஒப்படைத்தனர். இப்பிரபுக்கள் தேவைப்படும்போது படை, கொடுத்துதவ வேண்டும். இந்த படைப் பிரபுக்களே நாயகர் என்று அழைக்கப்பட்டனர். தங்களுக்கு கொடுக்கப்பட்ட நாட்டின் வருவாயில் ஒரு பங்கையும், போதிய அளவு படையையும் இப்பிரபுக்கள் பேரரசுக்கு கொடுத்து வந்தனர். ஆகவே நாயகா என்ற சொல்லிலிருந்துதான் மற்ற பதவிப்பெயர்கள் தோன்றியிருக்க வேண்டும். இப்பதவிப் பெயர்களாகிய தண்ணாயகா, அமரநாயகா, படையநாயகா அனைத்தும் தனித்தனியான பதவிநிலைகளைக் குறிப்பதாக இருக்கலாம்.

இந்தியாவின் மொகலாயரைப் போன்று, இடைக்கால ஐரோப்பியப் பேரரசர்களைப் போன்று விஜயநகரப் பேரரசர்களும் இப்பிரபுக்களிடமிருந்து படையுதவி எதிர்பார்த்தனர் என்பது விளங்குகிறது. படைப் பராமரிப்புக்குப் போதிய வசதியிருந்தால் மட்டுமே படைகளை இப்பிரபுக்கள் வைத்துக் கொள்ள இயலும். இப்படைப் பராமரிப்புக்காகவே இப்பிரபுக்கள் நிலம் மான்யமாகப் பெற்றுள்ளனர். இவ்வுடன்பாடுப்படி இப்பிரபுக்களே பேரரசருக்குப் படைகொடுத்தனர். அப்படைக்காகும் ஊதியத்தையும் இதர செலவுகளையும் பேரரசர்கள் விட்டுக்கொடுத்த நிலத்திலிருந்து வந்த வருவாய் மூலம் கவனித்துக்கொண்டனர். காலப்போக்கில் தம் வருவாயில் ஒரு பங்கைக் கப்பமாகவும் கட்ட ஆணையிடப்பட்டனர். இடைக்கால ஐரோப்பிய பிரபுக்களைப் போன்று இவர்களுக்குத் தனிச் சுதந்திரமிருந்தது. ஆனால் மொகலாய மான்சப்தார்கள் அரசு கண்காணிப்பில் இருந்து வந்த ஊதியம் பெற்ற அதிகாரிகளே. மான்சப்தார்கள் தங்களுடைய படையுதவிக்காக நிலம் மான்யமாகப் பெற்றதில்லை. அவர்களுடைய சுதந்திரம் மிகவும் கட்டுப்படுத்தப்பட்டது. ஆகவே விஜயநகர நாயக்கர்களும் தொடக்கத்தில் படைத் தலைவர்களாயிருந்து, ஐரோப்பிய பிரபுக்களைப் போன்று பரம்பரை ஆளும் இனத்தாராக்கப்பட்டவர்களே. (நாயங்கர முறைக்கும் இடைக்கால ஐரோப்பிய பிரபுத்துவ முறைக்குமிடையேயுள்ள ஒற்றுமை வேற்றுமைகளே பேராசிரியர் டி.வி. மகாலிங்கத்தின் "Administration and Social life Under Vijayanagar" முதல் பகுதியில் காண்க).

**மன்னர் :** மனுமுதல் சுக்ராச்சாரியா (Sukracharya) வரை ஒருநாட்டின் தன்மையை அதனை ஆண்ட மன்னரைக்கொண்டே அறுதியிடுவர். ஏனெனில் ஆளும் தன்மையால் சமுதாய, நெறி, வாழ்க்கை முறைகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. "யுகத்தின் தோற்றகன் அரசனே. அவனே கடமைகளையும், பாவங்களையும் உண்டுபண்ணுகிறான். அவ்யுகக் குறைகள் அனைத்தும் காலத்தையோ, மக்களையோ சேர்வதில்லை; மன்னனைச் சார்ந்ததே" என்பர் சுக்கிரநீதி சாஸ்திரம் இயற்றிய சுக்ராச்சாரியர். உண்மை யாதெனில், அரசனே ஒரு குறிப்பிட்ட காலத்தை தோற்றுவிக்கிறான். இந்துப் பண்பாட்டின் சிறந்த அம்சங்கள் ஏற்படுவதற்கான சுமுகமான அரசியல் நிலையை ஏற்படுத்த வேண்டியவன் அரசனே.

வெற்றிகரமான ஆட்சிக்கு மன்னன் சில கோட்பாடுகளையும், கொள்கைகளையும் பின்பற்ற வேண்டும். மன்னன் தர்மத்தை மதிக்க வேண்டும். தொழில் வல்லுனர்களை ஆதரிக்கவேண்டும்; குறைந்த அளவு வரியை மக்களிடமிருந்து வசூலிக்கவேண்டும்; படைபலத்தால் எதிரிகளை அடக்கவேண்டும்; நாட்டு மக்களைக் காப்பாற்றவேண்டும்; கலப்பினப் பெருக்கத்தைத் தடுக்கவேண்டும்; பிராமணர்களின் சிறப்புக்குப் பாடுபட வேண்டும்; கோட்டை கொத்தளங்களைப் பலப்படுத்தவேண்டும்; நடக்கக் கூடாத செயல் களைத் தடைசெய்யவேண்டும். நாயக்க மன்னர்கள் தாம் விரும்பியதைச் செய்தார்களா? சொல்லுக்கும் செயலுக்கும் தொடர்பிருந்ததா? அவர்களுக்கு தெய்வீக உரிமையில் அசையாத நம்பிக்கையிருந்தது. ஆகவே, அவர்களாட்சி வரம்பிலா சர்வாதிகாரமாகும்.

மாகாணத் தலைவர்களாகிய நாயக்கர்கள் ஆடம்பரப் பிரியர்கள். சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் பின்பற்றினர்; ஆடம்பரப் பயணங்கள் மேற்கொண்டனர்; பல பெண்களைக்கொண்ட அந்தப்புரத்தை வைத்திருந்தனர். மக்களிடமிருந்து அதிக வரி வாங்கினர்; பிராமணர்களுக்கு பிரம்மதேயங்கள் வழங்கினர்; சதுர்வேதி மங்கலங்களையும், அக்ரகாரங்களையும் அவர்களுக்காக அமைத்தனர்; நிலங்கள் மான்யமாக அவர்களுக்கு வழங்கினர்; கோயில்களுக்கு வரியிலா நிலங்கள் விட்டனர்; மக்களுடைய பொருளாதார முன்னேற்றத்தைத் தடைசெய்யும் அனைத்து செய்கைகளையும் இவர்கள் செய்தார்கள். ஏனெனில் மக்களைப் பற்றிய கவலை அவர்களுக்கு இருக்கவில்லை. நிர்வாக, நீதி, சட்ட, படை அதிகாரங்கள் அனைத்தும் இவர்களிடம் குவிந்து கிடந்ததால், இவர்கள் சர்வாதிகாரிகளாக ஆண்டுவந்தனர். இவர்களுடைய சர்வாதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் எவ்வதிகாரமும் மக்களிடம் இருந்ததில்லை. மன்னனின் விருப்பே நாட்டின் சட்டம். நாட்டில் பணிபுரிவோர் யாரையும் பதவியிலிருந்து நீக்கவோ, பதவி உயர்வு தரவோ, மன்னர்களுக்கு உரிமை இருந்தது. நீதியிலும் அவர்களுடைய தீர்மானமே முடிவாகக் கருதப்பட்டது. அதிகாரிகளின் தவறுகளுக்கு, அந்நியப் படையெடுப்புகளுக்கு, இயற்கையின் கொடிய விளையாட்டுகளுக்குப் பலியானோர் மக்களே. 1611ஆம் ஆண்டு வீகோ பாதிரியார் எழுதிய கடிதம் "இம்மாதிரியான பல சூழ்நிலைகளிலும்", மன்னர் களின் தவறுகளுக்காக மக்கள் அதிக வரி செலுத்தினர்; நாடு மொத்தமாக அழிக்கப் பட்டது; மக்கள் கொள்ளையடிக்கப்பட்டனர்; கொன்று குவிக்கப்பட்டனர் என்று கூறுகிறது.

நாயக்க மன்னர்கள் நாட்டின் அனைத்து சடங்கு சம்பிராதயங்களைத் தவறாமல் பின்பற்றினர்; திருவிழாக்களிலும், களியாட்டங்களிலும் பங்கு கொண்டனர்; அவர்களாற்ற வேண்டிய கடமைகளை ஒழுங்காய் செய்து வந்தனர்; வேட்டையாடுவதிலும், புனிதப் பயணங்களிலும் தங்கள் காலத்தைக் கழித்தனர்; நாட்டிய, இசை நிகழ்ச்சிகளைக்கண்டின் புற்றனர். திருமலை நாயக்கர் மதுரையில் சித்திரைத் திருவிழாவை நாடு சிறக்கக் கொண்டாடினார். தஞ்சையின் விஜயராகவர் இராமேஸ்வரத்திற்குப் புனிதப்பயணம் மேற்கொள்வதில் பணத்தையும், காலத்தையும் ஆற்றலையும் பாழ்படுத்தினார்; செஞ்சியின் கிருஷ்ணப்ப நாயக்கர் பெருமாள் சிலையை சிதம்பரம் கோயிலில் ஏற்றப்பெரும்பாடு பட்டார். சகுனம் பார்த்தல், மந்திர—தந்திரங்கள், இதரமூடநம்பிக்கைகளில் அவர்களுக்கு அசையாத நம்பிக்கையிருந்தது. நாயக்கர்கள் எண்ணிக்கை அதிகம்கொண்ட அந்தப்புறத்தை வைத்திருந்தனர் என்று பாதிரியார்கள் அறிவிக்கின்றனர். மன்னர்

இறந்துவிட்டால் அந்தப்புறப் பெண்மணிகளைத் தீப்புகுமாறு அனுமதித்தனர் என்றும் தெரிய வருகிறது. பெரும்பாலும் இந்நாயக்கர்கள் சிவ, விஷ்ணு பக்தர்களே. தம் நாட்டுச் செல்வங்களைப் புதுக் கட்டிடங்கள், கோபுரங்கள், மண்டபங்கள், தூண்கள், புதுக்கோயில்கள் கட்டுவதில் செலவிட்டனர். சுருங்கக்கூறின், அவர்கள் ஆளுரிமைக்குத் தொடர்பான அனைத்து செயல்களிலும், சிந்தைகளிலும் நம்பிக்கைகளிலும் பங்கு கொண்டனர்.

மதுரை நாடு (Madura Country) என்ற நூலை வரைந்த நெல்சன் மதுரையில் 'இணையாட்சி' (co-rule) நடந்துவந்ததாகக் கூறுகிறார். பேராசிரியர் சத்தியநாதைய்யர் இக்கருத்தினை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆளும் நாயக்கரின் மகனோ, தம்பியோ பொதுவாக ஆளுநராகவோ, இளங்கோவாகவோ தான் நியமிக்கப்பட்டனர். நாயக்கராட்சி யின்போது பகர ஆளுகை இருந்ததாக அரசி மங்கம்மாளின் ஆட்சியிலிருந்து அறிகிறோம். ஆளும் மன்னர் இறந்துபோனபின் அரசுரிமை பெற வாரிசு இல்லையெனில், இறந்துபோன மன்னரின் மனைவி யிலிருந்து அறிகிறோம். அரசுரிமைக்கு நேரடி வாரிசு இல்லையெனில் குடும்பத்திலிருந்து தத்தெடுத்துக்கொள்ளும் உரிமையும் இருந்திருக்கிறது. எடுத்துக்காட்டாக, மீனாட்சி, பங்காரு திருமலையின் மகனாகிய விஜயகுமாரனை தத்தெடுத்துக் கொண்டமை இதனை விளக்கும். நாட்டில் மூத்தோனுக்கே அரசுக்கட்டில் என்ற உரிமை பின்பற்றப்பட்டுள்ளது. இவ்வுரிமை எப்போதும் பின்பற்றப்படவில்லை. சில வேளைகளில் இளையோனுக்கு உரிமை தரப்பட்டுள்ளது. தம் மூத்தோரைக் கொன்று பதவிக்கு வந்தான் தஞ்சையின் ரகுநாதநாயக்கன். சூழ்ச்சிகளின் காரணத்தால் அரசுக்கட்டிலையும் சிலநாயக்கர்கள் இழந்துள்ளனர். சொக்கநாதரும், மீனாட்சியும் சிறந்த எடுத்துக்காட்டுக்கள்.

நாயக்கர்கள் அரசகுருவையும் (rajaguru) புரோகிதரையும் (purohita) மதித்து நடந்தனர். அவர்களின் கூற்று இறைவனின் கூற்றாகக் கருதப்பட்டது. இவர்கள் பெரும்பாலும் அந்தணர் வகுப்பினரே. செஞ்சி மன்னன் இரண்டாம் கிருஷ்ணப்பரின் அரச குரு நல்லன் சக்கரவர்த்தி விநாயகம் சேஷாத்ரி அய்யங்கார், தஞ்சை நாயக்கன் ரகுநாதனின் அவையந்தணரும் அமைச்சருமான கோவிந்த தீட்சிதர், யக்ஞநாராயண தீட்சிதர் மதுரையின் அந்தணர் குலத்து திவான்களும் தளவாய்களும் நல்ல எடுத்துக் காட்டுகளே. அரசருக்குப் பின் உயர் சமுதாய மதிப்பு அவர்களுக்குத் தரப்பட்டது. அவர்கள் அனுபவித்த நன்கொடைகள், பரிசுகள், சலுகைகள் பல. அரசகுருதலைமைப் புரோகிதர் பெயர்களைக் கொண்டு கோயில்களுக்குப் பல நிவந்தங்கள் விடப்பட்டுள்ளன.

கொள்கையளவில் நாயக்க மன்னர்கள் அமைச்சர் குழுவின் ஆலோசனை கேட்டு நாட்டையாண்டனர். ஆலோசனை தரும் அமைச்சர்களின் ஆலோசனை வெறும் பரிந்துரையே. எதனையும் அமைச்சர்கள் விரும்பியபடி நடத்திவிட இயலாது. நாயக்கர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாயிருக்கும் காலம் வரை இவர்களும் பதவியிலிருக்கலாம். மன்னன் விரும்பினால் அவர்களைப் பதவிநீக்கம் செய்யலாம்; அல்லது ஒப்படைக்கப்பட்ட துறைகளைப் பிடுங்கிவிடலாம். திருமலையும், சொக்கநாதரும் தேவஸ்தானத் (Devasthanam) துறையைத் தாமே கண்காணித்து வந்தனர். தஞ்சையில் வெங்கண்ணரின் பதவிநீக்கம் இதனை விளக்கும். அவை: நிர்வாகம், படை, நீதி, வருவாய்த்

துறைகளைப் பொறுத்தமட்டில் நாயக்க மன்னர்களுக்கு தளவாய் (Dalavay) எனும் படைத்தளபதியும், பிரதானி (Pradhani) எனும் திவானும், ராயசம் (Rayasam) எனும் தலைமைச் செயலரும் உதவியளித்தனர். இவர்களைத் தலைமைத் தளபதி அல்லது தலைமைக் காவல் அதிகாரி என்றும், தலைமை நிதி அதிகாரி என்றும், தலைமை நிர்வாக அதிகாரி என்றும் முறையே கூறலாம். தலைமைத் தளபதி சிவில், படை அதிகாரங்களைக் கொண்டிருந்தார். நாட்டில் அமைதியையும், வெளிநாடுகளுடன் அரசுத் தொடர்புகளையும் சீரமைக்கவேண்டிய பொறுப்பு தளவாய்க்குரியது. தலைமை அமைச்சர்,. சேனாதிபதி என்ற இருதுறைச் செயல்களை தளவாய் கவனித்து வந்தார். இவற்றின் இணைவு (சிவில் + படை அதிகாரங்கள்) நாயக்கராட்சியின் சிறப்பம்சமாகும்.

நாட்டின் தலைமை அதிகாரி என்ற வகையில் தளவாய் இதர துறைகளையும் கண்காணித்து வந்தார். மன்னரின் அதிகாரங்கள், கட்டுப்பாடு ஆகியவற்றைத் தவிர தளவாயைக் கட்டுப்படுத்த வேறுயாராலும் இயலாது. திருமலையைப் போன்ற வல்லரசர்களின் ஆட்சியில் தளவாயின் அதிகாரம் கட்டுப்படுத்தப்பட்டது. அரசர் மீது அவர்கள் அதிக செல்வாக்கை வைத்துக் கொள்ள இயலவில்லை. ஆளும் திறமையற்ற மன்னர்களின் போது நாட்டை ஆண்டது தளவாய்களே. அரியநாதமுதலி, ராமப்பையன், நரசப்பையன், வேங்கடகிருஷ்ணப்ப, லிங்கம நாயக்கர் மதுரையிலும், கோவிந்த தீட்சிதர் தஞ்சையிலும் சிறப்பெய்தினர். இவர்களைப்பற்றி பல கதைகளும், பாடல்களும் எழுந்துள்ளன. இவர்களுக்கு இப்பதவியை அவர்களுக்கு உயர்ந்ததாகக் கருதப்படும் பிறப்பே தந்தது.

தளவாய்க்கு அடுத்த அதிகாரி பிரதானி. பிரதானி என்றால் முக்கியஸ்தர் என்று பொருள்படும். இவரே திவான் (தலைமை நிதியமைச்சர்) விஜயநகரத்து பிரதானிகளைப் போன்று நாயக்கர்களால் நியமிக்கப்பட்டவர்களே இவர்கள். சோமப்ப உடையார் என்ற பிரதானி குமார கம்பணருக்கு உதவினார். நிதித்துறைத் தலைவராகிய இவர், வரவு செலவுக் கணக்குகளைத் தயாரித்தார். பணத்தைப் பொறுத்த அனைத்து பத்திரங்களையும் இவரே கண்காணித்தார். இவருக்குக் கீழ் பல கீழ்மட்ட அதிகாரிகளும், எழுத்தர்களும் பணியாற்றினர். நிதியமைச்சர் என்ற முறையில் மக்களால் அதிகம் மதிக்கப்பட்டவரும், மன்னரிடம் அதிக செல்வாக்கு வைத்திருந்தவரும் இவரே. நிர்வாகத்தைப் பொறுத்தளவில் பிரதானி, பிரதானிதான். தளவாயில்லாக் காலத்தில் இவரே நாட்டின் தலைமையதிகாரி. இப்பதவிக்குப் பெரும்பாலும் நம்பகமான, கீழ்ப்படிவான நிர்வாகிகளே நியமிக்கப் பட்டனர்.

நாட்டின் தலைமைச் செயலர் அல்லது தலைமை நிர்வாக அதிகாரி ராயச—சுவாமி (Rayasa-svami) என்றே அழைக்கப்பட்டார். இவர்களில் சிலர் பழங்கால இலக்கியத்தில் கைதேர்ந்தவர்கள். ராயசம் என்ற சொல் விராயசம் (Vṙayasam) என்ற சொல்லின் சிறப்பு வடிவே என்றார் பேராசிரியர் மகாலிங்கம். இச்சொல் எழுதுதல் என்று பொருள்படும் கோயில்கள், இதர நிர்வாகச் செயல்களைப்பற்றிய பத்திரங்களை இவர் வைத்திருந்தார். நாயக்க மன்னர்களின் ஆணைகளை நடைமுறைப்படுத்த இவர்கள் ஊராருக்கும், நாட்டாருக்கும், ஆலய அதிகாரிகளுக்கும் ஆணையிடுவர். சோழர்கால திருவாய்க்கேள்வி (Tiruvaikelvis) களைப் போன்று இவர்களும் கருதப்பட்டனர். நிர்வாகத் துறையில் ராயசத்துக்கு அதிக செல்வாக்கிருந்தது.

மன்னரின் ஆலோசனை சபையின் மூன்று முக்கிய அதிகாரிகளாக தளவாயும், பிரதானியும், ராயசமும் இயங்கிவந்தனர். மன்னர் பாலகனாய் இருப்பின், மன்னர் விடுப்பில் இருப்பின், நோய்வாய்ப்பட்டு இருப்பின், அவர் பெயரில் இவர்களே நாட்டை யாண்டனர். எடுத்துக்காட்டாக, சொக்கநாதர் இளையோனாக இருந்த காரணத்தால் மதுரையம்பதியை இம்மூன்று அதிகாரிகளே ஆண்டு வந்தனர். பொதுவாக இவர்களுக் கிடையே ஒற்றுமையில்லை. வேற்றுமைக் காரணமாக மோதல்களும் ஏற்படுதலுண்டு.

இம் மூவருக்கடுத்தபடி கணக்கன் (Kanakkan), ஸ்தானாபதி (Sthanapati) என்ற அதிகாரிகள் இருந்தனர். கணக்குப் பரிசோதனைத் துறையின் தலைவர் கணக்கர் என்றும், வெளித்தொடர்புச் செயலர் ஸ்தானாபதி என்றும் கருதப்படுகிறது. துறைகளின் செயல்களை நடைமுறைப்படுத்த பல கீழ்மட்ட அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். எழுத்தர்களையும், இதர ஊழியரையும் நியமிக்கவும், பதவி விலக்கவும் இவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதிகாரிகள் பெரும்பாலும் பொறுப்புடையோரே. மன்னர்களால் இவர்களுடைய திறமை பாராட்டப்பட்டு ஊதிய உயர்வும் பதவி உயர்வும் தரப்பட்டன.

**படையமைப்பு** : நாயக்கர்கள் பெரிய நிலைப்படை வைத்திருந்தனர். எனவே அவர்களண்டை நாடு 'படைநாடு' (military state) என்று அழைக்கப்படுகிறது. நாயக்கர்கள் தெலுங்கு நாட்டவராகையால் அவர்களைத் தமிழர் என்று மக்கள் ஒப்புக்கொள்ளவில்லை. அவர்களை எதிர்த்து எழுந்த கலகங்களை அடக்கவும், நாட்டில் அமைதி — ஒழுங்கு ஏற்படுத்தவும் நாயக்கர்கள் நாட்டைப் படைகொண்டு காத்து வந்தனர். எனவே அவ்வித நாடுகள் 'காவல்நாடுகள்' (Police States) என்று அழைக்கப்பட்டன. நாயக்கர்களைச் சுற்றி பகைநாடுகளும் இயங்கி வந்தன. வடமேற்கே மைசூரியரும், தென்மேற்கே கேரளரும், வடக்கே மொகலாயரும், ஐதராபாத்தில் நிஜாமும், மத்திய, கீழ் மத்தியப் பகுதிகளில் தக்காணச் சுல்தான்களும் இந்நாடுகளை அடிக்கடி பயமுறுத்தி வந்தனர். அடிக்கடி நாயக்கர் நாடுகளைத் தாக்கி, உள்புகுந்து அமைதி — ஒழுங்கைக்கெடுத்து, கொள்ளை, கொலைகள் செய்து பெரும்செல்வத்தைக் கவர்ந்து சென்றனர். மேலும் தலைவர்களும் பாளையக்காரர்களும் கலகம் விளைவித்தனர். கிழக்குக் கடற்கரையில் வாழ்ந்து வந்த பரதவர்களை போர்த்துக்கீசிய, டச்சு, பிரெஞ்சு, டானிய வர்த்தகர் தமக்கு சாதகமாக ஆக்க முயற்சிகளை மேற்கொண்டு வந்தனர். இவர்கள் அந்நிய மன்னர்களுக்கு அடிபணிந்து நடக்குமாறு பணிக்கப்பட்டனர். அவையில் சூழ்ச்சிகள் பிறந்தன; விளைவாக அரசு மாற்றங்களும், முடி இழப்புகளும், முடி ஏற்றங்களும் நிகழ்ந்தன. நாயக்கர்கள் சொந்தக்காரர்களுக்குப் பகைவர்களாகவே தோன்றினர். ஆகவே அடிக்கடி நாட்டில் குழப்பங்கள் ஏற்பட்டன. மதுரை நாயக்கர்கள் தஞ்சை நாயக்கருக்குப் பரம விரோதிகள். தஞ்சை நாயக்கர்கள் மதுரை நாயக்கரை சூத்திரர் என்று கருதி வந்தனர். மதுரை நாயக்கர்கள் விஜயநகரப் பேரரசைப் பகைத்ததால் தஞ்சை நாயக்கர்கள் பேரரசுக்கு உதவ முன்வந்தனர். திருமலை விஜயநகரைத் தாக்க ஒரு சுல்தானைத் தூண்டினான் என்றால், தஞ்சையின் ரகுநாதன் மதுரையைத் தாக்க மற்றொரு சுல்தானைத் தூண்டினான். ஏக நோக்குடைய படைகள் இருப்பதால் மட்டுமே இச்சூழல்களை நாயக்கர் தாண்ட முடிந்தது. இந்நோக்கற்ற ஆனால் கீழ்ப்படிவுடைய படை இருந்தாலும், நாயக்க மன்னர் எவ்வளவு வல்லவராய் இருந்தாலும் அந்நியர்களை வெற்றி கொள்ள இயலாது.

எனவே மன்னர்கள் நிலைப்படையையும், ஒற்றர்களையும் வைத்திருந்தனர். நாயக்க ராட்சியைப் பாதுகாக்க இவர்கள் படைபலத்துடன், ஒற்றர்பலத்தையும் நம்பியிருந்தனர். நால்வகைப்படை நாட்டில் இருந்தது. அவை காலாட்படை, குதிரைப்படை, யானைப் படை ஆகும். பொருட்கள் இடம் விட்டு இடம் மாற்றப்படுவதற்கு ஒட்டகங்களையும் பயன்படுத்தினர். பீரங்கிப்படை இவர்களிடத்து இருந்தது என்று திட்டவட்டமாகக் கூறிட இயலவில்லை. ஆனால் அரசி மங்கம்மாளின் ஆட்சியின்போது தளவாய் நரசப்பையன் திருவிதாங்கூரைத் தாக்கி, பல பீரங்கிகளை இழுத்து வந்ததாக அறிகிறோம். போருக் காகவும், வர்த்தகத்திற்காகவும் விஜயநகரப் பேரரசர்கள் கப்பற்படை வைத்திருந்தனர். நாயக்கர்கள் கப்பற்படை வைத்திருந்தனர் என்று திட்டவட்டமாகக் கூறுவதற்கில்லை. கண்டியைத் தாக்கியபோது மதுரை நாயக்கர் கட்டு மரங்களைப் பயன்படுத்தியிருக்கலாம். மேனாட்டாருடன் விரும்பியபடி உறவு வைத்திருந்தனர். போர்க்களத்தில் விதவிதமான போர்கருவிகளைக் கொண்டு சென்றனர். தாற்காலிக உறைவிடப் பொருட்கள், நீண்ட ஈட்டிகள் மருந்து செடிகள், நச்சு, பழங்காலத் துப்பாக்கி வகைகள் (Matchlocks or muskets) போன்றவற்றைப் போர்க்களத்துக்குக் கொண்டு சென்றனர். போர்த்துக்கீசியரிட மிருந்து யானைகளையும், அராபியர்களிடமிருந்து குதிரைகளையும் நாயக்கர்கள் வாங்கிக் கொண்டனர். போர்த்துக்கீசியர் யானைகளை இலங்கையிலிருந்தும், போர்க் குதிரைகளை அராபியாவிலிருந்தும் இறக்குமதி செய்தனர்.

பாளையக்காரர்கள் நாயக்கர்களுக்குப் படையும், பொருளும் கொடுத்துதவ வேண்டு மென்று பணிக்கப்பட்டனர். மதுரையைச் சுற்றியுள்ள பாளையக்காரர்கள் மதுரை நாயக்கருக்குப் பேருதவியாயிருந்தனர். தக்காண சுல்தான்களும், மைசூரியரும் மதுரையைத் தாக்கிய போதெல்லாம், விருபாட்சி, கன்னிவாடி, இராமநாதபுர பாளையக்காரர்கள் முன்நின்று அந்நியரை விரட்டினர். ஆனால் அரியலூர் பாளயக்காரர் அவ்விதம் செய்ததில்லை. நாட்டின் அரண்களாக கோட்டை, கொத்தளங்கள், காப்புச் சுவர்கள், ஆயுதக் கிடங்கிகளை நாயக்கர்கள் கொண்டிருந்தனர். பெருமளவு நிலைப்படையினரை இவர்கள் வைத்திருந்தபோதும் அவர்கள் ஒருபோதும் எதிர்த்து வந்த படையினருக்கு மேம்பட்ட நிலையில் தோன்றியதில்லை. அச்சத்தின்பேரில் அதிகம் தமிழர்களை சேர்த்துக்கொள்ளாது, தெலுங்கர்களை அதிகம் படையில் சேர்த்திருந்தனர். அவர்களுக்குப் படையில் உயர் பதவிகளும் தந்திருந்தனர். படைபலத்தை நம்பியே நாயக்கர் ஆட்சி இயங்கியது என்றால் மிகையாகாது.

படை பிரிவுத் தலைவர்களையும், கலகத் தலைவர்களையும் நாயக்கர்கள் கண்காணித்தனர். ஒற்றர்கள் மூலம் நாட்டு நிலவரங்களை அறிந்து கொண்டனர் ஒற்றர்கள் நாட்டின் நாலாப் பகுதிகளிலும், குறிப்பாக எல்லைப் பகுதிகளில் நடமாடி வந்தனர். இவ்வொற்றர்ப் படையினர் துறவிகளாகவும், நாட்டிய மாதர்களாகவும், கலைக்கூத்தாடிகளாயும், இசை மாதராயும் தங்களை மறைத்துக்கொண்டு நாட்டைச் சுற்றி வந்தனர். சந்தேகப் பேர்வழிகள் கொல்லப்பட்டனர்; சிறையிடப்பட்டனர்; நாடு கடத்தப்பட்டனர்; கண்கள் கெடுக்கப்பட்டு மறைவிடங்களில் தள்ளப்பட்டனர். நாட்டுப் படையினர் குடிபோதையில் நாட்டு நல்லொழுக்கத்துக்குத் தீங்கு விளைவித்தனர் என்றும், தகாச் செயல்களில் ஈடுபட்டு காலத்தையும், செல்வத்தையும், ஆற்றலையும் பாழாக்கினர் என்றும் பாதிரியார்க் கடிதங்கள் அறிவிக்கின்றன. நாட்டுக் கருவூலத்திலிருந்து இப்படை

களுக்கு ஊதியம் தவறாது வழங்கப்பட்டது; திறமைக்கு பாராட்டும், சிறப்புப் பரிசுகளும், ஊதிய உயர்வும் பதவி உயர்வும் தரப்பட்டன. ஊதியம் ஒழுங்காக வரவில்லை எனில் நாட்டைக்கொள்ளையிட்டு, நாசங்கள் புரிந்து, நாட்டமைதியையும் கெடுத்தனர். அடிக்கடி நடந்தபோர்கள், அடிக்கடி ஏற்பட்ட சாபக்கேடுகள்—நாசங்கள், அவ்வப்போது ஏற்பட்ட ஊதியத் தடைகள், அடிக்கடி புகுத்தப்பட்ட பதவி இடமாற்றங்கள் அனைத்தும் படை வீரரின் திறமையையும், ஒழுக்கத்தையும் பாதித்தன. படையின் ஒழுக்கக்கேடு நாட்டின் தோல்விக்கு அடிப்படைக் காரணமாய் அமைந்தது.

## மாநில நிர்வாகம்

ஏசு சபையார்க் குறிப்புகள் மூலம் நாடும் பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது என்பது விளங்கும். இம்மாநிலங்கள் மதுரை நாயக்கர் நாட்டிற்கு மட்டும் உரியன. திருச்சிராப்பள்ளியைத் தலைநகராகக் கொண்ட மாநிலமும், திருநெல்வேலியைத் தலைமைப்பீடமாகக் கொண்ட மாநிலமும், சத்தியமங்கலத்தை தலைநகராகக் கொண்ட மாநிலமும் மதுரையம்பதியில் இருந்திருக்கின்றன. மாநிலத் தலைமையதிகாரி ஆளுநர். இவர் மத்திய, தல நிர்வாகங்களின் இணைப்பாகக்காணப்பட்டார். தலை நகருக்கும் மாநிலத்திற்கும் இடையேயுள்ள தொலைவைப் பொறுத்து ஆளுநரின் அதிகாரமும் மாறுபடும். தூரத்து ஆளுநர் அதிக உரிமைகளையும், அதிகாரங்களையும், மேலாண் மையையும் பெற்று இயங்கி வந்தார். 1644ஆம் ஆண்டைய கடிதம் மதுரையிலிருந்த நாயக்க மன்னரைக் காட்டிலும், திருச்சிராப்பள்ளியிலிருந்த ஆளுநர் அதிக ஆற்றலுடன் செல்வாக்குடன், இருந்தார் என்று அறிவிக்கின்றது. பாளையங்களின் நிர்வாகத்தை கண் காணிக்கும் உரிமை இவர்களுக்குத் தரப்பட்டிருந்தது. சில ஆற்றலுள்ள பாளையக்காரர்கள் இவ்வாளுநர்களுக்குக் கீழ் காணப்பட்டனர். மாநில ஆளுநர்களுக்கு நீதி விசாரணை உரிமையும் இருந்தது. பிரதானி நடத்திய விசாரணையின் போது மாநில ஆளுநரும் அங்கத்தினராயிருந்தார். சாட்சிகளை வரையறுத்து அவருடைய விருப்பம்போல் விவரங்களை வெளியிடுமாறும் அவர்களைக் கண்காணித்தார். ஆகவே, ஒரு தலைப்பக்க விசாரணையோ, நீதியோ, இருக்கவில்லை என்று கூற இயலாது.

## தலநிர்வாகம்

மாநிலங்கள் பல நாடுகளாயும், சீமைகளாயும், மாகாணங்களாயும் குடிகளாயும், ஊர்களாயும் பிரிக்கப்பட்டிருந்தன என்று கல்வெட்டுகள் கூறுகின்றன. நிர்வாகத்தின் சிறு பிரிவு கிராமமாகும். இதனை கிராமம், மங்கலம், சமுத்திரம், ஊர், குடிப்புரம், குலம், பட்டு என்றும் அழைத்தனர். பல ஊர்கள் இணைந்ததே மாகாணம். ஊர்கள் அதிக தல உரிமைகள் பெற்று சுதந்திரமாய் இயங்கி வந்தன. ஒவ்வொரு ஊரிலும் மக்களால் பெரிதும் மதிக்கப்பட்ட 'இரண்டு நீதிபதிகள்' இருந்தனர் என்று ஜான் நியூகாஃப் (Nieuhoff) என்ற பயணி அறிவிக்கிறார். நாயக்கராட்சியில் இந்த சுய ஆட்சிக் கிராமங்கள் சுய ஆட்சியை இழந்த நிலையில், மன்னர்களின் ஆதரவைப் பெறாநிலையில் அழிந்து வந்தன. இக்கிராமங்கள் சுயஆட்சிச் சிறப்பினை இழந்து நின்றன. சோழ — பாண்டியரின் ஆட்சிக் காலத்தில் சிறப்பம்சமாய் இயங்கி வந்த தலசுய ஆட்சிக் கிராமங்கள் நாயக்கர் காலத்தில் அழியும் பாதைக்குத் தள்ளப்பட்டன என்று பேராசிரியர் அ. கிருஷ்ணசாமி கருதுகிறார். கிராமங்களுக்குப் பதில் நாயக்கர்கள் பாளையங்களை ஆதரித்தனர்.

இப்பாளையங்கள் ஊர்களைத்தாக்கி, அவற்றின் உரிமைகளைப் பறித்துவாழ்ந்தன. நிர்வாகத் தலையீட்டின் காரணத்தாலும் தலசுய ஆட்சி ஊர்கள் அழிக்கப்பட்டன. பேராசிரியர் அ. கிருஷ்ணசாமியின் கருத்துப்படி 'சபை, ஊர், நாடு' ஆகியவற்றின் அதிகாரங்களையும், உரிமைகளையும், கடமைகளையும் நாயங்கர முறை பறித்துக் கொண்டது" என்பதாம்.

## நிதி நிர்வாகம்

நிலவரி, பாளையக்காரரின் திறைகள், மீன்பிடித்தல், தொழில் வருவாய் என்பன நாட்டின் முக்கியமான வருவாய்களாகும். இவற்றில் நாட்டின் முக்கிய வருவாய் நிவவரியாகும். மன்னருக்குரிய நிலத்திலிருந்தும் வருவாய் வந்தது. பாளையக்காரர் செலுத்தும் திறை ஒழுங்கான வருவாய் என்று கருதப்பட இடமில்லை. காலத்தையும், பாளயக்காரரின் இயல்பையும் பொருத்து செலுத்தும் திறையும் மாறுபட்டது. போர்த்துக்கீசியரும், ஆலந்தியரும் கடற்கரைகளைத் தத்தம் கட்டுப்பாட்டில் வைத்திருந் தமையால், முத்து, மீன், சங்கு ஆகியவற்றிலிருந்து வந்த பெருவருவாயில் அதிகப்பகுதி அவர்களுக்குச் சென்றது. மேலும் உழவு (ulavu), பண்டாரவடை (pandaravadai), ஜோடி (jodi), விரத (virada) போன்ற சிறுபான்மை வரிகளும், தறிவரி, நூற்பு வரியும், சுங்கவரியும், ஏற்றுமதி வரியும் நாட்டில் இருந்தன என்று கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. சிறுபான்மை வரிகள் சிலவற்றில் அடிப்படைத் தன்மை யாது என்று புரியவில்லை. இவ்வரிகளில் சில அவ்வப்போது கோயில்களுக்கும், பொது நலத்துறைகளுக்கும் மாற்றப்பட்டுள்ளன. இவ்வித வரிகளைக் கொடுக்கத்தவறியவர்கள் தண்டிக்கப்படவில்லை என்றும், வரி நீக்கங்களும் இருந்தன என்றும் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. நிலவரியிலிருந்து சிலநாட்டு அதிகாரிகளும் பொதுநல அமைப்புகளும் தவிர்க்கப்பட்டிருந்தன. இவ்வித நிலங்கள் 'சர்வமான்யம் (Sarvamanyam) என்று அழைக்கப்பட்டது. வரிவிதிப்பும், வரிசேர்ப்பும் ஒழுங்காய் நிகழ்ந்துவந்தன. வரிசேர்க்கும் முறை சுலபமாகவும், கண்டிப்பாகவும் இருந்தது. கிராமப்புற நிதி அதிகாரி மணியக்காரன் (Maniyakaran) அல்லது அம்பலக்காரன் (Ambalakaran) ஆவார். ஊர்களிலிருந்து சேகரித்த வரியை மாகாணத்தலைவர் வழி அவர் நாட்டுக் கருவூலத்திற்குச் செலுத்தினார். விளை பொருட்களில் பாதி நிலவரியாக அரசு பெற்று வந்தது என்று பாதிரியார்கள் கடிதங்கள் அறிவிக்கின்றன. நிலவரிகள் பணமாகவும் பெற்றுக்கொள்ளப்பட்டன. இதிலிருந்து நாட்டில் போதிய அளவு நாணயங் கள் புழக்கத்திலிருந்தன என்று அறியலாம். நாயக்கரின் செலவுகள், செலவீனங்கள் ஒருபோதும் வருவாயைப் பொருத்திருக்கவில்லை. பொதுவான செலவுகளாகிய நாட்டதிகாரிகளின் ஊதியம், படைச்செலவு, காவலர், நீதித்துறைச் சம்பளங்கள் போன்றவை பெருஞ்செலவுகள் என்று கொள்வதற்கில்லை. இவை நாட்டுவருவாயை அதிகம் பாதித்ததில்லை.

பாளையக்காரர்கள் போதிய படைகளைக்கொடுத்துதவியதால் நாயக்கர்கள் பெரும் படை வைத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே நாட்டு நிலைப்படைக்கென்று அதிகச் செலவு ஏற்படவும் வாய்ப்பில்லை. பாளையக்காரர்கள் கொடுக்க வேண்டிய படை, பொருள், பிற உதவிகள் அனைத்தும் இவர்களுக்கிடையே ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தில் வரையறுக்கப்பட்டிருந்தன. ஒரு சில வேளைகளில் பயிற்சி பெற்ற போர் வீரரையும், கூலிப்படைகளையும் பயன்படுத்தப்பட வேண்டியிருந்ததால் அவர்களுடைய

ஊதியமாகச் செலவு ஏற்பட்டது. நாட்டின் தலையாய செலவுகள் பொதுப்பணிகள், பொது நலச் செயல்கள் மூலம் ஏற்பட்டவை. கோயில், கோபுரங்கள், மண்டபங்கள், சுற்றுப்பிரகாரங்கள், சிலைகள், பயணிகள் விடுதிகள், புனிதப்பயணி உறைவிடங்கள், திருமண மண்டபங்கள் எழுப்புவதிலும் அவற்றைக் கட்டிக்காப்பதிலும் அனைத்து நாயக்கமன்னர்களும் பெருமளவு வருவாயைச் செலவழித்தனர். பொதுமக்களின் நன்மதிப்பைப் பெறவேண்டுமாயின் ஓர் இந்து அரசன் இவற்றைச் செய்தாக வேண்டும். நாட்டாரின் கவனத்தைப் பெருஞ்செலவுகளிலிருந்து திசை திருப்பவும் மன்னர்கள் இப்பணிகளை மேற்கொண்டதுண்டு. பொதுச் செயல்களும், பொதுச் செலவுகளும் நாட்டில் இருக்கத்தான் வேண்டுமென்று அறிஞர் கருதுவர். உழைப்பின் தன்மையை அறியாத இம்மன்னர்கள் நாட்டின் செல்வத்தை சடங்கு சம்பிரதாயங்களிலும், பகட்டுகளிலும், பெருமளவு எண்ணிக்கையுடைய அந்தப்புரத்திலும், புனிதப் பயணங்களிலும், கோயில்களுக்கு வரி இல்லா நிலங்கள் விடுவதிலும், அந்தணர்களுக்கு உழைக்காமலுண்ண நன்கொடைகள் அளிப்பதிலும், அவர்களுடைய தரத்தைப் பாதுகாப்பதிலும், அவர்களுக்கென்று பிரம்மதேயங்கள், அக்ரகாரங்கள், சதுர் வேதிமங்கலங்கள் விடுவதிலும் படையெடுத்து வந்த அந்நியனுக்கு பொற்கிழிகள் அளிப்பதிலும் வாரியிரைத்துச் செலவழித்தனர். காமக்களியாட்டங்களில் அதிகம் ஈடுபட்ட மன்னனால் நாட்டுக்கு வீண் செலவு. பஞ்ச நிவாரணங்களுக்குக் கூட செலவிடப்படாத செல்வம் காமக்களியாட்டங்களில் விரய மாயின என்று அறிகிறோம். சில நாயக்க மன்னர்கள் பெருமளவுச்செல்வத்தைச் சேர்த்து வைத்திருந்தனர். விஜயராகவன் என்ற தஞ்சை மன்னன் கோயில்களுக்குப் புனிதப் பயணமேற்கொண்டு செலவழித்த செல்வத்தை மக்கள் நலம் பேணிச் செலவு செய்திருந்தால் எத்தனை 'யா ஏழைகளைக் காப்பாற்ற பயன்படுத்தியிருக்கலாம். திருமலை என்ற மதுரை நாயக்கர் காலத்து விழாக்களுக்காகச் செலவிடப்பட்ட பெருஞ் செல்வத்தைப் பொதுப்பணிகளுக்காகச் செலவிட்டிருந்தால் மதுரை இன்னும் பலமடங்கு புகழ் பெற்றிருக்கும். எனவே நாயக்க மன்னர்கள் ஆடம்பரப் பிரியர்கள் என்பது பெறப்படும். கட்டுக்கடங்கா ஆடம்பரங்களில் கைதேர்ந்த அவர்களாட்சியின்போது குடிமகன் வருந்தினான்.

வரிப்பளுவால் அவதிப்பட்ட குடிமகனைப் படை வீரர்களும் விட்டு வைக்கவில்லை. படைகள் போர்க்களம் நோக்கிப் பாயும் போது விளை நிலங்களைப் பாழ்செய்தன. ஊதியம் கிடைக்கா வேளைகளில் நாட்டைக் கொள்ளையடித்தனர். போதாக்குறைக்கு அந்நியரின் ஆக்கிரமிப்பால் நாடு சூறையாடப்பட்டது. மன்னனின் மாற்றானின், படையின் அதிகாரிகளின் செலவீனங்களுக்கு ஒரே பதில் நாட்டுமக்கள்.

நீர்ப்பாசனத்திற்காகவும் பணம் செலவிடப்பட்டது, ஆனால் அரசு பாசன வரியைப் பெற்று வந்தது. வரிப் பளுவால் அல்லலுற்ற மக்களுக்கு மன்னர்கள் அளித்த விடுதலையோ மிகக்குறைவானது. ஒழுங்கான செலவுகளைக் காட்டிலும் ஒழுங்கற்ற செலவுகளே நாட்டில் அதிகம் இருந்தன. ஆண்டுதோறும் மிஞ்சிய வருவாய் கருவூலத்தில் இருந்ததாக அறிகிறோம். இவற்றை இடர்ப்பாடுற்ற காலங்களில் பயன்படுத்துமாறு குவித்து வைக்கப்பட்டிருக்கலாம். ஆனால் அவை மக்களுக்கு எந்த அளவுக்குப் பயன்பட்டன என்று அறியக் கிடைக்கவில்லை.

## நீதி நிர்வாகம்

ஒழுங்கான நீதி முறையோ, நீதியோ, நீதிச் சட்டங்களோ இருந்ததில்லை. நடைமுறைகள், பொது விதிகள் அடிப்படையில் குற்றங்களுக்கு தீர்ப்பு வழங்கப்பட்டது. மத்திய அரசில் வரையறுக்கப்பட்ட நீதி பரிபாலனத்துறை இருந்ததில்லை. ஊரார்களே பெரும்பாலும் நீதி வழங்கி வந்தனர். அவ்வித விசாரணையின் போது ஊர்த்தலைவர்கள் சிறப்பிடம் பெற்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட நீதிபதிகள் என்று ஒப்புக்கொள்ளப்பட்ட சில நபர் வழங்கும் நீதி (Arbitration) நடைமுறையிலிருந்தது. சகோதரர்களிடையே ஏற்படும் பதவிப் பிரச்சினைகளை இவர்களே தீர்த்து வைத்தனர். சமயச் சமுதாய உரிமைகளைப் பொறுத்த குற்றங்களை மன்னரும், அதிகாரிகளும் விசாரித்து தண்டனை வழங்கினர். நீதித்துறை என்று ஒன்று இருந்திருந்ததால் அதன் தலைவராக பிரதானி இயங்கிவந்தார். அவன் முன்னிலையில் குற்றங்கள் விசாரிக்கப்பட்டன. சாட்சிகள் விசாரணை பலரறிய நடைபெற்றது. விசாரணை பற்றிய விளக்கங்கள் கொண்ட நிரல்கள் மன்னனுக்கு அனுப்பப்பட்டன; அதனடிப்படையில் மன்னன் தீர்ப்பும் தண்டனையும் வழங்கினான். மன்னன் வழங்கும் தீர்ப்பு முடிவானது. குறையும் கறையும் உள்ள அதிகாரிகள் பதவி நீக்கம் செய்யப்பட்டனர்; மன்னருக்கு எதிராகக் கலகம் செய்தோர் கொல்லப்பட்டனர். மன்னனின் குடும்பத்தாரெனில் கண்கள் கெடுக்கப்பட்டு சிறையிடப்பட்டனர்; மற்ற குற்றவாளிகள் மீது அபராதங்கள் விதிக்கப்பட்டன; சிலர் நாடு கடத்தப்பட்டனர்; சிலருடைய சொத்து கவரப்பட்டது; சூழ்ச்சியில் ஈடுபட்டோர் கொல்லப்பட்டனர்.

## சமூக வாழ்க்கை

நாயக்கர் கால சமூக வாழ்க்கை பற்றிய விளக்கங்கள் போதிய மூலச் சான்றுகளின் மையால் சித்தரிக்கப்பட இயலவில்லை. நமக்குக் கிடைத்துள்ள ஆதாரங்களும் உண்மையை உரைப்பனவாய் இல்லை. பழங்கால சமுதாய அமைப்பினை நாயக்கராட்சி பாதித்ததாகத் தெரியவில்லை. பிறப்பிலும், வளர்ப்பிலும், இறப்பிலும் நாயக்கர்கள் வைதீக இந்துக்களாகிய காரணத்தால், அவர்கள் பழங்கால சாதிப் பாகுப்பாட்டை ஒப்புக் கொண்டனர். நாயக்கர்களில் தஞ்சை நாயக்கர்கள் விஜயநகரப் பேரரசுக் குடும்பத்தி லிருந்து மணம்புரிந்த காரணத்தால் தங்களைச் சாதியில் உயர்ந்தோர் என்றும் மதுரை நாயக்கர்கள் சூத்திரர்கள் என்றும் கூறிக் கொண்டனர். சொக்கநாதர், விஜயராகவனின் மகளைத் திருமணம் செய்துகொள்ளக் கேட்டபோது, விஜயராகவன் மறுத்தான். சொக்கநாதன் கீழ்க்குலமகன் என்று குறை கூறிக்கொண்டான். இதனால் ஏற்பட்ட போரில் விஜயராகவன் தம் உயிரையே இழக்க நேரிட்டது. விஜயரங்க சொக்கநாதர் இலங்கை இளவரசியை மணம் புரிய விரும்பியபோது, அவர் கீழ்குலத்துள் பிறந்தவர் என்று கூறி, இலங்கை தூதுக்குழு பேச்சை முறித்துக்கொண்டது. ஆனால் மதுரை இளவரசிகள் விஜயாவின் அரசிகளாக இருந்தனர் என்று இலங்கை நூற்கள் அறிவிக்கின்றன. நாயக்கர்கள் குலக்கோத்திர தன்மைகளை முனைந்து நோக்கினர் என்று அறிகிறோம் குல, சாதி மறுப்புகள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டன.

சாதியடிப்படையிலான சமுதாயத்தில் பிராமணர்கள் உயரிடத்தைப் பெற்றனர். சிறப்புரிமைகளையும் அவர்கள் அனுபவித்தனர். அவர்களில் சிலர் அரசில் உயர் பதவிகளை, தளவாய்களாக, பிரதானிகளாக, அனுபவித்தனர்; மன்னர்களின் தலைமை

ஆலோசகராகவும் அவர்களிருந்தனர்; சிலர் கோயில் பூசாரிகளாய் கோயில் காரியங்களைக் கவனித்தனர்; சிலர் புரோகிதராய் மன்னரின் அவையில் இருந்தனர். தேவைப் படும்போது சமூகச் சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. ஆனால் செயலிலிருக்கும் நடைமுறைகளுக்கு மாறாக அவை ஒருபோதும் செயல்படுவதில்லை. உபகர்மம் (Upakarma) எனும் புனித நூலைப் புதுப்பிக்கும் சடங்கை பிராமணர் பின்பற்றினர். இப்பிராமணச் சடங்கை மதுரையிலுள்ள பட்டு நூற்காரர்களும் (Pattunulkarans) முறைப்படி பின்பற்றும்படி 1705ஆம் ஆண்டு அரசி மங்கம்மாள் வழங்கிய கட்ஜன் சாசனம் (Cadjan Sasanam) அறிவித்தது. கம்மாளர் சாதியிடையே ஐந்து பிரிவுச் சாதிகளிருந்தன. கொல்லன், பொற்கொல்லன், செப்புக்கொல்லன், தச்சர், கைவினைஞர் (சிலை செய்வோர்) ஆகிய ஐந்து பிரிவுகளும் சேர்ந்ததே கம்மாளர் சமுதாயம். சமுதாயத்தில் அடுத்தபடி மதிக்கப்பட்டவர் கம்மாளர்கள் என்று தோன்றுகிறது. கலப்புத் திருமணங்களும், சாதிக்கலப்புகளும் நாட்டில் தடை செய்யப்பட்டன. சமுதாய அமைப்புகளில் மிகவும் முக்கியமான அமைப்பு திருமணம். வரதட்டணை வாங்குவதும், கொடுப்பதும் நடைமுறையில் இருந்தன. குழந்தை திருமணமும் நடைபெற்று வந்துள்ளது. சீதனமாக (Sridhana) சொத்தும் நகைகளும் தரப்பட்டுள்ளன. ஆனால் விஜயநகரத்தாரின் ஆட்சியின் போது அந்தணர்களிடையே வரதட்டணை வாங்குவதும் கொடுப்பதும் இல்லை என்பதைக் குறிக்கும் கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. வரதட்சணை கொடுப்போனும் வாங்குவோனும் சமுதாயத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். ஆனால் செவப்ப நாயக்கர் தஞ்சையம்பதியைத் தம் திருமணத்தின் போது வரதட்சணையாகப் பெற்றார் என்று அறியப்படுகிறது. வரதட்டணைக் கொடுமை அன்றும் இன்றும் இருந்து வருகிறது.

உயர் வர்க்கத்தாரிடையே பலதார மணம் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு குறையாகும். ஜான் நியூகாஃப், வீகோ, பிமன்டா பாதிரியார்களின் கடிதங்கள் மன்னரின் அரண்மனையில் அந்தப்புரம் இருந்ததாக அறிவிக்கின்றன. திருமலையின் அந்தப்புரத்தில் 200 மனைவியர் இருந்தனர். கிழவன் சேதுபதியின் அந்தப்புரத்தில் 47 பேரும், அச்சுதப்பரின் அந்தப்புரத்தில் 300க்கும் மேலாக சக்களத்தியர் இருந்தனர் என்றும் அறிகிறோம். தமிழக நாயக்க மன்னர்களில் ஒரு மனைவியுடன் வாழ்நாள் முழுதும் வாழ்ந்த ஒரே மன்னன் ரங்ககிருஷ்ணரே. சதி (sati) எனும் உடன்கட்டை ஏறல் நாட்டில் இருந்து வந்துள்ளது. கிழவன் சேதுபதி இறந்தபோது 47 பெண்கள் உடன்கட்டை ஏறினர். 1628ஆம் ஆண்டில் ஒரு மதுரை நாயக்கர் இறக்கவே ஏறத்தாழ 700 மனைவியர் அவனுடன் உடன்கட்டை ஏறியதாக ஒரு முஸ்லீம் பயணி குறிப்பிடுகிறார். அதுபோன்று அச்சுதப்பர் இறந்தபோது ஏறத்தாழ 370 பேர் உடன்கட்டை ஏறினர். இப்பழக்கம் இதர மக்களிடையேயும் குடிகொண்டிருந்தது. அப்பெண்கள் விரும்பியோ விரும்பாமலோ தீப்புகவேண்டும். நாட்டில் விபச்சாரம் ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தது. சேரிப்பரத்தையருடன் இக்காலத்தில் கோயில் தாசிகளும் சேர்ந்துகொண்டனர். அவர்கள் கோயிலை ஒட்டி வாழ்ந்து வந்தனர். சமுதாயத்தில் சிறப்புரிமைகள் பெற்று, பலராலும் மதிக்கப்பட்டு வந்தவர்களே இத்தாசிகள். காளமேகத்தின் வாழ்க்கை நிகழ்ச்சிகளில் தலையாயது தாசிகளுடன் அவர் பெற்ற அனுபவம். நொண்டி நாடகங்கள், விரலிவிடு தூதுக்கள், பள்ளுக்கள் ஆகியவற்றில் இவர்களின் குணாதிசயங்கள் சித்தரிக்கப்பட்டுள்ளன. தாசியுறவு ஒரு குறையாகக் கருதப்படவில்லை. மதுரை வீரன் கடத்திச் சென்ற பெண்மணிகூட

தாசியினத்தைச் சேர்ந்தவள் என்று கூறப்படுகிறது. மதுரை, தஞ்சை, காளையர்கோவில், திருச்சி (சீரங்கம்), இராமநாதபுரம், இராமேஸ்வரம், கும்பகோணம், திருவாரூர், திருவொற்றியூர் போன்ற இடங்களில் தாசிகள் அதிகம் இருந்துள்ளனர்.

உண்ணும் முறைகளில் அதிகக்கட்டுப்பாடுகள் இருந்ததில்லை என்று தோன்றுகிறது. அந்தணர்கள் புலாலுண்ணாது நெய், அரிசி, சர்க்கரை, பால் போன்றவற்றையுண்டனர். இவர்கள் கொல்லப்பட்டால் பிரம்மகத்தியர் என்றும் கருதப்பட்டது. இது ஐந்து பாகங்களில் ஒன்று. பசுவதை, கருச்சிதைவு, பிறன்மனை நோக்கல் போன்றவை பிறபாவங்கள். அவர்கள் எத்தவறு செய்தாலும் மக்கள் பாவத்திற்குப் பயந்து அவர்களை விட்டுவிட்டனர். மேலும் நாட்டில் தீண்டாமை இருந்து வந்தது. தீண்டத்தகாதோர் சமுதாயத்தில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. அவர்கள் ஒதுங்கிய, ஒதுக்கப்பட்ட இடங்களில் வாழ்ந்து வந்தனர். இத்தாழ்த்தப்பட்ட வகுப்பில் அழகி பிறந்தால் அவளை மேல்மட்ட வகுப்பினர் காதலித்து காலங்கழித்தனர். இத்தாழ்த்தப்பட்டோர் புலால், மீன், முட்டை, அரிசி போன்ற உணவினை உண்டு வாழ்ந்தனர். அவர்களில் பலர் புலால், மீன், மரக்கறி விற்பனையாளராகவும் தொழில் செய்தனர். உப்பு வணிகர் உப்பை விற்று வாழ்ந்தனர். மன்னருடைய உணவு, சூழ்ச்சிக்குப் பயந்து சோதனை செய்து பார்த்தபின் உண்ணப்பட்டது. அல்லது மறுக்கப்பட்டது. நாட்டில் மது வகைகளும் இருந்திருக்கின்றன.

ஆடை அணிகலன்களுக்கு நாயக்கர் பெருஞ் செல்வத்தைச் செலவிட்டனர். மேம்பட்ட துணிகளை நெய்தற்பொருட்டு திருமலை மதுரையில் சௌராஷ்டிரர்களைக் குடியிருத்தினார். அரசகுடும்பத்தார் பட்டு ஆடைகள், பூக்கள் பின்னப்பட்ட விதவிதமான ஆடைகளை அணிந்தனர். பெண்கள் பொதுவாக கீழ், மேல் ஆடைகளை அணிந்திருந்தனர். ஆனால் தாசிகளும், பரத்தையரும் தங்களைப் பல நகைகளாலும், கவர்ச்சியான துணிகளாலும், வண்ணங்களாலும், வாசனைப் பொருட்களாலும், ஒப்பனை செய்து கொண்டனர்.

மக்கள் பொழுது போக்குக் கேளிக்கைகளிலும், விளையாட்டுகளிலும், திருவிழாக்களிலும், ஆடல் பாடல்களிலும் நாட்டம் கொண்டனர். இருவர் சண்டை (Duelling), வேட்டையாடல், குதிரைப் பந்தயம், சீட்டாடல் போன்ற பொழுது போக்குகளை விரும்பிப் பார்த்தனர். நாட்டிய, இசை, நாடக நிகழ்ச்சிகளும் இருந்தன. நாட்டிய, இசையில் சிறப்புற்றப் பெண்களாகிய தேவதாசிகள் கோயிலில் உழைத்தனர். திருமணச் சடங்குகளில், திருவிழாக்களில், தனியார் இல்லங்களில் ஆடிப்பாடி மகிழ்ந்தனர். நாட்டிய மாதர்கள் பெரிதும் மதிக்கப்பட்டனர். திருமலையின் அவையில் வாழ்ந்த வெள்ளையம்மாள் (Vellaiyammal) ஒரு நாட்டியமாது. அவள் திருமலையின் ஆலோசனை சபை அங்கத்தினர். கோலாட்டம், கும்மி போன்ற நாட்டியங்களும் கண்டு களிக்கப்பட்டன. சித்திரைத் திருவிழா, புட்டுத் திருவிழா, தெப்பத் திருவிழா மதுரையின் சிறப்புத் திருவிழாக்களாம். சுந்தரேசர் பெருமான் நடத்தியதாகக் கருதப்படும் திருவிளையாடல் நிகழ்ச்சி ஒவ்வொரு மாதமும் மதுரையில் நடத்தப்பட்டது. மதுரையை விழாக்களின் நகரமாக்கிய பெருமை திருமலையைச் சேரும். தஞ்சை, கும்பகோணம், திருவாரூர், சிதம்பரத்திலும் திருவிழாக்கள் நடத்தப்பட்டன. வேறுப்பட்ட காலங்களுக்கேயுரிய இதர சிறுதரத் திருவிழாக்கள் மதுரைக்

கோயிலில் நடத்தப்பட்டன. மாத முதற்தேதி, பதினொன்றாம் திங்கள் (பிறை), முழு நிலவு (பௌர்ணமி), புது நிலவு, பஞ்ச பர்வங்கள் (Pancha parvams), சிவராத்திரி, மகரசங்கிராந்தி (Makarasankranti), ஏகாதசி (Ekadasi), துவாதசி (Dvadasi), ஸ்ரீஜெயந்தி (Srijeyanti) போன்றவையே அவை.

நாட்டுப்புறத் தெய்வங்களுக்கும், தேவதைகளுக்கும், விழாக்களுக்கும் உரிய இடம் தரப்பட்டது. கெடுதிகளிலிருந்தும், கெட்ட சக்திகளிலிருந்தும் நாட்டுப்புற மக்களைக் காப்போர் நாட்டுப்புறத் தெய்வங்கள் என்று மக்கள் கருதினர். ஒவ்வொரு ஊருக்கும் தனித்தனியான நாட்டுப்புறத் தெய்வங்களிருந்தனர். அத்தெய்வங்களை மக்கள் வாழ்த்தி வழிபட்டனர். வீரச் செயல் மூலம் தெய்வத் தன்மைக்கு உயர்த்தப்பட்டவர் மதுரை வீரன். இன்று இவர் தெய்வ மகனாக (Demigod) தமிழகத்தில் வழிபடப்படுகிறார். மதுரைக் கோயிலில் அவர் தனியிடம் பிடித்துள்ளார். பேய்கள், பிசாசுகள் மக்களைத் தாக்காமலிருக்கப் பல புது சடங்குகளை மக்கள் கண்டுபிடித்தனர்.

நாட்டில் சமயப்பொறை இருந்தது. மதுரை நாயக்கர் வீரப்பர் (1572-1595), முதன் முதல் ஏசு சபையினர் சமயப் பிரச்சாரம் செய்து, மதமாற்றம் மேற்கொள்ளுமாறு உரிமை வழங்கினார். சமயத்தின் அடிப்படையில் எவரும் தரக்குறைவாக நடத்தப்படவில்லை. திருமலை கிறிஸ்தவ சமயத்தைத் தழுவினார் என்று கூட கூறப்படுகிறது. ஜான்—டி—பிரிட்டோவுக்குத் தீங்கு தந்து வந்த சேதுபதியை அரசி மங்கம்மாள் எச்சரித்துள்ளாள். அரசி மங்கம்மாள் முஸ்லீம்களுக்கு பள்ளி கட்ட அனுமதி வழங்கினாள். பக்கீர்களுக்கு கொடைகள் வழங்கினாள். தனிநபர் முஸ்லீம்களுக்கு உதவிகள் பல புரிந்துள்ளாள். மதுரையின் அரசபீடத்தை ரஸ்தாம்கான் கைப்பற்றினான் என்றால், தமிழ்நாட்டில், குறிப்பாக மதுரையில், எந்த அளவுக்கு முஸ்லீம்கள் மதிக்கப்பட்டனர் என்பது விளங்கும். மேலும் மீனாட்சியின் ஆட்சியின்போது சந்தாசாகிபு திருச்சிக் கோட்டைக்குள் புகுதற்கு அனுமதி வழங்கப்பட்டான் என்றால் முஸ்லீம்கள் துன்புறுத்தப்படவில்லை என்பது விளங்கும். பரதவர்களை போர்த்துக்கீசியர் மதமாற்றம் செய்து போர்ச்சுக்கல் மன்னனுக்கு கீழ்ப்படியுமாறு வற்புறுத்திய காலத்தும் அவருடைய உரிமைகள் பறிக்கப்படவில்லை. தஞ்சை நாயக்கர்கள் டானியரையும், ஆலந்தியரையும், பிரெஞ்சுக்காரரையும் சமயப் பொறையுடன் நடத்தினர். அவர்கள் தங்களுடைய திருக்கோயில்களை எழுப்ப நாயக்கரே நிலம் வழங்கி உள்ளார். தரங்கம் பாடியில் டானிய மிஷன் ஏற்பட தஞ்சை நாயக்கரின் சமயப் பொறை பெரிதும் ஏதுவாயிற்று.

சமயப் பொறையினூடே சமயப் பொறையற்ற செயல்களும் நடந்துள்ளன. கிழவன் சேதுபதி பிரிட்டோவைக் கொன்று, பாதிரியார்களைப் பழிதீர்த்துக் கொண்டான். சீரங்கத்தில் வட தென்கலை வைணவருக்கிடையே சமயப் பொறையின்மை இருந்து வந்தது. சிதம்பரத்தில் வைணவருக்கும், சைவருக்குமிடையே பலத்த போட்டிகள் இருந்திருக்கின்றன. திருச்சியில் பாதிரியார்கள் சிறையிலிடப்பட்ட போது, திருச்சி ஆளுநர் அவர்களைக் காப்பாற்றினார். சில இடங்களில், சில வேளைகளில் கிறிஸ்தவர்கள் பொறையற்ற செயல்களைச் செய்துள்ளனர். சைவ—வைணவருக்குள் நெருங்கிய உறவை ஏற்படுத்த திருமலை சித்திரைத் திருவிழாவை விரிவு படுத்தி நடத்தினார். சமயங்களுக்குள் போட்ட பூசல்கள் இருந்த போதிலும் நாட்டில் சமய அமைதி நிலவி வந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### வாணிபமும் வர்த்தகமும்

விஜய நகரப் பேரரசர்கள் வாணிபத்திற்கும், வர்த்தகத்திற்கும் அளித்த சிறப்பினை நாயக்கர் தரவில்லை. இதற்குச் சில காரணங்கள் இருந்தன. வர்த்தகம் மேற்கொள்ளுமளவு பிரசித்தி பெற்ற நாவாய்களை நாயக்கர் வைத்திருக்கவில்லை. மேலும் போதுமளவு விளைபொருட்களையும் இதர பொருட்களையும் கொண்ட திருப்திகரமான ஊர்களைக் கொண்டதே நாயக்கர் நாடு. ஊரார் அதிகம் போகப் பொருட்கள் மீது நாட்டங்கொண்டதில்லை. விலையுயர்ந்த பொருட்களை மன்னரும் அவரைச் சார்ந்தோருமே விரும்பினர். அவற்றை மட்டும் இறக்குமதி செய்தனர். இவற்றை ஆலந்தியரும், போர்த்துக்கீசியரும் கொண்டு வந்தனர். கடற்கரையோர வியாபாரத்தையும், வர்த்தகத்தையும் ஐரோப்பிய நாடுகளே முன் நின்று நடத்தியதால், நாயக்கர் அவற்றில் அதிகம் தலையிடவில்லை. முத்து, சங்கு போன்ற விலையுயர்ந்த பொருட்களை அவர்களே வாங்கி, மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து விற்றனர். ஆகவே வர்த்தகம் அவர்களுடைய தடையற்ற உரிமையாயிற்று. பொட்டாசியம் நைட்ரேட் (Potassium Nitrate) (Saltpetre) வெளிநாடுகளில் அதிகம் தேவைப்பட்டன. யானைகளைக் கொடுத்து, அம்மருந்தினைப் பெறுதல் வேண்டி போர்த்துக்கீசிய வர்த்தகத் தலைவர் தூத்துக்குடிக்கு வந்தார். மதுரை லினன் துணிகளுக்காக ஜப்பானியத்தோலும், மொலுக்கண் (Moluccas) வாசனைப் பொருட்களும் மாற்றப்பட்டன. அந்நியருடன் நடைபெற்ற வர்த்தகத்தில் பண்டமாற்று சிறப்பிடம் பெற்றது. குறைந்த அளவு வெளிவர்த்தகமே நடைபெற்றது என்பது இவற்றால் புலனாகும். மக்கள் உள்நாட்டு வாணிபத்தில் அதிக நாட்டம் கொண்டனர். வெளிநாடுகளுக்கு ஆடைகள் ஏற்றுமதியாயின என்று கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. எனவே சில இடங்களில் ஆடை ஆலைகள் இருந்திருக்கின்றன. அந்நிய வியாபாரிகளுக்கும், நாட்டு அதிகாரிகளுக்கும், மன்னருக்கும் மக்களுக்குமிடையே அதிக வர்த்தக நெருக்கடிகள் ஏற்படவில்லை என்று தோன்றுகிறது. மிகச்சில வேளைகளில் அந்நியவணிகரின் அத்து மீறல்களைத் தடுக்க தஞ்சை, மதுரை நாயக்கர்கள் சில நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். சோழமண்டலக் கடற்கரை அந்நியரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது என்பது சாலச்சிறந்தது. தஞ்சையில் அவர்களுடைய வர்த்தகம் ஆதிக்க வளர்ச்சியாக மாறிவிட்டது. பாண்டிச்சேரி, கடலூர், நாகூர், தரங்கம்பாடி, சென்னை, நாகப்பட்டினம், தூத்துக்குடி போன்ற இடங்கள் வர்த்தகத் தளவாடங்களாகப் பிற்காலத்து மாற்றப்பட்டன.

அந்நிய வர்த்தகத்தால் நாட்டில் செல்வச் செழிப்பு ஏற்படவில்லை. மாறாக அந்நியர் தம் செல்வத்தைக் கவர்ந்து செல்ல வழி ஏற்பட்டது. நாயக்க மன்னர்களுக்குத் திறையாக மிகக் குறைந்த தொகை தரப்பட்டது. கடற்படையின்மையால் ஏற்பட்ட தீமையே இது எனலாம்.

### பயிற்சி வினாக்கள்

1) நாயங்கார முறையை விளக்குக.

2) நாயக்கர் ஆட்சியின் சிறப்பம்சங்கள் யாவை?

3) நாயக்கராட்சியின் போது மக்கள் வாழ்க்கை பற்றி விளக்குக.